வெளியீடு : 4-1-2024 Issued: 4-1-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

திங்கட்கிழமை, ஏப்ரல் 10, 2023—தொகுதி 62

Monday the 10th April 2023—Volume 62

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxx
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-39
2. தகவல் கோரல்—	39-49
எதிர்க்கட்சித் துணைத் தலைவரை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதை நேரடி ஒளிபரப்பு செய்தல்	39-49
மாண்புமிகு திரு. துரைமுருகன்	40-41, 45, 49
திரு. எடப்பாடி K. பழனிசாமி	40-42, 44-46, 48-49
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	47-48
3. அரசினர் தீர்மானங்கள்—	49-52, 53-63
(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்	49-50
மாண்புமிகு திரு. துரைமுருகன்	50
(ஆ) பொது கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்	50-51
மாண்புமிகு திரு. துரைமுருகன்	50

	பக்கங்கள்
3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி	
(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்	51
மாண்புமிகு திரு. துரைமுருகன்	51
(ஈ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்	51-52
மாண்புமிகு திரு. துரைமுருகன்	51-52
(உ) சட்டமன்றப் பேரவை விதி 92 (Vii) மற்றும் விதி 287 ஆகியவற்றில் காணப்படும் சில பதங்களின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து நிகழ்ச்சி நிரலில் இனம் 4-ல் உள்ள அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல்	53-63
மாண்புமிகு திரு. துரைமுருகன்	53
4. அறிவிப்புகள்—	52-53, 111, 339-340
(அ) பேரவை குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை	52-53
(ஆ) அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு	111
(இ) பேரவை அலுவலில் மாற்றம்	339-340
5. அரசினர் தனித் தீர்மானம்—	63-110
பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டும் என ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும் வழங்கிட வலியுறுத்துதல்	63-110
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	64-70

	பக்கங்கள்
5. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி	
திரு. தி. வேல்முருகன்	70-72
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	73-75
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	75-78
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	78-79
திரு. ட்டி. இராமச்சந்திரன்	79-80
திரு. வி.பி. நாகைமாலி	80-82
*திரு. ம. சிந்தனை செல்வன்	82-86
திரு. ஜி.கே. மணி	86-89, 101
திரு. கு. செல்வபெருந்தகை	89-94, 99-101
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	94-99
மாண்புமிகு திரு. துரைமுருகன்	102-110
6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி (அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் (ஆ) கோரிக்கை எண் 24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) (இ) கோரிக்கை எண் 33-சட்டத் துறை	112-239
*மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி	112, 128, 144, 157-158, 164, 172-174, 180, 189, 199, 202-203, 215-236
திரு. ந. தளவாய் சுந்தரம்	158-171, 174-175, 178-179

	பக்கங்கள்
6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்— *தொடர்ச்சி*	
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி	162-163
மாண்புமிகு திரு. துரைமுருகன்	172, 177, 179-180, 182-183, 205
**திரு. கே.ஏ. செங்கோட்டையன்*	176, 179-180
திரு. எஸ்.பி. வேலுமணி	176, 181
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	178
**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்*	181-190
**திரு. அ.செ. வில்வநாதன்*	190-196
டாக்டர் சதன் தி. திருமலைக்குமார்	194, 197-199
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	199-206
முனைவர் இசக்கி சுப்பையா	118, 135, 151,206-215
(ஈ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) *(உ) கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)* *(ஊ) கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)* *(எ) கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*	239-405
**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்*	240, 252-253, 290, 304-305, 379-402

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்— *தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி* 263, 276, 290-291, 305, 316-317, 359, 362-379

திரு. கடம்பூர் ராஜு 291-304, 350

**திருமதி ஆ. தமிழரசி* 305-314

திரு. எடப்பாடி K. பழனிசாமி 314-316

திரு. ரூபி ஆர். மனோகரன் 253, 264, 277, 317-328

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்* 328-339

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி 340-349

திரு. எஸ்.பி. வேலுமணி 344

**திரு. ஜெ. கருணாநிதி* 347, 349-355

திரு. K.A. பாண்டியன் 283, 355-361

7. தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடைசெய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு-ஆளுநர் ஒப்புதல் 406-407

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 406

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 407-410

9. இணைப்புகள் 411-756

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	**முதலமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	**நீர்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	**நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	**உயர் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6. பொதுப் பணித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7. வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9. தொழில் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்*
11. சட்டத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி*
13. கூட்டுறவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** *கூட்டுறவுத் துறை*
14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** *குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்*
15. செய்தித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*
16. சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

17. மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு*
18. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்*
19. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
20. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
21. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
22. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்*
23. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*

24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. பால்வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*
32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare** ..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management** ..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries** ..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Youth Welfare and Sports Development** ..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	**Minister for Law** ..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	**Minister for Housing and Urban Development** ..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13. **Minister for Co–operation**	..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14. **Minister for Micro, Small and Medium Enterprises**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16. **Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17. **Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18. **Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

19.	**Minister for Tourism**	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20.	**Minister for Food and Civil Supplies**	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21.	**Minister for Electricity, Prohibition & Excise**	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22.	**Minister for Handlooms and Textiles**	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23.	**Minister for Health and Family Welfare**	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24.	**Minister for Commercial Taxes and Registration**	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25.	**Minister for Transport**	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

TRUTH ALONE TRIUMPHS

27. **Minister for Finance and Human Resources Management**	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics
28. **Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29. **Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30. **Minister for School Education**	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
31. **Minister for Environment and Climate Change**	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32. **Minister for Labour Welfare and Skill Development**	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33. **Minister for Information Technology and Digital Services**	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology and Digital Services
34. **Minister for Forests**	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35. **Minister for Adi Dravidar Welfare**	..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	..	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	..	குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	..	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.	..	தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி.	..	தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ.	..	தலைமை நிருபர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2. அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3. அசோகன், திரு. G.	.. சிவகாசி
4. அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5. அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6. அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7. அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8. அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9. அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10. அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11. அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12. அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13. அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14. அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15. அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16. அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17. அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18. அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19. அர்ஜூனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20. அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21. அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22. அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23. அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26. இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27. இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

28. இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30. இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31. இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32. இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33. இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34. இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35. இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச.	.. ஈரோடு (கிழக்கு)
37. இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38. ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
39. ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
40. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
41. உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
42. உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
43. உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44. ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
45. எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
46. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
48. எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
49. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
50. ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
51. கடம்பூர் ராஜு, திரு.	.. கோவில்பட்டி
52. கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
53. கணேசன், திரு. சி.வி.	.. திட்டக்குடி (தனி)
54. கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
55. கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்
56. கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்

57.	கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
58.	கயல்விழி செல்வராஜ், திருமதி என்.	.. தாராபுரம் (தனி)
59.	கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
60.	கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
61.	கருப்பணன், திரு. K.C.	.. பவானி
62.	கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
63.	காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
64.	காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
65.	காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
66.	காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
67.	காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
68.	கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
69.	கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
70.	கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
71.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
72.	கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
73.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
74.	கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
75.	கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	.. கும்மிடிப்பூண்டி
76.	சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
77.	சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (தனி)
78.	சங்கர், திரு. கே.பி.	.. திருவொற்றியூர்
79.	சண்முகையா, திரு. எம்.சி.	.. ஒட்டப்பிடாரம் (தனி)
80.	சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (தனி)
81.	சதாசிவம், திரு. S.	.. மேட்டூர்
82.	சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
83.	சந்திரசேகர், திரு. துரை.	.. பொன்னேரி (தனி)
84.	சந்திரன், திரு. S.	.. திருத்தணி
85.	சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (தனி)
86.	சரவணக்குமார், திரு. கே.எஸ்.	.. பெரியகுளம் (தனி)

87.	சரவணன், திரு. பெ.சு.தி.	.. கலசப்பாக்கம்
88.	சரஸ்வதி, டாக்டர் சி.	.. மொடக்குறிச்சி
89.	சாமிநாதன், திரு. மு.பெ.	.. காங்கேயம்
90.	சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வ.)
91.	சிந்தனை செல்வன், திரு. ம.	.. காட்டுமன்னார் கோவில் (தனி)
92.	சிவகாமசுந்தரி, திருமதி க.	.. கிருஷ்ணராயபுரம் (தனி)
93.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (தனி)
94.	சிவகுமார், திரு. ச.	.. மயிலம்
95.	சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	.. குன்னம்
96.	சின்னதுரை, திரு. மா.	.. கந்தர்வகோட்டை (தனி)
97.	சின்னப்பா, திரு. கு.	.. அரியலூர்
98.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
99.	சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
100.	சுந்தரராஜன், திரு. செ.	.. சங்கரி
101.	சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
102.	சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
103.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிசெட்டிபாளையம்
104.	செஞ்சி K.S. மஸ்தான், திரு.	.. செஞ்சி
105.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி
106.	செந்தில் குமார், திரு. கோ.	.. வாணியம்பாடி
107.	செந்தில்குமார், திரு. மா.	.. கள்ளக்குறிச்சி (தனி)
108.	செந்தில்நாதன், திரு. பெரி.	.. சிவகங்கை
109.	செந்தில்பாலாஜி, திரு. V.	.. கரூர்
110.	செல்லூர் கே. ராஜூ திரு.	.. மதுரை (மேற்கு)
111.	செல்வபெருந்தகை, திரு. கு.	.. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112.	செல்வராஜ், திரு. க.	.. திருப்பூர் தெற்கு
113.	செல்வராஜ், திரு. A.K.	.. மேட்டுப்பாளையம்
114.	செழியன், முனைவர் கோவி.	.. திருவிடைமருதூர் (தனி)
115.	சேகர், திரு. R.D.	.. பெரம்பூர்
116.	சேகர், திரு. S.	.. பரமத்தி-வேலூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

117. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந. .. முசிறி
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. தேவராஜி, திரு. க. .. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P. .. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ. .. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A. .. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி. .. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு. .. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு. .. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ. .. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ. .. எழும்பூர் (தனி)
146. பழனி நாடார், திரு. S. .. தென்காசி
147. பழனியாண்டி, திரு. மொ. .. ஸ்ரீரங்கம்

148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
153. பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஓய்.	.. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கேஆர்.	.. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே.	.. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி.	.. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா.	.. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே.	.. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J.	.. உளுந்தூர்பேட்டை
176. மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்

177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 10, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா*
> *உட்கோட்டம் இன்மை பெறின்."*

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

புதிய அணை

***21449—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆழியார் திட்டத்தில் ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தின்கீழ் புதிய அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தைத் துவக்க கேரள அரசு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, இப்பொருள் தொடர்பாக கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக, 2021 ஜூலை மாதத்தில் அரசு கூடுதல் செயலாளர், பொதுப் பணித் துறை மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்க தமிழக அரசால் 2021, அக்டோபரில் தொழில்நுட்பத் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது கேரள அரசின் பொதுப் பணித் துறை அதிகாரிகளிடையே கூட்டம் நடத்தி, திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முனைப்பான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் ஆனைமலையாறு–நல்லாறு திட்டம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேர்தல் அறிக்கைகளில் அரசியல் கட்சிகள்தான் ஆனைமலையாறு–நல்லாறு திட்டம் அமைக்கப்படும் என்று 60 ஆண்டுக் காலமாக கொங்கு மண்டல விவசாயிகளிடத்தில் வாக்குறுதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முதல் முறையாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கேரள மாநில முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, தொலைபேசியின்மூலம் தொடர்பு கொண்டு, இதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கி, 25–9–2019 அன்று நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையெல்லாம் அழைத்துக்கொண்டு திருவனந்தபுரம் சென்று, பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அரசுத் துறைச் செயலாளர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் சிறப்பாகச் செயல்பட்டு, ஒரே மாத காலத்தில் கேரள மாநில அதிகாரிகளோடு 12–12–2019 அன்று சென்னையில் கூடிப் பேசினார்கள். அதன் பிறகு, 2020–ல் கொரோனா நோய்த் தொற்று பாதிப்பு வந்துவிட்ட காரணத்தினால் நம்முடைய தமிழக அதிகாரிகள் 11–9–2020

2023 ஏப்ரல் 10]

அன்றுதான் திருவனந்தபுரம் சென்று பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்கள். இவையல்லாமல், இடையிடையே அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளை பாலக்காட்டிலும், பொள்ளாச்சியிலும் இரு மாநில அதிகாரிகளும் நடத்தி, ஒரு சுமூகமான முடிவு எட்டப்படுகிற நேரத்தில் தேர்தல் வந்துவிட்ட காரணத்தினால், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

தற்போது கேரள மாநில முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. பினராயி விஜயன் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ள காலத்திலேயே இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசினால் மட்டும்தான் இது முடிவுக்கு வரும். அவர், இரு மாநிலங்களும் சகோதர மாநிலங்கள் என்ற மனப்பான்மையுடையவர். எனவே, இந்த அரசு இதில் தீவிர கவனம் செலுத்திட வேண்டும். முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அமைத்த பாதையிலே, ஆனைமலையாறு–நல்லாறு திட்டம் மட்டுமல்லாமல், பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்திற்கும் சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, நல்ல முடிவுகள் எட்டப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும். காவேரி நீர்ப்பாசனத்திற்கு அடுத்தபடியாக பரம்பிக்குளம்–ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் 4½ இலட்சம் ஏக்கர் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். எனவே, அதை மனதில்கொண்டு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்தி, இத்திட்டத்தை விரைந்து முடித்துக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம். ஜாடைமாடையாகக்கூட குற்றம் சொல்லக் கூடாது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதில் முனைப்புக் காட்டினார் என்று சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், அவர்கள்தான் முனைப்புக் காட்டினார்கள் என்பதைப்போல சொல்வதுதான் ஒரு மாதிரியாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக முதன்முதலில் பேச்சுவார்த்தையைத் தொடங்கியதே இந்த துரைமுருகன்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1989–ல் நான் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே*

பேச்சுவார்த்தை நடத்தினேன். இதுவரையில் உங்கள் மந்திரிகள் மற்றும் எங்கள் மந்திரிகளால் 10 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் மத்தியில் 18 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. மொத்தம் 28 முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

முற்பகல் 10–05

ஆனால், இதுவரையில் நடந்த பேச்சுவார்த்தையினால் ஏற்பட்ட வித்தியாசம் என்னவென்று கேட்டால்–– ஆனைமலையாறில் நாங்கள்தான் அணை கட்டுவோம்; நாங்கள்தான் அணை கட்டி அந்தத் தண்ணீரை உங்களுக்குக் கொடுப்போம் என்ற வாதத்தில் மிகவும் பிடிவாதமாக இருந்தார்கள். இப்போது கொஞ்சம் இறங்கி வந்து என்ன சொல்லியிருக்கிறார்களென்றால், நீங்களே அணை கட்டிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், ஆனைமலையாறிலும், நல்லாறிலும் உள்ள சட்டம், ஆனைமலையாறிலிருந்து 2½ TMC தண்ணீர் நமக்கு வரவேண்டும். அந்தத் தண்ணீரை எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்களென்றால், இடமலையாறு திட்டம் முடிந்ததற்குப் பிறகு நீங்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இடமலையாறு திட்டம் முடிவடைந்து நீண்ட நாட்களாகிவிட்டது. இட்லியாறும் முடிந்து ரொம்ப நாளாகிவிட்டது; எல்லாம் சட்னியாறாக முடிந்துவிட்டது. இப்போது மேல்நீராறிலிருந்து தண்ணீரை 4 மாதங்களாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதையும் எடுக்க முடியவில்லை. நீங்கள் சொன்ன மாதிரி, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் lenient ஆக இருக்கக்கூடியவர்; நியாயமாக இருக்கக்கூடியவர்தான், நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக குழு ஒன்று போட்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்களிடத்தில் மறுபடியும் பேசச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்டமன்றம் முடிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அளவில் பேசி, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று நான் நினைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஓராண்டில் மட்டும் பரம்பிக்குளம் அணையிலிருந்து 15 TMC தண்ணீரும், சோலையாறு

2023 ஏப்ரல் 10]

அணையிலிருந்து 5 TMC *தண்ணீரும், பொள்ளாச்சி சமவெளி-* plains *பகுதியில் பெய்த மழை ஆழியாறு அணையின்மூலம் 10* TMC *தண்ணீரும் வீணாக அரபிக் கடலுக்குச் சென்று கலந்திருக்கிறது என்பதை அண்ணன் அவர்கள் அறிவார்கள்.*

இப்போது இதில் என்ன பிரச்சினையென்றால், மேல்நீராறிலிருந்து கீழ்நீராறு, கீழ்நீராறிலிருந்து சோலையாறு, சோலையாறிலிருந்து பரம்பிக்குளம், பரம்பிக்குளத்திலிருந்து பெருவாரிப்பள்ளம், பெருவாரிப்பள்ளத்திலிருந்து தூணக்கடவு இத்தனை அணைக்கட்டுகளையும் தாண்டி, சர்க்கார்பதி வந்து, சர்க்கார்பதியில் மின்சாரம் தயாரித்து, 48 கிலோ மீட்டர் Contour Canal *என்ற சமமட்ட கால்வாய் வழியாகச் சென்று திருமூர்த்தி அணையை அடைவதற்குள் 30% தண்ணீர் சேதாரமாகிவிடுகிறது. முழுமையாக விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது.*

எனவே, மேல்நீராறிலிருந்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து, நல்லாறு அணை அமைத்தால் அதில் 7½ TMC *தண்ணீரைத் தேக்கி, அதிலிருந்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து, 4½ கிலோ மீட்டர் வரை கொண்டு சென்று, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு சமமட்ட கால்வாய் அமைத்தால், திருமூர்த்தி அணைக்கு இரண்டு வகையில் தண்ணீர் கிடைக்கும். நல்லாறு அணையிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். ஏற்கெனவே வந்து கொண்டிருக்கின்ற* Contour *அணையிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். இதன்மூலம் இடைவிடாத விவசாயம் நடைபெறுவதற்கான ஒரு வாய்ப்பு உண்டு என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இதேபோல, இன்னொரு கருத்தையும் அண்ணன் அவர்களிடத்தில் பதிய வைக்க நான் விரும்புகிறேன். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கேள்விக்கு, அவர்கள் அழகாக பதில் சொல்லிவிட்டார்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *இன்னொரு கேள்வியும் அதில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேரளாவில் இருக்கிறது. இப்போது அணை கட்டச் சொல்லியிருக்கிறார்கள். அணை கட்டுவதற்கு அனுமதி வாங்கியதற்குப் பிறகு நீங்கள் சொன்ன கருத்தையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.*

[*2023 ஏப்ரல் 10*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *தமிழகத்தில் 2–வது பெரிய நீர்ப்பாசனமான பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத்தை, அணையிலிருந்து பயிரின் வேர்வரை சொட்டுநீர்ப் பாசனமாக* 'Dam to root' *என்கின்ற முறையில்* Israel *பாசன முறையைக் கொண்டுவந்து, இப்போது அதில் ஏற்படும் 20% தண்ணீர் சேதாரத்தையும் தவிர்த்து, பயிரின் வேர்வரை அணையின் தண்ணீரைக் கொண்டுபோய்ச் சேர்த்து, 4½ இலட்சம் ஏக்கரிலும் ஆண்டு முழுவதும் விவசாயம் செய்வதற்குரிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், பொள்ளாச்சிக்காரர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் இல்லை, உறுப்பினர்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவர் அமைச்சராக இருக்க வேண்டியவர்.* He has got vast knowledge and he is a Senior Member. *அவருக்குக் கொடுக்காததில் வருத்தப்படுபவரில் நானும் ஒருவன். திரு. ஜெயராமன் அவர்கள் பொள்ளாச்சியைச் சேர்ந்தவர். அவருடைய தொகுதியின் கடைமடையில்தான் இந்தத் திட்டமிருக்கிறது. எனவே, அதுகுறித்துத் தெளிவாக அறிந்திருக்கிறார் என்பது அவருடைய பேச்சிலிருந்து தெரிகிறது. அந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதில், அவருக்குக் கட்டுங்கடங்காத ஆர்வம் இருப்பதும் பாராட்டுக்குரியதுதான். நான் இல்லையென்று சொல்லவில்லை.*

மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையாறு, தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம், சர்க்கார்பதி போவதற்கு 150 கி.மீ. தூரம் ஆகும். மேல்நீராறிலிருந்து நல்லாறுக்கு தண்ணீரைக் கொண்டு வந்தால், 20 கிலோ மீட்டருக்குள் முடிந்துவிடும் என்பதுதான் நம்முடைய

2023 ஏப்ரல் 10]

திட்டம். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்தல்ல. ஆகையால், இந்தத் திட்டம் நிறைவேறத்தான் வேண்டும்.

இரண்டாவது, மடைவிட்டு மடை பாசனம் என்கின்ற பாசனத்தை, மாண்புமிகு திரு. பழனிசாமி காலம் முதல் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மோகனகிருஷ்ணன் கமிட்டி அமைத்து நான்தான் அதை நடைமுறைப்படுத்தினேன். PAP*-ஐப் பொறுத்தவரையில், நான் இத்தனை ஆண்டுக் காலம், கிட்டத்தட்ட 1989-லிருந்து இந்த இலாகாவிற்குப் பொறுப்பு வகிக்கிறேன். எனக்கு மிகப் பிடித்தமான ஒரு* scheme *அது. ஏனென்றுகேட்டால், இந்தியாவிலேயே வேறு யாரும் செய்ய முடியாத சாதனையைச் செய்தவர்கள்.*

முற்பகல் 10-10

ஆனைமலையில் ஓடுகிற தண்ணீர் மேல்நீராறு, கீழ்நீராறு சோலையாறு, தூணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளத்திலே மேற்கு நோக்கி ஓடுகிறது. அதைத் திருப்பி எட்டு அணைகளைக் கட்டி Tunnel *மூலம் கொண்டுவந்து பயன்படுத்துகிற திட்டம் இந்தியாவிலேயே* PAP system*தான். அது ஒரே ஒரு* unique system. *அந்தத் திட்டத்தை அன்றைக்கு ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி செய்தவர்கள். அந்தத் திட்டத்தில் கையெழுத்து போட்டவர்கள் பெருந்தலைவர் காமராஜரும், இ.எம்.எஸ் நம்பூதிரிபாட்டும். 1958-ல் போடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு மறுபடியும்* retrospective effect *கொடுத்தவர் கலைஞர் அவர்கள். அந்தத் திட்டம் பாதுகாக்கப்பட வேண்டும். மேலே சொன்னால், இதுமாதிரி திட்டத்தை நான் பார்த்ததே இல்லை. அந்த மாதிரி திட்டம் நம்முடைய* Engineers *செய்திருக்கிற திட்டம். எனவே, அந்தத் திட்டத்தை ஒவ்வொரு தமிழனும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது, என்னுடைய ஆசை. எனவே, அங்கிருக்கிற தண்ணீர் ஒரு சொட்டுகூட வீணாகக் கூடாது என்பதற்காக,* Israel Model*-லே அதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி* V. *ஜெயராமன் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், சட்டமன்றம் முடிந்ததற்குப் பிறகு ஒரு குழுகூட இஸ்ரேலுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்து அதை நடைமுறைப்படுத்தலாம் என்ற எண்ணமும் எனக்குண்டு.*

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***182—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 544 குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 2,014 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 4.53 கோடி மக்களுக்கு வழங்கப்படுகிறது. முதல்நிலை நகராட்சியான தென்காசியின், தற்போதைய மக்கள்தொகை 78,891 ஆகும். இந்நகரின் தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் தேவையான குடிநீர் அளவு 10.65 மில்லியன் லிட்டராகும். தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள தென்காசி–குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 1.70 மில்லியன் லிட்டர் குடிநீரும், நகராட்சிப் பராமரிப்பிலுள்ள தனி குடிநீர்த் திட்டம்மூலம் நாளொன்றுக்கு 4.50 மில்லியன் லிட்டர் குடிநீரும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 6.20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தென்காசி நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாட்டிற்காக, நகராட்சியின் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு

2023 ஏப்ரல் 10]

107 கோடி ரூபாய் திருத்திய திட்ட மதிப்பீடு Tamil Nadu Water Investment Company *(*TWIC*) மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது தென்காசி நகராட்சி மற்றும் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 78 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டு, பின்னர் கடையம், கீழப்பாவூர் ஒன்றியங்களையும் சேர்த்து, ஆக மொத்தம் 493 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.400 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், தென்காசி நகராட்சிக்கு இடைக்கால மற்றும் உச்சகட்ட அளவாக நாளொன்றுக்கு முறையே 9.30 மில்லியன் லிட்டர் மற்றும் 12.60 மில்லியன் லிட்டர் குடிநீர் மொத்தத் தொகுப்பாக வழங்கப்படும். இதனைக் கூடுதல் ஆதாரமாகக் கொண்டு, தென்காசி நகராட்சியின் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டபின், இந்த இரு திட்டங்களும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்காசி மாவட்டம், புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். இங்குள்ள தென்காசி நகராட்சிப் பகுதியில், பொதுமக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் கிடைக்கவில்லை. ஆகையால், குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி பொதுமக்களுக்குக் குடிநீர் தேவையான அளவுக்குக் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அரசு சார்பாக, இதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அதிகாரிகள் சொன்னார்கள்.*

உறுப்பினர்கள் கேட்கிறபோது, அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்ற வகையிலே அந்த பதில் இருக்க வேண்டும்; அதேநேரத்தில் இந்த அரசின் சார்பாக எடுக்கப்படுகிற திட்டங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட வேண்டும் என்பதற்காகத்தான், இந்தத் திருத்திய விடையை நான் அவர்களிடம் எழுதி வாங்கினேன். திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுவிட்டது. நிதி ஆதாரங்களுக்காக அது சென்றிருக்கிறது. நிதி கிடைத்தவுடன், விரைவிலே அந்தத் திட்டத்தை நிச்சயமாக துவக்கி அனைத்து மக்களுக்கும் தண்ணீர் கொடுக்கிற பணி நிறைவேற்றப்படும். ஓரிரு மாதங்களில் அதைக் கொண்டுவர முடியும் என்று கருதுகிறேன். நிதிக்காகத்தான் தற்போது தாமதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதியில், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட சுரண்டை நகராட்சியில் தனி குடிநீர்த் திட்டமும் மற்றும் மேலகரம், குற்றாலம், இலஞ்சி, சுந்தரபாண்டியபுரம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தியும், சீரான குடிநீர் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சுற்றியிருக்கிற பேரூராட்சிப் பகுதிகள் மொத்தத்திற்கும் அரசு சார்பாக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளையும் நான் எழுதி வாங்கியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சுரண்டை பகுதி, புதிய நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், 2040 ஆம் ஆண்டில் மக்கள்தொகை எண்ணிக்கை சுமார் 1 இலட்சத்திற்கும் மேலாக உயர்ந்துவிடும் என்பதையும் கருத்தில்கொண்டுதான் புதிய திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் முழுமையாக 493* hamlets*–ல் அவர்களுக்குப் பயன்படுகிற*

2023 ஏப்ரல் 10]

வகையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன், திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி

***38189—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் அரசு Polytechnic *கல்லூரியும், ஓர் அரசு நிதியுதவிபெறும்* Polytechnic *கல்லூரியும் மற்றும் 19 சுயநிதி* Polytechnic *கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 130 கோடி இந்தியர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இந்திய தாய்த் திருநாட்டின் மாண்புமிகு பிரதமர் அவர்கள்*

[2023 ஏப்ரல் 10

அண்மையில் தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். சென்னை–கோவை இடையேயான 'வந்தே பாரத்' இரயிலைத் துவக்கி வைத்து, தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடத்தைப் பெற்றிருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றியைச் சொல்லி வணங்குகிறேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைப் பொறுத்தவரைக்கும், பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதேபோல, எதிர்க்கட்சியில் உள்ள பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதுவரை பலமுறை*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 ஏப்ரல் 10*

கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். மீறி, நாங்கள் எதைச் சொன்னாலும் நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறீர்கள். இது எங்களுடைய உரிமை. காலம் காலமாக அவையிலே எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அருகருகே அமர்ந்து பேசக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறது இந்த அவை. அந்த அடிப்படையிலே, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவரை ஏற்றுக்கொண்டீர்கள். ஆனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவரை இன்றுவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். கேட்டால், நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொன்னீர்கள். வழக்கு குறித்தும் நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்துவிட்டது. அதன்படியாவது எங்களுக்கு நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வழக்கு இருக்கிறது என்று ஒருபோதும் நான் இந்த அவையில் பதிவு செய்யவில்லை. (குறுக்கீடு) நான் சொன்ன ஒரே பதில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் அவை விதியின்படி இடம் இருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்கிற பதவி குறித்து விதிகளில் இல்லை. அதனால் அதைப் பற்றி ஒரு கேள்வி எழவில்லை என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 60 பேர் என்னுடைய அறைக்கு வந்து கேட்டார்கள். முன்னாள் சபாநாயகர் உட்பட எல்லோரும் என்னுடைய அறைக்கு வந்து பேசினார்கள். அப்போது அவர்களிடம் எல்லா விவரங்களையும் கேட்டுக்கொண்டு, நான் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அதேபோல, இருக்கை விவரங்கள் குறித்து கேட்டார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவரை உங்களுடைய இருக்கைக்கு பக்கத்திலே அமர வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கொரு நீண்ட விளக்கம் இந்த அவையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு, மக்கள் பிரச்சினைகளைப் பற்றி நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே எந்தவித குறுக்கீடும் நாங்கள் செய்யவில்லை.*

ஏற்கெனவே, இரண்டு தினங்களுக்கு முன்பு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் வெளிநடப்பு செய்யும்போது, இங்கே ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுச் சென்றார்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு கருத்தை பதிவு செய்துவிட்டுச் சென்றார்கள். அதாவது, எங்களுக்கு எதிராகச் சொல்லக்கூடிய கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவிக்க எங்களை allow *செய்யவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் அன்றைக்கு எவ்வளவு நேரம் பேசினார்கள் என்று உங்களுக்கே தெரியும். அப்போது பல குறுக்கீடுகளை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அமைதியாகத்தான் இருந்தார்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)* Maximum *எல்லா அமைச்சர்களிடமும், எதிர்க்கட்சிகளைப் பேச விடுங்கள்; குறித்து வைத்துக்கொண்டு பதில் சொல்லுங்கள் என்றுதான் சொல்கிறேன்.*

முற்பகல் 11–05

பேரவையினுடைய நடைமுறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் மானியத்தில் முதலில் பேசுவார்கள். நிறைவாகவும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான் நிறைவு செய்வார்கள். அதற்கு இடையில் மாமன்ற உறுப்பினர்கள் பேசியதில் ஏதாவது தவறான கருத்து இருந்தால் நீக்கச் சொல்லியிருக்கலாம். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள் பேசுகின்றபோது, இரண்டு விஷயங்களைப் பற்றி சொன்னார்கள். அதற்குத்தான் நீங்கள் குறுக்கிட்டுப் பேச எழுந்தீர்கள். அந்த விஷயம் என்னவென்றால்; நாங்கள் இப்போது ஒன்றரை இலட்சம் மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னார் அது ஒன்று. இரண்டாவது, இதற்கு முன்னால் கடந்த காலங்களில் ரேஷன் கடைகளில் உள்ள அரிசிகளில் மோசமான அரிசி, கலர் அரிசிகள் எல்லாம் இருந்தன. இப்போது, நாங்கள் sorter *போட்டு அடித்து, அது இல்லாமலேயே மாற்றியிருக்கிறோம் என்று சொன்னார். இதில் எதிர்க் கருத்து இருக்கிறது, உங்களுக்கு இதை நீக்க வேண்டுமென்று சொன்னீர்களேயானால், நீங்கள் இப்போதுதான் அந்த* sorter *என்கிற நவீனமுறையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதற்கு முன்பு கிடையாது. உங்கள் ஆட்சியில் அதைத்தான் செய்தீர்கள். நாங்களும் அதைத்தான் செய்தோம் என்று சொல்லியிருக்கலாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். எப்போதுமே, முன்வரிசையில் உள்ளவர்கள் யார் எழுந்தாலும், (குறுக்கீடு) பழைய மரபுதான். (குறுக்கீடு) இப்போதும் நான் சொல்கிறேன். நீங்கள் எழுந்து, இதை*

நீக்குங்கள் என்று சொல்லியிருந்தால், அதை நான் நீக்கியிருப்பேன். நீங்கள் என்ன சொன்னீர்கள், இன்னொரு உறுப்பினரைப் பேச அனுமதி கேட்டீர்கள். இதுவே ஒரு மரபானது என்றால், (குறுக்கீடு) இல்லை, நான் தரக் கூடாது, தருவது என்பது எல்லாம் என் உரிமைதானே. அது ஒரு precedent. ஒரு மரபு நடைமுறையில் இருக்கிறது. அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மானியத்தில் கேள்வி கேட்க அனுமதித்தேன். கொடுக்கக் கூடாது என்பது இல்லை. அன்றைக்கு மாலைக் கூட்டம் நேரத்தைப் பொறுத்து எழுந்தீர்கள். உடனே நான் என்ன என்று கேட்டேன். நீங்கள் தவறான (குறுக்கீடு) எங்களை பதிவு செய்யவிடமாட்டேன் என்கிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். தவறான பதிவு இருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே, நடுநிலையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் உடனே நான் அதை நீக்குகிறேன். எந்தவகையிலும், உங்கள் கருத்தை இங்கே பதிவு செய்யக் கூடாது என்பதை ஒருபோதும் நானும் விரும்பவில்லை, மாண்புமிகு முதல்வர் அவர்களும் விரும்பவில்லை, இந்தச் சபையும் விரும்பவில்லை. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, இன்றைக்கு ஒரு நாளைக்கு (குறுக்கீடு) உங்களிடம் கேட்டுத்தான்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிமிடம் பேசினால், நீங்கள் ஐந்து நிமிடங்கள் பேசி பதிய வைத்துவிட்டீர்கள். அவர்கள் பேச்சுகள் மட்டும்தான் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வருகின்றன. நாங்கள் வைக்கின்ற கோரிக்கை எதுவுமே வருவதில்லை. ஆகவே, இது எங்களுடைய கோரிக்கை. காலங்காலமாக, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மாண்புமிகு அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்திருக்கின்றார்களே! இது காலங்காலமாக கடைபிடிக்கப்படுகின்ற மரபு. அதிக எண்ணிக்கையில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக தேர்ந்தெடுக்கின்றபோது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். அதை நீங்கள் மரபு என்கிற அடிப்படையிலே வழங்க வேண்டுமென்று கேட்கின்றோம். அதை நீங்கள் இதுவரை வழங்கவில்லை.

அதேபோல, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பேசுகின்ற கருத்துகளை தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பு

2023 ஏப்ரல் 10] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

செய்யப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் பல முறை கேட்டோம். இதுவரை, எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது, நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதில்லை. ஆனால், அதற்குப் பதில் சொல்வது மட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வது, அதேபோல் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வது மட்டும் ஒளிபரப்பப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ன பேசுகிறார் என்று மக்களுக்குத் தெரிந்தால்தானே, பதிலும் சரியாகப் புரியும். இதுவரை நேரடி ஒளிபரப்பு செய்யப்படவில்லை. அதை நீங்கள் ** செய்கிறீர்கள். எங்களுடைய கருத்துகள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்கிற வார்த்தையை நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) பேசினதையெல்லாம் எடுக்கவில்லை. கேள்வி–பதில் முழுமையாக ஒளிபரப்பப்படுகிறது. இதில் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன குற்றச்சாட்டு சொல்கின்றாரோ, அதே குற்றச்சாட்டை நாங்களும் அங்கிருந்து சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு, உங்களை, நீங்களே காண்பித்துக்கொண்டு, எங்களை காண்பிக்கவில்லை என்று சொன்னோம். (குறுக்கீடு) எங்கள் முகத்தைக்கூட நீங்கள் காட்டியது இல்லை. மாண்புமிகு அமைச்சர்களை மட்டும் காண்பிக்கிறீர்கள் என்று நான் ஆயிரம் முறை இதுகுறித்து பேசியிருக்கிறேன். சார், இப்போது நீங்கள் என்ன பேசுகிறீர்களோ அதை நான் பேசியிருக்கிறேன். நான் என்ன பேசினேனோ அதை நீங்கள் பேசுகிறீர்கள். 'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்' என்பதுபோல். (சிரிப்பு) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Live telecast செய்வதில் எதையுமே ** செய்யவில்லை. (குறுக்கீடு) கேள்வி பதில் (குறுக்கீடு) இல்லை, எல்லாம் பதிவில்தான் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2023 ஏப்ரல் 10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் நாட்டு மக்களுடைய பிரச்சினையை சட்டமன்றத்தில் எடுத்து வைக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொண்டு வந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். மற்ற அமைச்சர்களிடம் கொண்டு வரும்போது அவர்கள் பதில் அளிக்கின்றார்கள். நாங்கள் கேட்கின்ற கேள்விக்கு அவர் பதில் சொல்வது மட்டும்தான் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நாங்கள் என்ன கேள்வி கேட்கிறோம், என்ன கருத்தைச் சொல்கிறோம் என்பது வருவதே இல்லை. அது ** வேறு என்ன வார்த்தையைப் போட முடியும். அதுமட்டுமல்ல. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 11–10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒரேயொரு நிமிடம், நான் பேசி முடித்துவிடுகிறேன். இரண்டாவது, கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது உங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயே, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், சட்டப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற கருத்துகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படும் என்று கொடுத்திருக்கிறீர்கள்.' நீங்கள் 85 சதவிகிதம் தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்கிறீர்கள். எங்கே நிறைவேற்றியிருக்கிறீர்கள்? இது முக்கியமான பிரச்சினை; நாட்டினுடைய பிரச்சினை; எதிர்க்கட்சி என்ற முறையில், அவையில் எடுத்துவைக்கின்ற கருத்துகளை நீங்கள் நேரடி ஒளிபரப்பு செய்யமாட்டேன் என்கிறீர்கள். கேட்டால், அதற்கும் ஏதாவது ஒரு எதிர்மறை கருத்தைத்தான் சொல்கிறீர்களேயொழிய, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீங்கள், . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். அதையும் கேட்டுக்கொள்ளுங்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லட்டும், (குறுக்கீடு) அமைச்சர் சொல்லட்டும், சேர்த்து பேசட்டும்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேரவைத் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்து, ஜனநாயக ரீதியாகத்தான் இந்தச் சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் எப்பொழுதெல்லாம் பேச வாய்ப்பு கேட்கிறாரோ, அப்போது எல்லாம் அனுமதிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்கிறபோதும் அனுமதிக்கப்படுகிறது. அதேபோன்று முன்வரிசையில் இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் கேட்கிறபோது நீங்கள் வாய்ப்பு கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. இதையெல்லாம் படிக்க வேண்டுமென்று சொன்னால், காலநேரம் அதிகமாகிவிடும். கடந்த ஆட்சியில் நாங்கள் 10 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியில் இருந்தபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சில* ruling *கொடுத்திருக்கிறார்கள்.*

பொதுவாக, அவையில் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் Zero Hour*-ல் ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் இருந்தால்தான், அன்றைக்கு விவாதிப்பது பொருத்தமாக இருக்கும். இல்லையென்று சொன்னால், ஒரு செய்தியாக வந்துவிடும். அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருந்த தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எங்களுடைய முதலமைச்சர் அல்லது எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த அண்ணன் அவை முன்னவர் அவர்கள் கேள்வி எழுப்புகிறபோது, "பதில் அமைச்சர்களிடத்தில் இல்லை என்று சொன்னால், ஒரு பகுதியாகத்தான் அந்தக் கேள்வி வருமே தவிர, பதில் வராமல் அன்றைக்கு பத்திரிகையில் வந்துவிடும். அதனால், பதில் இருந்தால் அனுமதிக்கின்றேன்" என்று ஏற்கெனவே இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது இது ஒன்று. அதற்கு அடுத்தபடியாக இங்கே பல மானியக் கோரிக்கை விவாதங்களில் பேசுகிறபோது முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் எழுந்து பதில் சொல்ல வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அது ஒன்றும் தவறல்ல. அதற்கு ஏற்கெனவே,* ruling*-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், "நீங்களெல்லாம், ஏற்கெனவே முன்னாள்*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 10

அமைச்சர்களாக இருந்திருக்கிறீர்கள். அமைச்சர்கள் எழுந்து சொல்கிறபோதெல்லாம் முன்னாள் அமைச்சர்கள் பதில் சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்று சொன்னால், சபைக்கு நேரம் இல்லை, என்னால் நடத்த முடியாது. நீங்கள், ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால், உங்கள் கட்சியின் சார்பாக பேசுகிற உறுப்பினரிடத்தில் கொடுத்து நீங்கள் பேசச் சொல்லுங்கள்" என்ற அடிப்படையில்தான் இந்தப் பொருள் இருக்கிறதேயொழிய, வேறு ஒன்றும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நீங்கள் ஏதோ ஒரு முடிவில் பேசுகின்ற மாதிரி தெரிகிறது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எங்களுடைய பிரச்சினையை சொன்னால், நீங்கள் அதற்கு வேறு ஒரு பதில் சொல்கிறீர்கள். அதற்கு என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரிடத்தில் எங்கள் கோரிக்கையை வைக்கின்றோம். எங்களுடைய உரிமையை நாங்கள் கேட்டுப் பெறுவதற்காக உங்களிடத்தில் நாங்கள் கோரிக்கை வைக்கின்றோம். இரண்டாவது, ஏற்கெனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பிரச்சினையை எழுப்பி அமர்ந்திருப்பீர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்களே பேசி, முழு விளக்கமும் நீங்களே சொல்லிவிடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்களே முடியுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் இதை நாங்கள் கேட்கின்றோம். இரண்டாவது, எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, அதற்கு மாற்றாக ஒருவரை நியமிக்கலாம் என்று சட்ட விதிகளில் இருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் நாங்கள் கேட்கின்றோம். அதன் அடிப்படையில்தான் காலம் காலமாக எதிர்க்கட்சித் தலைவர் இல்லாதபோது, துணைத் தலைவர்கள் வாயிலாக எதிர்க்கட்சி சொல்கின்ற கருத்துகள்

2023 ஏப்ரல் 10] [*திரு. எடப்பாடி* K. *பழனிசாமி*]

இங்கே அவையில் பதிவு செய்யப்படுகின்றன. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, தொடர்ந்து மரபாக இருக்கிறது. ஆகவே, தற்போது இந்த மரபைக் கடைப்பிடிக்கவில்லை. இதை நாங்கள் கண்டிக்கிறோம். அதோடு, சட்டப்பேரவையில் அரசிற்கு பிரச்சினை வருகின்றபோது, சட்டப்பேரவை விதிகளை, அவர்களின் வசதிகளுக்கேற்ப தளர்த்துவது வாடிக்கையாகிவிட்டது. சட்டப்பேரவை விதிகளின்படி, ஜனநாயக முறைப்படியும், மரபுப்படியும், நடப்பதில்லை. சட்டமன்றம் வெளிப்படைத் தன்மையுடன் நடப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இதையெல்லாம் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் அவையில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையில் உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. யாராக இருந்தாலும், அவையில் உட்கார்ந்துகொண்டு தயவுசெய்து பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் சொன்னதுதான், ஏதோ ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள் என்று. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய விதியைத் தளர்த்துவதுபற்றி, எதிர்த்துப் பேசிவிட்டுப் போகிறார். விதியைத் தளர்த்தி, வழிகாட்டியதே இவர்கள்தான். விதியைத் தளர்த்தித்தான், திரு. சென்னாரெட்டி அவர்கள்மீது தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் மறந்துவிட்டுப் போகிறார்கள்.*

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கான தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது வரும். நான் சொல்கிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதற்குமுன், முக்கியமானது.*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195–ன்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203–ன்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழு. பொது நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமைக் குழு. அவை உரிமைக் குழுவிற்கு 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 10

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2023–2024 ஆம் நிதியாண்டிற்குரிய அவை உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

4. அறிவிப்புகள்

(அ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (*Committee on Estimates*), பொதுக் கணக்குக் குழு (*Committee on Public Accounts*), பொது நிறுவனங்கள் குழு (*Committee on Public Undertakings*), அவை உரிமைக் குழு (*Committee of Privileges*) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 17–4–2023, திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

வேட்புத் தாள்கள், 18–4–2023, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 19–4–2023 புதன்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(உ) சட்டமன்றப் பேரவை விதி 92 (vii) மற்றும் விதி 287 ஆகியவற்றில் காணப்படும் சில பதங்களின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து நிகழ்ச்சி நிரலில் இனம் 4–ல் உள்ள அரசினர் தனித் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை விதி 92 (vii)–ல் அடங்கியுள்ள '...conduct of any Governor...' என்னும் பதம் மற்றும் '...use the Governor's name for the purpose of influencing a debate;' என்னும் பதம் மற்றும் விதி 287–ல் அடங்கியுள்ள 'Provided, however, that the above provision shall not be invoked to suspend rule 92(vii)' என்னும் பதம் ஆகியவற்றின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்–4–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக

நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 10

முற்பகல் 11–20

பேரவையைப் பொறுத்தமட்டில், குரல் வாக்கெடுப்பில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இருந்தாலும், பேரவை விதி எண் 287-ன்படி, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு நான்கில் மூன்று பங்கு உறுப்பினர்களுடைய ஆதரவு இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பெற்றிருப்பதால், எண்ணிக் கணிக்கும் முறையின்படி இந்தத் தீர்மானத்தை பேரவையின் முடிவிற்கு விடவேண்டியுள்ளது. எனவே இப்போது, எண்ணிக் கணிக்கும் முறையின்படி பேரவையின் முடிவிற்கு தீர்மானத்தை விடவேண்டியுள்ளது. அதற்கு முதலாவதாக, அழைப்பு மணியை– Divison Bell-ஐ அழுத்துமாறு பேரவைச் செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி கேட்டுக்கொள்கிறேன். அவைக் காவலர்கள் பேரவையின் அனைத்து வாயில்களையும் மூடும்படி உத்தரவிடுகிறேன். பேரவையின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டனவா?

(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டன. வாக்கெடுப்பு நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலிருந்து வெளியே செல்லவோ, இன்னொருவர் இருக்கைக்குச் செல்லவோ கூடாது. வாக்கெடுப்பு முடியும்வரை அவரவர் இருக்கையில் இருக்க வேண்டும் என்பது விதி.

இப்போது எண்ணிக் கணிக்கும் முறையின்படி வாக்கெடுப்பு. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் பேரவை விதி 287–ன்கீழ் முன்மொழிந்த தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன்.

பேரவையின் முன் உள்ள கேள்வி.

“சட்டமன்றப் பேரவை விதி 92(vii)-ல் அடங்கியுள்ள ‘...conduct of any Governor...’ என்னும் பதம் மற்றும் ‘...use the Governor's name for the purpose of influencing a debate;’ என்னும் பதம் மற்றும் விதி 287-ல் அடங்கியுள்ள ‘Provided, however that the above provision shall not be invoked to suspend rule 92(vii)’ என்னும் பதம் ஆகியவற்றின் பயன்பாடுகளை நிறுத்தி வைத்து

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்–4–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்”

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஏற்கெனவே அறிவித்தபடி, அவையின் முடிவிற்கு விடப்படுகிறது. பகுதிவாரியாக நான் அழைத்தவுடன் பேரவைச் செயலாளர் அவர்கள் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் படிப்பார்கள். எழுந்து நிற்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், அவர்கள் பெயர் படிக்கப்பட்ட பின்னர், அதை ஆமோதித்து அமர வேண்டும். (குறுக்கீடுகள்)

(பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. எம்.ஆர். காந்தி மற்றும் டாக்டர் சி. சரஸ்வதி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் வெளியே செல்ல முடியாது. நீங்கள் அமருங்கள். வாக்கெடுப்பு நடைபெறும்போது, இங்கு இருக்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் அமர்ந்துகொள்ளலாம்.

பகுதி-1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பகுதி-1 மட்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பின்னால் இருக்கின்ற உறுப்பினர்கள் மட்டும்.

1. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்

2. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்

3. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்

4. மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்

5. மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்

6. மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்

7. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 10

8. மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்

9. மாண்புமிகு டாக்டர் இரா. இலட்சுமணன்

10. மாண்புமிகு திரு. ரா. இளங்கோ

11. மாண்புமிகு முனைவர் த. இனிகோ இருதயராஜ்

12. மாண்புமிகு திரு. க. கார்த்திகேயன்

13. மாண்புமிகு திரு. ப. கார்த்திகேயன்

14. மாண்புமிகு திரு. மு.பெ. கிரி

15. மாண்புமிகு திரு. ஆ. கிருஷ்ணசாமி

16. மாண்புமிகு திரு. அ. சௌந்தரபாண்டியன்

17. மாண்புமிகு திரு. எஸ். தங்கப்பாண்டியன்

18. மாண்புமிகு திரு. கோ. தளபதி

19. மாண்புமிகு திரு. ந. தியாகராஜன்

20. மாண்புமிகு திரு. ஆ. மகாராஜன்

21. மாண்புமிகு திரு. A.J. மணிக்கண்ணன்

22. மாண்புமிகு திரு. தே. மதியழகன்

23. மாண்புமிகு திரு. இரா. மாணிக்கம்

24. மாண்புமிகு திரு. பெ. ராமலிங்கம்

25. மாண்புமிகு முனைவர் T.R.B. ராஜா

26. மாண்புமிகு திரு. அ.செ. வில்வநாதன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11–25 முதல் 11–35

பகுதி–2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு திரு. துரைமுருகன்
2. மாண்புமிகு திரு. கே.என். நேரு
3. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி
4. மாண்புமிகு திரு. எ.வ. வேலு
5. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
6. மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்
7. மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி
8. மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி
9. மாண்புமிகு திரு. ஆர். காந்தி
10. மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்
11. மாண்புமிகு திரு. பி. மூர்த்தி
12. மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
13. மாண்புமிகு திரு. N. அசோக்குமார்
14. மாண்புமிகு திரு. கா. அண்ணாதுரை
15. மாண்புமிகு திரு. மு. அப்துல் வஹாப்
16. மாண்புமிகு திருமதி V. அமலு
17. மாண்புமிகு திருமதி க. சிவகாமசுந்தரி
18. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி
19. மாண்புமிகு திருமதி ம. வரலட்சுமி
20. மாண்புமிகு திரு. J.L. ஈஸ்வரப்பன்
21. மாண்புமிகு திரு. தா. உதயசூரியன்

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 10

22. மாண்புமிகு திரு. ஜே.ஜே. எபினேசர் (எ) ஜே. ஜான் எபினேசர்
23. மாண்புமிகு திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
24. மாண்புமிகு டாக்டர் நா. எழிலன்
25. மாண்புமிகு திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி
26. மாண்புமிகு திரு. கோ. ஐயப்பன்
27. மாண்புமிகு திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
28. மாண்புமிகு திரு. கே.பி சங்கர்
29. மாண்புமிகு திரு. எம்.சி. சண்முகையா
30. மாண்புமிகு திரு. துரை. சந்திரசேகரன்
31. மாண்புமிகு திரு. S. சந்திரன்
32. மாண்புமிகு திரு. கே.எஸ். சரவணக்குமார்
33. மாண்புமிகு திரு. பெ.சு.தி. சரவணன்
34. மாண்புமிகு திரு. க. தேவராஜி
35. மாண்புமிகு திரு. A.P. நந்தகுமார்
36. மாண்புமிகு திரு. A. நல்லதம்பி
37. மாண்புமிகு திரு. நிவேதா எம். முருகன்
38. மாண்புமிகு திரு. டி.கே.ஜி. நீலமேகம்
39. மாண்புமிகு திரு. இ. பரந்தாமன்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

பகுதி–3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்
2. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு
3. மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்
4. மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி
5. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
6. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்
7. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்
8. மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு
9. மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
10. மாண்புமிகு திரு. சா.மு. நாசர்
11. மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்
12. மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
13. மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்
14. மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்
15. மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்
16. மாண்புமிகு திரு. S. அம்பேத்குமார்
17. மாண்புமிகு திரு. ச. அரவிந்த் ரமேஷ்
18. மாண்புமிகு திரு. க. அன்பழகன்
19. மாண்புமிகு திரு. சபா. இராசேந்திரன்
20. மாண்புமிகு திரு. நா. இராமகிருஷ்ணன்
21. மாண்புமிகு திரு. S.R. இராஜா
22. மாண்புமிகு திரு. இரா. இராஜேந்திரன்
23. மாண்புமிகு திரு. க.சொ.க. கண்ணன்
24. மாண்புமிகு திரு. க. கணபதி

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 10

25. மாண்புமிகு திரு. இ. கருணாநிதி
26. மாண்புமிகு திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
27. மாண்புமிகு திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி
28. மாண்புமிகு திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
29. மாண்புமிகு திரு. க. சுந்தர்
30. மாண்புமிகு திரு. ஐ.பி. செந்தில் குமார்
31. மாண்புமிகு திரு. க. செல்வராஜ்
32. மாண்புமிகு திரு. R.D. சேகர்
33. மாண்புமிகு திரு. மு. பன்னீர்செல்வம்
34. மாண்புமிகு திரு. ஒய். பிரகாஷ்
35. மாண்புமிகு திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
36. மாண்புமிகு திரு. பூண்டி கே. கலைவாணன்
37. மாண்புமிகு திரு. கே. பொன்னுசாமி
38. மாண்புமிகு திரு. G.V. மார்க்கண்டேயன்
39. மாண்புமிகு டாக்டர் வை. முத்துராஜா
40. மாண்புமிகு திரு. செ. முருகேசன்
41. மாண்புமிகு திரு. A.G. வெங்கடாசலம்
42. மாண்புமிகு திரு. ஆ. வெங்கடேசன்
43. மாண்புமிகு திரு. அ. வெற்றிஅழகன்
44. மாண்புமிகு திரு. த. வேலு

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

பகுதி-4

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு திரு. வி.பி. நாகைமாலி
2. மாண்புமிகு திரு. ட்டி. இராமச்சந்திரன்
3. மாண்புமிகு டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
4. மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
5. மாண்புமிகு திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
6. மாண்புமிகு திரு. தி. வேல்முருகன்
7. மாண்புமிகு திரு. மா. சின்னதுரை
8. மாண்புமிகு திரு. K. மாரிமுத்து
9. மாண்புமிகு திரு. கு. சின்னப்பா
10. மாண்புமிகு திரு. ப. அப்துல் சமது
11. மாண்புமிகு திரு. ஜோசப் சாமுவேல்
12. மாண்புமிகு திரு. இரா. அருள்
13. மாண்புமிகு திரு. S.S. பாலாஜி
14. மாண்புமிகு திரு. மு. பூமிநாதன்
15. மாண்புமிகு திரு. செ. ஸ்டாலின் குமார்
16. மாண்புமிகு திரு. ஒ. ஜோதி
17. மாண்புமிகு திரு. தி. ராமச்சந்திரன்
18. மாண்புமிகு திரு. S. ராஜகுமார்
19. மாண்புமிகு திரு. ரூபி ஆர். மனோகரன்
20. மாண்புமிகு திரு. S. சதாசிவம்
21. மாண்புமிகு திரு. ச. சிவகுமார்
22. மாண்புமிகு திரு. மு. பாபு

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எல்லாவற்றிற்கும் எழுந்தீர்களே! *(சிரிப்பு)*

23. மாண்புமிகு திரு. எம்.ஆர். காந்தி

24. மாண்புமிகு டாக்டர் சி. சரஸ்வதி

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி–5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு திரு. ம. சிந்தனை செல்வன்
2. மாண்புமிகு திரு. ஜி.கே. மணி
3. மாண்புமிகு திரு. செ. ராஜேஷ் குமார்
4. மாண்புமிகு திரு. கு. செல்வபெருந்தகை
5. மாண்புமிகு திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
6. மாண்புமிகு திரு. R. ராதாகிருஷ்ணன்
7. மாண்புமிகு திரு. S. பழனி நாடார்
8. மாண்புமிகு திரு. துரை. சந்திரசேகர்
9. மாண்புமிகு திரு. ஆர். கணேஷ்
10. மாண்புமிகு திரு. G. அசோகன்
11. மாண்புமிகு திரு. ஆ.மு. முனிரத்தினம்
12. மாண்புமிகு திரு. சா. மாங்குடி
13. மாண்புமிகு திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

2023 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி-6

–எவருமில்லை–

வாக்கு எண்ணிக்கை முடிவுற்றது. வாக்கு எண்ணிக்கையின் முடிவு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பட்டன:

தீர்மானத்தை ஆதரித்தோர் 144 பேர் (மேசையைத் தட்டும் ஒலி)

தீர்மானத்தை எதிர்த்தோர் –2

நடுநிலை வகித்தோர்–எவருமில்லை.

எனவே, மொத்தம் வாக்களித்த 146 உறுப்பினர்களில் 144 உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்திருக்கின்ற காரணத்தினால், பேரவை விதி 287–ன்படி (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 4–ல் 3 பங்கிற்கும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பேரவை விதி 287–ன்கீழ், பேரவை விதி 287 மற்றும் 92(vii)–ல் குறிப்பிடப்பட்டிருக்கின்ற சில பதங்கள் இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் நிறுத்தி வைக்கப்படுகின்றன என்பதை அறிவிக்கிறேன்.

5. அரசினர் தனித் தீர்மானம்

பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டும் என ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும் வழங்கிட வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாசல் கதவுகளைத் திறந்து விடலாம். அவைக் காவலர்கள் வாசல் கதவுகளைத் திறந்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

[*2023 ஏப்ரல் 10*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்த ஆண்டு "ஆளுநர் உரை" கூட்டத்தொடர் நடத்தி முடிக்கப்பட்டு, இன்னும் நிதிநிலை அறிக்கை மற்றும் மானியக் கோரிக்கை தொடர்பான சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிவதற்குள், இரண்டாவது முறையாக மாண்புமிகு ஆளுநர் பற்றி தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய விரும்பத்தகாத ஒரு சூழலை, இந்த அரசு உருவாக்கவில்லை; ஆனால், மாண்புமிகு ஆளுநர் அவர்கள், அரசியல் சட்டத்தையும் கடந்து, ஓர் அரசியல் கட்சியின் கண்ணோட்டத்துடன் செயல்படுவதால், இப்படியொரு தீர்மானத்தை இரண்டாவது முறையாக நான் முன்மொழிய வேண்டிய நிர்பந்தத்தை அவர் ஏற்படுத்தியிருக்கிறார்.

(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி மற்றும் திரு. எம்.ஆர். காந்தி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

இந்தியாவில் கூட்டாட்சியை உருவாக்கவும், சுயாட்சி கொண்டவையாய் மாநிலங்களை மலர வைக்கவும், திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணிப் படையாகச் செயல்படும் என்று தலைநகர் டெல்லியில் வைத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை இம்மாமன்றத்தில் நானும் வழிமொழிகிறேன். இதை உணர வேண்டியவர்கள் உணர வேண்டும்; அதனை உணர்த்துவதற்கான நாளாக இது அமைந்துள்ளது.

முற்பகல் 11–40

"ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையில்லை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபோதிலும், (மேசையைத் தட்டும் ஒலி) அதை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிமொழிந்தபோதிலும், அந்தப் பதவி இருக்கும்வரை அதற்குரிய மரியாதையைக் கொடுக்க அவர்கள் முதலமைச்சர்களாக இருந்த நேரத்தில் தவறியதில்லை. அவர்களது வழியைப் பின்பற்றி நானும் அதிலிருந்து இம்மியளவும் விலகியதில்லை; இந்த அரசும் தவறியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அனுமந்தய்யா நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் 1969-இல், "கட்சி அரசியல் வேறுபாடு மற்றும் ஒருதலைபட்சமான

2023 ஏப்ரல் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

*செயல்பாடுகளின்றி, நம்பிக்கை வைக்கக் கூடியவராக ஆளுநர் இருக்க வேண்டும்" என்று கூறியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நியமித்த, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி தலைமையிலான "ராஜமன்னார் குழு" ஒன்றிய-மாநில அரசு உறவுகள் பற்றி அளித்த அறிக்கையில், "ஆளுநர் பதவியை ஒழிக்க மிக உகந்த தருணம் இது" என்று பரிந்துரைத்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இதே மாமன்றத்தில் அந்த அறிக்கை மற்றும் பரிந்துரைகள் 5 நாட்கள் விவாதிக்கப்பட்டு, மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பது வரலாறு. ஒன்றிய அரசு-மாநில அரசு உறவுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதிபதி சர்க்காரியா தலைமையிலான கமிஷன், "ஆளுநர் என்பவர் பற்றற்ற அடையாளம் உள்ளவராக (*Governor should be a Detached figure*) இருக்க வேண்டும்" என்று பரிந்துரைத்தது.*

அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்ய பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்கள் 2000 ஆம் ஆண்டு நியமித்த உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற மாண்புமிகு தலைமை நீதிபதி வெங்கடாசலய்யா அறிக்கையும் இதே கருத்தையே வலியுறுத்தியது.

*இன்னும் சொல்லப்போனால், குடியரசுத் தலைவரை பதவி நீக்க "இம்பீச்மென்ட்" அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருப்பதுபோல, ஆளுநர்களை நீக்க சட்டமன்றத்திற்கும் "இம்பீச்மென்ட்" அதிகாரம் வழங்கலாமா (மேசையைத் தட்டும் ஒலி) என ஒரு கலந்தாலோசனையையே (*Consultation Paper*) அப்போது வெளியிட்டு, கருத்து கேட்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

அரசியல் சட்டத்தின் தந்தை என நம் அனைவராலும் போற்றப்படும் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், "ஆளுநர் என்பவர், மாநில அரசின் நிர்வாகத்தில் குறுக்கிடாத அரசியல் சட்ட ஆளுநராகச் செயல்பட வேண்டும்" என்பதை அரசியல் நிர்ணய சபையிலேயே வலியுறுத்தியிருக்கிறார்.

2010-ல் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த மாண்புமிகு திரு. கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு, "ஆளுநர் நியமிக்கப்பட்டுவிட்டால் அவர் அரசியல் சட்டத்திற்குத்தான் விசுவாசமாக இருக்க வேண்டுமே

தவிர, அரசியல் கட்சிக்கு அல்ல" (மேசையைத் தட்டும் ஒலி) என்று "பி.பி. சிங்கால்" வழக்கில் மிகத் தெளிவாகவே வரையறுத்துள்ளது.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், அந்த அரசைத் தேர்ந்தெடுத்த மாநில மக்களுக்கும் வழிகாட்டுபவராகவும், நண்பராகவும் ஆளுநர் இருக்க வேண்டும்" என்று எத்தனையோ உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், நமது ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் "நண்பராக" இருப்பதற்குத் தயாராக இல்லை என்பதை அவர் பதவியேற்றதிலிருந்து செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தி வருகின்றன.

ஆளுநர் திறந்த மனதுடன் அரசுடன் விவாதிக்க வேண்டுமே தவிர, பொதுவெளியில் நிர்வாக நடவடிக்கைகளை விவாதிப்பது சரியல்ல. இந்த அரசின் கொள்கைகளை, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மையை, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாக்களைக் கொச்சைப்படுத்தி பொதுவெளியில் பேசுகிறார். அவர் ஆளுநர் என்ற நிலையைத் தாண்டி அரசியல்வாதியாகப் பேசுகிறார். அந்தப் பதவிக்கு என்னென்ன தகுதிகளை சர்க்காரியா அறிக்கை வரையறுத்துக் கூறியுள்ளதோ, அந்தத் தகுதிகளையெல்லாம் மறந்துவிட்டுப் பேசுகிறார்.

அதுவும் குறிப்பாக, மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வரும்போதோ அல்லது பிரதமரைச் சந்திக்க நான் டெல்லி செல்லும்போதோ, தமிழ்நாடு அரசுக்கு எதிராகப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

ஆன்லைன் சூதாட்டத்தைத் தடைசெய்யும் மசோதாவை இந்த அவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், இளைஞர்களின் தற்கொலைகள் தொடரும் நிலையில்கூட அதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறார்.

அதற்கு மேல் சென்று, "withhold" என்றால் நிராகரிக்கப்பட்டதாகப் பொருள் என்று ஆளுநர் விதண்டாவாதமாக பேசுகிறார். இந்த "withhold" அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்கவே கூடாது என்று சர்க்காரியா அறிக்கை கூறியதைக்கூட அறியாதவர்போல் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் சட்டப் பிரிவு 200-ன்கீழ் "ஆளுநரால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவை சட்டமன்றம்

2023 ஏப்ரல் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

மீண்டும் நிறைவேற்றி அனுப்பிவிட்டால், அந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர வேறு வழி ஆளுநருக்கு இல்லை" என்பதே தெளிவு.

அதைவிட ஒரு மசோதாவைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்றால், அதைக்கூட அமைச்சரவையின் அறிவுரைப்படியே ஆளுநர் செய்ய வேண்டும் என்பதே அரசியல் நிர்ணய சபையில், இந்த அரசியல் சட்டப் பிரிவு குறித்து விவாதம் நடைபெற்றபோது சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள்.

சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் அதிகாரத்தை, மக்கள் பிரதிநிதிகள் அவையாக இருக்கக்கூடிய சட்டமன்றங்களுக்கு வழங்கிவிட்டு, அதற்கு ஒப்புதல் கையெழுத்துப் போடும் உரிமையை ஒரு நியமன ஆளுநருக்கு வழங்கியது மக்களாட்சி மாண்பு ஆகாது என்பதால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தும் முன்னெடுப்புகளை நாம் எடுக்க வேண்டும் எனக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் சட்டம் ஆளுநருக்குத் தெரியவில்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால், அவருக்கு இருக்க வேண்டிய "அரசியல் சட்ட விசுவாசத்தை", "அரசியல் விசுவாசம்" அப்படியே விழுங்கி விட்டது என்றே இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

அதனால்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் மீறி, அரசின் அமைச்சரவை எடுத்த கொள்கை முடிவுகளை விமர்சித்து பொதுவெளியில் பேசுகிறார்; அரசியல் சட்டத்தின் முகவுரையில் சொல்லப்பட்டுள்ள "மதச்சார்பின்மைக்கு" எதிராகப் பேசுகிறார்; தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்துகிறார்; தமிழ்நாட்டு மக்களின் நலனுக்குக் குறுக்கே நிற்கிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தை, இறையாண்மைமிக்க இந்த நூற்றாண்டு வரலாறு கொண்ட சட்டமன்றத்தை அவமதிக்கிறார். நாள்தோறும் ஒரு கூட்டம், நாள்தோறும் ஒரு விமர்சனம் என்ற நிலையில், ராஜ்பவனை "அரசியல் பவனாக" மாற்றிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வகுப்புவாத எண்ணம் கொண்ட சிலரின் ஊதுகுழலாக ஆளுநர் செயல்படுகிறார்.

ஆளுநரை விமர்சிக்கிறோம் என்றால், அவரை தனிப்பட்ட முறையில் அல்ல; ஆளுநரின் செயல்பாடுகளைத்தான்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 10

விமர்சிக்கிறோம். ஆளுநர் பேசி வந்த கருத்துகளுக்கு, பதிலுக்குப் பதில் சொல்லி சட்டமன்றத்தை அரசியல் மன்றமாக நான் மாற்ற விரும்பவில்லை. அதேநேரத்தில், சட்டமன்றத்துக்கு அரசியல் நோக்கத்தோடு இடைஞ்சல் தர நினைத்தால், அதனை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் நோக்கத்துக்காக, அரசியல் இலாப நஷ்டங்களுக்காக, யாரோ சிலரின் விருப்பங்களுக்காக, நாம் இந்த அவையில் சட்டங்களை நிறைவேற்றுவது இல்லை. எடுத்தவுடன் சட்டம் போடுவதும் இல்லை. நீட் விலக்குச் சட்டமாக இருந்தாலும், ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டமாக இருந்தாலும், எத்தனைகட்ட பரிசீலனைக்குப் பிறகு இவற்றை நிறைவேற்றினோம் என்பதை இந்த அவைக்கு விளக்கத் தேவையில்லை.

ஓய்வுபெற்ற மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரையின்படி நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது.

ஆன்லைன் சூதாட்டத் தடைச் சட்ட மசோதா என்பது, ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. சந்துரு அவர்கள் தலைமையிலான குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

மக்கள் கருத்து, வல்லுநர்கள் கருத்து, சட்டங்கள், தீர்ப்புகள், மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய உங்களுடைய கருத்துகள் இவை அனைத்தையும் சேர்த்துதான் உருவாக்குகிறோம்.

இப்படிப் பார்த்துப் பார்த்து உருவாக்கிய சட்டங்களை, தன்னுடைய விருப்பு வெறுப்பால் தடை போட்டுவிட்டு, உண்மைக்கு மாறான காரணங்களைச் சொல்லி மழுப்பி வந்தால், அதனை நம்பும் அளவுக்கு தமிழ்நாடு, ஏமாந்தவர்கள் இருக்கக்கூடிய மாநிலம் அல்ல! (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டின் தொடக்கத்தில், அரசின் ஆளுநர் உரையில் இருந்த சில பகுதிகளை/சொற்களைத் தவிர்த்துவிட்டு ஆளுநர் உரையாற்றியதைத் திருத்துவதற்காகவும், அரசின் ஆளுநர் உரையை முழுமையாகப் பதிவு செய்வதற்காகவும், நானே முன்மொழிந்து இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடரில் 9–1–2023 அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம்.

2023 ஏப்ரல் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

இன்று, இதே மாமன்றத்தில், உங்கள் முன் ஒரு தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று, ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள தமிழ்நாடு அரசுக்கு, தமது மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய அரசமைப்புச் சட்டத்தின்படியான பொறுப்பும், ஜனநாயகரீதியான கடமையும் உள்ளது. இவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு உள்ள இறையாண்மை மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான சட்டமியற்றும் பொறுப்புகளின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள பல்வேறு மசோதாக்களை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அனுமதி அளிக்காமல் காலவரையின்றி கிடப்பில் போட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்பட்டு வருவதை இப்பேரவை மிகுந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*அதுமட்டுமின்றி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்கள் குறித்து பொதுவெளியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவிக்கும் சர்ச்சைக்குரிய கருத்துகள், அவர் வகிக்கும் பதவி, எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணம் ஆகியவற்றுக்கும், மாநிலத்தின் நிர்வாக நலனுக்கும் ஏற்புடையதாக இல்லை என்பதோடு, அரசமைப்புச் சட்டத்திற்கும், கடைபிடிக்கப்பட்டு வரும் மரபுகளுக்கும் எதிராகவும், இப்பேரவையின் மாண்பைக் குறைத்து, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் சட்டமன்றத்தின் மேலாண்மையை (*Supremacy of Legislature*) சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.*

எனவே, மாநில மக்களின் குரலாக விளங்கும் சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஒன்றிய அரசையும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களையும் வலியுறுத்துவது என்றும்;

மக்களாட்சித் தத்துவம் மற்றும் மாட்சிமை பொருந்திய இச்சட்டமன்றத்தின் இறையாண்மை ஆகியவற்றிற்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து தமிழ்நாடு மக்களின் நலனுக்கு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 10

எதிராகச் செயல்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்டமியற்றும் அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில், இப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டுமென்று, ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும் உடனடியாக வழங்கிட வேண்டும் என்றும் இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது" என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்தில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் உங்களுடைய பொருள் இருக்க வேண்டும்; அந்த அடிப்படையில் பேச வேண்டும்; சுருக்கமாகப் பேச வேண்டும் என்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சி என்பது, தமிழக மக்களின் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, சட்டமன்றத்திலும் தனிப்பெரும்பான்மை பெற்று, தன்னிகரற்ற தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பு புதல்வர், எங்கள் மதிப்பிற்குரிய அண்ணன் தளபதியார் அவர்களின் தலைமையில் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த மக்களாட்சியில் மக்களின் வாக்குகளைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் நடைபெறுகின்ற ஓர் அரசு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற தீர்மானங்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்ட மசோதாக்களுக்கும் மதிப்பளித்து, அதற்கு ஒப்புதலளிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும்தான் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு

2023 ஏப்ரல் 10] [திரு. தி. வேல்முருகன்]

*உண்டு. ஆனால், தமிழக ஆளுநராக பொறுப்பேற்றதிலிருந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தில் சுட்டிக்காட்டியதுபோல், தொடர்ச்சியாக, தமிழக மக்களின் வாக்குகளைப் பெற்று, மக்களுக்காகப் பணியாற்ற வேண்டிய அரசின் பணியைத் தடுப்பதாகவும், அதற்கு அரசியல்ரீதியாக கற்பிதங்களை உருவாக்குவதாகவும், தன்னுடைய தொடர் வாடிக்கையாக மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் நடந்துவருகிறார். ஆதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாடு அரசும் கைகட்டி, வாய்பொத்தி வேடிக்கைப் பார்க்கின்ற அரசல்ல. ஜனநாயகத்தை இந்தியாவிலேயே காப்பாற்றுகிற முதல் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்திருக்கிறது. **அப்போதெல்லாம் இந்தியாவின் முதல் குரலாக, தென்னகத்தின் குரல், தமிழ்நாட்டின் குரல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரலாக ஒலித்திருக்கின்றது.*

அந்த அடிப்படையில் இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசினர் தீர்மானத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றிய அரசைப் பற்றிப் பேசியதை நீக்கிவிடுவோம். அதை நீக்கிவிடுகிறேன். மற்றபடி பேசுங்கள். இதுகுறித்துப் பேசுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மக்களுக்காக இயற்ற வேண்டிய சட்டங்களை இயற்றுவதும், மக்களுக்குத் தேவையில்லாத சட்டங்களை நீக்குவதும்தான் ஓர் அரசின் கடமை. அந்தக் கடமையின், பொறுப்புணர்வின் அடிப்படையில்தான் மக்கள் நமக்கு வாக்களிக்கிறார்கள். நம்முடைய அரசு இங்கு அமைகிறது. ஆனால், அந்தப் பணிகள் எதையும் செய்யவிடாமல் தடுப்பதையே குறியாகக் கொண்டு, குறை சொல்வதும், பொதுவெளியில் பேசுவதும், இந்தியாவின் நாளைய* bureaucracy *என்று போற்றப்படுகிற* IAS, IPS *அதிகாரிகளாக வரவிருக்கிற மாணவர்களின் மத்தியில், இந்த அரசையும், இந்த மக்களையும் களங்கப்படுத்துகின்ற மிக மோசமான சொற்றொடர்களைத் தொடர்ந்து மாண்புமிகு ஆளுநர்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

அவர்கள் பொதுவெளியில் பயன்படுத்தி வருகிறார். இதைத் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களை திரும்பப் பெற வேண்டுமென்கின்ற ஒரு சட்டத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்கின்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் முன்வைக்கிறேன்.

ஒன்றிய அரசு, தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பிள்ளையையும் கிள்ளிவிடுகின்ற வேலையைத் தொடர்ச்சியாகச் செய்துவருகிறது. இதை ஒரு காலத்திலும் அனுமதிக்க முடியாது. தமிழக மக்களின் விரோதியாக, அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதியாகச் செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக ஆளுநர், தமிழ்நாட்டில் இனி ஒரு நிமிடம்கூட பதவியில் தொடர்வதற்கான தகுதியை இழக்கிறார் என்பதைப் பகிரங்கமாக (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு சொல்லி, வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னெடுப்புகளை அன்று முதல் இன்றுவரை திராவிட முன்னேற்றக் கழகம், ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கினை எதிர்த்து இரண்டு முறை ஆட்சியை இழந்திருக்கிறது. ஆனால், இந்த **கண்டிக்கின்றபோதுதான், மாண்புமிகு முதல்வர் அவர்களை அரசியல்ரீதியாக எதிர்க்கின்ற கட்சிகள்கூட, **எதிர்க்கிற காரணத்தினால் உங்கள் கைகளை வலுவாகப் பின்பற்றி, மீண்டும், மீண்டும் மக்களாட்சி மலர்வதற்கு வாய்ப்பைத் தருவார்கள். ஆதலால், (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

ஆதலால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பாரதிய ஜனதா என்கிற இந்த சனாதனக் கூட்டம், தமிழ்நாட்டில் கோலோச்சுவதை ஒடுக்குவதற்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, உங்களுக்குப் பின்னால் அணி வகுக்கத் தயாராக இருக்கின்றார்கள். ஆதலால், இந்த அரசினர் தீர்மானத்தை வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானமாகக் கருதி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஏப்ரல் 10]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, அதுவும் கடைசியாக, தாமதப்படுத்தப்படுகிறது, அதாவது,* withhold *என்று சொன்னால், அது நிராகரிக்கப்பட்டது என்று பேசியிருப்பதை, 'நான் இப்படித்தான் செய்வேன், இப்படித்தான் பேசுவேன், உங்களால் என்ன செய்ய முடியும்' என்று சவால் விடுவதாகத்தான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவுதான் பொறுமையும், பெருந்தன்மையும் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சுருக்கமாகப் பார்த்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கோபப்படுத்தி, அவர் வாயிலிருந்து ஏதாவது வார்த்தைகள் வராதா என்று காத்திருப்பது போலவே தோன்றுகிறது. மாண்புமிகு ஆளுநர் அவர்களது செயல்பாட்டை, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மட்டும்தான் அவராகச் செய்கிறார் என்று கடந்து போக முடியாது. யாரோ சொல்வதை, அவர் செய்கிறார் என்றுதான் இங்கே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேசமயத்தில், 234 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானங்களையெல்லாம், அவர் நிராகரிப்பேன் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற அந்த பொறுமையும், பெருந்தன்மையும் 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்குமா என்றால், தெரியாது. எனக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அப்படி நாமெல்லாம் நிறைவேற்றி அனுப்புகின்ற தீர்மானத்தை, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நிராகரிக்கிறார் என்றால், ஆளுநர் மாளிகைக்கான செலவுகளைச் சந்திப்பதற்கான நிதி மசோதாவிற்கான தீர்மானத்தினை நாம்தான் இங்கே நிறைவேற்ற வேண்டும். மனதளவிலே அந்த வேதனையிருக்கிறது. அப்படியிருக்கும்போது, அதை ஒருமனதாக எப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்ற முடியும்? அந்தக் கோபம் நமக்கு இருக்காதா? அப்படி நாம் என்ன கேட்டிருக்கிறோம். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், இதைவிட பொறுமையாக, அமைதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது. அவர் காலவரையறை நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்கிறார். ஒரு வருடத்திற்கு முன்பு, அதாவது 2021 ஆம் ஆண்டில் சிம்லாவில் நடைபெற்ற பேரவைத்

தலைவர்கள் மாநாட்டில், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசும்போது, காலவரையறை நிர்ணயிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார். ஓராண்டுக்குப் பிறகும்கூட, ஒன்றிய அரசு அதில் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்காமல் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட, இவ்வளவு பொறுமையாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார். இதற்கு மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவில் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுடைய, ஆளுநரால் பாதிக்கப்பட்டவர்களுடைய சங்கத்தைத்தான் ஆரம்பிக்க வேண்டும். அனைவரும் சேர்ந்துதான் புலம்ப வேண்டும். இதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

*ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எல்லோருமே நல்லவர்கள்தான். ஆனால், எப்போதுமே *பொறுமையாக இருக்க முடியாது. ஓரளவிற்குத்தான் அடி தாங்க முடியும். அளவேயில்லாமல் தொடர்ந்து அடித்துக்கொண்டேயிருந்தால், அதையெல்லாம் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போதுமே நல்லவர்களாகத்தான் இருப்பார்கள். பொறுமையாக அதிகநேரம் இருக்கமாட்டார்கள் என்று பேசுங்கள். அந்த வார்த்தையை பொறுமையாக என்று மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடு)*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற பொறுமை எங்களுக்கெல்லாம் இருக்குமா என்று தெரியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எப்போதுமே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நல்லவர்கள்தான்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *அதனால், இப்படிப்பட்ட இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தீர்மானத்தை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக முழுமனதோடு வரவேற்று, இதோடு நிற்காமல், இன்னும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துகிற, வேகப்படுத்துகிற*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 10] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய நடவடிக்கைகள் குறித்து முன்மொழிந்திருக்கிற தீர்மானத்தை, வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். முன்னுரையாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை முன்மொழியக்கூடிய, ஒரு விரும்பத்தகாத சூழல் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். உண்மைதான். தமிழக மக்களால் விரும்பத்தகாதவர் ஒருவர், தமிழகத்தினுடைய ஆளுநராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் வலிமையாகவே தன்னுடைய முன்னுரையிலே குறிப்பிட்டார்கள். ஆளுநர் தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் நண்பர் இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஆம். நமது மாநிலத்திற்கு, நமது அரசுக்கு நண்பராக இல்லாத ஒருவர், ஆளுநர் பதவியிலே ஒருநிமிடம்கூட நீடிப்பதற்கு எந்த ** அவருக்கு இல்லை என்பதுதான் யதார்த்தமான உண்மையாக இருக்கின்றது. ஆளுநருடைய நடவடிக்கைகள் அனைத்தையும், அனுமந்தய்யா ஆணையம் தொடங்கி வெவ்வேறு ஆணையங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் இவற்றையெல்லாம் மேற்கோள் காட்டி பேசிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது என்பது தெரியாதவர் அல்ல ஆளுநர்; ஆனால், வேண்டுமென்றே செய்கின்றார் என்று குறிப்பிட்டார்கள். அது அவருடைய தனிப்பட்ட எண்ணமாக இருக்கலாம். ஆளுநருடைய எண்ணமாக இருக்கலாம். இந்திய ஆட்சிப் பணியில் அதிகாரிகளாக வரக்கூடிய மாணவர்களுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மத்தியிலே ஆளுநர் பேசுகின்றார்; அப்படிப் பேசும்போது அவர் என்ன சொல்கிறார்; சட்டமன்றம் நிறைவேற்றிய ஒரு மசோதாவிற்கு நான் ஒப்புதல் அளிக்கவில்லையென்றால், காலதாமதம் செய்கின்றேன் என்றால், அந்த மசோதாவை நான் நிராகரிக்கிறேன் என்று பொருள் என்று நாளைக்கு I.A.S., I.P.S. ஆட்சியாளர்களாக வரக்கூடியவர்களுக்கு மத்தியில் வகுப்பு எடுப்பதற்கு இவருக்கு என்ன ** இருக்கின்றது? அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக பாடம் எடுக்கக்கூடிய ஒருவர் ஆளுநர் மாளிகையில் நீடிப்பதற்கு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்பதை நீக்கி விடுவோம்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: என்ன ** இருக்கின்றது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதையும் நீக்கி விடுகிறேன்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் வார்த்தைகள் நன்றாக,

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கின்றது; பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே ஆளுநர் குறித்த இந்தப் பகுதி, இந்த அம்சம் குறித்து விவாதம் செய்யும்போது அவர் சொன்னதை நான் இங்கே அப்படியே மேற்கோள் காட்ட விரும்புகின்றேன். 'The Governor under the Constitution has no function which he can discharge by himself; no functions at all.' என்பதை மிகத் தெளிவாக பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்திலே சொல்லியிருக்கின்றார். அரசமைப்புச் சட்டத்தினுடைய விதியின்படி ஆளுநர் தானாகச் செயல்படுத்தக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையும் அவருக்கு இல்லை; இல்லவே இல்லை என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஏப்ரல் 10] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

அழுத்தந்திருத்தமாக புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார்கள். ஆளுநர் அவர்கள் சட்டமன்றம் நிறைவேற்றிய இந்த மசோதாக்களை நான் அதற்கு ஒப்புதல் கொடுக்கவில்லையென்றால், அது இரத்தாகிறதென்று சொல்லக்கூடிய அந்த நிலை முழுக்க முழுக்க அரசியல் சாசனச் சட்டத்திற்கு எதிரானது. அரசியல் சாசனச் சட்டத்தின் அடிப்படையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட ஒருவர், அந்த அரசியல் சாசனச் சட்டத்தினுடைய விழுமியங்களுக்கு எதிராக, அதனுடைய மாண்புகளுக்கு எதிராக சென்னையிலே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆளுநர் மாளிகையில் நீடிப்பதற்கு எந்த ** அதுவும் குறிப்பாக, சட்டமன்றத்தில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை நன்றாக இல்லை. அதை மாற்றிவிடுவோம்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: என்ன வார்த்தை போடலாம் என்று நீங்களே சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லை என்றே சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ** என்றாலும் நீக்குகிறீர்கள்; ** என்றாலும் நீக்குகிறீர்கள். அவருக்கு உரிமையில்லை. அதாவது இருக்கட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் பேசிய அந்த வார்த்தைகளை நீக்கிவிடுகிறேன். நீங்கள் பேராசிரியர், . . .

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: உரிமையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், இப்போது பேசி முடியுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டத்தினுடைய 200–வது பிரிவின்கீழ் ஒரு சட்டமன்றம் நிறைவேற்றக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 ஏப்ரல் 10

தீர்மானத்திற்கு ஆளுநர் as soon as possible என்ற அந்தக் காலகட்டத்திற்குள் ஒப்புதல் தர வேண்டுமென்று சொல்கிறது. உண்மைதான். As soon as என்பதற்கு என்ன வரைமுறை? அதற்குதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று முன்மொழிந்துள்ள அந்தத் தீர்மானத்திலே அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், Online Rummy மசோதாவைப் பொறுத்தவரை, அது அனுப்பப்பட்டு திரும்ப ஆளுநரால் சட்டமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, மீண்டும் நிறைவேற்றப்பட்ட பிறகு, அவருக்கு அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறதென்றால், உடனடியாக அதுகுறித்த முடிவை, அந்த வார்த்தை என்னவென்றால், 'It shall be presented to the Governor and the Governor shall declare'; உடனடியாக அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும். அதற்கு எந்தவிதமான காலதாமதமும் செய்யக் கூடாது என்று தெளிவாகச் சொல்கிறது.

பிற்பகல் 12–05

அரசமைப்புச் சட்டத்தினுடைய மாண்புகளை, மிக மோசமாக மீறி, விழுமியங்களையெல்லாம் சிதைத்து, பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதற்கு விரோதமாகச் செயல்படக்கூடிய தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், இந்தப் பதவியிலிருந்து நீக்கப்படும் வரை தொடர்ந்து இந்தத் தீர்மானம் மட்டுமல்ல, சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் போராடி, (மணியடிக்கப்பெற்றது) பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, 'ஆட்டுக்குத் தாடி தேவையில்லை, ஆம், மாநிலங்களுக்கு ஆளுநர் தேவையில்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிலைநாட்டுவதற்கு அனைவரும் உறுதி எடுத்துக்கொள்வோமாக! என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய சட்டமன்றம், அமைச்சரவை போன்றவையெல்லாம் கூடி கொண்டு வந்த ஒரு சட்டமுன்வடிவிற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காதது குறித்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனத்த இதயத்தோடு கொண்டு வந்த தீர்மானத்தை மறுமலர்ச்சி

2023 ஏப்ரல் 10] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஆதரிக்கிறேன். நம்முடைய மக்களுக்கு எது தேவை, எது தேவையில்லை, மக்களைப் பாதுகாப்பது எப்படி என்பது, ஒரு மாநில அரசினுடைய கடமை. அது ஒரு முதல்வரின் தலையாய கடமை. மக்களின் தேவைகளை அறிந்து, அதற்கேற்ப சட்டங்களைத் தீட்டுவது நம்முடைய மாநில சட்டமன்றத்தின் உரிமை. இந்த உரிமையை மீறும் விதமாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் காட்டுகின்ற நடவடிக்கை வேதனைக்குரியதாக இருக்கின்றது. மனிதன் ஒருவன் ஒரு செயலை மீண்டும், மீண்டும் செய்தால், அதற்குரிய காரணத்தை நாம் கண்டுபிடிக்க முடியாது; ஒரு முறை செய்தால் காரணத்தை அறியலாம். அதையே, மீண்டும், மீண்டும் செய்து கொண்டிருந்தால் அவரின் மனநிலையைத்தான் நாம் அறிய வேண்டும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் அவர்களின் செயல்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து, வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றம் என்பது, எட்டரைக் கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மாமன்றம். நம்முடைய அரசு மக்களுடைய பேராதரவோடு, பெரும்பான்மையோடு வெற்றி பெற்று, இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ஒரு முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். மக்களுக்கான சட்ட மசோதாக்களை, அது* NEET *மசோதாவாக இருக்கட்டும்;* Online Rummy*-ஐ தடை செய்யும் மசோதாவாக இருக்கட்டும், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்பட்டு பல மாதங்களாக, அதற்கு இசைவளிக்காமல், இன்றைக்கு ஆளுநர் அவர்கள் அவற்றைக் கிடப்பிலே போட்டிருக்கிறார். தொடர்ந்து ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டின் நலனுக்கெதிராக, தமிழ்நாட்டினுடைய உரிமைகளுக்கு எதிராக, தமிழ் மொழி, கலாச்சாரப் பண்பாடுகளுக்கு எதிராகவும், தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய வரலாற்றைத் திரித்தும் பேசி வருகிறார்.*

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2023 ஏப்ரல் 10

இன்றைக்கு பொதுவெளியில், சுற்றுச்சூழலுக்கும், பொது மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற Sterlite ஆலைக்கெதிராக போராடிய மக்களை இழிவுபடுத்திப் பேசி வருகிறார். ஓர் ஆளுநர் என்பவர் இந்திய அரசமைப்பு சட்டத்தின்பால் உறுதிமொழி ஏற்று, இன்றைக்கு அந்த ஆளுநர் அந்தப் பதவிக்கு ஓர் ** முறையிலே செயல்பட்டு வருகிறார். ஆளுநர் என்பவர், ஒரு வரையறைக்குள் செயல்பட வேண்டுமென்று தொடர்ந்து பல்வேறு தீர்ப்புகளிலே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து அந்த வரம்புகளையெல்லாம் மீறி செயல்படுகின்ற, தமிழ்நாட்டு மக்களுக்கெதிராகச் செயல்படுகின்ற தமிழக ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டுமென்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நிலைப்பாடு; ஆளுநர் பதவி என்பதே தேவையில்லை என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நிலைப்பாடு. சட்டமன்றம் என்பது மாநில மக்களுடைய குரலாக இருக்கின்றது. ஆகவே, அந்தந்த மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள்மீது, அந்தந்த மாநில ஆளுநர்கள், குறித்த காலத்திற்குள் அதற்கான இசைவை அளிக்க வேண்டுமென்ற கால நிர்ணயத்தை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களும் நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றம் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது; மாண்புமிக்கது இந்த மன்றம். தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கெதிராகச் செயல்பட்டு வருகின்ற ஆளுநர் அவர்களுக்கு ஒன்றிய அரசு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்; இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களுக்கு உடனடியாக ஆளுநர் அவர்கள் இசைவு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களுடைய நடவடிக்கைகளை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

எப்படி விமர்சிப்பது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எந்த வார்த்தையைப் பயன்படுத்தி அவரை விமர்சிப்பது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுடைய வார்த்தைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து, அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். நாங்கள் எப்படிப் பேசுவது என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் உன்னிப்பாகக் கவனிக்கிறேன் என்று சொன்னதற்கு நன்றி.*

திரு. வி.பி. நாகைமாலி: *அதாவது, ஒரேயொரு உதாரணத்தைச் சொல்கிறேன். அவருடைய எதேச்சதிகார நடவடிக்கை எப்படியிருக்கிறது என்றால், சமீபத்தில் பத்திரிகை நிருபர்கள், தமிழ்நாடு அரசு நிறைவேற்றுகின்ற தீர்மானத்தை நீங்கள் ஏன் மத்திய அரசுக்கு அனுப்பவில்லை என்று கேட்டபோது, ஆளுநர் அவர்கள், 'கிடப்பில் போட்டிருக்கிறேன் என்றால், அவையெல்லாம் நிராகரிக்கப்படுகின்றன என்று அர்த்தம்' என்று சொல்லியிருக்கிறார். அதுவும் அதைப் பொதுவெளியில் சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், இந்தச் சட்டமன்றத்தைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார்? இந்த மக்களைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கூறியதைப்போன்று, இவ்வளவு மென்மையாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. இவ்வளவு கடினமாக இருக்கிற ஓர் ஆளுநர்மீது கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் மென்மையாக இருக்கிறது; நிதானமாக இருக்கிறது; பொறுமையாக இருக்கிறது. இதற்குமேல் மென்மையாக, பொறுமையாக எப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர முடியும் என்று தெரியவில்லை. இவ்வளவு அழுத்தத்தை நம்முடைய கவர்னர் அவர்கள் கொடுத்தபோதும், எப்படி மென்மையாக, பொறுமையாக இந்த வார்த்தைகளையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயன்படுத்துகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. பொறுமைக்கு கடலை உதாரணமாகச் சொல்வார்கள். நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொறுமைக்கு சமுத்திரத்தை உதாரணமாகச் சொல்வேன். ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் ஆதரிக்கிறேன்.*

[திரு. வி.பி. நாகைமாலி] [2023 ஏப்ரல் 10

அதேநேரத்தில், தமிழக ஆளுநரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களையும், ஒன்றிய அரசையும் வலியுறுத்தி இந்த சபையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தையும் வலியுறுத்தி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தை மனதார நான் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது பேனா உயிரோடு இருக்கிறது; உணர்வோடு இருக்கிறது; இன்னமும் நம்மை தட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மான உரை அமைந்திருந்தது. வால்ட் விட்மனின் கவிதையை எண்ணிப் பார்க்கிறேன். விடுதலைக்கான யுத்தத்தில் வெற்றி மாத்திரமல்ல; மரணமும், தோல்வியும்கூட மகத்தானவைதான் என்று அவர் பதிவு செய்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். தமிழ்நாடு இன்று மாநில சுயாட்சிக்கான ஒரு மகத்தான யுத்தத்திலே களத்தில் நின்று கொண்டிருக்கிறது. 1951–ல் எவ்வாறு சமூக நீதிக்கான முதல் சட்டத் திருத்தத்தை பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் களத்தில் நின்றும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்தில் நின்றும் இயற்றினார்களோ, ஒரு மகத்தான புரட்சியை உருவாக்கினார்களோ, அதேபோன்ற வகையிலே மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு மாபெரும் யுத்தத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே அறிவித்தபடி, இரண்டாவது விடுதலைப் போராட்டத்தை தமிழ்நாடு நடத்த வேண்டியிருக்கிறது. அதை நடத்துகிற ஆகப்பெரும் ஆளுமையாக, ஒரு மகத்தான தலைவராக, இமயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலமாக எம் முன்னால் எழுந்து நிற்கிறார். இந்தத் தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே, மாநில உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிற எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய தலைவர் முனைவர் அண்ணன் திருமா அவர்களின் சார்பிலே வரவேற்கிறேன்.

2023 ஏப்ரல் 10] [*திரு. ம. சிந்தனை செல்வன்*]

பிற்பகல் 12–15

ஏற்கெனவே, மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நானும் அதே உணர்வுகளை மறுபதிவு செய்ய விரும்பவில்லை. இந்த அவையின் இறையாண்மையை மறுப்பது என்பது, ஜனநாயகத்தை மறுப்பது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அது ஜனநாயகத்தையும், பன்மைத் தன்மையையும் பாதுகாக்கின்ற அரசமைப்பு சாசனத்தை மறுதலிப்பது, அவமதிப்பது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதை மிக வெளிப்படையாக, தொடர்ச்சியாக அரசமைப்பு சாசனத்தின் மைய உயிர்நாடியாக இருக்கிற மதச்சார்பின்மை என்கிற கோட்பாட்டிற்கு எதிராகவும், சமூக நீதி என்கிற கோட்பாட்டிற்கு எதிராகவும் மிக வெளிப்படையாக நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேசி வருவது, வேதனைக்குரியது; கண்டனத்துக்குரியது.

இந்தத் தருணத்தில் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். Sterlite *போராட்டம் குறித்து மாத்திரமல்ல; புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களே,* British *ஏகாதிபத்தியத்தினுடைய தூண்டுதலுக்கு இரையானார் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஆளுநர் மாளிகையிலேயே பதிவு செய்கிறார். அம்பேத்கரை அவ்வாறு இழிவுபடுத்துகிறார். இன்று* Sterlite *போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்களின் உணர்வுகளை சிறுமைப்படுத்துகிறார்.* Caldwell, Macaulay *ஆகியோரையும் அவர் இழிவுபடுத்துகிறார். திராவிட இலக்கணத்தை, திராவிட மொழிகளின் உயர்வை ஆய்வுபூர்வமாகப் பதிவு செய்த* Caldwell*–யும், பொது கல்வியைக் கொண்டு வந்த* Macaulay*–யும் இழிவுபடுத்துகிறார். காலனியாதிக்க மரபுகளையெல்லாம் விமர்சிப்பதுபோல் அவர் சொல்கிறார்.*

இந்தத் தருணத்தில் ஒன்றை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசமைப்பு சாசனம் 372–வது பிரிவில், புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்ற வரையில், ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்கள் தொடரும் என்கிற அடிப்படையில் காலனியாதிக்க மரபுகளின் அடிப்படையில்தான் 'Governor' *என்கிற சொல்லே பயன்படுத்தப்படுகிறது என்பதை வேதனையோடு இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். வைசிராய் என்கிற சொல் குடியரசுத் தலைவர் என்கிற சொல்லாக, குடியரசுத் தலைவர் என்கின்ற ஒரு*

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 ஏப்ரல் 10

ஜனநாயக மதிப்பீடு கொண்ட சொல்லாக மாறியிருக்கின்றது. ஆனால், 'Governor' என்கிற சொல் இன்னும் மாற்றப்படவில்லை. ஆகவே, அது ஒரு காலனியாதிக்க மதிப்பீடு என்பதை ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நான் சொல்லியிருக்கின்றேன்.

அந்த அடிப்படையில் அந்தக் காலனியாதிக்க மதிப்பீடு மாற்றப்பட வேண்டும். Raj Bhavan-லே குடியிருக்கிற உரிமை ஒருவருக்கு இருக்கிறது என்று சொன்னால், அது மாண்புமிகு முதல்வருக்குத்தான் அந்த உரிமை இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சட்டத்தைப் பொறுத்தவரையில், 153-ல் அரசமைப்பு சாசனத்தினுடைய பிரிவுகளில், 'There shall be a Governor for each State' என்கிற வார்த்தையையே ஒரு மறுவரையறை செய்து, கவர்னர் என்பதை ஒரு co-ordinator அல்லது ஒரு Facilitator என்கிற அளவில் மறுவரையறை செய்ய வேண்டிய ஒரு தேவையிருக்கிறது என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்தில் சொல்கிற அதே தருணத்தில் நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த 2021 செப்டம்பர் 9 ஆம் தேதி என்று நான் கருதுகிறேன்; அன்றையதினம் அவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். நம்முடைய அரசமைப்பு சாசனம் 158 பிரிவு 2-ல், 'The Governor shall not hold any other office of profit', அதாவது ஊதியம் பெறுகிற, சம்பளம் பெறுகிற வேறு எந்தப் பதவியையும் ஆளுநர் வகிக்கக் கூடாது என்று நம்முடைய அரசமைப்பு சாசனம் மிகத் தெளிவாகச் சொல்கிறது.

Auroville Foundation Act, 1988, Section 13-ல் சொல்லப்பட்டிருப்பது, Auroville Foundation என்கிற ஓர் அமைப்பு விழுப்புரம்-பாண்டிச்சேரி எல்லையில் அமைந்திருக்கிறது. அந்த Foundation-ல் Chairman என்கிற ஒரு பதவி இருக்கிறது. அது தொடர்பான விதிகள் Auroville Foundation Act 1988, Section 13-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதியில், 'The Chairman of the Governing Board shall be entitled to such salary and allowances and such conditions of service in respect of leave, pension, provident fund and other matters as may, from time to time' என்று சொல்லப்பட்டிருக்கிறது. Auroville Foundation-னுடைய Chairman-க்கு salary இருக்கிறது என்று உறுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவியை ஆளுநராகப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திற்குள்ளாக நம்முடைய மாண்புமிகு மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் பெறுகிறார் என்று

2023 ஏப்ரல் 10] [திரு. ம. சிந்தனை செல்வன்]

சொன்னால், அரசமைப்பு சாசனத்திற்கே விரோதமாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் செயல்பட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

ஆக, இந்திய அரசமைப்புச் சட்டம் 158, பிரிவு 2–ல் சொல்லப்பட்டிருக்கின்ற 'The Governor shall not hold any other office of profit' என்கிற பிரிவை அவர் மீறியிருக்கிறார். உண்மைக்கு மாறான தகவலைத் தந்து ஊதியம் பெறுகிற ஒரு பொறுப்பிலே இருக்கிற கவர்னர் அவர்கள் உடனடியாக அந்தப் பொறுப்பிலேயிருந்து தார்மீக ரீதியாக தன்னை வெளியேற்றிக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லப் போகின்ற செய்தியை நிச்சயம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவீர்கள் என்று நம்புகிறேன். ஆளுநர் பொறுப்பிலேயிருந்து மரியாதைக்குரிய நண்பர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் ** நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய பாஸிச களத்தை எதிர்கொள்வதற்கு பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரும், புரட்சியாளர் அம்பேத்கரும் எங்களுக்கு வலிமையை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வலிமையாக தலைநிமிர்வோடு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னபடி அதையெல்லாம் நீக்கிவிடுகிறேன்.

திரு. ம. சிந்தனை செல்வன்: தமிழகத்தை தலைநிமிர்வோடு மாநில சுயாட்சிக்கான இந்த யுத்தத்திலே, இந்த இரண்டாவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல கருத்தை எடுத்து வைத்தீர்கள், சந்தோசம்.

திரு. ம. சிந்தனை செல்வன்: இந்த இரண்டாவது விடுதலைப் போரிலே தலைமையேற்று நடத்துகிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி நூறு விழுக்காடு, தனது இறுதி சொட்டு இரத்தம் இருக்கின்ற வரை எழுச்சித் தமிழர் தலைமையிலே எங்களது துணை இருக்கும். இந்தத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

தீர்மானத்தை நூறு விழுக்காடு ஆதரிக்கின்ற அதே தருணத்திலே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் நேரில் ஒரு நாள் குடியரசுத் தலைவரைச் சென்று பார்ப்போம். அவர் அனுமதி வழங்கலாம், வழங்காமல் இருக்கலாம். ஆனால், குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அத்தனை பேரும் நேரில் சென்று வலியுறுத்த வேண்டுமென்கிற கோரிக்கையையும் முன்வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் குறித்த சர்ச்சைக்குரிய நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளைக் கூற விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறை கொண்டவராக, மக்கள் மேம்பாட்டில் அதிக ஆர்வம் கொண்டவராக, அதேநேரத்தில் மாநில அரசு எடுக்கின்ற அனைத்து முடிவுகளுக்கும் ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும். அதையும் தாண்டி, ஓர் ஆட்சியை நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு நல்லிணக்கம் உள்ளவராகச் செயல்பட வேண்டும் என்பதைத்தான் ஆளுநர் பதவிக்கு இலக்கணமாகச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில் பழைய வரலாறுகளையெல்லாம் புரட்டிப் பார்க்கின்ற நேரத்தில், ஆளுநர் அவர்களைப் பற்றி பல்வேறு சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. கடுமையான விமர்சனங்கள் இந்த மாமன்றத்திலே வந்த வரலாற்றை நாம் எண்ணிப் பார்க்கிறோம். ஆனால், அவற்றையெல்லாம் கடந்து இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தனித் தீர்மானத்தினுடைய வரிகளை, நடையைப் பார்த்தால் எவ்வளவு மென்மையாக இருக்கிறது; இணக்கமாக இருக்கிறது. ஆளுநர் அவர்களின் மனம் எந்தவகையிலும் புண்படக் கூடாது, அவர் மதிப்பிற்குரியவராகக் கருதப்பட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் அரசியல் நாகரிகத்தோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத்

2023 ஏப்ரல் 10] [*திரு. ஜி.கே. மணி*]

தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு எண்ணிப் பார்க்கிறேன்.

அப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லிணக்கத்தோடு இருக்க விரும்புகின்றவேளையில், ஆளுநர் அவர்கள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராகச் செயல்படுகிறார் என்பதற்கு பல்வேறு குற்றச்சாட்டுகளை இங்கே சொல்ல முடியும். குறிப்பாக, மிக முக்கியமான பிரச்சினை இணையவழி சூதாட்டம். இந்த இணையவழி சூதாட்டத்தில் இன்றுவரையில் உயிரிழப்பு, தற்கொலை நடந்து கொண்டிருக்கிறது. வெளியில் வராமல் தற்கொலைச் சாவுகள், பொருளாதார இழப்பு என்பது ஏராளமாக நடந்து கொண்டிருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பேசி, கடிதம் எழுதி, சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து அனுப்பிய பிறகும், காலம் தாழ்த்துகிறார். காலம் தாழ்த்திய பிறகு திருப்பி அனுப்புகிறார். திருப்பி அனுப்பிய பிறகு, அதை மிகுந்த மரியாதையோடு, கனத்த இதயத்தோடு தீர்மானம் நிறைவேற்றுகிறேன் என்று இரண்டாவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு, இந்த மாமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையவழி சூதாட்டம் குறித்து, பிரதான எதிர்க்கட்சியை உள்ளடக்கி, ஆளுங்கட்சியின் அதிக உறுப்பினர்கள், பிரதான எதிர்க்கட்சி மற்றும் சிறிய கட்சிகளின் உறுப்பினர்கள் என ஒட்டுமொத்தமாக இந்த மாமன்றமே நிறைவேற்றி அனுப்பியிருக்கின்ற தீர்மானம். அதைக் காலம் தாழ்த்திவிட்டு, இரண்டாவது முறையாகவும் நிறுத்தி வைக்கிறார் என்று சொன்னால், எந்தவகையில் உள்நோக்கம் கொண்டவராக இருக்கிறார் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அந்தளவிற்கு ஒட்டுமொத்த மாநில நலனுக்கு எதிரான நடவடிக்கை.

பிற்பகல் 12–25

இன்னும், ஓர் ஆளுநர் மாநில அளவில் அக்கறை கொண்டவர், மாட்சிமைமிக்க இறையாண்மையை மதித்து நடப்பவராக அவர் இருப்பாரேயானால், நீட் தேர்வில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும்கூட, மக்கள் நலனில் அக்கறை கொண்டவராக இருப்பாரேயானால், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றிய

[திரு. ஜி.கே. மணி] [2023 ஏப்ரல் 10

சட்டமுன்வடிவிற்கு மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். எப்பாடுபட்டாவது அதற்கு முயற்சி எடுத்திருக்க வேண்டும். நீட் தேர்வில், தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற உரிமையை அவர் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி அவர் பெற்றுக் கொடுக்காதிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநரைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், 'ஆளுநர் என்பவர் அதிக அதிகாரம் படைத்தவர் அல்ல; அதே நேரத்தில் இது அலங்காரப் பதவியாக இருப்பது மட்டுமே' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நீதியரசர் திரு. வெங்கடாச்சாரியார் குழுவும் அதைத்தான் சொல்கிறது. ஆகவே, இப்படி தொடர்ந்து பார்க்கிற வேளையில், நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு எதிராகச் செயல்படுகிறார். அதே நேரத்தில், தேவையற்ற பிரச்சினைகள். அதாவது,தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினை, கூடங்குளம் அணு உலைப் பிரச்சினை. இது அவருக்குத் தேவையற்ற வேலை. அவற்றைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. இப்படி ஒட்டுமொத்தமாக தமிழக அரசுக்கு இணக்கமாக இல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கிற நடவடிக்கைக்கு எதிராக இருப்பதோடு, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராக, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடக்கூடிய நடவடிக்கையாக இருக்கிறது என்பதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பல முறை சுட்டிக்காட்டி, எங்களுடைய மருத்துவர் ஐயா அவர்களின் பெயரிலும், மருத்துவர் அன்புமணி அவர்களுடைய பெயரிலும், என்னுடைய பெயரிலும் பலமுறை கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறோம். அறிக்கை வாயிலாக, செய்தியாளர்கள் சந்திப்பிலே இதைப் பற்றி நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆகவே, மேதகு ஆளுநர் அவர்களை எந்தக் கோணத்தில் பார்த்தாலும், அவர் தன்னுடைய விருப்பப்படி செயல்படுகிறாரே தவிர, தமிழக நலனில், அக்கறையில்லாத போக்கிலே சென்று கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவருடைய நடவடிக்கைக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 10] *[திரு. ஜி.கே. மணி]*

அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானம், மென்மையான தீர்மானம், நல்ல இணக்கத்தோடு இருக்க வேண்டும். மீண்டும், ஆளுநர் அவர்கள் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதாக இருக்கிற தீர்மானமாகவே அதை நான் பார்க்கிறேன். அதைப் பார்க்கிற அதேவேளையில், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களும், நடுவண் அரசும் உடனடியாக அவருக்கு அறிவுறுத்த வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் முழு மனதோடு ஆதரித்து, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அரசினர் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம் முழு மனதோடு வரவேற்கிறது, ஆதரிக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நம்முடைய தமிழகத்திற்கு வருகை தந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழருடைய மரபு, தமிழருடைய நாகரிகம், தமிழருடைய கலாச்சாரம், தமிழருடைய இலக்கணம், இலக்கியம் அனைத்தையும் கொண்ட ஒட்டுமொத்த உருவமாக, 'வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் மட்டுமல்ல; வந்தாரை வரவேற்கும் தமிழகம்' என்பதைப் பேராண்மையோடு அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புச் செய்தார்கள். தொலைக்காட்சி விவாதத்தில் நான் கலந்துகொண்டபோது அன்று எல்லோரும் என்னைக் கேட்டார்கள். அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுயாட்சியைப் பற்றிப் பேசினார்கள், ஆளுநரைப் பற்றி பேசவில்லையே என்று கேட்டார்கள். இன்னும் அந்தப் பதிவு தொலைக்காட்சியில் அப்படியேதான் இருக்கிறது. நான் சொன்னேன், 'வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் மட்டுமல்ல; வந்தாரை வரவேற்கும் தமிழகம்' என்பதற்கு நமக்கு ஒரு மரபு இருக்கிறது. உலகத்திலேயே மூத்த மொழி, மூத்தகுடி தமிழ்க்குடி.

அந்த மரபில் வந்தவர் வரவேற்றிருக்கிறார். இன்னும் ஓரிரு நாட்களில் அதனுடைய எதிரொலி தெரியும். இன்று இந்த அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்து தமிழ்நாட்டை தலைநிமிர வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கவனித்துக் கொண்டே இருந்தேன். பேசும்போது இப்போது நீங்கள் எல்லாவற்றையும், எதைப் பேசினாலும் அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறீர்கள். நான் அதற்குள்ளே செல்லவில்லை. இந்தத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதுகுறித்து மட்டும்தான் நான் பேசப் போகிறேன். இந்தத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதுகுறித்து மட்டும்தான் நான் பேசப் போகிறேன். அதை மட்டும் நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

1986 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி நினைவுக்கு வருகிறது. அப்போது மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுடன் சேர்த்து 10 சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்தார்கள். எதற்காகத் தகுதி நீக்கம் செய்தார்கள் என்றால், நீங்கள் பதவியேற்பது அரசியலமைப்புச் சட்டத்தின்பால் உறுதிமொழியேற்று பதவியேற்றீர்கள். அந்தப் பதவிக்கு மாறாக அரசமைப்புச் சட்டம் இந்தி என்பதை, கையில் எழுதி பகிரங்கமாக எரித்தீர்கள் என்று பதவி நீக்கம் செய்தார்கள். அப்போது முதலமைச்சராக திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் இருந்தார். அப்போது இதே அவையில் திரு. P.H. பாண்டியன், பேரவைத் தலைவராக இருக்கிறார். என்ன சொன்னார்கள் என்றால், அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக நடந்துகொண்டீர்கள். பத்து சட்டமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம்–disqualify செய்கிறேன் என்று சொன்னார். அவர்கள் என்ன செய்தார்கள்? அரசியலமைப்புச் சட்டத்தின்பால் பதவியேற்றார்கள், தமிழ்நாட்டின் உரிமை பறிபோகிறது. தமிழர்களின் உரிமை பறிபோகிறது என்று குரல் கொடுத்தார்கள். உடனே பத்து சட்டமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்துவிட்டார்கள். செய்தது யார், 1986–ல்? இப்போது மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இதைப் பார்க்க வேண்டும்; கவனிக்க வேண்டும். எதற்காக நாம் தகுதி நீக்கம் செய்தோமோ,

2023 ஏப்ரல் 10] [திரு. கு. செல்வபெருந்தகை]

அந்த வேலையை இப்போது யார் செய்து கொண்டிருக்கிறார்கள்? அரசியலமைப்புச் சட்டத்தை யார் மீறுகிறார்கள்? ஜனநாயகப் படுகொலையை யார் செய்கிறார்கள்? பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆட்சி இங்கே நடந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும் புருவத்தை உயர்த்தி, இப்படி ஓர் ஆட்சி செய்ய முடியுமா என்று ஆச்சரியத்தோடு பார்க்கின்ற ஒரு பொற்கால ஆட்சியில், இப்படி ஆளுநர் நடப்பது எந்த விதத்தில் நியாயம் என்பதை மக்கள் கேட்கிறார்கள்.

நம்முடைய இடம், நம்முடைய வீடு bungalow *அதில் இருந்துகொண்டு, ஒவ்வொரு நாளைக்கும் ஓர் அமைப்பை வரவழைத்து, அரசியல் செய்கிறார். அதற்குள்கூட நான் போகவில்லை. 1986-க்கு பிறகு 1995 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 26 ஆம் தேதி, இந்த சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க ஆட்சியில் கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஆளுநரைப் பற்றிப் பேசியதை நான் எல்லாவற்றையும் பேசினால், நீங்கள் இதைக்கூட எடுத்துவிடுவீர்கள். ஆளுநர் திரு. சென்னா ரெட்டியைப் பற்றி அவ்வளவு மோசமாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒன்று சொல்கிறார், முன்மொழியும்போது சொல்கிறார்கள். மாநில முதலமைச்சரைக் கலந்து ஆலோசிக்காமல், நடைமுறையை கைவிட்டு, மூத்த அரசியல்வாதிகளை ஆளுநராக நியமிக்கும் செய்கையினால், மக்களாட்சி முறையில் பல விபரீதகேடுகள் விளைவதை நாம் கண்கூடாகக் காணும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஆளுநராக பங்கேற்பவர்கள் பொதுவாக அரசியலில் பங்கேற்காதவர்களாகவும், குறிப்பாக மிக அண்மையில் அவ்வாறு அரசியலில் ஈடுபாடு கொண்டிராதவராக இருக்க வேண்டும் என்று* Sarkaria Commission *பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களின் கூற்றை, கருத்தைத் தெரிவித்துள்ளது என்று சொல்கிறார்கள். அதற்குப் பின்னர் மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டினுடைய உரிமை பறிபோகிறது என்ற அவாவில்தான் பேசினார்கள் என்று சொல்கிறார். யார்மீதும் தனி நபர் குற்றச்சாட்டு சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரைப் பற்றி வர்ணிக்கிறார்கள். சர்வாதிகாரிகளைக் கொண்ட ரோம் நாட்டின் மாபெரும் மன்னராகத் திகழ்ந்த சர்வாதிகாரி Julius Caesar *வீழ்த்தப்பட்ட நிலையில், ஏன்* Caesar *வீழ்த்தப்படவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை விளக்கிக்கூற வந்த* Brutus, *"நான்* Caesar-*ஐ*

குறைவாக நேசித்தேன் என்பதல்ல; ஆனால், நான் Caesar-ஐ காட்டிலும் ரோம் நாட்டை மிகவும் நேசிக்கின்றேன்"- "Not that I loved Caesar less, but I loved Rome more" என்பதே ஆகும். அவர் பேசியவுடனே எல்லோரும் மேசையைத் தட்டுகிறார்கள். கரவொலி பறக்கிறது. தமிழ்நாட்டினுடைய நிலையைப் பாதுகாக்கிறார்களாம். அதேபோல, நாம் மேதகு ஆளுநர் பதவியைக் குறைவாக மதிப்பிடுவது அல்ல. ஆனால், ஆளுநர் பதவியைவிட தமிழ்நாடு முக்கியம். தமிழ்நாட்டின் ஆட்சி முக்கியம். பலத்த ஒலி ஒலிக்கிறது. தமிழக அரசு, தமிழக மக்கட்பெருங்குடி, தமிழகம் ஆகியவற்றை, மிகப் பெரிதாக மதிக்கின்றோம் என்பதைத் தெரியப்படுத்தவே, இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது. இதைத்தான் பேசினார்கள். இதை வேறு tone-ல் பேசினார்கள். நீங்கள், உடனே, எல்லாவற்றையும் எடுத்துவிட்டீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசியது எல்லாம் இருக்கிறது.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு வருடகாலமாக, எப்படி இந்த அவையை நடத்துகிறார்? அவையை மட்டுமில்லை, சட்டமன்றத்திலும் சரி, மக்கள் மன்றத்திலும் சரி, எதிர்க்கட்சிகளையும் எல்லா கட்சிகளையும் தோழமையோடு, ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்காக, எவ்வாறெல்லாம் அவர் பாடுபடுகிறார், அவர் என்ன நினைக்கிறார் என்பதை நாம் உணராமல் இல்லை. அதேநேரத்தில் தெலுங்கானா அரசு, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஒரு வழக்கு தொடுக்கிறது. அந்த வழக்கில் நீதியரசர் சந்திரசூட், நீதியரசர் நரசிம்மன் அவர்கள் கேட்கிறார்கள். மாநில ஆட்சியின் உரிமைதான் என்ன? மாநில ஆட்சிக்கு என்ன உரிமைதான் இருக்கிறது? அப்போது Sarkaria Commission-ஐப் பற்றிப் பேசுகிறார்கள். Justice Madan Mohan Punchhi கமிஷன் பற்றிப் பேசுகிறார்கள். அதற்குப் பிறகு என்னென்ன கமிஷன்கள் அமைத்தார்களோ அதைப் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். இராஜமன்னார் கமிஷனிலிருந்து பேசுகிறார்கள். அப்போது, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள மாநிலங்கள் ஆளுகின்ற சட்டப்பேரவைக்கு, ஆட்சியாளர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன

2023 ஏப்ரல் 10] [திரு. கு. செல்வபெருந்தகை]

என்பது பற்றி 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு இவர்களுக்கு சட்டமியற்ற என்னென்ன அனுமதி இருக்கிறது, உரிமை இருக்கிறது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதில் Justice Banumathi, Justice Sikri, Justice Dave, Justice Agarwal போன்றோர் எல்லாம் தெளிவாகச் சொல்கிறார்கள். Article 254-ல் இன்னும் சட்டமன்றத்தின் உரிமைகள் எந்தவிதத்திலும் denude ஆகவில்லை. இதைவிட என்ன ஒரு தீர்ப்பு வேண்டும்?

பிற்பகல் 12-35

உச்சபட்சமாக, 5 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஒவ்வொரு சட்டப்பேரவைக்கும் என்ன அதிகாரம் இருக்கிறது என்று Modern Dental College Vs. Union of India-ல் ஒரு தீர்ப்பு தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, 2, 3 தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, Article 200 and Article 201-ல் ஆளுநர்களின் பணி என்னவென்று சொல்லப்பட்டிருக்கிறது. Justice Madan Mohan Punchhi கமிஷன் அறிக்கையில், என்னென்ன உரிமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன; ஒன்றிய அரசு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் அங்கு மாண்புமிகு பிரதமர், இங்கே மாண்புமிகு முதலமைச்சரால் நியமிக்கின்ற அமைச்சர்களும், இதை எப்படி வழி நடத்த வேண்டும், இந்த உறவை எப்படி வழிநடத்த வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, ஆளுநருக்கு நாம் காலங்காலமாக ரூபாய் ஒரு கோடி, ரூபாய் இரண்டு கோடி என்று நிதி கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், திடீரென்று கடந்தகால ஆட்சியில் தமிழக மக்களின்மீது மிகவும் பரிவுள்ளவர்கள் அட்சயப்பாத்திரா என்ற கணக்கிற்கு 5 கோடி ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு நாம் household expenses, office expenses என்றெல்லாம் கொடுக்கின்றோம். இதை நான் படித்துப் பார்த்தேன்; Petty grant என்று இருக்கிறது. Petty grant என்றால், 5 கோடி ரூபாய் petty grant-ஆ? அதற்குமேல் petty grant-ஆ? ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஓர் ஆளுநர் என்பவர் மிகவும் கண்ணியமானவர், கண்ணியமாக நடந்துகொள்வார் என்று அனைவருக்கும் ஒரு நம்பிக்கையிருக்கிறது. ஆனால், அவர் எப்படி நடந்துகொள்கிறார் என்பது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர்

அவர்கள் சொல்வார் என்று பார்த்தேன். அந்த நிதியை எப்படி தவறாகக் கையாள முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஆரம்பித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்துடன் சில தகவல்களை இங்கே பரிமாறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு பதிவு செய்தபோது; சில விஷயங்களை சொல்லிவிட்டு, முழுமையான விவரங்கள் எனக்குக் கிடைக்கவில்லை. நான் சொன்னதில்கூட சில முன்பின் இருக்கலாம். ஆதலால், முழுமையான விவரம் தெரிந்ததற்குப் பிறகு சொல்கிறேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு அநேகமாக விவரம் இருக்கிறது என்று நினைக்கின்றேன். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) அவர் ஆரம்பித்ததனால் அதற்குப் பதில் அவ்வளவுதான். (குறுக்கீடு) இல்லை, அதை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள், அதற்கு விவரம் இருந்தால், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். (குறுக்கீடு) அவர் ஆரம்பித்ததனால் சொல்லட்டும். (குறுக்கீடு) ஓர் அமைச்சரை பதில் சொல்ல அழைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு எல்லா நேரங்களிலும்தான் தந்துகொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) இல்லை, ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக் கூடாது என்று நாம் சொல்லக் கூடாது, நீங்கள் உட்காருங்கள். பதில் சொல்லிய பிறகு, பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் உங்களுக்கான பதில் இருந்தால் சொல்லட்டும், அதில் ஒன்றும் தவறில்லை.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு எந்தக் கவலையும் இருக்க வேண்டாம். அவர் கவன ஈர்ப்புத் தீர்மானம்*

கொண்டு வந்தால், முழுமையாக பதில் அன்றைக்குச் சொல்கிறேன். இன்றைக்கு நான் சொன்ன கருத்துக்கு வேறுபாடு தெரிந்ததை மட்டும் சொல்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையை மட்டும்தான் இங்கே கூறியிருக்கிறேன். மீதியெல்லாம் என்றைக்கு தீர்மானமாகக் கொண்டு வருகிறார்களோ, அன்றைக்கு முழுமையான பதில் கொடுக்க நான் தயாராக இருக்கின்றேன். வெறும் 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மூன்று தலைப்புகளில் அரசாங்கம் நிதியொதுக்குகிறது. ஒன்று Secretariat-*செயலகம். அடுத்து,* household-*வீட்டுச் செலவு. இரண்டு ராஜ்பவன்கள் உள்ளன. அடுத்து,* discretionary grant *நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பொறுப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம், மரியாதை கொடுக்கிறார் என்றால், 2 கோடியே 41 இலட்சமாக இருந்த* Budget allocation-*ஐ, போன ஆண்டு, ரூபாய் 2 கோடியே 86 இலட்சம் வரை கொடுத்து, இந்த ஆண்டு ரூபாய் 3 கோடியே 63 இலட்சமாக, இன்னும் 75 இலட்சம் அதிகமாக கொடுத்திருக்கிறார்.*

பிற்பகல் 12–40

அதேபோல், ஆட்சிக்கு வரும்போது, Governor household *நிதி ரூ.11 கோடியே 60 இலட்சம் என்றிருந்ததை, கடந்த ஆண்டு ரூ.15 கோடியே 93 இலட்சமாகவும், இந்த ஆண்டு ரூ.16 கோடியே 69 இலட்சமாகவும்,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது தொடர்பாக ஒரு தொகையை, ஒரு* figure-*ஐ மட்டும் சொல்லிவிட்டு, நீங்கள் உட்கார்ந்துகொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற அரசினர் தனித் தீர்மானத்திற்கு வலுசேர்க்கக்கூடிய அளவிற்கு அந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் சொல்லிவிட்டு, தயவுசெய்து அமருங்கள். அரசினர் தனித் தீர்மானத்திலிருந்து திசைமாறிப் போக வேண்டாம்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *சரி. நான் ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால்,* discretionary grant *எதற்காக வழங்கப்படுகிறது என்பது குறித்து மட்டும் நான் பேசிவிடுகிறேன்.*

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 10

எனவே, அதுகுறித்து முழுமையாகப் பேசுவதற்கு தயவுசெய்து என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லியாகவேண்டும்.

Discretionary grant என்பது 1937 ஆம் ஆண்டின் Financial Code-ன்படி எல்லா மாநிலங்களுக்கும் இருக்கிற grant. இது தமிழ்நாட்டுக்கு மட்டும் கிடையாது. தமிழ்நாட்டில் 2011–2012 ஆம் ஆண்டு ரூ.8 இலட்சமாகவும், அடுத்த ஆண்டு, ரூ.8 இலட்சமாகவும், அடுத்த ஆண்டு ரூ.8 இலட்சமாகவும் இருந்தது. அந்த grant 2016–2017 ஆம் ஆண்டு ரூ.5 இலட்சத்து 44 ஆயிரமாகவும், 2018–2019 ஆம் ஆண்டு ரூ.1 இலட்சத்து 57 ஆயிரமாகவும் இருந்தது. வெறும் ரூ.1 இலட்சத்து 57 ஆயிரமாக இருந்த grant–ஐ மூன்றே மூன்று மாதங்களில், முதலில் தற்காலிக revised estimate–ல் ரூ.50 இலட்சமாகவும், அடுத்ததாக ரூ.5 கோடியாகவும் மாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது petty grant. Financial Code–ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? எதற்காக இதிலிருந்து செலவு செய்ய வேண்டும் என்பதற்கான தெளிவான கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அதனை முதலில் ஆங்கிலத்தில் படிக்கிறேன். Discretionary Grants by the Governor: These are petty grants and charitable donations to institutions of a public or quasi–public character and individuals that deserve assistance from public funds. இதுதான் Financial code–ல் சொல்லப்பட்டுள்ளது. இது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல; எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. உதாரணத்திற்கு, உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு நம்முடைய மாநிலத்தைவிட குறைவான நிதியைக் கொடுத்தாலும், Discretionary grant must be spent on poor and needy patients to undergo major surgery or treatment, poor families for marriage of their daughters, poor and needy people for their livelihood, and deserving Non–Government organizations, அதாவது, மருத்துவம் தேடும் ஏழையெளிய நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றுதான் விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நான் ஏன் கூறுகிறேன் என்றால், இந்த விதிமுறையைச் சுட்டிக்காட்டிதான், அன்றைக்கிருந்த நிதித் துறைச் செயலாளர் அவர்கள், இதற்கான G.O. வெளியிடப்படவில்லையென்றாலும், அந்த file–லேயே, “petty grants and charitable donations to

2023 ஏப்ரல் 10] [*முனைவர் பழனிவேல் தியாக ராஜன்*]

establishments of a public or quasi-public character" *என்று எழுதியிருக்கிறார். எப்பொழுது வரையில் இந்த நிதி ரூ.1 இலட்சம், ரூ.5 இலட்சம், ரூ.8 இலட்சம் என்றிருந்ததோ, அதுவரையில் இந்தப் பிரச்சினையில்லை. அந்த நிதி ரூ.5 கோடி ஆன பிறகு, இந்த விதி தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது. அன்றைக்கு நான் அவையில் சொன்ன தகவலை வாபஸ் வாங்க வேண்டிய கடமையில் இருக்கிறேன். ஏனென்றால், அன்றைக்கு ரூ.2 கோடி அட்சயப்பாத்திராவிற்கு வழங்கப்பட்டது என்று கூறியிருந்தேன்.* Actual *ஆகப் பார்த்தால், அட்சயப்பாத்திரா என்ற காரணத்தைக் குறிப்பிட்டு,* Governor household *வங்கிக் கணக்கிற்குத்தான் நிதி மாற்றப்பட்டிருக்கிறது.* Actual *ஆக அந்த நிதி அட்சயப்பாத்திராவிற்குப் போகவில்லை. பிறகு, அந்தக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட நிதியை அட்சயப்பாத்திராவிற்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட நிதியை வேறு இடத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள்.*

மொத்தத்தில் நான் இரண்டு கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இதுவரையில் அந்த நிதி ரூ.50 இலட்சமாக மாற்றப்பட்ட பிறகு, அந்தத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூ.18 கோடியே 38 இலட்சம் ஆகும். அந்த ரூ.18 கோடியே 38 இலட்சம் தொகையில் ரூ.11 கோடியே 32 இலட்சம் அவர்களுடைய கணக்கிற்கு மாற்றப்பட்டு, எதற்காக செலவிடப்பட்டது என்பதற்கான விவரம் அரசுக்கும், computer-*க்கும் தெரியாது. இதனை விதி மீறல் என்று கூறுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இரண்டாவதாக, எந்தத் தலைப்புக்காக இந்த நிதி செலவிடப்பட்டது என்றால், அது petty grant *என்றிருந்தாலும்,* petty *என்ற வகையில், நாம் சிறு தொகைகளை வைத்திருக்கலாம். உதாரணத்திற்கு, ரூ.5,000/-, ரூ.10,000/- ரூ.50,000/- ரூ.1,00,000/- என்றிருக்கலாம். உறுதியாக* petty-*ல் ரூ.2 கோடி, ரூ.1 கோடி தொகையெல்லாம் வராது. இது இரண்டாவது பிரச்சினை.*

மூன்றாவது பிரச்சினை என்னவென்றால், குறிப்பாக, செப்டம்பர் 2021 வரைக்கும் எங்களுக்குத் தெரிந்தளவில் இந்த நிதியெல்லாம் வெறும் charity-*க்கு அல்லது வேறு ஏதோ ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட நிதி.*

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 ஏப்ரல் 10 பிற்பகல் 12–45

அதேபோல், இன்னொரு தகவலையும் நான் கூறிவிடுகிறேன். எல்லா மாநிலங்களிலும், discretionary grant மிகவும் குறைவாகத்தான் வழங்கப்படுகிறது. அது B.J.P. ஆளும் கர்நாடகாவில் ரூ.25 இலட்சமாகவும், நம்முடைய அண்டை மாநிலமான கேரளாவில் ரூ.25 இலட்சமாகவும், West Bengal-ல் ரூ.25 இலட்சமாகவும் இருக்கிறது. உத்தரப் பிரதேச மாநிலத்தில் ரூபாய் 50 இலட்சமாக இருந்ததை இந்த விதிமுறைகள் அனைத்தையும் வைத்து ரூ.1.00 கோடியாக ஆக்கிவிட்டார்கள். இப்போது நிதித் துறையின் சார்பாக ஒரு வருந்தத்தக்க தகவலை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதிக்குப் பிறகு, இந்தத் தலைப்பில் அரசால் பெறப்பட்டிருக்கின்ற பில்களைப் பார்த்தால், UPSC மாணவர்கள் கூட்டம்-ரூ.5.00 இலட்சம், தேனீர் விருந்து-ரூ.30.00 இலட்சம், Raj Bhavan, Ooty-ல் கலாச்சார நிகழ்ச்சி-ரூ.3.00 இலட்சம். இவை அனைத்தும் இந்தத் தலைப்பில் வந்திருக்கவே கூடாது. மேலும் கூறுகிறேன். இந்த விதிமுறையில், 'No recurring expenses shall be given' அதாவது ஒரே நபருக்கு மீண்டும் மீண்டும் வழங்கக் கூடாது என்ற விதிமுறை Financial Code-ல் இருக்கிறது. ஆனால், அதையும் மீறி, சில நபர்களுக்கு ரூ.58,000/- மாதந்தோறும் என்ற வகையில் 6 மாதங்களுக்கு கிட்டத்தட்ட ரூ.3.00 இலட்சம்/ரூ.3.50 இலட்சம் payment செலுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, யார் என்ன சம்பளம் பெறுகிறார்கள் என்பது தெரியாமல், அனைத்துப் பணியாளர்களுக்கான Bonus என்று ஒரு முறை ரூ.18.00 இலட்சம் மற்றும் ரூ.14.00 இலட்சம் ஒரு முறையும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, Financial code-ல் என்ன விதிமுறை இருக்கிறதோ, அதற்கும் மேல் எந்த அடிப்படையில் அன்றைய நிதிச் செயலர் அவர்கள் அந்தக் கோப்பில் கையெழுத்திட்டாரோ, அதற்கும் மேலாக இதேபோன்ற code-ல் பிற மாநிலங்களில் என்ன விதிமுறை உள்ளதோ, அவை அனைத்தையும் மீறி, பல செலவுகள் அரசிடம் submit செய்யப்பட்டு, அந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இதனை வருந்தத்தக்க ஒரு நிகழ்வாகத்தான் நான் கருதுகிறேன். நான் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் உறுதியளிக்கிறேன், இதுபோன்ற Financial Code variation-விதிமுறை மீறல்கள் தடுக்கப்பட்டும், உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுத்து, இந்த code-ல் இருப்பதை மட்டும்தான் இனிவரும் காலத்தில் செலவு

செய்ய முடியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வலியுறுத்திய விதிமுறை உடனடியாகக் கொண்டுவரப்படும். அன்று கொடுத்த தகவல் அன்றைக்கு வரையில் உண்மையாக இருந்தது. ஆனால் தற்போது பார்த்தால், வேறு account-க்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பதில் பெறப்பட்டதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தை வரவேற்று, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு மாண்புமிகு-வும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், மேதகு-வும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அதில் வேறு எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனெனில், நான் ஏற்கெனவே கூறியவாறு, பேராசிரியர் பெருந்தகை அவர்களை தகுதி நீக்கம் செய்ததும், துறைமுகம் திரு. செல்வராஜ், திரு. பாலன், திரு. பரிதி இளம்வழுதி, மிசா ஆபிரகாம், மதுராந்தகம் ஆறுமுகம் இவர்களை தகுதி நீக்கம் செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கூறிய சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்ததன் காரணமாக சொல்லப்பட்டது; அரசியலமைப்புச் சட்டம் 188, சட்டமன்றப் பேரவை விதி-4(i)-ன்கீழ் பதவிப் பிரமாணம் செய்தபின், இந்திதான் ஆட்சி மொழி என்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளதை எரித்ததற்காக அவர்களை நீக்கிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்ல வருகின்றீர்களோ, அதைச் சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டில் 10 உறுப்பினர்களை நீக்கிவிட்டார்களா? இதையே எங்கள் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களை The representation of the People Act-ல் தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீதிமன்றம்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றம் அவரை 24 மணி நேரத்தில் தகுதி நீக்கம் செய்துவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீதிமன்றம். அதன் நடவடிக்கைகள் வேறு.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் subject-க்கு வருகிறேன். நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள், பதவியேற்கும்போது, இதுவும் அவைக் குறிப்பில் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன். ஆளுநருக்கு ஆணை மொழி அல்லது உறுதிமொழி. 'R.N. ரவியாகிய நான் உண்மையான பற்றுடன் தமிழ்நாடு ஆளுநர் பதவிப் பொறுப்பை நிறைவேற்றி வருவதோடு, இந்திய அரசியலமைப்புச் சட்ட முறையினையும், சட்ட நெறியினையும் என் முழுத் திறன் கொண்டு, பரந்தும், பேணியும், புறங்காத்தும் நிற்பேன் என்றும் தமிழ்நாட்டு மக்கள் நற்பணிக்கு, நல்வாழவிற்கு முற்றுமாக என்னை நான் ஆட்படுத்திக்கொள்வேன் என்றும் கடவுளை முன்னிறுத்தி, இந்த ஆணையை மொழிகிறேன்' என்று உறுதிமொழி ஏற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய அரசியலமைப்புச் சட்டம் 159-ன் அடிப்படையில்தானே?

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கிறேன், பேராசிரியர் பெருந்தகை உட்பட, 10 சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியை நீக்கியது எந்தச் சட்டம்? எங்கள் தலைவர் திரு. ராகுல் காந்தியை நீக்கியது எந்தச் சட்டம்? தற்போது அதே அரசியலமைப்புச் சட்டத்தின்படி அவர் பதவியேற்றுவிட்டு, மதச்சார்பற்ற நாடு என்று Indian Constitution-ல் வருகிறது. இல்லை, இது மதத்திற்குண்டான நாடு. இந்துத்துவ நாடு, இந்த உலகத்தை ஏற்படுத்தியது வேதங்களும், ரிஷிகளும் என்று சொல்கிறார்களே, அவருக்கு இந்தச் சட்டங்களெல்லாம் பொருந்துமா, பொருந்தாதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் பார்வைக்கே விட்டுவிடுகிறேன். இதற்கு மேலாகப் பேசினால் காலதாமதமாகிவிடும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றவிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம், வரவேற்கிறது, வாழ்த்துகிறது. இந்த அனைத்து முயற்சிகளுக்கும் என்றென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்ந்த இந்த அரசிற்கு காங்கிரஸ்

2023 ஏப்ரல் 10] [திரு. கு. செல்வபெருந்தகை]

பேரியக்கம் துணை நிற்கும் என்று சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில், குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் நாம் இங்கே பேசியிருக்கிறோம். ஆனால், ஒன்று, வரலாற்றுச் சிறப்புக்குரிய இதே மாமன்றத்தில் மக்கள் பிரச்சினைகளை முன் வைத்து, எனக்குத் தெரிந்த வகையில் 14 சட்டமுன்வடிவுகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மைத் தகவல். ஒன்று, இரண்டல்ல; சட்டமன்றத்தில் நிறைவேற்றிய 14 சட்டமுன்வடிவுகளை நிறுத்தி வைத்திருக்கிறார் என்றால், தமிழ்நாட்டு நலனில் இவர் அக்கறை கொண்டவரா என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. இரண்டாவதாக, இணைய வழி சூதாட்ட தடைச் சட்டத்தையும் நிறுத்தி வைத்திருக்கக் கூடாது. உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும், ஒப்புதலளிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பணியோடு, இந்த மாமன்றத்தினுடைய மாண்பை மட்டுமல்ல, தமிழகத்திற்கே ஏதேனும் தலைக்குனிவு ஏற்பட்டால் தைரியமாக இந்த மாமன்றத்திலே தீர்மானம் ஏற்கெனவே ஒன்று (மேசையைத் தட்டும் ஒலி) ஜனவரி மாதம் 9 ஆம் தேதி, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தான் வாசிக்க வந்த ஆளுநர் உரையில், சேர்த்தும், நீக்கியும் பேசியபோது, தைரியமாக அந்த நேரத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, இந்த மன்றத்தின் மாண்பு, தமிழ்நாட்டின் மாண்பு, யாராக இருந்தாலும் சட்டத்திற்குட்பட்டவர்கள்தான் என்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்து, இந்திய அளவில் எல்லா சட்டமன்றத்திற்கும் ஒரு பாதுகாப்பை உருவாக்கிக் கொடுத்தது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதுபோல்தான் இப்போதும் இந்தத் தீர்மானம் கொண்டு வர வேண்டிய ஒரு கட்டாயம் ஏன் ஏற்பட்டது என்று நீங்கள் எல்லோரும் பேசினீர்கள். நிச்சயமாக, காரணம், இதைக் கொண்டுவர வேண்டிய கட்டாயம்

[பேரவைத் தலைவர்] [*2023 ஏப்ரல் 10*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் இறந்த வழக்கறிஞர்களுக்கான குடும்ப நல நிதி ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. Bar Council-னுடைய Fixed Deposit-லிருந்து எடுத்து அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். தற்போது 8 கோடி ரூபாய் என்பதை 10 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அதைபோன்று, 7 இலட்சம் ரூபாய் என்பதை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறோம். இவையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழக்கறிஞர்களுடைய நலனுக்காக எடுத்த நடவடிக்கைகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடித்த பிறகு பதில் சொன்னால் பிரச்சினையில்லை.

திரு. ந. தளவாய் சுந்தரம்: ஒன்றும் பிரச்சினையில்லை; அதெல்லாம் ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பதிலை விரும்புகிறீர்கள். அதனால் பதில் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

பிற்பகல் 1–35

திரு. ந. தளவாய் சுந்தரம்: வழக்கறிஞர்கள் பிரச்சினையில் இதைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. அடுத்தபடியாக, ஒரு முக்கியமான பிரச்சினை பற்றிப் பேச விரும்புகிறேன். ராஜஸ்தானில் தற்போது Advocates Protection Act என்ற புதிய Act கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் ஏன் இதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் கூறுகிறேன் என்றால், குறிப்பாக இந்த ஒரு வருடத்தில் 4 வழக்கறிஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை, தூத்துக்குடி, அரியலூர்

2023 ஏப்ரல் 10] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

ஆகிய மாவட்டங்கள் மற்றும் சென்னை, சைதாப்பேட்டையில் வழக்கறிஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குகளை அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடியதற்காக அவர்களுக்குக் கிடைத்த பரிசு என்னவென்றால், கொலை. ராஜஸ்தான் மாநிலத்தில் தற்போது Advocates Protection Act என்ற ஒரு Act-ஐக் கொண்டு வந்திருக்கிறார்கள். வழக்கறிஞர்களைத் தாக்குதல், வழக்கறிஞர்கள்மீது பொய்யான வழக்குகளைப் போடுதல், அதற்கும் மேலாக வழக்கறிஞர்கள்மீது குற்றச்சாட்டுகள் கூறுவதனால் law and order situation create ஆகிறது. இப்போது மத்திய அரசாங்கம் அந்த Bill-ஐ கொண்டு வருவதற்குத் தயார் நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வழக்கறிஞர்கள் பணியில் இறக்கிறபோது, இப்போது நீங்கள் Bar Council Fixed Deposit-லிருந்து குடும்ப நல நிதி வழங்கப்பட்டதாகச் சொன்னீர்கள். ஆகவேதான், இப்போது அங்கேயிருக்கக்கூடிய Advocate Welfare Fund-னுடைய தொகையை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ரூ.30/– ஆக இருக்கக்கூடிய தொகையை ரூ.75/– ஆக மாற்ற வேண்டிய சூழ்நிலை வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத்தீவைப் பற்றி இன்றைக்கும்கூட நான் பத்திரிகையில் படித்தேன். கச்சத்தீவு பிரச்சினை என்பது முக்கியமானது. கச்சத்தீவு சம்பந்தமாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரிடம், குறிப்பாக உங்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் இது சம்பந்தமாக subject கிடையாது. இருந்தாலும், நமது Animal Husbandry Department-ன் கொள்கை விளக்கக் குறிப்பில் கடந்த இரண்டாண்டுகளாக நான் பார்த்துக் கொண்டு வருகிறேன். முதலில் 2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 50-லும் கச்சத்தீவை மீட்போம் என்றிருக்கிறது; 2023 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 41-லும் கச்சத்தீவை மீட்போம் என்றிருக்கிறது. தனி நபர் வழக்கு தொடுத்திருப்பதாகவும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

2008 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள், Article 32-ன்படி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கில் 1-4-2011-ல் Deputy Secretary, Sri Lankan Ministry of Foreign Affairs-லிருந்து ஒரு counter file செய்தார்கள். அந்த counter-ல் கச்சத்தீவு Sri Lanka-வுக்குத்தான் சொந்தம் என்று சொன்னார்கள். உடனடியாக, மாண்புமிகு அம்மா அவர்கள், இதே அவையில், வருவாய்த் துறையை அந்த வழக்கில் சேர்க்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, வருவாய்த் துறையைச் சேர்த்து, வழக்கு நிலுவையில் இருக்கிறது. இது முதலாவதாகத் தொடரப்பட்ட வழக்கு. இரண்டாவதாக, உங்களுடைய தலைவர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்; அதுவும் நிலுவையில் இருக்கிறது. மூன்றாவதாக தொடர்ந்த வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு; அந்த வழக்கை யார் தொடர்ந்திருக்கிறார் என்றால், Fishermen Care Development Company என்கிற ஒரு company தொடர்ந்திருக்கிறது. அந்த நிறுவனம் தொடுத்த வழக்கில் Justice Kaul மற்றும் Justice Madhavan ஆகியோர் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதன்மேல் செய்யப்பட்ட appeal தான் இப்போது நிலுவையில் இருக்கிறது. ஆக, கச்சத்தீவைப் பொறுத்தளவில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒவ்வொரு முறையும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். அடுத்த subject-க்கு வாருங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அழகாகச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பேசுங்கள்; கச்சத்தீவு குறித்து அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அடுத்த பொருள் குறித்துப் பேசவும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அவ்வளவுதானே!

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லி முடிக்க வேண்டுமா?

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *15 நிமிடங்கள் முடிந்து விட்டன. அதற்குப் பிறகு என்ன சொல்ல வேண்டுமென்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நிமிடங்கள் அல்ல; நமக்கு* half an hour *கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியிருந்தாலும் உங்களுக்கு 22 நிமிடங்கள்தான். கடைசியாக பேசவிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்களுக்கு 7 நிமிடங்கள்தான்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நினைத்தால் 20 நிமிடங்களும் கொடுக்கலாம்; 5 நிமிடங்களும் கொடுக்கலாம்; 2 நிமிடங்களும் கொடுக்கலாம். அது உங்களுடைய விருப்பம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு முக்கியமான வேண்டுகோள். இந்தியாவிலேயே முதன்முதலாக இரண்டு நாட்களுக்கு முன்னர், மும்பையில்* digital *நீதிமன்றம், காகிதமில்லா நீதிமன்றம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக, வாஷி மாவட்டத்தில், மாவட்ட நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றம் போன்றவை மும்பையில் துவக்கப்பட்டிருக்கின்றன. இதனை முதன்முதலாக நீதிபதி கௌதம் பட்டேல் அவர்கள் திறந்துவைத்திருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டிலும் தாங்கள் காகிதமில்லா நீதிமன்றம் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

அதேபோல், தலைமை நீதிபதி அவர்கள் சட்டத்தை இயற்றும்போது எப்படியெல்லாம் சட்டத்தை இயற்ற வேண்டும்; இயற்றப்பட்ட சட்டம் மக்களுக்கு எப்படியெல்லாம் சென்றடைய

வேண்டும்; அந்தச் சட்டம் சென்றடையும்போது அந்த மக்கள் எப்படிப் பயனடைவார்கள் என்பதை சமீப காலத்தில், அதுவும் குறிப்பாக, 2, 3 நாட்களுக்கு முன்னர் கவுகாத்தியில் பேசியிருக்கிறார்கள். சட்டம் இப்படித்தான் அமைய வேண்டும் என்று கிடையாது. சட்டம் இயற்றுபவர்கள் யார் என்றால், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும்தான்.

பிற்பகல் 1–40

ஆக, இந்தச் சட்டம் எப்படிச் செல்ல வேண்டும், மக்களுக்கு எந்தவகையிலே செல்ல வேண்டும் என்பதைப் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே சட்டம் இயற்றும்போது சில சிக்கல்கள் வரும். உதாரணத்திற்கு அன்றைய நாளிலே மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது சில சட்டங்களை இயற்றுவதிலே சிக்கல்கள் வந்தன. குறிப்பாக, 7.5 சதவிகித இட ஒதுக்கீடு சட்டத்தை இயற்றும்போது கோப்பு கவர்னரிடம் நிலுவையிலே இருந்தது. அன்றைய சூழ்நிலையிலே இங்கேயிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் ஆட்சியிலே அந்த G.O.-ல் "Pending disposal by the Governor under Article 162 and extending the executive Power of the State" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். தன்னிடத்தில் உள்ள power-ஐ use செய்து, அந்த G.O.-ல் அன்றையதினம் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஏழை மாணவர்கள் எல்லோரும் மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்கள் என்றால், அதற்கு மிக முக்கியமான காரணம், நமது முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் அவர்கள்.

அதுமட்டுமல்ல, 2014 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் Government doctors எல்லோரும் super speciality படிப்பிற்கு reservation வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கவர்னரிடம் கோப்புகள் pending ஆக இருந்தாலும், எடப்பாடியார் அவர்களால் article 162-ஐப் பயன்படுத்தி, அந்த நேரத்திலும் அதற்கு தனியாக G.O. போடப்பட்டது. தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கக்கூடிய முதலமைச்சர்களை எடுத்துக் கொண்டால், Article 162-ஐ பயன்படுத்திய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள்தான். நம்முடைய Assembly

2023 ஏப்ரல் 10] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

Secretary-*யிடம் கேட்டால் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையிலும் இங்கே இருக்கக்கூடிய முதலமைச்சர்கள் யாரும்* article *162-ஐப் பயன்படுத்தியது கிடையாது. இதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் பழைய* record-*ஐ எடுத்துப் பாருங்கள். எந்த ஒரு முதலமைச்சரும்* Article *162-ஐ பயன்படுத்தியது இல்லை. விவசாயியாக இருந்தாலும் துணிச்சலாக, திராணியாக, திறமையாக (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த பெருமை எடப்பாடியார் அவர்களைச் சாரும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சமீபத்திலே 13 எதிர்க்கட்சிகள் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தன. அப்போது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்ன கருத்து என்றால், 13 எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடர்ந்திருக்கிறீர்கள். விசாரணை அமைப்புகளான CBI, ED, Income Tax Department *எல்லாம் அரசு இயந்திரங்களை, தவறாகப் பயன்படுத்துகிறது என்று சொன்னார்கள்.* Chief Justice *தெளிவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு இது இடமில்லை. அதை நீங்கள் எங்கே சந்திக்க வேண்டுமோ, அங்கே சந்திக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விசாரணை அமைப்புகள் முதன்முதலாக எங்கேயிருந்தன? ** (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது* Court-*ல் இருக்கிறது. பிறகு பேசிக் கொள்ளலாம். அது தேவையில்லை. (குறுக்கீடு) தேவையில்லை, (குறுக்கீடு) அது உங்கள் கட்சி பிரச்சினைதான், எனக்குத் தெரியும். (குறுக்கீடு) அது* Court-*ல் இருக்கக்கூடிய சமாச்சாரம். நீங்கள் அடுத்த* subject-*ஐ பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) வேண்டாம், அது ** உங்கள் பிரச்சினைகள். அது இங்கு தேவையில்லை. அந்தப் பதிவை நீக்கிவிடுகிறேன். அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

திரு. ந. தளவாய் சுந்தரம்: Speaker Sir, *நீங்கள் என்னைப் பேச விடவில்லை. வேண்டாமென்றால் நான் உட்கார்ந்துவிடுகிறேன். (குறுக்கீடு) விசாரணை அமைப்புகள் எப்படி தவறான முறையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் நடந்த விஷயத்தைப் பற்றி ஒரு விவரத்தைச் சொன்னீர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *ஆம், அதுதானே இங்கு நடக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை* compare *செய்வதென்றால், உயர் நீதிமன்றத்தில்தான் நீங்கள் சொல்ல வேண்டும்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் அதைத்தான் சொல்ல வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உயர் நீதிமன்றத்திற்குச் சென்று பேசுங்கள். இங்கு தேவையில்லை.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் அதைத்தான் பேச வந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவையில் தேவையில்லை. அதை நீக்கிவிடுகிறேன். அடுத்த* subject-*க்கு வாருங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: Right. *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த* case *எல்லாம் முடிந்தாகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் கேட்பது, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள் அல்லது (குறுக்கீடு)*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நன்றியெல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றிசொல்லவில்லையென்றால், 21 நிமிடங்கள் ஆகிவிட்டது, போதும்.*

2023 ஏப்ரல் 10]

பிற்பகல் 1–45

திரு. ந. தளவாய் சுந்தரம்: *விசாரணை அமைப்புகள் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்பதற்கு நமது சட்டத் துறை அமைச்சர் அவர்களே ஒரு சாட்சி உதாரணத்திற்கு, கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து சொல்கிறேன். (குறுக்கீடு) இது வேண்டாம். மாண்புமிகு அமைச்சர், நீங்களெல்லாம் கலந்துகொண்ட விவரம் வேண்டாம். (குறுக்கீடு) பொதுவாக சட்டத்தில், உங்களுக்கு* court *வேண்டுமோ, என்ன வேண்டுமோ அப்படி பேசிக்கொள்வோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது தேவையில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், அதற்கான ஆதாரம் இல்லாமல் நீங்கள் சொல்கிறீர்கள். அதுகுறித்து, நீங்கள் சொன்னது அனைத்தையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுவதற்கு முன்பே இதுகுறித்த ஆதாரத்தை என்னிடத்தில் கொடுத்துவிட்டு, பின்னர் இங்கே பேசியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) இது நடந்தது என்று* F.I.R. *போட்டிருக்கிறார்கள் அல்லவா? (குறுக்கீடு) ஒரு நாளைக்கு ஒன்றரை இலட்சம்* F.I.R. *போடுவார்கள். அவற்றையெல்லாம் இங்கே பதிவு செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடு) அதாவது, வெளியே ஒரு. . . (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினரைப் பற்றி குற்றஞ்சாட்டிப் பேசினால், என்ன குற்றஞ்சாட்டுகிறாரோ, அதை அந்த உறுப்பினர் முன்கூட்டியே தர வேண்டும். அப்போதுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பதில் சொல்ல முடியும். அவரை உட்கார வைத்துவிட்டு பேசிவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களை இப்போது குற்றஞ்சாட்டிப் பேசினார். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதற்கான ஆதாரத்தை முதலிலே கொடுத்திருந்தால் கேட்கலாம். நீங்கள் திடீரென்று எழுந்து பேசினால் என்ன செய்ய முடியும்? மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார். எனவே, அதில் அவர் பேச முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார். எனவே, அதில் அவர் பேச முடியாது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். நன்றி சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல மாட்டார்கள். அவைக் குறிப்பில் இல்லாததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதற்கு பதில் சொல்லப் போகிறார்கள்? (குறுக்கீடு) வேறு விஷயத்திற்கு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். முதலாவதாக, கச்சத்தீவு பிரச்சினையைப் பற்றி அவர் சொல்லியிருக்கிறார். அதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அதில் வருவாய்த் துறையை இணைத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நாங்களே ஓர் இடத்திலே சொல்கின்றபோது, அந்த இடம் இராமநாதபுரம் ராஜாவுக்கே சொந்தம். இராமநாதபுரம் ராஜாவே அதை* claim *செய்யலாம் என்றுகூட சொல்லியிருக்கிறோம். ஆனால்,* time-barred *என்று சொன்னார்கள். எனவே, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு வருகிறபோது, நிச்சயமாக, மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து, தகுந்த வழக்கறிஞர்களை வைத்து வழக்கை நடத்தும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இரண்டாவதாக, Article 162-ஐப் பற்றி சொன்னார்கள். இப்போது ஆளுநர் அவர்களிடத்தில் pending-ல் இருப்பது அனைத்துமே சட்டமுன்வடிவுகள்தான். அவற்றையெல்லாம் Article 162-ல் ஒன்றும் செய்ய முடியாது. குறிப்பாக, ஏழரை சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது அரசினர் சட்டமுன்வடிவு. அதை ஆளுநர் அவர்கள் காலம் தாழ்த்துகிறபோது, அரசாங்கத்தின் மூலமாக நாங்கள் G.O. போடுகிறோம் என்று போட்டீர்கள். ஆனால், சட்ட மசோதாக்களைப் பொறுத்தவரைக்கும், ஆளுநர் அவர்கள் ஒப்புதல் தந்தால்தான், அது சட்டமாக வர முடியும். எனவேதான், இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துணிச்சலோடு ஒரு தீர்மானத்தை, அதாவது, ஆளுநருக்கு ஒரு காலக் குறியீடு வேண்டும்; ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆளுநர் அவர்கள் அந்தக் கோப்புகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். ஏனென்றால், இன்றைக்கு pending-ல் இருப்பது பூராவும் Article 162 இல் வராது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: Article 162 இல் வராது. வந்தால்தானே நாங்கள் செய்ய முடியும். இவை அனைத்தும் கோப்புகள், சட்டமுன்வடிவுகள்.

மூன்றாவதாக, நீங்கள் சொன்னது வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டம். ராஜஸ்தான் மாநிலம் என்பது வேறு, தமிழ்நாடு என்பது வேறு. தமிழ்நாடு அமைதிப் பூங்கா. ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்களை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். ஆனால், வழக்கறிஞர்களுக்கான சட்டம் இயற்றுவது குறித்த பொருண்மை ஒன்றிய அரசின் அதிகார பட்டியலுக்கு, Union List-க்குட்பட்டதாகும். 1961 ஆம் ஆண்டில், வழக்கறிஞர் சட்டம் மேற்கண்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி, ஒன்றிய அரசால் இயற்றப்பட்டது.

பிற்பகல் 1–50

வழக்கறிஞர்கள் பாதுகாப்புக்கென, வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதா, 2021 என்ற வரைவினை இந்திய பார் கவுன்சில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. ஒன்றிய அரசு இன்றுவரை அதை

பரிசீலனையில்தான் வைத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் அந்த மசோதாவை Bill *ஆகக் கொண்டு வரவில்லை. மாநில அளவில், ராஜஸ்தான் வழக்கறிஞர்கள் பாதுகாப்புச் சட்டம், 2023 என்கிற சட்டம் மட்டும்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. பஞ்சாப் வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதா, 2023, அரியானா வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதா, 2023 தவிர, புதுடெல்லி வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதாவை வடிவமைப்பதற்காக புதுடெல்லி பார் கவுன்சில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மாநிலங்களில் இயற்றப்பட்ட வழக்கறிஞர்கள் பாதுகாப்பு மசோதாக்கள் வரைவு வடிவிலேயேதான் உள்ளன. எனவே, ஒன்றிய அரசு இயற்றுகின்றபோது, தமிழ்நாட்டின் சூழ்நிலை வேறு, ராஜஸ்தான் மாநிலத்தின் சூழ்நிலை வேறு என்பது கவனிக்கப்பட வேண்டும். இருந்தாலும், வழக்கறிஞர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டியது என்பது, அவசியமான ஒன்று. அதை உணர்ந்து தகுந்த நேரத்தில் அதற்கான சட்டங்களை மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களின் அரசு இயற்றும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம், நீங்கள் பேச ஆரம்பித்து 27 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) ஒரே நிமிடத்தில் நன்றி தெரிவித்து, உரையை முடியுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *நான் அங்கேயெல்லாம் போகவில்லை.* Article *162 என்றுதான் சொன்னேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பெரிய சட்ட சக்கரவர்த்தி என்று எனக்குத் தெரியும். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (சிரிப்பு)*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *சட்டையும் இல்லை, சக்கரவர்த்தியும் இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிகள் மாறலாம். ஆனால், சாலைகளின் பெயர்களையெல்லாம் மாற்றக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் பெயர் தளவாய் சுந்தரம் என்றுதான் இருக்கிறது. பதிவை மாற்றவில்லை.*

2023 ஏப்ரல் 10]

திரு. ந. தளவாய் சுந்தரம்: *என் பெயர் இல்லை. நான் பேசிமுடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள். என் பெயரை மாற்ற முடியாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகம் அமைந்திருக்கும் அந்தச் சாலையின் பெயர், அவ்வை சண்முகம் சாலை. டி.கே.எஸ். என்பவர், அந்தக் காலத்தில் அண்ணா அவர்களோடு நெருக்கமானவர்; எம்.எல்.சி. ஆக இருந்தவர், பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர். அவர் நாட்டின் சுதந்திரத்திற்காக பல்வேறு காலகட்டங்களில் நாடகத்தில் நடித்து, பெயர் வாங்கியதன் காரணமாக (மணியடிக்கப்பெற்றது). . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) புரிந்துவிட்டது. பெயரை மாற்றியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். அது உண்மையா, பொய்யா என்று எனக்கும் தெரியாது, உங்களுக்கும் தெரியுமா, தெரியாதா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) நீங்கள் அடுத்த விஷயத்திற்கு சென்று, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** தனி நிருவாகம். அதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. இந்த மன்றம் குறித்துப் பேசுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: Procedure *தெரியாமல் பேசினால் எப்படி? நான் ஒன்று பேசினால், நீங்கள் ஒன்று பேசுகிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ** போட்டிருக்கிற விவகாரத்தை இங்கே வந்து பேசுகிறீர்கள். அது தன்னாட்சி உரிமை பெற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *** அரசாங்கம்தான்* G.O. issue *செய்ய முடியும். வெறுமனே* G.O. issue *செய்ய முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** குறித்து பேசியது அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். ஏனென்றால், அதன் முழு விவரம் என்னிடம் இல்லை. ** இன்னும்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

*கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அது எப்படி, ** பேரவைத் தலைவருக்கு எப்படி தெரியும்? (குறுக்கீடு) ** பற்றிப் பேசியது எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறேன். அதுகுறித்த விவரத்தை நீங்கள் இங்கே தரவில்லை. (குறுக்கீடு) அதையெல்லாம் செய்ய முடியாது. (குறுக்கீடு) இது நியாயமா? (குறுக்கீடு) ஏதாவது நியாயமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) மூத்த உறுப்பினர் மாண்புமிகு செங்கோட்டையன் அண்ணன் பேசுங்கள். இது நியாயமா? (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு செங்கோட்டையன் அண்ணன் பேசுங்கள். இது நியாயமா? (குறுக்கீடு) சென்னை மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டிருப்பதைப் பற்றி ஏன் இந்த அவையில் பேச வேண்டும். (குறுக்கீடு)*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேச வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா? கொறடா பேசுகின்றாரா? (குறுக்கீடு) முதலில் அதற்குப் பதில் சொல்லுங்கள். மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து தெளிவாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உள்ளாட்சித் துறையின் அமைச்சராக இருந்தவர்தான். ** போட்டிருப்பதாக சொல்லி, அதை இங்கே பதிய வேண்டிய அவசியமே இல்லை.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *அது அப்படியில்லை. ஒரு சாலையின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தச் சாலையின் பெயரை மாற்றக் கூடாது என்றும், அதன் பாரம்பரியத்தைப் பற்றியும் உறுப்பினர் சொன்னார். எந்த ஒரு மாற்றத்திற்கும், ** போட்ட பிறகு, அது இங்கே வந்து சட்டமாக மாறும். சட்டமன்றத்தில் அதுகுறித்துப் பேசலாம். அது* unparliamentary word *கிடையாது. சட்டமன்றத்தில் எதையுமே பேசக் கூடாது என்றால், எப்படிச் சரியாக இருக்கும்? இங்கேதான் பேச முடியும். அவருடைய கருத்தைச் சொல்கிறார். அதற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நீங்களே பேசவிடாமல் இருந்தால் எப்படி? நீங்கள் எதையுமே பேசவிடுவதில்லை. இது நிச்சயமாக கண்டிக்கத்தக்கது.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *27 நிமிடங்கள் பேசிவிட்டு, எதையும் பேசவிடுவதில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) முதலில் கவனியுங்கள். முதலில், என்ன பேச வருகிறீர்கள் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) பேச வருவதே என்னவென்று தெரியவில்லை என்றால் எப்படி? (குறுக்கீடு) அதாவது, நீங்கள் யாருமே, பிரச்சினையை முதலில்* understand *செய்ய மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு)* Understand *செய்தபின்தான் பேச வேண்டும். மாமன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

பிற்பகல் 1–55

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவ்வை சண்முகம் சாலை என்று சொன்னதை நீக்கிவிட்டார்கள் என்கிறார்களா? அவர் பெயரை மாற்றிவிட்டார்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, **அதை மாற்றுவதற்காக ** போட்டதாகச் சொல்கிறார்கள். ** மாமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சட்டமன்றம் மாதிரி அவர்கள் ** கொண்டு வருகிறார்கள். எனக்கு அது என்னவென்று தெரியாது. தெரியாததை இங்கே பேசவேண்டாம் என்று சொல்கிறேன் அவ்வளவுதான்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Sir, *நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் சொல்லிவிடுகிறேன். அப்படி யார் பெயர் மாற்றியிருக்கிறார்கள் என்பதை விசாரித்து, உங்களுக்குச் சொல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடு) திரு. சு. ரவி, நீங்கள், கேட்டுக்கொள்ளுங்கள். உட்கார்ந்து கொண்டு, கையையெல்லாம் நீட்டி பேசக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர். பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம், நீங்கள் முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முடியுங்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

திரு. ந. தளவாய் சுந்தரம்: Speaker, Sir, *சட்டத்திற்குப் புறம்பாக நான் சொல்லவில்லை.* Procedure *என்னவென்றால், அழகாகக் கொடுத்தார், நமது முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். அங்கு ** போட்டு, அரசாங்கத்திடம் வரப்போகிறது. ஆகவே, அந்தப் பெயரை தடுக்க வேண்டும் என்பதற்காக, அவை முன்னவர் அவர்கள் அதை நிறுத்திவிடுவேன் என்று சொல்லிவிட்டார். மிகவும் மகிழ்ச்சி. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *அடுத்தபடியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) போதும். 33 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு, . . .*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்கள் பேசுகிறபோது, கன்னியாகுமரியில்* boat *நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; ஓடவில்லை என்று ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார். அது ஏற்கெனவே* Tourism Department *சார்பாக வாங்கப்பட்டது. இன்னும் அது* Poompuhar Shipping Corporation-*ல் ஒப்படைக்கப்படவில்லை. ஒப்படைத்த உடனேயே அந்த இரண்டு* boats *இயக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, முடியுங்கள், நன்றி. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மகிழ்ச்சி. ஒரு நிமிடம் இருங்கள். தலைவர் அவர்களே, நீங்கள்* time. . . *(குறுக்கீடு) அவர் பேரவைத் தலைவர். சபாநாயகர், பேரவைத் தலைவர் எல்லாம் ஒன்றுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சரியாகத்தான் சொல்கிறார்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 10]

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய கோரிக்கை. தங்களுடைய துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், சாத்தூர் போன்ற 5 அல்லது 6 சிறைகள் தற்காலிகமாக மூடப்பட்டதாக சொல்லியிருக்கிறீர்கள். கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலும் இதேபோன்று இருந்தது. அதேபோல வருவாய்த் துறை மூலமாக ஒரே ஒரு சிறைச்சாலை இருக்கிறது. இந்தச் சிறைச்சாலைகளெல்லாம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறதா அல்லது நிரந்தரமாக மூடப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் தொடர்ந்து அந்தச் சிறைச்சாலைகள் செயல்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்தது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பதில் சொல்லும்போது சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், சொல்லுங்கள். போதும், (குறுக்கீடு) இதற்கு மேல் time தரமுடியாது. 35 நிமிடங்கள் பேசிவிட்டார். இதற்குமேல் time தரமுடியாது. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் பேசுகிறீர்களா, உட்காருகிறீர்களா? திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் பேசுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மற்றவர்கள் பேசுவார்கள். ஆனால், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் எப்போதும் எழுந்துகொள்ளமாட்டார். எழுந்திருக்கிறார் ஏதோ முக்கியமாகச் சொல்கிறார், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வை சண்முகம் சாலை என்பது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அங்கீகாரம் பெற்றிருக்கின்ற ஒரு சாலை. அதை உடனடியாக

V.P. *ராமன் சாலை என்று மாற்றுவது, உகந்தது அல்ல என்பதைத்தான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அங்கே,* ** *நிறைவேற்றியிருந்தாலும்கூட, அதை மீண்டும், அவ்வை சண்முகம் சாலை என்ற பெயரே தொடர வேண்டுமென்று அண்ணா தி.மு.க.-வின் சார்பில் வலியுறுத்துகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் தெளிவாக சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு விளக்கம் தேவையில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான்கூட விசாரித்தேன். அவ்வை சண்முகம் சாலையில்,* V.P. *ராமன் வீடு திரும்புகிற இடம் வரை பெயர் மாற்றம் செய்து அங்கே பெயர் பலகை வைத்து இருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் இன்னும் பார்க்கவில்லை. இன்று மாலை பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். மாண்புமிகு திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சிறைச்சாலைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்றும் அவை தொடர்ந்து மூடப்பட்டிருக்குமா என்கின்ற கேள்வியை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள் கேட்டார்கள். ஒன்றை மட்டும் சொல்கிறேன். அதாவது சில பராமரிப்புப் பணிகளுக்காக சில சிறைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சிறைகளிலே பக்கத்திலே போதிய, அடைப்புகள் இல்லாத காரணத்தால் அங்கே பழுதுபார்க்கின்ற பணி காரணத்தினாலேயும்தான் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, அவை எல்லாம் முற்றிலுமாக* repair *செய்யப்பட்டு, அந்தச் சிறைச்சாலைகள் மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

பிற்பகல் 2-00

பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா?

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே* Article *162-ஐப் பற்றி வீரமாகவும், மிகவும் விளக்கமாகவும் பேசப்பட்டிருக்கிறது. இந்த அவையைப் பொறுத்தவரையில்,* NEET *தேர்வுப் பிரச்சினையாக இருந்தாலும் அல்லது* online rummy *பிரச்சினையாக இருந்தாலும், எல்லோருமே சேர்ந்து ஒருமனதாக சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டவைதான். அப்படிப்பட்ட ஆளுநரின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதற்காகத்தான் இன்றைக்குத் தனித் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ** என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஏதோ பேசினர்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தேவையில்லாத ஒரு* subject*-ஐப் பற்றிப் பேசுகிறார். எனவே, அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை அல்லது நிலைப்பாடு உண்டு. அப்போதைக்கப்போது அந்த நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள். அவர்களுடைய நிலைப்பாட்டில் கலந்துகொள்வதும், கலந்துகொள்ளாததும் அவர்கள் விருப்பம். அதைப் பற்றி நாம் பேசுவதற்கில்லை. எனவே, மற்றவர்களைப் பேசச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, ஏதோ புதிதாகப் பேசுகிறாரே? (குறுக்கீடுகள்) முடிந்து போன விவகாரத்தை ஆரம்பிக்கிறார், பாருங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. முனுசாமி, விஷயம் முடிந்துவிட்டது. நீங்கள் எதற்காக மீண்டும் ஆரம்பிக்கிறீர்கள்? உட்காருங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி எழுந்து நின்று ஏதோ பேசினார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை என்பது அனைத்துத் துறைகளையும் கட்டியாளக்கூடிய துறையாகும். அப்படிப்பட்ட சட்டத் துறை, நீதி நிருவாகம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவதை நான் அனைத்துத் துறைகளுக்குமான மானியக் கோரிக்கைகள்மீதும் பேசுவதாகப் பெருமையாக நினைத்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நான் பேச ஆரம்பித்திருக்கிறேன். உங்களுடைய கடிகாரத்தைச் சரி செய்துகொள்ளுங்கள். பண்ணை சாராக் கடன், பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த கடன். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின் மீதான விவாத நாளன்று, அதற்கான ஒரு தீர்வைச் சொல்லி 3,16,000 பேருக்கு நன்மையைச் செய்திருக்கிறார்கள். அதன் மூலமாக 15 இலட்சம் மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகிற ஏப்ரல் 17 ஆம் தேதி தீரன் சின்னமலை அவர்களுடைய பிறந்த நாள். தீரன் சின்னமலை திருப்பூர் மாவட்டத்தில் பிறந்தவர். திருப்பூர் மாவட்டத்தில் தீரன் சின்னமலை பிறந்த காரணத்தினால், திருப்பூரில் அமையவிருக்கின்ற புதிய பேருந்து நிலையத்திற்கு தீரன் சின்னமலையினுடைய பெயரை வைக்க வேண்டுமென்று நான் இந்தச் சபையிலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அத்திக்கடவு-அவினாசி திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன. வெகுவிரைவில் அத்திட்டம் தொடங்கி வைக்கப்பட வேண்டும். அதுதொடர்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். Original ஆக அத்திக்கடவிலிருந்து தண்ணீர் வருவதாக இருந்தது. அதனால், அத்திக்கடவு-அவினாசி திட்டம் என்று பெயர் வைக்கப்பட்டது. ஆனால், அத்திட்டத்திற்கான தண்ணீர் இன்றைக்கு காளிங்கராயன் அணைக்கட்டிலிருந்து எடுக்கப்படுகிறது. அதனால், அந்தத் திட்டத்தின் பெயரில் காளிங்கராயன் என்பது சேர்க்கப்படவேண்டும். எனவே, அதுதான் அந்தத் திட்டத்தின் உண்மையான காரணப் பெயராக இருக்கும். காளிங்கராயன் அத்திக்கடவு-அவினாசி திட்டம் என்று அத்திட்டத்திற்கு அவர் பெயரை வைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர், இத்திட்டத்தின் பெயரில் காளிங்கராயன் என்பதையும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இவ்வளவு சொன்ன உங்கள் பெயரையும் அதில் சேர்த்து விடுகிறேன்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தாத்தாதான் அவர். எனவே, அவரது பெயரை சேர்த்தாலே போதுமானது. அவர் எனது முப்பாட்டன் ஆவார்.

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2023 ஏப்ரல் 10

சட்டத் துறையைப் பொறுத்தவரையில், சட்டம் படிக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான ஒன்று. சட்டம் தெரியவில்லையென்றால், இந்த மானிட உலகத்தில் வாழ முடியாது. இந்த அவையில்கூட நாம் பார்க்கிறோம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைப் போன்று சட்டம் படித்தவர்கள் எவ்வளவு வேகமாக, உறுதியாகப் பேசுகிறார்கள். பாதி சட்டம் படித்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திரு. வேல்முருகன் அவர்களும் எவ்வளவு சிறப்பாக இங்கு உரையாற்றுகிறார் என்பதைப் பார்க்கிறோம். எனவே, சட்டம் என்பது, ஒரு விழிப்புணர்வை அளிக்கக்கூடியது. குழந்தைகள், பள்ளிக் கல்வியில் சட்டத்தை இளம் வயதிலேயே படிக்க வேண்டும். தங்களுடைய உரிமைகள் என்னவென்று அவர்களுக்கு அப்போதே தெரிய வேண்டும். எனவே, பள்ளிக் கல்வியில் சட்டம் சார்ந்த ஒரு பாடப் பிரிவினை ஏதேனும் ஓர் அறிமுக அளவிலாவது சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டம் என்பது, மாற்றத்திற்குட்பட்டது. காலத்திற்கேற்றவாறு சட்டங்களை மாற்றித்தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட மாற்றங்கள் நிகழாத காரணத்தினால்தான், பழைய சட்டத்திலிருக்கின்ற ஓட்டையைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ்நாட்டின் மேதகு ஆளுநர் அவர்கள், இந்த அவையை மதிக்காமல் இருக்கிறார்கள். சட்டங்கள் மாற்றப்பட வேண்டுமென்பது, இன்றைக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சட்டங்களை மாற்றுவதற்காகத்தான், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்களுடைய தலைமையின்கீழ், 2017 ஆம் ஆண்டில் ஒரு committee அமைக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு extension வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு ஜூன்/ஜூலை மாதம் வரையில் அதற்கு ஆயுள் இருக்கிறது. ஆனால், என்ன மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்தால், நாங்கள் அனைவரும் இந்த நேரத்தில் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால், பழைய சட்டங்கள் அனைத்தும் வருவாய்த் துறை சார்ந்தவை. இன்றைக்கு இருக்கின்ற நிலைமை வேறு. மாற்றங்கள் என்பது, கண்டிப்பாக வேண்டும்.

அதேபோன்று மோட்டார் தொழிலைப் பொறுத்தவரையில், Drunk and drive என்று சொன்னால், லாரி டிரைவர்களுக்கு தண்டனைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில்,

தமிழ்நாட்டின் லாரிகள் வேறு மாநிலங்களுக்கும் செல்கின்றன. அதற்கு தற்போது இருக்கின்ற தண்டனைகள் அந்த அளவிற்குப் போதாது. எனவே, லாரி ஓட்டுநர்களுக்கு மட்டும் தண்டனையை கடுமையாக விதிக்க வேண்டும். அதேபோன்று, Online வழக்கு போடும்போது, போட்டோக்களுடன் வழக்குகள் பதிவு செய்ய வேண்டும்.

மயிலினால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். அதற்கு அளவே கிடையாது. விவசாயம் செய்கின்ற அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அது தெரியும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளின் குறைதீர்ப்புக் கூட்டத்தில் மயில் பிரச்சினை குறித்துப் பேசாத மாவட்டமே கிடையாது. எனவே, அதில் மாற்றம் வேண்டும். 2011 ஆம் ஆண்டில் மயில் பிரச்சினை குறித்துப் போராட்டம் நடத்தியபோது, 240 நபர்கள் கைது செய்யப்பட்டு, 22 நாட்கள் சிறையிலிருந்தோம். அப்போது கைது செய்த போலீஸ் அதிகாரி, SP ஆக இருந்து தற்போது retire ஆகிவிட்டார்கள். அவர் தற்போது விவசாயம் செய்கிறார். அன்றைக்கு மயிலுக்காக எங்களைக் கைது செய்தவர், இப்போது எங்களிடம் 'என் தோட்டத்தில் மயில் பிரச்சினை அதிகமாக இருக்கிறது, இதற்கென்ன தீர்வு? இதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா?' என்று எங்களிடம் கேட்கிறார். மயிலுக்கு கண்டிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மயில்கள் சரணாலயம்' அமைக்கப்பட வேண்டும். அவற்றை வெளியிலிருந்து பிடித்து வந்து உள்ளே விடுங்கள், பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.

அதேபோன்று காட்டுப் பன்றி பிரச்சினை. காட்டுப் பன்றி பிரச்சினைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. சுடலாம், ஆனால் அதிகாரிகள் அருகில் இருக்க வேண்டும். பன்றியை நிறுத்திவைத்து அதிகாரியை வரவழைத்து சுட முடியுமா? எனவே, அந்த மாற்றத்தை தயவுசெய்து அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதேபோன்று மான் பிரச்சினை. இன்றைக்கு விவசாயிகளுக்கு மான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதற்கான தீர்வு வேண்டும்.

அடுத்து, கொத்தடிமை. கொத்தடிமைச் சட்டம் இயற்றப்பட்டபோது அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. ஆனால், இன்றைக்கு வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இவ்வாறான

நிலையில் கொத்தடிமைச் சட்டம் என்பது, சிறிய அளவில் கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும். ஏனென்றால், ஒருசாராருக்குப் பாதுகாப்பாக, கேடயமாக உருவாக்கப்பட்ட பல்வேறு பாதுகாப்புச் சட்டங்கள், இன்றைக்கு வாளாக மாறி எதிரிலிருப்பவர்களைத் தாக்குவதற்குப் பயன்படுவதாக பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றிற்கான சில மாற்றங்களைக் கொண்டுவரவேண்டியது அவசியமாக இருக்கிறது.

பிற்பகல் 2–10

அதேபோல, பெண்களுடைய திருமண வயது. ஆணும், பெண்ணும் சமம். பெண்ணுக்கு திருமண வயது 18. ஆணுக்கு 21 வயது. பெண்ணுக்கு 21 வயதாக மாற்ற வேண்டும். பல்வேறு பிரச்சினைகள் வருவதற்கு காரணமே பெண்களுடைய திருமண வயது குறைவாக இருப்பதனால்தான். எனவே, அதில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அதேபோல, ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிவிகித சொத்து. ஒரு ஆணுக்கு வருகிற சொத்தில், அவருடைய வாரிசுக்கு உரிமை உண்டு. ஆனால், பெண்ணுக்கு வருகிற சொத்தில் அவருடைய வாரிசுக்கு உரிமை கிடையாது. இதுதான் அதிலுள்ள சிக்கல். இதற்கும் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியது அவசியமென்று தெரிவித்துக்கொள்கிறேன். POCSO சட்டத்தில் 18 வயது என்றிருப்பதை 16 வயது என்று மாற்ற வேண்டும். உலகம் பூராவும் 16 வயதுதான். இங்குதான் 18 வயது. அதை 16 வயது என்று மாற்ற வேண்டும்.

அதேபோல, கோயில் நிலம் இனாம். 1948 ஆம் ஆண்டிலே நீதிக் கட்சி சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக, கோயில் நிலம் இனாம் ஒழிப்புச் சட்டத்தை மாற்றி, அன்றைக்கு உழுதவனுக்கே நிலம் சொந்தம். . . (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு நிமிடங்கள் தாருங்கள். 27 நிமிடங்கள் அவர்களுக்குக் கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: 1948 ஆம் ஆண்டில் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக, உழுதவனுக்கே நிலம் சொந்தம் என்று கொடுக்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டில் ஒரு சட்டம் வந்தது. Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act. கோயில்களுக்கு சேவைக்காகக் கொடுத்த

2023 ஏப்ரல் 10] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

நிலங்களை, ஒன்று உரிமையாளருக்கு அல்லது உழுதவனுக்கு கொடுக்க வேண்டுமென்பதற்காக சட்டம் கொண்டு வரப்பட்டது. இதுவும் சமூக நீதிச் சட்டம். ஆனால், மாண்பமை நீதிபதி மரியாதைக்குரிய திரு. கிருபாகரன் அவர்கள் கரூர் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கிலே தீர்ப்பு சொல்கிறார். Collector மூலமாக ஒரு Committee-ஐ போட்டு, நிலங்களை 5 வகையாகப் பிரிக்கிறார்கள். முதல் இரண்டு வகை, கோயிலுக்குச் சொந்தமானது; மீதி மூன்று வகை, தானமாகக் கொடுக்கப்பட்டது. அப்போது, சமூக நீதிக்காக பட்டா கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அறநிலையத் துறையின் சார்பிலே தமிழ்நாடு முழுவதும், ஏகப்பட்ட வழக்குகள் இருக்கின்றன. கரூர் டவுனுக்குள் இருக்கின்ற 52, 53, 54 வார்டுகளில் பல ஆண்டுக் காலமாக குடியிருக்கிறார்கள். அதுவெல்லாம் இன்றைக்கு கோயிலுக்குச் சொந்தம் என்ற நிலை வருகிறது. (குறுக்கீடு) அப்படியே படித்து விடுகிறேன்.

உடல் உறுப்பு தானம், அதேபோல, தத்தெடுப்பு. இந்த இரண்டு விஷயங்களுக்கும் சட்டம் பாதுகாப்பாக, வலுவாக இருக்கிறது. ஆனால், emergency-ல் தேவைப்படுபவர்களுக்கு உடல் உறுப்பை தானமாகப் பெறுவதில் மிகவும் சிரமமாக இருக்கிறது. அதில் என்ன மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமோ, அதைப்பற்றி யோசிக்க வேண்டும். அதுபோல, காவிரியோரம் இருக்கின்ற மக்கள் அத்தனை பேருக்குமே வாழ்கின்ற உரிமை வேண்டும். ஏனென்றால், தொழிற்சாலைக் கழிவுகளும், நகராட்சிக் கழிவுகளும் நீரில் கலந்து, cancer ஆக வந்துகொண்டிருக்கிறது. நீங்கள் நிதியில்லை என்று சொல்லலாம். அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதியில்லை என்று சொன்னார். கங்கையைச் சுத்தப்படுத்துவதற்கு 20,000 கோடி ரூபாய் செலவு செய்கின்ற இந்த இந்தியத் திருநாட்டில், காவிரியைச் சுத்தப்படுத்துவதற்கு ஒரு ஆயிரம் கோடி ரூபாய் கிடையாதா? அதைக் கேட்டுப் பெற வேண்டும். ஏன் அதைக் கேட்டுப் பெறக் கூடாது?

அதைப்போல மாற்றுத் திறனாளிகள் இன்றைக்கு நலத் திட்ட உதவிகளைப் பெற 60 சதவிகிதம் குறை இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். 60 சதவிகிதத்தை 40 சதவிகிதமாக மாற்ற வேண்டும். நலத் திட்ட உதவிகளைப் பெறுவதற்கு இது ஒரு மிகப் பெரிய தடையாக இருக்கிறது. (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம். அதேபோல, அரசாங்கத்திற்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும் வருகிற பிரச்சினைக்கு

Arbitration வழக்குப் போட்ட பிறகு, நீதிபதிகள் தீர்ப்பு வழங்குகிறார்கள். அரசாங்கத்தின் தரப்பில் appeal செய்கிறார்கள். அப்படி appeal செய்து பல வழக்குகளிலே தாமதமாகி, தாமதமாகி கொடுக்க வேண்டிய தொகையை இரட்டிப்பாக வழங்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அதனால், ஒரு தனி Committee அமைத்து appeal செய்வதற்கு (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமாகிவிட்டது.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: ஒரே ஒரு நிமிடம். அவ்வளவுதான். நகரப் பகுதிகளிலே கட்டப்பட்ட இலட்சக்கணக்கான வீடுகளுக்கு மின்சார இணைப்பு தரப்படவில்லை. அதாவது, வரையறுக்கப்பட்ட உயரம் 12 மீட்டர் என்றிருப்பதை 15 மீட்டராக கொஞ்சம் தளர்வு செய்ய வேண்டும். அதேபோல, கட்டடம் பரப்பளவு 7,000 சதுர அடி என்றிருப்பதை 10,000 சதுர அடியாகவும், 3 சமையலறைகள் என்றிருப்பதை, 10 சமையலறைகளாக மாற்றி, தளர்வைக் கொண்டு வர வேண்டும். ஏனெனில், தமிழ்நாடு முழுவதும் இலட்சக்கணக்கான பேர் அதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் கண்டிப்பாக அதற்குத் தீர்வு வேண்டும். அதேபோல, சென்னையில் Chennai Metropolitan Water Supply and Sewerage Board சிறப்பாக இயங்குகிறது. ஆனால், Tamil Nadu Water Supply and Drainage Board-ஐப் பொறுத்தளவிற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்குவதுடன் சரி. Distribution வழங்குவது இல்லை. Chennai Metropolitan Water Supply and Sewerage Board வேலை செய்வது மாதிரி Tamil Nadu Water Supply and Drainage Board-ம் அதே பணியைச் செய்தார்களென்றால், மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் போய் சேரும். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 10]

பிற்பகல் 2–15

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது, ஓய்வு பெற்ற நீதியரசர், சொக்கலிங்க நாகப்பன் அவர்களுடைய தலைமையில் இருக்கக்கூடிய சட்ட ஆணையம் பற்றி, அதனுடைய பணிகளைப் பற்றி கேட்டார்கள். இந்த சட்ட ஆணையம் என்பது பழைய சட்டங்களை எல்லாம் ஆய்வு செய்து, அவற்றை நீக்கறவு செய்வதற்கும், அவற்றிற்குப் பதிலாக புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கும், இருக்கக்கூடிய சட்டங்களிலே புதிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்காகவும் நியமிக்கப்பட்டது. அது அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலே வழக்குகளை வேகப்படுத்துவதற்காக, உயர் நீதிமன்றத்தினுடைய கிளை நீதிமன்றம் வேண்டும். அதேபோல, கிராம நீதிமன்றச் சட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும். பொதுப் பணிக்கு எடுக்கப்படுகின்ற நிலங்களைக் கையகப்படுத்துவதில் தாமதமாகிற காரணத்தால், அதற்கு தனி நீதிமன்றம் வேண்டும். நீதிமன்றங்களிலே பொது மக்களுக்கான கழிப்பறைகள் மிக மோசமாக இருக்கின்றன. அதற்கு என்ன தீர்வு காண வேண்டுமோ, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். அதேபோல, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டும்பொழுது, வழக்கறிஞர்களுக்கான அறையும் அங்கே கட்டப்பட வேண்டும். அந்த* design*–ல் அதையும் நீங்கள் சேர்க்க வேண்டுமென்று அன்போடு உங்களை கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) கடைசியாக ஒரே ஒரு* point*. அதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும்* CBI *சிறப்பு நீதிமன்றம், பொருளாதார குற்றப் பிரிவு சிறப்பு நீதிமன்றம்,* Tamil Nadu Protection of Interests of Depositors *சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். தற்போது ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில் உள்ள அனைவரும் கோயம்புத்தூருக்குத் தான் செல்ல வேண்டியிருக்கிறது. அது ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்ததென்றால், வழக்குகள் சீக்கிரமாக முடியும். வழக்குகள் சீக்கிரமாக முடியாததுதான், குற்றங்களுக்கான காரணம். அதனால், இந்த கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு*

கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி பாராட்டி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன்.*

***திரு. அ.செ. வில்வநாதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்த மாமன்றத்தில் தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் எண்ணங்களையும் உள்வாங்கி 1971–1976–ல் நில உச்சவரம்புச் சட்டம், 1989–1991–ல் பெண்களுக்குச் சொத்துரிமை, உள்ளாட்சித் தேர்தலில் இட ஒதுக்கீடு, இஸ்லாமியர்களுக்கு வேலைவாய்ப்பில் 3.5 சதவீத இட ஒதுக்கீடு, அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டங்களை இயற்றி சமுதாயத்தை உயர்த்திய தலைவர் என்றும் நினைவில் வாழும் தலைவர் கலைஞர் அவர்களை நன்றியுடன் வணங்கி நினைவில் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

“வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.”

உலகத்தில் வாழும் உயிர்களெல்லாம் வானத்தின் மழையை எதிர்பார்த்து வாழ்ந்திருக்கும். அதுபோல, மன்னனின் நீதி தவறாத ஆட்சியை எதிர்பார்த்து, குடிமக்கள் வாழ்ந்திருப்பார்கள் என்ற குறளுக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற நோக்கில் ஆட்சி புரிந்து வருகிறார். நாட்டு மக்கள்மீது, கருணையிருப்பதால்தான் மாதம் ரூபாய் ஆயிரம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்க ஆணை பிறப்பித்தார். மேற்படிப்பில் சேரக்கூடிய அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் மகத்தான புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டுவந்தார். தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன வேண்டுமோ, அதனைச் செய்து முடிக்க கடமையுணர்வுடன் இரவு பகல் பாராமல் உழைத்துக்கொண்டிருக்கிறார்.

2023 ஏப்ரல் 10] [திரு. அ.செ. வில்வநாதன்]

அரசியலில் பொறுமை இருந்ததால்தான் இன்று இந்திய தேசத்திற்கே வழிகாட்டும்விதமாக ஒரு சமூக நீதிப் போராளியாகத் திகழும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். தமிழ்நாட்டின் எதிர்காலம், இளைஞரணிச் செயலாளரும், இளைஞர்களின் எழுச்சி நாயகரும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான அண்ணன் திரு. உதயநிதி அவர்களை வணங்குகின்றேன். நமது கழகப் பொதுச் செயலாளரும், அவை முன்னவருமான மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்லும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும், மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு கொறடா அவர்களுக்கும். அனைத்து அமைச்சர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என் வணக்கங்கள். இரண்டு முறை என்னை வெற்றி பெறச் செய்த, ஆம்பூர் தொகுதியின் வாக்காளர்களுக்கும் எனது நன்றியினை இருகரம் கூப்பித் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக் கோரிக்கைகள் சிலவற்றை எடுத்துரைக்கின்றேன். 2013–2014 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட, ஆம்பூர்-ரெட்டிதோப்பு இரயில்வே மேம்பாலப் பணிகள் கடந்த ஆட்சிக் காலத்தில் துவங்கப்படாமல் இருந்தன. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், நேரில் பார்வையிட்டு, இது தொடர்பாக பல ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, முன்னேற்ற நிலையில் உள்ள ஆம்பூர்-ரெட்டிதோப்பு இரயில்வே மேம்பாலப் பணியினை பொது மக்கள் நலன் கருதி, விரைந்து துவக்கி, முடித்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஆம்பூர் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், துத்திப்பட்டில் உள்ள அருள்மிகு பிந்துமாதவர் திருக்கோயில்

போன்ற திருக்கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்கு செய்துதர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாதனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலாற்றின் குறுக்கே, மாதனூரிலிருந்து உள்ளே செல்லும் சாலைகளில் உள்ள தரைப்பாலம், புயல், வெள்ளத்தால் சேதமடைந்து தற்காலிகமாக சீரமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தத் தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட அகரம்சேரி முதல் மேலாளத்தூர் வரை செல்லும் கிராமச் சாலைகளில், பாலாற்றின் குறுக்கே, பொது மக்கள், விவசாயிகள், மாணவர்கள் நலன் கருதி, தரைப்பாலம் அல்லது மேம்பாலம் கட்டித்தர கோருகிறேன்.

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதனூர், ஆலங்காயம், அணைக்கட்டு, குடியாத்தம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் விடுபட்டுள்ள குக்கிராமங்களில் உள்ள குடிநீர் உவர்ப்பு நீராக இருக்கிற காரணத்தினால், பொது மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகப் போக்கிட, நமது கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும், சுமார் 2,000 புறநோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். இம்மருத்துவமனையில் சர்க்கரை நோயாளிகள், இரத்த கொதிப்பு நோயாளிகள், சிகிச்சை அளிக்க கண் மருத்துவர், மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகளைக் கவனிக்க, CEmONC வசதிகளை மக்கள் நலனிற்காக ஏற்படுத்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீரின்றி அமையாது உலகு" என்பார்கள். அதுபோன்று ஒரு நல்ல நீதி நிர்வாகமின்றி ஒரு நாடு இருக்க முடியாது. Ignorance of law is no excuse. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், சட்டமோ, விதிகளோ இல்லாமல், அந்தத் துறை இயங்க முடியாது. மக்கள் அரசியலைப் பற்றி, பொருளாதாரத்தைப் பற்றி, மருத்துவத்தைப் பற்றி, விஞ்ஞானத்தைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம். ஆனால், இந்த நாட்டில் இருக்கின்ற சாதாரண, சாமானிய மக்கள் அனைவருமே சட்டத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.

OBC மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் இட ஒதுக்கீடு பெற்றுத்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி, உச்ச நீதிமன்றம் வரை சென்று ஆணைகளைப் பெற்றுத் தந்தார். கிராமப்புறங்களில், அரசு மருத்துவமனைகளில், பணிபுரியும் மருத்துவர்களுக்கு மருத்துவ மேற்படிப்பிற்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு போன்ற சட்ட ரீதியில் பெற்ற வெற்றிக்காக இன்று இந்தியா முழுவதும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, "சமூக நீதிப் போராளி" என்று பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–25

நீதித் துறையின் செயல்பாட்டில், தமிழகம் முதலிடம். நீதி, சிறைத் துறை செயல்பாட்டில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளதாக IJRAR-International Journal of Research and Analytical Reviews அறிக்கையில் தனித் தனியாக காவல், சிறை, நீதி மற்றும் சட்ட உதவி வழங்கலில் நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தளபதி அவர்களின் ஆட்சிக்குப் பெருமை சேர்த்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார். நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் உண்மையிலேயே தமிழ்நாடு முன்மாதிரியாக இருக்கிறது என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்பமை நீதியரசர் திரு. சந்திரசூட் அவர்கள் கண்ணகி நீதி கேட்டுப் போராடிய மதுரை மண்ணில் தெரிவித்த பாராட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு சட்டமன்றப் பேரவையில், ஆம்பூரில் புதியதாக சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என அடியேன் வைத்த கோரிக்கையை ஏற்று, அதைத் திறக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஆம்பூர் வழக்கறிஞர்கள் மற்றும் தொகுதி மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல; திருப்பத்தூர் மாவட்டத்தில் புதியதாக அமர்வு நீதிமன்றம் அமைக்க ஆணை பிறப்பிக்கவும், நாட்றாம்பள்ளியில் சார்பு நீதிமன்றம், வாணியம்பாடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கவும் எடுத்த நடவடிக்கைகளுக்கு நமது திராவிட மாடல் ஆட்சி முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது.

சென்னையில் தென் மாநிலங்கள் பயன்பெறும் வகையில் உச்ச நீதிமன்றக் கிளையினை அமைக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ளதுபோன்று வழக்கறிஞர்கள் அறை, Advocates Chambers மாவட்ட நீதிமன்றங்களில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற வழக்கறிஞர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சிறைத் துறை. 'எனது தம்பி அடைபட்டுள்ள பாளையங்கோட்டை சிறைதான் எனக்கு யாத்திரை ஸ்தலம்' என்றார் அண்ணா. சிறைச்சாலைகளில்தான் மாபெரும் தலைவர்கள் உருவாகியுள்ளனர். தவறு செய்த மனிதனை தண்டிக்கின்ற ஓர் இடமாக இல்லாமல், தனது தவறை உணர்ந்து, திருந்தி, மறுபடியும் தனது வாழ்க்கையை வாழக்கூடிய ஒரு பாடசாலையாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்று மாலைக் கூட்டம் இருக்கிறது. அதனால், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தின்முன் அனைவரும் சமம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வில்வநாதன், பேசுங்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: சிறைக் கைதிகளைப் பார்க்க வரும் உறவினர்கள், பார்வையாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால், அவர்கள் இயற்கை உபாதைகளுக்கு ஆளாகாமல் தடுக்க, குடிநீர் மற்றும் கழிவறைகள் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன். சிறைக் கைதிகளுக்கு நன்னடத்தை குறித்த மன நலம் சம்பந்தமான கவுன்சிலிங் அளிக்க வேண்டும். ஆர்வமாக உள்ள தொண்டு நிறுவனங்களை இதில் ஈடுபடுத்த வேண்டும். விருப்பத்தின்பேரில் பள்ளி மற்றும் மருத்துவமனைகளின் தூய்மைப் பணிகளில் கைதிகளை ஈடுபடுத்த பரிசீலனை செய்யலாம். சிறைச்சாலைப் பணியாளர்கள் பல்வேறு இடர்பாடுகளுடன் பணிபுரிந்து வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) தொகுதி கோரிக்கைகளைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 10] [திரு. அ.செ. வில்வநாதன்]

தொகுதிக் கோரிக்கைகள்:

ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெல்திகிமாணிபெண்டா, மாதனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாயக்கனேரி ஆகிய ஊராட்சிகளுக்கு புதிய துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும். அரங்கல்துர்கம் ஊராட்சி, பொன்னபல்லி அருகே புயல் வெள்ளத்தால் பழுதடைந்துள்ள "செக்டேம்" புதியதாக கட்டித் தர வேண்டும். ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட அகரஞ்சேரி, வெங்கிளி, பாலாற்றின் குறுக்கேயும், பள்ளிக்குப்பம் அகரம் ஆற்றின் குறுக்கேயும் தடுப்பணைகள் கட்டித் தர வேண்டும். வடகரை–மின்னூரை இணைத்திடும் வகையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

அரங்கல்துர்கம் ஊராட்சி, சுட்டுகுண்டா கிராமத்திலிருந்து ஆந்திரா மாநிலம், பெத்தூர்க்கு (குப்பம்) செல்ல வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 4 கிலோ மீட்டர் சாலையில் செல்வதற்கு அனுமதி பெற்று சாலை அமைத்துத் தர வேண்டும். ஆம்பூர் தொகுதி, அணைக்கட்டு வட்டம், ஆசனாம்பட்டிலிருந்து ஆம்பூர் வட்டம், நாயக்கனேரி ஊராட்சிக்குச் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், உத்ரகாவேரி ஆற்றின் குறுக்கே ராமநாயக்கன்குப்பம், ஏ.டி.காலனி அருகேயும், பாக்கம்பாளையம் ஊராட்சி, பாக்கம் அருகேயும் சிறுபாலங்களும், அரசம்பட்டு ஆற்றின் குறுக்கே குருராஜபாளையம் ஆர்ஜாத்தி அருகே மேம்பாலம் ஒன்றும் கட்டித் தர வேண்டும். ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட, பெரியாங்குப்பம், நாயக்கனேரி, கன்னடிகுப்பம், ஆலங்குப்பம் மற்றும் அக்ரஹாரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஆரம்ப துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

பெரியாங்குப்பம், நாச்சியார்குப்பம், கன்னடிகுப்பம் ஆகிய ஊராட்சிகளில் நிறுத்தப்பட்ட நகரப் பேருந்துகளை இயக்க வேண்டும். ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், வெல்திகிமாணிபெண்டாவிலிருந்து சிந்தகமாணிபெண்டா வரை, 2 கிலோ மீட்டர் தூரம் வரை ஆந்திரா மாநிலத்திற்குச் சொந்தமான தார்ச் சாலை உள்ளது. சிந்தகமாணிபெண்டா கிராமத்திலிருந்து பள்ளி செல்லும் மாணவர்கள் 2 கிலோ மீட்டர்

தூரம் நடந்து சென்று, தமிழ்நாடு அரசு நகரப் பேருந்து எண் 15-ல் ஏறி வாணியம்பாடி நகரத்திற்குச் சென்று வருகிறார்கள். எனவே, ஆந்திரா அரசிடம் 2 கிலோ மீட்டர் செல்ல அனுமதி பெற்று, இந்தப் பேருந்தை சிந்தகமாணிபெண்டா கிராமத்திற்கு நீட்டித்துத் தர வேண்டும்.

ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், இளையநகரம் ஊராட்சி, தரக்காட்டில் பெரியகானாறு குறுக்கே தடுப்பணை (செக்டேம்) ஒன்று கட்டித் தர வேண்டும்.

ஆம்பூர் தொகுதிக்கு கூடுதல் அமர்வு நீதிமன்றம் (Additional District Sessions Judge Court) மற்றும் A.D.J. (Additional Sessions Court) அமைக்க உத்தரவிட வேண்டும். ஆம்பூரில் 30 ஆண்டுகளாக உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எந்த ஒரு Clearance-ம் இல்லாமல் இருக்கின்றது. அதனை உடனடியாக தமிழ்நாடு அரசு கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கை, அதாவது, மொத்தப் பயனாளிகளுக்கும் உடனடியாக உரிய ஆவணத்தினை– Document-ஐ வழங்க வேண்டும்.

ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பெரியாங்குப்பம், நாயக்கனேரி, A. கஸ்பா, ஆசானம்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். வடசேரி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சாதாரண கைதிகளை நெடுஞ்சாலைகளில் மரம் நடுதல் போன்ற பணிகளில் சமூக நோக்குடன் அவர்களை ஈடுபடுத்தினால் கைதிகளுக்கு ஒரு மன மாற்றமும், புத்துணர்வும் ஏற்படும். அதை நடைமுறைப்படுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டும். சிறைச்சாலைக்கு நாற்றுகள் வழங்கி மரக்கன்றுகள், பூச்செடிகள் போன்றவை வளர்க்க ஆவன செய்ய வேண்டும்.

கடந்த 10 வருடங்களாக சிறைச்சாலைகளில் உணவின் அளவு, தர வகைகள் மாற்றியமைக்கப்படவில்லை. அதனை பரிசீலனை செய்ய வேண்டும். சிறைச்சாலை பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இடர்படியை (Risk Allowance) ரூ.800/–லிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும். மிகை நேர ஊதியம் ரூ.200/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தித் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தின்முன் அனைவரும் சமம்; நீதித் துறையில் ஏழைகளுக்கு நீதி கிடைக்கச் செய்துவரும் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கலீஃபா உமரைப் போன்றும், நபிகள் நாயகத்தைப் போன்றும் நீதி தவறாது, நீதி வழுவாது ஆண்டு கொண்டிருக்கும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

சட்டம், நீதி, சட்டம்-ஒழுங்கு ஆகியவற்றையும் பேணிக் காக்கும் அக்கறையில், காவல் நிலையத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரடியாகச் சென்று முதல் தகவல் அறிக்கை சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பார்வையிட்டதும், அம்மா உணவகத்தைத் தாக்கியவரை, தனது கட்சிக்காரர் என்று தெரிந்தும் அவர்மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்ததும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் நீதிவழுவா நிர்வாகத்தைக் காட்டுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைவாசிகளின் உரிமைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உலகத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்குத் தீவிர கவனம் செலுத்தி வருகிறது நம்முடைய சிறைத் துறை. அந்தவகையில் சிறைவாசிகளின் திறன் பயிற்சி மற்றும் மன மாற்றத்திற்கான பல புதுமையான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருப்பது, பாராட்டுக்குரியதாக இருக்கிறது.

பிற்பகல் 2–30

இளம் வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படும் பயிற்சித் தொகையை 2 மடங்காகக் கூட்டவேண்டுமென்று நான் அன்போடு வேண்டிக்கொள்கின்றேன். Notary Public *கூடுதலாக நியமனம் செய்ய வேண்டும்.*

புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட தலைமை நீதிமன்றங்கள் அமைத்திட வேண்டுமென்றும், கீழமை நீதிமன்றங்களில் காலியாக இருக்கின்ற நீதிபதிகள் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்றும், அதில் இருக்கின்ற இதர பணியிடங்களையும் நிரப்பிட வேண்டுமென்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நீதிமன்றங்களின் தேவைக்கேற்ப, புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும். தேங்கி நிற்கும் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். 2007 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. அம்மாவட்டத்திற்கு இந்த வருடத்திலேயே ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நான் வாசுதேவநல்லூர் தொகுதியிலிருந்து வருகின்றேன். வெள்ளையர்களை முதன்முதலில் எதிர்த்த பூலித்தேவன் ஆட்சி செய்த இடம் அது. ஒண்டிவீரன், வெண்ணிக்காலாடி ஆகியோர் அவருக்குப் போர்ப்படைத் தளபதிகளாக விளங்கினார்கள். அதில் ஒண்டிவீரன் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைத்து, மணிமண்டபம் கட்டி அரசு விழா கொண்டாடிக்கொண்டிருக்கிறது. ஆனால், வெண்ணிக்காலாடிக்கு மணிமண்டபமும் கட்டவில்லை; அரசு விழாவும் எடுக்கப்படவில்லை. ஆகவே, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி, தன் குடல் சரிந்த நிலையிலும் போராடி, பல எதிரிகளைக் கொன்று குவித்த வெண்ணிக்காலாடிக்கு ஒரு மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சிவகிரி பகுதியில் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும். எங்கள் தென்காசி மாவட்டத்திற்கு சட்டக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். வாசுதேவநல்லூர் பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அரசு கலைக் கல்லூரி அமைக்க இயலாவிட்டால், அங்கேயிருக்கின்ற மனோன்மணியம் சுந்தரனார் உறுப்புக் கல்லூரியை அரசினர் கலைக் கல்லூரியாக மாற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தென்காசி மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தித் தருவதோடு, தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தொடர்பாக உள்ள வழக்கை விரைந்து முடித்து அந்த அலுவலகத்தை விரைந்து திறக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி மாவட்டத்தில் Sessions Court கொண்டுவர வேண்டுமென்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில்

படிக்கின்ற மாணவர்களுக்கு குறைந்தபட்ச சட்டப் பிரிவுகளைச் சொல்லித் தரவேண்டுமென்றும் அன்போடு கேட்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும்; புதிய நீதிமன்றங்களைக் கட்ட வேண்டும் போன்ற கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வழக்குகளை விரைந்து முடிப்பது நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குட்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு குறிப்பிட்ட கால அளவுகள் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இதில் மாநில அரசின் நேரடி பங்கு ஏதுமில்லை. சென்னையில் 151 நீதிமன்றங்களும், பிற மாவட்டங்களில் 1,179 நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2–35

2023 ஆம் ஆண்டில் காலியாக உள்ள 45 மாவட்ட நீதிபதிகளுக்கான பணியிடங்கள், உயர் நீதிமன்றத்தின் நேரடி பணி நியமனம்மூலமும், காலியாக உள்ள 245 உரிமையியல் நீதிபதிகளுக்கான பணியிடங்கள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமும் நிரப்பப்பட இருக்கின்றன. மேலும், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றையெல்லாம் துரிதப்படுத்தி, வழக்குகளை உயர் நீதிமன்றமும், கீழமை நீதிமன்றங்களும் விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு தளபதி அவர்களினுடைய அரசு உறுதியாக நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம், நீதி நிருவாகம் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில், மனிதநேய மக்கள்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 ஏப்ரல் 10

கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு, சிறை நிர்வாகத்தில் ஒரு முத்திரையைப் பதித்து, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் சிறைச்சாலைகளினுடைய கட்டமைப்பு, சிறைச்சாலைகளிலுள்ள சிறைவாசிகளின் எண்ணிக்கை, சிறைவாசிகளை நல்வழிப்படுத்தக்கூடிய முயற்சி ஆகியவற்றில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது என்று IJR என்று சொல்லக்கூடிய India Justice Report 2022 நடத்திய கள ஆய்வு தெரிவிக்கிறது. இதற்காக தமிழக அரசுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறைச்சாலை என்பது தண்டனைக் கூடம் அல்ல, அது ஓர் சீர்திருத்தப் பள்ளிதான். அந்த அடிப்படையில், சிறையில் இருக்கக்கூடியவர்களை சீர்திருத்துவதற்கு ஏராளமான முயற்சிகளை நம்முடைய தமிழக சிறைத் துறை எடுத்து வருகிறது. குறிப்பாக சமீபத்தில், சிறையிலுள்ள நூலகங்களுக்கு, சென்னையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில், மக்கள் நூல்களைத் தரலாம் என்று கேட்டார்கள். ஏராளமான நூல்கள் அளிக்கப்பட்டன. அதேபோன்ற நிகழ்வு மதுரையிலும் நடைபெற்றிருக்கின்றது. இந்த முயற்சிகளையெல்லாம் முதற்கண் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறையிலே தண்டனை பெற்றவர்களைப் பற்றி, சிறைக்குள்ளே இருக்கக்கூடியவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு வாசகத்தை நான் இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 'இளைஞனாக உள்ளே சென்று, வயோதிகனான பிறகே, சிறையினின்றும் வெளியே வந்தவர்கள் எத்தனை பேர்! திடகாத்திரமாகச் சிறை சென்று, கண்மங்கி, கைகால் இளைத்து நடை தளர்ந்து, நரையுடன் வெளிவந்தவர்கள் எத்தனை பேர்! குடும்பத்திலே ஒரு மணிவிளக்காக இருந்துவிட்டு, சிறையினின்று வெளிவந்தபோது, குடும்பத்தவரில் ஒருவருமேயில்லையே என்று கதறும் நிலை பெற்றவர் எத்தனை பேர்! பூங்காவை விட்டு போய் சிறையிலே வாடி, வெளியே வந்து பாலைவனத்தைக் கண்டு பரிதவித்தவர் எவ்வளவு! சீமானாக இருந்து சிறை சென்று, வெளிவந்தபோது, செப்புக் காசுமின்றி, சென்று தங்க இடமுமின்றி,

2023 ஏப்ரல் 10] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நாடோடியானவர்கள் எவ்வளவு! கருகிப் போன தங்கம்; கசங்கிய மலர்கள்; வறண்டுபோன வயல்கள்; சரிந்த சபா மண்டபங்கள்; மண்மேடான மாளிகைகள்; நரம்பொடிந்த வீணை; நதியற்ற நகரம்; எனத்தக்க நிலை பெற்ற நற்குண நாகங்கள் நம் வணக்கத்துக்கு உரியரன்றோ! வாழ்க அவர் நாமம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சிறைச்சாலைகளில். . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்று மாலையிலும் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருப்பதால், இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு)

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ஒரு நிமிடத்திலா? நான் அப்படியே அமர்ந்துவிடுகிறேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: நான் இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன். ஒரு நிமிடம் என்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, நீங்கள் பேசுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை ஏன் நான் இங்கே பதிவு செய்கின்றேன் என்றால், தமிழ்நாட்டு சிறைச்சாலைகளில், ஏறத்தாழ 1/4 நூற்றாண்டுகளைக் கடந்து, 37 முஸ்லிம் சிறைவாசிகள் வாழ்நாள் தண்டனை பெற்று, வரிசையாக பொது மன்னிப்பு வழங்கக்கூடிய பல்வேறு நிலைகள் ஏற்பட்டபோதிலும், அவர்களுக்கு மட்டும் அந்தத் தண்டனையைக் குறைத்து, அவர்கள் விடுதலை பெறக்கூடிய வாய்ப்பே கிடைக்கவில்லை.

பிற்பகல் 2–40

தேசத் தந்தை மகாத்மா காந்தியைக் கொன்ற வழக்கிலே குற்றம் சாட்டப்பட்ட Gopal Godse 18 வருடங்களிலே விடுதலையானார். சம்பல் கொள்ளைக்காரி என்று சொல்லப்பட்ட Phoolan

Devi-க்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையானார். தூக்குத் தண்டனை பெற்ற நம்முடைய தோழர் தியாகு 1975-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசால், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலையானார். 1968-ல் கீழ்வெண்மணியிலே நடைபெற்ற சம்பவத்திலே 23 குழந்தைகள் உட்பட 44 பேர் குற்றவாளிகளாக இருக்கப்பட்டவர்கள் அத்துணை பேரும் விடுதலையானார்கள். முன் விடுதலை பெற்றார்கள். இதேபோல, தருமபுரி பேருந்து வழக்கிலே தண்டனை பெற்றவர்கள் முன் விடுதலை செய்யப்பட்டார்கள். தூக்குத் தண்டனையை Rarest of Rare Case என்று சொல்வார்கள். அந்தத் தூக்குத் தண்டனையை பெற்றவர்கள்கூட, அந்தத் தண்டனை இரத்து செய்யப்பட்டு, பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுதலை பெற்றிருக்கின்றார்கள். ஆனால், இந்த 37 முஸ்லிம் சிறைவாசிகளுக்கு மட்டும்—தூக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்டது வாழ்நாள் தண்டனைதான். அந்தத் தண்டனை வழங்கப்பட்ட பிறகும்கூட, அவர்களுக்கு மட்டும் எந்தவிதமான பொது மன்னிப்பும் வழங்கப்படாதது மிகுந்த மன வருத்தத்தை மனித உரிமை ஆர்வலர்களுக்கும் மற்றும் இஸ்லாமிய சமூகத்திற்கும் ஏற்பட்டிருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 113-வது பிறந்த நாளினை முன்னிட்டு ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன் விடுதலை செய்ததில் 505 பேர் பரிந்துரை செய்யப்பட்டார்கள். ஆளுநர் அவர்கள் 318 கோப்புகளில் கையெழுத்து போட்டுத் தந்தார்கள். அதிலே 8 முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் மற்றும் விவரங்களை இங்கே வாசித்தால் நேரமாகும். அதை அண்ணனுக்குத் தந்துவிடுகிறேன். அதற்கு அடுத்தபடியாக, நீதியரசர் நம்முடைய Authinathan Commission இன்றைக்கு எனக்கு 18 பேர்களுடைய பட்டியலைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் 6 பேருக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். 9 சிறைவாசிகளுக்கு ஆணையம் பரிந்துரைக்கிறது. ஆனால், Director General of Prisons பரிந்துரை செய்யவில்லை. ஆணையமும், Director General of

Prisons-ம் பரிந்துரை செய்யாதவர்கள் 4 பேர். அந்த 9 பேர்களுக்கு முடிவெடுக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். எனவே, இதிலேகூட 9+6=15 பேர். அவர்களெல்லாமே 23 ஆண்டுகள், 24 ஆண்டுகள், 26 ஆண்டுகள் என்று சிறையிலே இருந்தவர்கள். நீங்கள் கொடுத்த பட்டியல்தான். அதிலே 9+6=15 பேருக்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களின் அரசுக்கு சாதி, மதம், இனம் என்கின்ற வேறுபாடு கிடையாது. நாங்கள் எல்லோரையும் சமமாகத்தான் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்கின்ற எண்ணம் கொண்டவர்தான் நம்முடைய மாண்புமிகு தலைவர் தளபதி அவர்கள். இன்னும் சொல்லப்போனால், உங்களுடைய கோரிக்கையை வைத்துத்தான் நீதியரசர் Authinathan Commission நியமிக்கப்பட்டது. ஏனென்றால், நீங்கள் அதிலே பலர் விடுதலைக்கு ஆளாகவில்லை. எனவே, மீண்டும் ஓர் ஆணையத்தை நியமியுங்கள் என்று கேட்டீர்கள். அதனடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அந்த ஆணையத்தை நியமித்துத் தந்தார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச ஆரம்பித்து 8 நிமிடங்களாகிவிட்டன.

பிற்பகல் 2–45

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: 8 நிமிடங்கள் எல்லாம் ஆகவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய கோரிக்கை என்னவென்றால், நான் பட்டியலிட்டிருக்கின்ற அந்த 37 பேரும் வாழ்நாள் தண்டனை பெற்றவர்கள்தான். இதுபோன்ற communal வழக்கிலே தொடர்புடையவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, 2003-ல் கோயம்புத்தூரில் சர்தார் என்பவருடைய கொலை வழக்கில் ஹரி மற்றும் கண்ணன் இவர்கள் நம்முடைய அரசு கொடுத்த முன் விடுதலையின் காரணமாக விடுதலை செய்யப்பட்டார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா வருகிறது. அவருடைய ஆட்சிக்காலத்தில்,

2009–லே மொத்தம் ஏறத்தாழ 10 முஸ்லிம் சிறைவாசிகளை, கோயம்புத்தூர் வழக்கு தொடர்புடையவர்களை முன் விடுதலை செய்தார்கள். எனவே, கனிவுடன் இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும். பேரறிவாளன் வழக்கில், செப்டம்பர் 2018–ல் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியதன் காரணமாகத்தான், கடைசியில் அவரும், 7 தமிழர்களும் விடுதலையாவதற்கான வழிபிறந்தது. அதுபோன்ற ஒரு நிலைப்பாட்டை இந்த அரசு எடுக்க வேண்டும் என்பதுதான் மக்களுடைய எதிர்பார்ப்பு என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.நா. சபை மார்ச் 15–ஐ International Day to Combat Islamophobia என்று அறிவித்திருக்கிறது. இஸ்லாம் வெறுப்பிற்கு எதிரான ஒரு நாளாக அறிவித்திருக்கின்றது. இந்த ஆண்டு மார்ச் 15–ல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்து ஒரு Tweet போட்டார்கள். அந்த Tweet, பெரிய Tweet; அதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். Let's resolve to fight the systemic oppression of minorities and protect their rights in line with constitutional values என்று சொன்னார்கள். அதாவது, சிறுபான்மையினர்கள், ஒடுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் நின்று பாதுகாப்பதற்கு நாம் உறுதி எடுப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த Tweet–ல் சொன்னார்கள். இன்றைக்கு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரமும், வெறுப்பு நடவடிக்கைகளும் அதிகரித்திருக்கக்கூடிய நேரத்தில், இந்தியாவிற்கே முன்மாதிரியான, சமூக நீதி தளத்தில் பல்வேறு செயல்பாடுகளைச் செய்யக்கூடிய நம்முடைய தமிழக அரசு (மணியடிக்கப்பெற்றது) Scheduled Castes and the Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989–ன் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரான, இதுபோன்ற பரப்புரைக்கு எதிராக, ஒரு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

Group Health Insurance Scheme வழக்கறிஞர்களுக்கு வேண்டுமென்பது, அவர்களுடைய நீண்ட கால கோரிக்கையாக இருக்கின்றது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இப்போது நம்முடைய சட்டமன்றமே மின்னணுமயமாகிவிட்டது. அதைப்போல, நீதிமன்றம் மின்னணுமயமாவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன. குறிப்பாக, பிணை கிடைத்த பிறகு, சில சிறைச்சாலைகளில் சிறைக் காவலர்களே அந்தச் சிறைச்சாலைக்கு செல்லக்கூடிய நிலை; நேரடியாக ஒரு messenger–ஐ அனுப்பக்கூடிய நிலை. இதனால், பல்வேறு வகைகளில் விடுதலை பெற்ற பிறகும், சிறையிலே இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) எனவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தேவையானவற்றையெல்லாம் பதிவு செய்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். இனிமேல், நன்றி மட்டும்தான் பதிவு செய்ய வேண்டும்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ஒரு நீதிமன்றத்தில் Bail வந்த பிறகு, அந்தக் குறிப்பிட்ட சிறைச்சாலைக்கு மின்னஞ்சல் வழியாக அந்த Bail Bond போவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஏதோ பேசுகிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நீங்கள் நோன்பில் இருக்கிறீர்கள்; பசி. நீங்கள் பாவம், tired ஆக இருப்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. நீங்கள் நோன்பில் இருப்பதால், அதிக நேரம் பேசி, ஏதும் உங்களுக்கு ஆகிவிடக் கூடாது என்கிற நல்லெண்ணத்தில், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்கிறார்கள். நன்றி சொல்லி, உட்காருங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: ஒன்றும் ஆகாது; ஒன்றும் ஆகாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–ல் கல்பாக்கம் அணு உலைக்கு எதிராக நடைபெற்ற ஒரு போராட்டம். அதுகுறித்து, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மற்றவையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நன்றி மட்டும் சொல்லுங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: இல்லை. உடனே உரையை முடித்துவிடுகிறேன். நம்முடைய மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர்

திரு. ப. அப்துல் சமது, ம.தி.மு.க.–வினுடைய துணை பொதுச் செயலாளர் திரு. மல்லை சத்யா உட்பட 129 பேர்மீது வழக்குகள் போடப்பட்டன. அந்த வழக்கு மற்ற வழக்குகளோடு சேர்ந்து தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அதை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்திலுள்ள நீதிமன்றம் 100 ஆண்டுகள் கடந்த ஒரு பழமையான நீதிமன்றமாக இருக்கின்றது. அந்த நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கலியுக கடவுளாக, வள்ளல்களில் தலைவனாக, மறைந்தும் மறையாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் உள்ளங்களில் இதய தெய்வமாக என்றும் வீற்றிருப்பவரும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் மற்றும் தொண்டர்களை தன் இரத்தத்தின் இரத்தமாக, உடன்பிறந்த சகோதர, சகோதரிகளாக நேசித்தவருமான மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் வழியில் சிறிதளவும் மாறாமல், கொண்ட கொள்கைகளில் சற்றும் விலகாமல், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வீரமுழக்கமிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மக்கள் அனைவரையும் வித்தியாசம் பாராட்டாமல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை நல்வழியில் நடத்தி, வாழும் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–50

புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகிய மக்கள் தலைவர்களின் பண்புகளையும், ஈகை குணங்களையும், செயல் திறமைகளையும் ஒருசேரப் பெற்று, அவர்களின் நல்ல எண்ணங்களைச் செயல்படுத்தும் வகையில் மக்கள் பணியாற்றி

2023 ஏப்ரல் 10] [முனைவர் இசக்கி சுப்பையா]

வருபவரும், தன்னலம் கருதாது மக்கள் சேவையாற்றி, கட்சியின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் அயராது உழைக்கும் ஒரு எளிய தொண்டனும் தன் விடாமுயற்சியினாலும், உழைப்பினாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பதவிக்கு வரலாம் என்று நிரூபித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டர்களில் ஒருவராக, தொண்டர்களுக்கு தொண்டராக, (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டர்களின் நலன் காக்கும் ஒருவராக, தொண்டர்களின் ஒருமித்த அன்பும், ஆதரவும் பெற்ற தலைவராக, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் பாதுகாவலராக, சிங்கமென தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரான அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தோளோடு தோள் சேர்ந்து நின்று கட்சியை நல்லோர்களின்கீழ் கொண்டுவர பாடுபட்ட தொண்டர்களின் பாதுகாவலர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த நிர்வாகிகள் அனைவருக்கும் எனது வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது சகோதர, சகோதரிகளாக உள்ள அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் எனது உரையை பதிவு செய்யத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையில் சட்டத் துறை மற்றும் நீதி நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால், அம்மானியக் கோரிக்கைகள் குறித்து சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சட்டமும், நீதியும் எங்கே இணைந்து நல்ல முறையில் செயல்படுகிறதோ அங்கே தவறுகள் குறைகின்றன; குற்றவாளிகள் எண்ணிக்கை குறைகிறது; நாட்டில் மக்கள் அமைதியாக வாழும் சூழல் ஏற்படுகிறது. சட்டமும், நீதியும் சரிவர பராமரிக்கப்படவில்லையென்றால், குற்றங்களின் எண்ணிக்கையும், குற்றவாளிகளின் எண்ணிக்கையும் உயரும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டமும், நீதியும் காக்கப்பட்டதால்தான், தமிழகம் வன்முறை இல்லா மாநிலமாகத் திகழ்ந்தது. மக்கள் மகிழ்ச்சியோடும், பயமின்றியும் வாழ்ந்து வந்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர்களில் மாமனிதராகத் தோன்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், சட்டக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில், உயர் கல்வித் துறையுடனிருந்த சட்டக் கல்வியைப் பிரித்து சட்டத் துறையுடன் இணைத்து, மேன்மேலும் மெருகூட்ட அதனை நிர்வகிக்கும் பொறுப்பையும் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடமே வழங்கினார்கள்.

'தனக்குக் கிடைக்காத ஒன்று தரணியில் யாருக்கும் கிடைக்கக்கூடாது' என்று எண்ணக்கூடிய தலைவர்களின் மத்தியில், மாண்புமிகு அம்மா அவர்கள் இளமையில் சட்டம் பயின்று அதில் ஒரு வல்லுநராக வேண்டும் என்று எண்ணினார்கள். அது பல சந்தர்ப்ப சூழ்நிலையால் சாத்தியமாகவில்லை. ஆனாலும், தன் இலட்சியம் தேவைப்படும் மக்களுக்கு சேர வேண்டும் என்ற மாபெரும் எண்ணத்தில், முதன்முதலாக சட்டக் கல்விக்கென்று ஒரு தனி பல்கலைக்கழகம் வேண்டும் என எண்ணி, இந்திய ஆட்சிப் பணியிலுள்ள மூத்த அதிகாரியை சிறப்பு அலுவலராக நியமித்து, அறிக்கை வாங்கினார்கள். அதை நிறைவேற்ற தனியொரு சட்டமியற்ற முடிவு செய்து, முழுவீச்சில் பணிகளைச் செய்தார்கள். அந்த விதை இன்று ஆல் போல் தழைத்து, சட்டப் பல்கலைக்கழகமாக சிறந்து விளங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து"

என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கு ஏற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, அரியதொரு கல்வியாக இருந்த சட்டக் கல்வி அனைவருக்கும் கிடைக்கும் வகையில், நமது ஒருங்கிணைந்த

நெல்லை மாவட்டத்தின் மண்ணின் மைந்தன் முண்டாசுக் கவி பாரதியின் கனவான "கல்விச் சாலைகள் அமைப்போம்" என்பதை நனவாக்கும்பொருட்டு, அதிக எண்ணிக்கையில், சட்டக் கல்லூரிகளை நிறுவிட முக்கியத்துவம் கொடுத்தார்கள். அந்த வகையில் பார்க்கப் போனால், தமிழகத்திலுள்ள மொத்த சட்டக் கல்லூரிகளில் பெரும்பான்மையான சட்டக் கல்லூரிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாண்புமிகு அம்மா ஆட்சியில் நிறுவப்பட்டன என்பதே உண்மையாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சட்டத் துறை மிகப் பெரிய வளர்ச்சி பெற்று, சட்டத் துறைக்கு வசந்த காலமாக விளங்கியிருக்கிறது. அதற்கு பல உதாரணங்களைக் கூறலாம். அவற்றில் சில; தமிழகத்தில் நடைமுறையில் உள்ள சட்டங்களை ஆய்வு செய்யவும், அதற்குத் தேவையான, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு திருத்தங்கள் கொண்டுவர பரிந்துரை செய்யவும், அரசுக்குத் தேவையான நேரங்களில் தகுந்த ஆலோசனைகளை வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு மாநில சட்ட ஆணையம் முதன்முதலாக 1994 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் காரணமாக, இச்சட்ட ஆணையம் மீண்டும் திருத்தி அமைக்கப்படாமல் இருந்தது. மீண்டும் அம்மாவின் ஆட்சியில் இச்சட்ட ஆணையம் 2014 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட சட்ட ஆணையம் இன்றுவரை சீரும் சிறப்புமாகச், செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற முதுமொழிக்கு ஏற்ப சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று, தற்காலத்திற்கு ஒவ்வாத சட்டங்கள் பலவற்றை நீக்கறவு செய்து புதிய சட்டம் கடந்த அம்மா ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது.

2012 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் பகுதியில் அமைக்கப்பட்ட தேசிய சட்டப் பள்ளி மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு தேசிய சட்டப் பல்கலைக்கழகமாக மாண்புமிகு அண்ணண் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் உருவெடுத்துள்ளது. 2012 ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க 4 பழைய நீதிமன்றக் கட்டடங்கள் புதுப்பிக்கும் பணியும், ரூ.22 கோடியில் திண்டிவனம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் பணியும் தொடங்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டு பெருங்குடியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கான அனைத்துக் கட்டடங்கள் கட்டவும், அனைத்து வசதிகள் ஏற்படுத்தவும் ஆணையிடப்பட்டது.

பிற்பகல் 2–55

குற்றவியல் மற்றும் நடுவர் நீதிமன்றங்களில் வழக்குகள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவர ஏதுவாக, 2015 ஆம் ஆண்டு 22 சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்கள் அமைக்கவும், 10 விரைவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தவும் அறிவிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு காணொளி கலந்துரையாடல்மூலம் நீதிமன்றங்களில் விசாரணைக் கைதிகளை விசாரிக்கும் வசதி 51 நீதிமன்றங்களில் கொண்டுவரப்பட்டது. மேலும், திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கவும் அறிவிக்கப்பட்டது.

2017–2018 ஆம் ஆண்டு விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், 2018–2019 ஆம் ஆண்டு சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகள் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2020 ஆம் ஆண்டு மதுரை சட்டக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டவும், சென்னையில் உள்ள சட்டக் கல்வி இயக்குநரகத்திற்கு ரூ.38 கோடியில் ஒருங்கிணைந்த கட்டடம் கட்டவும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அதன் அடிப்படையில், சட்டக் கல்லூரி அமைக்கப்படாத மாவட்டங்களில் சட்டக் கல்லூரி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 2008–2009 ஆம் ஆண்டு வேலூரிலும், 2022–2023 ஆம் ஆண்டு சிவகங்கையிலும் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன என்பதைத் தவிர, வேறு ஒன்றும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் நடைபெறவில்லை என்றே கூறலாம். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டதுபோல், அனைத்து மாவட்டங்களிலும் சட்டக் கல்லூரிகளைத் தொடங்க முயற்சி

மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படைச் சட்டங்களை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புப் பாடத் திட்டங்களில் சட்டத்தையும் ஒரு முக்கிய பாடமாகவோ அல்லது துணைப் பாடமாகவோ இணைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்களின் பாதுகாப்பிற்குரிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்திய அரசமைப்புச் சட்டம், மத்தியச் சட்டங்கள் உள்ளிட்டவற்றை தமிழில் மொழி பெயர்ப்பதற்காக மாநில ஆட்சி மொழி ஆணையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் பணியில் சற்று தொய்வு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மாவட்ட மற்றும் வட்ட அளவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழ்தான் பயன்படுத்த வேண்டுமென்ற ஆணை இருக்கும் நிலையில், எளிய தமிழில் அனைவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் தமிழில் சட்டப் புத்தகங்கள் இருந்தால் மக்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் பேருதவியாக இருக்கும்.

எனவே, அனைத்துச் சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு மாநில அலுவல் மொழிச் சட்ட ஆணையத்திற்கு அறிவுரைகளை வழங்கவும், ஆணையத்திற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் சட்டக் கல்லூரிகளுக்கான அனுமதியை வழங்கும்போது அந்தச் சட்டக் கல்லூரிகள் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டிருக்கின்றனவா, தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்களா என்பதையெல்லாம் ஆராய்ந்து அனுமதி வழங்குமாறு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதி பல்கலைக்கழகங்கள் சட்டக் கல்வியை மேம்படுத்தி போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் வகையில் செயல்படுகின்றன. இதேபோன்று, அரசு சட்டக் கல்லூரிகளிலும்

கல்வி கற்பிக்கவும், சுயநிதி பல்கலைக்கழகங்களுக்கு இணையாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்கள், முடிந்து விட்டது. (குறுக்கீடு) அதைத்தான் முதலிலேயே சொன்னேன்; அப்படியே கொடுத்துவிடுகிறேன். Print *செய்துகொள்ளுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) இன்னும்* Bill*–க்கே வரவில்லை. அடுத்து, நீதி நிர்வாகம். உயர் நீதிமன்றத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனை நகராட்சி நிர்வாகத் துறையில் பேசியிருக்க வேண்டும். மாண்புமிகு நகராட்சி அமைச்சர்தான் இதுகுறித்து சொல்ல வேண்டும்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. இன்னும் ஒன்றை மட்டும் படித்து விடுகிறேன். அடுத்து நீதி நிர்வாகம். சென்னை உயர் நீதிமன்றத்தில் இருக்கும் ஏழு வாயில்களில், ஆவின் மற்றும்* M.B.A. *வாயில்களிலிருந்து சாலையைக் கடக்க பொது மக்களும், வழக்கறிஞர்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்த இடங்களில் எவ்வித சிரமமுமின்றி சாலையைக் கடக்க ஏதுவாக, மேம்பாலங்கள் கட்டித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரித்து நீதி வழங்கிட தனி நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டு, வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு, நீதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைக்கு தலைமை வகிக்கும் பொறுப்பு இந்திய காவல் பணியில் DGP *அல்லது* ADGP *அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர்* DIG. *இந்த* D.I.G. *பதவி, சிறைத் துறையில் பணிபுரியும் மூத்தவருக்கு பதவி உயர்வு மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடக போன்ற மாநிலங்களில்* IG *அந்தஸ்து வரை சிறைத் துறையில் பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு மூலமாக வழங்கப்படுவதாக அத்துறையில் பணிபுரிபவர்கள் கூறுகிறார்கள். எனவே, தமிழ்நாட்டிலும் சிறைத் துறையில் நீண்ட காலமாகப்*

பணிபுரிபவர்களுக்கு கூடுதலாக ஒரு பதவி உயர்வு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில், IG of Prisons என்ற பதவியை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தப் பேரவையில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறைக்கென மருத்துவமனைகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன. இன்னும் ஒரு நிமிடம். சரியாக 3–00 மணிக்கு பதிலுரை.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இந்த மருத்துவமனையில் சிறைத் துறையில் பணிபுரிபவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அனுமதி இல்லை என்று கூறப்படுவதன் காரணமாக, அவர்கள் அரசு மருத்துவமனைகளை நாடுகின்றனர். அவர்களும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கோரிக்கையை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். இதனை அவைக் குறிப்பில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தையும் தந்துவிடுங்கள். நீங்கள் என்ன சொன்னாலும் நடக்கும்; எழுதிக் கொண்டு வாருங்கள்.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். என்ன சொன்னாலும் நடக்குமா! சந்தோஷம். அரக்கோணம் நகரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் துவங்க கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், இறுதியில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2 வருடம் ஆகியும் துவங்கப்படவில்லை. உடனடியாக நீதிமன்றம் துவங்கிட கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் விவசாயிகளின் நலனையும் மற்றும் தண்ணீர் வீணாவதைத் தடுக்கும் விதமாகவும் கன்னடியன் கால்வாய், வடக்கு, தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுண்ணிக் கால்வாய் ஆகியவற்றிற்கு தடுப்புச் சுவரோடுகூடிய சிமென்ட் தளம் அமைத்துத் தர வேண்டும். (பாபநாசம் முதல் கோபாலசமுத்திரம் வரை)

[முனைவர் இசக்கி சுப்பையா] [2023 ஏப்ரல் 10

பாபநாசம் முதல் கோபாலசமுத்திரம் வரை நெல்மணிகளைக் காத்திட நெல் குடோன் அமைத்துத் தர வேண்டும்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் ஜீவநதியான தாமிரபரணி நதி இருந்தும் அம்பாசமுத்திரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கிட சரியான அளவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தொட்டி அமைத்து, மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்திட வேண்டும்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் ஜீவநதியாக உற்பத்தியாகும் தாமிரபரணி நதியை மாசுபடாமல் பாதுகாத்திட, குடியிருப்புகள், தொழிற்சாலை, மருத்துவமனை வளாகங்களிலிருந்து வரும் கழிவு நீரை பாதாள சாக்கடைத் திட்டத்தின்மூலம் பாபநாசம் முதல் கோபாலசமுத்திரம் வரை சுத்திகரித்து செயல்படுத்திட வேண்டுகிறோம்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக அமைத்திட வேண்டுகிறேன். அரசு நிர்ணயித்துள்ள அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்தும் இன்னும் தலைமை மருத்துவமனையாக அமைத்துத் தரப்படாமல் இருக்கிறது. வெகு விரைவில் தலைமை மருத்துவமனையாக மாற்றி அமைத்துத் தரப்பட வேண்டும். அதனோடு இந்த மருத்துவமனையும் அமைத்துத் தர வேண்டும்.

அம்பாசமுத்திரம் தொகுதி, பாபநாசம் முதல் திருவனந்தபுரம் வரை மலை வழிச் சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மின் மயானம் ஏழு பேரூராட்சிகளுக்கும் மற்றும் அம்பாசமுத்திரம் நகராட்சிக்கும் அமைத்துத் தர வேண்டும்.

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் வீடு இல்லாமல் வறுமையில் வாடும் சுமார் 5,000 ஏழை குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்.

2023 ஏப்ரல் 10] [முனைவர் இசக்கி சுப்பையா]

மதுரா கோட்ஸ் ஆலை நவீனமயமாக்கப்பட்டதன் காரணமாக, வேலையின்றி இருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. பதிலுரை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலுக்குத் தேர்தல் 5 விரல்களை அகலக்காட்டி, அஞ்சு அஞ்சு என்று அயலாரை ஓட ஓட விரட்டி, 5 முறை அரியணையேறிய அஞ்சுகச் செல்வா! (மேசையைத் தட்டும் ஒலி) நூறு ஆண்டு பிறந்த நாள் விழாவை (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுக்கு நல்ல நாளாய் தர இருக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரே! நீங்கள் ஓய்வெடுக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

எதையும் தாங்கும் நெஞ்சமுத்தம்; அலட்டிக் கொள்ளாத ஆழம்; அலை, அலையாய் புரட்சிகர பிடிவாதம்; ஏறி அடிக்கையிலே எதிரியை மிச்சம் வைக்காத போர் குணம்; தனக்கென துரும்பளவும் வாழாத தூய்மை; நான் கடலைப் பற்றிப் பேசவில்லை, நம்முடைய தலைவர் தளபதியை பற்றிப் பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் தளபதி அவர்களே, தமிழக முதல்வரே, உங்களுக்கு என் வணக்கம்.

தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அணைத்திடும். அதைப்போல எந்நிலையிலும் தன்னிலை மாறாது, மக்களுக்காக உழைத்திடும் தளபதியின் தவப் புதல்வா உதயாவே, உங்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அவையின் முன்னவரே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பேரவையின் தலைவரே, சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

நீதிக்குத் தலை வணங்கு. இது மக்களாட்சியின் மகத்துவம், அனைவருக்கும் பொருந்தும் தத்துவம். மக்கள் நலன் காக்கும் அரசின் முதன்மையான செயல்பாடுகளில் ஒன்றாக விரைவான நீதி, சம நீதி என்பது முதன்மையான நோக்கமாகும். அதை அனைத்து மக்களுக்கும் தாமதமின்றி தருவதை உறுதிபூண்டுள்ள அரசுதான், தலைவர் தளபதியின் அரசாகும்.

பெண்கள் வீட்டின் கண்கள், நிதியும், நீதியும் நாட்டின் தூண்கள். குற்றங்கள் நாட்டின் தரித்திரம், அதனைத் தடுத்து சட்டம் படைக்கும் சரித்திரம். அச்சட்டமே மக்களுடைய நம்பிக்கைக்குரிய பாத்திரம். அனைவரும் கடமையைச் செய்ய சட்டம் வேண்டும். மக்களிடத்தில் பகைமையைப் போக்க சட்டம் வேண்டும். நாடு நலம் பெற, வீடு வளம் பெற சட்டம் வேண்டும். மனுநீதி என்பது, சம நீதியாய் இருக்க வேண்டும். வானம் ஒன்றே, நீதி ஒன்றே, அனைவருக்கும் பொதுவான சட்டம். அது நடக்கும் இன்றே. சட்டம் என்பது, கருத்து சுதந்திரத்தைக் காப்பதற்காக; அதன் குரல்வளையை நெறிப்பதற்காக அல்ல. நீதி என்பது, பிறரிடத்திலே ஒழுக்கமாக நடந்து கொள்வது. நேர்மை என்பது, நமக்கு நாமே ஒழுக்கமாக நடந்துகொள்வது. நீதி என்பது, பிறருக்கு நாம் தரும் பரிசு. நேர்மை என்பது, நமக்கு நாமே தரும் பரிசு. சட்டம் ஒரு எலிப்பொறி; உள்ளே செல்வது எளிது, வெளியே வருவது கடினம். எல்லாவற்றிற்கும் ஒரு விலை உண்டு. அதற்கான விலையும் எங்களிடத்திலே உண்டு என்று சொல்கின்றவர்கள், அவர்களுக்குச் சொல்கிறோம், 'அங்குசம் இல்லாத யானையும், கடிவாளம் இல்லாத குதிரையும் அடங்கா' என்பதை அறியாதவர்கள். அவர்களுக்குத் தெரியாது, அக்ரஹாரத்திலே பிறந்தாலும் நாய் வேதம் அறியாது என்பது.

சோறு சாப்பிட்டால் உப்பு போட்டுக்கொள்ளலாம்; உப்பு சாப்பிட்டால் என்ன போட்டுக்கொள்ளலாம்? உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும். தவறு செய்தவன் நீதி முன் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

உயர் நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள் 58 நீதிபதிகளைக் கொண்டு தற்போது சென்னை உயர் நீதிமன்றமும், அதன் மதுரை கிளையும் இயங்கி வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க வகையிலே நம்முடைய உயர் நீதிமன்றத்திலே 14 பெண் நீதிபதிகள் இருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றங்களின் எண்ணிக்கை, சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தம் 1,330 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், சென்னை மாநகரில் 151 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1,179 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துதல். 2022–2023 ஆம் ஆண்டில் 28 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக தொடரும் மற்றும்

2023 ஏப்ரல் 10] [திரு. எஸ். ரகுபதி]

தொடரா செலவினத்துடன்கூடிய மொத்த செலவினம் ரூபாய் 83.28 கோடியும், 1,006 புதிய பதவிகளும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிபதி பதவியில் உள்ள 45 காலிப்பணியிடங்களுக்கும், சிவில் நீதிபதிகள் பதவியில் உள்ள 245 காலிப்பணியிடங்களுக்கும் முறையே ஆட்சேர்ப்புப் பிரிவு, உயர் நீதிமன்றம், சென்னை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நேரடி நியமனம் செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 3–05

நீதிமன்ற மேலாளர்கள். சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய முதன்மை அமர்வு, மதுரைக் கிளை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு உதவுவதற்காக, 41 நீதிமன்ற மேலாளர்கள் (Court Managers) பணியிடங்கள் உதவிப் பதிவாளர் தரத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் உள்ள 21 மற்றும் 22-வது பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் மெய்நிகர் முறையில் நடமாடும் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றன. மேலும், 1 இலட்சத்து 12 ஆயிரத்து 347 போக்குவரத்து விதிமீறல் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அபராதத் தொகையாக 43 கோடியே 89 இலட்சத்து 4 ஆயிரத்து 870 ரூபாய் மின்னணு பரிவர்த்தனை மூலமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதியரசர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, 442.02 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது, 1,036 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 106 நீதிமன்றங்கள் அரசுக் கட்டடங்களிலும், 73 நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்திலே 31 மாற்றுத் தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்றுமுறை தீர்வுகளுக்கு இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன.

பிரச்சினைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கும் ஒரு மாற்றுமுறை தீர்வு அமைப்பாக வழக்குகளை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இன்றைக்கு இயங்கி வருகின்றன.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய மக்கள் அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகளைப் பெறுவதற்கு சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகளை அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகளைப் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடுகளைப் பெறுவதற்கும் உதவுகின்றன.

தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 2022 ஆம் ஆண்டில், 4 இலட்சத்து 61 ஆயிரத்து 472 வழக்குகள் முடிக்கப்பட்டு, 2,946 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரத்து 54 ரூபாய் தீர்வுத் தொகையாக வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை, மதுரை, திருச்சி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னை புழலில் உள்ள மத்திய சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது.

உச்ச நீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழில் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு பெரும் உதவியாக இருக்கிறது.

நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட தனிநபர்களைக் குற்றவாளிகளாக மட்டும் கருதி, அவர்களைப் பாதுகாப்போடு வைத்திருக்கும் இடமாக மட்டும் கருதாமல், அவர்களைச் சீர்திருத்தி, மறுவாழ்வுக்குத் தயார் செய்து அனுப்புகிற மிகச் சிறந்த பணியைச் செய்கின்ற துறைதான் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை ஆகும்.

தவறு செய்கின்றவன் தண்டிக்கப்பட வேண்டியது மட்டுமல்லாமல், அவன் திருத்தப்பட வேண்டியது அவசியம் என்பதை அவனுக்கு உணர்த்தி, அவனுக்கு மறுவாழ்வு தரும் இடமாக மாற்றுகிற இடம்தான் சிறைச்சாலை.

2023 ஏப்ரல் 10] [திரு. எஸ். ரகுபதி]

சட்டம் என்றும் நீதியைக் காக்கும் கருவறை; குற்றங்களை அழிக்கும் தீர்ப்பு; அது சமூகத்தை அமைக்கும் வார்ப்பு; மக்களைக் காக்கும் காப்பு என்ற வகையில், ‘உப்பு தின்னவன் தண்ணீர் குடிப்பான்; தப்பு செய்தவன் கண்ணீர் வடிப்பான்’. குற்றம் செய்தால் எங்கு ஓடினாலும் சட்டம் அவனைத் தேடிவரும் என்ற நிலையை நிலைநாட்டி, இது சட்டவிரோதம் என்று பலவற்றை மக்கள் உணராமல் இருப்பதே விநோதம் என்ற கருத்தை உள்வாங்கி, சட்டம் என்பது ஆற்றின் நீரோட்டம். அதில் மிதவை எதுவாயினும் இல்லை மாற்றோட்டம். மாற்றம் இருப்பின், வேண்டும் போராட்டம். தவறிழைத்தவர் தண்டனை பெறுவதே மக்களின் தேரோட்டம். அதனை சிறப்புற நிறைவேற்றுவதோ, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் உயிரோட்டம் ஆகும்.

சிறைத் துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை, 28–2–2023–ன்படி, 5,491 ஆகும். தமிழகத்திலே, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், 142 சிறைகள் உள்ளன. இவற்றில் அனைத்து சிறைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 24,342 ஆகும்.

சிறைவாசிகளின் நடவடிக்கைகளையும், பார்வையாளர்களையும் கண்காணிக்கும் வகையில், 556 மறைகாணி கேமராக்கள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

பிற்பகல் 3–10

சிறைகளையும், நீதிமன்ற வளாகங்களையும் இணைப்பதன்மூலம் சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், காணொலி கலந்துரையாடல்மூலம் சிறைவாசிகளின் நீதிமன்றக் காவல் நீட்டிக்கப்படுகிறது. தற்போது, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள் 403 நீதிமன்றங்களுடன் காணொலி கலந்துரையாடல் கருவிகள் மூலமாக இன்றைக்கு இணைக்கப்பட்டுள்ளன. கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 2023 வரை 2,72,814 சிறைவாசிகள் காணொலி மூலமாக நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கனரக சலவை இயந்திரங்கள். இந்திய சிறைச்சாலைகளிலே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அங்கேயிருக்கக்கூடிய சிறைவாசிகளின் நலனையும், அவர்களின் சுகாதாரத்தையும் கருத்திலேகொண்டு, சிறைவாசிகள் தாங்கள் பயன்படுத்தும் உடைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரித்திடும்பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் ஆகியவற்றிற்கு ரூ.60 இலட்சம் செலவில் 15 கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. அவை இன்றைக்கு சிறைக் கைதிகளின் நேரத்தை மிச்சப்படுத்துவதோடு, அவர்கள் ஆரோக்கியமான உடைகள் அணிவதற்கு உறுதுணையாக இருக்கின்றன.

சிறை நீதிமன்றங்கள். சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வுகாணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நீதித் துறை நடுவர்கள் சிறை நீதிமன்றங்களுக்கு வருகைபுரிந்து குற்றங்களை ஒப்புக்கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர். சிறை நீதிமன்றங்களின் மூலமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 1,408 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகளிடையே 100 சதவிகித கல்வி அறிவினை கற்பிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும், ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், ஒருங்கிணைந்து பல திட்டங்களைத் தொடங்கி, செயல்படுத்தி வருகின்றன. 2022–2023 ஆம் ஆண்டில் 109 சிறைவாசிகள் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 163 சிறைவாசிகள் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 231 சிறைவாசிகள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 386 சிறைவாசிகள் 8 ஆம் வகுப்பு தேர்வும் எழுதுகின்றனர். 9,844 சிறைவாசிகள் பல்வேறு பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர்.

மேலும், இளங்கலை, முதுகலை, பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின்மூலம் இன்றைக்கு பயின்று வருகின்றனர். 113 சிறைவாசிகள் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் மூலமாக பட்டப் படிப்புகளை இலவசமாகப் பயின்று வருகின்றனர். திருச்சி மத்திய சிறையில் செயல்பட்டுவரும்

2023 ஏப்ரல் 10] [திரு. எஸ். ரகுபதி]

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 176 சிறைவாசிகள் பல்வேறு வகையான தொழிற்கல்விகளை பயின்று வருகிறார்கள்.

உடல் அணிந்த கேமரா (body worn cameras). 9 மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு ரூ.49,98,000/- செலவில், 50 உடல் அணிந்த கேமராக்களும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் தலைமை அலுவலகத்தில் அது தொடர்பான சேவையகம் (server) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்தின் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கு உடல் அணிந்த கேமரா ஒரு சிறந்த சாதனமாகும். ஏனென்று சொன்னால், அதன்மூலமாக இன்றைக்கு சிறைவாசிகள் நடமாட்டத்தை மிக சுலபமாகக் கண்டுக்கொள்வதற்கு அது உதவுகிறது.

மக்களுக்காக, மக்களால் இயற்றப்பட்ட சட்டம், மக்களால் பின்பற்றப்பட வேண்டும். அந்த சட்டத்தின்முன் அனைவரும் சமம். மனிதனுக்குத் தேவை மனசாட்சி! சட்டத்திற்குத் தேவை மற்ற சாட்சி! உன்னுடைய உரிமைக்குப் போராடு! மற்றவர்கள் உரிமைக்கு மதிப்புக் கொடு! என்கின்ற உன்னத இலட்சியங்களோடு, கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்கின்ற குறிக்கோளின் அடிப்படையில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் மாநிலத்தின் சமூக நீதி, மதச்சார்பின்மை, சமத்துவம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்யும் அரசின் கொள்கைகளை நிலைநிறுத்துகிற துறைதான் சட்டத் துறை.

சட்டம் என்பது, காற்றில் பறக்கும் பட்டம் இல்லை; சமூகம் என்னும் வட்டத்தை உருவாக்கும் விட்டம். சட்டம் என்பது, நீதியைக் காக்கும் கருவறை; குற்றங்களைப் புதைக்கும் கல்லறை. எனவே, குற்றம் செய்தவர் எங்கு ஓடினாலும் சட்டம் அவனைத் தேடிவரும். மக்களை ஆள்வதற்கு மட்டும் அல்ல சட்டம். மாக்களை வீழ்த்துவதற்கான திட்டமும் சட்டம்தான். வாழ்வியல் ஒழுங்கு நெறிகளைத் தொகுத்து, குற்றங்களை பல பிரிவுகளாகப் பகுத்து, குற்றங்களுக்கு ஏற்ப தண்டனைகளை வகுத்து, மக்களைக் காப்பதே சட்டம், இதுவே தளபதி அரசின் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

வானம் இல்லை என்றால், மதி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம் இல்லை என்று சொன்னால், நீதி இல்லை. குற்றங்கள் சமூகத்தை சீர்குலைக்கும். சட்டங்கள் அதனை சீர்திருத்தும். தராசிற்கு நியாயம் எல்லாம் தெரியாது. எந்தப் பக்கம் கனமாக இருக்கிறதோ, அந்தப் பக்கம் சாய்ந்து விடும். எனவேதான், நீதி தேவதையின் கண்களை கட்டிவிட்டு கையில் நியாய தராசு தரப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அன்று மையினால் எழுதப்பட்ட சட்டம், இன்று பணம் என்ற காகிதத்தால் உறிஞ்சப்படுவதைத் தடுப்பதுதான்.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5046, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக பதிவு செய்வதை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5452, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டியில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5506, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப் பதிவிற்கான உயர்த்தப்பட்ட 33 சதவீத வழிகாட்டி மதிப்பைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5611, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5877, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6547, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், இருக்கையில் இல்லை.

2023 ஏப்ரல் 10] [*பேரவைத் தலைவர்*]

வெட்டுத் தீர்மானம் எண் 6823, மாண்புமிகு உறுப்பினர் திரு. AK. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு காரமடையைத் தலைமையிடமாகக் கொண்டு சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க அறிவிக்கப்பட்டதைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7429, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 7495, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலையில் செயல்பட்டு வரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.429,47,93,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு உரிய விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலேகொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று

@ 537 முதல் 664 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் IV மற்றும் V ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 665 முதல் 756 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் VI மற்றும் VII ஆக அச்சிடப்பட்டுள்ளன.

பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு உரிய விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். தற்போது நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். தற்போது 7 மாமன்ற உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொள்கின்றார்கள். முதலில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு 20 நிமிடங்களும், மற்ற உறுப்பினர்களுக்கு தலா 10 நிமிடங்களும் வழங்கப்படுகின்றது. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்?" என்ற பாடல் வரிகளுக்கேற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றளவும் உலகத் தமிழர்களின் உள்ளத்தில் மங்காப் புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மன்னாதி மன்னன், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் M.G.R. அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) "இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்கிற வைர வரிகளைக் கூறியதோடு, தானும் அதற்கு இலக்கணமாக வாழ்ந்து மறைந்த, எங்களை வாழ வைத்த தெய்வம், தமிழக மக்களின் இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய தலைவர்கள் அரசியலில் சாதித்து வெற்றிக் கொடி நாட்டியவர்கள். அந்த முப்பெரும் தலைவர்களின் ஆசியோடு எந்தவித பின்புலமும் இல்லாமல் ஒரு தொண்டனும் தலைவனாகலாம் என்ற வகையில் ஒரு தொண்டனாக கழகத்தில் பணியைத் தொடங்கி, இன்று ஓர் இயக்கத்திற்குத் தலைமை தாங்க முடியும் என்கிற புதிய வரலாற்றைப் படைத்திட்ட, இன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், நாளைய முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

தேர்வில் 100/100 மதிப்பெண்ணைப் பெற்ற மாணவனைப்போல, கோவை மாவட்டத்தில் 2021–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 100/100 வெற்றி பெற்ற எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கு நன்றியையும், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தி சாய்ந்த குளிர்தென்றல் வீசுகின்ற இனிய மாலைப்பொழுதில், மணியோசை இல்லாமல் மணியைப் பார்க்காமல், மணித்துளிகளைக் கணக்கிடாமல் எனக்கு நல்வாய்ப்பை வழங்கிய, நடுவராக நாங்கள் பெரிதும் மதிக்கின்ற, எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு 20 நிமிடங்கள் நேரம் ஒதுக்கிவிட்டேனே!*

திரு. கடம்பூர் ராஜூ: *நாடே எதிர்பார்த்த நல்ல தீர்ப்பை வழங்கி, ஹாட்ரிக் வெற்றியை எனக்கு வழங்கிய கோவில்பட்டி தொகுதி மக்களின் பொற்பாதங்களில் நன்றியையும், வெற்றிக்கு உழைத்த கழகத் தொண்டர்கள், நண்பர்கள் மற்றும் பொது மக்களுக்கும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.*

முதலில் எனது தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றைப் பதிய வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு வழிச் சாலைகளில் மிகவும் பிரதானமான நகரமாக கோவில்பட்டி விளங்குகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் நாங்கள் இருந்தாலும், நெல்லை மாவட்டம், விருதுநகர் மாவட்டம் மற்றும் தென்காசி மாவட்ட பகுதிகள் எல்லாம் கோவில்பட்டிக்கு மிக அருகில் இருக்கின்றன. எனவே, அத்தனை மக்களும் கோவில்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைக்கின்றார்கள்.

தீப்பெட்டித் தொழில் பிரதானத் தொழிலாக, விவசாயத்திற்கு மாற்றாக, வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கின்ற, குறிப்பாக ஏழைப் பெண்களுக்கு வாழ்வாதாரத்தை நிர்ணயிக்கின்ற தொழிலாக இருக்கின்றது. தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் அண்ணன் எடப்பாடியார் முதலமைச்சராக இருக்கும்போதுதான் தீப்பெட்டித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டது. G.S.T.

வரியை மத்திய அரசிடம் வலியுறுத்தி 18% அறிவித்த நேரத்தில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அரசு போதிய அழுத்தத்தைக் கொடுத்து, 18%-லிருந்து 12% ஆக வரியைக் குறைத்ததோடு, தீப்பெட்டித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளித்தது. ஆனால், தற்சமயம் சைனாவில் இருந்து வருகின்ற லைட்டர், தீப்பெட்டித் தொழிலுக்கு பெரிய சவாலாக உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கடந்த செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதியன்று கோவில்பட்டியில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு நேரடியாக ஆய்விற்கு வந்தார். வந்த அன்றே அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அன்றைய தினமே மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதினார்கள். அதேபோல் எங்கள் பொதுச் செயலாளர், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் 15-11-2022-ல் புது டில்லியில் நடைபெற்ற தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க மாநாட்டில் என்னையும் கலந்துகொள்ள அனுப்பி, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதத்தையும் கொடுத்தனுப்பினார்கள். அந்தக் கடிதத்திலும் இதை நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால், இன்று வரை அதற்கு எந்த முடிவும் வராமல் இருக்கிறது. தீப்பெட்டித் தொழில் கோவில்பட்டி மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தென் மாவட்டங்களுக்கே வாழ்வாதாரமாக இருக்கிறது. எனவே, மாநில அரசு காலந்தாழ்த்தாமல் உடனடியாக இதற்குத் தடை விதித்து பல்லாயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதை கோரிக்கையாக வைக்கின்றேன்.

பிற்பகல் 5-15

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை சராசரியாக 62 சதவிகிதம்தான் பொழிந்திருக்கிறது. எனவே, நிலத்தடி நீர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விளைச்சலும் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, தூத்துக்குடி மாவட்டத்தை அரசு இந்த ஆண்டு உடனடியாக வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கு முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கோவில்பட்டி

நகராட்சி சந்தைக்கு ஒரு நல்ல தீர்வைச் சொல்லியிருக்கின்றார்கள். நான் சொன்ன அதே இடத்தில் தினசரி மார்க்கெட் தொடர்ந்து நடந்திடவும், புதிய கடைகளை வேறு இடத்திலே கட்ட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தேன். அதைப் பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். குப்பைகளைக் கொட்டுவதற்கு நான் ஏற்கெனவே சொல்லியிருந்த அந்த இடம் உகந்ததாக இருக்கும் என்பதால், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். நேற்றைய முன்தினம் நான் அங்கு சென்று பார்த்த நேரத்தில், குப்பைகள் கொட்டுகின்ற இடம் மேடு, பள்ளமாக இல்லாமல், தனித்தனியாக, நல்ல சமச்சீரான நிலையில் இருக்கின்றது. அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இளையரசனேந்தல் உள்வட்டப் பகுதியில் 12 ஊராட்சிகள் தென்காசி மாவட்டத்தில் இருக்கின்றன. ஆனால், வருவாய்த் துறை, காவல் துறை, கல்வித் துறை என அனைத்துத் துறைகளின் நிர்வாகத்திலும் அந்தப் பகுதிகள் தூத்துக்குடி மாவட்டத்தில் வருகின்றன. உள்ளாட்சியில் மட்டும் அந்தப் பகுதி தென்காசி மாவட்டத்தில் வருகின்ற நேரத்தில் அந்தப் பகுதி மக்களின் நிலைப்பாடு மிகவும் பாதிக்கப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இளையரசனேந்தல் உள்வட்டத்தில் உள்ள 12 ஊராட்சிகளை தூத்துக்குடி மாவட்டத்துடன் இணைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவில்பட்டி தொகுதி, கயத்தாறு பகுதியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்த நேரத்தில், நாட்டுக்கு உழைத்த நல்ல தலைவர்களை, சுதந்திரப் போராட்ட வீரர்களை, நாட்டுக்காக தன்னுயிரைத் தந்த தியாக சீலர்களை, மொழி காத்த மொழிப்போர் தியாகிகளை, நம் நாட்டின் பாரம்பரியம் காத்த பாராண்ட மன்னர்கள் என நாடு போற்றும் அனைத்து நல்லவர்களுக்கும் மணிமண்டபங்கள், சிலைகள், அரசு விழாக்கள், நினைவுச் சின்னங்கள் அதிக அளவில் அமைத்துப் பெருமை சேர்த்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், அண்ணன் எடப்பாடியாரின்

தலைமையிலான நல்லரசும்தான் என்பதைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் மணிமண்டபம். மனிதகுலம் முதன்முதலில் உச்சரிக்கும் சொல்லே அம்மா! அம்மா! மானத்தில் மானாய், வீரத்திலே புலியாய், ஈகையிலே கருணை வடிவமாய், தேசியமும் தெய்வீகமும் தனது கொள்கையாய், கொள்கையில் உறுதியாய், தன்னம்பிக்கையில் தனக்கு நிகராய், அன்பில், ஆற்றலில், ஆளுமையில், பெண்ணினத்தின் பேராண்மையாய், “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்கிற கொள்கைப்படி வாழ்ந்து, மறைந்த இதய தெய்வம் எங்கள் அம்மா அவர்களுக்கு நினைவு மண்டபம்; (மேசையைத் தட்டும் ஒலி) 16 ஆண்டுக் காலம் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, ஏழை எளிய மக்களின் இதய தெய்வமாக வாழ்ந்து மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பீனிக்ஸ் பறவை வடிவிலான மிகப் பிரமாண்டமான அளவில் 86 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நினைவு மண்டபத்தை அமைத்து, அம்மாவின் புகழுக்கு புகழ் அஞ்சலி செலுத்தியவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற மணிமண்டபங்களைப் பற்றி இந்தப் பேரவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். கயத்தாறில் தூக்குக் கயிற்றை முத்தமிட்டு வீர மரணமடைந்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கு சென்னையில் மணிமண்டபம், சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு கடலூரில் மணிமண்டபம், தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சர் உத்தமர் ஓமந்தூரார் அவர்களுக்கு மணிமண்டபம், விவசாயப் பெருந்தலைவர் ஐயா நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு கோவை, வையம்பாளையத்தில் மணிமண்டபம், முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் பென்னிகுயிக் அவர்களுக்கு மணிமண்டபம், தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் பாரத மாதாவுக்கு ஆலயத்துடன் ஒரு மணிமண்டபம், இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள்கூட, நாங்கள் இதற்காக கோரிக்கை வைத்தோம் என்று சொன்னார்கள். அவர்கள் மட்டும் கோரிக்கை வைக்கவில்லை; திரு. குமரி அனந்தன் போன்றவர்களெல்லாம் அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து, அந்த மணிமண்டபம் அமைத்ததற்கு நேரடியாக தங்களது

பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். தற்போது அந்த மணிமண்டபம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம்; தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் நல்லப்பசுவாமி அவர்களுக்கு நினைவுச் சின்னம்; வீரத்தாய் குயிலிக்கு சிவகங்கை மாவட்டத்தில் நினைவுச் சின்னம்; முத்தரையர் இனத்தின் பேரரசராக இருந்த பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கும், நீதிக் கட்சியின் வைரத்தூணாக இருந்த வெள்ளுடை வேந்தருக்கும், கலை உலகில் தனக்கென தனி இடம் பிடித்த தென்னிந்தியாவின் முதல் சூப்பர் ஸ்டார் என்று போற்றப்பட்ட திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களுக்கும், ஆக இம்மூன்று பேருக்கும் ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைக்கப்பட்டது என்று சொன்னால் அது திருச்சியில்தான். கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக அந்தப் பணிகள் நிறைவேறாமல் இருக்கின்றன. விரைவில் அந்தப் பணிகளை நிறைவு செய்து, திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு இணையாக அந்தக் காலத்தில் முதன்முதலில் திரைப்படத் துறையில் மிளிர்ந்தவர்கள் திரு. பி.யு. சின்னப்பா அவர்கள். புதுக்கோட்டை மாவட்ட மக்களும், அந்த மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற அன்புச் சகோதரர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களும் தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, திரு. பி.யு. சின்னப்பா அவர்களுக்கு புதுக்கோட்டையில் ஒரு மணிமண்டபத்தைக் கட்ட வேண்டும்.

பிற்பகல் 5–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்திய பெருமை, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனதில், மக்கள் திலகமாய், ரசிகர்களுக்கு புரட்சி நடிகராய் விளங்கிய எம்.ஜி.ஆர். வெறும் நடிகர் மட்டுமல்ல; இளைய சமுதாயத்தை செதுக்கிய சிற்பி அவர். எம்.ஜி.ஆர். நடித்த படங்களெல்லாம் வெறும் படங்கள் அல்ல; பாடங்கள்; அவர் படத்தில் பாடிய பாடல்களெல்லாம் பாடல்கள் அல்ல; வாழ்வியல் தத்துவங்கள்; அவர் படத்தில் பேசிய

வசனங்களெல்லாம் வார்த்தைகள் அல்ல; போதனைகள்; அவர் நடித்த பாத்திரங்களெல்லாம் நடிப்பு மட்டுமல்ல; ஒவ்வொரு தனி மனிதனின் ஆளுமை; அவரின் படங்களெல்லாம் வெளியிடப்பட்ட தியேட்டர்கள்தான் எங்களை உருவாக்கிய பயிற்சிப் பட்டறைகள்; அரசியலில் எவரும் அடைய முடியாத வெற்றிகளைப் பெற்ற மன்னாதி மன்னன், அவர்தான் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி)

அவரின் நூற்றாண்டு பிறந்த நாளை, அவர் கண்ட இயக்கம் ஆட்சியில் இருந்தால்தான் சிறப்பிக்க முடியும் என்று புரட்சித் தலைவரின் வாரிசான மாண்புமிகு அம்மா அவர்கள், 2016 தேர்தல் பிரச்சாரத்தில் தமிழகம் முழுவதும் எடுத்துரைத்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழகம் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நினைவாக்கி ஓராண்டு முழுவதும் சீரோடும், சிறப்போடும் வெறும் விழாக்களாக மட்டுமல்லாமல், மக்களின் நலன் காக்கின்ற நலத் திட்ட உதவிகளாக ரூபாய் 5,380 கோடியிலும், கொடை வள்ளல் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் புகழைப் போற்றும்வண்ணம் 5,560 கோடி ரூபாய் திட்டங்களையும் அறிவித்து, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தும் மிகப் பிரம்மாண்டமாக விழா நடத்தி, பெருமை சேர்த்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உலகத் தமிழர்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதற்கு இலக்கணமாக மலேசியா மற்றும் மொரிசியஸ் நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கத்தினர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட விரும்பினார்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அந்தத் துறையின் சார்பில் என்னை அங்கே அனுப்பி, அந்த 2 நாடுகளிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு வளைவை சென்னை மெரினா கடற்கரை ராஜாஜி சாலையில் அமைத்து பெருமை சேர்த்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் நாளை அரசு விழாவாக அறிவித்து, பெருமை சேர்த்தவரும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். உத்தமர் ஓமந்தூரார் அவர்களின் பிறந்த நாள்,

ராமசாமி படையாச்சியார் அவர்களின் பிறந்த நாள், மாமன்னர் பூலித்தேவர் அவர்களின் பிறந்த நாள், சீறாப்புராணம் இயற்றிய உமறுப்புலவர் அவர்களின் பிறந்த நாள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள், தூத்துக்குடி மக்களின் தந்தை என போற்றப்படுகின்ற Cruz Fernandez *அவர்களின் பிறந்த நாள், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் பிறந்த நாள், மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள், வீரன் சுந்தரலிங்கனார் அவர்களின் பிறந்த நாள் மற்றும் கொடி காத்த திருப்பூர் குமரன், தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார், மாவீரன் அழகு முத்துக்கோன், கர்னல் பென்னிகுயிக், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு, ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் ஆகியோரின் பிறந்த நாட்களையும் அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கு அரசாணை வெளியிட்டு சிறப்புச் சேர்த்தவர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, ஒரு வரலாற்று நிகழ்வாக, நான்கே ஆண்டுகளில் இதே சட்டப்பேரவையில் 5 பெருந்தலைவர்களின் படங்களைத் திறந்து வைத்து, பெருமை சேர்த்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவப்படம், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் திருவுருவப்படம், உத்தமர் ஓமந்தூரார் அவர்களின் திருவுருவப்படம், மரியாதைக்குரிய டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவப்படம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்ட ராமசாமி படையாச்சி அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்து சட்டமன்ற வரலாற்றிலேயே புதிய வரலாற்றைப் படைத்த சாதனையாளர் அண்ணன் எடப்பாடியார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற அறிவிப்பை 18–7–2019–ல் கடந்த ஆட்சியில் சட்டப் பேரவையில் அறிவித்தேன். அதில் நிதி முகமையை ஏற்படுத்த நிதித் துறைச் செயலாளர் அவர்களின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பார்த்தேன். அதை விரைந்து

நிறைவேற்றி பத்திரிகையாளர் நல வாரியம் செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், தலைநகர் புதுடில்லியில் தமிழ் பத்திரிகையாளர்கள் எல்லாம், தங்குவதற்கு இடமில்லாமல், செய்திகள் அனுப்புவதற்கு வசதி, வாய்ப்புகள் இல்லாமல் இருந்த நிலையை அண்ணன் அவர்களிடம் சொன்ன நேரத்தில் 8–1–2018 அன்று அரசாணை வெளியிட்டு, அவர்களுக்கெல்லாம் அடையாள அட்டை மற்றும் accreditation card கொடுத்ததோடு மட்டுமல்லாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் பேசியதையெல்லாம் குறித்து வைத்துக்கொள்ளுங்கள், அமைச்சர்.

திரு. கடம்பூர் ராஜூ: நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக்கில்தானே சொல்கிறார்கள் எல்லாவற்றையும்.

திரு. கடம்பூர் ராஜூ: நாங்களும் அந்த அறிவிப்பை வெளியிட்டோம். நீங்களும் பத்திரிகையாளர் நல வாரியத்திற்காக அந்த அறிவிப்பை வெளியிட்டீர்கள். அதை நான் மறுபடியும் அண்ணன் பேசும்போது சொல்கின்றேன்.

ஆக, பழைய தமிழ்நாடு இல்லத்தில் பத்திரிகையாளர்களுக்கென்று தலைநகர் புதுடில்லியில் முதன்முதலாக அனைத்து வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட அறை வசதியை ஏற்பாடு செய்தது அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு என்பதைப் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தலைமைச் செயலகத்தில், சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத்தின் செயல்பாடுகளை உடனுக்குடன் பத்திரிகைக்கு அனுப்புவதற்கு வசதியாக அனைத்து வசதிகளுடன் பத்திரிகையாளர் அறைகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பிற்பகல் 5–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சினிமா துறை. சினிமா என்பது உலகளவில் இன்றளவும் சமூகத்தில் பெரும்

தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மகத்தான சக்தி படைத்தது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. சினிமாவைப் பற்றி ஆண்பாவம் என்ற படத்தில் ஒரு பாடல் வரும்.

“இந்திரன் வந்ததும், சந்திரன் வந்ததும் இந்த சினிமாதான்

இங்கே எம்.ஜி.ஆர். வந்ததும், என்.டி.ஆர். வந்ததும் இந்த சினிமாதான்

கலை வந்ததும் இங்கேதான்,

காதல் சொன்னதும் இங்கேதான்,

கட்சி வளர்த்ததும், ஆட்சி பிடித்ததும் இந்த சினிமாதான்” (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திராவிட பாரம்பரியமான நம் இரண்டு கட்சிகளுக்குமே பொருந்தும்.

அம்மாவின் ஆட்சியிலே சினிமா துறைக்கு சிறப்பு சேர்க்கும்வண்ணம், இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழாவை, வேறு எந்த மாநிலமும் கொண்டாடுவதற்கு முன்பாக, தமிழ் மண்ணில், தலைநகர் சென்னையிலுள்ள நேரு ஸ்டேடியத்தில் இந்தியாவின் முன்னணி நட்சத்திரங்கள் எல்லாம் பங்குபெறும் வகையில், 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 முதல் 24 ஆம் தேதி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தி, மேதகு குடியரசுத் தலைவரையும் அழைத்து வந்து, சிறப்பு சேர்த்தவர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். அதற்கு ரூபாய் 10 கோடி நிதியும் வழங்கி பெருமை சேர்த்தார்கள்.

சர்வதேச திரைப்பட விழா, ஆண்டுதோறும் தலைநகர் சென்னையில் ஒரு வாரம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதை மிகச் சிறப்பாக நடத்திடும் வகையில், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு வழங்கப்பட்டு வந்த ரூபாய் 25 இலட்சத்தை அம்மா அவர்கள் ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி வழங்கினார்கள். தொடர்ந்து அண்ணன் எடப்பாடியார் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, அதை ரூபாய் 75 இலட்சமாக வழங்கி, சினிமா துறையின் வளர்ச்சிக்கு உதவிய முதல்வராக அண்ணன் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை, இந்த அரசு ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கிறேன்.

மேலும், NFDCமூலம் ஆண்டுதோறும் கோவாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் பங்குபெறும் தமிழ் சினிமாவிற்கு ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சத்தை தமிழக அரசின் வரலாற்றிலேயே முதன்முதலாக வழங்கி பெருமை சேர்த்தவர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அதேபோன்று, 23 சினிமா தொழிலாளர்கள் சங்கங்களை உள்ளடக்கிய FEFSI-யில், சுமார் 25,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். கொரோனா ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டு, வறுமையில் வாடிய நேரத்தில், அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் வழங்கியதோடு, ரூபாய் 3,000/-ஐ 3 முறை வழங்கி அவர்களின் துயர் துடைத்த முதல்வர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள பையனூரில் FEFSI தொழிலாளர்கள் மூலமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரில் கட்டப்பட்டுள்ள சினிமா படப்பிடிப்பு தளத்தை தன் பொற்கரங்களால் திறந்து வைத்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் கூடுதலாக ஒரு படப்பிடிப்பு தளம் கட்டுவதற்கு அரசின்மூலம் ரூபாய் 5 கோடியை வாரி வழங்கியவர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மேலும், FEFSI தொழிலாளர்களுக்குச் சொந்த வீடு கட்டுவதற்கு முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளுக்கு அனுமதியும், அரசாணையும் வழங்கி சிறப்பு சேர்த்த முதல்வர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

கலை உலகில், சினிமாத் துறையில் உயர்ந்த நிலையில் மகுடம் சூடிய நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு, சென்னை அடையாறு பகுதியில் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபம் கட்டப்படும் என்கிற மகத்தான அறிவிப்பை அறிவித்த அம்மா அவர்களின் கனவை நனவாக்கி, 1-10-2017-ல் திறந்து வைத்து பெருமை சேர்த்தவர், பெருமைக்குரிய முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

சினிமா துறையின் வரலாற்றில் முதன்முறையாக தமிழக அரசின் சார்பாக குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் வண்ணமாக, ஒரே நாளில் 149 படங்களுக்கு தலா ரூபாய் 7 இலட்சம் என 10 கோடியே 43 இலட்சம் ரூபாயை தன்னுடைய பொற்கரங்களால் வாரி வழங்கி பெருமை சேர்த்தவர் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. கடம்பூர் ராஜு] [2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, பத்திரப் பதிவுத் துறை. கிராமப்புற ஏழை, எளிய மக்கள் அவசரத் தேவைக்காக திருமணம், மருத்துவம் உள்ளிட்ட அவசரச் செலவுகளுக்காக நில விற்பனைக்கு சார்-பதிவாளர் அலுவலகங்களை அணுகுகிறார்கள். எங்கள் பகுதிகளில் விளைநிலங்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்றது. அங்கே, 30 சென்ட், 50 சென்ட், 1 ஏக்கர் அளவிலான நிலம் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் விற்பனைப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இயலாத சூழ்நிலை உள்ளது. அங்கீகாரமில்லாத நிலங்கள் என வகைப்படுத்தப்பட்டு, சாதாரண மக்கள் அலைக்கழிக்கப்படுவதை முறைப்படுத்தி, கிராமப்புறத்திற்கென்று ஒரு புதிய நடைமுறையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் 575 பத்திரப் பதிவு அலுவலகங்கள் இருப்பதாக அறிகிறேன். 50 சதவீதத்திற்கும் அதிகமான துணைப் பதிவாளர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும், அப்பணியிடத்தில் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்கள் அப்பணியை செய்து வருவதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பத்திரப் பதிவில் சுணக்கமும், தேக்கமும் ஏற்படாமல் இருக்க, துணைப் பதிவாளர் பணியிடங்களை அரசு விரைந்து, நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சார்-பதிவாளர் அலுவலகங்களில் செயல்படுகின்ற server-ன் வேகம் மிகவும் குறைவாகவும், குறிப்பிட்ட நேரத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றனர். நல்ல நாட்கள், திருமண நாட்களில், முகூர்த்த நாட்களில் பதிவுகள் அதிகம் வருகின்ற நேரத்தில், குறிப்பாக, நல்ல நேரம் பார்த்து திருமணத்தைப் பதிவு செய்ய மணமக்கள் வருகிறார்கள். ஆனால், அவர்கள் எண்ணம்கூட ஈடேற இயலாத நிலை உள்ளது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்த servers-ஐ update செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சம்பிரதாயப்படி அவர்கள் நேரத்தைப் பார்த்து முடிவு செய்து வருகிறார்கள். அவர்களே எங்களைப் போன்றோரிடம் நேரடியாக இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, 10.30 முதல் 12.00 மணி வரை முகூர்த்த நேரம் என்று பதிவு செய்வதற்காக அங்கு செல்கிறார்கள். Server update இல்லாததால், 12.00

மணியைத் தாண்டியவுடன், இராகுகாலம் ஆரம்பித்துவிடுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. மூர்த்தி அவர்கள், மணமக்கள் வாழ்விலே இராகுகாலம், எமகண்டம் ஆகியவை குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நல்ல நேரத்தில் ஒரு பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) நல்ல நேரத்தில் ஒரு பதிலை வாங்கிக்கொள்ளட்டும்.

திரு. கடம்பூர் ராஜூ: முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா முழு படம் என்றைக்குமே உடனடியாக வெளிவருவதில்லை. முதலில் trailer வெளிவரும். அது கவர்ச்சிகரமாகவும் மக்களைக் கவரும் வண்ணமாகவும் மிக்க எதிர்பார்ப்பையும் உள்ளடக்கியதாக இருக்கும். மக்கள் மிக ஆவலோடு ஆசையோடு அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு மிகமிக விருப்பத்தோடு செல்வார்கள். அவர்கள் trailer-ப் பார்த்துவிட்டு படத்தைப் பார்ப்பதற்குச் செல்வார்கள். குறிப்பிட்ட படம் மக்களின் எதிர்பார்ப்பை ஏமாற்றினால், அது தோல்விப் படமாக அமையும். படம் பார்த்த மக்களோ வருத்தத்தோடும், ஏமாற்றத்தோடும் வெளியே வருவார்கள். அந்த trailerதான் திமுக.-வின் தேர்தல் அறிக்கை. மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யாத திரைப்படம்தான் திமுக.-வின் ஆட்சி என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல, (குறுக்கீடு) அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது ஒரு தியேட்டர், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு 20 நிமிடங்கள் time கொடுத்தேன். உரையை முடியுங்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: முடித்து விடுகிறேன். சமீபத்திலே நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். சமீபத்தில் இரண்டு திரைப்படங்கள் வெளியாகின. அதாவது, முக்கியமான முன்னணி நட்சத்திரங்கள் பெரிய பேனர் உள்ள படங்களெல்லாம் வரும்போது ரசிகர்களும், பொதுமக்களும் மிக ஆர்வமுடன் இருப்பார்கள். இப்போது வந்த துணிவு, வாரிசு ஆகிய திரைப்படங்களுக்கு ஏற்கெனவே online-ல் முன்பதிவு செய்து எல்லாம் ticket-ஐயும் வாங்கிவிட்டார்கள்.

அதிகாலை 4-00 மணிக்கு அந்தப் படம் திரையிடப்படுமென்ற ஆர்வத்தில் theatre-க்கு மக்கள் சென்றார்கள். திடீரென்று அரசின் மூலமாக 4-00 மணி காட்சி கிடையாது என்று சொன்னவுடன், தமிழகம் முழுவதும் theatre-களெல்லாம் தாக்கப்பட்டன. மக்களும் வன்முறையில் இறங்கினார்கள். பலரும் பல்வேறு பாதிப்புக்கு ஆளானார்கள். இப்படிப்பட்ட படங்கள் வெளியாகும்போது தான் இத்தகைய நிலைமை ஏற்படுகின்றது. இப்போது அண்ணன் திரு. அன்பழகன் அவர்கள் தியேட்டர் வைத்திருக்கிறார்கள். உங்கள் அண்ணன் திரு. ஐட்ரீம் மூர்த்தி எல்லாம் தியேட்டர் வைத்திருக்கிறார்கள். ஆக, அவர்களெல்லாம் நடைமுறையில் இந்த சிக்கலையெல்லாம் அறிவித்திருப்பார்கள். நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலை இல்லாமல் எதிர்காலத்தில் அதை முறைப்படுத்தி எந்தப் படங்கள் வெளியிட்டாலும் அந்தப் படங்களில் எந்தெந்தக் காட்சிகளுக்கு அனுமதி என்பதை முன்பாக அறிவிக்க வேண்டுமென்பதைத்தான் நான் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் தலைமையில் கழகம் விறுவிறுப்போடு மக்கள் பணியில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கடந்த கால வரலாற்றையும் நிகழ்கால நிகழ்வுகளையும் எதிர்கால எதிர்பார்ப்புகளையும் அறிந்து நாளைய தமிழகத்தைத் தீர்மானிக்கும் சக்திதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் மக்கள் இயக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அகிலமே போற்றும் பொன்னாள்; அது ஏழையெளியவர்களின் வாழ்வில் திருநாள் அது விரைவில் வரப்போகிறது எடப்பாடியார் ஆட்சியின் நன்னாள் என்று கூறி, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் பேசுகிறபோது, சர்வதேச திரைப்பட விழாவிற்கு அவர்கள் நிதி ஒதுக்கியதாகச் சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னையிலே

கடந்த 2022 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவிற்கு 75 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கும் அவர்கள் வழங்கியதுபோலவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டு, வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியும் அவர்களுக்குப்போய்ச் சேர்ந்தது. அதோடு, புதிய திரைப்படங்களை வெளியிடுகிறபோது, புதிதாக சமீபத்திலே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வந்ததாகக் குறிப்பிட்டார்கள். கடைசிவரை அவர்கள் விண்ணப்பிப்பதில்லை. படம் வெளியிடுவதைப் பற்றி எங்களுக்கும் அவர்கள் தகவல் தெரிவிப்பதில்லை. இறுதியிலே தெரிய வருகிறது. இறுதியிலே வந்தவுடன் முடிந்த அளவு வேகமாக அதற்கு அனுமதி தருகிறோம். அதற்குப் பிறகு திரைப்படங்களை வெளியிடும்போது, திரையரங்க உரிமையாளர்களிடத்திலே, எதிர்காலத்திலே அதுபோன்ற நிகழ்வுகள் வராத விதத்திலே நிச்சயமாக அறிவுறுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் சொல்கிறபோது, நல்ல நேரங்களிலே பத்திரப் பதிவு செய்ய முடியவில்லை, காலதாமதம் ஆகிறதென்று சொன்னார். இப்போது பத்திரப் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை 34 இலட்சத்திற்கும் மேலாக அதிகரித்துவிட்டது. இப்போது STAR 2.0 Project-ல் இருக்கக்கூடியதை இந்த ஆண்டு STAR 3.0 Project ஆக உயர்த்தவிருக்கிறோம். அது நடைமுறைக்கு வருகிறபோது, இம்மாதிரியான தடங்கல் நிச்சயமாக ஏற்படாது. நல்ல நேரத்திலேயே திருமணப் பதிவைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

பிற்பகல் 5–35

***திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிகுந்த அவையில் என்னை 2006-ல்

சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராகவும் ஆக்கி அழகுபார்த்த, நம் கண்களை விட்டு மறைந்தாலும், நம் நெஞ்சமெல்லாம் உயிரோடு கலந்திருக்கும் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) So long as you do not achieve social liberty, whatever freedom is provided by the law is of no avail to you. சமூக நீதியை அடையாத வரைக்கும் சட்டபூர்வமாக எவ்வளவு சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தாலும் அவற்றால் உனக்கு எந்தப் பலனும் இல்லை என்ற டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிந்தனைக்கேற்ப, சமூக நீதிக்கான போராட்டம் என்பது, ஒரு மாநிலத்திற்கான பிரச்சினையோ அல்லது சில மாநிலங்களுக்கான பிரச்சினையோ அல்ல. அனைத்து மாநிலங்களுக்கான பிரச்சினை என எடுத்துரைத்து, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் சமூக நீதியை நிலைநாட்ட அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பை நிறுவி, குரல் கொடுத்துவரும் திராவிட நாயகர், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை சட்டமன்றத்தில் 2-வது முறையாக அமர வைத்து அழகு பார்த்த அன்பு தளபதியார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சிரம்தாழ்ந்த, அன்பான வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பாராளுமன்றத்தின் சிம்மக் குரலே, பெண்ணியத்தின் சிம்ம முகமே, தந்தை பெரியாரின் சமூக நீதி பெண்ணியமே, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அக்கா கனிமொழி அவர்களுக்கு என்னுடைய அன்பான வணக்கம்.

தளபதியின் படைத் தளபதியே, சேப்பாக்கத்திற்கு மட்டுமல்ல நீ, தமிழகத்திற்கும் நீ செல்லபிள்ளை, சமூக மேம்பாட்டிற்குப் பயன்படும் வகையில் மாற்று சக்தி விளையாட்டிற்கு உண்டு என்ற தனது கூற்றின்படி, விளையாட்டுத் துறையில் வெற்றி என்றால், அது தமிழ்நாட்டில் இருந்துதான் வர வேண்டும் என்று, தமிழ்நாட்டின் இலட்சிய பாதையில் பயணிக்கும், கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சருமான அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அன்பான வணக்கம்.

மாண்புமிகு அவை முன்னவர் உள்ளிட்ட மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், எங்களுடைய சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மரியாதைக்குரிய அண்ணன் திரு. கேஆர். பெரியகருப்பன்

அவர்கள் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழகத்தினுடைய ஒன்றியக் கழக, பேரூர் கழக, நகரக் கழக மற்றும் அணியினுடைய அமைப்பாளர்களுக்கும் மற்றும் கிளைக் கழகங்களினுடைய செயலாளர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும், சிவகங்கை மாவட்ட மக்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய நிதிநிலையைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவேண்டுமென்றால், 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்தில், சமூக நீதி நாயகர், திராவிட நாயகர், அன்பு தளபதியார் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த நேரத்தில், மாநிலத்தின் சொந்த வருவாய் 8 சதவிகிதம். அதன் பிறகு, தொடர் வீழ்ச்சியாலும், நிருவாகச் சீர்கேட்டாலும் 5.58 சதவிகிதமாக வீழ்ச்சியைக் கண்டது. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறை என்பது, ரூ.62,000 கோடியாக இருந்தது. எங்களுடைய திராவிட நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அன்பு தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிருவாகத் திறமையாலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நிதி மேலாண்மையாலும், வருவாய் பற்றாக்குறை ரூ.32,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் சொந்த வருவாயில் 5.58 சதவிகிதமாக இருந்தது, இப்போது 6.11 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

மாநிலத்தின் இந்த நிதிநிலை மேம்பாட்டிற்கு வணிக வரி மற்றும் பத்திரப் பதிவு துறை முக்கிய பங்காற்றுகிறது என்று சொன்னால், அது மிகையாகாது. மாநிலத்திற்குச் சொந்த வருவாய் ஈட்டித் தரும் மூன்று துறைகள்-வணிக வரி மூலமாக GST வருவாய் 73 சதவிகிதமும்; முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவு மூலமாக 14 சதவிகிதமும், கலால் வரி மூலமாக 6.5 சதவிகிதமும் மாநிலத்திற்கு வருவாய் ஈட்டித் தருகின்றன.

வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்டதனால், ஒருவர் நிலம் வாங்கும்போது சொத்து

மதிப்பில் stamp duty 7 சதவிகிதமும், பதிவுக் கட்டணம் 4 சதவிகிதமும் செலுத்த வேண்டிய நிலை இருந்தது. ஆனால், இன்று ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில், பதிவுக் கட்டணம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பத்திரப் பதிவுத் துறையில் 4 வகையான பரிமாற்றங்கள் உண்டு. (1) விற்பனை (Sale)–சொத்து வாங்குவது, விற்பது; (2) தீர்வு (Settlement)–சொந்தக் குடும்ப சொத்து பரிமாற்றம் மற்றும் குடும்பம் அல்லாத தீர்வு (non–family settlement); (3) தானம் (Gift); (4) பரிமாற்றம் (Exchange)–இரண்டு நெருக்கமான நபர்களுக்கு இடையேயான சொத்து பரிமாற்றம் என அனைத்து வகையான நில பரிமாற்றத்திற்கும் stamp duty 7 சதவிகிதம், பதிவுக் கட்டணம் 4 சதவிகிதமாக இருந்தது இன்றைக்கு 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கட்டுமானத் தொழில் வளர்ச்சியடைந்து அரசுக்கு ரூ.2,000 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என்பதை இங்கே நான் பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இத்துறையின் அடுத்த கட்ட வளர்ச்சியின் முன்னெடுப்பாக நான் பார்ப்பது, சார்–பதிவாளர் அலுவலகங்களில் துறையின் அனைத்து சேவைகளும் இணையமயமாக்கப்பட்டுள்ளன (online). மக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளை விரைந்து அளிப்பதற்கு இது உதவியாக இருக்கும். இம்முயற்சியால் அரசு சேவையில் வெளிப்படைத் தன்மை (Transparency) இருக்கும்; இது பொறுப்புடைமையை (Accountability) உருவாக்கும். வில்லங்கச் சான்று, கட்டட மதிப்பு கணக்கீடு செய்தல், முத்திரைத்தீர்வை சரிபார்த்தல் என அனைத்துத் தகவல்களும், சேவைகளும் மின்மயமாக்கப்பட்டது மிக முக்கியமான முன்னெடுப்பாகும். இதனால், பதிவுத் துறையில் இடைத்தரகர்களின் ஆதிக்கம் நீக்கப்பட்டு, மக்களின் நேரமும், நிதியும் சேமிக்கப்படும்.

பிற்பகல் 5–40

அடுத்ததாக, பதிவுத் துறையில் பின்பற்றப்படும் டோக்கன் முறை, மற்றொரு மக்கள் நலன் சார்ந்த முயற்சியாகும். ஒவ்வொரு பத்திரப் பதிவு அலுவலகத்திலும் பத்திரம் பதிய 100 டோக்கன்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் மக்களுக்கு எப்பொழுது அவர்களின் நிலம் பதியப்படும் என முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதால், அவர்களின் நேரமும், அச்சமும், இடைத்தரகர்கள் உள்ளீடும் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10] [திருமதி ஆ. தமிழரசி]

திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாக நான் அடுத்து பார்ப்பது, தரமான நிதி மேலாண்மை நடவடிக்கையை மேற்கொண்டு வரும் அதேசமயம், சமூக நீதியோடுகூடிய வளர்ச்சியை முன்னெடுக்கும் திட்டங்களான, பெண்களுக்கு மாதம் ரூ.1,000/– வழங்குகின்ற புதுமைப்பெண் திட்டம், தொழில் கட்டமைப்பு என மாநில வளர்ச்சியை முன்னெடுக்கும் மற்றொரு பரிமாணமாகும். மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரிதான் எங்களுடைய திராவிட மாடல் அரசு.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாக அடுத்து நான் சொல்ல வருவது, ஒரு பக்கம் 15–வது நிதிக் குழு பரிந்துரைத்த அளவைவிடக் குறைவாக கடன் வாங்கியும், நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மைச் சட்டம், 2003–ன்படி, Twin deficit *என சொல்லக்கூடிய* Revenue deficit *(வருவாய்ப் பற்றாக்குறை) பூஜ்ஜியமாகவும்,* Fiscal deficit *(நிதிப் பற்றாக்குறை) 3 சதவிகிதத்திற்குள்ளும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின்படிதான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போது தன்னுடைய பணிகளைச் செய்துகொண்டு வருகிறார்கள்.*

அதேபோல், One Trillion Dollar Economy*–தமிழ்நாட்டை வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கோடு மாநிலத்தின் பல்வேறு முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் ஐக்கிய அமீரகத்திற்குச் சென்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதலீட்டுத் திட்டங்களை மேற்கொண்டார்கள். தைவான் காலணி தயாரிப்பு நிறுவனரான டி ஒய் சாங் கடந்த நாட்களில் சென்னை வந்தபோது, சென்னையில் தொழில் தொடங்க ஆர்வமாக உள்ளார் என்று தெரிந்தவுடன் உடனடியாக அன்று மாலையே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் இலட்சியக் கனவை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆசையெல்லாம் என்னுடைய மானாமதுரை தொகுதியில் ஒரு காலணி தயாரிப்பு நிறுவனத்தை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொற்காலம் என்பது நமக்கு முன்னே; பின்னே அல்ல. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கள்ளர் சீர்மரபினர் நலப் பள்ளிகளை பள்ளிக் கல்வித் துறையோடு இணைத்தது அனைத்துத் தரப்பு மக்களிடமும் ஒரு பேசு பொருளாக இருந்து வருகிறது. இச்சமூகத்தினரிடையே சாதிய தீண்டாமை, சமூக ஒதுக்கல், பாகுபாடு காரணமாக கற்றல் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதன் விளைவாக, நலப் பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இன்று அந்த நிலை மாறி கற்றல் வாய்ப்புகள் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. குடிமை சமூகத்தில் மாணவர்கள் சாதிய அடிப்படையில் பிரிக்கப்படாமல் சமத்துவத்தை உருவாக்கும்வண்ணம் இன்று நலப் பள்ளிகள் பொதுப் பள்ளிகளோடு இணைக்கப்பட்டதை மனப்பூர்வமாக நாங்கள் வரவேற்கிறோம். இந்த இணைப்பின்மூலம் ஆசிரியர் நியமனம், ஆசிரியர் பற்றாக்குறை குறைக்கப்பட்டு, மாணவர்களின் கற்றல் திறன் அதிகரிக்கப்படும். அதேபோல, நலப் பள்ளிகளில் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் பொதுப் பள்ளிகளுக்கும், பொதுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் நலப் பள்ளிகளுக்கும் இட மாறுதல் பெற முடியாத நிலை இருந்தது. இதனால், நலப் பள்ளிகளில் மாணவர்–ஆசிரியர் விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரையில், 3 சதவிகித மாணவர்களுக்கு 1.55 சதவிகித ஆசிரியர்கள் என்றுதான் இருந்தார்கள். இந்த இணைப்பின்மூலம் ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் அதிகரிக்கப்படும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், 10 நிமிடங்கள் முடிந்துவிட்டன.*

திருமதி ஆ. தமிழரசி: *அதேசமயம், நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனைக் காக்கும் வகையிலும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன்.*

*மனித உறவுகளின் அடிப்படை நாதமே நம்பிக்கைதான். மனித உறவுகளின் அடிப்படை நாதமான நம்பிக்கை காக்கப்பட வேண்டும். ஆனால், இன்றைய காலகட்டத்தில் (*Society trust deficit*) சமூகத்தின்மீதான நம்பிக்கை குறைக்கப்படுகிறது. நான் இதையும் மிக முக்கியமான முன்னெடுப்பாக பார்க்கிறேன். ஏனெனில், இந்திய ஜனநாயக நாட்டில் பல வழிகளில் பேச்சுரிமை சிதைக்கப்பட்டு, அவை கேள்வியாக்கப்படுகின்றன.* In a democratic country, humour has to be used in a fearless way.

ஜனநாயக நாட்டில் சிரிப்புகள்கூட பயம் இல்லாத நிலையில் இருக்க வேண்டுமென தாமஸ் ஜெபர்சன் கூறியதுபோல், இன்றைய சமூகத்திற்கு வெறுப்புப் பேச்சைப் பற்றிய விழிப்புணர்வு என்பது, மிக முக்கியமானவையாகும். தவறான வார்த்தைகள் தீயவை மட்டுமல்ல, அவை ஆன்மாவையும் தீமையில் பாதிக்கின்றன என்ற சாக்ரடீஸ் கூற்றுபோல இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில், சமூக வலைதளங்களின் பயன்பாடு என்பது, நமது அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கமாக மாறிவிட்டது.

பிற்பகல் 5–45

ஆனால், சில சமூக விரோத சக்திகள் பரப்பும் வதந்திகள் மற்றும் வெறுப்புப் பேச்சுகளால், மனித நேயம் சிதைக்கப்பட்டு, வன்முறைக்கு வழிவகுக்கிறது. அனைவருக்குமான திராவிட மாடல் ஆட்சியில், வெளி மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதாகப் பரவிய தகவல் தேவையில்லாத ஒரு பதற்றத்தை உருவாக்கியது.

இந்தியாவிலேயே முதன்முறையாக பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக மாணவ, மாணவியர்களுக்கு 'வெறுப்புப் பேச்சு' (hate speech) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் வளரும் தலைமுறையினரிடையே மனித நேயம் காக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். கடைசி பக்கம் எடுங்கள்; நன்றி என்றிருக்கும் பாருங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து செய்தி மற்றும் விளம்பரத் துறை. விடுதலைக்கு வித்திட்ட அறிஞர்கள், தமிழறிஞர்கள், கவிஞர் மற்றும் இசை மேதைகள் ஆகியோரை பெருமைப்படுத்தும்வண்ணம், 81 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 2 நினைவுச் சின்னங்கள் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன.

பத்திரிகையாளர்கள் நலம். பத்திரிகையாளர்கள் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அரசின் சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 20 ஆண்டுகள் பணியாற்றி, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதுவரை 282 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. செய்தியாளர்களுக்கு அரசு பேருந்தில் பயணம் செய்திட ஏதுவாக, 3,378 செய்தியாளர்களுக்கு கட்டணமில்லா பல்வேறு பயண அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல், மொழிப்போர் தியாகிகளுக்கு வழங்கப்படுகின்ற நிதி என்பது, மிகவும் குறைவாக இருக்கிறது. அதனை உயர்த்தித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு பல்வேறு நலத் திட்ட உதவித் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எங்களுடைய சிவகங்கை மாவட்ட பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டும். வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அவர்களுக்கான quarters அமைத்துத் தர வேண்டும். பத்திரிகையாளர்களுக்கு என்று தனியாக மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கிட வேண்டும். அவர்களுக்கென ஒரு பிரத்யேக அறை வழங்கிட வேண்டும். எனது தொகுதியில் அரசு நிலங்கள் உள்ளன. அதில் பத்திரிகையாளர்களுக்கென வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சார்ந்த ஒரு சில கோரிக்கைகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றையும் நீங்கள் பேசியதாகப் பதிவு செய்து தந்துவிடுகிறேன். ஒன்றை மட்டும் சொல்லுங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு தொகுதிக் கோரிக்கைகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நிலையூர் கால்வாய், வைகையாற்றில் முள்ளிப்பள்ளம் படுகை அணையில் அதன் வலதுபுறம் பிரிந்து 28.3 கிலோ மீட்டர் தூரம் சென்றும், நிலையூரில் நீட்டிப்பு கால்வாயாக 8.394 கிலோ மீட்டர் தூரம் சென்றும் சோளங்குருணி கண்மாயை அடைகிறது. நிலையூர் நீட்டிப்பு கால்வாயில் முதலில் பிரியும் ஆணைக்குளம் பிரிவு கால்வாய்மூலம் 24 கண்மாய்கள் பயன்பெறுகின்றன. எனவே, ஆணைக்குளம் பிரிவு கால்வாயை நிலையூர் வரை சீரமைப்பு செய்து, காஞ்சிரங்குளம் மற்றும் அதனைத் தொடர்ந்த 23 சங்கிலி தொடர் கண்மாய்களும் பயன்பெறும்படி செய்ய வேண்டுகிறேன்.

மானாமதுரை வட்டம், மிளகனூர் ஊராட்சி, பெரியகண்மாயின்மூலம் 950 ஹெக்டர் நிலங்கள் விவசாயப் பயன்பாட்டில் உள்ளன. இந்தக் கண்மாய் சேதமடைந்திருப்பதால்,

கண்மாயின் கலிங்கு, மடை மராமத்துப் பணிகள் செய்து தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றே ஒன்று; முடித்துவிடுகிறேன். திருப்புவனம் பேரூராட்சி, அதிக மக்கள்தொகை கொண்ட பகுதி. இராமேஸ்வரம் செல்லும் பேருந்துகள் திருப்புவனம் வழியாக உள்ளே வந்து, நின்று செல்வதற்கான Bus stand அங்கே இல்லை. இது நீண்ட நாள் கோரிக்கை. விவசாயப் பெருமக்களும், வியாபாரிகளும், பொது மக்களும் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிழற்குடை வேண்டுமா அல்லது பேருந்து நின்று செல்ல வேண்டுமா?

திருமதி ஆ. தமிழரசி: பேருந்து நின்று செல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு முன்பு தானே இருக்கிறார். அவரிடம் சொல்லுங்கள்; அதனை அமைத்துத் தருவார்கள். மீதமுள்ள கோரிக்கைகளையெல்லாம் கொண்டு வாருங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இன்னொரு பிரச்சினை இருக்கிறது. அரசுப் பள்ளியின் அருகிலேயே இடம் இருக்கிறது. அந்த இடம் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக்கொடுங்கள். நிறுத்தத்தை அவர்கள் தந்துவிடுவார்கள்; மீதியை என்னிடம் கொண்டு வாருங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள கோரிக்கைகளை இந்த மன்றத்தில் நான் பேசியதாகக் கருதி, பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The beginning is the most important part of the work. ஒரு செயலின் மிக முக்கியமான பகுதி அதன் 'ஆரம்பம்தான்'. திராவிட மாடல் ஆட்சியில் இவ்வளவு சாதனைகளும் ஆரம்பம்தான் இது. "This is the beginning". நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

மானாமதுரை வட்டம், இராஜகம்பீரம் ஊராட்சிக்கு துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

மதுரை–தனுஷ்கோடி சாலை மற்றும் மானாமதுரை–பரமக்குடி சாலையை இணைக்கும் வைகையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

மானாமதுரை தொகுதி, சிப்காட்டில் காலணி தயாரிப்பு கம்பெனி ஏற்படுத்தித் தர வேண்டும்.

இளையான்குடி பேரூராட்சிப் பகுதியில் மிளகாய் பதப்படுத்தும் மையம் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர வேண்டும்.

இளையான்குடி வட்டம், சாலை கிராமத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

மானாமதுரை வட்டம், கானூர் தடுப்பணை ஏற்படுத்தித் தர வேண்டும்.

மானாமதுரை தொகுதியில் விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் வண்ணம் பயிற்சி மையம் உள்ளிட்ட ஒன்றிணைந்த அரசு பயிற்சி மையம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Guideline value 33 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Guideline value. சரி சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட அண்ணா தி.மு.க. ஆட்சியில் 10 இலட்சம் ரூபாய்க்கு வீட்டுமனை வாங்குவதற்கு stamp duty 7 சதவிகிதம், பதிவுக் கட்டணம் 4 சதவிகிதம் என, ஆக மொத்தம் 11 சதவிகிதம் என்ற வகையில் பதிவுக் கட்டணம் 1,10,000 ரூபாய் இருந்தால்போதும். தற்போது அதன் மதிப்பு 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுவிட்டது. வழிகாட்டி மதிப்பு 33 சதவிகிதம் உயர்த்தப்பட்டதால், அது ரூ.15 இலட்சமாக உயர்கிறது. ரூ.15 இலட்சத்திற்கு 9 சதவிகிதம் கட்டணம் வசூலிக்கப்பட்டால், 1,35,000 ரூபாய் இன்றைக்கு stamp duty கட்ட வேண்டும். ஆக, இன்றைக்கு 25,000 ரூபாய் கூடுதலாக கட்ட வேண்டும். இதனால் ஏழைகளுக்கு பயன் எதுவும் கிடையாது.

பிற்பகல் 5–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். இது எந்த ஊரில், என்ன Guideline value என்பதை பொதுவாக சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8–6–2017–க்கு முன்பு என்ன Guideline value இருந்ததோ, அது நடைமுறைப்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் 33 சதவிகிதம் உயர்த்தப்படுகிறது. அனைத்துப் பகுதிகளுக்கும், எல்லா survey number–க்கும் வழிகாட்டி மதிப்பு 33 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், பதிவுக் கட்டணம் 2 சதவிகிதம் குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். அதனால், ஏழைகள் நன்மையடைகிறார்கள் என்று சொன்னார்கள். அது அப்படியல்ல. அன்றையதினம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உதாரணத்திற்கு 10 இலட்சம் ரூபாய் ஒரு வீட்டுமனையினுடைய மதிப்பு இருந்தால், அதற்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய். இன்றையதினம் 10 இலட்சம் ரூபாயாக இருந்த வழிகாட்டி மதிப்பு, 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த 15 இலட்சம் ரூபாய்க்கு 9 சதவிகிதம் என்று பார்க்கும்போது, ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் Stamp duty கட்ட வேண்டும். ஆக, இன்றைக்கு வழிகாட்டி மதிப்பை உயர்த்தியதால், ஏழைகள் 25 ஆயிரம் ரூபாய்

கூடுதல் கட்டணம் கட்ட வேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதனால், ஏற்கெனவே இருந்த அந்த வழிகாட்டி மதிப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் இப்போதே பதில் சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லலாம், கடைசியாகச் சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லலாம். உங்கள் விருப்பம்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் வழிகாட்டி மதிப்பு 1–4–2012 அன்று மறுசீரமைக்கப்பட்டு, 8–6–2017 வரை நடைமுறையில் இருந்து வந்தது. பின்னர், மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான வழிகாட்டி மதிப்பு 33 சதவிகிதம் குறைக்கப்பட்டது. மேலும், வழிகாட்டி மதிப்பு குறைந்ததால் ஏற்படும் வருவாய் இழப்பைச் சரிசெய்வதற்காக பதிவுக் கட்டணம் ஒரு சதவிகிதத்திலிருந்து நான்கு சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. 9–6–2017–க்குப் பிறகு நிலங்களின் வெளிச்சந்தை விலை கணிசமாக அதிகரித்தது. வழிகாட்டி மதிப்பின்படியே வங்கிகளில் கடன் வழங்கப்படுவதால், நிலம் அல்லது சொந்த வீடு வாங்க விரும்பும் நடுத்தர மக்கள் வங்கிகளிலிருந்து கடன் பெறும்போது சந்தை நிலவரத்தை, வழிகாட்டி மதிப்பு பிரதிபலிக்காததால், குறைவான கடன் வழங்கப்பட்டது. எனவே, வழிகாட்டி மதிப்பை அதிகரிக்கவும், பதிவுக் கட்டணத்தைக் குறைக்கவும் கோரி பல கோரிக்கைகள் பெறப்பட்டன. இதனால் வழிகாட்டி மதிப்பானது 9–6–2017 அன்று 33 சதவிகிதம் குறைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 8–6–2017 அன்று இருந்த நிலைக்கு உயர்த்தப்படுகிறது. இந்த வழிகாட்டி மதிப்பு உயர்வானது புதியதாகக் கொண்டுவரப்பட்ட ஒன்று அல்ல. இந்த உயர்வு 11 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த ஒன்றுதான். இந்த நடவடிக்கை குறிப்பாக வங்கியில் கடன் பெற்று வீடு வாங்கும் பொதுமக்களுக்கு பெரிதும் பயனளிக்கும்.

மேலும், பல இடங்களில் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு, சரியான சந்தை மதிப்பை பிரதிபலிப்பதாக இல்லாமல் உள்ளது. சில இடங்களில் விவசாய நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் இவற்றின் வழிகாட்டி மதிப்பானது சந்தை

மதிப்பைவிட உயர்வாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலும், சில பகுதிகளில் வழிகாட்டி மதிப்பானது சந்தை மதிப்பைவிட குறைவாக இருந்தது. இவ்வாறு பொத்தாம்பொதுவாக எத்தகைய அடிப்படையுமின்றி வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டிருந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் தொடர்ந்து வந்ததால் வழிகாட்டி மதிப்பு குளறுபடிகளைச் சீர்படுத்தும் நோக்கிலும் உண்மையான சொத்து மதிப்பினை பிரதிபலிக்கும் வகையிலும் வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயம் செய்ய கழக அரசால் சிறப்பு உயர் மட்டக் குழு அமைக்கப்படவுள்ளது. அக்குழுவானது அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று, கள ஆய்வு செய்து, வழிகாட்டி மதிப்பைச் சீரமைக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–55

இந்த அவையில் அமர வாய்ப்பளித்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், அகில இந்தியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த நாங்குநேரி தொகுதி மக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு நல்லாட்சியை தமிழகத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு முதல்வரின் முத்தான திட்டங்களான, பெண்களுக்கு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம், அரசுப் பள்ளிகளில் காலை உணவு, அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/–, இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

எத்தனை வழக்குகள் போட்டாலும், என்னை சிறையில் அடைத்தாலும் நான் பயப்பட மாட்டேன் என்று இந்திய ஜனநாயகத்தை காப்பதற்காக தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, ஏழை, எளிய மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற திரு. ராகுல் காந்தி அவர்களையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் அல்லது கட்டடங்களுக்கான பத்திரப் பதிவுகளைப் பதிவு செய்ய சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு வருகைதரும் பொது மக்கள் அங்கே போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்படுகின்ற நிலை இன்னமும் தொடர்கிறது. அங்கே பத்திரங்களைப் பதிவு செய்ய வரும் ஒவ்வொருவரும் கணிசமான வருமானத்தை அரசாங்கத்திற்குத் தருகிறார்கள். அதனால், அங்கே அவர்கள் மரியாதையாக நடத்தப்பட வேண்டும்.

சார்–பதிவாளர் அலுவலகங்களில் பொது மக்களுக்கான இருக்கைகள், மின்விசிறிகள், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், அரசுக்குக் கணிசமான வருமானத்தைக் கொடுக்கும் அவர்களை கண்ணியத்தோடும், மரியாதையோடும் சார்–பதிவாளர் அலுவலகத்தில் நடத்திட வேண்டுமென்று மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சார்–பதிவாளர் அலுவலகங்களில் விவசாய நிலங்களைப் பதிவு செய்யும்போது, சதுரடி கணக்கீட்டு முறையில்தான் பதிவு செய்ய வேண்டுமென்று சில பத்திரப் பதிவு அலுவலர்கள் வற்புறுத்துகிறார்கள். இந்த நடைமுறையை ஏற்கெனவே பின்பற்றப்பட்ட முறையில் சென்ட் கணக்கில் பதிவு செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறான பத்திரப் பதிவு செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; இரும்புக்கரம் கொண்டு அதைத் தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புது மனைப் பிரிவுக்கு சந்தை மதிப்பை நிர்ணயம் செய்யும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க, முன்பு கலைஞர் ஆட்சியில் நடந்த நடைமுறையின்படி சார்–பதிவாளரே சந்தை மதிப்பை நிர்ணயிக்க வகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 10] [திரு. ரூபி ஆர். மனோகரன்]

சார்-பதிவாளர் அலுவலகம் சார்ந்துள்ள தாலுகாவுக்குட்பட்ட பகுதிகளை இணைத்தால்தான் ஆன்லைன் மூலமாக பட்டா பரிமாற்றம் செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்தத் தாலுகாவுக்குட்பட்ட பகுதிகளை அந்தந்த சார்-பதிவாளர்கள் அலுவலகத்தோடு சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது, பத்திரப் பதிவுக்காக வரும் கட்டடமும், மனையும் சேர்ந்து அதனுடைய மதிப்பு ரூ.50 இலட்சம் வரை இருக்கும்பட்சத்தில், அந்த ஆவணங்களை சார்-பதிவாளரே ஆய்வு செய்துகொள்ளலாம் என்கிற விதிமுறை இருக்கிறது. கட்டடமும், மனையும் ரூ.50 இலட்சம் மதிப்பைத் தாண்டுகிறபோது பதிவுத் துறை உயரதிகாரிகளை ஆய்வுக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் பத்திரப் பதிவில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, சார்-பதிவாளரே ரூ.2 கோடி மதிப்பு வரையிலான பத்திரப் பதிவுகளுக்கு ஆய்வுகளை மேற்கொள்ள அவருக்கு அதிகாரம் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர் நிலம் வாங்கும்போது அந்த நிலத்துக்கு அரசின் வழிகாட்டி மதிப்பும், சந்தை மதிப்பும் முக்கியமாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் அரசின் வழிகாட்டி மதிப்பின் அடிப்படையிலேயே பெரும்பாலான பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால், சில நேரங்களில், சிலர் வங்கிகளில் அதிகம் loan பெற வேண்டுமென்பதற்காக தாங்கள் வாங்கக்கூடிய நிலத்தின் மதிப்பை கூடுதலாகக் காண்பித்து அதைப் பத்திரமாகவும் பதிவு செய்துவிடுகிறார்கள். இதுபோன்ற ஒரு சிலரின் தனிப்பட்ட செயல்களால் மற்றவர்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, உயர் மதிப்பைக் காட்டி பதிவு செய்வதை வழிகாட்டி மதிப்பாக சார்-பதிவாளர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு சில முக்கியமான கோரிக்கைகளை நான் வைக்கிறேன்.

தமிழக மாநில மரமாக இருப்பது, பனை மரம். இது கருப்பட்டி, பதநீர் என்று இன்னும் நிறைய பலன்களை நமக்குத் தருகின்றது. இந்தப் பனை மரத்திலிருந்து இயற்கையாகக் கிடைப்பது பனங்கள்ளு. இதனை பனம்பால் என்றும் கூறுவார்கள். இது மருத்துவ குணம்

உடையது. இதனுடன் சுண்ணாம்பு கலந்தால் பதநீராக மாறுகிறது. ஆதிகாலத்தில் மனிதர்களுக்கு ஆரோக்கியம் தரும் உற்சாக பானமாக இருந்திருக்கிறது. தற்போது, தமிழ்நாட்டில், பனங்கள்ளு தடை செய்யப்பட்ட ஒன்றாக இருக்கிறது. நமது அண்டை மாநிலமான கேரளாவில் கள் இறக்க அனுமதிக்கப்படுகிறது. பனங்கள்ளு 100 சதவிகிதம் இயற்கையானது. அது உற்சாக பானமாகிவிடுகிறது. இதனால் மனிதர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதில் அதிக நோய் எதிர்ப்பு சக்தியும் உண்டு. பனங்கள்ளு மனதிற்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் காங்கிரஸிலிருந்துதான் பேசுகிறீர்களா? கள் இறக்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும்; கள் குடிக்க வேண்டும்; உற்சாக பானம் என்று புதுப் பெயரெல்லாம் சொல்கிறீர்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: நம்முடைய திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில்தான் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. நிச்சயமாக, இதிலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும் உடன்பாடு இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

பிற்பகல் 6–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பனை எங்கெல்லாம் விற்கும் என்று நான் கேட்கவில்லை. இந்தக் கொள்கையில் உங்களுக்கு உடன்பாடுதானா என்று கேட்கிறேன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: டாஸ்மாக்கைவிட இந்த பனங்கள்ளு better ஆக இருக்கும் என்று நாங்கள் நினைக்கின்றோம். பனங்கள்ளு மனதுக்கும், உடலுக்கும் குளிர்ச்சி மட்டுமே தரும். இத்தகைய பனங்கள்ளை தமிழ்நாட்டில் நம்முடைய பனை விவசாயிகள் தங்களது பனை மரங்களிலிருந்து எடுக்க அனுமதிக்க வேண்டுகிறேன். பனங்கள்ளு இறக்க விதிக்கப்பட்டுள்ள தடையை முற்றிலுமாக நீக்க வேண்டும். தற்போது பனை மரங்களை வெட்ட தடையிருப்பது பாராட்டக்கூடிய விஷயம். பனை மரங்களைப் பாதுகாக்கும் நம் அரசின் முயற்சிக்கு மேலும் பலம் சேர்க்கும்வகையில் பனங்கள்ளு இறக்க விதிக்கப்பட்டிருக்கும் தடையை முற்றிலுமாக நீக்க வேண்டுகிறேன். அதற்கான அரசாணையை உடனே நமது அரசு வெளியிட வேண்டும். பனங்கள்ளு மீதான தடை நீக்கப்பட்டால்,

பனை விவசாயம் இன்னும் செழிப்பாக நடைபெறும். நமது அரசு விரும்பினால், பனங்கள்ளு இறக்கும் விவசாயிகளிடமிருந்து ஆவின் பால் கொள்முதல் செய்வதுபோல, இந்தப் பனங்கள்ளை கொள்முதல் செய்து, இயற்கை உற்சாக பானம் என்கின்ற பெயரில் பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்யலாம். நமது அரசு இதைச் செய்யும்பட்சத்தில், இந்த பனங்கள்ளை இயற்கையிடமிருந்து பெற்று விவசாயப் பெருமக்களும் வாழ்க்கையில் முன்னேறுவார்கள். அரசுக்கும் கணிசமான வருமானம் கிடைக்கும். அதை அருந்துவோரும் ஆரோக்கியமாக இருப்பார்கள். நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களும், பனை மரங்கள் நிறைந்த எங்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்தான். பனங்கள்ளுமீதான தடையை நீக்க வேண்டுமென்கிற எங்கள் விருப்பம் அவருக்குள்ளும் இருக்கும் என்று நம்புகிறேன்.

மக்களுக்காகச் சிந்தித்து நல்ல பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் பனங்கள்ளு மீதான தடையை உடனடியாக நீக்கி, ஆணை வெளியிட வேண்டுகிறேன். அதுபோல, பனை மரம் ஏறுவதற்கான இயந்திரங்களைக் கண்டுபிடிக்க ஒரு குழுவையும் அமைத்து பனை விவசாயிகளின் வாழ்க்கையை மீண்டும் பொற்காலமாக மாற்ற மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அதிக வருமானத்தையும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பையும், மக்களுக்கு உறைவிடத்தையும் கொடுப்பவர்கள் கட்டுமானத் தொழில் செய்பவர்கள். அவர்களின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதே நமது அரசின் கடமை. அந்தவகையில், கட்டுமானத் தொழில் செய்பவர்கள் சில கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவரான அமைச்சர் அவர்களும் அனைத்து கட்டுநர் சங்கங்களையும், வீட்டுமனை அபிவிருத்தியாளர்களையும், கட்டட வடிவமைப்பாளர்களையும் தொழிலாளர் நல சங்கங்களின் பிரதிநிதிகளையும் ஒருங்கிணைத்து அவர்களின் கருத்துகளைக் கேட்டு சிறப்பாகச் செயல்படுவதால், கட்டுமானம் உள்ளிட்ட ரியல் எஸ்டேட் துறை இந்த ஆட்சியில் மாபெரும் வளர்ச்சியும், எழுச்சியும் பெறும் என்கிற நம்பிக்கை வந்திருக்கிறது.

கட்டுமானத் துறை சார்ந்த சில கோரிக்கைகள். கட்டடங்களின் சாதாரண உயரம் 12 மீட்டர் மற்றும் 3 மாடிகளுடன் அனுமதிக்கப்படுகிறது. இந்த நடைமுறை கடினமாக உள்ளது. இதனால், ஒவ்வொரு தளமும் 3 மீட்டர் உயரத்திற்குள் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்தகைய கட்டுப்பாடுகளினால், stilt தளத்தின் beam ஆழம் அதிகரிக்கும்போது வாகனங்கள் வந்து செல்ல உயரம் போதுமானதாக இல்லை. மேலும், பருவநிலை மாறுபாடுகளைக் கட்டுப்படுத்த மின் தேவைகளைக் குறைப்பதற்கு கட்டடங்களின் உயரக் கட்டுப்பாடு தடையாக உள்ளது. எனவே, உயரத்தை 12 மீட்டரிலிருந்து குறைந்தபட்சம் 14 மீட்டராக அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தற்போது உயரம் குறைவான சாதாரண கட்டடங்களில் balcony அமைக்க ஒப்புதல் வழங்கப்படுவதில்லை. கட்டடங்களின் பக்கவாட்டில் அனுமதிக்காவிட்டாலும் 3 தளங்கள் கொண்ட கட்டடங்களின் முன்பக்கம் சாலையோரமாவது மூன்றாவது மாடியில் balcony அமைக்க அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தீ மற்றும் பிற அவசரக் காலங்களில் balcony மட்டுமே மக்கள் பாதுகாப்பாக தப்பிக்க எளிதாக இருக்கும். அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ளவர்கள் தங்கள் துணிகளை உலர்த்துவதற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

கிராம நத்தம் வீட்டுமனைகளுக்கு 2 குடியிருப்புகள் கட்டுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. மறைந்த முதல்வர் கலைஞர் அவர்கள் கிராம நத்தம் பட்டா வழங்குவதை அறிமுகப்படுத்திய பிறகு கிராம நத்தம் நிலங்கள் பதிவு செய்யப்பட்டு, கிராம நத்தம் பட்டாவும் வழங்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட ஆவணம் மற்றும் கிராம நத்தம் பட்டா ஆகியவற்றை கருத்தில்கொண்டு மற்ற அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகளுக்கும் இணையாக கிராம நத்தம் நிலங்களையும் கட்டட திட்ட ஒப்புதலுக்கு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் ஒரேமாதிரியான கட்டட உரிம கட்டணங்களை வசூலிக்க TNCMA ஒரு குழுவை அமைத்து உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான கட்டட உரிமக் கட்டணத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். G.O. No. 172 மற்றும் 78–ன்படி தனிப்பட்ட மனைப் பிரிவுகளுக்கான சாலையின் அகலம் 6 மீட்டராக

முறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், தமிழகம் முழுவதும் அனைத்து சாலைகளும் 6 மீட்டர் மற்றும் அதற்கும் குறைவாக உள்ளது. தற்போது புதிய TNCDBR 2019-ன்படி, மனைப் பிரிவு ஒப்புதலுக்கு குறைந்தபட்ச சாலை அகலமானது 7 மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அணுகுசாலை பிரச்சினை காரணமாக புதிய மனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எனவே, குறைந்தபட்ச அணுகுசாலையை 6 மீட்டராகக் குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் வீடு என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனவு எளிதில் நிறைவேற நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர மக்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கட்டும் சிறு builder-களை ஊக்குவிக்க 8 சமையல் அறைகள் மற்றும் 300 சதுரடி வணிக இடம் கொண்ட கட்டடங்களுக்கு தற்போது அனுமதிக்கப்பட்ட 3 சமையல் அறைகள் என்ற விதியிலிருந்து விலக்களிக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 6-05

கட்டட ஒப்புதல் நடைமுறையை விரைவுபடுத்த, நீர்நிலைகளுக்கு அருகில் உள்ள நிலத்திற்கு PWD மூலம் வழங்கப்படும் தடையில்லா சான்றிதழ் விரைந்து வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். புதியதாக செயல்படுத்தப்பட்ட TNCDBR 2019-ன்படி, . . .(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே!

திரு. ரூபி ஆர். மனோகரன்: 10,000 சதுரடி, 16 சமையலறைகளை, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் General Budget-ல் பேசுகிற மாதிரி பேசிவிட்டீர்கள். இப்போது மானியக் கோரிக்கை, பத்திரப் பதிவுத் துறை மற்றும் செய்தித் துறை. நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: நான் முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதன் காரணமாக 625 சதுரடியில் 14 சமையல் அறைகள் மட்டுமே சாத்தியமாகும். எனவே, 10,000 சதுரடி வரம்பை, 16,000 சதுரடி வரம்பாக அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதி கோரிக்கைகள் ஒன்றிரண்டு மட்டும் படித்துவிடுகிறேன். முக்கியமாக, நாங்குநேரியில் இயங்கி வரும் அரசு மருத்துவமனை போதிய வசதி இல்லாமல் அங்கே நோயாளிகள் பரிதவிக்கும் நிலையில், கட்டடமும் பழுதடைந்துள்ளது. நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற முடியாத சூழ்நிலை நிலவுகிறது. இதனால் அந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சருக்குத்தான் பேசுகிறார்கள்.*

திரு. ரூபி ஆர். மனோகரன்: *மேலும், புதிய விபத்துப் பிரிவிற்கு பத்து கோடி ரூபாய் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒதுக்குவதாகச் சொன்னார்கள். அதற்கு பிறகு அங்கே எந்த வேலையும் நடக்கவில்லை என்று மக்களெல்லாம் வருகிறார்கள். உடனடியாக அந்த வேலையை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி–நம்பியாறு இணைப்புத் திட்டத்தை இந்த ஆண்டு கடைசிக்குள்ளாக முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரே ஒரு இடத்தில்தான் வேலை நடந்து கொண்டிருக்கிறது. பொன்னாங்குடி பகுதியில் மட்டும்தான் அந்தச் சாலை வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டிற்குள் கட்டாயம் தாமிரபரணி–நம்பியாறு இணைப்புத் திட்டத்தை உடனடியாக முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின்போது, நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா, அண்ணன் அவர்களிடத்தில் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறேன். அதை உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறேன். ஏனென்றால் நாங்குநேரியில் நிறைய ஏழை மக்கள் இருக்கிறார்கள். விவசாயம் செய்கிற மக்கள், படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அது ஒரு மிகப் பெரிய திட்டம். கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம். அதை நீங்கள் கட்டாயம் நிறைவேற்றித்தர வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி–திசையன்விளை செல்லும் சாலையில் railway gate*–ல் அதிகமாக* traffic *ஏற்படுகிறது. ஆகவே நாங்குநேரி–*

திசையன்விளை route-ல் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலையில் பன்றித் தொல்லை அதிகமாக இருக்கிறது. கேரளாவில் பன்றிகளை வன விலங்குகள் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டார்கள். தமிழ்நாட்டில் அது இன்னும் இருக்கிறது. பன்றிகளால் நிறைய வாழை மரங்கள் பாதிக்கப்படுகின்றன. அதைக் கட்டுப்படுத்த வேலி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். களக்காடு நகராட்சிப் பகுதியில் தரைப்பாலம் மலை அடிவாரத்தில் இருப்பதால், மழைபெய்யும்போது திடீரென்று ஆற்றுவெள்ளம் வேகமாக வந்துவிடுகிறது. தரைப்பாலத்தில் எப்போது தண்ணீர் வருகிறது என்று தெரியாது. சென்ற ஆண்டு ஒரு lady இறந்து விட்டார். (மணியடிக்கப்பெற்றது) மேம்பாலம் கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கொடுங்கள். நீங்கள் அவையில் பேசியதாக பதிவு செய்து தந்துவிடுகிறேன். நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: பாளையங்கோட்டை சீவலப்பேரியில், விளையாட்டுக் கிராமம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டது. மனோன்மணியம் சுந்தரனார் கல்லூரியில் இயங்கி வரும் விளையாட்டு கிராமம் யாரும் பராமரிப்பு செய்யாமல் முட்புதர் அடர்ந்து காணப்படுகிறது. அந்த விளையாட்டு கிராமத்தைப் பற்றி நான் பலமுறை சொல்லிவிட்டேன். அதை உடனடியாகச் சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி, குன்னத்தூர் திருவேங்கடநாதபுரத்திற்கு, ஆற்றில் உறைகிணறு ஏற்படுத்தி, pipelineமூலம் குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் குன்னத்தூர் பகுதியில் குடிநீர் பற்றாக்குறையாக இருக்கிறது. அதையும் சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை நான் கொடுத்துவிடுகிறேன். அதை அவையில் படித்ததாக பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

பெரிய மனைப் பிரிவுகள் இன்னும் முறைப்படுத்தப்படாததால் இந்தத் திட்டத்தை 20–10–2016 என்ற கட்–ஆஃப் தேதியுடன் மீண்டும் அறிமுகப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, சென்னை மாநகராட்சியில் AEE மற்றும் TPO Grade–1 அதிகாரிகளைக் கொண்ட DTCP முறையே 4.94 ஏக்கர் மற்றும் 9.88 ஏக்கர் வரை லே–அவுட் அனுமதியை வழங்குகின்றன. அதேசமயம் மற்ற நகராட்சிகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகள் DTCP மற்றும் சென்னை மாநகராட்சி தரத்தில் பணிபுரியும் அதிகாரிகளைக் கொண்டிருந்தாலும் அனுமதி வரம்புகள் குறித்த தெளிவு இல்லாததால் லே–அவுட்டிற்கு அனுமதி வழங்குவதில்லை. எனவே, அதைத் தெளிவுபடுத்தி மனை அங்கீகாரம் வழங்க நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், களக்காடு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் இலைக்கருகல் நோயால் பாதிக்கப்பட்டன. இதனால், போதிய மகசூல் கிடைக்காமல் விவசாயிகளுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டது. இந்த இலைக் கருகல் நோயைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும், பாதிப்புக்குள்ளான அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரண உதவிகளை வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

களக்காடு நகராட்சிப் பகுதியில் சுமார் 75 ஆயிரம் மக்கள் வசித்து வருகிறார்கள். தீ விபத்து போன்ற அசம்பாவிதங்கள் எதிர்பாராவிதமாக நிகழும்போது, வெகுதொலைவில் உள்ள வள்ளியூர் அல்லது நாங்குநேரியில் இருந்துதான் தீயணைப்பு வாகனம் வரவேண்டி இருக்கிறது. அதனால், களக்காட்டிலேயே தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களக்காட்டில் சிறிய அரசு மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. களக்காடு நகரம் வளர்ந்து கொண்டே வருவதால்,

அதற்கு ஏற்றவகையில் இந்த மருத்துவமனையை தரம் உயர்த்தவும், அங்கே கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணியமர்த்தவும், ஆம்புலன்ஸ் வசதி, அறுவை சிகிச்சை வசதி, குழந்தைகள் மையம் உள்ளிட்ட வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, நாகல்குளத்தில் உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக விரைவாக அமைத்துத்தர வேண்டுகிறேன்.

திருக்குறுங்குடியில் உள்ள நம்பிராயர் கோயில், வைஷ்ணவ திருத்தலங்களில் முக்கியமானது. இக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்குமிடம், குளியலறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகள் செய்து தர வேண்டுகிறேன்.

நாங்குநேரியில் அரசு சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குத் தேவையான இடம் ஏமன்குளத்தில் உள்ளது. இங்கு கல்லூரி அமைத்துத்தர வேண்டுகிறேன். வேளாண் கல்லூரி ஒன்றையும் ஏர்வாடி பகுதியில் மகளிர் கல்லூரி ஒன்றையும் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

களக்காடு நகராட்சியில் கூடுதல் அலுவலர்களை நியமிக்க வேண்டுகிறேன்.

நாங்குநேரி கால்வாய் பாசனத்தை நம்பி 46 குளங்கள் உள்ளன. மணிமுத்தாற்றில் இருந்து 4 கி.மீ. தொலைவிற்கு புதிதாக கால்வாய் வெட்டித்தர வேண்டுகிறேன்.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு, அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசின் அனைத்து நலத் திட்டங்களும் கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அதை வழங்குமாறும், மத்திய அரசு வழங்கக்கூடிய கல்வி உதவித்தொகை மீண்டும் சிறுபான்மையின மாணவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கான பணி பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் ஏற்படுத்தித்தர வேண்டுகிறேன்.

ஏர்வாடி பேரூராட்சிக்குட்பட்ட திருவரங்கன் ஏரியை தூர்வாரித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 25 ஆண்டுகள் பணி நிறைவு செய்த சிறைக் காவலர்களுக்கு சிறப்பு உதவி சிறைக் காவலர் பதவி உயர்வு வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள சுங்கச் சாவடியில் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் வசிக்கும் உள்ளூர் மக்களுக்கு அனைத்து வாகனங்களுக்கும் சுங்கச் சாவடி கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழநத்தம் விலக்கு மற்றும் பொட்டல் விலக்கு ஆகிய இரு இடங்களிலும் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

அரசு செயல்படுவதற்கு முறையான நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அதன்மூலம் நல்ல வருவாயினை ஈட்டி காத்து, காத்த வருவாயினை மக்களுக்குப் பயன்படும் வகையில் பகிர்ந்தளித்து செயல்படுத்துவதே நல்ல அரசு என்கிறார் வள்ளுவர்.

அந்த வகையில், வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாய்த் திகழும் முதல்வரே! நீங்களே எங்களின் வழிகாட்டி! யாருக்கும் தலையாட்டி பிழைக்கத் தெரியாத எங்களின் நாட்காட்டி! உங்கள் ஆட்காட்டி விரல் நீட்ட பாய்ந்து வினை முடிப்போம் செயல் ஆற்றி! என்று கூறி, மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்களையும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு இளைய தளபதி அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய

மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களையும் 1996 ஆம் ஆண்டு முதல் நான்காவது முறையாக நான் இந்த அவைக்கு வருவதற்கு, மூலகாரணமாக இருந்த முன்னாள் மாவட்ட கழகத்தினுடைய செயலாளர்,முன்னாள் அமைச்சர் அண்ணன் தங்கப்பாண்டியனார் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-10

பத்திரப் பதிவுத் துறையில் 20-10-2016 ஆம் தேதிக்கு முன்பு, பதிவுச் சட்டம் 22 (A) (2) அமல்படுத்தப்பட்ட தேதிக்கு முன்பு, அங்கீகரிக்கப்படாத மனையிடங்கள் தமிழ்நாடு முழுவதும் இலட்சக்கணக்கில் ஆவணங்கள்மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. அம்மனைகளில் குறிப்பிட்ட சதவிகித அளவில் கட்டட வரைபடங்கள் அங்கீகாரம், plan approval பெறப்பட்டு, கட்டடங்களைக் கட்டி பொது மக்கள் வசித்து வருகிறார்கள். இவ்வாறான மனைகளில் கட்டடங்கள் கட்டியிருப்பினும், காலியிடங்களாக இருப்பினும், எவ்வித மாற்றமும் செய்திடாமல் உரிய வரன்முறைக் கட்டணம் வசூலித்து, மனை அங்கீகாரம், site approval வழங்கப்பட்டால், பல நூறு கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன் பொது மக்களுக்கு மிகப் பெரிய பலன் கிடைக்கும்.

இத்திட்டத்தினை எளிமைப்படுத்திடும் விதமாக உரிய கட்டணம் அரசுக்குச் செலுத்தி, அந்தந்தப் பகுதிகளிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாக விண்ணப்பித்திட ஆணை பிறப்பிக்க வழிவகை செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, CMDA எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கெனவே சாலை வசதி இருக்கும் இடங்களில் வீட்டுமனைப் பதிவுகள் செய்யும்போது, எட்டு மனைகளாகப் பிரித்து பத்திரப் பதிவு செய்வதற்கு அரசு அனுமதி உள்ளது. இதேபோல், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி முதலானவற்றிற்கும் நீட்டித்தால் பத்திரப் பதிவுகள் கூடுவதன் மூலமாக அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். பொது மக்களும் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்] [2023 ஏப்ரல் 10

அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளை வரன்முறை செய்வதற்கு 2018 ஆம் ஆண்டுக்குப் பின்பு, மனு செய்ய இயலாத நிலையிருந்தது. பிறகு, ரூ.500/– செலுத்தி, பதிவு செய்து, வரன்முறைப்படுத்திக்கொள்ள சலுகைகள் வழங்கப்பட்டன. தற்பொழுது, அவை நிறுத்தப்பட்டுள்ளன. மேலும், சலுகைகளை நீட்டித்து வழங்கினால், ஆவணப் பதிவுகள் கூடுவதன்மூலம் பதிவுத் துறைக்கு வருவாய் அதிகரிக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அலுவலகங்களில் மனு செய்து பெறப்படும் வில்லங்கச் சான்றிதழ்களில் சொத்து தொடர்புடைய ஆவணப் பதிவு விவரங்கள் விடுபட்டிருந்தாலோ, தொடர்பு இல்லாத வேறு பதிவுகள் குறிப்பிடப்பட்டிருந்தாலோ, மனுதாரர் மீண்டும் மனு செய்து வில்லங்கச் சான்றிதழ் பெற வேண்டிய நிலையுள்ளது. சார் பதிவகத் தவறுக்கு பொது மக்கள் தேவையின்றி மீண்டும் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையை மாற்றி, சரியான வில்லங்கச் சான்றினைப் பெற வழிவகை செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பொது மக்கள் கடவுச் சீட்டுமூலம் ஆவணப் பதிவு மற்றும் பதிவுத் துறை தொடர்பான சேவைகளைப் பெற மென்பொருளில் மாற்றம் செய்திட வேண்டுமாறும், மேலும், எழுதிக் கொடுப்பவர் கடவுச் சீட்டு ஒரு வாரத்திற்கு மட்டுமே செயலில் இருக்குமாறும் மென்பொருளில் மாற்றம் செய்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வில்லங்கச் சான்று பெற மனு செய்யும்போது, சேவைக் குறைபாட்டினால், மீண்டும் முதலிலிருந்து உள்ளீடு செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையை மாற்றி சேவைக் குறைபாட்டினால் தடைபட்ட நிலையிலிருந்து வில்லங்கச் சான்று கிடைத்திட server-ஐ மாற்றியமைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 20–10–2016 ஆம் தேதிக்கு முன்புள்ள வரன்முறையற்ற unapproved மனை நிலங்களை பதிவுத் துறைமூலம் 3 சதவிகிதம் கூடுதல் கட்டணம் வசூல்செய்து, விடுபட்ட மனை நிலங்களைப் பதிவு செய்யும்பட்சத்தில், அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதுடன் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மக்களிடம் அரசு நன்மதிப்பு பெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலுள்ள மக்கள் மனைகள் வாங்கும்பொழுது, பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால், கிராமப்புறங்களில்

2023 ஏப்ரல் 10] [திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்]

இரண்டு ஏக்கருக்குட்பட்ட நிலங்களை மனைப் பிரிவுகளாகப் பிரிக்கும்பட்சத்தில், உள்ளாட்சி அமைப்புகள்மூலம் மனைப் பிரிவு அங்கீகாரம் வழங்க வேண்டும். இதனால் கிராமப்புற மக்கள் பயனடைவார்கள். கிராமங்களும் வளர்ச்சியடையும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனைப் பிரிவு வரன்முறைப்படுத்துவதற்கான முறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். மேலும், மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்துவதற்கான online DTCP சேவைகளை நவீனப்படுத்த வேண்டும். மேலும், சார்—பதிவாளர் அலுவலகங்களில் website சேவையின் திறனை மேம்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 10 சென்ட், 15 சென்ட் விவசாய நிலங்களை விற்பனை செய்யும்போது, NOC கேட்கும் முறை நடைமுறையிலுள்ளது. இதனால், பொது மக்களுக்கு பத்திரப் பதிவு செய்வதில் சிரமமாக உள்ளது. இவற்றைக் களைய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைகளுக்கு வழிகாட்டி மதிப்பு 2017 ஆம் ஆண்டின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படவுள்ளது. அதேபோல் விவசாய நிலங்களுக்கும் வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தற்போது 50 சதவிகிதம் நிர்ணயம் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனால், பொது மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாவார்கள். இதனால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, தற்போது இருக்கக்கூடிய நிலையினை மாற்றி, அரசு பத்திரப் பதிவில் சில மாற்றங்களைச் செய்து, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு பொது மக்கள் வரும்பொழுது, அவர்களை வழிநடத்தக்கூடிய வகையில் மக்கள் தொடர்பு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–15

GST பிரச்சினையைப் பொறுத்தளவில், பதிவு எண் பெறுவதற்கான உச்சபட்ச அளவினை அதிகப்படுத்த வரி விதிப்பு முறையில் தற்போது இருக்கின்ற விற்பனை விலக்கான ரூ.40.00 இலட்சம் என்பதை ரூ.1.00 கோடியாக உயர்த்தி, சட்டப் பிரிவு எண்

22–கீழ் ஆணை பிறப்பிக்க வேண்டும். இவை அனைத்தும் MSME சிறு, குறு தொழில் செய்பவர்களுக்கு பயனுள்ளதாக அமையும். மேலும், சேவை செய்வதற்கு மிகுந்த இலகுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேவை செய்பவர்களுக்கு வரி விதிப்பு முறையை ரூ.20 இலட்சம் என்பதை ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கி பிரிவு 22–ன்கீழ் ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இணக்க வரி கட்டும் தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு ரூ.1.50 கோடியிலிருந்து ரூ.5.00 கோடிக்கு உயர்த்தி வழங்குமாறு பிரிவு 10(A)–ன்கீழ் ஆணை பிறப்பிக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இணக்க வரி கட்டும் சேவை செய்வோருக்கு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1.00 கோடியாக உயர்த்தி, பிரிவு எண் 10(B)–ன்கீழ் ஆணை பிறப்பிக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சரக்கு மற்றும் சேவைகள் வரி சட்ட அமலாக்கத்திற்கு பிறகு, வணிக வரி வருவாயினை மாநில அரசும், ஒன்றிய அரசும் சமமாகப் பிரித்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டு வரையில் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகையினை வழங்கி வந்த நிலையில், அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, மாநில அரசும், ஒன்றிய அரசும் தங்களுக்கிடையே பிரித்துக்கொள்ளும் வருவாயில், 60% மாநில அரசுக்கும், 40% ஒன்றிய அரசுக்கும் என மாற்றிப் பிரித்துக் கொடுக்கும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்படும் தீர்மானம்மூலம் நாடு முழுவதுமுள்ள மாநில அரசுகளுக்கும் தமிழ்நாடு அரசு சிறந்த வழிகாட்டியாக அமையும். எனவே, இதுகுறித்து பரிசீலனை செய்து, ஒன்றிய அரசிற்கு அழுத்தம் அளிக்க வேண்டும்.

விற்பனை வரி அலுவலகங்கள் அனைத்து ஊர்களிலும் இருந்தன. இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் குறைகள் மற்றும் சந்தேகங்களை அந்தந்த ஊர்களில் உள்ள அலுவலகங்களுக்குச் சென்று தெளிவுபெற்று வந்தனர். ஆனால், தற்போது GST அலுவலகம், சென்னையில் மட்டுமே உள்ளது. இந்த அலுவலக தரவுகளில் கொடுக்கப்பட்டுள்ள TOLL FREE எண்ணில் தொடர்புகொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்து வியாபாரிகளும் இந்த எண்ணில் மட்டுமே

தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. எனவே, GST வரி கட்டும் அலுவலகம் சார்ந்த இடங்கள் அனைத்திற்கும் தனித் தனியே TOLL FREE Call Centre அமைத்து நேரடியாகவோ அல்லது தொலைபேசியிலோ தொடர்புகொள்வதற்கு வழிவகை செய்தால், பொது மக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச சட்ட ஆலோசனை மையங்கள் செயல்படுவதைப்போன்று, GST தொடர்பான சந்தேகங்கள், சட்ட ஆலோசனைகள், பட்டியல் தயாரித்தல் மற்றும் e-way bill தயாரித்தல் போன்றவற்றிற்கு வழிகாட்டும் விதமாகவும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஆலோசனை மையம் ஒன்று வணிகப் பெருமக்களின் அறியாமையை போக்கும் வகையில், ஏற்படுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றும் படைப் பிரிவுகள் இலக்கு நிர்ணயம். சுற்றும் படைப் பிரிவுகள் என்பது, குற்றம் நடைபெறாமல் தவிர்க்க வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். வணிக வரித் துறையில் செயல்பட்டுவரும் அத்தகைய சுற்றும் படைப் பிரிவுகளுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, வரி வசூல் செய்யப்படுவதன் காரணமாக, வணிகர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: வணிக வரித் துறையில் மறு சீரமைப்பு தொடர்பாக, கடந்த மாதம் வெளிவந்த அரசாணையின்படி புதிதாக உருவாக்கப்படும் கோட்டங்கள், அக்கோட்டங்கள் தொடர்புடைய மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட வேண்டும். கூடுதலாக துணை ஆணையர் அலுவலகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்ற வகையில் அரசாணையில் தெரிவித்தவாறு உருவாக்கப்படும்போது, அந்த அலுவலகங்களும் மாவட்டத் தலைநகரங்களில் அமைவதே மாவட்ட ஆட்சியர் உடனான ஒருங்கிணைப்புப் பணிகளுக்கும் ஏதுவாக அமையும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகர் நல வாரியத்தின் மூலமாக அரசால் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், தமிழில் வணிகப் பெயர்களைக் கொண்டுள்ள

நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடலாம். இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள வணிக நிறுவனங்களின் பெயர்கள் நமது தாய் மொழியாம் தமிழ் மொழியில் இருந்தால் நன்றாக இருக்குமென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் வாரிசுகள் மாநில அளவில், மாவட்ட அளவில் முதலிடம் பெறும் நிகழ்வுகளில் அவர்களின் பெயரும் தமிழில் இருக்குமேயானால், வாழ்த்துகளும், அரசின் சலுகைகளும் கிடைக்கும் என அறிவிப்பு செய்யலாம்.

விற்பனை வரி செலுத்த தற்போது உள்ள 19 நாட்களுக்குப் பதிலாக 60 நாட்களாக கால நீட்டிப்பு செய்தால், வியாபார பெருமக்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

வரி கட்ட கடைசி நாள் 20 ஆம் தேதி. ஆனால், 19 ஆம் தேதி கட்டினால் Late fee அடுத்த மாதம் வருகிறது. விற்பனையாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மறைமுக வரியாக வசூலிப்பது சிரமமாக இருப்பதால், கடைசி நாள் 19 ஆம் தேதி என்று திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2017–2018 முதல் 2021–2022 வரை உள்ள வருட return தாக்கல் செய்வதற்கு கடைசி நாள் 30–6–2023 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், 30–6–2023 தேதிக்கு பின்னர் செலுத்தினால், ரூ.20,000/– அபராதம் என்று உள்ளது. இதனால் வியாபாரிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து விலக்கு அளிப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–20

Annual Return Form-9-ஐ தாக்கல் செய்ய ரூ.5 கோடிக்குமேல் பதிவு தாமதமானால் நாள் ஒன்றுக்கு அபராதம் 25+25=50/–ம், அதிகபட்சமாக 20,000 ரூபாய் வசூல் செய்கிறார்கள். இது வியாபாரிகளை சிரமத்தில் ஆழ்த்துகிறது. 2023–2024 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 52–ல் தாமத கட்டணத்தை நிபந்தனைகளுடன்கூடிய தள்ளுபடி/குறைப்பு செய்வதற்கு பொது மன்னிப்பு திட்டங்கள் கொண்டு வருவதாக கூறியுள்ளீர்கள். அதை விரைவாகச் செய்து கொடுப்பதற்கு,

2023 ஏப்ரல் 10] [*திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்*]

அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைய ஆலோசனைகளை* Government*-க்கு சொல்லிவிட்டீர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *ஒரு நிமிடம். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வரி நிலுவைகளான* TNGST, VAT *போன்ற பழைய முறையில் உள்ள வரிகளை வசூலிக்க அரசு சிறப்புத் திட்ட வசூல் முறையைக் கொண்டு வந்து, வரி நிலுவைகளை வசூலிக்க தீர்வு காண வேண்டும். கைத்தறி, நெசவுத் தொழில் நாளுக்கு நாள் நலிவடைந்து வருவதால், நெசவாளர்கள் வேறு தொழில்களுக்குச் செல்கின்றனர். எனவே, பட்டு, பருத்தி துணிகளுக்கு* GST *ஆணையத்திடம் பேசி, அதற்கான வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

தனியார் கட்டடங்களில் இயங்கும் வணிக வரித் துறை அலுவலகங்களை வணிகர்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வகையில், அந்தந்த மாவட்ட நகர்ப்புறங்களில் அரசு கட்டடங்களில் இயங்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை. தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான், மறைந்த தலைவர்களுக்கும், அதேபோன்று திரைப்படத் துறையிலே மறைந்த தலைவர்களுக்கும் நினைவு இல்லங்கள், மணிமண்டபங்கள் ஆகியவை கட்டும் பணிகள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்களால் சிறப்பாக கட்டப்பட்டன. மாண்புமிகு தலைவருடைய ஆட்சியிலும், இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்காக கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நமது முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தமிழ்நாடு' எனப் பெயர் வரக் காரணமாக இருந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் மணிமண்டபம் விருதுநகர் மாவட்டம், விருதுநகரில் கட்டப்பட்டு, பொது மக்களின் பார்வைக்கு இருந்து வருகிறது. இங்கே சில அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நிலை உள்ளது. இந்த மணிமண்டபத்தில் மழைநீர் தேங்காமல் மணிமண்டபத்தைச் சீரமைக்கவும், அலுவலக அறை,. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன், போதுமே!*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *ஒரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *கழிப்பறை அமைக்க அருகிலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கூடுதல் இடம் கேட்கப்பட்டது. நாளது தேதி வரை நடவடிக்கையிலேயே உள்ளது. எனவே, தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபத்தில் போதிய அடிப்படை வசதிகளையும், நூலகத்தையும், அலுவலக அறையையும் அமைத்துத்தர தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் விருதுநகரில் முக்கியமான அரசு அலுவலகக் கட்டடங்களுக்கு அன்னாரது பெயரைச் சூட்ட வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நினைவினைப் போற்றும் வகையில் அவரது பெயரில் கலையரங்கம் அல்லது நினைவரங்கம் இதில் ஏதாவது ஒன்றை நிறுவ வேண்டுமென எனது தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்தபோது, சென்னை மெரினா கடற்கரையில் அகற்றப்பட்ட கண்ணகி சிலையினை 2006 ஆம் ஆண்டு மீண்டும் திறந்து, சிறப்பு சேர்த்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மகத்தான ஆட்சியை இன்றைக்கு தமிழ்நாட்டில் நடத்தி வருவதால் மக்களுக்கான திட்டங்கள், அரசின் கொள்கைகள் போன்றவற்றை சிறப்பான முறையில் செய்தித் துறையால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தும் தாருங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். சேர்த்துக் கொடுத்து விடுங்கள். கடைசிப் பக்கத்தை எடுங்கள். நன்றி சொல்லுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும், அனைத்து கிராமங்களில்*

உள்ள பொது மக்கள் அரசின் திட்டங்கள், சாதனைகளை அறிந்துகொள்ளும் விதமாக, அதிநவீன மின்னணு விளம்பரத் திரை வாகனம்மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாகனம் பெரிய அளவில் உள்ளதால், கிராம ஊராட்சிகளுக்குச் சென்று திரையிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. அதிநவீன மின்னணு விளம்பரத் திரை வாகனத்தை சிறிய அளவில் அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையில், சிறிய அளவில் அதிநவீன மின்னணு வாகனம் வழங்க தமிழ்நாடு அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: ஒரு நிமிடம். தமிழ் வளர்ச்சி. மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் ஆகியோருக்கு நினைவிடமும் மற்றும் அம்பேத்கரின் படைப்புகள் தமிழ் மொழியாக்கத்திற்கு ரூ.5 கோடி மானியமும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கணினி பண்பாட்டு மாநாடு நடத்தப்படும் என்றும், தமிழ்ப் பண்பாட்டுக் கடல் வழிப் பயணங்கள் ஊக்குவிக்கப்படும் மற்றும் அகவை முதிர்ந்த 591 தமிழ் அறிஞர்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகள் வழங்குவதற்கும், சங்கமம் கலை விழா எட்டு நகரங்களுக்கு விரிவுபடுத்துவதற்கு ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்தமைக்கும், பகுதி நேர நாட்டுப்புறக் கலை பயிற்சிக்கு புதிதாக 25 மையங்கள் அமைக்கப்படும் என்றும், தஞ்சாவூரில் மாபெரும் 'சோழர் அருங்காட்சியகம்' அமைக்கப்படுவதற்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இலங்கையில் தமிழர்கள் பொருளாதார இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்டபோது சுமார் ரூ.197 கோடி மதிப்புள்ள 40,000 டன் அரிசி, 500 டன் பால் பவுடர், 102 டன் மருந்து பொருட்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலங்கை மக்களுக்கு அனுப்பி வைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க ஒன்றிய அரசிடம் வலியுறுத்தியதற்கும், தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு ரூபாய் 399 கோடி மதிப்பீட்டில் 7,469 வீடுகள் கட்டப்பட்டு வருவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *ஒரு நிமிடம். எனது தொகுதி சார்ந்த பிரச்சினைகள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதிப் பிரச்சினைகளை என்னிடம் தாருங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *விருதுநகர் தொகுதியில் ஒரு பல் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, இன்னும் பல் மருத்துவக் கல்லூரி கட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருதுநகரில் பல் மருத்துவக் கல்லூரி விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 6–25

விருதுநகர் நான்குவழிச் சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரியின் அருகில் விபத்து ஏற்படும்போது, அவர்களின் உயிரைக் காப்பாற்ற மருத்துவக் கல்லூரி அருகில் Trauma Care *மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

விருதுநகர் தொகுதியில் அமைந்துள்ள ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள ஷட்டர்கள் சரிவர இயங்காத காரணத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் இதெல்லாம் உங்கள் தொகுதி சார்ந்ததுதான். என்னிடம் தந்துவிடுங்கள். நான் பதிவு செய்து, நீங்கள் பேசியதாக தந்து விடுகிறேன். நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி. (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *என்னுடைய தொகுதி சார்பான கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் வழங்கிவிடுகிறேன். அதை நான் படித்ததாக பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

விருதுநகர் தொகுதியில் ஆனைக்குட்டம் நீர்த்தேக்க ஷட்டரை உடனடியாக மாற்றி விவசாய மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டம் மக்களுக்குப் பயன்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விருதுநகர் பழைய சிவகாசி சாலை கௌசிகா ஆற்றின் குறுக்கே மேல்மட்ட பாலம் அமைத்துத் தர வேண்டும்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள நான்கு வழிச்சாலையில் ஒரு கடவுப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், M.புதுப்பட்டி ஊராட்சியில் சொக்கலிங்கபுரம் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்க அனுமதி தர வேண்டும்.

விருதுநகர் ஒன்றியம், வடமலைகுறிச்சி கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

விருதுநகர் ஒன்றியம், சங்கரலிங்கபுரம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், M.புதுப்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

விருதுநகரில் சத்திரரெட்டியாபட்டி முதல் சூலக்கரை வரை சாலையின் இருமருங்கிலும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 13–4–2023 வியாழக்கிழமை அன்று மாலை விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 15, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

(சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 54, வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) ஆகியன அன்றைய தினமே, அதாவது 13–4–2023 வியாழக்கிழமை அன்று காலை ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளோடு விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(ஈ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(உ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

ஊ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(எ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை நமக்குக் கற்றுத் தந்த பேரறிஞர் அண்ணா, பல இந்திய பிரதமர்களும், குடியரசுத் தலைவர்களும் உருவாகுவதற்குக் காரணமாக இருந்து, சுதந்திர தின விழாவில் அந்தந்த மாநில முதல்வர்கள்தான் கொடியேற்ற வேண்டும் என்ற உரிமையைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன். கடந்த 2 ஆண்டுகளாக,*

அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியுறும் வண்ணம் திராவிட மாடல் ஆட்சி நடத்தி, ஏழை, எளிய மழலைச் செல்வங்களுக்கு காலை உணவளித்து, தன்னுடைய 50 ஆண்டுகால கடுமையான உழைப்பின்மூலம் உலகில் வாழும் தமிழர்களின் ஒரே தலைவராக உருவெடுத்திருக்கும் தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். காலையில் ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிரான தீர்மானம்; மாலையில் ஆன்லைன் தடைச் சட்டத்தில் ஆளுநரின் ஒப்புதல்; இதுதான் எங்களுடைய அரசியல் ஆளுமை கொண்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்; (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் எதிர்காலம். எங்கள் சின்னவரை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.

என்னை 27,759 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த இராயபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராயபுரம் பகுதியில் வளர்ச்சித் திட்டங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1950–லிருந்து வடசென்னையின் வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு என்பதையே நான் பார்க்கவில்லை. அந்தவகையில் முதன்முறையாக, வடசென்னையின் வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் ரூபாய் ஆயிரம் கோடி நிதி ஒதுக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.147 கோடியில் புதிய பன்னோக்கு மருத்துவப் பிரிவும், செவிலியர் பயிற்சிப் பள்ளி மற்றும் விடுதி அமைக்கப்படுவதற்கு நிதியொதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

RSRM மருத்துவமனையிலே கடந்த மாதம் 200 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடத்தை ரூ.30 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடசென்னையில் பழைய கழிவுநீர் உந்துகுழாய்களை அகற்றி, புதிய கழிவுநீர் உந்துகுழாய்கள் ரூபாய் 198 கோடியில் அமைப்பதற்கான

அறிவிப்பினை சட்டமன்றத்தில் அறிவித்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையின் சார்பாக,

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என வள்ளுவர் குறிப்பிடுவது பொதுநிதியின்பாற்படும் எனலாம். பொருள் வரும் வழிகளை மென்மேலும் இயற்றலும், ஈட்டிய பொருட்களை ஓரிடத்தில் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை அறம், பொருள், இன்ப வழிகளில் வகுத்துச் செலவு செய்தலும் வல்லதே நல்லரசாகும் என்பது வள்ளுவர் கருத்து. வள்ளுவரின் குறளுக்கேற்ப, நாட்டை அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக வழிநடத்துகின்றார், நம் திராவிட நாயகர் மாண்புமிகு முதல்வர். கடன்களைக் குறைத்து வருவாயை அதிகரித்து செலவினங்களைச் சுருக்கி, நிதி நிர்வாகம் சீர்பட திறமையான ஓர் அரசை, திராவிட மாடல் அரசை மக்கள் போற்றும் வண்ணம் சிறப்பாக நடத்தி வருகின்றார், நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்பகல் 6–30

2023–2024 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கைகளில் வணிக வரி மற்றும் பதிவுத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை ஆகிய துறைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்தின் வழி திட்டத்தினைத் தீட்டி, சாதாரண குடிமகன்மீது தேவையற்ற சுமையை ஏற்றாமல், வணிகர்களின் நலனில் அக்கறை செலுத்தி, வருவாயைப் பெற வழிவகை செய்வது என்பது, ஓர் அரசின் தலையாய பணி. வளர்ச்சியை நோக்கிச் செல்வதுதான் ஓர் அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். அவ்வகையில் கடந்த ஆண்டு வசூலிக்கப்பட்ட வரித் தொகையைவிட, இவ்வாண்டு இத்துறை கூடுதல் வருவாயை ஈட்டியுள்ளது.

சரக்கு மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களின்கீழ், வரிவிதிப்பு வட்டங்களில், மாநில கணக்காயரால் குறிப்பிட்ட கால அளவில்

தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால், இத்துறை குறைகள் இல்லாத நேர்த்தியை அடைந்துள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி, பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கும்போது, பூ மீது அமராமல், கொஞ்சி முத்தமிடுவதுபோல் பூக்களுக்கு ஆனந்தம் அளித்துக்கொண்டு, மகரந்தத்தை உறிஞ்சுகிறது. பூ பின்னர் விதையாகி, மற்றொரு செடியாவதற்கு தேனியே உதவும். அதைப்போல, அரசன் வரியை மக்களிடமிருந்து பெறும்போது அவர்களை துன்புறுத்தாமலும், வரியைக் கொடுப்பதில் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துமாறும், வரியைப் பெறுகிற அரசன் மக்களின் நல்வாழ்விற்கு உதவுவதை உணர்த்துவதாக அது அமைய வேண்டும். இதைத்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்.

“சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்” என்பதைப்போல நிதியிருந்தால்தான் ஏழைகளுக்கு உதவ முடியும். இதை மனதில் வைத்து மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளையும், அதனை ஏழை மக்களுக்கு அளிப்பதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதற்கு உதாரணமாக 7,000 கோடி ரூபாய், இந்த budget–லே ஒதுக்கீடு செய்து, ஏழையெளிய மக்கள் உரிமைத் தொகையைப் பெறுவதற்கு வழிவகுத்தவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டிற்கான வணிக வரித் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் 4–ல் 2022–2023 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வசூல், 1,33,541 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 28,570 கோடி ரூபாய் அதிகம். இதுவரை எந்த அரசும் நிகழ்த்திடாத சாதனையை மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ** தமிழ்நாடு அரசின் வருவாய் தற்போது தி.மு.க. ஆட்சியில் அதிகரித்து வருகிறது. கூடுதலாக வசூலிக்கப்பட்ட 28,571 கோடி ரூபாய் மக்கள் நலத் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டுள்ளது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

வணிக வரித் துறைமூலம் 1,33,541 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசிற்கு வருவாய் கிடைத்திருக்கின்ற நிலையில், அதற்கான செலவினம் அண்ணா தி.மு.க ஆட்சியோடு ஒப்பிடும்போது, வெறும் 36 விழுக்காடு மட்டுமே என்பதை பார்க்கும்போது செலவினம் வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி மற்றும் இதர வரிகள்மூலம் பெறப்படும் வருவாயும் 100 விழுக்காட்டிற்குமேல் உயர்ந்திருக்கிறது. அதாவது, 417 கோடி ரூபாயிலிருந்து 897 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஆட்சியைப் பற்றி பாராட்டிப் பேசட்டும். ஆனால், தவறாக போன ஆட்சியில் ** பேசியிருக்கிறார். ஆதாரமில்லாமல் பேசியிருக்கிறார். நாங்களும் இதுபோன்று பேசினால் சரியாக இருக்குமா? இது ஆரோக்கியமல்ல. (குறுக்கீடுகள்) அவர் அப்படிப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்) ஆதாரமில்லாமல் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) ஆதாரமில்லாமல் பேசினால் எப்படி? நாங்களும் பேசலாமா? (குறுக்கீடுகள்) எல்லா துறைகளைப் பற்றியும் எங்களால்கூட பேச முடியும். (குறுக்கீடுகள்) வேறு என்ன? (குறுக்கீடுகள்) வாய்க்கு வந்ததை எல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரி செலுத்துவோரின் குறைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 ஏப்ரல் 10] [திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி]

மாவட்ட அளவிலான வரி செலுத்துவோரின் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்பது, வரி செலுத்துவோர்மீது தி.மு.க. அரசிற்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிகர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும், வணிக வரித் துறை சார்ந்த குறைகளைப் பெற்று விரைவாகத் தீர்வு காண வணிக வரித் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு புகார் பிரிவு அமைக்கப்பட்டிருப்பதும், பிரத்யேக தொலைபேசி எண், மின்னஞ்சல் அமைக்கப்பட்டிருப்பதும், அதன்மூலம் பெரும்பாலான குறைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதும் பாராட்டுக்குரிய அம்சங்கள்.

பிற்பகல் 6–35

வணிக வரித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 46–ல் மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு பெறப்பட்ட சந்தைக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக ஒன்றிய அரசு மேல் வரி விதிப்பதை 30–3–2026 வரை நீட்டித்துள்ளது என்றும், அதேசமயத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கும் காலம் 30–6–2022–க்குப் பின்னர் நீட்டிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது, மத்திய அரசினுடைய இரட்டை வேடத்தைக் காட்டுகின்றது. தமிழக மக்கள்மீது அக்கறை உள்ளதாகக் காட்டிக்கொள்ளும் மத்திய ஒன்றியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி 2 ஆண்டுகளுக்கான அந்த நிதியைப் பெற்றுத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர்களிடமிருந்து வரி வசூலிக்கும் அதேநேரத்தில், அவர்களுக்காக நல வாரியத்தை அமைத்தவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கிட்டத்தட்ட 88 ஆயிரம் பேர் வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. வணிகர்களின் நலன் பாதுகாக்கப்படுவதோடு, வணிக வரி அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பல கட்டடப் பணிகள் நிறைவுபெற்று புதுப்பொலிவோடு இயங்கி வருகின்றன. ஒட்டுமொத்தமாக, வணிக வரித் துறை பொதுமக்களின் பயனுக்காகவும், வணிகர்களின் நலனுக்காகவும் செம்மைசேர் நெறியோடு இயங்கி வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 6 ஆண்டுகளில் வணிக வரித் துறையின் வரி வருவாய் வசூல் எந்த அளவிற்கு இருந்துள்ளது என்பதை ஒரு குறிப்பாகக் காட்ட விரும்புகிறேன். 2016–2017–ல் வரி வருவாய் வசூல் ரூ.67,576 கோடியே 77 இலட்சம்; 2017–2018–ல் வரி வருவாய் வசூல் ரூ.73,148 கோடியே 28 இலட்சம்; 2018–2019–ல் வரி வருவாய் வசூல் ரூ.87,905 கோடி; 2019–2020–ல் வரி வருவாய் வசூல் ரூ.95,086 கோடியே 93 இலட்சம்; 2020–2021–ல் வரி வருவாய் வசூல் ரூ.96,209 கோடியே 23 இலட்சம்; ஆனால், கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட இந்த 2 ஆண்டுகளில் 2021–2022–ல் வரி வருவாய் வசூல் ரூ.1 இலட்சத்து 4 ஆயிரத்து 970 கோடியும்; (மேசையைத் தட்டும் ஒலி) 2022–2023–ல், இந்த ஆண்டில் வரி வருவாய் வசூல் ரூ.1 இலட்சத்து 33 ஆயிரத்து 541 கோடியும் ஈட்டப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்றால், வருவாய் மட்டுமே ஓர் அரசினுடைய குறிக்கோள் என்பதில்லை. ஆனால், ஒரு நல்ல அரசாங்கம் ஆட்சி செலுத்தும்போதுதான் இந்த 30% increase *என்ற அடிப்படை உயர்வு கிடைக்கும். அதைத்தான் நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே, இரண்டாண்டு காலம் சீரிய முறையில் ஒரு ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்று சொல்வதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *பத்திரப் பதிவுத் துறை 1–1–1864–ல் தொடங்கப்பட்டு 1–1–1865–ல் நடைமுறைப்படுத்தப்பட்டு, 150 ஆண்டு கால வரலாற்றில் பொது மக்களின் சொத்தைப் பாதுகாக்க இதுவரையில் இல்லாத புரட்சிகரமான திட்டமான பிரிவு 77–ஐ செயல்படுத்தியுள்ளார்கள். இந்த அவையில் நிறைய வழக்கறிஞர்கள் இருப்பீர்கள்; 150 ஆண்டு கால ஆட்சியில் யாருமே சிந்திக்காத ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தவறாக பதிவு செய்யப்பட்ட சொத்து விவரங்களை மாவட்ட பதிவாளரிடம் கொண்டுபோய்க் காண்பித்து, இது தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினால், அந்தப் பதிவை* cancel *செய்ய முடியும் என்ற விதியை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் இலட்சக்கணக்கான ஏழை, எளிய மக்களுடைய வாழ்க்கையை உயர்த்தித் தந்துள்ளார்கள். அதன்*

முதல்படியாக நடிகை வாணிஸ்ரீ அவர்கள் தன்னுடைய சொத்துப் பத்திரத்தை தலைவர் அவர்களுடைய கரங்களிலிருந்து பெற்றுச் சென்றார்கள். நீதிமன்றத்தில் ஒரு Civil suit தொடர்ந்தால் அந்த வழக்கில் தீர்ப்புக் கிடைப்பதற்கு குறைந்தது 30 ஆண்டுகள் பிடிக்கும் என்பதை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) Time இல்லை. சரி, பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், தமிழ்நாட்டில் சினிமா துறைக்கு விதிக்கப்பட்ட 50% கேளிக்கை வரியை cipher ஆக மாற்றியவர் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் கடம்பூர் ராஜூ அவர்கள் பேசியபோது, எங்களுடைய ஆட்சியில்தான் சிறப்பாக எல்லாவற்றையும் கொண்டு வந்தோம் என்று தெரிவித்தார்கள். ஆனால், GST 28% அதற்குமேல் உங்கள் ஆட்சியில் LBT, Local Body Tax 30% போட்டீர்கள். நான் தமிழ்நாடு திரையரங்கச் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்திருக்கிறேன். தமிழ் திரையுலக வரலாற்றில் 54 நாட்கள் ஒரு திரையரங்கம் மூடியிருந்ததென்றால், அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். அவர்கள் போராட்டம் நடத்தியபிறகுதான். . .

பிற்பகல் 6–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாநிதி, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாநிதி, பேசுங்கள்.

***திரு. ஜெ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த உறுப்பினர் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: கட்சித் தொண்டனுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்து, கலைஞர் வழியில் இயக்கத்தை நடத்தி, ஓட்டு வளர்ச்சியை மட்டும் கணக்கில்கொள்ளாமல், நாட்டு வளர்ச்சியை நலத்தில்கொண்டு, தமிழகத்தை தலைநிமிரச் செய்து, வள்ளல்கள் பாரி, காரி, ஓரி வழியில் நின்று, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட திராவிட மாடல் ஆட்சியை சீரும், சிறப்புமாக தமிழக மக்களுக்குத் தந்துள்ள (மேசையைத் தட்டும் ஒலி) உதயசூரியன் தளபதியார் அவர்களுக்கும், இளைய சூரியன் சின்னவர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவித்து, 2024-ல் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்று, இந்தத் திராவிட மாடலின் ஆட்சி, நீண்டு, இந்தியா எங்கும் நிலைத்திட உறுதிபூண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை மீண்டும் ஒருமுறை வணங்கி, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெரு முதல் சூரியநாராயண செட்டி தெரு வரை மேம்பாலம் ஒன்று கட்டித்தர வேண்டும்.

வட சென்னையில் ஆர்.கே.நகர், திருவொற்றியூர், இராயபுரம் ஆகியவற்றிற்கு சேர்த்தபடியாக இராயபுரம் பகுதியில் நவீன நூலகத்தை அமைத்துத் தர வேண்டும்.

மூலக்கொத்தளத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக கட்டப்பட்ட 1,044 வீடுகளின் பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.5.50 இலட்சம் மற்றும் ரூ.6.50 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இத்தொகையினை பரிசீலித்து இலவசமாகவோ அல்லது குறைந்தபட்ச தொகையாகவோ (ரூ.1.50 இலட்சம்) நிர்ணயம் செய்ய வேண்டும்.

IAS/IPS, TNPSC (Group) மற்றும் Bank Exam தேர்வுகள் எழுதுவதற்கான பயிற்சி மையம் அரசு சார்பில் அமைத்துத் தர வேண்டும்.

இராயபுரம் தொகுதியில் உள்ள பழைய கழிவுநீர் மற்றும் குடிநீர்க் குழாய்களை மக்கள்தொகைக்கு ஏற்ப மாற்றி விரைவில் புதுப்பித்துத் தர வேண்டும்.

2023 ஏப்ரல் 10] [திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி]

வட சென்னையில் பழைய கழிவுநீர் உந்து குழாய்களை அகற்றி புதிய கழிவுநீர் உந்து குழாய்களை அமைக்க வேண்டும்.

இராயபுரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு 53-ல் போஜராஜன் நகர் அருகில் அட்டில் கிரவுண்டு பகுதியில் இரயில்வே லைன் அருகில் உள்ள சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் பகுதியினை காலி செய்யச் சொல்லியுள்ளனர். அரசு இரயில்வே துறையிடம் கலந்து ஆலோசனை செய்து அவர்களுக்குக் குடியிருக்க மாற்று ஏற்பாடு செய்து தர வேண்டும்.

இராயபுரம் தொகுதி, எம்.சி.ரோடு பகுதியில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 133 கடைகள் கொண்ட வணிக வளாகத்தை, 433 கடைகள் கொண்ட வணிக வளாகமாக மாற்றித் தர வேண்டும்.

இராயபுரம் பகுதியில் மாவட்ட நிர்வாகத்திற்குச் சொந்தமான இடம் கல்லறை (Cemetery Road) சாலையில் அமைந்துள்ளது. இதில் புதிய பத்திரப் பதிவு அலுவலகத்தைக் கட்டித் தர வேண்டும்.

இராயபுரம் தொகுதியில் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஒரு புதிய Auditorium அமைத்துத் தர வேண்டும்.

இராயபுரம் தொகுதியில் சமுதாயக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

இராயபுரம் தொகுதியில் உள்ள மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்களுக்கான சிறப்பு ஆலோசனை மையம் மற்றும் புதிய கருவுறுதல் மையம் (Fertility Centre) அமைத்துத் தர வேண்டும்.

இராயபுரம் 53-வது வார்டில் உள்ள மூலக்கொத்தளம் பகுதியில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும்.

இராயபுரம் பகுதியில் துணி வகைகளுக்கு என்று ஒரு டிரேட் சென்டரும், ஆடை வடிவமைத்தல் பணி மற்றும் பயிற்சிக்கு டெக்ஸ்டைல்ஸ் பார்க்கும் உருவாக்கித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு)

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் மூர்த்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்கள் காலத்தில் தியேட்டர்களெல்லாம் மூடியிருந்தன என்று சொன்னார்கள், உண்மைதான். ஆனால், அன்றைக்கு பேச்சுவார்த்தைக்கு தியேட்டர்களுக்கான கமிட்டியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களே வந்தார்கள். மூடியிருந்த தியேட்டருக்கு 20, 30 ஆண்டுக் காலமாக வரன்முறைப்படுத்தாத* ticket *கட்டணத்தை வரன்முறைப்படுத்தி, தியேட்டர்களை வாழ வைத்த ஆட்சி, அம்மா அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல,* maintenance charge *வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் உயர்த்திக் கொடுத்தோம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். சமூக நீதிக்காக (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *சமூக நீதிக்காக தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்தியாவிற்காகவே உழைத்துவரும், ஏழைகளின் முன்னேற்றத்தை தனது அரசியல் வாழ்வில் பெரும் கொள்கையாகக் கொண்டு, சிறந்த நிர்வாகம் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களுக்கான ஆட்சியை வழங்கிவரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திராவிட இயக்க சிந்தனைகளை, இன்றைய இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் செல்வதையும், இளைஞர்களின் முன்னேற்றம், கடைக்கோடி மக்களின் வாழ்க்கைத்தரம், அனைவருக்கும் சமமான வாய்ப்பு ஆகியவற்றிற்காக ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் இளைஞரணிச் செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்

துறை அமைச்சர் சின்னவர் திரு. உதயநிதி அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பத்திரப் பதிவுத் துறை, தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் துறைகளில் முக்கியமான துறை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இத்துறை பல சிறப்பான மாற்றங்களினாலும், முன்னேற்றங்களினாலும் தனித்துவமான ஒரு துறையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இத்துறை சார்ந்த பின்வரும் கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக முன்வைக்க விரும்புகிறேன்:

கடந்த ஆட்சிக் காலத்தில் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக பத்திரப் பதிவைச் சார்ந்த துறைகள் பெரும் சவால்களை சந்தித்தன. பெரும் இழப்புகள் நேர்ந்தன. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பதிவுக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதேவேளையில், பதிவுக் கட்டணக் குறைப்பு மட்டுமல்லாமல், Guideline value குறைப்பு அல்லது Guideline value ஏற்றம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். எனவே, Guideline value-ஐ குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இயலாத நிலையில் அவற்றின் விலையை ஏற்றாமல் தொடர்ந்தாலே மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்னும் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக வைக்க விரும்புகின்றேன்.

பதிவுத் துறை நவீனமயமாக்கப்பட்டு, கணினிமயமாக்கப்பட்டு இயங்கி வருகிறது. இது மக்களுக்குப் பெரும் பயன்களைத் தருகிறது. கணினிமயமாக்கப்பட்டாலும், இதை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். Securin எனப்படும் இணைய பாதுகாப்பு நிறுவனம் அதாவது Cyber security நிறுவனம், 2021 ஆம் ஆண்டு அரசின் பல இணையதளங்களை ஆய்வு செய்து, அதில் பெரும்பாலான அரசு இணையதளங்கள் எளிதில் hacking செய்யக்கூடிய அபாய கட்டத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. மாற்றங்கள் நிறைந்த இந்த உலகில் தொழில்நுட்பம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதே அளவில் Cyber security எனப்படும் இணைய மற்றும் தகவல் பாதுகாப்பும் மிகவும் அவசியமாகிறது.

தமிழ்நாடு போன்ற நன்கு வளர்ந்த மாநிலங்களில் அதிக பத்திரப் பதிவுகள் செய்யப்படுகின்றன. பல கோடி தகவல்கள் கையாளப்படுகின்றன. ஆகவே, பத்திரப் பதிவுத் துறை தனது மென்பொருள் மற்றும் பிற இணைய சேவைகளில் உலகத் தரத்தில் இணைய தகவல் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும். பிற துறைகளைவிட, பத்திரப் பதிவுத் துறை இணைய தாக்குதலுக்கு உட்படும் அபாயம் அதிகமாக உள்ளது. எதிர்காலத்தில் கண்டிப்பாக நாம் எதிர்கொள்ளவிருக்கும் இந்த அபாயத்தை உணர்ந்து, அதற்கான மென்பொருள் மாற்றங்களைச் செய்ய பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-45

எனது தியாகராய நகர் தொகுதிக்குட்பட்ட அசோக் நகர் மற்றும் கே.கே. நகர் பத்திரப் பதிவு அலுவலகம் தற்போது முகப்பேருக்கு மாற்றப்பட்டுள்ளது. அதனால், இப்பகுதி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அசோக் நகர், 11th Avenue-வில் உள்ள நூலகத்தின் அருகிலிருக்கும் காலியிடத்தில், இப்பகுதி மக்கள் பயன்பெறும்வகையில், பத்திரப் பதிவு அலுவலகம் கட்ட வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகள். 2021 ஆம் ஆண்டு பெருமழையின்போது எனது தியாகராய நகர் தொகுதி அதிகம் பாதிக்கப்பட்டது. அதிலும், மேற்கு மாம்பலம் பகுதி அதிகம் பாதிக்கப்பட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்றேன், குறைகளைக் கூறினேன். அமைதியாகச் சிந்தித்தார். அந்த அமைதிக்கும், சிந்தனைக்கும் எனக்கு அன்று அர்த்தம் தெரியவில்லை. அவரைச் சந்தித்துவிட்டு வந்த வெகுசில நாட்களில், அடுக்கடுக்கான அறிவிப்புகள் வந்தன. விரைவாக பணிகள் தொடங்கப்பட்டன. தொகுதி முழுவதும் பரவலாக மழைநீர் தேங்கும் இடங்களையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, அரசு, மழைநீர் வடிகால் கால்வாய்களை அமைத்துள்ளது. அப்போதுதான் எனக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அந்த அமைதிக்கும், அவருடைய சிந்தனைக்குமான அர்த்தம் புரிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதியைச் சார்ந்த மேற்கு மாம்பலம் பகுதி மக்களில் பெரும்பாலானோர் நமது ஆட்சிக்கு எதிராக வாக்களித்தனர். அவர்கள் முந்தைய ஆட்சியாளர்களை நம்பினர். ஆனால், அப்பகுதி மக்கள் மழைநீர் தேக்கத்தால் பாதிக்கப்பட்டதே முந்தைய ஆட்சியாளர்கள் Smart City என்ற திட்டத்தின் பெயரில் செய்த குளறுபடிகளால்தான். அப்பகுதி மக்கள் யாரை நம்பினார்களோ, அவர்களே ஏமாற்றிவிட்டனர். நமது ஆட்சிக்கு எதிராக வாக்களித்த அப்பகுதியில்தான், தியாகராய நகர் தொகுதியிலேயே அதிக மழைநீர் கால்வாய் அமைத்துத் தந்துள்ளார், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனது குழந்தை தீய சேர்க்கைகளால் கெட்டுப் போனால்கூட, தாய் அன்பால் அரவணைப்பாள். அப்படிப்பட்ட தாயுள்ளம் பெரும் தலைவர்களிடம்தான் இருக்கும். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தாயுள்ளத்தால், எனது தொகுதி மக்கள் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் பயனடைகின்றனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சராக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த ஆண் தாய்க்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த குறைகள் என்னவென்று கேட்டால், குடிநீர் மற்றும் கழிவுநீர் சார்ந்த குறைகள்தான். தொகுதியில் பரவலாகவே குடிநீரில் கழிவுநீர் கலக்கும் நிலை உள்ளது. நீரேற்று நிலையங்கள், அதாவது pumping stations சரிவர இயங்குவது கிடையாது. பல பகுதிகளிலுள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் 30 அல்லது 40 வருட காலம் பழமையானவை. அவையனைத்தையும் புதுப்பிக்க வேண்டும். எப்படி மழைநீர் வடிகால் தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்துடன் உதவினார்களோ, அதேபோல் இந்தக் குறைகளையும் தீர்க்க உதவ வேண்டும் என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகராய நகர் தொகுதியில், சில இடங்களில் பட்டா வழங்க வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக, சில கிராம நத்தம் நிலங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவற்றின் அருகிலேயே உள்ள பிற கிராம நத்தம் நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் உள்ளது. ஆகையால், தொகுதியில் உள்ள பட்டா சார்ந்த குறைகளைத் தீர்க்க வேண்டும் எனும் கோரிக்கையை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக முன்வைக்கிறேன்.

மேலும், முதியோர் ஓய்வூதியம், தொகுதியில் பலருக்கு தடைபட்டுள்ளது. ஆகவே, இதில் சிறப்புக் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சார்ந்த 133-வது வார்டு, பாண்டி பஜார் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் 82 மாணவர்கள் மட்டுமே படிப்பதால், அவர்களை அருகில் உள்ள பிற அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்து, அந்த இடத்தில் ஒரு சிறப்பு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொகுதிவாழ் மக்களின் பிரதிநிதியாக முன்வைத்திருந்தேன். ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னிடம் சிறு ஆலோசனைகூட செய்யாமல், அவர்களாகவே முடிவெடுத்து, ‘அந்த இடத்தில் மருத்துவமனை கட்ட இயலாது’ எனும் முடிவை எனக்கு கடிதத்தின்மூலம் அனுப்பி வைத்தனர். இது எனக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது. மருத்துவமனை அமைக்க இயலாததற்கு கூறப்பட்டுள்ள காரணங்கள் ஒரு மக்கள் பிரதிநிதியாக எனக்கு ஏற்புடையதாக இல்லை. ஆகவே, இதனை மறுபரிசீலனை செய்து, அந்த இடத்தில் மருத்துவமனை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தியா எனும் இப்பெரும் தேசத்தின் வடகோடி முனையை ஆண்ட முன்னாள் முதல்வர் திரு. உமர் அப்துல்லா அவர்கள், அனைத்து ஜனநாயக சக்திகளும் தென்கோடி முனையை ஆளும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பின்னால் அணிவகுக்க வேண்டுமென்று சொல்கிறார். சென்ற கூட்டத் தொடரிலேயே கூறியிருந்தேன், கலைஞர் Kingmaker, தளபதி King என்று; அதற்கான காலம் வந்துவிட்டது என்பதையே இது உணர்த்துகிறது.

திராவிட தலைவர், இந்தியத் தலைவர் ஆவதற்கும், திராவிட மாடல், இந்திய மாடல் ஆவதற்குமான காலம் வந்துவிட்டது. தமிழ்நாடு அடையும் பயனை, முழு இந்தியாவே அடைய நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு,

2023 ஏப்ரல் 10] [*திரு. ஜெ. கருணாநிதி*]

வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன் அவர்கள். சரியாக 10 நிமிடங்களில் முடியுங்கள்.* Correct *ஆக 7.00 மணிக்கு முடித்துவிடலாம்.*

பிற்பகல் 6–50

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்றவர், காவியமானவர், வேதனை தீர்த்தவர், விழிகளில் நிறைந்தவர், மன்னாதி மன்னன் மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) காலத்தால், கோலத்தால், சீலத்தால், அழிக்க முடியாத காவியத் தலைவி, உலகத் தமிழர்கள் அம்மா என்றழைத்த அன்பு தெய்வம், இதய தெய்வம், தங்கத் தாரகை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எளிய தொண்டனுக்கும் ஏற்றம் தந்த ஏந்தல், ஏர்பிடித்து உழவு செய்த உண்மையான விவசாயி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அமைத்து, தற்போது தமிழகத்தில் புதியதாக 3 நிலக்கரிச் சுரங்கங்களை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுவதாக மத்திய அரசை அறிவிக்கை செய்யச் செய்து, காவேரி டெல்டா மக்களைப் பாதுகாத்த விவசாயிகளின் பாதுகாவலர்; மக்களுக்கு நல்லாட்சி தந்து (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சிகளை வீழ்த்தி, எதிரிகளை வேரறுத்து, பொன்மனச் செம்மல் எம்.ஜிஆர்., பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு பெரும் தலைவர்களும் கண்ட கனவினை நனவாக்கி, சாதாரண தொண்டனும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்புக்கு வரலாம் என்ற விதிக்கு உயிர் கொடுத்து, கழகத்தை மீட்டெடுத்த மீட்பர்; சிலுவம்பாளையம் ஈன்றெடுத்த சிங்க நிகர்த் தலைவர்; எதிர்காலத்தில் தமிழ்நாட்டை ஆளப் போகின்ற நாளைய முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்புத் தொண்டர்களின் பாதுகாவலர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.*

2023–2024 ஆம் ஆண்டின் வணிக வரி, பத்திரப் பதிவு மற்றும் செய்தித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான

[திரு. K.A. பாண்டியன்] [*2023 ஏப்ரல் 10*

விவாதத்தில் கலந்துகொண்டு கழகத்தின் சார்பில், பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா, முன்னாள் அமைச்சர் வணக்கத்திற்குரிய அருமை அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 1–1–2021 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண் 45–ன்படி, உயர் கல்வித் துறையிலிருந்து மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மாற்றப்பட்டு கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தினார்கள். ஆனால், அன்றைக்கு என்னுடைய கோரிக்கையை ஏற்று, MRI, CT scan *வழங்கியும், இருதய சிகிச்சைக்குத் தேவையான* Cath lab *வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டும், இன்றுவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் அங்கு இல்லை. மருந்து, மாத்திரைகளைக்கூட வெளியில் சென்று வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. பிற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைப்போல் தமிழக அரசால் வழங்கப்படுகின்ற மருந்து மாத்திரைகளை இம்மருத்துவமனைக்கும் வழங்கிட வேண்டும். சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் மற்றும் சீர்காழி தொகுதி மக்கள், மருத்துவத் தேவைக்கு இம்மருத்துவமனையைத்தான் நம்பி உள்ளார்கள். அனைத்துத் துறைகளுக்கும் உயர் சிறப்பு மருத்துவர்களை நியமனம் செய்திட வேண்டும். அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் தடையில்லாமல் ஊதியம் வழங்கிடவும் கேட்டுக்கொள்கிறேன்.*

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், திருக்கழிப்பாலை கிராமம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2019–2020 ஆம் ஆண்டில் நில அளவை செய்திடவும், மண் மாதிரி பரிசோதனை ஆய்வு மேற்கொள்ளவும் அன்றைக்கு ரூபாய் 94 இலட்சத்து 52 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்து, ஆய்வுப் பணிகள் நிறைவு பெற்ற நிலையில், இன்றுவரை இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர்

அவர்கள் நிறைய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். எங்களது பிரச்சினையை விரைந்து முடித்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, ஆதிவராகநல்லூர் கிராமத்தில் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும்பொருட்டும், நிலத்தடி நீர் உப்பாக மாறுவதைத் தடுக்கும் வகையிலும் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு புதிய தடுப்பணை கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சுமார் 13 ஆண்டுகளாக 205 ஊழியர்கள் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களை ஆய்வு செய்து, ஏற்புடைய கிராமத்தில் தூண்டில்வளைவு திட்டம் அமைத்துத்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 150 ஆண்டுகால பழமையான பதிவுத் துறை வரலாற்றில் வெளிப்படைத் தன்மை, எளிய பாதுகாப்பான விரைவு பதிவு சேவை, நேர சேமிப்பு, சீரான பாகுபாடற்ற வரிசைக்கிரமமான பதிவு ஆகிய பயன்பாடு நோக்கங்களைக் கொண்டு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் STAR 2.0 என்ற திட்டம் 12–2–2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு மக்கள் வரவேற்புடன் தற்போது வரை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ், பதிவுத் துறையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 14 சார்–பதிவகங்கள், 8 மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள், 8 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள், 67 சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டன என்பதனை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6–55

சிதம்பரம் நகரிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகம் மிகவும் பழமையான, நூற்றாண்டுகளைக் கடந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் கேள்வி நேரத்தின்போது, அவையில் நான் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரூ.5 கோடியே 72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கும் என்றார்கள். நான்கு மாதகாலமாகியும், பணிகள் இன்று வரை தொடங்கப்படவில்லை. ஆனால், இன்று 2023–2024 ஆம் ஆண்டின் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திர பதிவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் பக்கம் 77–ல் அறிவிப்பாக பதிவுத் துறையில் பழமை வாய்ந்த கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, முதற்கட்டமாக 50 கட்டடங்கள் நவீன வசதிகளுடன் கட்டுவதற்கு 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.96 கோடியே 64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில், சிதம்பரம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு இந்த நிதியாண்டிலேயே கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசு நிலமும், கோயில் நிலமும், வக்ஃப் வாரிய நிலங்களைப் பதிவு செய்திட இயலாத வகையில் வழிகாட்டி மதிப்பு செய்முறையில் காட்டப்படுவதைப்போல, பஞ்சமி நிலங்களையும் ஆதி திராவிட பிரிவினர்கள் விற்பனையைப் பதிவு செய்வதைத் தடுத்திடவும், தங்களுக்கு மட்டும் பரிவர்த்தனை செய்ய அனுமதிக்கும் வகையில் உரிய பாதுகாப்பு விதிமுறைகளைப் பத்திரப் பதிவுத் துறை செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பத்திரப் பதிவுக் கட்டணம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் வழிகாட்டி மதிப்பை 33 சதவிகிதமாக உயர்த்தியுள்ளீர்கள். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், தேர்தல் நேரத்தில் அனைத்து குடும்பத் தலைவிக்கும் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு, தற்போது தகுதியானவர்களுக்கு மட்டும்தான் என்று சொல்வதைப்போல (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளது. இது ஏழையெளிய மக்கள்மீது, இடிமேல் இடிவிழுந்ததைப்போல் உள்ளது. எனவே, இந்த அரசு வழிகாட்டி மதிப்பை. . .

2023 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் வாங்கிவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு, நீங்கள் கேட்ட கேள்விகள் அனைத்திற்குமே பதில் சொல்லியாகிவிட்டது. நீங்கள் அதையே திரும்பச் சொல்கிறீர்கள். அந்தக் கட்டடம் அறிவித்தாகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் புதிய சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் பேசிவிட்ட பின்னர், நீங்கள் நிறைவாக சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள கட்டடத்திற்கு நாம் ஏற்கெனவே அனுமதி கொடுத்து, அது இப்போது பொதுப் பணித் துறையின் ஆய்வில் இருக்கிறது. இதைப்பற்றி உங்களுக்கே தெரியும். நீங்கள் பேசியதையே, திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர், அவருடைய தொகுதி விஷயமாக பேசுகிறார்கள்; பேசிக்கொள்ளட்டும்; ஒன்றும் பிரச்சினையில்லை. நீங்கள் பேசுங்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *ஒரு குடும்பத்தில் தலைவருக்கு 50 சென்ட் நிலம் உள்ளது. அவருக்கு 3 பிள்ளைகள் இருந்தால் ஒருவருக்கு 17 சென்ட் நிலம் வரும். அதை அவர் வேறு ஒருவருக்கு விற்க நினைத்தால், 21 சென்ட்டுக்குகீழ் இருந்தால், பத்திரப் பதிவு செய்வதில் சிரமம் உள்ளது. எனவே, 21 சென்ட்–க்கு கீழுள்ள இடத்தை பத்திரப் பதிவு செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை அரசு களைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்விக் கண்ணைத் திறந்த கடவுளாகப் பார்க்கப்பட்டவர் சுவாமி சகஜானந்தா அவர்கள். அவரின் பெருமையை அறிந்த மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிதம்பரத்தில் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் ரூ.1 கோடியே 15

இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைத்திட 23-8-2015 அன்று அடிக்கல் நாட்டி, பணிகளைத் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 2-2-2018 அன்று மணிமண்டபத்தைத் திறந்து வைத்ததோடு மட்டுமல்லாமல், அவரது பிறந்த தினமான ஜனவரி 27 ஆம் நாளை அரசு விழாவாக அறிவித்து, சுவாமி சகஜானந்தாவிற்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, கடலூர் மாவட்டத்தில் வாழ்ந்து மறைந்த முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெரியவர் ஐயா எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *10 நிமிடங்கள் முடிந்துவிட்டன. இன்னும் ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு கடலூர் மாநகரில் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் ரூ.2 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபத்தை அமைத்து, அதனை தனது திருக்கரங்களால் திறந்த வைத்தும், அவரது பிறந்த தினமான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாளை அரசு விழாவாக அறிவித்தும், வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையில் அவரது திருவுருவப் படத்தினை திறந்து வைத்தும் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை மெரினா கடற்கரைச் சாலையிலுள்ள மாநில உயர் கல்வி மன்ற வளாகத்தில் அமைந்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஏதுவாக தனியாக வழி ஒன்றை அமைத்தும், மேலும் சிலை அருகில் படிக்கட்டுகள் அமைத்துத் தருமாறும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதுமா? அவர்கள் முடிக்கப் போகிறார்கள். நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ** தற்போது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அது அவைக் குறிப்பில் வேண்டாம். அதை நீங்கள் என்னிடம் காண்பித்திருக்க வேண்டும். அடுத்த சப்ஜெக்ட்டிற்கு வாருங்கள்; பேசி முடியுங்கள்.

திரு. K.A. பாண்டியன்: தமிழகத்தில் தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களிலிருந்து பெறப்பட்ட வரி செலுத்துவோரின் கோரிக்கைகளின் அடிப்படையில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சில முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மீதான வரிவிலக்கு, வரி குறைப்பு தொடர்பான கருத்துகளை முன்வைத்ததன் அடிப்படையில், 39 சரக்குகள் மற்றும் 11 சேவைகளின் மீதான வரிவிலக்கு மற்றும் வரி குறைப்பு அளிக்கப்பட்டுள்ளன.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்திருந்த 8 ஆயிரத்து 306 உறுப்பினர்களுக்கு ரூ.2,000/–மும், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட உறுப்பினர்களுக்குக் கூடுதலாக ரூ.1,000/–மும் வழங்கி பெருமை சேர்த்தவர், எங்களுடைய அண்ணன் எடப்பாடியார் அவர்கள். கடைசியாக ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். கடைசிப் பக்கத்தை எடுங்கள்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்கள் மாறும்போது காட்சிகள் மாறும்! நாடும் ஏடும் போற்றும் நல்லாட்சி மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையில் மலரும்! (மேசையைத் தட்டும் ஒலி) ** தமிழர் உரிமைகளை மீட்டெடுப்போம்! விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவோம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ** போன்றவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பதிலுரை. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சிக்கு வித்திட்டவர்; தமிழினம் காத்த தனிப் பெரும் தலைவர்; சமத்துவ நீதியின் வெற்றி நாயகர்; உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர்; தந்தை பெரியாரால் போற்றப்பட்ட பெருந்தகையாளர்; அறிஞர் அண்ணாவால் அன்பாக 'தம்பி' என அழைக்கப்பட்டவர்; எங்கள் நெஞ்சம் நிறைந்த மாண்புமிகு முதல்வரை ஈன்றெடுத்த ஈடு இணையில்லாத முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆற்றலால், ஆளுமையால், அருமையான நிர்வாகத் திறனால் அகில இந்தியாவையும் வியக்க வைத்த தலைவர்; உழைப்பினால் உச்சம் தொட்ட உறுதிமிக்க உழைப்பாளி; சமூக நீதிக்காக சளைக்காமல் பாடுபடும் தன்மானத் தலைவர்; அச்சம் என்பதை அறவே அறிந்திடாத அதிசயத் தலைவர்; முதல்வர்களுக்கு எல்லாம் முன்னோடி முதல்வர் என்று பார் போற்றும் பத்திரிகைகள் எல்லாம் பாராட்டி மகிழும் பாசத் தலைவர்; சமூக நீதியில் இவர் பனகல் அரசர்; கொள்கை உறுதியில் இவர் ஓமந்தூரார்; அடக்கத்தில் இவர் குமாரசாமி ராஜா; அறிவுக் கூர்மையில் இவர் மூதறிஞர் ராஜாஜி; அடித்தட்டு மக்களுக்காக உழைப்பதில் இவர் பெருந்தலைவர் காமராசர்; மொழி, இனமானம் காப்பதில் இவர் பேரறிஞர் அண்ணா; தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திப்பதில் இவர் தமிழினத் தலைவர் கலைஞர்; இப்படி இதுவரை ஆண்ட முதலமைச்சர்கள் கொண்டிருந்த சிறப்பம்சங்களின் மொத்த உருவமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் ஆயிருர் தலைவர், எங்களை எந்நாளும் வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் துறையில் நாட்டுக்குக் கிடைத்த நல் இளைஞர்; உதயசூரியன் தந்த எங்கள் இளையசூரியன்; தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தின் விடிவெள்ளி; விளையாட்டுத் துறைக்கு நீங்கள் அமைச்சர் ஆனீர்கள்! வீழ்ந்து கிடந்த விளையாட்டுத் துறை இன்றோ இறுமாப்போடு எழுந்து நிற்கிறது; அன்னைத் தமிழகம் இனிமேல் அள்ளப்போகிறது பதக்கங்களை; விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை ஊக்கப்படுத்துவதில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான்; உங்கள் உதடுகள் உச்சரிக்கும் சொற்களோ குறைவுதான்

அதன் உள்ளிருக்கும் செய்திகளோ ஆயிரமாயிரம்; நீங்கள் அரசியலில் அடியெடுத்து அரங்கேற்றமானது மதுரையில்தான்; மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கம் தந்து, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக திட்டங்கள் பல தீட்டி மாவட்டந்தோறும் தானே நேரில் சென்று மகளிருக்கு தன் கையால் நலத் திட்டங்களை வாரி வழங்கிய வள்ளலும் நீங்கள்தான்; எங்கள் மதுரையிலும் ஒரு மாநாட்டைப்போல 72 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கூட்டி, அவர்களுக்கு நலத் திட்டங்களை வழங்கியதும் தாங்கள் தானே! பசப்பு வார்த்தைகளும், பாசாங்கு வார்த்தைகளும் உங்களுக்கு பழக்கமில்லாதவை; பாச வார்த்தைகளால் மட்டுமே இளைஞர்களை ஈர்க்கும் பேராற்றல் நீங்கள்; தமிழ்நாட்டினை விரைவில் ஒரு விளையாட்டுக் கேந்திரமாக ஆக்குவதை தன் உயரிய நோக்கமாகக் கொண்டிருக்கும் சிந்தனைச் சிற்பி; தமிழகத்தின் எதிர்காலம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் அன்பான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சி தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

இரவு 7–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு தரும் ஆக்கமும் ஊக்கமும்தான் வணிக வரி மற்றும் பதிவுத் துறைகளில் இதுவரை இல்லாத அளவில் வருவாய் ஈட்டியதோடு, பிற மாநிலங்கள் நம்மை வியந்து நோக்கும் வகையில் பல உயரிய சாதனைகளையும் அடைய காரணமாக இருந்தது என்பதை இங்கே பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறோம்.

நமது அரசின் வரி வருவாயில் 73 சதவிகிதம் வணிக வரித் துறை மூலமாகவும், 14 சதவிகிதம் பதிவுத் துறை மூலமாகவும் பெறப்படுகிறது. இவ்வகையில் அரசிற்கு வரும் வருவாயில் 87 சதவிகிதம் எங்கள் இரு துறைகளின் மூலமாகவே கிடைத்து வருகிறது. கழக அரசு பொறுப்பேற்றபோது, 96 ஆயிரத்து 209 கோடி ரூபாயாக இருந்த வணிக வரித் துறையின் வருவாய், 2021–2022 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபது கோடி ரூபாயாக உயர்ந்தது. 2022–2023 ஆம் நிதியாண்டில் ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 540 கோடி ரூபாய் அளவிற்கு

வருவாய் ஈட்டப்பட்டது. இவ்வகையில் முந்தைய ஆண்டைவிட 28 ஆயிரத்து 570 கோடி ரூபாய் அதிக வருவாய் ஈட்டி, வணிக வரித் துறை முத்திரை பதித்துள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது நடப்பு ஆண்டின் வளர்ச்சி விகிதம் 27.22 சதவிகிதம் ஆகும். இந்த வளர்ச்சிக்குக் காரணம், வணிக வரித் துறை அலுவலர்கள் மேற்கொண்ட தொடர் தணிக்கை, நமூனா கூர்ந்தாய்வு, நிலுவை வரி வசூல், நுண்ணறிவுப் பிரிவின் திடீராய்வு, சுற்றும் படைகளின் சரக்கு வாகன கண்காணிப்பு மற்றும் போலி வணிகப் பட்டியல் தயாரிப்பதைத் தடுத்தல் போன்ற தொடர் நடவடிக்கைகளே ஆகும். கழக அரசு பொறுப்பேற்றபோது, 10 ஆயிரத்து 643 கோடி ரூபாயாக இருந்த பத்திரப் பதிவுத் துறையின் வருவாய், 2021–2022 ஆம் நிதியாண்டில் 13 ஆயிரத்து 913 கோடி ரூபாயாக உயர்ந்தது. 2022–2023 ஆம் நிதியாண்டில் 17 ஆயிரத்து 296 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இவ்வகையில் முந்தைய ஆண்டைவிட 3,383 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் ஈட்டி, வசூலில் பதிவுத் துறை சாதனை படைத்துள்ளது. கடந்த ஆண்டைவிட, நடப்பு ஆண்டில் பதிவுத் துறையின் வளர்ச்சி 24.3 சதவிகிதம் ஆகும். 2022–2023 ஆம் ஆண்டில் எங்களது வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் சேர்ந்து ஈட்டியுள்ள மொத்த வருவாய் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 836 கோடி ரூபாய் ஆகும். இது கடந்த ஆண்டின் வருவாயைவிட, 31,953 கோடி ரூபாய் அதிகம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக அரசு பொறுப்பேற்ற பின், இந்த இரண்டு ஆண்டுகளில் வணிக வரித் துறைமூலம் கூடுதலாக 37,331 கோடி ரூபாயும், பதிவுத் துறைமூலம் கூடுதலாக 6,653 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 43 ஆயிரத்து 984 கோடி ரூபாய் கூடுதலாக வருவாய் ஈட்டியுள்ளோம். வரலாற்றுச் சாதனையான இந்த வெற்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பெருமையோடு அர்ப்பணிக்கிறோம்.

வணிக வரி மற்றும் பதிவுத் துறை ஆகிய இரு துறைகளின் வருவாய் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், அரசு முதன்மைச் செயலாளர்/வணிக வரி ஆணையர் திரு. தீரஜ் குமார், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், பதிவுத் துறைத் தலைவர் திரு. M.P. சிவன்அருள், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், இரு துறைகளின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 10] [திரு. பி. மூர்த்தி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கழக அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வணிக வரி மற்றும் பதிவுத் துறையை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அவர்களது மேலான வழிகாட்டுதலின்படி வணிக வரித் துறை மற்றும் பதிவுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புதிய முயற்சிகளின் விளைவாக வருவாய் ஈட்டுவதில் ஏற்கெனவே இருந்து வந்த தேக்க நிலை மாறி, இவ்விரு துறைகளும் தற்போது சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

வணிக வரித் துறையில் மலிந்திருந்த வரி ஏய்ப்பு நிகழ்வுகளும், கூடவே புரையோடிப் போயிருந்த போலிப் பட்டியல் வணிகமும் துறையின் வருவாயைப் பெருமளவில் பாதித்திருந்தது. ஒன்றிய அரசின் இழப்பீட்டுத் தொகையை எதிர்நோக்கியிருக்கும் நிலையும் தொடர்ந்தது. கழக அரசின் மேம்பட்ட வரி நிர்வாகத்தினாலும், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளாலும், இந்தத் தேக்க நிலை மாறி இன்று ஏற்றமிகு வளர்ச்சி நிலையை எங்களது வணிக வரித் துறை எட்டியுள்ளது.

இரவு 7–10

வணிகர்கள் தங்களது சுய மதிப்பீட்டின் அடிப்படையில் வரி செலுத்துவதை முறையாகக் கண்காணிப்பது, வரி விதிப்பு அலுவலர்களின் வரி அறிக்கைகளை ஆய்வுசெய்வது, வரிநிலுவையை வசூல் செய்வது, நுண்ணறிவு பிரிவுமூலம் திடீர் ஆய்வுகள் மற்றும் தணிக்கைகள் மேற்கொள்வது, போலிப் பட்டியல் வணிகத்தைக் கட்டுப்படுத்துவது, சுற்றும் படைகள்மூலம் சரக்கு வாகனப் போக்குவரத்தைக் கண்காணிப்பது போன்ற நடவடிக்கைகளில் புதிய அணுகுமுறை புகுத்தப்பட்டது. இதனால், வரி செலுத்த வேண்டியவர்கள் வரி வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டு, அவர்கள் முறையாக வரி செலுத்துவது கண்காணிக்கப்படுகிறது. மேலும், வரி ஏய்ப்பும் கட்டுப்படுத்தப்பட்டதால் வணிக வரித் துறை, வருவாய் வசூலில் சாதனை படைத்துள்ளது. அரசுக்கு வரும் வருவாயில், 73 சதவிகிதத்தை அளிக்கும் வணிக வரித் துறையின் வருவாய் வளர்ச்சி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021–2022 ஆம் ஆண்டில் 9.11 சதவிகிதமாக இருந்தது. இது 2022–2023 ஆம் ஆண்டில் 27.22 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதேநேரத்தில், இத்துறையின் நிர்வாக செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியானது, 2021–2022 ஆம் ஆண்டில் மொத்த வருவாயில் 0.40

சதவிகிதத்தில் இருந்தது. தற்போது, 2022–2023 ஆம் ஆண்டில் 0.33 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையின் நுண்ணறிவுப் பிரிவில் சுற்றும் படைகளுக்கு நூறு புதிய வாகனங்கள் கழக அரசால் வழங்கப்பட்டன. இந்த வாகனங்கள், காவல் துறையின் ரோந்து வாகனங்களைப்போல இரவு, பகலாக முக்கிய சாலைகளில் வலம் வருகின்றன. சரக்குப் போக்குவரத்து முறையாக நடைபெறுகிறதா என்பதனை இந்த சுற்றும் படைகள் தீவிரமாகக் கண்காணிக்கின்றன. கடந்த ஆண்டைக் காட்டிலும் சுற்றும் படைகள்மூலம் பெறப்படும் வருவாய் மூன்று மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளது. விழிப்புடன் செயலாற்றும் சுற்றும் படை வாகனங்கள், வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதால், அவர்கள் முறையாக வரி செலுத்தும் மனநிலைக்கு மாறி வருகின்றனர்.

வணிக வரித் துறையால் மேற்கொள்ளப்படும் திடீராய்வுகள், தக்க ஆதாரங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிவியல்பூர்வமான முறைகளைப் பின்பற்றி செய்யப்படும் இத்திடீராய்வுகளின்மூலம் பெறப்பட்ட வருவாய் கடந்த ஆண்டைவிட, ஏழு மடங்கு வளர்ச்சியை அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி பட்டியல் வணிகம் என்பது வணிக வரித் துறைக்குப் பெரும் சவாலாக உள்ளது. போலி பட்டியல் வணிகத்தால் அரசிற்கு வரும் வருவாயில் இழப்பு ஏற்படுவதோடு, நேர்மையாக வணிகம் செய்து வரி செலுத்தும் வணிகர்களின் மன உறுதியையும் அது குலைக்கிறது. இதனால், தீவிர நடவடிக்கை எடுத்து, போலி பட்டியல் வணிகத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசு உறுதிபூண்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, போலி பட்டியல் தயாரிப்போர்மீது பொருளாதார குற்றப் பிரிவின்மூலம் குற்றவியல் நடவடிக்கை தொடர்வோம் என்று அறிவித்தோம். அதன்படி, 2022–2023 ஆம் ஆண்டில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேலாக வரி ஏய்ப்பு செய்யும் வகையில் போலி பட்டியல்கள் தயாரித்த மூன்று நபர்கள் கண்டறியப்பட்டு, துறையால் பரிந்துரைக்கப்பட்டு, அவர்கள் பொருளாதார குற்றப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், இரண்டு இனங்களில், குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. பன்னிரெண்டு இனங்களில்,

வங்கிக் கணக்குகள்/சொத்துகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. மொத்தம் 712 போலி பட்டியல் தயாரித்தோர் அடையாளம் காணப்பட்டு, அவர்களால் பயனடைந்தோர் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தவறான உள்ளீட்டு வரி வரவு அதாவது ITC எடுத்துக்கொள்வது தடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, வணிக வரித் துறையில் வரி நிர்வாகத்தின் அடிப்படை கட்டமைப்பு கடந்த கால ஆட்சியாளர்களால் மாற்றியமைக்கப்படவில்லை. GST சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், புதியதொரு சூழ்நிலையை இத்துறை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. ஆனால், அதற்கான எந்தவொரு சிறப்பு ஏற்பாடும் கடந்த காலங்களில் செய்யப்படவில்லை. முற்றிலும் மாறுபட்ட தேவைகள் புதிதாக எழுந்தபோதிலும், ஏற்கெனவே இருந்த அதே கட்டமைப்போடுதான் துறை இயங்கி வந்தது. எனவே, வணிக வரித் துறையை காலத்தின் தேவைக்கேற்றாற்போல, மறுகட்டமைப்பு செய்ய வேண்டி இருந்தது.

இரவு 7–15

கூடுதலான மனித வளங்களை களப் பணிக்கு அளிக்க வேண்டும் எனவும், நுண்ணறிவு மற்றும் தணிக்கைப் பிரிவுகளை வலுவாக்க வேண்டும் எனவும் 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாங்கள் கோரிக்கை வைத்தோம். அக்கோரிக்கையினை மனப்பூர்வமாக ஏற்று, வணிக வரித் துறையில் 1,000 உதவியாளர் பணியிடங்களை தரம் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். தரம் உயர்த்தப்பட்ட 1,000 பணியிடங்களில், 840 பேர் துணை வணிக வரி அலுவலர்களாகவும், 160 பேர் வணிக வரி அலுவலர்களாகவும் விரைவில் பதவி உயர்வு பெற உள்ளனர். இதனால் வரி நிர்வாகம் மேம்படும்; அரசுக்கு வரும் வருவாய் உயரும். சுற்றும் படைகள், தணிக்கை மற்றும் நுண்ணறிவுப் பிரிவுகளுக்குக் கூடுதலாக பணியாளர்களை வழங்க முடியும். மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப, வரி நிர்வாகத் தேவைகளை இத்துறையால் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு வணிக வரி மாவட்டம் அமைய வேண்டுமென்ற அடிப்படையில்

துறை சீரமைக்கப்பட்டு, புதிதாக 13 வணிக வரி துணை ஆணையர் அலுவலகங்களை உருவாக்க, நமது கழக அரசு ஆணையிட்டுள்ளது.

இத்துறையின் மற்றொரு சீர்திருத்த நடவடிக்கையாக, 7 நிர்வாகக் கோட்டங்களும், 6 நுண்ணறிவுக் கோட்டங்களும் கூடுதலாக உருவாக்கப்படும் என கடந்த 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிக்கப்பட்டது. அதன்படி, அதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு, இப்புதிய கோட்டங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, GST சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பு கழக அரசால்தான் தேவைகளுக்கேற்ற கட்டமைப்பு மாற்றங்கள் வணிக வரித் துறையில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், வணிகர்களுக்கு எளிதாக வணிகம் செய்யும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு திருச்சியில் நடைபெற்ற வணிகர்கள் சங்க மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அப்போது வணிகர்களுக்கான குடும்ப நல நிதி உதவித் தொகையை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தி உத்தரவிட்டார்கள்.

வணிக இடங்களில் எதிர்பாராமல் நிகழும் தீ விபத்துக்கான உதவித் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/– ஆகவும் உயர்த்தி அறிவித்தார்கள். இந்த நலத் திட்டங்கள் 30–5–2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, வணிகர்களுக்கு தற்போது நலத் திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

கழக அரசு பதவியேற்றபோது, வணிகர் நல வாரியத்தில் 47 ஆயிரத்து 299 உறுப்பினர்களே இருந்தனர். ஆனால், தற்போது 88 ஆயிரத்து 171 வணிகர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குறுகிய காலத்தில் இவ்வாரியத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்மையான வணிகத்தில் ஈடுபட்டு வரும் வணிகர்களுக்கு இந்த அரசு துணை

நிற்கும். முறையாக வரி செலுத்தும் வணிகர்களை எப்பொழுதும் பாதுகாக்கும். வணிகர்களிடம் கனிவான அணுகுமுறையைக் கடைபிடித்து, அவர்களின் பல்வேறு குறைகளுக்குத் தீர்வு கண்டு, மேன்மையான வரி நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதையே வணிக வரித் துறை தனது தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது. இக்கொள்கையைப் பின்பற்றி வணிக வரித் துறையின் அலுவலர்கள் அனைவரும் முழு அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகின்றனர். எதிர்வரும் 2023–2024 ஆம் ஆண்டிலும், வணிகர் நலனைக் கருத்தில்கொண்டு, அரசுக்கு வருவாயை ஈட்டுவதிலும் வணிக வரித் துறை உரிய பங்களிப்பைத் தந்து சிறப்பாகச் செயல்படும் என்ற உறுதியை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திரப் பதிவுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையானது, அரசுக்கு வருவாய் ஈட்டும் துறைகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது என்பதை அனைவரும் அறிவோம். கழக அரசு பதவியேற்றவுடன் பத்திரப் பதிவுத் துறையின் சேவையை மக்களுக்கேற்ற வகையில் எளிதாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் மாற்றியமைக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த உத்தரவை நாங்கள் சிரம்தாழ்ந்து ஏற்றுக்கொண்டு, அதனை நிறைவேற்றும் வகையில், பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பித்தோம்.

கடந்தகாலங்களில் பதிவு செய்யப்பட்ட போலி ஆவணங்களால் தங்கள் சொத்துகளை இழந்த பொது மக்கள், அதனை மீட்கும் வழிவகை தெரியாமல் இருந்தனர். தங்களின் துயர் நீக்கப்படுமா என கழக அரசை அவர்கள் எதிர்நோக்கி இருந்தனர். இவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும், அவர்களுக்கு இழந்த சொத்தை மீட்டுத்தரும் வகையிலும், போலி ஆவணங்களை இரத்து செய்யும் அதிகாரத்தை பதிவுத் துறைக்கு அளிப்பதற்காக உரிய சட்டத் திருத்த மசோதா இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, 16–8–2022 முதல் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

போலி ஆவணங்கள் பதிவால் பாதிக்கப்பட்ட சொத்தின் உரிமையாளர்கள் இச்சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டப்

பதிவாளருக்கோ அல்லது பதிவுத் துறையின் தலைவருக்கோ விண்ணப்பிக்கலாம். இதன்மீது உரிய விசாரணை மேற்கொண்டு, பதியப்பட்ட ஆவணம், போலி ஆவணம் எனக் கண்டறியப்பட்டால், அதனை இரத்து செய்து, உண்மையான உரிமையாளருக்கு சொத்து மீட்டு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

போலி ஆவணப் பதிவு இரத்து ஆணைகளை சொத்தின் உண்மையான உரிமையாளர்களுக்கு தனது பொற்கரங்களால் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28–9–2022 அன்று இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இதனால், போலி ஆவணங்களின் பதிவால் சொத்தினை இழந்த உண்மையான உரிமையாளர்கள் நீதிமன்றத்தை அணுகி, நெடுநாள் காத்திருக்காமல் உடனடியாக போலி ஆவணத்தை இரத்து செய்ய பதிவுத் துறை அலுவலர்களை நாடும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அசல் ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே ஆவணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறைகளுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லாமல் இருந்ததால், நீதிமன்றங்களால் இவை கேள்விக்குள்ளாகும் நிலை எழுந்தது. இதனைத் தவிர்க்க, பதிவு விதியில் புதிய விதி 55–A கொண்டுவரப்பட்டு மேற்கண்ட சரிபார்ப்புக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கி, போலி ஆவணப் பதிவை முளையிலேயே கிள்ளி எறிய கழக ஆட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரவு 7–20

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆள்மாறாட்டத்தைத் தடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சார்–பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பதிவின்போது ஆதார் தரவுடன் சொத்தை விற்பவர் மற்றும் வாங்குபவரின் விரல் ரேகையை ஒப்பிட்டு சரிபார்ப்பதால், ஆள்மாறாட்டப் பதிவுகள் தவிர்க்கப்படுகின்றன. விரல் ரேகை சரிவரப் பொருந்தாத இனங்களில், கண்ணின் கருவிழிப்படலம், ஆதார் தரவுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது.

பதிவுத் துறையில் கழக அரசால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளால் மற்ற மாநில அரசுகளை தமிழ்நாட்டை நோக்கி திரும்பிப் பார்க்க வைத்துள்ளன. ஆந்திரா, கர்நாடகா, ஜம்மு–காஷ்மீர், பீகார் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பதிவுத் துறை உயர் அலுவலர்கள் தமிழ்நாட்டிற்கு நேரில் வருகை தந்து, நமது மாநிலத்தின் பதிவுத் துறை அலுவலகங்களை

2023 ஏப்ரல் 10] [திரு. பி. மூர்த்தி]

பார்வையிட்டு, பொது மக்களின் நலனுக்காக கழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை பார்த்து, வியந்து மனதார பாராட்டியும் சென்றுள்ளனர் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்கிறோம்.

நமது அண்டை மாநிலமான கர்நாடகா அரசின் சட்டக் குழுவானது, தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள பதிவு சட்ட திருத்தத்தைப்போல், தங்களது மாநிலத்திலும் கொண்டுவர வேண்டும் என கர்நாடக மாநில அரசுக்கு பரிந்துரைத்துள்ளது என்ற செய்தியானது, பதிவுத் துறை சீர்திருத்தத்தில் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக உள்ளது என்பதற்கு தக்க சான்றாகும்.

பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தால், சார்–பதிவாளர் அலுவலகம் வராமல், வீட்டிலிருந்தே சில வகை ஆவணங்களைப் பதிவு செய்யும் இணையவழியான ஆவணப் பதிவினை கழக ஆட்சி கொண்டு வந்துள்ளது.

முதல்கட்டமாக, வங்கி மற்றும் நிதி நிறுவனத்தில் கடன்பெற எழுதிக் கொடுக்கப்படும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு ஆவணம், அந்தக் கடனை திருப்பிச் செலுத்திய பின், வங்கியால் எழுதிக் கொடுக்கப்படும் ரசீது ஆவணம் மற்றும் ஐந்து வருடங்களுக்கு உட்பட்ட குடியிருப்புக்கான வீட்டு வாடகை ஒப்பந்த ஆவணங்கள் ஆகியவை சார்–பதிவாளர் அலுவலகம் வராமலேயே, இணையவழிமூலம் பதிவு செய்ய தேவையான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16–09–2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இணையவழி பதிவு, எதிர்காலங்களில் மேலும் பல ஆவணங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

வயதானவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, எழுதிக் கொடுப்பவர்கள் அல்லது எழுதி வாங்குபவர்களில் யாராவது ஒருவர் 70 வயதைக் கடந்தவராக இருப்பினும், அவர்கள் ஆவணப் பதிவிற்காக சார்–பதிவாளர் அலுவலகம் வரும்போது டோக்கன் வரிசையில் காத்திருக்காமல் உடனடியாக ஆவணப்பதிவு செய்யும் வகையில் மென்பொருளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், 70 வயதைக் கடந்த மூத்த குடிமக்கள் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு எந்த நேரத்தில் வந்தாலும், அவர்கள் வரிசையில்

காத்திருக்காமல் உடனடியாக பதிவு செய்துகொள்ளலாம். இது பொது மக்களின் பாராட்டை வெகுவாகப் பெற்றுள்ளது.

பதிவுத் துறையின் “ஸ்டார்” மென்பொருளும், வருவாய்த் துறையின் “தமிழ்நிலம்” மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளன. ஆவணப் பதிவு முடிந்தவுடன் பதிவுத் துறையிலிருந்து வருவாய்த் துறைக்குப் பட்டா மாற்றம் செய்வதற்காக உட்பிரிவு தேவைப்படுபவை, உட்பிரிவு தேவைப்படாதவை என பிரிக்கப்பட்டு ஆவணங்கள் இணைய வழியாகவே அனுப்பப்படுகின்றன.

உட்பிரிவு தேவைப்படாத இனங்களில் விற்பவரின் பெயரில் பட்டா மற்றும் கூடுதல் விவரங்கள் சரியாக இருக்கும் நிகழ்வுகளில் வாங்குபவரின் பெயருக்கு உடனடியாக வருவாய்த் துறையின் “தமிழ்நிலம்” மென்பொருளில் தானாகவே பட்டா மாற்றம் செய்யப்படுகிறது.

மங்களகரமானவை என கருதப்படும் நாட்களில் பத்திரப் பதிவு செய்ய விரும்பும் பொது மக்களுக்காகவும், அவசரமாக பத்திரப் பதிவு செய்ய விரும்புவோருக்காகவும், பதிவுத் துறையில் தட்கல் டோக்கன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உடனடியாக ஆவணம் பதிவு செய்ய விரும்புவோர் 5,000/– ரூபாய் செலுத்தி, தட்கல் டோக்கனை முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வசதியானது 28–09–2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், அலுவலகம் செல்வோர் வேலை நாட்களில் ஆவணப் பதிவிற்குச் செல்ல இயலாது என்பதால், வார இறுதி விடுமுறை நாளான சனிக்கிழமை அன்று சார்–பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட கழக அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது அதிக ஆவணங்கள் பதிவாகும் நூறு சார்–பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில்இயங்கி வருகின்றன.இவ்வாறு சனிக்கிழமைகளில் இயங்கிவரும் 100 சார்–பதிவாளர் அலுவலகங்கள்மூலம் மட்டுமே பெறப்பட்ட வருவாய் 681.50 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) வில்லங்கச் சான்று மற்றும் திருமணச் சான்றில் உள்ள பிழைகளை சார்–பதிவாளர் அலுவலகம் செல்லாமல் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருத்தம் செய்துகொள்ளும் வசதியும் பதிவுத் துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10] [திரு. பி. மூர்த்தி]

இரவு 7–25

வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக, பதிவு மாவட்டங்கள் ஏற்படுத்தப்படும் என்ற கழக அரசின் கொள்கைப்படி, சென்ற நிதியாண்டில் திருவாரூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவள்ளூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய புதிய பதிவு மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

சார்–பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள் சீரமைக்கப்பட்டு, பொது மக்கள் எளிதில் அணுகும் வண்ணம் ஒரு தாலுகாவிற்கு உட்பட்ட கிராமங்கள், வேறு தாலுகாவிற்கு உட்பட்ட சார்–பதிவாளர் அலுவலகத்துடன் இருக்கும் நிலைமையை மாற்றி அதே தாலுகாவில் அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடக்கமாக, மதுரை வருவாய் மாவட்டத்தில் சார்–பதிவாளர் அலுவலக எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டு சாமநத்தம், பொதும்பு, மேலூர் கிழக்கு, செட்டிகுளம், காதக்கிணறு ஆகிய புதிய சார்–பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் பொது மக்கள் பட்டா போன்ற ஆவணங்களைப் பெறவும், சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு எளிதில் வந்து செல்லவும் மிகவும் உதவியாக இருக்கும். இந்த எல்லைகள் மறுசீரமைப்புப் பணி மாநிலத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் மேற்கொள்ள பதிவுத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், மதுரை பதிவு மண்டலத்தை இரண்டாகப் பிரித்து, இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு, 29–12–2022 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. இதேபோன்று சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து, சென்னை தெற்கு என்ற புதிய பதிவு மண்டலம் விரைவில் உருவாக்க நடவடிக்கையில் உள்ளது.

தற்போது பெரிய பதிவு மாவட்டங்களான தென்சென்னை, கோயம்புத்தூர் ஆகியவற்றைப் பிரித்து முறையே தாம்பரம், கோயம்புத்தூர் தெற்கு ஆகிய புதிய பதிவு மாவட்டங்கள் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன. மேலும், சேலம் கிழக்கு, கோபிசெட்டிபாளையம், காரைக்குடி, தாம்பரம், கோயம்புத்தூர் தெற்கு ஆகிய பதிவு மாவட்டங்களில் புதிய தணிக்கை அலகுகள் ஏற்படுத்த அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில், வழிகாட்டி மதிப்பு 1-4-2012 அன்று மறுசீரமைக்கப்பட்டு 8-6-2017 வரை நடைமுறையில் இருந்து வந்தது. பின்னர், மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியாக வழிகாட்டி மதிப்பு 33% குறைக்கப்பட்டது. மேலும், வழிகாட்டி மதிப்பு குறைப்பதால் ஏற்படும் வருவாய் இழப்பைச் சரி செய்வதற்காக பதிவுக் கட்டணம் 1%-லிருந்து 4% ஆக உயர்த்தப்பட்டது.

9-6-2017-க்குப் பிறகு நிலங்களின் வெளிச்சந்தை விலை கணிசமாக அதிகரித்துள்ளது. வழிகாட்டி மதிப்பின்படியே வங்கிகளில் கடன் வழங்கப்படுவதால் நிலம் அல்லது சொந்த வீடு வாங்க விரும்பும் நடுத்தர மக்களுக்கு வங்கிகளில் இருந்து கடன் பெறும்போது சந்தை நிலவரத்தை வழிகாட்டி மதிப்பு பிரதிபலிக்காததால் குறைவான கடன் வழங்கப்படுகிறது. எனவே, வழிகாட்டி மதிப்பை அதிகரிக்கவும், பதிவுக் கட்டணத்தைக் குறைக்கவும் கோரி பல கோரிக்கைகள் பெறப்பட்டன.

இதனால், வழிகாட்டி மதிப்பானது 9-6-2017 அன்று 33 சதவிகிதம் குறைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 8-6-2017 அன்றைய நிலைக்கு உயர்த்தப்படுகிறது. இந்த வழிகாட்டி மதிப்பு உயர்வானது புதியதாகக் கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல. இந்த உயர்வு 11 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த ஒன்றுதான். இந்த நடவடிக்கை, குறிப்பாக வங்கியில் கடன் பெற்று வீடு வாங்கும் பொது மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும். மேலும், பல இடங்களில் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு சரியான சந்தை மதிப்பை பிரதிபலிப்பதாக இல்லாமல் உள்ளது. சில இடங்களில் விவசாய நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் இவற்றின் வழிகாட்டி மதிப்பானது சந்தை மதிப்பைவிட உயர்வாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலும், சில பகுதிகளில் வழிகாட்டி மதிப்பானது சந்தை மதிப்பைவிட குறைவாக இருந்தது. இவ்வாறு பொத்தாம் பொதுவாக எத்தகைய அடிப்படையுமின்றி வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டதால் பாதிப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் தொடர்ந்து வந்ததால், வழிகாட்டி மதிப்பு குளறுபடிகளைச் சீர்படுத்தும் நோக்கிலும், உண்மையான சொத்து மதிப்பினை பிரதிபலிக்கும் வகையிலும், வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயம் செய்ய கழக அரசால் சிறப்பு உயர்மட்டக் குழு அமைக்கப்பட உள்ளது. அக்குழுவானது,

2023 ஏப்ரல் 10] [திரு. பி. மூர்த்தி]

அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று தல ஆய்வு செய்து, வழிகாட்டி மதிப்பைச் சீரமைக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ள உள்ளது.

இந்த பொற்கால அரசால் பதிவுத் துறையில் மேற்கண்ட சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக, 2022–2023 ஆம் நிதியாண்டில் 34 இலட்சத்து 41 ஆயிரத்து 248 ஆவணங்களைப் பதிவு செய்து, அதன்மூலம் 17,296.84 கோடி ரூபாய் பதிவுத் துறை வருவாய் ஈட்டியுள்ளது. இது இந்தக் கழக அரசின் செயல்திறனுக்கு ஒரு சான்றாகும்.

இரவு 7–30

அரசுக்கு வரும் வருவாயில் 14 சதவிகிதத்தை அளிக்கும் பதிவுத் துறையின் வருவாய் வளர்ச்சி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022–2023 ஆம் ஆண்டில் 24.32 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

அதேநேரத்தில், இத்துறையின் நிர்வாகச் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியானது, 2021–2022 ஆம் ஆண்டில் மொத்த வருவாயில் 2.98 சதவிகித்தில் இருந்தது. தற்போது 2022–2023 ஆம் ஆண்டில் 2.2 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பதிவுத் துறையின் சேவைகள் கணினிமயமாக்கல்

பதிவுத் துறை நிர்வாகப் பணிகள் மற்றும் பொது மக்களுக்கான சேவைகள் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 6–2–2000 அன்று 16 சார்–பதிவாளர் அலுவலகங்களும், 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கல்–ஸ்டார் (STAR) திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. ஸ்டார் திட்டம் என்பது, எளிய வெளிப்படையான பதிவு நிர்வாகம் ஆகும்.

STAR 2.0

ஒருங்கிணைந்த இணையதளம் மூலமாகவே ஆவணப் பதிவுகள், வில்லங்கச் சான்று மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்குதல், திருமணப் பதிவு, சங்கங்கள் பதிவு, சீட்டு மற்றும் நிறுவனங்கள் தொடர்பான பணிகள் டிஜிட்டல்மயமாக்கல். இதன்மூலம் பொது மக்கள் இணையதளம்மூலம் தாங்களாகவே

ஆவணம் தயாரித்தல், ஆவணப் பதிவு, முன்பதிவு நேரம், திருமணப் பதிவுக்கான நேரம் இவற்றை தாங்களே முடிவு செய்தல், வில்லங்கச் சான்று கோரி இணையதளம்மூலம் விண்ணப்பித்தல், வில்லங்கச் சான்றினை கட்டணமின்றி பார்த்தல் மற்றும் பதிவிறக்கம் செய்தல், விண்ணப்பங்களின் நிலையை அறிந்துகொள்ளுதல், பதிவு சேவைகள், சங்கம் நிறுவனங்களின் சேவைகளுக்கு இணையம் வழியாக பணம் செலுத்துதல், ஆதார் தரவுகள் ஒப்பு நோக்குதல், மின்னணு ரேகை கருவிகள்மூலம் கைரேகையைப் பதிவு செய்தல், ஆவணதாரர்களின் புகைப்படம் எடுத்தல், பதிவு முடிந்த பின்னர் பட்டா மாறுதல், e-stampingமூலம் முத்திரைத் தீர்வை போன்ற பணிகள் ஸ்டார் 2.0மூலம் நடைபெற்று வருகின்றன.

STAR 3.0

பதிவுத் துறையில் பதிவுக்கு வரும் ஆவணங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 95 ஆயிரத்து 650 ஆவணங்களும், 2021–2022 ஆம் ஆண்டில் 29 இலட்சத்து 98 ஆயிரத்து 48 ஆவணங்களும், 2022–2023 ஆம் ஆண்டில் 34 இலட்சத்து 41 ஆயிரத்து 248 ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால், பதிவுத் துறையின் இணையதள சேவைகளின் பணிப் பளு அதிகரித்துள்ளது.

எனவே, பதிவுத் துறை இணையதளத்தின் திறனை மேம்படுத்துவதன்மூலம், சர்வர் வேகம் அதிகரிக்கப்பட்டு, பதிவுப் பணிகள் விரைவாக நடைபெறும். பொது மக்கள் மற்றும் பதிவு அலுவலர்கள் எளிமையாகப் பயன்படுத்தும் வகையில் கூடுதல் இணையதள சேவைகளை வழங்குவதற்காக STAR 3.0 என்னும் மென்பொருள் 325 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இந்தத் திட்டத்திற்கான நிதியை எங்கள் துறையின் ஆவணப் பதிவின்போது வசூலிக்கப்பட்ட கணினிக் கட்டணத்தில் இருந்து மேற்கொள்ளவிருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் ஆவணப் பதிவின்போது கணினிக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை 385.13 கோடி ரூபாய் ஆகும். ஸ்டார் 2.0 திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை 252.01 கோடி ரூபாய் ஆகும். மீதமுள்ள தொகை 133.12 கோடி ரூபாய் மற்றும் இனிவரும் காலங்களில் வசூல் செய்யப்படும் கணினிக் கட்டணம் மூலமாகவே இத்திட்டம் செயல்படுத்தப்பட

2023 ஏப்ரல் 10] [திரு. பி. மூர்த்தி]

உள்ளது. எனவே, ஸ்டார் 3.0 திட்டமானது, பதிவுத் துறையின் நிதி மூலமாகவே செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதி அடுத்த 6 ஆண்டுகளுக்கான திட்டச் செலவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

வடசென்னை பதிவு மாவட்டத்தில் கொளத்தூரில் புதியதாக சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படும்.

அதுபோல காட்பாடி பத்திரப் பதிவு அலுவலகம் மிகவும் நெருக்கடியான கட்டடத்தில், போக்குவரத்துக்கு இடைஞ்சலான இடத்தில் செயல்பட்டு வருகிறது. தாலுகா அலுவலகத்திற்குப் பக்கத்தில் அரசு நிலம் உள்ளது. எனவே, அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலைமைக்கேற்ப, அதுகுறித்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அதிகமாக ஆவணப் பதிவு நடைபெறும் ஒரு சார்–பதிவாளர் அலுவலகம், அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய முன்மாதிரி சார்–பதிவாளர் அலுவலகமாக அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். வணிக வரித் துறையில் 94 அலுவலகங்களும், பதிவுத் துறையில் 58 அலுவலகங்களும் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இரவு 7–35

வணிக வரி மற்றும் பதிவுத் துறை அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் வணிக வரித் துறைக்கு 60 கோடி ரூபாயும், பதிவுத் துறைக்கு 40 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நிதித் துறை முன்வந்துள்ளது. கடந்த நிதியாண்டில் அரசுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 836 கோடி ரூபாய் வருவாய் ஈட்டித் தந்துள்ள இந்த இரு துறைகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டவும், பழைய கட்டடங்களைப் புனரமைப்பதற்கும் சேர்த்து மொத்தம் 100 கோடி ரூபாயை தாராளமாக ஒதுக்கீடு செய்துள்ள நிதித் துறைக்கு எங்களது இரு துறைகளின் சார்பாக மிக்க மிக்க மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரி மற்றும் பதிவுத் துறை என்பது, அரசுக்கு வருவாய் ஈட்டுவதில்

முக்கிய துறைகளாகும். அரசின் வருவாயில் 87 சதவிகிதத்தை ஈட்டித் தரும்—எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடே 100 கோடி ரூபாய்தான். இவ்விரு துறைகளையும் மற்ற துறைகளோடு ஒப்பிட முடியாது. இத்துறைகளின் அடிப்படை கட்டமைப்பு மற்றும் நிர்வாக வசதிகளை மேம்படுத்த தேவையான நிதியை அளிப்பதன்மூலம் கழக தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்கள் மட்டுமின்றி, அறிவிக்கப்படாத திட்டங்களுக்கும் தேவையான நிதியை இத்துறைகளின்மூலம் ஈட்ட முடியும் என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திக்கற்றவர்களுக்கு வழிகாட்டும் திராவிட தீபம்; கடல் கடந்த தமிழர்களுக்கு கலங்கரை விளக்கம்; கோடிக்கணக்கான உடன்பிறப்புகளின் உதயசூரியன், திராவிட மாடல் ஆட்சி தரும் தன்னலம் கருதாத தலைவர், எந்நாளும் நாங்கள் வணங்கும் மாட்சிமைமிக்க தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் எளியவனான என்னை மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பேச வைத்த பெருந்தகையாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கியும், எளியோருக்கும் எளியவர்; இளைஞர்களின் எழுச்சி நாயகன்; திராவிட இயக்கத்தின் எதிர்காலம்; மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் துறை செழிக்கும்! எங்கள் பணி சிறக்கும்! என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வெட்டுத் தீர்மானம் குறித்து.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்தில் கூறிய பெரும்பாலான கருத்துகளுக்கு எனது பதிலுரையில் உரிய விளக்கங்கள் இடம் பெற்றிருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பிற கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அவற்றை நன்கு பரிசீலித்து, நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள கருத்துகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் இடம் பெற்றிருப்பதால், எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மானியக் கோரிக்கைகள் தொடர்பான பணிகளில் எனக்கு உறுதுணையாக இருந்த அரசு தலைமைச் செயலாளர் முனைவர். வெ. இறையன்பு, I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் திரு. T. உதயச்சந்திரன், I.A.S. அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் டாக்டர் P. உமாநாத், I.A.S. அவர்களுக்கும், திரு. M.S. சண்முகம், I.A.S. அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், I.A.S. அவர்களுக்கும், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, I.A.S. அவர்களுக்கும், வணிக வரித் துறை ஆணையர் திரு. தீரஜ்குமார், I.A.S. அவர்களுக்கும் மற்றும் பதிவுத் துறை தலைவர் திரு. M.P. சிவன்அருள், I.A.S. அவர்களுக்கும், இரு துறைகளின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சுதந்திரப் போராட்ட வீரர்களையும், தமிழ்மொழித் தியாகிகளையும், நீதிக் கட்சித் தலைவர்களையும், திராவிட இயக்கத் தீரர்களையும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.*

உன்மீது அடித்த புயல் திசை மாறி அடித்திருந்தால், இமயமலை கொஞ்சம் இடம் பெயர்ந்திருக்கும்; உன் மீது அடித்த வெயில் திசை மாறி கடல் மீது அடித்திருந்தால், பாதிக் கடல் காணாமல் போயிருக்கும்; எப்படி நீ கற்றாய் எரிமலைக் குழம்பு தடவி வெற்றிலை போடும் வித்தையை என்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்களது வரிக்கான நெஞ்சுக்கு நீதியாய் வாழ்ந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன், நினைவில் வாழும் இனமான பேராசிரியர் அவர்களையும் வணங்குகிறேன்.

இன்று ஒட்டுமொத்த இந்தியாவே ஒருவரை வியந்து பார்க்கிறது என்றால், அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைத்தான். சிலர் அதிர்ச்சியாகப் பார்க்கிறார்கள், சிலர் ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். ஒரே நேரத்தில் வியப்புக் குறியாகவும், ஆச்சரியக் குறியாகவும், தெற்கில் இருந்து இந்தியாவின் திசையைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

இரவு 7-40

வீழ்ச்சியுற்ற தமிழ்நாட்டின் மீட்சியாக இருக்கிறார்; திராவிடத் தத்துவத்தின் ஆட்சியாக இருக்கிறார்; 100 ஆண்டுக்கால திராவிடத் தலைவர்களின் நீட்சியாக மட்டுமல்ல, திராவிட நாயகனாக விளங்குகிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இன்றுடன் இந்த அரசு பொறுப்பேற்று 704 நாட்கள் ஆகின்றன. இக்குறைந்த காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்காக பல மகத்தான திட்டங்களைத் தீட்டியது மட்டுமல்லாமல், அது மக்களுக்குப் போய்ச் சேர்ந்துள்ளதா என கள ஆய்வும் செய்து வருகிறார். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்காவது முறையாக, இச்சட்டமன்றத்திற்கு வருவதற்கும், இரண்டாவது முறையாக அமைச்சராகப் பொறுப்பு வழங்கியதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றிகள் பல தெரிவித்துக்கொள்கிறேன்.

மைதானங்களில் விளையாடியவர்கள் மத்தியில், அரசியல் களத்தில் sixer அடித்து விளையாடிக்கொண்டிருக்கிறார் நமது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் சொன்னதைப்போலவே, அவர் செயல்பட்டு வருகிறார். அதாவது, “உங்களின் வெற்றி, ஆயிரம் விமர்சனங்களுக்கான முற்றுப்புள்ளி” என்று சொன்னார் மகேந்திர சிங் தோனி. “இங்கே தொடக்க வீரர்கள் நிறைய உண்டு; ஆனால், நான் முடித்துக்காட்டும் வீரன்” என்று சொன்னார், Usain Bolt. “அரிய செயலைச் செய்து முடிப்பது வலிமையினால் அல்ல, விடாமுயற்சியால்” என்று James Allen சொன்னதைப்போல, செயல்பட்டு தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையை உலகம் முழுக்க கவனிக்க வைத்திருக்கிறார் நம்முடைய இளைஞர்களின் எழுச்சியாளர் பார் போற்றும் தங்கம் எங்களின் அங்கம், (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கத் தொண்டர்களின் சகோதரனாக விளங்கும், பாசமிகு

சகோதரர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும், நாளை மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்வதற்கு எனது வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக இருந்து அரசின் திட்டங்களையும், அறிவிப்புகளையும், மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்யும் பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், அவை முன்னவருமான நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் அவர்கள் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம். என் தாய், தந்தையை வணங்கி அவர்கள் மூலமாக என் குடும்ப முன்னோர்களை வணங்குவதோடு, எனது வெற்றிக்கு வாக்களித்த காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நண்பர்களுக்கும், திருப்பூர் மாவட்ட மக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், திரை உலகத்தைச் சார்ந்தவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, மகத்தான பல பணிகளைச் செய்வதற்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு திட்டங்களை வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தார்கள். அந்த அடிப்படையிலே அரிய பணிகளைச் செய்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு தந்தார்கள். அந்த காலகட்டத்தில்தான் உலக வங்கி நிதியுதவி திட்டத்தின்கீழ் “நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையுள்ள” கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணி ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்றது. திருவண்ணாமலை, சீர்காழி, சிதம்பரம், கும்பகோணம் போன்ற நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்க உருவாக்கப்பட்டது அந்தத் திட்டம். நாங்கள் பொறுப்பேற்றபோது, உலக வங்கியிலிருந்து ஒரு கடிதம் வந்தது. ஏன் இந்தத் திட்டத்தை இரத்து செய்ய கூடாது? எந்தவிதமான முன்னேற்றமும் இல்லையென்று சொன்னார்கள்.

மாண்புமிகு முதலமைச்சராக இருந்த ஐயா கலைஞரிடத்திலே நாங்கள் உடனடியாக எடுத்துச்சொன்னோம். உடனடியாக பதில் கடிதம் எழுதுங்கள். அதற்குண்டான பணிகளை மேற்கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்தோம். துரிதமாக பணிகள் நடைபெற்றன. உலக வங்கி எங்களைப் பாராட்டி கடிதம் எழுதியது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, ஹைதராபாத்தைச் சார்ந்த நெல்சன்சோபர்ஸ் என்ற நிறுவனம் தமிழ்நாட்டில் சாலை உபயோகிப்பாளர்களிடையே 2008 ஆம் ஆண்டின் துவக்கத்தில் கருத்துக்கணிப்பு நடத்தியது. அதில் 66% மக்கள் நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடு நல்ல முறையில் உள்ளதாகவும், 86% மக்கள் சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றத்துடன் இருப்பதாகவும் பாராட்டி, கருத்துத் தெரிவித்திருந்தார்கள். 2006-ல் கழக அரசு பொறுப்பேற்றவுடன் நெடுஞ்சாலைத் துறையில் தலைமைப் பொறியாளர் முதல் சாலைப் பணியாளர்கள் வரை அன்றைக்கு காலியாக இருந்த ஏறத்தாழ 1,600 பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

சாலையோரம் எல்லைக் கற்கள் தமிழ்நாடு முழுவதும் நடப்பட்டன என்பதும், ஆக்கிரமிப்புகள் தவிர்க்கப்பட்டன என்பதும் அனைவரும் அறிவோம்.

அதேபோல, 2007 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் 84-வது வயதை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுகின்ற நிகழ்வைத் துவக்கி வைத்தார்கள். அண்ணா சாலையிலுள்ள அண்ணா மேம்பாலம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களே வந்து, அந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலை அமைப்பதற்கு பின்பற்றப்பட்டு வந்த முறைகளைப் பின்பற்றி வந்தோம். WBM-Water Bound Macadam முறையை மாற்றி, WMM-Wet Mix Macadam என்கிற புதிய முறையை அன்றைக்குத்தான் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் உத்தரவின்பேரிலே நடைமுறைப்படுத்தினோம். தரக்கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு தனி அலகு உருவாக்கப்பட்டது. அதேபோல், முதன்மை இயக்குநர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை பெருநகர் என்ற வகையில், தலைமைப் பொறியாளர் தலைமையில் “சென்னை பெருநகர் அலகு” ஒன்று துவக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

ஐந்து ஆண்டுகளில் இரயில்வே கடவுகளில் ஏறத்தாழ 110 இரயில்வே பாலங்களுக்கு இரயில்வே துறையிடம் அனுமதியைப் பெற்றோம். கடல்சார் வாரிய தலைமை அலுவலகக் கட்டடம் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டியது மட்டுமல்ல; கடல்சார் வாரியம் இலாபத்தை ஈட்டக்கூடிய வகையிலே உருவாக்கப்பட்டது.

இரவு 7–45

அதேபோல 'இந்தியா டுடே' பருவ இதழ், அன்றைய காலகட்டத்திலேதான் இந்தப் பணிகளையெல்லாம் பாராட்டிகூட எழுதியது என்பதை இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு பல்வேறு பணிகளை செய்து முடித்தோம். பல்வேறு பத்திரிகைகள் அன்றைக்கு பாராட்டியது மட்டுமல்ல, உலக வங்கியும் பாராட்டியது என்பதை மீண்டும் இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் பதிலுரைக்கு வருகிறேன். செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ஏறத்தாழ 7 உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நான் என்னுடைய பதிலுரையைத் தருகின்றபோது, அதற்கான விளக்கம் அதில் நிச்சயமாக இருக்கும். இருந்தாலும், தொடர்ந்து அவர்கள் பேசியதை எல்லாம் உன்னிப்பாகக் கவனித்திருக்கிறோம். அதைக் குறித்துக்கொண்டு எதிர்காலத்தில் அவற்றைக் களைவதற்கு நாங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல்வர் திராவிட நாயகன் தளபதி அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற இந்த அரசில் கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்தித் துறையில் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறோம்.

இன்றைக்கு ஒட்டுமொத்தமாக இருந்த நிர்வாகம் 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அதாவது சென்னை, திருச்சி, கோவை, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இணை இயக்குநர் அளவிலான பதவிகள் உருவாக்கப்பட்டு, அங்கே பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அதன்மூலமாக மக்கள் தொடர்பு அலுவலர்களும்,

உதவி அலுவலர்களும் அவர்களின்கீழ் பணியாற்றி வருகிறார்கள்.

இன்றைக்கு நினைவகங்கள் மற்றும் சிலைகளின் பராமரிப்புப் பணிகள் மட்டுமல்ல; புதிய சிலைகளும், புதிய நினைவகங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதேபோல அரங்கம். அரங்கங்கள் மக்களுக்குப் பயனுள்ள வகையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையின்பேரில் செய்து வருகிறோம். அந்தவகையில் 75–வது சுதந்திரத் திருநாள், அமுதப் பெருநாளாக ஒன்றிய அரசு அறிவித்தது. அந்த வகையில் இன்றைக்கு பல்வேறு பணிகளை, பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம். அந்தவகையில் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளுக்கு திருவுருவச் சிலை, அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலை போன்றவை திறக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, கரிசல் இலக்கியத்தின் பிதாமகன் இன்றைக்கு நம்முடைய கி. ராஜநாராயணன் அவர்களுக்கு கோவில்பட்டியில் தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலை மற்றும் நூலகத்துடன்கூடிய நினைவரங்கத்தையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதேபோல, காந்தி மண்டபத்திலே, வ.உ. சிதம்பரனார் அவர்கள் கோவை சிறையிலே இழுத்த செக்கு அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதனருகிலே அவருடைய மார்பளவு சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து, தீரமாய் போரிட்டு, தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர், பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர், வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச் சிலையும், தாய்த் திருநாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீரமாய் போரிட்ட சிவகங்கை சீமையை ஆண்ட மருது சகோதரர்களின் திருவுருவச் சிலையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அன்றைக்கு திறந்து வைக்கப்பட்டன.

பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம். மதுரை மாவட்டம், உசிலம்பட்டியை அடுத்த பெருங்காமநல்லூரில் கடந்த 1920 ஏப்ரல் 3 ஆம் நாள் அடக்குமுறை சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தினை அடக்குவதற்காக அங்கு ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சுட்டுக்

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

கொல்லப்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த 16 தியாகிகளை கௌரவிக்கும் பொருட்டு, ரூபாய் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா. கவிதைகளால் மக்களுக்கு தேச விடுதலை வேட்கையினைத் தூண்டிய மகாகவி பாரதியாரைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் உத்தரப் பிரதேசம் மாநிலம், வாரணாசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த வீட்டின் அறை புதுப்பிக்கப்பட்டு அங்கே நூலகம் அமைக்கப்பட்டதோடு, அவருடைய மார்பளவு சிலையும் அமைக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. நேரில் நாங்களெல்லாம் கலந்துகொண்டோம் என்பதையும் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். அதேபோல முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு இன்றைக்கு அண்ணா சாலையிலே, ஏறத்தாழ ரூ.1,70,00,000/– செலவில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு, நமது மேனாள் துணை குடியரசுத் தலைவர் திரு. எம். வெங்கையா நாயுடு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு நினைவிடம். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை போற்றும்விதமாக அவரது வாழ்வின் சாதனைகளையும், சிந்தனைகளையும், மக்கள், வருங்காலத் தலைமுறையினர் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன் சென்னை காமராஜர் சாலையில் அண்ணா நினைவிட வளாகத்தில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் ஏறத்தாழ 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல விவசாயப் பயன்பாட்டுக்காக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெற காவிரி ஆற்றின் அருகே ராஜவாய்க்காலினைக் கட்டிய அல்லாள இளைய நாயக்கர் அவர்களுக்கு நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபத்தினை இரண்டு மாதங்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதேபோல, புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. நம்முடைய

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருமூர்த்தி மலையில் திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கமும், அதேபோல உடுமலை நகராட்சி வளாகத்தில் சிலையும் அமைக்கப்படவிருக்கிறது.

இரவு 7–50

பொள்ளாச்சியில் காலையில்கூட நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் பதிலளிக்கப்பட்ட பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத் திட்டம் வருவதற்குக் காரணமாக இருந்த திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்கள், முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அய்யா பொள்ளாச்சி மகாலிங்கம் ஆகியோருடைய திருவுருவச் சிலைகள் கொண்ட இரண்டு அடுக்குமாடி அரங்கம் அமைக்கப்படவுள்ளன. அதற்கான பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

பத்மஸ்ரீ விருது பெற்ற பிரபல திரையிசை பாடகர் திரு.டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு, இன்னிசைக் கச்சேரியினை சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடத்தியது மட்டுமல்ல; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளியில் அந்தச் சாலைக்கு டி.எம். சௌந்தரராஜன் சாலை என பெயர் வைத்தார் என்பதும் உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

அதேபோல், அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்றழைக்கப்பட்ட அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு கடலூரில் திருவுருவச் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி, பெண் சமூக சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலையும், இந்தியாவின் முதல் பெண் சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்தப் பணிகள் முடிவடைந்துவிடும்.

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

அதேபோன்று செக்கிழுத்த செம்மல் திரு. வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு கோயம்புத்தூர் வ.உ. சிதம்பரனார் பூங்காவில் திருவுருவச் சிலை அமைக்கும் பணியும் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. விரைவில் இச்சிலைகள் அனைத்தும் திறந்து வைக்கப்பட இருக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3–9–2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் தமிழ் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, காந்தி மண்டப வளாகத்தில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அது திறக்கப்படவிருக்கிறது.

அதேபோல், 'வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா' கொண்டாடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். ஏறத்தாழ 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் அந்த அரங்கம் மேம்படுத்தப்படுவதோடு, அங்கே தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இடமான கேரள மாநிலம், "அருவிக்குட்டி" என்கிற இடத்தில் நினைவுத் தூண் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியும் விரைவில் தொடங்கப்படும்.

அதேபோன்று வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்று தொகுத்து, 'வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர்' ஒன்று "தமிழரசு" பத்திரிகை மூலமாக வெளியிடப்படவுள்ளது.

விரைவுத் துலங்கல் குறியீடு (QR CODE)

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில் விரைவுத் துலங்கல் குறியீடு (QR CODE) முறையில் காண இன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்தப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

மேலும், சிலைகளில் கருப்பு வண்ணம் அடிக்கப்பட்ட காரணத்தினால், பறவைகளுடைய எச்சம் சிலைகளின் மேல்

அதிகளவில் தென்பட்டதினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் கார்டுவெல்ஸ் அய்யா அவர்களின் சிலைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் வண்ணங்கள் மாற்றியமைக்கப்படும் பணி துவங்கியிருக்கிறது. விரைவில் அந்தப் பணிகள் முழுமை பெற்றவுடன் QR CODE பொறுத்தும் பணியும் இந்த மாத இறுதிக்குள் தொடங்கவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்தான விவரங்கள் பொது மக்களுக்கு உடனுக்குடன் சென்றடையும் வகையில், முதற்கட்டமாக பத்து பேருந்து நிலையங்களில் மின் சுவர் உருவாக்கப்படவிருக்கிறது. உருவாக்கப்பட்டு, செய்திகள் ஒளிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு, நாளை 11–4–2023 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட உள்ளது. அந்தப் பணியும் விரைவில் நிறைவடைய இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த சுதந்திரப் போராட்ட தியாகிகள், தமிழ்மொழி தியாகிகள், தமிழ் அறிஞர்கள், தலைவர்களுடைய படங்களை வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்திலேயும் அல்லது ஏதேனும் ஓர் இடத்திலேயும் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அரசு விழாக்கள். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 17 ஆம் நாள் “சமூக நீதி நாளாகவும்”, திரு. வ.உ. சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18 ஆம் நாள் “தியாகத் திருநாளாகவும்”, பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் “மகாகவி நாளாகவும்” அரசின் சார்பில் 2021 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாள் “சமத்துவ நாளாகவும்”, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாள் “அரசு விழாவாகவும்” 2022 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

சமூக ஊடகப் பிரிவு. செய்தித் துறையின்மூலம் முதன்முறையாக இந்த ஆண்டு சமூக ஊடகப் பிரிவு துவக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். வரலாற்றில் இல்லாத அளவிற்கு 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவிலும், வேளாண்மை நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவிலும், அதுமட்டுமல்ல ஒவ்வொரு மானியக் கோரிக்கை குறித்த செய்திகளை உடனுக்குடன், இன்றைக்கு தலைப்புச் செய்தியாக, இன்னும் சொல்லப்போனால், அதற்கென்று ஒரு Logo உருவாக்கப்பட்டு, அந்தச் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

இரவு 7–55

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் ஏறத்தாழ 5 கோடி மக்களுக்கும் மேலாக குறுஞ்செய்திகளாக அந்தச் செய்திகள் அனுப்பி வைக்கப்பட்டன என்பதையும் இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை பத்திரிகைகளெல்லாம் பாராட்டின என்பது உங்கள் அனைவருக்கும் நினைவிருக்கும். அந்தவகையில் Twitter மூலமாகவும், Instagram மூலமாகவும், Facebook மூலமாகவும், YouTube மூலமாகவும் அந்த செய்திகளெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டன.

அதேபோன்று, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஒருங்கிணைப்போடு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டது தொடர்பான தகவல் பொது மக்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, அது 5 கோடி மக்களைச் சென்றடைந்தது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதனைத் தொடர்ந்து, அனைத்துத் துறைகளின் மானியக் கோரிக்கையின் தகவல்களும் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன. செய்தித் துறையின் இச்செயல்பாட்டினைத்தான் நம்முடைய பத்திரிகைகளும் பாராட்டின என்பதையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொருட்காட்சிப் பிரிவு. கொரோனா தொற்றின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் அரசு மற்றும் தனியார் பொருட்காட்சிகள் நடைபெறவில்லை. ஆனால், கடந்த ஆண்டு அரசின் சார்பில் மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற வகையில் ஏறத்தாழ ஏழரை

இலட்சம் பேர் அதைப் பார்த்துப் பயனுற்றார்கள். அதன்மூலம், அரசுக்கு ரூபாய் 3 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த 23 மாதங்களில் நடைபெற்ற தனியார் பொருட்காட்சிகள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியாக ரூபாய் 2 கோடியே 72 இலட்சம் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாண்புமிகு முதல்வரின் ஆலோசனைப்படி, தமிழ்நாடு அரசின் சார்பில் "பெண்கள் முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் வீரமங்கை வேலுநாச்சியார், தமிழ் மூதாட்டி அவ்வையார், பத்மஸ்ரீ எம்.எஸ். சுப்புலட்சுமி, தஞ்சாவூர் பாலசரஸ்வதி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, இயற்கை விவசாயி திருமதி பாப்பம்மாள் ஆகிய ஏழு பெண் சாதனையாளர்களைக் காட்சிப்படுத்திய அலங்கார ஊர்தி பங்கேற்று அனைவரின் கவனத்தையும், பாராட்டினையும் பெற்றது.

சென்னையில் இவ்வாண்டு (2023) நடைபெற்ற குடியரசு தின விழாவில், மதுரையில் அமையவுள்ள கலைஞர் நூலகத்தின் மாதிரி, திருவள்ளுவர் சிலை மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகளைக் காட்சிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி தமிழ்நாடு அரசின் மூன்றாம் பரிசினைப் பெற்றது.

சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 47–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அரங்கில் "தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள கரிசல் இலக்கியத்தின் தந்தை கி. ராஜநாராயணன் அவர்களின் மணிமண்டபத்தின் மாதிரி காட்சிப்படுத்தப்பட்டு, அங்கே அதற்காக இரண்டாம் பரிசு பெறப்பட்டது" என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி. ஓராண்டில் தமிழ்நாடு அரசின் அரும்பணிகளின் தொகுப்பாக "ஓயா உழைப்பின் ஓராண்டு" என்ற தலைப்பில் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்திடும் வகையில் 38 மாவட்டங்களில் நடத்தப்பட்டது. இதற்காக,

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம்) ஒதுக்கப்பட்டு, ஏறத்தாழ ரூ.3,80,00,000/– (ரூபாய் மூன்று கோடியே எண்பது இலட்சம்) மொத்தம் செலவிடப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலமாக சுமார் 12 இலட்சம் பேர் அந்த புகைப்படக் கண்காட்சியினைப் பார்வையிட்டிருக்கிறார்கள்.

சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் மற்றும் தியாகிகளை கௌரவிக்கும் வகையில், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 15–8–2022 முதல் 1–9–2022 வரை 18 நாட்கள் ஒளி–ஒலி சிறப்புக் காட்சிகள் ரூ.56 இலட்சம் (ரூபாய் ஐம்பத்தாறு இலட்சம் மட்டும்) செலவில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் சிறப்பு நேர்வாக, மாமன்னர் ராசராச சோழனின் பிறந்த நாளை இந்த ஆண்டும் மற்றும் இனிவரும் ஆண்டுகளிலும் தஞ்சாவூர் மாவட்ட அளவில் அரசு விழாவாக நடத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

அடுத்து, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பாக என்னுடைய பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1831 ஆம் ஆண்டு அச்சுத் துறை தொடங்கப்பட்டது. ஏறத்தாழ, 191 ஆண்டுகள் பழமையானது இந்தத் துறை. இதே Fort St. George கோட்டையில்தான் 10 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட அச்சுத் துறை இன்றைக்கு ஏறத்தாழ 4,870 பணியிடங்களோடு செயல்பட்டு வருகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவையான அனைத்து நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கும் பணியினையும், மேலும் அனைத்துத் துறைகளுக்குத் தேவையான எழுதுபொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. சென்னை ஆணையரகம், திருச்சி மற்றும் மதுரை கிளை அச்சக வளாகங்களில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் மூலமாக தமிழ்நாடு அரசிதழ்கள், விதிமுறை நூல்கள் மற்றும் சட்டத் தொகுப்புகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த 23 மாதங்களில் பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள் அச்சிடும் பணிகள், பிற அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கான அச்சிடும் பணிகள், பெயர் மாற்ற அறிவிப்புகள், அரசிதழ்கள் விற்பனை மூலமாக ரூ.31 கோடியே 31 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இரவு 8-00

கடந்த நிதியாண்டில் இத்துறைக்கு முதல்முறையாக தரக்கட்டுப்பாடு ஆய்வகம் ரூபாய் 1 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த நிதியாண்டில் ரூபாய் 1 கோடியே 15 இலட்சம் மதிப்பில் Four Colour Toner based Digital Production Printer, ரூபாய் 96 இலட்சம் மதிப்பில் Black and White Inkjet Digital Production Printer, ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் Four Colour Digital Inkjet Production Printer ஆகிய இயந்திரங்களின் உற்பத்தியை கடந்த 23-3-2023 அன்று நானும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் துவக்கி வைத்தோம்.

அரசு அச்சக ஊழியர்களுக்கு நவீன வசதிகளுடன்கூடிய 96 குடியிருப்புகள் தண்டையார்பேட்டையில் ரூபாய் 34 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு இந்த மாத இறுதியில் பணி துவக்கி வைக்கப்பட இருக்கிறது.

சென்னை, அரசு எழுதுபொருள் அலுவலகம் புனரமைப்பதற்காக ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சகக் கட்டடம், அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சகக் கட்டடம், மதுரை அரசு கிளை அச்சகக் கட்டடம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சக மின் பராமரிப்புப் பணிகள் ரூபாய் 4 கோடியே 5 இலட்சம் மதிப்பில் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மதுரை மற்றும் விருத்தாசலம் கிளை அச்சகங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து நாட்டு மக்களிடையே ஒற்றுமையும், நல்லிணக்கமும் ஓங்கி வளர்ந்திடவும், ஏழை எளியோர் மற்றும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு, சமூக முன்னேற்றம் கண்டிடவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையும், எழுதுபொருள் அச்சுத் துறையும் புத்தாக்கத்துடனும், எழுச்சியுடனும் செயல்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு தலைநிமிர உழைப்போம், உழைப்போம், உழைப்போம் என உறுதி கூறி, எனது உரையை

நிறைவு செய்வதற்கு முன்பு அறிவிப்பிற்கு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள்

செய்தி மற்றும் விளம்பரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சாதனைகளின் தொடர்ச்சியாக 2023–2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்களை அறிவிக்க விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் கனவுக் கோட்டமான சென்னை வள்ளுவர் கோட்டம், சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைவர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் புனரமைக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்.

உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்டம் 1976 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்.

2. டாக்டர் சி. நடேசனார், சர். பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் சிறப்புகள், பெருமைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறியும் வகையில் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்றுச் சின்னம் அமைகின்ற அளவிற்கு திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் தலைநகர் சென்னையில் அமைக்கப்படும்.

திராவிட இயக்கத் தீரர்களான, மறைந்த டாக்டர் சி. நடேசனார், சர். பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஆகியோரின் சிறப்புகள், தொண்டுகள், பெருமைகளை

நினைவுகூறும் வகையிலும், எதிர்காலத் தலைமுறையினர் அறியும் வகையிலும் திராவிட இயக்கச் சரித்திர நிகழ்வுகளைத் தாங்கி ஒரு வரலாற்று ஆவணமாகத் திராவிட இயக்கத் தீரர்கள் கோட்டம் சென்னையில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில், தென்காசி மாவட்டம், விசுவநாதப்பேரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

மன்னர் பூலித்தேவர் படையின் முக்கியத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில், தென்காசி மாவட்டம், விசுவநாதப்பேரியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

4. சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்ற வீராங்கனை குயிலி அவர்களுக்கு சிவகங்கையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில், சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று தன் உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து அதைத் தகர்த்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி அவர்களுக்கு சிவகங்கையில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

5. சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

வேலுநாச்சியார் மற்றும் மருது சகோதரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரரான "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

6. சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது பிறந்த நாளான ஜூன் 10, அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட மாவீரன் "வாளுக்குவேலி அம்பலம்" அவர்களது வீரத்தையும், நினைவையும் போற்றும் வகையில், அன்னாரது பிறந்த நாளான ஜூன் 10, அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

7. ஈரோடு மாவட்டம், சென்னிமலையை சேர்ந்த சுதந்திரப் போராட்ட தியாகி கொடிகாத்த குமரன் அவர்களுக்கு சென்னிமலையில் திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கம் அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலையைச் சொந்த ஊராகவும், குமாரசாமி என்ற இயற்பெயரைக் கொண்டும், இந்தியச் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி தன் உயிரைத் துறந்தவருமான தியாகி கொடிகாத்த குமரனின் உயிர்த் தியாகத்தைப் போற்றி, அன்னாருக்கு ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைப்புச் செய்திகளைப் படியுங்கள்.

இரவு 8-05

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

8. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தினை நிறைவேற்றக் காரணமாயிருந்த பெருந்தலைவர் கு. காமராஜர் அவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தை நிறைவேற்றக் காரணமாயிருந்த பெருந்தலைவர் திரு. கு. காமராஜர் அவர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் அரங்கம் அமைக்கப்படும்.

தமிழ்மொழிமீது தீராத பற்றுக்கொண்டு, இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த,

கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

தமிழ்மொழிமீது தீராத பற்றுக்கொண்டு, வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியும், கள்ளுக்கடை மறியல், வைக்கம், சைமன் குழு எதிர்ப்பு, உப்பு சத்தியாகிரகம் மற்றும் நீல் சிலை சத்தியாகிரகம் ஆகிய போராட்டங்களில் கலந்துகொண்டு சிறைத் தண்டனை பெற்று மடிந்த அண்ணல் தங்கோ அவர்களுக்கு வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தலைப்புகள்தான். (குறுக்கீடு) தலைப்புதான்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

11. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் அன்னாருக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்படும்.

தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர், தேசியப் போராட்டத் தியாகி, உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தின் வழிநடைப் பாடலாசிரியர் மற்றும் பத்ம பூஷண் பட்டம் பெற்றவருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு, நாமக்கல் நகரில் அன்னாரின் நினைவு இல்லத்தில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் மார்பளவுச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரை மாநகரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்த சாலைக்கு டி.எம். சௌந்தரராஜன்

சாலை எனப் பெயர் சூட்டப்பட்டது. மேலும், அவரது புகழைச் சிறப்பிக்கும் வகையில், மதுரை மாநகரில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

13. சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public-Private Partnership) அமைக்கப்படும்.

*சென்னை அருகே அதிநவீன திரைப்பட நகரம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (*Public-Private Partnership*) அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை (*Detailed Project Report*) தயாரிக்க ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.*

14. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அதிநவீன படப்பிடிப்புத் தளங்கள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்நுட்பத் தரத்தினை உயர்த்துவதற்காகவும், திரைப்படத் துறை மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 32,280 சதுரடி அளவில் 1-வது படப்பிடிப்புத் தளமும், 40,672 சதுரடி அளவில் 2-வது படப்பிடிப்புத் தளமும், 22,596 சதுரடி அளவில் 3-வது மற்றும் 4-வது படப்பிடிப்புத் தளங்கள் என மொத்தம் 4 படப்பிடிப்புத் தளங்கள் நவீன தொழில்நுட்பங்களுடன் அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் அமைக்கப்படும்.

15. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் குறும்பட படப்பிடிப்பு தயாரிப்புச் செலவுகள் உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களின் நலன் கருதி, இறுதித் திட்ட குறும்பட படப்பிடிப்பு தயாரிப்புச் செலவினம் ஒவ்வொரு குழுவிற்கும் ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

16. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடப் பயன்பாட்டிற்கென கணினி, மடிக்கணினி, அச்சுப்பொறி, நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவை கொள்முதல் செய்யப்படும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடத்தில் உள்ள பிரிவுகள் மற்றும் அலுவலர்களின் பயன்பாட்டிற்கென 20 கணினிகள், 5 மடிக்கணினிகள், 20 அச்சுப்பொறிகள் மற்றும் 1 நகலெடுக்கும் இயந்திரம் ஆகியவை ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

17. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டை முன்னிட்டு பத்திரிகையாளர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப நல நிதி உயர்த்தி வழங்கப்படும். (புத்தக அறிவிப்பில் இடம் பெறவில்லை)

20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ரூ.10,000/– பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டை முன்னிட்டு, அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் கூடுதலாக வழங்கி, இனி மாதந்தோறும் ரூ.12,000/– ஆக வழங்கப்படும். மேலும், அந்த ஓய்வூதியர் இறந்துவிட்டால், குடும்ப நல நிதியாக ரூ.5,000/– வழங்கப்பட்டு வருகிறது. அதையும் ரூ.1,000/– உயர்த்தி, இனி ரூ.6,000/– ஆக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டங்களெல்லாம், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் அறிவிக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொடர்பான 3 அறிவிப்புகள்.

எழுதுபொருள் மற்றும் அச்சு

1. சென்னையில் உள்ள அரசு மைய அச்சகத்திற்கு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நிதிநிலை அறிக்கை தொடர்பான பணிகள், தமிழ்நாடு சட்டமன்றப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் வாழ்த்து அட்டைகள், கடித தாட்கள், உறைகள், நாட்குறிப்பேடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடு, அரசு மாத நாட்காட்டி மற்றும் தேர்தல்

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

பணிகள் போன்ற அவசரப் பணிகள் குறுந்தகடு (CD) வடிவில் பெறப்பட்டு, CTP அச்சுத் தகடு தயாரிப்பதற்கு ஏதுவாகவும், நவீன இயந்திரங்களின் பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாலும் பழைய தொழில்நுட்பமான அச்சுத் தகடுகள் (PS Plates) சந்தையில் தயாரிப்பது அரிதாகிவிட்டதாலும், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ஒரு Thermal CTP இயந்திரம் கொள்முதல் செய்து அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

2. அரசு கிளை அச்சகங்களுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில், 8 எண்கள் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft), 2 எண்கள் காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளு வண்டிகள் (Hydraulic Reel Loading Trolley), 8 எண்கள் ஹைட்ராலிக் நகர் அடிமேடைகள் (Hydraulic Pallet Trolley) மற்றும் 15 எண்கள் கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) ஆகியவை கொள்முதல் செய்யப்படும்.

மதுரை கோ.புதூர் மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் சிரமமின்றி, காகித உருளையை ஏற்றி, தாங்கிப் பிடிக்க நவீன வசதியுடன்கூடிய காற்று அடைப்பான் முறையில் செயல்படும் நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) தலா 4 எண்கள் என மொத்தம் 8 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

விருத்தாசலம் மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள வெப் ஆப்செட் இயந்திரங்களில் அச்சிட பயன்படும் காகித உருளைகளை எளிதாகக் கையாண்டு இயந்திரத்தில் பொருத்துவதற்கு காகித உருளையை ஏற்றும் ஹைட்ராலிக் தள்ளுவண்டி (Hydraulic Reel Loading Trolley) 2 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

திருச்சி, மதுரை கோ.புதூர், புதுக்கோட்டை மற்றும் சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள இயந்திரப் பிரிவு, புத்தகம் கட்டும் பிரிவு மற்றும் அனுப்புகை பிரிவுகளில் அச்சிட்ட காகிதங்களை ஒரு கட்டடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்கு எளிதாக ஏற்றிச் செல்ல ஹைட்ராலிக் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) தலா 2 எண்கள் என மொத்தம் 8 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

மதுரை கோ.புதூர் அரசு கிளை அச்சகத்தில் தேர்தல் துறை, வருவாய்த் துறை, விதைச் சான்றட்டை மற்றும் பொதுவான பணிகள், நிலைப்படுத்தப்படாத பதிவேடுகள்/படிவங்கள் ஆகிய பணிகளை குறுகிய காலத்தில் உடனடியாக செயலாக்கம் செய்து அனுப்புகை செய்ய வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி 10 digit கொண்ட கையினால் எண்களிடும் இயந்திரம் (Hand Numbering Machine) 15 எண்கள் கொள்முதல் செய்யப்படும்.

3. பொது மக்களின் விருப்பத்தின்பேரில் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

இயக்ககம் சென்னை, மதுரை மற்றும் திருச்சி அரசு கிளை அச்சகங்களில் தற்பொழுது துணை விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு பொது மக்கள் சென்று வர ஏற்படும் காலவிரயம் மற்றும் பொருள் விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொது மக்களின் விருப்பத்தின் பேரில் சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

பொது மக்கள் தங்கள் பெயர்களை மாற்றுவதற்கு சென்னைக்கு வர வேண்டியிருந்தது. ஆனால், இனிமேல், சேலம், விருத்தாசலம் மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களிலேயே தங்களது பெயர்களை மாற்றிக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை தொடர்பாக சுமார் 87 வெட்டுத் தீர்மானங்கள் வரபெற்றுள்ளன. எழுதுபொருள் மற்றும் அச்சு மானியக் கோரிக்கை தொடர்பாக சுமார் 73 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. (சிரிப்பு) அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். சம்பந்தபட்ட

2023 ஏப்ரல் 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது பதிலுரை ஓரளவிற்கு நிறைவினைத் தந்திருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும், அவற்றையெல்லாம் குறித்துக்கொண்டு, எதிர்காலத்திலே நிச்சயமாக அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசினார்கள். அப்போது சொன்னார், நாங்கள் இந்த சட்டமன்றத் தேர்தல் முடிந்தால், அவர்கள் இங்கே இருப்பார்களாம், நாங்களெல்லாம் அங்கே போய்விடுவோமாம். இல்லை, அவருடைய கனவு பலிக்காது. 'அவர்கள் இங்கேயும் வரப் போவதில்லை, அங்கேயும் அமரப் போவதில்லை.' அதுதான் நடக்கப் போகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று, அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் பேசும்போது, Thirumangalam formula-வை நீங்கள் இடைத்தேர்தலில் அறிமுகப்படுத்தினீர்கள் என்று சொன்னார்கள். 2002 ஆம் ஆண்டில் ஆண்டிப்பட்டி election-ல் என்ன நடந்தது என்று தெரியும். அவர் மறந்துவிட்டார். எனவே, அவற்றையெல்லாம் மறந்துவிட்டு, மக்கள் மத்தியிலே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கனவு பலிக்காது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியிலே, எதிர்காலத்தில் உங்களுடைய எண்ணிக்கை zero ஆகத்தான் இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு நான் பதிலுரையில் தந்திருக்கக்கூடிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு நிச்சயமாக உதவியாக இருப்பார்கள். அதுமட்டுமல்ல, தொடர்ந்து தம்முடைய ஆக்கப் பணிகளை இத்துறையின் மூலமாகச் செய்வதற்கு உங்களுடைய ஆலோசனைகளை எதிர்பார்த்து, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகளுக்கும் நன்றி சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) சரி.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களது துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு பல்வேறு உதவிகளைச் செய்து வரக்கூடிய அரசு அதிகாரிகள், குறிப்பாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் அனைவருக்கும்.

இரவு 8–10

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: அரசு அதிகாரிகள், குறிப்பாக நம்முடைய அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்களான திரு. T. உதயசந்திரன், இ.ஆ.ப. அவர்களுக்கும், திரு. M.S. சண்முகம், இ.ஆ.ப. அவர்களுக்கும், டாக்டர் P. உமாநாத், இ.ஆ.ப. அவர்களுக்கும், எங்கள் துறையிலிருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. அவர்களுக்கும், புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற அரசுச் செயலாளர் திரு. செல்வராஜ், I.A.S. அவர்களுக்கும், அதைப்போல சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியேற்றுச் சென்றிருக்கின்ற திரு. ஜெயசீலன், I.A.S. அவர்களுக்கும், புதிதாக வந்திருக்கின்ற இயக்குநர் திரு. மோகன், I.A.S. அவர்களுக்கும், அச்சுத் துறையில் ஆணையராக இருந்த திருமதி சுகந்தி, I.A.S. அவர்களுக்கும், அதேபோல புதிதாக வந்திருக்கின்ற சகோதரி திருமதி அருணா, I.A.S. அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, கூடுதல் இயக்குநரிலிருந்து களப் பணியிலே பணிபுரிந்து வரக்கூடிய அனைத்து அலுவலர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.144,80,98,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.166,45,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,50,30,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.523,82,32,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(எ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.429,47,93,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

[*2023 ஏப்ரல் 10*

7. தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு —ஆளுநர் ஒப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை நாம் நிறைவேற்றி அனுப்பிய அரசினர் தனித் தீர்மானத்தில், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தடைச் சட்டம் குறித்த மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் மாண்புமிகு ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு, நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, இதனால் தமிழ்நாட்டின் நிருவாக நலனும், இளைஞர்களின் எதிர்காலமும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம்.*

மேலும், பொது வெளியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்துவரும் சர்ச்சைக்குரிய கருத்துகள் குறித்தும் நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

இந்தச் சூழ்நிலையில், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் ஒரு நல்விளைவாக, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாலை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாலை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தொடர்பான மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்தச் சட்டமானது இன்றே தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 8–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் மாண்பை நிலைநாட்டித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அனைவரின் சார்பாக நானும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–4–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 20–10–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 115–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

81. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 9–11–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 124–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

82. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 29–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 13–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

83. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 26–4–2022 ஆம் நாளிட்ட

அரசாணை (நிலை) எண் 38-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

84. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய ஒழுங்குமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறையின் 20–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 11–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

85. (i) மதுரையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் ஆயமன்றம்) கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் மற்றும் (ii) சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு கூடுதல் உறுப்பினரை (நீதித் துறை) நியமித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறையின் 16–6–2022 ஆம் நாளிட்ட அரசாணை (ப) எண் 130–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

86. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. (2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

87. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

158. மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 10]

159. மானியக் கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

160. மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

161. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

162. மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

163. மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

164. மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

*165. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் 'தோள்கொடுப்போம் தொழில்களுக்கு–*Facilitating MSMEs *2022–2023' என்கிற சிறுநூல். (தமிழ்–ஆங்கிலம்)*

166. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை (சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

167. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை (பெருந்தொழில்) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

168. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

169. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

170. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

171. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

2023 ஏப்ரல் 10]

இணைப்பு-I

(157 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதியைப் பெறுவதே, நமது அரசியலமைப்பின் முதன்மையான நோக்கமாகும். மக்கள் நலன் என்பது, ஒரு பொதுநல அரசின் முதன்மையான அக்கறையாக இருக்க வேண்டும். நீதி நிர்வாகம் என்பது, பழங்காலத்திலிருந்தே எந்தவொரு மாநிலத்தின் முதன்மையான செயல்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நீதித் துறையின் சுதந்திரம் பேணப்படுவதையும், அதற்கான உகந்த சூழ்நிலை நிலவுவதையும் உறுதி செய்ய, இந்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இதன் விளைவாக, பொதுமக்களுக்கான நீதியை விரைவாக வழங்குவதற்கு வசதியாக, கட்டடங்கள், மனிதவளம் மற்றும் பிற உட்கட்டமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் போதுமான வசதிகளை உறுதி செய்ய, அரசாங்கம் எப்போதும் முயன்று வருகிறது.

2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

புதுதில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றம், நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக உள்ளது. இதன் கட்டுப்பாட்டின்கீழ் மாநிலங்களில் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும் செயல்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள நீதித் துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை I—ல் இணைக்கப்பட்டுள்ளது.

3. உயர் நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக் கிளை

3.1. சென்னை உயர் நீதிமன்றம், மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு ஆகும். இந்த உயர் நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள், 59 நீதிபதிகளைக் கொண்டு தற்போது சென்னை உயர்

[2023 ஏப்ரல் 10

நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை செயல்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும், சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை அதிகாரம்) மற்றும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல் முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரங்களை பெற்றுள்ளது, சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட வழக்குகளில், ரூபாய் ஒரு கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 20 மாவட்டங்கள் உள்ளன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1	சென்னை	11	கிருஷ்ணகிரி
2	திருவள்ளூர்	12	தர்மபுரி
3	காஞ்சிபுரம்	13	சேலம்
4	வேலூர்	14	நாமக்கல்
5	திருவண்ணாமலை	15	ஈரோடு
6	கடலூர்	16	திருப்பூர்
7	விழுப்புரம்	17	கோயம்புத்தூர்
8	நீலகிரி	18	திருவாரூர்
9	நாகப்பட்டினம்	19	அரியலூர்
10	பெரம்பலூர்	20	மயிலாடுதுறை

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 13 மாவட்டங்கள் உள்ளன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1	மதுரை	8	இராமநாதபுரம்
2	திண்டுக்கல்	9	விருதுநகர்
3	புதுக்கோட்டை	10	திருநெல்வேலி
4	தஞ்சாவூர்	11	தூத்துக்குடி
5	திருச்சிராப்பள்ளி	12	கன்னியாகுமரி

2023 ஏப்ரல் 10]

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
6	*கரூர்*	*13*	*தேனி*
7	*சிவகங்கை*		

இம்மாவட்டங்களில் எழும் அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர, சென்னை உயர் நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

3.2. சென்னை உயர் நீதிமன்ற அதிகார எல்லைக்குள், புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

3.3. நீதி பரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.

4. நீதிமன்றங்களின் எண்ணிக்கை

*4.1. இம்மாநிலத்தில் தற்போது, சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து, மொத்தம் 1,330 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 151 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1,179 நீதிமனறங்களும் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் முறையே பிற்சேர்க்கை–*II *மற்றும்* III*—ல் இணைக்கப்பட்டுள்ளன.*

வரிசை எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை	காலியிடம்
1	*மாவட்ட நீதிபதி*	*343*	*267*	*76*

வரிசை எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	தற்போதுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை	காலியிடம்
2	முதுநிலை உரிமையியல் நீதிபதி	355	299	56
3	உரிமையியல் நீதிபதி	651	494	157
	மொத்தம்	1,349	1,060	289

4.2. 2023 ஆம் ஆண்டில், மாவட்ட நீதிபதி பதவியில் உள்ள 45 காலியிடங்களுக்கும், சிவில் நீதிபதிகள் பதவியில் உள்ள 245 காலியிடங்களுக்கும் முறையே சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்புப் பிரிவு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின்மூலம் நேரடி நியமனம்மூலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்

2022-2023 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட 29 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக, தொடரும் மற்றும் தொடரா செலவினத்துடன்கூடிய மொத்த செலவினம் ரூ.84.84 கோடியும், 1,021 புதிய பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

வரிசை எண்	ஒப்பளிக்கப்பட்ட நீதிமன்றங்களின் வகை	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	இடம்/மாவட்டம்
1	மாவட்ட நீதிபதி பதவி நிலையில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்	1	அரக்கோணம்
2	மாவட்ட நீதிபதி பதவி நிலையில் 1989 ஆம் ஆண்டின் பட்டியல் சாதி/ பட்டியல் பழங்குடியினர் (கொடுமை தடுப்புச்) சட்டத்திற்காக சிறப்பு நீதிமன்றம்	1	சேலம்

2023 ஏப்ரல் 10]

வரிசை எண்	ஒப்பளிக்கப்பட்ட நீதிமன்றங்களின் வகை	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	இடம்/மாவட்டம்
3	மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்	6	1. கள்ளக்குறிச்சி 2. தென்காசி 3. ராணிப்பேட்டை 4. காஞ்சிபுரம் 5. மயிலாடுதுறை 6. திருப்பத்தூர்
4	சார்பு நீதிமன்றம்	9	1. போடிநாயக்கனூர் 2. முசிறி 3. சீர்காழி 4. வந்தவாசி 5. திருக்கோவிலூர் 6. கொடுமுடி 7. சங்கராபுரம் 8. திருவைகுண்டம் 9. தாம்பரம்
5	சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு வழக்குகளுக்காக சார்பு நீதிபதி பதவி நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம்	1	சென்னை
6	தலைமை குற்றவியல் நடுவர்	1	உதகமண்டலம்
7	மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்	9	1. அணைக்கட்டு 2. கல்வராயன் மலை 3. குன்றத்தூர் 4. வண்டலூர் 5. கே.வி. குப்பம் 6. மொடக்குறிச்சி 7. விராலிமலை 8. கீழ்பெண்ணாத்தூர் 9. வத்திராயிருப்பு

வரிசை எண்	ஒப்பளிக்கப்பட்ட நீதிமன்றங்களின் வகை	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	இடம்/மாவட்டம்
8	மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்	1	சேரன்மகாதேவி
	மொத்தம்	29	

6. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை

6.1. மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது சென்னை மாநகர எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதிகள் ரூபாய் பத்து இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதிகள், ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமலும் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். சென்னை மாவட்ட அமர்வு பிரிவிற்கு, இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது.

6.2. 1882 ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளையும், 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்க, சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் அதிகாரங்களை பெற்றுள்ளன.

- ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறு வழக்குகள் நீதிமன்றங்கள், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக தீர்ப்பாயங்களாக செயல்படுகின்றன.

- தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரில் 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளனர்.

- பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகைக் கட்டுப்பாட்டாளர்களாக (Rent Controllers) செயல்படுகின்றனர்.

2023 ஏப்ரல் 10]

- *மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகைக் கட்டுப்பாடு தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.*

6.3. சென்னை மாநகரில் 37 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தங்களுடைய அதிகார வரம்புக்குட்பட்டு சென்னையில் குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன.

7. மாவட்ட நீதிமன்றங்கள்

7.1. 92 மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கெனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 49 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட) இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூபாய் பத்து இலட்சம் மற்றும் அதற்கு மேல் உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர். மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சிறப்பு சட்டங்களின்கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும், மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். இவர்கள் தங்களது மாவட்டங்களில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும், சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

7.2. மாநிலத்தில் 33 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் ஆய்வினை மேற்கொள்வர்.

[2023 ஏப்ரல் 10

7.3. 173 சார்பு நீதிமன்றங்கள், இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமலும் பண மதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. மேலும், இந்நீதிமன்றங்கள் தங்களது எல்லைக்கு உட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் முடிவிற்கு எதிராக தொடரப்படும் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன.

7.4. 210 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பை பெற்றுள்ளன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டாளர்களாகவும் செயலாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அதற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன. மேலும், அவை ரூபாய் இருபதாயிரம் பண மதிப்பு கொண்ட சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன.

7.5. இம்மாநிலத்தில் ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும், மொத்தம் 237 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்களில் மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் பத்தாயிரத்திற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன.

7.6. பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து உரிமையியல் சார்ந்த வழக்குகளை தொடுக்க வெகுதொலைவிற்கு பயணம் செய்து நீதிமன்றங்களை சென்றடையும் சிரமத்தை குறைப்பதற்காகவும், அடிப்படை நீதிமன்றமே இல்லாத வருவாய் வட்டங்களில் பொதுமக்களின் நன்மைக்காக, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. மாநிலத்தில் தற்போது 82 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

2023 ஏப்ரல் 10]

8. சிறப்பு நீதிமன்றங்கள்

8.1. 1955 ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955—ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க, கீழ்க்காணும் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. *கூடுதல் அமர்வு நீதிமன்றம்—I, திருச்சிராப்பள்ளி*
2. *கூடுதல் அமர்வு நீதிமன்றம்—I, தஞ்சாவூர்*
3. *கூடுதல் அமர்வு நீதிமன்றம்—II, திருநெல்வேலி*
4. *கூடுதல் அமர்வு நீதிமன்றம்—III, மதுரை*

8.2. 1989 ஆம் ஆண்டின் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989—ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1	விழுப்புரம்	*8*	தேனி
2	சிவகங்கை	*9*	திருவண்ணாமலை
3	திண்டுக்கல்	*10*	பெரம்பலூர்
4	இராமநாதபுரம்	*11*	தூத்துக்குடி
5	விருதுநகர் மாவட்டம் @ ஸ்ரீவில்லிப்புத்தூர்	*12*	வேலூர்
6	புதுக்கோட்டை	*13*	கடலூர்
7	நாமக்கல்		

இதர மாவட்டங்களில், அந்தந்த மாவட்டத்தில் உள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு

மேற்குறிப்பிட்ட சட்டங்களின்கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின்மீது விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், காஞ்சிபுரம் மாவட்டங்களுக்காக செங்கல்பட்டிலும், திருவாரூர், திருப்பூர், சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்காக நாகர்கோவிலிலும், 1989 ஆம் ஆண்டைய பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையிலான 6 சிறப்பு நீதிமன்றங்களை தோற்றுவித்து, அரசு ஆணையிட்டுள்ளது.

8.3. இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.4. 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012—ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில், சிறப்பு நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1	சென்னை	9	சிவகங்கை
2	கோயம்புத்தூர்	10	தஞ்சாவூர்
3	கடலூர்	11	திருநெல்வேலி
4	காஞ்சிபுரம் @ செங்கல்பட்டு	12	திருவண்ணாமலை
5	கன்னியாகுமரி @ நாகர்கோவில்	13	தூத்துக்குடி

2023 ஏப்ரல் 10]

6	மதுரை	*14*	வேலூர்
7	நாகப்பட்டினம்	*15*	விழுப்புரம்
8	சேலம்	*16*	விருதுநகர் @ ஸ்ரீவில்லிபுத்தூர்

மேலும், திண்டுக்கல், தருமபுரி, தேனி மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் மேற்கூறிய சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

8.5. வணிக நீதிமன்றங்கள் (Commercial Courts)

2015 ஆம் ஆண்டின் வணிக நீதிமன்றங்கள் சட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென புதியதாக ஏற்படுத்தப்பட்ட *5* வணிக நீதிமன்றங்களில், மூன்று நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி பதவி நிலையிலும் (அதாவது சென்னை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும்) இரண்டு நீதிமன்றங்கள் சார்பு நீதிபதி பதவி நிலையிலும் (அதாவது சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும்) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக செங்கல்பட்டில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் ஒரு வணிக நீதிமன்றமும், சார்பு நீதிபதி பதவி நிலையில் ஒரு வணிக நீதிமன்றமும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

சார்பு நீதிபதி நிலையில் உள்ள வணிக நீதிமன்றம் மாவட்ட தலைநகரங்களில் தொடுக்கப்படும் வழக்குகளில் ரூபாய் மூன்று இலட்சம் முதல் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை விசாரிக்கும்.

மாவட்ட நீதிபதி பதவி நிலையில் உள்ள வணிக நீதிமன்றம், ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை தொடர்புடைய மாவட்ட எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும். சென்னை மாவட்டத்தில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில் இயங்கும் வணிக நீதிமன்றம் ரூபாய் மூன்று இலட்சம் முதல் ரூபாய் ஒரு கோடி வரையிலான பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை விசாரிக்கும். இவ்விவரம் அட்டவணை III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

8.6. தொழிலாளர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் *17* தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழில் வழக்கு தீர்ப்பாயம் செயல்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 10

இந்நீதிமன்றங்கள் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன. இவ்விவரம் அட்டவணை III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

8.7. குடும்பநல நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 40 குடும்பநல நீதிமன்றங்கள், திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் 1984 ஆம் ஆண்டின் குடும்பநல நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவ்விவரம் அட்டவணை III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

8.8. மகளிர் நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென 10 மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் 22 மகளிர் விரைவு நீதிமன்றங்கள், மாவட்ட நீதிபதி பதவி நிலையிலும், மேலும், 32 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விவரம் அட்டவணை III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

8.9. 2005 ஆம் ஆண்டின் குடும்ப வன்முறை சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

குடும்ப வன்முறை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒரு சிறப்பு நீதிமன்றம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது.

8.10. பொருளாதார குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான மூன்று சிறப்பு நீதிமன்றங்களில், இரண்டு சென்னையிலும், ஒன்று மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன.

8.11. போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

8.12. 1997 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997-ன்கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.13. 1955 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955—ன்கீழ் பதிவாகும் வழக்குகளை குறிப்பாக விசாரிக்க, கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1	சென்னை	4	புதுக்கோட்டை
2	மதுரை	5	சேலம்
3	கோயம்புத்தூர்	6	தஞ்சாவூர்

8.14. மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் (Central Bureau of Investigation) வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

மாநிலத்தில் மத்திய குற்றப் பிரிவு புலனாய்வு வழக்குகளை விசாரிப்பதற்கென குறிப்பாக 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னையில் 6 நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு நீதிமன்றமும் உள்ளன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவன மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான ஒரு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

8.15. 1978 ஆம் ஆண்டின் பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

1978 ஆம் ஆண்டைய பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்

[2023 ஏப்ரல் 10

பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண் 3876/2009-ஐ விசாரிப்பதற்கென, சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.16. 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் (மையச் சட்டம் 49/1988) பதிவு செய்யப்படும் வழக்குகளை குறிப்பாக விசாரிப்பதற்கென, கீழ்க்காணும் இடங்களில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1.	சென்னை	5.	விழுப்புரம்
2.	மதுரை	6.	சேலம்
3.	கோயம்புத்தூர்	7.	சிவகங்கை
4.	திருச்சிராப்பள்ளி	8.	திருநெல்வேலி

8.17. சென்னை பெருநகர மத்திய குற்றப் பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மத்திய குற்றப் பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை குறிப்பாக விசாரணை செய்வதற்காக, சார்பு நீதிபதி பதவி நிலையில், அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், சார்பு நீதிபதி பதவி நிலையில், சென்னை பெருநகர காவல் ஆணையரக மத்திய குற்றப் பிரிவு வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

8.18. சந்தனக்கட்டை / வனக் குற்றங்கள் தொடர்பான குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி

2023 ஏப்ரல் 10]

*மாவட்டம், நாகர்கோவிலில் வனக் குற்றங்கள் (*Forest Offences*) தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.*

8.19. 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை, குறிப்பாக விசாரிப்பதற்காக, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம், நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களுக்கு, 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

8.20. 1987 ஆம் ஆண்டின் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

*சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் (முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதி) பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987ன் (தற்போது நீக்கப்பட்டது) (*repealed*) கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.*

8.21. கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளை குறிப்பாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மையச் சட்டம் 15/2002)-ன்கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

[*2023 ஏப்ரல் 10*

8.22. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (D&R) சட்ட மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒரு சிறப்பு நீதிமன்றம் மதுரையில் செயல்பட்டு வருகிறது.

8.23. நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 26 சிறப்பு நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 23 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இதன் விவரம் பிற்சேர்க்கை IV-ல் இணைக்கப்பட்டு உள்ளது.

8.24. சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றமும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன. இதர மாவட்டங்களில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கு, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

8.25. மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

இம்மாநிலத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென 30 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இது தவிர, மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கூடுதலாக 8 நீதிமன்றங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

8.26. நிலஎடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு நீதிமன்றங்கள்

நில எடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்காக, 6 சிறப்பு நீதிமன்றங்கள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1.	*அரியலூர்-2*	*3.*	*வேலூர்-2*
2.	*கடலூர்-1*	*4.*	*திருவள்ளூர்-1*

8.27. 1881 ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்திற்கான சிறப்பு நீதிமன்றம்

1881 ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் வழக்குகளை விசாரிக்க 2 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.28. சிலை கடத்தல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் சிலை கடத்தல் வழக்குகளை விசாரிப்பதற்காக கூடுதல் தலைமை குற்றவியல் நடுவர் நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் இயங்கி வருகிறது.

8.29. விரைவு நீதிமன்றங்கள்

இந்த மாநிலத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை தீர்ப்பதற்காக, 39 விரைவு நீதிமன்றங்கள் இந்த மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

8.30. கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள்

10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் உள்ளன. அவை சென்னை உயர் நீதிமன்றத்திற்காக நான்கு நீதிமன்றங்களும், சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு நான்கு நீதிமன்றங்களும், சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திற்கு இரண்டு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. இந்த நீதிமன்றங்கள் அசல் வழக்குகளில் வழக்காடிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, அவர்களின் சாட்சியங்களை பதிவு செய்து, தொடர்புடைய நீதிமன்றங்களுக்கு, தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 10

8.31. மோட்டார் வாகனச் சட்ட வழக்குகளுக்கான நடமாடும் நீதிமன்றங்கள்

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) கீழான வழக்குகள் மற்றும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிக்க கீழ்க்காணும் இடங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:—

வரிசை எண்	மாவட்டம்	வரிசை எண்	மாவட்டம்
1.	*சென்னை—2*	*7.*	*நாமக்கல்*
2.	*காஞ்சிபுரம்*	*8.*	*சேலம்*
3.	*விழுப்புரம்*	*9.*	*ஈரோடு*
4.	*கோயம்புத்தூர்*	*10.*	*திண்டுக்கல்*
5.	*திருச்சிராப்பள்ளி*	*11.*	*திருநெல்வேலி*
6.	*மதுரை*		

9. நடமாடும் நீதிமன்றங்கள்மூலம் போக்குவரத்து விதிமீறல் செலுத்துச் சீட்டு (Challan) வழக்குகளை தீர்ப்பது

சென்னை மாவட்டத்தில் உள்ள XXI *மற்றும்* XXII *பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள் மெய்நிகர் (Virtual) முறையில் நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படுகின்றன. மேலும், 1,12,347 போக்குவரத்து விதிமீறல் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அபராதத் தொகை ரூ.43,89,04,870/- மின்னணு பரிவர்த்தனை மூலமாக வசூலிக்கப்பட்டுள்ளது.*

10. அரசு தலைமை சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர்

10.1 அறக்கட்டளைகளின் சொத்துகளுக்கும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலமானவர்களின் எஸ்டேட் சொத்துகளுக்கும் பொறுப்பு வகிப்பதற்காக சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்—பொறுப்பு சொத்தாட்சியர் இருக்கின்றார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர்—பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

2023 ஏப்ரல் 10]

10.2. அரசு தலைமை சொத்தாட்சியர் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு உள்ள ரூ.3.65 கோடி பண மதிப்புள்ள 39 இறந்த நபர்களின் 907 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும் பராமரித்து, நிர்வகித்து வருகிறார். மேலும், இவர்களின் அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

10.3. பொறுப்பு சொத்தாட்சியர் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு உள்ள ரூ.78.17 கோடி பணமதிப்புள்ள 160 இறந்த நபர்களின் 4,113 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும் பராமரித்து, நிர்வகித்து வருகிறார். மேலும், இவர்களின் அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

*10.4. அறக்கட்டளை சொத்திலிருந்து வாடகை வருமானம் மற்றும் நிலை வைப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டி வருமானம் ஆகியவை கீழ்க்கண்ட பரோபகார நற்செயல்களுக்கு (*Philanthropic activities*) பயன்படுத்தப்படுகிறது:—*

i. *அறச்செயல்கள் மற்றும் பயனாளிகள் பராமரிப்பு.*

ii. *மாணவர் உதவித் தொகை.*

iii. *சொத்தாட்சியர் அலுவலக பணியாளர்களின் சம்பளம்.*

iv. *வருமான வரி மற்றும் இதர அவசிய செலவிற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய சட்டப்படியான கட்டணங்கள்.*

v. *சென்னை உயர் நீதிமன்ற ஆணைப்படி, பொருள் (*articles*), மருத்துவ உபகரணங்கள் போன்ற இனங்களுக்காக செலவிடப்படும் சிறப்பு நன்கொடை.*

11. நீதிமன்ற மேலாளர்கள்

*விரைவாக நீதி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டு, ஒன்றிய அரசின் 13-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, உதவிப் பதிவாளர் பதவி நிலையில் நீதிமன்ற மேலாளர் பணியிடம், மார்ச் 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இப்பணியிடமானது, எம்.பி.ஏ. முதுகலை பட்டம் பெற்ற தகுதி வாய்ந்த நபர்களை கொண்டு நிரப்பப்படுகிறது. இவர்கள் நீதிபதிகளின் நிர்வாகப் பணிகளில் உதவுவதன்மூலம் நீதிபதிகளுக்கு நீதிப் பணிகளில் (*judicial functions*) அதிக நேரத்தை செலவிட வழிவகுக்கிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

தற்போது, சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை ஆயம், அதன் மதுரைக் கிளை மற்றும் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களில் 41 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

12. நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்

2022-2023 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.572.71 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
1.	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 9 மாடி கட்டடம் கட்டுதல்	20.25
2.	சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற கிளையில் குளிர் சாதன வசதி செய்தல்	6.74
3.	செங்கல்பட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தை புதுப்பித்தல்	2.39
4.	கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு அளித்தல்	1.85
5.	விருதுநகர் மாவட்டம், விருதுநகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல்	0.46

2023 ஏப்ரல் 10]

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
6.	*ஈரோடு மாவட்டம், கோபிசெட்டி பாளையத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் நடைபாதை கற்கள் (Paver Block) பதித்தல் மற்றும் கழிவுநீர் வடிகால் அமைத்தல்*	*0.83*
7.	*தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் இருசக்கர வாகன கொட்டகை அமைத்தல் மற்றும் பொதுக் கழிவறையை சீர்செய்தல்*	*0.11*
8.	*சென்னை மாவட்டத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களை ஒரே கட்டடத்தில் அமர்த்த பலமாடிக் கட்டடம் கட்டுதல்*	*315.00*
9.	*கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வணிக நீதிமன்றம் மற்றும் வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றை மாநகராட்சி சமுதாய கட்டடத்தில் அமர்த்த கட்டட மற்றும் மின்வசதி செய்து கொடுத்தல்*	*0.96*
10.	*திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு அணுகு பாதை, விருந்தினர் அறை, பணியாளர் உணவறை, நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் மற்றும் இரண்டு சக்கர வாகன கொட்டகை அமைத்தல்*	*53.58*
11.	*சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் புதியதாக கட்டப்பட்ட மாநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல்*	*1.28*

[2023 ஏப்ரல் 10

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
12.	மதுரையில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்குரைஞர் அறைக்கான தனிக் கட்டடத்திற்கு மின் வசதி செய்து கொடுத்தல்.	0.43
13.	திருவண்ணாமலையில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு மின்தூக்கி அமைத்தல்	0.78
14.	திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் மின்தூக்கி வசதி அமைத்தல்	0.78
15.	வேலூர் மாவட்டம், சோளிங்கரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு அணுகுபாதை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல்	0.47
16.	தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மிக முக்கிய நபர்களுக்கான விருந்தினர் மாளிகைக்குக் கூடுதல் வசதிகள் செய்தல்.	0.80
17.	மதுரை மாநகரில் உள்ள மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில் மூன்று தளம் கொண்ட கூடுதல் நீதிமன்றக் கட்டடம் கட்டுதல்	166.00
	மொத்தம்	**572.71**

நீதிமன்ற சொந்தக் கட்டடங்கள், அரசு கட்டடங்கள் மற்றும் வாடகைக் கட்டடங்கள் ஆகியவற்றில் இயங்கும் நீதிமன்றங்களின் விவரம் பின்வருமாறு:—

2023 ஏப்ரல் 10]

வரிசை எண்	**நீதிமன்றக் கட்டடங்களின் வகைகள்**	**எண்ணிக்கை**
1	*சொந்தக் கட்டடம்*	*1,036*
2	*அரசு கட்டடம்*	*106*
3	*தனியார் வாடகைக் கட்டடம்*	*73*
	மொத்தம்	***1,215***

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளின் தேவைக்கு ஏற்ப, அவ்வப்போது அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது.

13. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

ஒன்றிய அரசின் நீதித் துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான "மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து, செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன்மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவி 2015-2016 ஆம் ஆண்டு முதல் 60:40 என்கிற விகிதத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன்மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. ஒன்றிய அரசு 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு தமது 60 சதவீத பங்களிப்பு தொகையாக ரூ.133.85 கோடியினை விடுவித்துள்ளது. அவ்வாறே, மாநில அரசும், தனது 40 சதவீத பங்களிப்பு தொகையாக ரூ.89.24 கோடியினை சேர்த்து, மொத்தம் ரூ.223.09 கோடிக்கு "நடைபெற்று வரும் திட்டங்கள்" (Ongoing Schemes) மற்றும் "புதிய திட்டங்களை" (New Schemes) ஆகியவற்றை செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[2023 ஏப்ரல் 10

14. நீதித் துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்

14.1. நாட்டில் உள்ள உயர் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட/ சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டங்களில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:—

- ❖ நீதிமன்றங்களில் நாள்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.
- ❖ நிலுவையில் உள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்.
- ❖ வழக்குத் தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்.
- ❖ நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித் துறை சார்ந்த தரவுகளை பெற வழிவகை செய்தல்.

14.2. மின்னணு நீதிமன்றங்களின் வழிமுறை திட்டத்தின்கீழ், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மின்னணு குழுமம், இந்தியா முழுவதும் உள்ள கீழ்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் பணியை மேற்கொண்டு உள்ளது.

- மின்னணு நீதிமன்ற திட்டங்களின்கீழ் முதல் கட்டமாக, 675 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.
- 500 சார்நிலை நீதிமன்றங்களுக்கு, பழைய கணினிகளுக்குப் பதிலாக புதியதாக கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ரூ.8.97 கோடி செலவில் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.
- மேலும், இதன் தொடர்ச்சியாக மேற்காண் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, 1,032 சார்நிலை நீதிமன்றங்களுக்கு கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கப்பட்டு, நிறுவப்பட்டன.

14.3. மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட, பழைய மேசை கணினிகள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப சாதனங்களுக்கு பதிலாக, தடையில்லா மின்சார வினியோகத்துடன்கூடிய 75 மேசை கணினிகள், 75 அச்சுப்பொறி

2023 ஏப்ரல் 10]

மற்றும் 150 பல்வகை செயல்பாடு சாதனம் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ரூபாய் 98 இலட்சத்திற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

14.4 மேலும், இம்மாநிலத்தில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 64 நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக, மடிக்கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வாங்குவதற்கு ரூபாய் 83.84 இலட்சத்திற்கு நிதி ஒப்புதல் அளித்துள்ளது.

15. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப வசதி

- *சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மேசை கணினிகளை வாங்குவதற்கு ரூ.2.06 கோடிக்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.*
- *மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக மைக்ரோசாப்ட் குழு வீடியோ கலந்துரையாடல் உரிமம் பெற ரூ.20.61 இலட்சத்திற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.*
- *437 பயோ மெட்ரிக் இயந்திரங்களை சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்ற பணியாளர்களின் வருகையை பதிவு செய்வதற்கு ரூ.5.73 இலட்சம் செலவில் வாங்குவதற்கு, அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.*
- *வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு* Local Area Network *வசதிக்காக ரூ.3.56 இலட்சத்தை அரசு ஒப்பளித்துள்ளது.*
- *காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு* Local Area Network *வசதிக்காக ரூ.2.68 இலட்சத்திற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.*

16. நீதித் துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்

நீதிசார்ந்த மின்னணு முத்திரைக் கட்டண முறையானது முதற்கட்டமாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து மாவட்ட மற்றும் சார்நிலை நீதிமன்றங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நீதிசார்ந்த மின்னணு முத்திரைக் கட்டண முறையினை பொதுமக்கள் தாங்களாகவே இணையம்மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம் அல்லது இதற்கென அங்கீகரிக்கப்பட்ட

நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது வங்கிகள் மூலமாகவோ விண்ணப்பம் தாக்கல் செய்து பெறலாம். மேலும், நீதிசாரா மின்னணு முத்திரைக் கட்டண முறையினை அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு மையங்கள்மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

பாரத ஸ்டேட் வங்கியின் மின்னணு பரிவர்த்தனை வாயிலுடன். வழக்கு விவரத் தொகுப்புகளை இணைத்து நீதிமன்ற கட்டணங்களை மின்னணு பரிவர்த்தனை மூலமாக செலுத்த வழிவகை செய்யும் நோக்குடன், சென்னை உயர் நீதிமன்றம் பாரத ஸ்டேட் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் வாயிலாக 1-3-2023 வரை பெறப்பட்ட மின்னணு நீதிமன்றக் கட்டண விவரம் பின்வருமாறு:—

- சென்னை உயர் நீதிமன்றம் – ரூ.110.41 கோடி
- மதுரைக் கிளை – ரூ.27.41 கோடி
- மாவட்ட நீதித் துறை – ரூ.45.42 கோடி

17. செலவினங்களின் வகைப்பாடு

சென்னை உயர் நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரைக் கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், “சாட்டிய செலவினம்” எனவும், சார்நிலை நீதிநிருவாகம் குறித்த செலவினங்கள், “அனுமதிக்கப்பட்ட செலவினம்” எனவும் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

2023-2024 ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.353.18 கோடி “சாட்டிய செலவினத்திற்கும்” (Charged), ரூ.1394.21 கோடி “அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கும்” (Voted), அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18. தமிழ் வழியிலான சட்ட இதழ்

வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ‘தீர்ப்பு திரட்டு’ என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 10]

19. நீதித் துறை பயிற்சிக் கழகம்

- *நீதிபதிகள் குறிப்பாக மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் மற்றும் உரிமையியல் நீதிபதிகள் மற்றும் நீதித் துறை பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் பணித்திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக, அறிமுகப் பயிற்சி வழங்கப்படுவதும் இதன் முதன்மையான நோக்கமாகும்.*

- *மூன்று நீதித் துறை பயிற்சிக் கழகங்களில் சென்னையில் ஒன்றும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு மண்டல மையமும் அமைந்துள்ளன.*

- *மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், தேசிய நீதித் துறை பயிற்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சிக் கழகம் ஆகியவை ஒன்றிணைந்து, "தற்கால நீதித் துறைகள் மற்றும் சட்டம் மற்றும் தொழில்நுட்பத்தின்மூலம் நீதியை வலுப்படுத்துதல்" என்கிற பொருண்மை குறித்து, தென் மண்டலம்—II மண்டல மாநாட்டை 2023 ஆம் ஆண்டில் பிப்ரவரி 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் சென்னை தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சிக் கழகத்தில் நடத்தியது.*

- *நீதித் துறை பயிற்சிக் கழகத்தின் பயன்பாட்டிற்காக ரூ.28.54 இலட்சம் செலவினத்தில் பேருந்து ஒன்றினை வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

20. உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்கிற நீண்டகால கோரிக்கை 11-10-2012 அன்று நடந்த உச்ச நீதிமன்றத்தின் முழு நீதிமன்றக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தமிழக அரசு 04-07-2014 அன்று முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு உச்ச நீதிமன்ற முந்தைய முடிவினை மறுபரிசீலனை செய்து தமிழக அரசின் கோரிக்கையினை ஏற்க வேண்டுமென வலியுறுத்தியது. முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தனது 18-1-2016 நாளிட்ட கடிதத்தில் உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு

[2023 ஏப்ரல் 10

தீவிர ஆலோசனைக்குப்பின், தமிழக அரசின் கோரிக்கையினை ஏற்க மறுத்து உச்ச நீதிமன்றத்தின் முந்தைய முடிவினை உறுதி செய்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிய 12-5-2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை உயர் நீதிமன்றம் அதன் மதுரை கிளையில் தமிழ் மொழியினை அலுவல் மொழியாக, ஆங்கிலத்துடன் பயன்படுத்த அனுமதி அளிப்பதற்கான தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

அதற்கு மாண்புமிகு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள 30-6-2022 நாளிட்ட பதில் கடிதத்தில், அலுவல் மொழித் துறையின் பரிந்துரையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் நீதி மற்றும் சட்டத் துறை அமைச்சர் தனது 25-1-2021 நாளிட்ட கடிதத்தில், தமிழ் மொழியை சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக அறிவிப்பதற்கான கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அப்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு கோரிக்கை வைத்துள்ளதாகவும், அன்னாரின் முடிவினை இது குறித்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தமிழக அரசு இக்கோரிக்கையை தொடர்ந்து, நினைவூட்டி, ஒன்றிய அரசை வலியுறுத்தும்.

21. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியின்மூலம் மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள்/ நியமனதாரர்கள் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதற்கான தொகை ரூ.7 இலட்சத்திலிருந்து, ரூ.10 இலட்சத்திற்கு உயர்த்தி அரசு வழங்கி வருகிறது. மேலும், இந்நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத்தை ரூ.8 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டில், நிதி பற்றாக்குறையின் காரணமாக, உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்க வேண்டிய நிதியுதவி நிலுவையில் இருந்தது. இதனை முழுமையாக

2023 ஏப்ரல் 10]

வழங்க ஏதுவாக, ரூ.5.72 கோடி நிதியினை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் குழுமத்தால் நிர்வகிக்கப்படும் தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

22. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

புதியதாக பதிவு செய்யும் இளம் வழக்குரைஞர்களுக்கு, மாதந்தோறும் ரூ.3,000/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம், சட்டக் கல்வி இயக்குநர், சென்னை மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில், நபர் ஒன்றுக்கு ரூபாய் 3,000/— வீதம், 1,000 இளம் வழக்குரைஞர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.30 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

2022-2023 ஆம் நிதியாண்டில், நபர் ஒன்றுக்கு ரூபாய் 3,000/— வீதம், 426 இளம் வழக்குரைஞர்களுக்கு, மாத உதவித் தொகை ரூ.12.78 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

23. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து, மரணமடையும் வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நியமனதாரர்கள் மற்றும் வாரிசுகளுக்கு ரூ.4 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி வழக்குரைஞர் குழுமம் நிர்வகிக்கும் தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்காக வழக்குரைஞர்களின் எழுத்தர் கட்டண வில்லை ரூ.10/- ஆகவும், மற்றும் உறுப்பினர் சேர்க்கை மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.5,500/- ஆகவும் உயர்த்தி, அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

24. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு

24.1. இம்மாநிலத்தில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவினையும் மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவினை மாவட்டந்தோறும் அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு மாநிலம் முழுவதும்

[2023 ஏப்ரல் 10

நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் வட்ட சட்டப் பணிகள் குழுவினை அமைத்துள்ளது. தற்போது, மாநிலத்தில் 32 மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள், 150 வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் 2 உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள் இயங்கி வருகின்றன.

24.2. சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வுக் காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குரிய பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும், 1987 ஆம் ஆண்டைய சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம் (1994 ஆம் ஆண்டின் 59-வது சட்டப்படி திருத்தியமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது.

உதவித்தொகை, பணியாளர் சம்பளம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இழப்பீடு வழங்குதல் ஆகியவற்றுக்காக 2022-2023 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.31.33 கோடியை தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக் குழுவிற்கு அரசு வழங்கியுள்ளது.

24.3. சட்ட உதவி பெற தகுதியுடையோர்

சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987-ன், பிரிவு 12-ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அளவுகோல்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது அனைத்தையும் நிறைவு செய்யும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:—

(i) ஆதி திராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டு உள்ளவாறு மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவது (அல்லது) வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர்

2023 ஏப்ரல் 10]

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987—ன், பிரிவு 12(எச்)—ல் குறிப்பிட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு குறைவாக உள்ளவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000/—ஆகும்.

24.4. சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்

காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும், மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும் மற்றும் பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்காக அழைத்து வரப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவிபுரிகின்றனர்.

சட்ட உதவிகள் வழக்குரைஞர் திட்டத்தின் செயல்திறன் (Performance) கீழே விவரிக்கப்பட்டுள்ளது:—

நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளுக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை	நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளிடமிருந்து பெறப்பட்ட பிணை விண்ணப்பங்களின் எண்ணிக்கை	பிணை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
3,551	*2,511*	*1,640*

24.5. மாற்றுத் தீர்வு மையங்கள்

மாநிலத்தில் 31 மாற்றுத் தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

24.6. ஆலோசனை மற்றும் சமரச மையம்

பிரச்சினைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கும் ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே, உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இயங்கி வருகின்றன.

2022 ஆம் ஆண்டில், 170 வழக்குகள் ஆலோசனை மையத்தால் முடித்து வைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

ஆலோசனை மையங்களின் எண்ணிக்கை	முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
184	*170*

2022 ஆம் ஆண்டில், 2,440 வழக்குகள் சமரச மையத்தால் முடித்துவைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

சமரச மையங்களின் எண்ணிக்கை	முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
38	*2440*

2023 ஏப்ரல் 10]

24.7. சட்டம் சார்ந்த உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகளை பெறுவதற்கு, சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

24.8. மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)

மக்கள் நீதிமன்றங்கள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற எந்த பொருள் பற்றியோ, அதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் சட்டப் பணி ஆணைக் குழு சட்டம், 1987-ன், பிரிவு 22பி-ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. வழக்கமாக நடத்தப்படும் மக்கள் நீதிமன்றத்துடன் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு தேசிய மக்கள் நீதிமன்றத்தையும் நடத்தி வருகிறது.

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் நிதியாண்டுகளில் ரூ.5,235.83 கோடி தீர்வுத் தொகைக்கான மொத்தம் 7,41,407 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:—

நிதியாண்டு	முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	தீர்வுத் தொகை
2021-2022	*3,12,379*	*2370,33,90,219*
2022-2023	*4,29,028*	*2865,48,89,395*

24.9. சிறைத் துறையில் மக்கள் நீதிமன்றம்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறைச்சாலை நீதிமன்றங்கள்

செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது.

சென்னை புழல் மத்தியச் சிறைச்சாலையில் சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மக்கள் நீதிமன்றம் நடைபெறுகிறது. சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு, அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. சிறைத் துறையில் இயங்கும் மக்கள் நீதிமன்றத்தின் செயல்திறன் பின்வருமாறு:—

காலம்	அமைக்கப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை	பரிந்துரைக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
ஜனவரி, 2022 முதல் டிசம்பர் 2022 வரை (19-10-2022 ஆம் நாள் உட்பட)	96	828	405

மாநிலம் முழுவதும் 19—10—2022 அன்று விசாரணை சிறைக் கைதிக்காக (Under—trial Prisoners) தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் ஆணைப்படி, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவும், வட்ட சட்டப் பணிகள் குழுவும், சிறைத் துறையில் மக்கள் நீதிமன்ற சேவையினை வழங்கி, சிறு குற்ற வழக்குகளை முடித்து வைத்தது. அதன் விவரம் பின்வருமாறு:—

அமைக்கப்-பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை	பரிந்துரைக்கப்-பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	விசாரணை நாள் அன்றே விடுவிக்கப்-பட்டவர்கள்	
			ஆண்	பெண்
87	727	353	232	8

2023 ஏப்ரல் 10]

24.10. நடமாடும் ஊர்தி

சட்டப் பணிகள் ஆணைக் குழுச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சட்ட உதவித் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை விளம்பரப்படுத்த மாநிலத்தின் விளம்பர இயக்கத்தின் ஒரு பகுதியாகவும், நடமாடும் நீதிமன்றம் நடத்திடவும், சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் மற்றும் எல்.சி.டி திரைப்படக்கருவிமூலம் விளம்பரப் படங்களை திரையிடவும் "நடமாடும் ஊர்தி" பயன்படுத்தப்படுகிறது,

24.11. கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்

தேசிய சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் உதவியுடன், இருப்பிடம் மற்றும் சமூகம் சார்ந்த தடைகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு, சட்டச் சேவை நிறுவனங்களை அணுகுவதற்காக, அனைத்து கிராமங்களிலோ அல்லது பல கிராமங்கள் அடங்கிய தொகுப்பிலோ "கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்" நிறுவப்பட்டுள்ளன.

இவை பரிந்துரை செய்யப்பட்ட வழக்குரைஞர் அல்லது தன்னார்வ சட்ட தொண்டர்கள் ஆகியோரை கொண்டு இயங்கிவருகிறது. ஆதரவு மையங்களை நாடும் மக்களுக்கு, ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்குகின்றனர். மேலும் சட்ட உதவி தேவைப்படின் அருகிலுள்ள சட்ட உதவி மையங்களை அணுகுமாறு அறிவுரை வழங்குகின்றனர்.

24.12. தொலைபேசி வழி சட்ட உதவி

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில், சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள், பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044—25342441 என்ற தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்புகொள்ள ஏதுவாக இலவச உதவி எண்

[2023 ஏப்ரல் 10

1800—4252-441 பயன்பாட்டில் உள்ளது. தொலைபேசி வழி சட்ட உதவி மையத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட அழைப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

தொலைபேசி வழி சட்ட உதவியின் எண்	பெறப்பட்ட அழைப்பில் வழங்கப்பட்ட சட்ட ஆலோனையின் எண்ணிக்கை
044—25342441	*746*
9445033363	*1,263*
1800—4252—441 மற்றும் 15100	*137*

25. அரசு வழக்காடும் துறை, உயர் நீதிமன்றம், சென்னை

மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் அரசு வழக்காடல் துறை இயங்கி வருகிறது. 14 அலுவலகங்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் I, II, IV, V, VII, VIII *மற்றும்* IX, *மாநில குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம், மாநில உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில், அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள்* III, VI, *உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. புதுதில்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசு சார்பாக வாதிடுவதற்காக இரண்டு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

26. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

26.1. குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில், குற்ற வழக்கு தொடர்வுத் துறை இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. இத்துறையின் முதன்மை நோக்கம் குற்ற வழக்குகளை நடத்துவது மட்டுமன்றி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருவதும் மற்றும் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை குறைப்பதுவும் ஆகும். இத்துறையானது, மாநிலத்தில் உள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், போக்சோ வழக்குகளுக்கான சிறப்பு

2023 ஏப்ரல் 10]

நீதிமன்றங்கள், பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையில் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்கிறது.

26.2. குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம் உள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறைக்கு ஒரு முதுநிலை குற்ற வழக்கு தொடர்வு அலுவலர், குற்ற வழக்கு தொடர்வு இயக்குநராக தலைமை வகிக்கிறார். இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) ஆகியோர் தலைமையகத்தில் நிர்வாக பணிகளில் குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அவர்களுக்கு உறுதுணையாக பணிபுரிந்து வருகின்றனர். மண்டல அளவில் சென்னை, காஞ்சிபுரம், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 11 இடங்களில் குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநர்களும், மாவட்ட அளவில் ஆலந்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாகர்கோவில், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, திருவள்ளூர், தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 16 இடங்களில் குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர்களும் நிர்வாக பொறுப்பு வகித்து வருகின்றனர். இவ்விவரம் அட்டவணை V—ல் இணைக்கப்பட்டு உள்ளது.

26.3. குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர், குற்ற வழக்கு தொடர்வுத் துறையின் ஒட்டுமொத்த நிர்வாக தலைவர் ஆவார். இயக்குநரின் பணியானது குற்ற வழக்கு நடத்துநர்களுக்கும் புலனாய்வு அலுவலர்களுக்கும் இடையே திறம்பட்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதும், குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்களால் வழங்கப்படும் சட்ட கருத்துரைகள் மற்றும் சட்ட அலுவலர்களின் பணிகள் குறித்த புள்ளி விவரங்களை கண்காணிப்பதும், அது தொடர்பான ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதும், மற்றும் கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், சிறப்பு வழக்கு நடத்துநர்களின் நீதிமன்ற பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அதன் விவரங்களை அரசுக்கு தெரியப்படுத்துதல் ஆகும்.

26.4. இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணியானது குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ்

[*2023 ஏப்ரல் 10*

*பணியாற்றுவதும், இயக்குநரின் அறிவுரைகளை சார்நிலை அலுவலர்கள் முறையாக பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்வதும், குற்ற வழக்கு நடத்துநர்களின் நீதிமன்ற பணிகளை திடீர் ஆய்வு செய்து, அவர்தம் பணிகளை கண்காணிப்பதும், இயக்குநரால் அறிவுறுத்தப்படும் பொருள் தொடர்பாக ரகசிய விசாரணைகள் மேற்கொள்வதும், கண்காணிப்புக் குழு (*Vigilance Committee*), தள்ளுபடியான வழக்குகள் குறித்து ஆய்வு செய்யும் குழு (*Contents Committee*), விசாகா குழு ஆகிய குழுக்களுக்கு தலைவராக இருந்து வருகிறார்.*

26.5. இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) அவர்களின் பணியானது, குற்ற வழக்கு நடத்துநர்கள், சட்ட அறிவினை மேம்படுத்தி பயனடையும் வகையில், முக்கிய தீர்ப்புகள் மற்றும் சிறப்பு சட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய 'தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துநர்களுக்கான இதழினை' ஒவ்வொரு மாதமும் வெளியிடுவது தொடர்பான பணிகளை மேற்கொள்வதாகும்.

26.6. குற்ற வழக்கு தொடர்வு துணை இயக்குநரின் பணியானது, மண்டல அளவிலான நிர்வாக தலைவராகவும், அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகங்கள், கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை—1 மற்றும் நிலை—2 ஆகியோர் தம் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்வதும், மாதிரி குற்றப் பத்திரிகைகள் மற்றும் சட்டக் கருத்துரைகள் வழங்குவதும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் வேண்டுதலின்பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக் கருத்துரு வழங்குவதும் நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

26.7. குற்ற வழக்கு தொடர்வு உதவி இயக்குநரின் பணியானது, மண்டல அளவிலான நிர்வாக தலைவராகவும், அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை—1 மற்றும் நிலை—2 ஆகியோரின் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்வதும், மாதிரி குற்றப் பத்திரிகைகள் மற்றும் சட்டக் கருத்துரைகள் வழங்குவதும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் வேண்டுதலின்பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக் கருத்துரு வழங்குவதும், நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

2023 ஏப்ரல் 10]

26.8. மேலும், மாநிலம் முழுவதும் உள்ள 31 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 31 கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் குற்றவியல் வழக்குகளை நடத்துகின்றனர்.

26.9. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்தில் 3 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளை நடத்தும் 3 சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.10. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்தில் 16 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் 16 போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.11. 97 நிலை 1 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களிலும், வணிக குற்ற புலனாய்வு பிரிவு மற்றும் பொருளாதார குற்ற பிரிவுக்கான சிறப்பு நீதிமன்றங்களிலும் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.12. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகரங்களில் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை 2 தரத்தில் 203 சட்ட அலுவலர்கள் வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

26.13. இது தவிர, குற்ற வழக்கு தொடர்வுத் துறையை சேர்ந்த அரசு வழக்கு நடத்துநர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் தரத்திலான 4 கூடுதல் சட்ட ஆலோசகர்கள் சட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் இயக்குநரகத்திலும், சென்னையின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களிலும் பணி புரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் தரத்திலான ஒரு மூத்த சட்ட ஆலோசகர், சட்ட சிக்கல்களில் உதவி புரிய சென்னையில் உள்ள குற்றப் புலனாய்வு பிரிவில் பணிபுரிந்து வருகின்றார். கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்திலான 34 துணை சட்ட ஆலோசகர்கள் ஊழல் தடுப்பு வழக்குகளை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றங்களில் நடத்தி வருகின்றனர். கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் தரத்திலான சட்ட ஆலோசகர் ஒருவர் சென்னையில் உள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திலும், மேலும் ஒரு சட்ட ஆலோசகர் சென்னையில் உள்ள வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மையின் ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.14. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, காவல் துறை, சிறைத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, உணவு பாதுகாப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாயம், விதைச் சான்று ஆணையரகம் ஆகியவற்றில் நிலை 1 தரத்தில் 25 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் மறுபணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.15. காவல் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம், உணவு பகுப்பாய்வு கூடங்கள், தமிழ்நாடு காவல் கூடம் ஆகியவற்றில் நிலை 2 தரத்தில் 13 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

26.16. மேலும், ஒரு இயக்குநரின் நேர்முக உதவியாளரும், இரண்டு கண்காணிப்பாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-1)-ம், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-2)-ம், ஐந்து உதவியாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-3)-ம், மூன்று இளநிலை உதவியாளர்களும், இரண்டு தட்டச்சர்களும், ஒரு பதிவுரு எழுத்தரும், ஒரு ஓட்டுநரும் இவ்வியக்ககத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

26.17. 31-3-2023 அன்று இவ்வியக்ககத்தின் மொத்த பணியிடங்களின் (சட்ட அலுவலர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள்) எண்ணிக்கை 804 ஆகும்.

27. சிறப்புக் குற்றவியல்/உரிமையியல் வழக்குரைஞர்கள் நியமனம்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம், 1989 (மத்தியச் சட்டம் 33/1989), தமிழ்நாடு முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் (நிதி நிறுவனங்களில்) சட்டம், 1997, அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955 மற்றும் போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் சார்ந்த பொருட்கள் சட்டம், 1985, மனித உரிமைகள் சட்டம், 1993, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957, வெடிகுண்டு வெடிப்பு வழக்குகள் மற்றும் பொடா சட்டம், 2022, பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 ஆகிய சட்டப் பிரிவுகளின்கீழ் பதியப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு மாவட்ட சார்நிலை நீதிமன்றங்களில் காலமுறை அடிப்படையில், சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் தமிழக அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

2023 ஏப்ரல் 10]

மேலும், மகிளா நீதிமன்ற வழக்குகள், வனக் குற்ற வழக்குகள், நில அபகரிப்பு வழக்குகள் மற்றும் நில எடுப்பு வழக்குகள் உள்ளிட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்டங்களில் அமைக்கப்பட்டு உள்ள நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு அரசு சிறப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் காலமுறை அடிப்படையில் (Tenure Basis) நியமனம் செய்யப்படுகிறார்கள்.

மேலும், சார்நிலை நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட வழக்கிலோ அல்லது வழக்குகளிலோ அரசு சார்பாக வாதாடுவதற்கு சிறப்புக் குற்றவியல் வழக்கறிஞர்கள் அரசால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

28. முடிவுரை

ஒரு பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித் துறை, நாட்டின் ஜனநாயக கூட்டாட்சி கட்டமைப்பின் அடித்தளமாகும். எனவே, நீதித் துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கும், வழக்கு தொடுத்துள்ள பொதுமக்களுக்கு விரைவான நிவாரணம் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கும், இந்த அரசு போதிய வசதிகள் மற்றும் சூழலை ஏற்படுத்தி கொடுக்கும். அனைவருக்கும் நீதி என்கிற இலக்கை அடைய, அரசு தொடர்ந்து வலியுறுத்தும். தற்போதைய அரசு, நீதித் துறையின் சுதந்திரத்தைப் பேணுவதன்மூலம் விரைவான, சமூக, பொருளாதார நீதியை அடைவதற்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை - I

தமிழ்நாடு நீதித் துறையின் படிநிலை அமைப்பு

முதன்மை இருப்பிட உயர் நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை

உரிமையியல் நீதிமன்றங்கள்		*குற்றவியல் நீதிமன்றங்கள்*	
சென்னை மாநகர்	**வெளியூர்**	**சென்னை மாநகர்**	**வெளியூர்**
முதன்மை நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம்	மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்	முதன்மை நீதிபதி (அமர்வு நீதிமன்றம்)	மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்
	சார்பு நீதிமன்றங்கள்	தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்	தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்
உதவி நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம்	மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்	பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்	
சிறுவழக்குகள் நீதிமன்றங்கள்	மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்		குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

பிற்சேர்க்கை II

சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

வ. எண்	நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர்	மாவட்ட நீதிபதி		முதுநிலை உரிமையியல் நீதிபதி		உரிமையியல் நீதிபதி / குற்றவியல் நடுவர்
		மாவட்ட நீதிமன்றங்கள்	மத்திய குற்ற புலனாய்வு வழக்கு தனி நீதிமன்றங்கள்	பெருநகர குற்றவியல் நடுவர்	இதர வகை பிரிவு	
1.	மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள்	18	6	--	28	1
2.	சிறு வழக்குகள் நீதிமன்றங்கள்	1	--	--	8	8
3.	பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்	2	--	1	26@	8*
4.	தொழிலாளர் நல நீதிமன்றங்கள்	4	--	--	--	--
5.	தொழில் தீர்ப்பாயம்	1	--	--	--	--
6.	விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	1	--
7.	அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	--	--
8.	இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம்	1	--	--	--	--
9.	தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர்	1	--	--	--	--
10.	துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர்	--	--	--	--	1
11.	குடும்ப நல நீதிமன்றங்கள்	8	--	--	--	--
12.	மகளிர் நீதிமன்றம்	1	--	--	--	--
13.	தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம்	1	--	--	--	--
14.	போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள்	2	--	--	--	--
15.	குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம்	1	--	--	--	--
16.	சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	--	--
17.	உறுப்பினர் - செயலர், சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை	1	--	--	--	--
18.	துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு	--	--	--	1	--
19.	செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை	--	--	--	1	--

20.	ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம்	--	--	--	5**	--
21.	மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் - சிறப்பு நீதிமன்றங்கள் -/ பொருளாதர குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்	2	--	--	2	--
22.	நிரந்தர மக்கள் நீதிமன்றம்	1	-	-	--	--
23.	தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்	1	-	-	--	--
24.	அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்	2	-	-	1	--
25.	பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்	1	--	--	--	--
26.	வணிக நீதிமன்றங்கள்	1	--	--	--	--
	மொத்தம்	53	6	1	73	18

மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 151 **[மாவட்ட நீதிபதிகள் - 59]** **[முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் - 74]** **[உரிமையியல் நீதிபதிகள் - 18]**

@ **2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட**

* **குற்றவியல் நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

** **கள்ள நோட்டு வழக்கு / பரிசு சீட்டு மற்றும் பண சுழற்சி / மத்திய குற்றப் பிரிவு / மத்திய குற்றப் பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறை ஆகியவற்றுக்கான சிறப்பு நீதிமன்றம்**

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை -III

மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

		மாவட்ட நீதிபதி												முதுநிலை உரிமையியல் நீதிபதி								உரிமையியல் நீதிபதி					
வரிசை எண்	மாவட்டங்கள்	மாவட்ட நீதிமன்றங்கள்	குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட / எஸ்சி எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட தனி நீதிமன்றங்கள்	குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள்	தொழிலாளர் நல நீதிமன்றங்கள்	தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம்	தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு	குடும்ப நல நீதிமன்றங்கள்/விரைவு நீதிமன்றங்கள்	மகளிர் நீதிமன்றங்கள்	தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு	மக்கள் நீதிமன்றம்	தனி நீதிமன்றங்கள் POCSO Act	வணிக நீதிமன்றங்கள் / சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்	தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்	சார்பு நீதிமன்றங்கள்	தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு	தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள்	ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்	மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு	மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	வணிக நீதிமன்றங்கள்	மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்	குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்	விரைவு நீதிமன்றங்கள் / கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள்	தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள்	நடமாடும் நீதிமன்றங்கள்	மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)
1.	அரியலூர்	2	--	--	--	--	--	1	1	--	1	--	--	1	3	--	2	--	1	--	--	4	4	1	--	--	1
2.	கோயம்புத்தூர்	5	--	1	2	1*	2▪	2	1	--	1	1	1	1	7	1	--	1	1	2	1	10	14	3'	1	1	2
3.	கடலூர்	4	1	--	1	--	--	1	1	--	1	1	--	1	9	1	1	--	1	--	--	10	10	1#	1	--	4
4.	தருமபுரி	2	--	--	--	--	--	1	1	1	1	--	--	1	5	1	--	--	1	--	--	4	5	2#	1	--	2
5.	திண்டுக்கல்	2	1	--	--	--	--	2###	1	--	1	--	--	1	6	1	--	--	1	--	--	6	7	2#	--	1	4
6.	ஈரோடு	5	--	--	--	--	--	1	1	1	1	--	--	1	7	1	--	--	1	1	--	8	9	3#	1	1	1
7.	காஞ்சிபுரம்	3	--	--	1	--	--	2###	1	--	1	1	--	1	7	--	--	--	1	--	--	8	12	3#	--	1	5
8.	கன்னியாகுமரி	3	--	--	--	--	--	2###	1	--	1	1	--	1	7	--	--	--	1	--	--	9	8	3#	--	--	2
9.	கரூர்	1	--	--	--	--	--	1	1	--	1	--	--	1	3	--	--	--	1	--	--	4	4	2#	1	--	2
10.	கிருஷ்ணகிரி	3	--	--	1	--	--	1	1	1	1	--	--	1	6	1	--	--	1	--	--	3	4	2#	1	--	3
11.	மதுரை	6	1*#	1**	1	3*	2▪	1	1	1	1	1	1	2	8	1	--	1	1	2	--	7	11	3#	1	1	2
12.	நாகப்பட்டினம்	2	--	--	--	--	--	1	1	--	1	1	--	1	4	--	--	--	1	--	--	4	5	3#	--	--	3

பிற்சேர்க்கை-III-ன் தொடர்ச்சி

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)
13.	நாமக்கல்	3	1	--	--	--	--	1	1	--	1	--	--	1	5	--	--	1	--	--	--	7	2#	1	1	--	--
14.	நீலகிரி	1	--	--	1	--	--	1	1	--	1	--	--	--	3	--	--	--	1	--	--	3	3	2#	1	--	2
15.	பெரம்பலூர்	1	1	--	--	--	--	1	1	--	1	--	--	1	1	--	--	--	1	--	--	2	2	1#	1	--	2
16.	புதுக்கோட்டை	2	1	--	--	1*	--	1	1	--	1	--	--	1	4	--	--	--	1	--	--	3	4	1#	--	--	4
17.	இராமநாதபுரம்	2	1	--	--	--	--	2###	1	--	1	--	--	1	3	--	--	--	1	--	--	4	5	1#	1	--	3
18.	சேலம்	4	--	--	1	1*	--	2###	1	1	1	1	1	1	7	2	--	1	1	1	1	10	13	3#	1	1	3
19.	சிவகங்கை	2	1	--	--	--	--	1	1	--	1	1	--	1	3	--	--	1	1	--	--	5	4	2#	--	--	5
20.	தஞ்சாவூர்	3	1*#	--	1	1*	--	2###	1	1	1	1	--	2$	5	1	--	--	1	--	--	6	7	3#	1	--	4
21.	தேனி	2	1	--	--	--	--	2###	1	--	1	--	--	1	3	--	--	--	1	--	--	5	5	3#	1	--	--
22.	தூத்துக்குடி	3	1	--	--	--	--	1	1	--	1	1	--	1	3	--	--	--	1	1	--	6	10	2	1	--	2
23.	திருச்சி	3	1*#	--	1	--	--	1	1	1	1	--	--	1	9	1	--	1	1	1	--	11	10	1#	1	1	2
24.	திருநெல்வேலி	4	1*#	--	1	--	--	2###	1	--	1	1	--	1	8	1	--	1	1	1	--	14	12	1#	1	1	4
25.	திருப்பூர்	5	--	--	--	--	--	1	1	1	1	--	--	1	8	--	--	--	1	1	--	7	10	2#	1	--	2
26.	திருவள்ளூர்	5	--	--	--	--	--	1	1	1	1	--	--	1	7	1	1	--	1	--	--	8	9	4	1	--	4
27.	திருவண்ணாமலை	2	1	--	--	--	--	2###	1	--	1	1	--	1	6	1	--	--	1	--	--	8	7	2#	--	--	2
28.	திருவாரூர்	1	--	--	--	--	--	1	1	--	1	--	--	1	3	--	--	--	1	--	--	3	4	2#	--	--	3
29.	வேலூர்	4	1	--	2	--	--	2###	1	--	1	1	--	1	8	1***	2	--	1	1	--	10	16@	2#	--	--	4
30.	விழுப்புரம்	4	1	--	--	1	--	2###	1	1	1	1	--	1	9	3	--	1	1	--	--	15	11	2#	1	1	2
31.	விருதுநகர்	3	1	--	--	--	--	1	1	--	1	1	--	1	6	--	--	--	1	--	--	5	8	2#	1	--	3
	மொத்தம்	**92**	**17**	**2**	**13**	**8**	**4**	**43**	**31**	**10**	**31**	**15**	**3**	**33**	**173**	**18**	**6**	**7**	**31**	**11**	**2**	**210**	**240**	**66**	**21**	**10**	**82**
		மாவட்ட நீதிபதி - 269												**முதுநிலை உரிமையியல் நீதிபதி - 281**								**உரிமையியல் நீதிபதி - 629**					

மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 1179

* இன்றியமையா பொருட்கள் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு தனி நீதிமன்றம் உட்பட

\# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான சிறப்பு நீதிமன்றம் உட்பட

\## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம் உட்பட

\### மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட

*# குடியுரிமை பாதுகாப்பு சட்ட தனி நீதிமன்றம் உட்பட

@ சந்தனக்கட்டை மற்றும் வனக் குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட


$ சிலை திருட்டு வழக்குகளுக்கான நீதிமன்றம் உட்பட

பிற்சேர்க்கை-IV

நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

வ. எண்	மாவட்டம் / இடத்தின் பெயர்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	வ. எண்	மாவட்டம் / இடத்தின் பெயர்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை
1.	சென்னை	2	12.	சேலம்	1
2.	கோயம்புத்தூர்	1	13.	தஞ்சாவூர்	1
3.	கடலூர்	1	14.	நீலகிரி @ உதகமண்டலம்	1
4.	தருமபுரி	1	15.	தேனி	1
5.	ஈரோடு	1	16.	திருச்சிராப்பள்ளி	1
6.	கரூர்	1	17.	தூத்துக்குடி	1
7.	கிருஷ்ணகிரி	1	18.	திருநெல்வேலி	1
8.	மதுரை	1	19.	திருப்பூர்	1
9.	நாமக்கல்	1	20.	திருவள்ளூர்	1
10.	பெரம்பலூர்	1	21.	விழுப்புரம்	1
11.	இராமநாதபுரம்	1	22.	விருதுநகர்	1
				மொத்தம்	23

அட்டவணை-V


இயக்குநர்
இணை இயக்குநர் (நிர்வாகம்)
இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்)
துணை இயக்குநர், சென்னை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.சிறப்பு அரசு வழக்கு நடத்துநர் 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 4.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், காஞ்சிபுரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், ஆலந்தூர்
அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், திருவள்ளூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
துணை இயக்குநர், வேலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், திருவண்ணாமலை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், கடலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், விழுப்புரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், சேலம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், நாமக்கல்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், தர்மபுரி ஓகிருஷ்ணகிரி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
துணை இயக்குநர், கோயம்புத்தூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், ஈரோடு
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், நீலகிரி
1.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர்
துணை இயக்குநர், திருச்சி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், புதுக்கோட்டை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், பெரம்பலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், தஞ்சாவூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், நாகப்பட்டினம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், மதுரை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், திண்டுக்கல்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், விருதுநகர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்
துணை இயக்குநர், சிவகங்கை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், ராமநாதபுரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
துணை இயக்குநர், திருநெல்வேலி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், தூத்துக்குடி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2
உதவி இயக்குநர், நாகர்கோவில்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 3. அரசு உதவி வழக்கு நடத்துநர்

2023 ஏப்ரல் 10]

இணைப்பு-II

(157 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

I. முன்னுரை

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

—(திருக்குறள்—388)

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை குற்றவியல் நீதி முறை அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பெற்று விளங்குவதுடன், சிறைவாசிகளின் தண்டனையினை நிறைவேற்றுதல் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் அளிப்பதன்மூலம் அமைதியான சமூகத்தை கட்டமைப்பதில் முக்கிய கருவியாக திகழ்கிறது. சிறைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் மனந்திருந்திய பயனுள்ள தனிநபர்களாக சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைத்தல் ஆகிய மிக உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்துறை சிறைவாசிகளின் உரிமைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உலக தரத்திற்கு இணையாக உயர்த்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில், சிறைவாசிகளின் திறன் பயிற்சி மற்றும் மன மாற்றத்திற்காக பல புதுமையான முயற்சிகளை சமகால தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப இத்துறை மேற்கொண்டு வருகிறது.

II. துறையின் படிநிலை

அரசின் உள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைக்கு காவல் துறை தலைமை இயக்குநர் பதவி நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி தலைவராகவும், அவருக்கு உதவியாக

[2023 ஏப்ரல் 10

தலைமையிடத்தில் ஒரு சிறைத் துறை துணைத் தலைவரும், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய ஐந்து இடங்களில் சரக சிறைத் துறை துணைத் தலைவர்களும் உள்ளனர். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிருவாக கட்டமைப்பு பிற்சேர்க்கை I—ல் வழங்கப்பட்டுள்ளது.

சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் மத்திய சிறைகள் மற்றும் அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) ஆகியவை இயங்கி வருகின்றன. பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் புழல், வேலூர் மற்றும் திருச்சியில் உள்ள பெண்கள் தனிச் சிறைகளும், பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள பெண்கள் தனிச் சிறைகளும் இயங்கி வருகின்றன. மாவட்ட சிறைகளில் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளிகள் ஆகியவற்றை சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிட உதவி புரிகின்றனர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர்/உதவி சிறை அலுவலர்/ முதல் தலைமை சிறைக் காவலர்/முதல் நிலை சிறைக் காவலர்/ இரண்டாம் நிலை சிறைக் காவலர்/தொழில்நுட்பப் பணியாளர்/ தொழில்நுட்பம் சாரா பணியாளர்/சீர்திருத்தப் பணியாளர்/ மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

சிறைத் துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 28-2-2023-ன் நிலவரப்படி 5,491 ஆகும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 142 சிறைகள் உள்ளன. அவற்றுள் 9 மத்திய சிறைகள், 5 பெண்களுக்கான தனிச் சிறைகள், 14 மாவட்டச் சிறைகள், 96 ஆண்களுக்கான கிளைச் சிறைகள், 8 பெண்களுக்கான கிளைச் சிறைகள், 2 ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள், 2 பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள், 3 பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் 3 திறந்தவெளிச் சிறைகள் ஆகியவை அடங்கும்.

2023 ஏப்ரல் 10]

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின் சிறைவாசிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 24,342 ஆகும். சிறைவாரியான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி பிற்சேர்க்கை II-ல் வழங்கப்பட்டுள்ளது.

III. சிறை நிருவாகப் பிரிவுகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

i) நன்னடத்தைப் பிரிவு

1946 ஆம் ஆண்டு முதல் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வரும் "நன்னடத்தைப் பிரிவானது" தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களும் மற்றும் 64 நன்னடத்தை அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம், 1958 மற்றும் தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சீர்திருத்தச் சட்டம், 1925 ஆகியவற்றை செயல்படுத்துதல், குற்றவியல் நீதித் துறை நடுவர்களுக்கு உரிய விசாரணை அறிக்கைகள் அளித்தல், வயது வந்த குற்றவாளிகளை கண்காணித்தல், அவர்கள் மீண்டும் குற்றங்கள் இழைக்கா வண்ணம் தடுத்தல் ஆகிய பணிகளில் உதவுகின்றனர். நீதிமன்றத்திற்காக, குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்கள் வாழும் சூழல் குறித்து விசாரணை செய்வதோடு, நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர்.

மேலும், முதன்முறையாக குற்றம் புரியும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக, சில நிபந்தனைகளின் அடிப்படையில், நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான பணியாகும். சிறைவாசிகளை நேர்காணல் செய்து அவர்களது குழந்தைகளின் கல்வி, குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரம், வருவாய் ஈட்டுதல், கடன் வசதி மற்றும் தண்டனை சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு பெறுதல் போன்றவற்றை நிறைவேற்றும் வகையில் நன்னடத்தை அலுவலர்கள், சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய

குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், காவல் நிலைய சிறைவைப்பு அறைகளில் விசாரணை சிறைவாசிகளுக்கு மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யும்பொருட்டு அவற்றை பார்வையிடுமாறும் நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

ii) நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், காவல் துறை துணை கண்காணிப்பாளர் தலைமையில் காவல் துறையிலிருந்து மாற்றுப் பணியின்மூலம் பணியமர்த்தப்பட்ட 20 அலுவலர்கள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையைச் சேர்ந்த 13 அலுவலர்களுடன் "நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு" செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு சிறைவாசிகள் மற்றும் சிறைத் துறை பணியாளர்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்து, முக்கியமான மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரித்து, சிறை நிர்வாகம் திறன்பட செயல்பட உதவுவதோடு மட்டுமின்றி, நுண்ணறிவு தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றம் செய்யவும் உதவுகிறது.

iii) தொழில்நுட்பப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன கருவிகள் மற்றும் சாதனங்களை சிறந்த முறையில் பராமரிக்கும்பொருட்டு, தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும், ஓர் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) ஆகிய பணியாளர்களுடன் "தொழில்நுட்பப் பிரிவு" ஒன்று செயல்பட்டு வருகிறது.

iv) மோட்டார் வாகனப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள அனைத்து வாகனங்களையும் பராமரிப்பதற்காக, ஒரு காப்பு காவல் ஆய்வாளர் (வகை2) மேற்பார்வையில் "மோட்டார் வாகனப் பிரிவு" செயல்பட்டு வருகிறது.

v) சட்ட ஆலோசனைப் பிரிவு

தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கிடவும், நீதிமன்ற

2023 ஏப்ரல் 10]

வழக்குகளை கையாளுவதில் உதவிடவும், குற்ற வழக்கு தொடர்பு இயக்ககத்திலிருந்து, அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (தரம்—1) என்ற நிலையில் உள்ள ஒருவர், "சட்ட ஆலோசனைப் பிரிவில்" சட்ட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்.

IV. மனித வள மேம்பாடு

i) பணியாளர் தேர்வு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்மூலம் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. தற்போது 153 ஆண் மற்றும் 8 பெண் சிறைக் காவலர்களை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. தேர்வு செய்யப்படும் சிறைக் காவலர்களுக்கு திருச்சி, சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் ஆறு மாத கால அடிப்படை பயிற்சி அளிக்கப்படும்.

உதவி சிறை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் தகுதி உடைய முதல் தலைமை சிறைக் காவலர்கள் பதவி உயர்வு மூலமாகவும், 1:1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. தற்போது 55 ஆண் உதவி சிறை அலுவலர் மற்றும் 5 பெண் உதவி சிறை அலுவலர் பணியிடங்கள் குறித்த காலிப் பணியிட மதிப்பீட்டு விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு, தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் பதவி உயர்வு மூலமாகவும், 1:2 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன.

சிறை அலுவலர் பணியிடங்களுக்கான காலிப் பணியிட மதிப்பீட்டு விவரங்கள் (6 ஆண் சிறை அலுவலர் மற்றும் 2 பெண் சிறை அலுவலர்) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு, தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நன்னடத்தை அலுவலர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி

நியமனமாகவும் மற்றும் பதவி உயர்வு மூலமாகவும், 2:1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. தற்பொழுது, 2 நன்னடத்தை அலுவலர் பதவிக்கான காலிப்பணியிட விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மன இயல் நிபுணர் பதவிக்கான பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி நியமனமாகவும் மற்றும் நன்னடத்தை அலுவலர் பதவியிலிருந்து பணி மாற்றல் மூலமாகவும், 1:1 என்ற விகிதத்தில் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. தற்பொழுது, 4 மனஇயல் நிபுணர் பதவிக்கான காலிப்பணியிட விவரங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டு தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

ii) பயிற்சி

அ) சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய ஐந்து தென் மாநிலங்களுக்கான சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூரில் 1979 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, சிறைத் துறை அலுவலர்களுக்கு சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து மாநிலங்களும் சரிசமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

ஆ) சிறைக் காவலர் பயிற்சி

வேலூரில் அமைந்துள்ள சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியில் புதிதாக நியமனம் செய்யப்படும் காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளரே சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளிக்கு முதல்வராகவும் உள்ளார். 130 சிறைக் காவலர்களுக்கு ஒரே நேரத்தில் பயிற்சி அளித்திட தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டுள்ளது.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அடிப்படை பயிற்சியும், அதில்

2023 ஏப்ரல் 10]

உடற்பயிற்சி, ஆயுதபயிற்சி, சிறை மேலாண்மை விதிகள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றுடன் மனித உரிமைகள் பற்றிய சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இரண்டாம் நிலை சிறைக் காவலர், முதல் நிலை சிறைக் காவலர், முதல் தலைமை சிறைக் காவலர், உதவி சிறை அலுவலர் மற்றும் துணைச் சிறை அலுவலர் ஆகியோருக்கு வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை, மருதம் காவல் துறை அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி வாயிலாக அதிரடிப் படைக்கான பயிற்சி, கராத்தே, சிலம்பம் போன்ற தற்காப்பு கலைகள், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இ) பிற பயிற்சிகள்

புதுடில்லியில் உள்ள காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்த தேசிய அளவிலான பயிற்சிகளில் இத்துறை அலுவலர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அதேபோன்று பிற மாநிலங்களில் நடத்தப்படும் மாநில அளவிலான பல்வேறு வகையான பயிற்சிகளிலும் சிறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

V. சிறை வகைப்பாடு

சிறைகள் மத்திய சிறைகள், தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் என 5 வகையாக உள்ளன.

சிங்காநல்லூர், சேலம், புரசடைஉடைப்பு ஆகிய இடங்களில் திறந்தவெளிச் சிறைகளும், புழல், வேலூர், திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் பெண்கள் தனிச் சிறைகளும் உள்ளன.

மத்திய சிறைகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்கு மேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்காக தண்டனை

பெற்றவர்கள், கொடுங்குற்றவாளிகள், தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக்கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படும் சிறைவாசிகள், தடுப்புக் காவல் மற்றும் நீதிமன்றக் காவல்/விசாரணை சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு, அந்த வகைப்பாட்டின்படி சிறைவாசிகள் தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டைச் சார்ந்த நீதிமன்ற காவல்/விசாரணை/தண்டனை சிறைவாசிகள் சென்னை, புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்படுகின்றனர்.

மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் அந்தந்த மாவட்ட சிறைகளில் வைக்கப்படுகின்றனர். மேலும், முக்கியமான வழக்குகளில் தொடர்புடைய விசாரணை சிறைவாசிகள் பூந்தமல்லி தனிக் கிளைச் சிறையிலும், சாதாரண குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் கிளைச் சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர்.

ஒரு மாதத்திற்கு மேல் சிறைத் தண்டனை/மரண தண்டனை விதிக்கப்பட்ட/வழக்கமாக குற்றம் புரியும் பெண் சிறைவாசிகள் மாநிலத்திலுள்ள ஐந்து பெண்களுக்கான தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சாதாரண குற்றங்கள் புரியும் பெண் விசாரணை சிறைவாசிகள் பெண்கள் தனிக் கிளைச் சிறை மற்றும் கிளைச் சிறைகளிலும் வைக்கப்படுகின்றனர். பெண்களுக்கான சிறைகள், பெண் சிறைப் பணியாளர்களால் மட்டுமே நிருவகிக்கப்படுகின்றன.

திடமான உடல்நிலை மற்றும் மனநிலை, நன்னடத்தை, எளிதில் உணர்ச்சிவசப்படாத தன்மை மற்றும் விவசாய பின்னணி உடைய 21 வயதிலிருந்து 55 வயதிற்குட்பட்ட சிறைவாசிகள் அவர்களின் விருப்பத்தின் பேரில் திறந்தவெளிச் சிறைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர்.

VI. சிறை பாதுகாப்பு

i) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

அனைத்து மத்திய சிறைகளிலும் உயர் பாதுகாப்பு தொகுதிகள் அமைக்கப்பட்டு சிறைக் களப் பணியாளர்களால் கண்காணிக்கப்படுவதுடன், சிறைவாசிகளின் உரிமைக்கும்,

2023 ஏப்ரல் 10]

கண்ணியத்திற்கும் குறைவு ஏற்படாத வகையில் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவை, மத்திய சிறையின் வெளிப்புற பாதுகாப்பு மத்திய பாதுகாப்பு காவல் படையினராலும், கடலூர் மத்திய சிறை தவிர பிற மத்திய சிறைகளின் வெளிப்புற பாதுகாப்பு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் உயர் பாதுகாப்பு தொகுதிகளில் வைக்கப்படுகின்றனர். இச்சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் சோதனை செய்யப்படுகின்றனர். சிறைகளில் எவ்வித அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும்பொருட்டு நாசவேலை தடுப்பு பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ii)) செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்

மாநிலத்திலுள்ள 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில், பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

iii) மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System)

மத்திய சிறை—I, மத்திய சிறை—II, புழல் மற்றும் பெண்கள் தனிச் சிறை, புழல் ஆகியவற்றில் மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு (Electronic Key Management System) சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

iv) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் கருவிகள்

9 மத்திய சிறைகள் மற்றும் 3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும்

பாதுகாப்புக் கருவிகள் நிறுவப்பட்டு, சிறைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

v) ஊடுகதிர் அலகிடல் கருவிகள் (X-Ray Baggage Scanners)

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதை தடுக்கும்பொருட்டு ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

9 மத்திய சிறைகளில் பழைய ஊடுகதிர் அலகிடல் கருவிகளுக்கு மாற்றாக புதிய 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள் 2022—23 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

vi) நடைப்பேசி (Walkie Talkie)

*அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உபரி மின்கலத்துடன்கூடிய 380 புதிய நடைப்பேசி (*Walkie Talkie*) கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.*

*மத்திய சிறைகள்—*I *மற்றும்* II, *புழல், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சிறைகளில் 4 ரிப்பீட்டர் செட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன.*

vii) மறைகாணி கேமராக்கள் (CCTV Cameras)

*சிறைவாசிகளின் நடவடிக்கைகளையும், பார்வையாளர்களையும் கண்காணிக்கும் வகையில் 556 மறைகாணி கேமராக்கள் (*CCTV*) அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், சிறைவாசிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய மின்னணு அட்டைகள் 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

2023 ஏப்ரல் 10]

viii) காணொளி கலந்துரையாடல் வசதிகள்

சிறைகளையும் நீதிமன்ற வளாகங்களையும் இணைப்பதன்மூலம் சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், காணொளி கலந்துரையாடல்மூலம் சிறைவாசிகளின் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்படுகிறது. இதனால் வழிக்காவலின்போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் வழிக்காவலுக்கும், போக்குவரத்திற்கும் ஏற்படும் செலவைக் குறைக்கவும் காணொலி கலந்துரையாடல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள், 403 நீதிமன்றங்களுடன் காணொலி கலந்துரையாடல் கருவிகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் நீதிமன்ற காவல் நீட்டிப்பிற்காக 4,32,931 நிகழ்வுகளில் காணொலி கலந்துரையாடல்மூலம் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கையின் விவரம் பின்வருமாறு:—

வ.எண்	**ஆண்டு**	**சிறைவாசிகளின் எண்ணிக்கை**
1	*2018*	*72,096*
2	*2019*	*65,924*
3	*2020*	*22,097*
4	*2021*	*94,081*
5	*2022*	*1,51,703*
6	*பிப்ரவரி—2023 வரை*	*27,030*
	மொத்தம்	**4,32,931**

சிறைவாசிகளின் நீதிமன்ற காவல் நீட்டிப்பிற்காக காணொலி கலந்துரையாடல்மூலம் ஆஜர்படுத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டு 61 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

TRUTH ALONE TRIUMPHS

ix) மோப்ப நாய் பிரிவு

சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் மோப்ப நாய் பிரிவு செயல்பட்டு வருகிறது.

x) புதிய கணினிகள் மற்றும் நகலெடுக்கும் இயந்திரங்கள்

அனைத்து மத்திய சிறைகள், சிறைத் துறைத் துணைத் தலைவர், சென்னை, வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் பெண்கள் தனிச் சிறைகள், புழல், வேலூர், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு 63 கணினிகள், 45 புள்ளி அச்சு இயந்திரங்கள், 18 லேசர் பிரிண்டர்கள் மற்றும் 21 நகல் எடுக்கும் இயந்திரங்கள் ரூ.82.91 இலட்சம் செலவில் அரசு மின் சந்தை (GeM) வழியாக கொள்முதல் செய்யப்பட உள்ளன.

xi)மின்னாக்கி (Generator)

மாவட்ட சிறை, ஆத்தூர், செங்கல்பட்டு, கோபிச்செட்டிபாளையம் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு ரூ.60.00 இலட்சம் செலவில் 4 மின்னாக்கிகள் (100 கி.வா) கொள்முதல் செய்திட அனுமதியளிக்கப்பட்டு, அரசு மின் சந்தை (GeM) வழியாக கொள்முதல் செய்திட வழங்கலாணைகள் அளிக்கப்பட்டுள்ளன.

xii) சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்தல் (Solar Power Generation)

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் (TEDA) நிறுவப்பட்டது. இதன் வாயிலாக 2018 முதல் 2022 வரையிலான காலங்களில் 1,60,761 யூனிட் மின்சாரம் தயாரிக்கப்பட்டது. இதன் மூலமாக மின் கட்டண தொகை ரூ.13,50,392 சேமிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

xiii) ஆண்டு பராமரிப்பு நிதி

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின்மூலம் சிறை கட்டடங்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்புகளை முறையாக பராமரிக்க ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.500.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு செய்யப்பட்ட இத்தொகையின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் சிறை கட்டடங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

VII. சிறைகளின் அடிப்படை வசதிகள்

i) மனித உரிமைகள்

சிறைவாசிகளின் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கு சிறைத் துறை நிர்வாகம் மிக உயர்ந்த முன்னுரிமை அளித்து வருகிறது. சிறை அலுவலர்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் புத்தாக்கப் பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளிலும் சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான பாடத்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், சிறைவாசிகளின் மேம்பட்ட வாழ்க்கை தரத்தை உறுதிப்படுத்தும் வண்ணம் அனைத்து சிறைகளிலும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையிலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகள் மற்றும் உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் பிற உயரதிகாரிகள் மாநிலத்தில் உள்ள சிறைகளுக்குச் சென்று சிறைவாசிகளின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகளை உறுதி செய்து, தமிழக சிறை நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். மேலும், அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்களால் காலமுறை ஆய்வு/திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii) உணவு மற்றும் ஆடை

தமிழ்நாடு சிறை விதிகள், 1983—ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி, சத்தான மற்றும் சமச்சீரான உணவு சுகாதாரமான முறையில் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. அசைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு உருளைக்கிழங்கு கறி, கேசரி, வாழைப்பழம் ஆகியவை வாரம் ஒருமுறை வழங்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 10

நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்பேரில், பால், ரொட்டி, முட்டை, கோழி இறைச்சி ஆகியன மருத்துவ உணவுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவினை தயாரிக்க வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சூரியகாந்தி எண்ணெய்யும், ஞாயிற்றுக்கிழமைகளில் நல்லெண்ணையும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு முதல் சிறைவாசிகளின் சிறப்பு உணவிற்காக செலவிடப்படும் தொகை ரூ.50/-லிருந்து ரூ.100/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சமையலறையில் உணவு தயாரிக்கவும், உணவினை எடுத்துச் செல்லவும் துருப்பிடிக்காத இரும்பிலான பாத்திரங்களும், தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும் குவளைகளிலும் பரிமாறப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள், 1983-ல் வரையறுக்கப்பட்டவாறு, சிறைவாசிகளுக்கு ஆடைகளும், படுக்கைகளும் வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆண் தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் முழுக்கால் சட்டைகளும், அரைக்கை மேல் சட்டைகளும், பெரிய அளவிலான போர்வைகளும் வழங்கப்படுகின்றன. பெண் தண்டனை சிறைவாசிகளுக்கு சேலை மற்றும் ரவிக்கைகள் வழங்கப்படுகின்றன. விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான சொந்த உடைகளை அணிந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். போதிய உடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் போதுமான உடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

iii) சுகாதாரம் மற்றும் உடல்நலன் பேணுதல்

சிறைவாசிகளின் உடல்நலத்தினை கருத்திற்கொண்டு 24 மணி நேரமும் இடையூறு இல்லாமல் மருத்துவ சிகிச்சை அளிக்கும்பொருட்டு மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறை மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் தலா 3 உதவி மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 10]

சிறைவாசிகளுக்கு தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளை வழங்கிட, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் அனுபவமிக்க மருத்துவர்கள், அவர்களுக்கு உதவிட போதிய துணை மருத்துவ பணியாளர்களைக் கொண்ட சிறை மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தொடர் சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதற்காக அவசர சிகிச்சை ஊர்திகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், பெண்கள் தனிக் கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு சிறைவாசிகளுக்கு தேவையான மேற்சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளை பெரும் நோய்களிலிருந்து தடுக்கும்பொருட்டு கண் சிகிச்சை முகாம், பல் மருத்துவ முகாம் மற்றும் பொதுப் பரிசோதனை போன்ற பல்வேறு மருத்துவ முகாம்கள் சிறைகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

21 வகையான உயிர் காக்கும் உபகரணங்கள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியத்தை பேணும்பொருட்டு சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை கண்டறியும் பரிசோதனை மேற்கொள்ள அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V) பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். போதை பொருட்களுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கும்பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட

சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டையில் "மறுவாழ்வு மையங்கள்" அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறைவாசிகளிடையே தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்திமூலம் முகச்சவரம் செய்யும் முறை கைவிடப்பட்டு, அதற்கு மாற்றாக, மறுபயன்பாடு இல்லாத சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி சிறைவாசிகளை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் புழல் மற்றும் திருச்சியில் ரூ.1,240.10 இலட்சம் செலவிலும், பூவிருந்தவல்லி, தனிக்கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவிலும் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

iv) பெண் சிறைவாசிகளின் பராமரிப்பு

பெண் சிறைவாசிகள் சிறையினுள் அனுமதிக்கப்படும்போதே, பெண் உதவி மருத்துவ அலுவலரால் முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன

கருவுற்ற பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் தேவைக்கேற்ப உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பாலூட்டும் பெண் சிறைவாசிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பிரசவிக்க ஏதுவாக கருவுற்ற பெண் சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. மேலும், பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா தூய அணி ஆடைகள் (Sanitary Napkins) வழங்கப்படுகின்றன.

பெண் சிறைவாசிகளின் குழந்தைகளை பராமரிக்க எவரும் இல்லாத நிலையில், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கு, தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள், 1983-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து ஆகியவற்றை கருத்திற்கொண்டு, பெண் சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

பெண் சிறைவாசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

v) குடிநீர் சுத்திகரிப்பு (சவ்வூடு பரவல்) சாதனங்கள்

சவ்வூடு பரவல்மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனங்கள் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், அனைத்து மத்திய சிறை வளாகங்களில் உள்ள பணியாளர் குடியிருப்புகளிலும் ரூ.18.90 இலட்சம் செலவில் சவ்வூடு பரவல்மூலம் குடிநீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

vi) சிறைவாசிகள் தேநீர் விடுதி

சிறைகளில் செயல்பட்டு வரும் “சிறைவாசிகள் தேநீர் விடுதி”மூலம் அனைத்து அத்தியாவசிய மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் சிறைவாசிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தை கருத்திற்கொண்டு, தற்போதுள்ள உச்சவரம்புத் தொகையானது வாரம் ஒன்றுக்கு "அ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.750/-லிருந்து ரூ.1,000/- ஆகவும், "ஆ" வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.450/–லிருந்து ரூ.750/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

vii) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சிறைகளில் உள்ள கழிவுநீரை மறுசுழற்சி செய்து விவசாயத்திற்கு பயன்படுத்தும்பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

[*2023 ஏப்ரல் 10*

viii) கனரக சலவை இயந்திரங்கள்

சிறைவாசிகள் தாங்கள் பயன்படுத்தும் உடைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடும்பொருட்டு அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் ரூ.60.00 இலட்சம் செலவில் 15 கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

ix) மன நலன்

நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்படுவதன் காரணமாக சிறைவாசிகளுக்கு ஏற்படும் மன அழுத்தம் மற்றும் வன்முறை போக்கினை ஆற்றுப்படுத்தி சிகிச்சை அளித்திடும்பொருட்டு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் மனஇயல் நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் இவ்வகை மனநல ஆலோசனை அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது மட்டுமன்றி, மனநலப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு சிறந்த எதிர்காலத்தை நோக்கி பயணிக்க உதவுகிறது.

மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள், சென்னை அரசு மனநல காப்பகத்தில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, உரிய மேல் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள மனநல நிபுணர்களைக் கொண்டு மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

*உளவியல் சிக்கல்களுக்கு உள்ளாகும் சிறைவாசிகளின் மனநல மேம்பாட்டை உறுதி செய்யும் விதத்தில் அனைத்து மத்திய சிறைகளிலும் தலா இரண்டு ஆற்றுப்படுத்துநர்கள் (*Counsellors*), பெண்கள் தனிச் சிறை, மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தலா ஒரு ஆற்றுப்படுத்துநரும் (*Counsellor*) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆற்றுப்படுத்துநர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில்*

2023 ஏப்ரல் 10]

அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதிய தொகையை ரூ.15,000/—லிருந்து ரூ.25,000/— ஆக அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

சிறைவாசிகள் தங்களுடைய குடும்பத்துடனான உறவினை தொடர்ந்து பராமரிக்கும் விதமாக நேர்காணல்களை ஏற்பாடு செய்தல், சிறைவாசிகளின் உரிமை கோரல்களை தீர்வு செய்தல், சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்குப் பின்னர் கண்ணியமாக வாழும்பொருட்டு சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சிறைவாசிகளின் நலனை, விதிகளுக்குட்பட்டு கவனித்திடும்பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும், புழல், வேலூர், பெண்கள் தனிச் சிறைகளிலும் நல அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது பெண் சிறைவாசிகளின் நலனைக் கருத்தில்கொண்டு பெண்கள் தனிச் சிறை, திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகியவற்றில் 3 பெண் நல அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நல அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இடையில் ஓர் இணைப்பு பாலமாக செயல்படுகிறார்கள்.

x) சிறைவாசிகளுடன் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நேர்காணல்

தமிழ்நாடு சிறை விதிகள், 1983-ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல் செய்திட விண்ணப்பிக்க விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இவ்விண்ணப்பப் படிவங்களை இத்துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். வெகு தூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இவ்வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாகவும் முன் அனுமதி பெறலாம். சிறைவாசிகள் அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேர்காணல் அறையில் பேசும்பொழுது ஏற்படும் இரைச்சலை குறைத்திட நேர்காணல் அறையில் தொலைபேசி வழியாக உரையாடும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

xi) சிறப்பு நேர்காணல்

வழக்குரைஞர்கள் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் வாழ்க்கைத் துணை ஆகியோர் ஓய்வு நாளில் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

xii) சிறைவாசிகளின் பயன்பாட்டிற்கான தொலைபேசி வசதி

சிறைவாசிகளின் மன அழுத்தத்தை குறைத்திடும்பொருட்டு, சிறைவாசிகள் அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களை தொடர்பு கொள்ள தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, அனைத்து மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை, 9 மாவட்ட சிறைகள் மற்றும் 2 திறந்தவெளிச் சிறைகளில் மொத்தமாக 65 தொலைபேசி மையங்கள் ரூ.300.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டு உள்ள இத்தொலைபேசி வசதி, ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு 4 ஞாயிற்றுக் கிழமைகள் உட்பட 8 முறையாகவும், பேசும் நேரம் 56 நிமிடங்கள் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-12-2022 வரையில், இந்த வசதியை சிறைவாசிகள் 16,86,826 முறை பயன்படுத்தியுள்ளனர்.

xiii) பார்வையாளர் மேலாண்மைத் திட்டம்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர்கள் குறித்த விவரங்களை சேகரிக்கவும், நேர்காணல் முறையை சீரமைக்கவும், எளிய வழிமுறைகளை கொண்ட பார்வையாளர் மேலாண்மைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

xiv) ஆதார் பதிவு

சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகளிடம் ஆதார் ஆவணங்கள் இல்லாத காரணத்தால், ஆதார் அட்டை வழங்கும் வகையில், சிறைகளில் ஆதார் பதிவு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சிறைவாசிகள் அவர்களது விடுதலைக்குப் பின்னர் கண்ணியமாக வாழவும், அவர்களது வாழ்வாதாரத்திற்குத் தேவையான வேலைவாய்ப்பு/நிதி கடன்களுக்கு விண்ணப்பிக்க இது உதவும்.

xv) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச சட்ட உதவி வசதியை மேலும் விரிவுபடுத்தும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக் குழு மூலமாக தனியாக இலவச சட்ட உதவி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இம்மையத்தின்மூலம் சிறைவாசிகள் வழக்கு தொடர்பான அனைத்து சட்ட உதவிகளையும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

சிறைவாசிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவும், பிணை கோரவும், வழக்கு விசாரணையினை நடத்தவும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களை இந்த இலவச சட்ட மையங்கள் மூலமாக அணுகலாம். சிறைவாசிகளின் வழக்கு தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்யவும், தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முன்னேற்ற நிலையினை கண்காணிக்கவும், சிறைவாசிகளுக்கு இந்த இலவச சட்ட உதவி மையங்கள் உதவுகின்றன. இதன்மூலம் சிறைவாசிகள் தங்கள் வழக்குகளில் விரைவாக நீதியினை பெற இயலும்.

xvi) சிறை நீதிமன்றங்கள்

சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதித் துறை நடுவர்கள் இந்த சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளை தீர்வு செய்கின்றனர்.

[2023 ஏப்ரல் 10

சிறை நீதிமன்றங்களின் மூலமாக 1-1-2021 முதல் 31-12-2022 வரை 1,478 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

VIII. சிறைவாசிகளின் சீர்திருத்தம்

i) சிறையில் கல்வி வசதி

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகளிடையே 100 சதவீத கல்வி அறிவினை கற்பிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும், ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகமும் ஒருங்கிணைந்து பல திட்டங்களை தொடங்கி செயல்படுத்தி வருகின்றன. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப் பிரிவுகளை நடத்தி வருகிறது.

சிறைவாசிகள் ஏற்கெனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக் கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு (v) வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என தேவைக்கேற்ப கல்வித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறையில் வகுப்புகள் நடத்துவதற்கு கல்வித் தகுதி பெற்ற சிறைவாசிகளும் பயன்படுத்தப்படுகின்றனர்.

அனைத்து சிறைகளிலும் உள்ள எழுதப்படிக்க தெரியாத சிறைவாசிகளுக்கு மாநில பள்ளிக் கல்வித் துறையின் சிறப்பு கல்வியறிவு பணி/திட்டத்தின் மூலமாக அடிப்படை கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக சிறைவாசிகள் அடையாளம் காணப்பட்டு சிறை ஆசிரியர்களுக்கு பள்ளிக்கல்வி துறையினரால் புழல் மத்திய சிறை—1—ல் பயிற்சி வழங்கப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு செலவில் சிறைவாசிகளுக்கு அஞ்சல்வழிக் கல்வி வசதியும் வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 10]

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி), புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின்னர் சிறைவாசிகள் வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் 109 சிறைவாசிகள் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 163 சிறைவாசிகள் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 231 சிறைவாசிகள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 386 சிறைவாசிகள் 8 ஆம் வகுப்பு தேர்வும் எழுதுகின்றனர்.

2022-2023 ஆம் ஆண்டில் மொத்தம் 9,844 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு பாடப் பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வருகின்றனர்:—

பாடப் பிரிவு	சிறைவாசிகளின் எண்ணிக்கை
பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம்	*1,802*
அடிப்படைக் கல்வி (7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு)	*3,606*
எழுத்தறிவு திட்டக் கல்வி (மாநில ஆதார மையம் வழியாக)	*3,049*
கணினி முதுகலை பட்டப்படிப்பு	*04*
வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு	*28*
கலை/அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு	*26*
கலை/அறிவியல்/வணிகவியல்/இலக்கியம் இளங்கலை பட்டப்படிப்பு	*96*
வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு	*31*

பாடப் பிரிவு	சிறைவாசிகளின் எண்ணிக்கை
8 (386), 10 (231), 11 (163) மற்றும் 12 ஆம் வகுப்பு (109)	889
பட்டயப்படிப்பு/சான்றிதழ் படிப்பு	313
மொத்தம்	**9,844**

திருச்சி, மத்திய சிறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2022—2023 ஆம் ஆண்டில் 176 சிறைவாசிகள் பல்வேறு வகையான கீழ்க்காணும் தொழிற்கல்விகளை பயின்று வருகின்றனர்:—

வ. எண்	தொழிற் பயிற்சியின் பெயர்	காலம்	சிறைவாசிகளின் எண்ணிக்கை		
			முதலாம் ஆண்டு	இரண்டாம் ஆண்டு	மொத்தம்
1	பொருத்துநர்	இரண்டு ஆண்டுகள்	20	4	24
2	மின்வினைஞர்	இரண்டு ஆண்டுகள்	20	4	24
3	கணினி இயக்குநர் மற்றும் மென்பொருள் உதவியாளர்	ஓராண்டு	48	—	48
4	வெட்டுதல் மற்றும் தைத்தல்	ஓராண்டு	40	—	40
5	பற்றவைப்பவர் (எரிவாயு மற்றும் மின்சாரம்)	ஓராண்டு	40	—	40
மொத்தம்			**168**	**8**	**176**

ii) இலவசக் கல்வி

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின்மூலம் இளங்கலை, முதுகலை, பட்டயப்படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளை இலவசமாக பயின்றிட நிருவாக ஆணை அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டவாறு 113

2023 ஏப்ரல் 10]

சிறைவாசிகள் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின்மூலம் பட்டப் படிப்புகளை இலவசமாக பயின்று வருகின்றனர்:—

வ.எண்	**சிறையின் பெயர்**	**சேர்க்கை விவரம்**
1.	*மத்திய சிறை—1, புழல்*	*18*
2.	*மத்திய சிறை—2, புழல்*	*01*
3.	*மத்திய சிறை, கடலூர்*	*17*
4.	*மத்திய சிறை, வேலூர்*	*01*
5.	*மத்திய சிறை, திருச்சி*	*11*
6.	*மத்திய சிறை, மதுரை*	*26*
7.	*மத்திய சிறை, கோவை*	*14*
8.	*மத்திய சிறை, சேலம்*	*07*
9.	*மத்திய சிறை, பாளையங்கோட்டை*	*17*
10.	*பெண்கள் தனிச் சிறை, புழல்*	*01*
	மொத்தம்	*113*

iii) சிறை நூலகம்

சிறைகளில் உள்ள சிறைவாசிகள் புத்தகங்கள், செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களைப் படித்து பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மத்திய சிறைகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை நூலகங்கள் வாசிப்பின்மூலம் சிறைவாசிகளுக்கு கல்வி அளிப்பதிலும், அவர்களை பண்பட்டவர்களாக மாற்றுவதிலும், நல்ல சிந்தனைகள் மற்றும் உயரிய விழுமியங்கள் விதைப்பதிலும், குடும்ப உறவுகளை மேம்படுத்தி மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சிறைவாசிகளை கல்விமூலம் சீர்திருத்தும்பொருட்டு, சிறை நூலகங்களின் உள்கட்டமைப்பு மற்றும் சூழலை மேம்படுத்துவதன்மூலம் சிறைவாசிகளின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது. இந்த நோக்கத்தை அடையும் வகையில், புத்தகங்களை அதிக அளவில் சேகரிக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சிகளில் சிறைத் துறை முதன்முறையாக பங்கேற்று பல்வேறு தரப்பிலிருந்து சுமார் எழுபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை நன்கொடையாக பெற்றுள்ளது.

[*2023 ஏப்ரல் 10*

iv) சிறை தொழில்கள் மற்றும் திறன் மேம்பாடுகள்

சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்பு பெற அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக்கொள்ள ஏதுவாக, அவர்களுக்கு கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செயல்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு புதுமையான சீர்திருத்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையிலும் அவர்களது வாழ்வாதாரத்திற்குத் தேவைப்படும் திறன் மற்றும் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தண்டனை காலத்தில் சிறைவாசிகள் உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத்திறன்களைக் கற்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவு தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்ப்பான்கள் உற்பத்தி, குளியல்/சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பூச்சு தொழிற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், உலர் சாம்பல் கற்கள் உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்கூடங்கள் சிறைச்சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், விவசாய உற்பத்தி, இயற்கை உர உற்பத்தி மற்றும் தோட்டக்கலை மேம்பாடு போன்ற பயிற்சிகளும் சிறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

*சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான, சீருடைத் துணி, வார்ப்பட்டை (*belt*), தொப்பிகள், சீருடைக் காலணிகள், காலணி பூச்சு, மழை மேலங்கி (*raincoats*), கொசு வலைகள் ஆகியன காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளுக்கும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பான்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்து பெட்டகங்கள் (*Bed—side Lockers*) போன்றவை பல்வேறு அரசுத் துறைகளுக்கும் வழங்கப்படுகின்றன.*

'சேவைத் துறை' என்கிற வகையில், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, பல்வேறு அரசுத் துறைகளுக்கு இப்பொருட்களை வழங்குவதில் சிறப்புரிமை பெற்று வழங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 10]

2022-2023 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2023 வரை) சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.44.30 கோடி ஆகும்.

v) சிறை அங்காடிகள்

மத்திய சிறைகள், சில மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் ஆகியவற்றில் சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திடவும், "சிறை அங்காடிகள்" அரசால் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை (Wallet), தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு, சானிட்டரி நாப்கின்கள், மெழுகுவர்த்திகள், கொசுவலைகள், மழைமேலங்கி (raincoats), காலணி பூச்சு, ஆயத்த ஆடைகள், தேன், மசாலா தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், செக்கு எண்ணெய் (Cold Pressed Edible Oil), மண்புழு உரம், பஞ்சகவ்யம், கரிம பூச்சிக்கொல்லிகள், ஓவியங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் "ஃப்ரீடம்" (Freedom) என்ற பதிவு செய்யப்பட்ட அடையாள பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் அழகு நிலையங்கள், சலவைப்பெட்டியிடுதல், உணவகம் போன்ற இதர சில்லறை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

சிறை அங்காடிகளில் கிடைக்கப் பெறும் இலாபத் தொகை கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது:—

அ) 20% சிறைவாசிகளின் ஊதியம்

ஆ) 20% அரசு கணக்கு

இ) 20% சிறைப் பணியாளர்களின் நல நிதிக் கணக்கு

ஈ) 40% தமிழ்நாடு சிறைத் துறை பொருட்கள் உற்பத்தி கணக்கு

இந்த அங்காடிகளில் 2022-2023 ஆம் ஆண்டு (பிப்ரவரி 2023 வரை) ரூ.523.08 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ.100.76 இலட்சம் நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

vi) சிறைவாசிகளுக்கான ஊதியம் ஈட்டும் திட்டம்

சிறை தொழிற்கூடப் பணிகளில் தண்டனை பெற்ற சிறைவாசிகள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயல்திறன் பெற்றோர், பகுதி செயல்திறன் பெற்றோர், செயல்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு ஒரு சிறைவாசிக்கு நாளொன்றுக்கு முறையே ரூ.200/-, ரூ.180/- மற்றும் ரூ.160/- ஊதியமாக வழங்கப்படுகிறது. மேலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய நிர்ணயக் குழுமூலம் ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது.

vii) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைவாசிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதில் சிறை நிர்வாகம் அதிக முன்னுரிமை அளிக்கிறது. காவல் துறை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் மற்றும் சரக சிறைத் துறை துணைத் தலைவர்கள் தங்களது வாலாய பார்வையிடல்/வருடாந்திர ஆய்வுகளின்போது சிறைவாசிகளின் குறைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். சிறைக் கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு வாரமும் சிறைவாசிகளின் ஆய்வு அணிவகுப்பின்போது அவர்களது குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்து வருகின்றனர்.

சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கும்பொருட்டு அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதைத் தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளிடம் குறை கேட்டல் மற்றும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் உள்ளிட்ட இதர வசதிகளை ஆய்வு செய்கின்றனர்.

viii) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு கோரும் விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன்தொடர்புடைய தொழிற்சாலைகள் போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

ix) பட்டம் (PATTAM) என்கிற சிறைவாசிகளுக்கான சீர்திருத்த திட்டம்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சிறைவாசிகளுக்காக பல்வேறு சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு தொலை நோக்கு திட்டம் தான் 'பட்டம்' (PATTAM) இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management *என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். இத்திட்டம் காவல், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.*

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க, முதன்முறையாக சிறு குற்றங்களில் ஈடுபடும் இளம் வயது (18—24 வயது) விசாரணை சிறைவாசிகளுக்கென குறிப்பாக வடிவமைக்கப்பட்ட சீர்திருத்த திட்டமாகும். இத்திட்டம், விசாரணை சிறைவாசிகளை மீண்டும் சமுதாயத்துடன் ஒருங்கிணைத்து, சமூகத்தில் பொறுப்பான நபராக மாற்றும் வகையில், ஒரு முழுமையான சீர்திருத்தத்தை அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.

இத்திட்டம் முதலில் சைதாப்பேட்டை கிளைச் சிறையில் துவங்கப்பட்டு, 2-10-2021 முதல் மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி 5,104 விசாரணை சிறைவாசிகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதன்மூலம் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

வ. எண்	சிறைகளின் பெயர்	அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2022 வரை	
		பங்கேற்றவர்கள்	மீண்டும் கைதானவர்கள்
1	*கிளைச் சிறை, சைதாப்பேட்டை*	*971*	*0*
2	*அனைத்து மத்திய சிறைகள் (மத்திய சிறை—1 புழல் நீங்கலாக)*	*4133*	*12*
மொத்தம்		**5104**	**12**

x) தண்டனைக் குறைப்பு/முன்விடுதலை

தண்டனைக் குறைப்பு என்பது, சிறைவாசிகளின் நடத்தையை சீர்செய்து, அவர்களது பழக்கவழக்கங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் முக்கியமான ஒன்றாகும்.

15-9-2021 அன்று டாக்டர் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் 113-வது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13-9-2021 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் தண்டனையை நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்ய அறிவித்ததன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 488, உள் (சிறை—4) துறை, நாள் 15-11-2021 மூலம் 15-9-2021 அன்றுள்ளபடி 10/20 ஆண்டுகள் சிறைத் தண்டனை முடித்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசுக்கு பரிந்துரைக்கப்படும் ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் கருத்துருக்கள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டு, அரசு ஆணையின்படி, இதுவரை 318 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்தியாவின் 75-வது சுதந்திர தினத்தின் ஒரு பகுதியாக, 15-8-2022 அன்று 20 தண்டனை சிறைவாசிகளும், 26-1-2023 அன்று 60 தண்டனை சிறைவாசிகளும் சிறப்பு தண்டனை குறைப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

2023 ஏப்ரல் 10]

IX. மனமகிழ் நிகழ்வுகள்

i) வானொலி பெட்டி

சிறைவாசிகளின் தனிமையை போக்குவதற்கும், அவர்களின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைப்பதற்கும், சிறைகளில் இசை மற்றும் இதர நிகழ்ச்சிகள் பண்பலை வானொலி பெட்டிகள் மற்றும் ஒலிபெருக்கிகள்மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், தனிநபர் வளர்ச்சி, இலக்கு நிர்ணயம் மற்றும் துன்பங்களை சமாளித்தல் போன்ற தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரைகள் ஆடியோ புத்தகங்கள்மூலம் சிறைவாசிகளுக்கு ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், போதை பழக்கத்திலிருந்து விடுபடவும், கோபத்தினை குறைத்திடவும் மற்றும் மனநலம் தொடர்பான தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரைகள் வடிவமைக்கப்பட்டு ஒலிபரப்பப்படுகின்றன.

ii) இசை/தொலைக்காட்சி பெட்டி

சிறைவாசிகள் தங்கள் கோபம் மற்றும் மனஅழுத்தத்தை பாதிப்பில்லாத வகையில் மனம் மாற்றம் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் மற்றுமொரு கருவியாக இசை விளங்குகிறது. சிறைகளில் ஒலிபரப்பப்படும் இசை, சிறைகளில் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் தன்னம்பிக்கை மற்றும் தன்மதிப்பை அதிகரிப்பதுடன் நேர்மறையான கற்றல் அனுபவங்களை உருவாக்கவும் உதவுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் இசை குழுக்கள் செயல்படுவதுடன் சிறைவாசிகள் இசைக்கருவிகளை வாசிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மேலும், சிறைவாசிகளின் பொழுதுபோக்கிற்காக போதுமான தொலைக்காட்சி பெட்டிகள் சிறைகளில் பொருத்தப்பட்டுள்ளன. திறந்தவெளி அரங்கத்தில் நல்லொழுக்கம் மற்றும் நீதிக் கருத்துகளை கற்பிக்கும் வகையிலான திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

iii) விளையாட்டுப் போட்டிகள்

சிறைவாசிகளின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி அவர்களை சீர்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு சிறந்த கருவியாக திகழ்கிறது. விளையாடுவதன்மூலம் ஒருவரின் மனக்கட்டுப்பாடு, சுயமரியாதை, சூழலை எதிர்கொள்ளும் திறன் ஆகியவை மேம்படுகிறது. மேலும், இதன் வழியாக சிறைவாசிகள் தங்கள் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் மன

உளைச்சல்களிலிருந்து ஆரோக்கியமான முறையில் விடுபட முடியும். அதுமட்டுமின்றி, உடற்பயிற்சி தசை இறுக்கத்தை குறைத்து ஆரோக்கியமான உடல் நிலையைத் தருகிறது. இந்த காரணிகள் ஒவ்வொன்றும் ஒரு சிறைவாசியின் மறுவாழ்வு செயல்முறைக்கு முக்கியமானவைகளாகும். சிறைவாசிகள் மாலையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அவர்கள் விரும்பும் சதுரங்கம், கேரம், டென்னிகாய்ட் போன்ற உட்புற விளையாட்டுகளை விளையாட ஊக்குவிக்கப்படுகிறார்கள். அனைத்து சிறைகளிலும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கைபந்தாட்ட மைதானம் மற்றும் ஒரு இறகு பந்து மைதானம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022—2023 ஆம் நிதியாண்டில் ரூ.15.4 இலட்சத்துக்கு விளையாட்டுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

iv) கலை நிகழ்ச்சிகள்

சிறைவாசிகளின் சீர்திருத்தத்தில் கலை நிகழ்ச்சி, இசை மற்றும் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது. நாடகம், நாட்டுப்புற நடனம், வினாடி—வினா போட்டி, பட்டிமன்றம், பாட்டு, சொற்பொழிவு, கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் சிறைகளில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. காந்தியடிகள் பிறந்த தினம் சிறைவாசிகளின் நலநாளாக கொண்டாடப்படுவதால், இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் பிற நாட்களிலும் சிறையில் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்கப்படுகின்றனர். இவை மட்டுமின்றி சிறைவாசிகள் நலனில் அக்கறை கொண்ட தனிநபர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சிறைவாசிகளின் மறுவாழ்வு பயிற்சி திட்டங்கள் மற்றும் சமய சொற்பொழிவுகள் நடத்துவதற்கு உரிய சரிபார்த்தலுக்குப்பின் அனுமதி வழங்கப்படுகிறது.

X. பணியாளர் நலன்

ஊழியர்களின் நல்வாழ்வுக்காகவும் அவர்களின் மன உறுதியை அதிகரிக்கவும், அசாதாரண சூழலில் பணியாற்ற அவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு படிகள்/வசதிகள் வழங்கப்படுகின்றன.

2023 ஏப்ரல் 10]

i) உணவுக் கட்டணம்

மத்திய சிறைகள் மற்றும் மாவட்ட சிறைகளில் அவசர கால பணிகள், கூட்டான கைது நடவடிக்கைகள், சிறை வளாகங்களில் சோதனை செய்தல் போன்ற நேர்வுகளில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் சிறைக் களப்பணியாளர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. சென்னை நகரில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.300/- வீதம் ஒரு மாதத்தில் பத்து நாட்களுக்கும், இதர மாவட்டங்களில் நாள் ஒன்றிற்கு தலா ரூ.250/- வீதம் ஒரு மாதத்தில் 6 நாட்களுக்கும், இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான சிறைப் பணியாளர்களுக்கு உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது.

ii) இடர்படி

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.800/-ம், சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள அலுவலர்களுக்கு மாதம் ரூ.900/-ம், இடர்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

iii) தையற் கட்டணம் மற்றும் சலவைப்படி

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஆண்டுதோறும் தலா ரூ.1,000/- மற்றும் சலவைப்படியாக மாதம்தோறும் ரூ.500/- வழங்கப்படுகிறது.

iv) இரவு உணவுப்படி

இரவு உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூ.100/- இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி, முதல் தலைமை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

v) மிகை நேரப் பணி ஊதியம்

மிகை நேரப் பணி ஊதியமாக ரூ.200/- வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

[*2023 ஏப்ரல் 10*

vi) பதக்கங்கள்

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும், சிறந்த பணிச்சான்று கொண்டிருக்கும் சீருடை பணியாளர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:—

அ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணி பதக்கம்-பொங்கல் பதக்கம்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு, அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக இப்பதக்கமும், பதக்கப் படியாக மாதந்தோறும் ரூ.400/—ம் வழங்கப்படுகிறது.

ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை சேவைக்கான பதக்கம்-அண்ணா பதக்கம்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பத்து சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி இப்பதக்கம் வழங்கப்படுகிறது, பதக்கம் வெல்லும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு தொகை அரசால் வழங்கப்படுகிறது:—

1.	*சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் நிலை வரை*	*ரூ.15,000*
2.	*உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் நிலை*	*ரூ.10,000*
3.	*இரண்டாம் நிலை சிறைக் காவலர் தொடங்கி முதல் தலைமை சிறைக் காவலர் நிலை வரை*	*ரூ.5,000*

இ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு எந்தப் பதவியிலிருந்தாலும், ரொக்கப் பரிசு ரூ.5.00 இலட்சம் அரசால் வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 10]

ஈ) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் அப்பழுக்கற்ற பணியினை பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது.

vii) தமிழ்நாடு சிறை சேம நல நிதிக்கு வழங்கப்படும் மானியத்தொகை

தமிழ்நாடு சிறை சேம நலநிதி உருவாக்கப்பட்டு, அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் நிதி உதவி வழங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் இணை மானியமாக அரசால் வழங்கப்படுகிறது.

இந்நிதியிலிருந்து இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு கல்லூரிக் கல்வி, நெடுநாட்பட்ட கடுமையான நோய்கள், விபத்து காயங்கள் போன்றவற்றிற்கான மருத்துவ சிகிச்சை ஆகிய இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், பணியாளர்களோ அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும் இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது.

viii) குழுக் காப்பீட்டுத் திட்டம்

குழுக் காப்பீட்டுத் திட்டம் சிறைத் துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள களப்பணியாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணியில் இருக்கும்போது இயற்கையாக மற்றும் விபத்தின் காரணமாக இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு ரூ.2.00 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

ix) கருணைத் தொகை வழங்குதல்

பணியில் இருக்கும்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிடும் சிறைப் பணியாளர்களுக்கு அவர்களது சேவையை அங்கீகரிக்கும் வகையில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு, பணியாளர்கள் இறுதியாக பெற்ற ஊதியம், அப்பணியாளர் உயிரோடு இருந்தால் அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ, அது வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதன் பின் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணைத் தொகை ரூ.2.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கும், கருணைத் தொகை வழங்கப்படுகிறது:—

1	நிரந்தர ஊனம்	ரூ.50,000
2	படுகாயம்	ரூ.10,000
3	சாதாரண காயம்	ரூ.5,000

பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைப் பணியாளர்களின் குறைகளை களையும்பொருட்டு கீழ்க்கண்ட அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடத்தப்பட்டு வருகின்றன:—

1.	காவல் துறை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர்	காலாண்டிற்கு ஒருமுறை
2.	சரக சிறைத் துறைத் துணை தலைவர்	மாதம் ஒருமுறை
3.	சிறைக் கண்காணிப்பாளர்கள்	வாரம் ஒருமுறை

குறை தீர்ப்பு கூட்டங்களின்போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதைத் தவிர, காவல் துறை தலைமை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர், தலைமை அலுவலகத்திலும் சிறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் போதும், சிறைகளைப் பார்வையிடும்போதும் பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு விண்ணப்பங்களைப் பெற்று, விரைந்து தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்கிறார்.

xi) காவல் துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல் துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சலுகை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

2023 ஏப்ரல் 10]

துறையில் பணிபுரியும்/ஓய்வு பெற்ற/காலஞ்சென்ற சீருடை/ அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

xii) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள்

நியாய விலைக் கடைகளின்மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவை இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

xiii) சிறை களப்பணியாளர்களுக்கு மழைமேலங்கிகள் (raincoats) மற்றும் கொசுவலைகள் வழங்குதல்

சிறை களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்) மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் பணிபுரிபவர்களுக்கு 3 வருடத்திற்கு ஒரு முறை மழைமேலங்கிகளும், கொசுவலைகளும் வழங்கப்படுகின்றன.

xiv) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைத் துறை துணைத் தலைவர் வரையிலான சிறை களப்பணியாளர்ளுக்கு அரசால் குடியிருப்புகள் கட்டி தரப்பட்டு வருகின்றன. அதிகரித்து வரும் தேவைகளின் அடிப்படையில் புதிய பணியாளர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்மூலம் அரசால் கட்டப்பட்டு வருகின்றன.

XI. புதிய செயல்பாடுகள்

i) சீர்திருத்த சிறகுகள்

தமிழகம் முழுவதும் உள்ள சிறைகளில் பல சீர்திருத்த திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் கல்வி, திறன் பயிற்சி, தொழில் துறை பயிற்சி, யோகா, தியானம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இருப்பினும், இந்தத் திட்டங்களில் பெரும்பாலானவை, மொத்தம் அனுமதிக்கப்பட்ட சிறைவாசிகளில் 30 விழுக்காட்டை கொண்ட தண்டனை சிறைவாசிகளுக்காகவே

அமைந்துள்ளது. எனவே, மீதமுள்ள 70 விழுக்காடுள்ள விசாரணை சிறைவாசிகள் மற்றும் அனைத்து வகையான பிற சிறைவாசிகளுக்கும் சீர்திருத்தத் திட்டங்களைச் செயல்படுத்துவது அவசியமானது. எனவே, சிறைகளை ஒரு முழுமையான சீர்திருத்த மையங்களாக மாற்றும் அணுகுமுறையுடன் "சீர்திருத்த சிறகுகள்" என்ற திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

மது மற்றும் போதைப் பழக்கம், குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான உந்து சக்தியாக இருப்பது அனைவரும் அறிந்ததே. எனவே, போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு அடிமையான சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 9 மத்திய சிறைகளிலும், 5 பெண்கள் தனிச் சிறைகளிலும் பிரத்யேக போதை மறுவாழ்வு மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் நிதியாண்டில் போதை ஒழிப்பு மையங்களுக்கான திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தொழிற்கல்வி ஆலோசகர் மற்றும் மனநல மருத்துவர்/சிகிச்சையாளர் ஆகியோருக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கும், மறுவாழ்வு மையத்திற்கு தேவையான மருந்துகளை வாங்குவதற்கும் ரூ.93,72,000/— (தொடர் செலவினமாக) செலவழிக்க அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ii) சமூக இயல் வல்லுநர்

மத்திய சிறை, வேலூர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று சிறைகளில் சமூக இயல் வல்லுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சமூக இயல் வல்லுநர் பதவியில் பணிபுரியும் பணியாளர்கள் சீர்திருத்த அலுவலர்கள் என அழைக்கப்படுகின்றனர். புதிதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளை சிறை சூழலுக்கு ஏற்ப தயார்படுத்தும் வரவேற்புக் குழுவில் சீர்திருத்த அலுவலர்களாக பணிபுரியும் இவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தண்டனை பெற்ற சிறைவாசிகளின் சமூகப் பின்னணி குறித்து ஆராயவும், தகுந்த முறையில் தனிநபர் ஆற்றுபடுத்துதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடவும், சிறைவாசிகளுடைய குடும்ப உறுப்பினர்களுடனான தொடர்பை மேம்படுத்தும் நோக்கத்துடனும், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நீங்கலாக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் ரூ.15,000/— மதிப்பூதியத்தில் 12 சமூக இயல் வல்லுநர்களை நியமிக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில், 12 சமூக இயல் வல்லுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

iii) உடல் அணிந்த கேமரா (Body Worn Camera) மற்றும் சேவையகம் (Server) தலைமை அலுவலகத்தில் அமைத்தல்

9 மத்திய சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளுக்கு 50 உடல் அணிந்த கேமராக்களும் மற்றும் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தத் பணிகள் துறையின் தலைமை அலுவலகத்தில் அது தொடர்பான சேவையகம் (Server) ஒன்றும் ரூ.49,98,055/— செலவில் நிறுவப்பட்டுள்ளது.

சிறைகள் மற்றும் சிறைவாசிகளின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்தின் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கு உடல் அணிந்த கேமரா ஒரு சிறந்த சாதனமாகும். உடல் அணிந்த கேமராவை அணிவது களப்பணியாளர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்கும். சிறைவாசிகள் தங்களது நடமாட்டம்/செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதை அறிவதால், சிறைவாசிகள் தேவையில்லாமல் ஒரு சிறைத் தொகுதி விட்டு வேறொரு சிறைத் தொகுதிக்கு செல்வது கட்டுப்படுத்தப்படும். உடல் அணிந்திருக்கும் கேமராக்கள்மூலம் சிறைகளில் நடக்கும் அசம்பாவித சம்பவங்களை வீடியோ மற்றும் ஆடியோமூலம் பதிவு செய்ய முடியும். மறைகாணி கேமராக்களின் பதிவுகளை விட உடல் அணிந்த கேமராக்களின் பதிவுகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதோடு, சிறைவாசிகளின் ஆக்ரோஷம் மற்றும் வன்முறையைத் தவிர்க்கவும், நடத்தையை மேம்படுத்தவும் உதவுகின்றன. இக்கருவி அலுவலர்கள் மற்றும் சிறைவாசிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, சிறைகளில் எல்லா சூழ்நிலைகளிலும், என்ன நடக்கிறது என்பதை அறிவதன்மூலம் சிறை நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்படுகிறது.

iv) சிறைத் துறைத் தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் காணொலிச் சுவர் வசதி (Video Wall) ஏற்படுத்துதல்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலக கட்டுப்பாட்டு அறையில் காணொலிச் சுவர் வசதியை அமைப்பதற்காக ரூ.49,99,999/— நிதி வழங்கப்பட்டது.

இக்காணொலிச் சுவர் நாள் முழுவதும் இயங்கும் ஒரு பெரிய திரையுடன்கூடிய சிறந்த அமைப்பாகும். இது பல கணினி இணைப்புகளை ஒருங்கிணைத்து திரையில் ஒளிபரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

9 மத்திய சிறைகளில் இருந்து மறைகாணிகளின் வாயிலாக பெறப்படும் தரவுகளை கண்காணிப்பதற்காக, சிறைத் துறை

தலைமையக கட்டுப்பாட்டு அறையில் 3 (நேர்வரிசை)X3 (நெடுவரிசை) கொண்ட அணிவரிசை காணொலிச் சுவர் நிறுவப்பட்டுள்ளது. தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பின்மூலம், மத்திய சிறைகளில் நடக்கும் நிகழ்வுகளை அதிகாரிகள் உடனுக்குடன் கண்காணித்து விரைவான தீர்வினை எட்ட முடியும். ஒரே ஓர் ஒளிச்சுவரை கொண்டு பல பயன்பாடுகளை இயக்க முடியும். இச்சாதனத்தினால், சிறைகளில் எல்லா சூழ்நிலைகளிலும் என்ன நடக்கிறது என்பதை அறிவதன்மூலம் சிறை நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை மேம்படுகிறது.

v) அடையாள அணிவகுப்பு அறை கட்டுதல்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்மூலம் ரூ.472.81 இலட்சம் செலவில் அடையாள அணிவகுப்பு அறைகள் அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் 13 மாவட்டச் சிறைகளிலும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

vi) சிறைவாசிகளின் உணவு முறையை மாற்றுவதற்கான குழு

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவின் அளவு மற்றும் முறையினை மாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்வதற்கு, உள் துறை மற்றும் நிதித் துறை அரசு துணைச் செயலாளர்கள், சிறை அலுவலர்கள் மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் ஊட்டச்சத்து நிபுணர் கொண்ட குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்படும் உணவு முறையினை ஒப்பீடு செய்து காவல் துறை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநருக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

vii) பறக்கும் வசதியுடன்கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் வழங்குதல் (Drones with Colour Cameras)

9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன்கூடிய வண்ண புகைப்பட கருவிகள் ரூ.21.85 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

viii) மத்திய சிறை வளாகங்களில் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்

முதற்கட்டமாக மத்திய சிறைகள் புழல்—1, வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் மாவட்ட

2023 ஏப்ரல் 10]

*சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி (இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி), புதுக்கோட்டை ஆகிய சிறை வளாகங்களில் திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து "முன்னோடி திட்டமாக" (*Pilot Project*) பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கு ஏற்ற வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

இந்த ஐந்து பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள்மூலம் 2018-2019 முதல் 2022-2023 ஆம் ஆண்டு நவம்பர் 2022 வரை ரூ.751.71 கோடி விற்பனை செய்யப்பட்டு ரூ.21.56 கோடி நிகர லாபம் பெறப்பட்டது.

தற்போது, இரண்டாம் கட்டமாக மத்திய சிறை—1, புழல்—அம்பத்தூர் சாலை, திருச்சி—விமான நிலைய சாலை, கோயம்புத்தூர்—பாரதியார் சாலை, சேலம் மற்றும் மதுரை மற்றும் பெண்கள் தனிச் சிறை, திருச்சி—காந்தி சந்தை ஆகிய 6 இடங்களில் துவங்கிட அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

XII. முடிவுரை


சிறைவாசிகளின் சீர்திருத்தம், மறுவாழ்வு மற்றும் சிறை உட்கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும்பொருட்டு, தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, அரசிடமிருந்து பெறப்பட்ட உறுதியான மற்றும் கனிவான ஆதரவின் காரணமாக விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருகிறது.

சிறைத் துறை பணியாளர்களின் மன உறுதியை மேம்படுத்தி, அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில், சிறைப்பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, குடியிருப்பு வளாகங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவி சுத்தமான குடிநீர் வழங்குதல், மருத்துவ உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறை நிருவாகம் சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன், மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சிறைவாசிகளின் சீர்திருத்தம், புனர்வாழ்வு மற்றும் மறுஒருங்கிணைப்புக்காக பல்வேறு சீர்திருத்தத் வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

பிற்சேர்க்கை – I

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு



குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

2023 ஏப்ரல் 10]

பிற்சேர்க்கை – II

சிறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு எண்ணிக்கையின் விவரம்

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	சென்னை மாவட்டம்	
1	மத்திய சிறை-I, புழல்	1250
2	மத்திய சிறை-II, புழல்	2000
3	பெண்கள் தனிச்சிறை, புழல்	500
4	பார்ஸ்டல் பள்ளி, புழல் (Transit Yard)	100
5	கிளைச்சிறை, சைதாப்பேட்டை	175
	காஞ்சிபுரம் மாவட்டம்	
6	கிளைச்சிறை, காஞ்சிபுரம்	34
	செங்கல்பட்டு மாவட்டம்	
7	மாவட்டச்சிறை, செங்கல்பட்டு	200
8	கிளைச்சிறை, மதுராந்தகம்	62
	திருவள்ளூர் மாவட்டம்	
9	கிளைச்சிறை, திருவள்ளூர்	36
10	கிளைச்சிறை, பொன்னேரி	42

[2023 ஏப்ரல் 10

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
11	கிளைச்சிறை, திருத்தணி	36
12	தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி	152
	வேலூர் மாவட்டம்	
13	மத்திய சிறை, வேலூர்	2130
14	பெண்கள் தனிச்சிறை, வேலூர்	469
15	பார்ஸ்டல் பள்ளி, வேலூர் (இணைப்பு)	54
16	கிளைச்சிறை, குடியாத்தம்	54
	திருப்பத்தூர் மாவட்டம்	
17	கிளைச்சிறை, ஆம்பூர்	20
18	கிளைச்சிறை, திருப்பத்தூர்	74
19	கிளைச்சிறை, வாணியம்பாடி	30
	ராணிப்பேட்டை மாவட்டம்	
20	கிளைச்சிறை, அரக்கோணம்	36
21	கிளைச்சிறை, வாலாஜா	19
	திருவண்ணாமலை மாவட்டம்	
22	கிளைச்சிறை, செய்யாறு (வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது)	48

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
23	கிளைச்சிறை, திருவண்ணாமலை	49
24	கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	17
25	கிளைச்சிறை, செங்கம்	9
26	கிளைச்சிறை, போளூர்	36
27	கிளைச்சிறை, வந்தவாசி	19
	கடலூர் மாவட்டம்	
28	மத்திய சிறை, கடலூர்	723
29	கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்)	100
30	கிளைச்சிறை, கடலூர்	143
31	கிளைச்சிறை, விருத்தாசலம்	30
32	கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை	24
33	பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி	15
34	கிளைச்சிறை, சிதம்பரம்	28
	விழுப்புரம் மாவட்டம்	
35	மாவட்டச்சிறை, விழுப்புரம்	200
36	கிளைச்சிறை, விழுப்புரம்	42
37	கிளைச்சிறை, திண்டிவனம்	29

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
38	பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி	80
	கள்ளக்குறிச்சி மாவட்டம்	
39	கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி	18
40	கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை	24
41	கிளைச்சிறை, திருக்கோவிலூர்	24
	சேலம் மாவட்டம்	
42	மத்திய சிறை, சேலம்	1431
43	மாவட்டச்சிறை, ஆத்தூர்	200
44	திறந்தவெளிச்சிறை, சேலம்	10
45	தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள்)	110
46	பார்ஸ்டல் பள்ளி, சங்கரி	27
47	கிளைச்சிறை, ஓமலூர்	48
	நாமக்கல் மாவட்டம்	
48	கிளைச்சிறை, நாமக்கல்	34
49	பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி	16
50	கிளைச்சிறை, ராசிபுரம்	24
51	கிளைச்சிறை, திருச்செங்கோடு	19
	தருமபுரி மாவட்டம்	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
52	மாவட்ட சிறை, தருமபுரி	200
53	கிளைச்சிறை, தருமபுரி	36
54	கிளைச்சிறை, அரூர்	48
	கிருஷ்ணகிரி மாவட்டம்	
55	கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்)	73
56	கிளைச்சிறை, ஊத்தங்கரை	16
57	கிளைச்சிறை, ஓசூர்	44
	கோயம்புத்தூர் மாவட்டம்	
58	மத்திய சிறை, கோயம்புத்தூர்	2124
59	பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர்	187
60	திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர்	100
61	கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	36
62	பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி	97
	ஈரோடு மாவட்டம்	
63	மாவட்டச் சிறை, கோபிசெட்டிபாளையம்	200

[2023 ஏப்ரல் 10

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
64	கிளைச்சிறை, ஈரோடு	35
65	கிளைச்சிறை, சத்தியமங்கலம்	16
66	கிளைச்சிறை, பவானி	24
67	கிளைச்சிறை, பெருந்துறை	8
	நீலகிரி மாவட்டம்	
68	கிளைச்சிறை, உதகமண்டலம்	35
69	கிளைச்சிறை, குன்னூர்	32
70	கிளைச்சிறை, கூடலூர்	28
	திருப்பூர் மாவட்டம்	
71	மாவட்டச்சிறை, திருப்பூர்	200
72	கிளைச்சிறை, அவினாசி	70
73	கிளைச்சிறை, திருப்பூர்	90
74	கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை	25
75	கிளைச்சிறை, தாராபுரம்	26
76	கிளைச்சிறை, பல்லடம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	24
	திருச்சி மாவட்டம்	
77	மத்திய சிறை, திருச்சி	2517

2023 ஏப்ரல் 10]

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
78	பெண்கள் தனிச்சிறை, திருச்சி	600
79	கிளைச்சிறை, மணப்பாறை	14
80	கிளைச்சிறை, முசிறி	17
81	கிளைச்சிறை, துறையூர்	17
82	கிளைச்சிறை, லால்குடி	23
	அரியலூர் மாவட்டம்	
83	பார்ஸ்டல் பள்ளி, அரியலூர்	21
84	கிளைச்சிறை, ஜெயங்கொண்டம்	19
	பெரம்பலூர் மாவட்டம்	
85	கிளைச்சிறை, பெரம்பலூர்	18
	கரூர் மாவட்டம்	
86	கிளைச்சிறை, கரூர்	36
87	கிளைச்சிறை, குளித்தலை	26
	புதுக்கோட்டை மாவட்டம்	
88	மாவட்டச்சிறை, புதுக்கோட்டை	245
89	பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை	200
90	கிளைச்சிறை, அறந்தாங்கி	28
91	கிளைச்சிறை, திருமயம்	14

[2023 ஏப்ரல் 10

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
92	கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	8
	தஞ்சாவூர் மாவட்டம்	
93	கிளைச்சிறை, திருவிடைமருதூர்	51
94	பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர்	87
95	கிளைச்சிறை, பாபநாசம்	46
96	கிளைச்சிறை, பட்டுக்கோட்டை	38
97	கிளைச்சிறை, கும்பகோணம்	44
	நாகப்பட்டினம் மாவட்டம்	
98	மாவட்டச்சிறை, நாகப்பட்டினம்	200
99	கிளைச்சிறை, சீர்காழி	28
100	கிளைச்சிறை, மயிலாடுதுறை	24
101	கிளைச்சிறை, தரங்கம்பாடி	12
	திருவாரூர் மாவட்டம்	
102	கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்)	20
103	கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி	28
104	கிளைச்சிறை, நன்னிலம்	24
105	கிளைச்சிறை, மன்னார்குடி	19
	மதுரை மாவட்டம்	
106	மத்திய சிறை, மதுரை	1252

2023 ஏப்ரல் 10]

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
107	பெண்கள் தனிச்சிறை, மதுரை	262
108	பார்ஸ்டல் பள்ளி, மேலூர்	48
109	கிளைச்சிறை, உசிலம்பட்டி	18
110	கிளைச்சிறை, திருமங்கலம்	25
	திண்டுக்கல் மாவட்டம்	
111	மாவட்டச்சிறை, திண்டுக்கல்	200
112	கிளைச்சிறை, வேடசந்தூர்	16
113	கிளைச்சிறை, பழனி	43
114	கிளைச்சிறை, கொடைக்கானல்	9
115	கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்)	36
	தேனி மாவட்டம்	
116	மாவட்டச்சிறை, தேனி	200
117	கிளைச்சிறை, உத்தமபாளையம்	21
118	கிளைச்சிறை, பெரியகுளம்	39
	சிவகங்கை மாவட்டம்	
119	கிளைச்சிறை, சிவகங்கை	20
120	கிளைச்சிறை, திருப்பத்தூர்	22
121	திறந்த வெளிச்சிறை, புரசடைஉடைப்பு	150

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	இராமநாதபுரம் மாவட்டம்	
122	மாவட்டச்சிறை, இராமநாதபுரம்	200
123	கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்)	18
124	மாவட்டச்சிறை, முதுகுளத்தூர்	21
125	கிளைச்சிறை, திருவாடனை	12
	விருதுநகர் மாவட்டம்	
126	மாவட்டச்சிறை, விருதுநகர்	200
127	கிளைச்சிறை, அருப்புக்கோட்டை	13
128	கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்	24
129	கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	29
	திருநெல்வேலி மாவட்டம்	
130	மத்திய சிறை, பாளையங்கோட்டை	1332
131	தனிக்கிளைச்சிறை கொக்கிரகுளம் (பெண்கள்)	84
132	கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்	16
133	பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி	107
	தென்காசி மாவட்டம்	
134	கிளைச்சிறை, தென்காசி	44

வ. எண்	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
135	கிளைச்சிறை, சங்கரன்கோவில்	12
	தூத்துக்குடி மாவட்டம்	
136	மாவட்டச்சிறை, பேரூரணி	200
137	கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்	72
138	கிளைச்சிறை, கோவில்பட்டி	42
139	கிளைச்சிறை, திருச்செந்தூர்	37
	கன்னியாகுமரி மாவட்டம்	
140	மாவட்டச்சிறை, நாகர்கோவில்	230
141	கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்)	24
142	கிளைச்சிறை, குழித்துறை	16
	மொத்தம்	**24,342**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 10

இணைப்பு-III

(157 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

சட்டம் என்பது நீதி நிருவாகத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் கொள்கைகளின் தொகுப்பாகும் என சர் ஜான் சால்மண்ட் அவர்கள் வரையறுக்கிறார்.

மக்கள் நல அரசு மற்றும் மக்கள் நல சமுதாயம் ஆகியவற்றில் மனிதனின் ஒவ்வொரு அலுவலிலும் சட்டமானது மிக முக்கியமானதொரு பங்கினை ஆற்றுகிறது. மேலும், சமூக—பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு சட்டமானது முக்கியமானதொரு கருவியாகப் பயன்படுகிறது. இன்று சட்டம் என்பது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டுமே கருதப்படாமல் சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் கருதப்படுகிறது.

அடிப்படை உரிமைகள், அரசின் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் ஆகியன அனைத்தும் அரசமைப்புச் சட்டத்தின் பகுதிகளாக இருப்பதுடன் சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படையில் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் உள்ள சமூக முறையமைவினை அமைப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மக்களாட்சி சமுதாயத்தின் வாழ்வில் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சமத்துவம் பேணப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டமானது அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதாகவும் குடிமக்களுக்கு சட்டமுறையிலான பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

சட்டம் என்பது தற்போதைய நடைமுறைக்கு ஏற்ற சட்டமாக இருத்தல் வேண்டும். மேலும், சட்டமானது அதனை இயற்றும் சட்டமன்றத்தின் சட்டமியற்று அதிகார வரம்பிற்குள் அமைவதாக இருப்பது மட்டுமின்றி அது அடிப்படை உரிமைகள் ஏதொன்றுக்கும் முரணாக இல்லாத வகையிலும் இருத்தல் வேண்டும்.

2023 ஏப்ரல் 10]

சட்டமானது சட்டத்தை உருவாக்குவதில் உள்ள மரபு வழக்காறுகளைப் பின்பற்றுதல் வேண்டும். மேலும், அது நடத்தையைக் கட்டுப்படுத்துகிற விதியாகவும் இருத்தல் வேண்டும். நமது சமுதாயத்தை சிறந்த வளர்ச்சியின் மூலமாக சீர்மிகு நாகரிகமாக மாற்றுவதற்கான ஒரு கருவியாக சட்டம் திகழ்கிறது.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளை கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

தமிழ்நாடு அரசின் ஆலோசனைத் துறைகளில் சட்டத் துறையும் ஒன்றாகும். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், அதற்கான அவசியம் எழும்போதெல்லாம், உகந்த சட்டங்களை இயற்றுவதிலும் சட்டத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களிடையே சமூக நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்த புதுமையான சட்டங்களை இயற்றுவதிலும் இத்துறை இன்றியமையாதது. நமது தெய்வப்புலவர் திருவள்ளுவர் பின்வரும் திருக்குறளில் நிரந்தரமாக அரசாள்பவரது பண்புகளை வகுத்துள்ளார்:

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு."

—குறள் 383

காலந்தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும் என்பதை மேற்கண்ட குறள் குறிப்பிடுகிறது.

மேற்கூறிய பண்புகளை சிரமேற்கொண்டு, சட்டத் துறையானது நமது அரசமைப்பின் உயரிய இலட்சியங்களை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான சட்டங்களை இயற்ற அயராது உழைப்பதன் வாயிலாக, நமது மாநிலத்தில் சமூக நீதி, மதச்சார்பின்மை, சமத்துவம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்ய உதவுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறைகளுடன்

ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்ட வடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை, சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்புச் சட்டத்தின் 213-வது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப சட்டத் துறை உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன் வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து ஆளுநரால் அது பிரகடனப்படுத்தப்படும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தில் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் சட்ட விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதும் சட்டத் துறையின் முக்கிய பணியாகும்.

இவை தவிர, சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்டவகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளில், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:—

1. சட்டக் கல்வி.
2. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.
3. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.
4. மாநில சட்ட ஆணையம்.
5. மாநில சட்ட (ஆட்சிமொழி) ஆணையம்.
6. சான்றுறுதி அலுவலர்கள்.

2023 ஏப்ரல் 10]

சட்டக் கல்வி

சட்டக் கல்வித் துறையானது, தமிழ்நாட்டில், 1953 ஆம் ஆண்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்டதிலிருந்து, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, சட்டக் கல்வி இயக்குநரகம் தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும், 1979-1980 ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1996-1997 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர், 2006-ல் அறிவிக்கப்பட்டது. மேலும், 2008-2009 ஆம் கல்வியாண்டில், வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2017-2018 ஆம் கல்வியாண்டில் விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

நீதியரசர் திரு. ப. சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலிருந்து செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள சட்டக் கல்லூரி வளாகத்தில் 5 ஆண்டு இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகளும், திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள சட்டக் கல்லூரி வளாகத்தில் 3 ஆண்டு இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகளும் 2018-2019 ஆம் ஆண்டு முதல் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. மேலும்,

2019-2020 ஆம் கல்வியாண்டில் சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது, இம்மாநிலத்தில் பதினைந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 13,986. இவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:—

அட்டவணை

வ. எண்	**சட்டக் கல்லூரியின் பெயர்**	**மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை**
1.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (மூன்றாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)*	*1,123*
2.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம். (ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்பு மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)*	*1,265*
3.	*அரசு சட்டக் கல்லூரி, மதுரை. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)*	*1,478*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,480
5.	அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,480
6.	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,460
7.	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,100
8.	அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	680
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	720

[2023 ஏப்ரல் 10

வ. எண்	சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	680
11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	680
12.	அரசு சட்டக் கல்லூரி, சேலம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
13.	அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
14.	அரசு சட்டக் கல்லூரி, தேனி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
15.	அரசு சட்டக் கல்லூரி, காரைக்குடி (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	160
மொத்தம்		13,986

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளை தவிர்த்து, ஏனைய அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் அரசு

சட்டக் கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.101.55 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.92.31 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

காரைக்குடி அரசு சட்டக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறையின் திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி ஒப்பளிப்பு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காரைக்குடி அரசு சட்டக் கல்லூரிக்கு தொடரும் மற்றும் தொடரா செலவினமாக ரூ.92.01 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதி வசதிகள் உள்ளன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூரில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதி மட்டும் உள்ளது. மேற்சொன்ன நான்கு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 186 உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்திட ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு 111 உதவிப் பேராசிரியர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் 2019, 2020, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டனர். மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மற்றும்

திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கூடுதலாக முதுநிலை (எல்.எல்.எம்.) சட்டப் படிப்புகள் 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன. 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்டப் படிப்புகளுக்கான (எல்.எல்.எம்.) மாணவர் சேர்க்கை இணைய வழியில் (Online) நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகளில் 40 மாணாக்கர் எண்ணிக்கையுடன்கூடிய பாடப்பிரிவுகளாக பல்வேறு பாடப்பிரிவுகளின்கீழ் முதுநிலை சட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்டப் படிப்புகள் (2022-2023)

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்.எல்.எம். பாடப்பிரிவு
1.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர்.	(1) வணிகச் சட்டம் (2) குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம் (3) சொத்துரிமைச் சட்டம் (4) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்
2.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம்.	(1) சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றச் சட்டங்கள் (2) குடும்பச் சட்டங்கள்
3.	அரசு சட்டக் கல்லூரி, மதுரை.	(1) சொத்துரிமைச் சட்டம் (2) சர்வதேச சட்டம் மற்றும் நீதி
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	(1) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம் (2)அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்.எல்.எம். பாடப்பிரிவு
5.	*அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர்.*	*(1) வணிகச் சட்டம்* *(2) வரிச் சட்டங்கள்*
6.	*அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி.*	*(1) அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகள்* *(2) வணிகச் சட்டம்*
7.	*அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.*	*(1) குற்றவியல் சட்டம் மற்றும் இணையக் குற்றம்* *(2) அறிவுசார் சொத்துரிமை சட்டம்*
8.	*அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.*	*அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்*
9.	*அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்.*	*(1) தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு சட்டங்கள்* *(2) குடும்பச் சட்டங்கள்*
10.	*அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி.*	*பெரு நிறுவன நிருவாகச் சட்டங்கள் மற்றும் நிதி*
11.	*அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம்.*	*அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்*

அரசு சட்டக் கல்லூரிகளில் இளநிலை சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் கல்வியாண்டுக்கான சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களை தெரிவு செய்திட மொத்தமுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்துவதற்கென ரூ.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 10

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் உள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளிலும் தமிழ் வழியில் சட்டப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் மொழி வாயிலாக சட்டப் படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/- வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு சட்டக் கல்லூரி நூலகங்களில் மாணவர்களது பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்டத் தரவு தளங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்யும் பொருட்டு, சிறப்பு நேர்வாக 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கென ரூ.3 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் 2022-2023 ஆம் கல்வியாண்டுக்கென புதிதாக தொடங்கப்பட்ட காரைக்குடி அரசு சட்டக் கல்லூரி உட்பட 15 அரசு சட்டக் கல்லூரிகளுக்கு ரூ.1 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்கான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி ஆகியவற்றை நடத்திட ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதியில், உதவிப் பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியினை நடத்திட தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.7 இலட்சமும், ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தினை நடத்திட சட்டக் கல்வி இயக்ககத்துக்கு ரூ.7 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களது மென்திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத்திடல் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் நிறுவுவதற்கு ரூ.28 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலகக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.13.02 கோடி நிதி ஒப்பளிப்பு

2023 ஏப்ரல் 10]

*வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (*RO System for purification of drinking water*) நிறுவிடும் பொருட்டு ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கால்பந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுத் திடல் நிறுவுவதற்காக, ரூ.1.57 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.*

தமிழ்நாட்டில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்பு மற்றும் 3 ஆண்டு சட்டப் படிப்பு முடித்த 17 இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.20,000/ உதவித்தொகையுடன் தன்னார்வப் பயிற்சி திட்டம் சட்டத் துறையில் செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மொத்தம் 15 சட்டப் பட்டதாரிகளுக்கு தன்னார்வப் பயிற்சி வழங்கப்படுகிறது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கித் திட்டம் தொடங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக, சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டி நிறைந்த உலகில் வெற்றி பெற்று தனித்துவம் பெறுவதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மாநிலச் சட்டத்தின்மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயல்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி தொடர்வண்டி நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில்,

[2023 ஏப்ரல் 10

ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்படும் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்பு மாணவர்களுக்கென ரூ.13 கோடியில் புதிய கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டக் கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப் பள்ளி வாயிலாக தொடங்கி, மூன்றாண்டு எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சட்டப் படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.,எல். எல்.பி. (ஹானர்ஸ்), பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்), பி.பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்) ஆகிய இளநிலை சட்டப் படிப்புகளில் மொத்தம் 3,484 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகம் முதுநிலை சட்டப் படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது.

தேசிய தர மதிப்பீட்டுக் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு B++ தரச்சான்றிதழினை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் 25-வது ஆண்டை நிறைவு செய்து, 20-9-2022 அன்று தனது வெள்ளிவிழாவினை கொண்டாடியது. இப்பொன்னான நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும், 2010-2011 ஆம் கல்வியாண்டு முதல், சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் நடப்புச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான தொகுப்பு நல்கை நிதியாக ரூ.10.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் செவியுணர் காணொலி ஊடக மையம் அமைத்திட ரூ.46.58 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும் மற்றும்

2023 ஏப்ரல் 10]

பெருங்குடி வளாகத்தில் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிட ரூ.1.67 கோடிக்கு நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன் சீர்மிகு சட்டப் பள்ளிமூலம் இதுவரை 102 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 60 மாணவர்கள் முழு நேர அடிப்படையிலும், 196 மாணவர்கள் பகுதி நேர அடிப்படையிலும் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் இப்பல்கலைக்கழகம், முதன்முறையாக தமிழ்மொழியில் ஒரு சட்ட இதழை வெளியிட்டுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் சட்டம், குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம், இணையவெளி சட்டம் மற்றும் நீதி மற்றும் நூலகத் துறைகளின் சார்பாக சக மதிப்பாய்வு செய்யப்பட்ட சட்ட இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், எழுதுதல் மற்றும் சட்ட வரைவு திறன்களில் கவனம் செலுத்தும் வகையில் இளம் வயதினரிடம் ஆராய்ச்சி அறிவைப் பரப்புவதற்காகவும் சட்ட இணையவழி இதழ் (e—Journal) ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஊட்டுவதற்காக, மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புடன்கூடிய சட்ட அறிவு செயல்முறை மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. குற்றவியல் சட்டப் பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வண்ணம், தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆய்வு

[2023 ஏப்ரல் 10

செய்வதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது:

(1) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்;

(2) தி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், மும்பை;

(3) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், மும்பை;

(4) டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சயின்சஸ், மும்பை;

(5) ஏ.ஐ.ஆர். லாவா அகாடமி அண்ட் ரிசர்ச் சென்டர், நாக்பூர் (ஏ.எல்.ஏ.ஆர்.சி.);

(6) டிரான்ஸ்கிரிப்ட்ஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், தரமணி, சென்னை;

(7) கன்சோர்டியம் பார் எஜுகேசனல் கம்யூனிகேசன், புது டெல்லி;

(8) இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா (ஐ.சி.எஸ்.ஐ.);

(9) ஸ்போக்கன் டுடோரியல்ஸ், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, மும்பை;

(10) சைல்டு அண்டு அடோலசண்ட் ஃபவுண்டேசன் ஆஃப் இந்தியா (சிஏஎப்ஐ) மற்றும் இன்ஸ்டிடியூட் ஆப் சைல்டு டெவலப்மெண்ட் எஜுகேசன் ரிசர்ச் அண்டு டெக்னாலஜி (ஐ.சி.டி.ஈ.ஆர்.ட்டி.) ; மற்றும்

(11) குஜராத் தேசிய சட்டப் பல்கலைக்கழகம், காந்தி நகர், குஜராத்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் "ஆல் இந்தியா ரிப்போர்ட்டர் லீகல் எஜுகேஷன் சப்போர்ட் சூட் ப்ராஜெக்ட்" தொடங்கப்பட்டுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுள்ள சட்டக்

2023 ஏப்ரல் 10]

கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வு முறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

அரசு சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கலந்தாய்வு உட்பட அனைத்தும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், இணைய வழியாக, http://www.tndalu.ac.in *எனும் வலைதளம்மூலம் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் நடைபெற்று வருகிறது.*

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டில் தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, மாநிலச் சட்டத்தின்மூலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.79.22 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய அளவில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, சட்டம் பற்றிய அறிவு மற்றும் கற்றல், சட்ட செயல்முறைகள், வாதிடுதல் (வக்காலத்து) மற்றும் நீதி நிருவாகத் திறன் ஆகியவற்றை பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

*தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 138 இடங்களில் ஐந்தாண்டு பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம். ஆகிய படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர் சேர்க்கையானது பொது சட்டப் படிப்பு சேர்க்கைத் தேர்வு (*Common Law Admission Test—CLAT*)மூலம் நடைபெறுகிறது.*

2022-2023 ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப் படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

வ. எண்	படிப்பு	சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	
1.	பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	27
		அகில இந்திய ஒதுக்கீடு	30
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	03
		மொத்தம்	60
2.	பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	25
		அகில இந்திய ஒதுக்கீடு	30
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	55
3.	எல்.எல்.எம்.	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	6
		அகில இந்திய ஒதுக்கீடு	08
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	14
		மாணவர்களின் மொத்த எண்ணிக்கை	129

இதுவரையில் இப்பல்கலைக்கழகத்தில், தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் மட்டுமே தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்பட்டு வந்தன. தற்போது, 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் "அகில இந்தியப் பிரிவு" மாணவர் சேர்க்கையிலும் தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் (69%) பின்பற்றி

2023 ஏப்ரல் 10]

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50%, பட்டியலினத்தவருக்கு 18% மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு 1% இடங்களை ஒதுக்கி இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புக்கான மாணவர் சேர்க்கையினை நடத்திட அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வாறே, மாணவர் சேர்க்கையும் நடைபெற்று வருகிறது.

2020-2021 ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.27 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், இணைய சட்டங்கள் மற்றும் இணைய பாதுகாப்பு ஆகியவை தொடர்பான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் பயிற்சி மையம் (Centre for Research, Development and Training in Cyber Laws and Cyber Security) மற்றும் வணிகம் மற்றும் மனித உரிமைகள் மையம் (Centre for Business and Human Rights) ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுவதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் 14 ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	**ஆராய்ச்சி மையங்களின் பெயர்கள்**	**தொடங்கப்பட்ட ஆண்டு**
1.	சென்டர் ஃபார் காம்பெடிசன் லா (சிசிஎல்)	2017
2.	சென்டர் ஃபார் ரிசர்ச் அண்ட் ரைட்டிங் (சிஆர்டபிள்யூ)	2018
3.	சென்டர் ஃபார் லேபர் அண்ட் டெவலப்மென்ட் ஸ்டடீஸ் (சிஎல்டி)	2018
4.	லீகல் சென்டர் ஃபார் விமன்ஸ் வெல்ஃபேர்	2020

5.	லீகல் சென்டர் ஃபார் ஹிஸ்டரி ஆஃப் சௌத் இந்தியா	2020
6.	சென்டர் ஃபார் லா அண்ட் அக்ரிகல்சர்	2021
7.	சென்டர் ஃபார் ஸ்டடி அண்ட் அட்வகேஸி ஆஃப் ஹியூமன் ரைட்ஸ்	2021
8.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் விக்டிமாலஜி	2021
9.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் ஆக்சஸ் டு ஜஸ்டிஸ்	2021
10.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் ஆல்டர்நேட் டிஸ்பியூட் ரெசல்யூசன்	2021
11.	சென்டர் ஃபார் இன்வஸ்ட்மென்ட் லாஸ்	2021
12.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் என்விரான்மென்டல் அண்ட் நேசுரல் ரிசோர்ஸஸ் லா	2021
13.	சென்டர் ஃபார் பிஸினஸ் அண்ட் ஹியூமன் ரைட்ஸ்	2022
14.	சென்டர் ஃபார் ரிசர்ச், டெவலப்மென்ட் அண்ட் ட்ரைனிங் இன் சைபர் லாஸ் அண்ட் சைபர் செக்யூரிட்டி	2022

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது :—

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புது டெல்லி;

2023 ஏப்ரல் 10]

(2) இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப் பள்ளி, பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா, புது டெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புது டெல்லி;

(5) தேசிய தொழில்நுட்பக் கழகம், திருச்சிராப்பள்ளி; மற்றும்

(6) வைகாடோ பல்கலைக்கழகம், நியூசிலாந்து.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது :—

(i) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு, புது டெல்லி;

(ii) இந்திய சமூக அறிவியல் கழகம், அலகாபாத்;

(iii) சாஸ்திரி இந்தோ—கனடியன் அமைப்பு, புதுடெல்லி;

(iv) ஆசிய சட்ட அமைப்பு, சிங்கப்பூர்; மற்றும்

(v) நூலக மேம்பாட்டு இணைவமைவு (DELNET), புது டெல்லி.

மாநில சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையம், உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில் 15-6-2017 அன்று மீள அமைக்கப்பட்டது. அவ்வாறு மீள அமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். மாநில சட்ட ஆணையத்தின் தலைவர், 19-6-2017 அன்று பதவியேற்றார். மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் பதவிக் காலமானது 18-6-2020 அன்றுடன் நிறைவுற்ற நிலையில் அரசானது மேற்சொன்ன சட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தினை 19-6-2020-லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

ஆங்கிலேய ஆட்சியின்போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதே மாநில சட்ட ஆணையத்தின் பணியாகும். மேலும், ஆய்வு செய்யப்பட்ட சட்டங்கள் இன்றைய

சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் ஆணையம் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கும்.

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கின்றனவா எனவும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். மேலும்,

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;

(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகள் மற்றும் மைய—மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும்; மற்றும்

(உ) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் உள்ள மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

மேலும், 10-7-2017 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில், சிறந்த நிர்வாகத்திற்கு, திட்டக் குழுவின் (NITI Aayog) பரிந்துரையின் அடிப்படையில் "தமிழ்நாட்டில் உள்ள சட்டங்களை செம்மைப்படுத்துதல்" என்ற பொருள் மாநிலச் சட்ட ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறு 21-9-2017 நாளிட்ட கடிதம்மூலம் கோரப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

அதற்கேற்ப, தற்போதைய ஆணையம் 1,770 சட்டங்களின்மீது இதுவரை 56 அறிக்கைகளை (13-வது அறிக்கை முதல் 68-வது அறிக்கை வரை) அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கைகளில், ஆணையமானது,

(i) 179 முதன்மைச் சட்டங்கள் மற்றும் 1568 திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்யவும்;

(ii) 20 சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யவும்; மற்றும்

(iii) 3 சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் மேற்கூறிய பரிந்துரைகளின் அடிப்படையில்,

(i) 11 முதன்மை சட்டங்கள் மற்றும் 809 திருத்தச் சட்டங்களும் நீக்கறவு செய்யப்பட்டுள்ளன.

(ii) 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் நிலுவை தொகைகள் வசூலித்தல் சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(iii) 3 சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்ற, அச்சட்டங்களுக்கு தொடர்புடைய துறைகளுக்கு சட்ட ஆணையத்தின் பரிந்துரை அனுப்பப்பட்டு, குறிப்பு கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக அத் துறைகளின் குறிப்பு பெறப்பட்டபின் மேல்நடவடிக்கை இத்துறையில் எடுக்கப்படும்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்

தமிழ்நாடு மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம், 29-8-2018 ஆம் நாளில் மீண்டும் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் தலைவராக சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. பொன்.கலையரசன் அவர்கள் 24-12-2018 அன்று நியமனம் செய்யப்பட்டு 27-12-2018 அன்று பதவியேற்றார்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பணிகளானது :—

(i) தமிழில் சட்ட சொற்களஞ்சியம் (Law lexicon) தயாரித்து அச்சிடுவது;

(ii) மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்;

(iii) ஒன்றிய அரசின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழில் மொழிபெயர்த்தல்; மற்றும்

(iv) மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்.

இவ்வாணையமானது, இந்திய அரசமைப்பின் திருத்திய பதிப்பினை (ஜனவரி 31, 2021 வரை திருத்தம் செய்யப்பட்டது) அனைத்துத் திருத்தங்களும், கலைச் சொற்களும் சேர்க்கப்பட்டு இருமொழிப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. இந்திய அரசின், சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் இந்திய அரசமைப்பின் திருத்திய பதிப்பை இருமொழிப் பதிப்பாக 3,000 படிகள் நூலாக வெளியிட ஆகும் செலவினத் தொகையான ரூபாய் 48,34,682/-ஐ (நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று எண்பத்து இரண்டு) தமிழக அரசிற்கு வழங்கியுள்ளது.

மேலும், 25 மையச் சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்றதைத் தொடந்து, அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து 6 மையச் சட்டங்கள் ஆணையத்தால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், 28 மையச் சட்டங்கள், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்றதைத் தொடர்ந்து, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெறும் பொருட்டு நீல நிறத்தாளில் அச்சிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 6 மையச் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, இவ்வாணையம் மற்றும் மாநில அரசின் ஒப்புதல் பெற்ற பின்பு இந்திய அரசின் பணிமக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பு, 1860-ஐ நாளது தேதி வரையிலான அனைத்து திருத்தங்களையும் உள்ளடக்கி நூலாக வெளியிடும் பணியும் மற்றும் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத் தொகுப்பு, 1973-ன் திருத்திய பதிப்பு வெளியிடுவதற்கான மொழிபெயர்ப்பு பணியும் இவ்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*புதிய சட்டச் சொற்களஞ்சியம் (*Law Lexicon*) தயார் செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஆங்கில அகர வரிசை '*P*' வரை 28,500-க்கும் மேற்பட்ட சொற்கள் சேகரிக்கப்பட்டு அவற்றை தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

சான்றுறுதி அலுவலர்கள்

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச்சட்டம் எண் 53/1952) மாற்று முறை ஆவணங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளை சான்றளிப்பதற்கும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர்கள் அமர்த்தப்படுவர். 31-1-2023 அன்று உள்ளபடி மாநில அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் மொத்த எண்ணிக்கை 2,318 ஆகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையினர் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான திறன்களை பாதிக்காத வண்ணம், நமது இன்றைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையிலான வளர்ச்சியாகும். 17 இலக்குகளையும், 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டு 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சட்டக் கல்வி பயிலும் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் போட்டிகள் நிறைந்த வழக்கறிஞர் தொழிலில் சிறந்து விளங்கவும், ஒன்றிய, மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கு பெற்று வெற்றிபெற உதவும் விதமாகவும் தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் அனைத்து அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் ஆங்கில திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி, அனைவரையும்

உள்ளடக்கிய சமவாய்ப்புள்ள சமத்துவமான தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுவதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல் என்ற நீடித்த வளர்ச்சி இலக்கு எண் 4-ன் (தரமான கல்வி) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது. இத்துறையின்கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்கு 16-ன் (அமைதி, நீதி மற்றும் வலுவான அரசு நிறுவனங்கள்) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது.

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து துறைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாக உள்ள இத்துறை, பிற துறைகள் அவற்றின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உருவாக்கும் கொள்கைகளுக்கு சட்ட வடிவம் கொடுப்பதுடன் அவை அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசமைப்பின் கூறுகளுக்கு இணங்கி உருவாக்கப்படுவதை உறுதிசெய்கிறது. மேலும், இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையப்படுவதற்கு உறுதிசெய்வதில் பிற துறைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

இணைப்பு-IV

(290 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

"நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று"

(குறள்—641)

சொல்வன்மைக்கு உள்ள சிறப்பு வேறு எதற்குமில்லை. எனவே, அது செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வமாகும்.

— திருக்குறளுக்கான முத்தமிழறிஞர் கலைஞர் உரை

முன்னுரை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், அனைத்துத் துறைகளின் சீரிய செயல்பாடுகளையும் சொல்வன்மையால் மக்கள் விரும்பிக் கேட்டு, அவற்றைப் படிக்கத் தூண்டும் சிறந்த செல்வமாகத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை திகழத் தொடங்கியது.

தமிழ்நாடு அரசு, மக்களுக்காகச் செயல்படுத்தும் அனைத்து நலத் திட்டங்களையும் செய்திகளாகப் படித்துத் தெரிந்துகொள்ளும் வகையில், பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாகக் கொண்டு சேர்க்கும் பணிகளைச் செய்து வரும் துறையே நமது செய்தி மக்கள் தொடர்புத் துறையாகும்.

மக்களாட்சி உருவாக்கப்பட்ட காலம் முதல், அரசின் ஆக்கப்பூர்வமான நல்ல பல திட்டங்களை, அறிவிப்புகளை அடித்தள மக்களின் பார்வைக்குக் கொண்டு சேர்க்கும் ஈடு இணையற்ற துறையாகச் செய்தி மக்கள் தொடர்புத் துறை திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், நலத் திட்டங்கள், அறிவிப்புகள், அரசாணைகள் முதலியவற்றைத் தமிழ்நாட்டின்

கடைக்கோடி மக்களுக்கும் பத்திரிகை, ஊடகம் மற்றும் சமூக ஊடகப் பிரிவுகள் துணையோடு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகக் கொண்டு சேர்ப்பதில் முனைந்து செயல்படுகிறது.

“ஓய்வை நான் ஒருபோதும் விரும்பியது இல்லை” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூற்றுக்கேற்ப, உழைப்பு, உழைப்பு, உழைப்பு, என்பதையே தன் வாழ்வாகக் கொண்டு உங்களுக்காகத் தொடர்ந்து உழைப்பேன்; உழைத்துக் கொண்டே இருப்பேன் என்று கூறி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலன் காக்கும் பல்வேறு நலத் திட்டங்களை ஒவ்வொரு நாளும் அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறாக ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் மக்கள் நலத் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் விவரங்களையும், தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்திடும் சீரிய பணிகளையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓய்வறியா உழைப்பால் மேற்கொள்ளப்பட்டு வரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிப் பணிகள் அனைத்தையும் மக்களுக்கு உடனுக்குடன் விழிப்புணர்வூட்டுவதிலும் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை தமது பல்வேறு பிரிவுகளின் வாயிலாகத் திறம்பட செயலாற்றி வருகிறது.

நினைவகங்கள்

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு பெருமையினைத் தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், விடுதலைக்கு வித்திட்ட தியாகிகள், சமூகநீதிக் கருத்துகளை ஊக்குவித்த தலைவர்கள், கவிஞர்கள், இசை மேதைகள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தலைவர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வண்ணம், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 81 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 2 நினைவுச் சின்னங்கள், ஒரு நினைவு வளைவு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 10]

தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
சென்னை மாவட்டம்		
1	பேரறிஞர் அண்ணா நினைவிடம் —அருங்காட்சியகம்	மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை
2	புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம்	மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை
3	காந்தி மண்டபம்	கிண்டி, சென்னை
4	பெருந்தலைவர் காமராஜர் நினைவகம்	கிண்டி, சென்னை
5	மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்	கிண்டி, சென்னை
6	பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம்	கிண்டி, சென்னை
7	வ.உ.சி. செக்கு மண்டபம்	கிண்டி, சென்னை
8	மகாகவி பாரதியார் நினைவு இல்லம்	துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை
9	பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம்	திருமலைச் சாலை, தியாகராயர் நகர், சென்னை
10	வள்ளுவர் கோட்டம்	நுங்கம்பாக்கம், சென்னை
11	மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம்	கிண்டி, சென்னை
12	தியாகிகள் மணிமண்டபம்	கிண்டி, சென்னை
13	இரட்டைமலை சீனிவாசன் நினைவகம்	கிண்டி, சென்னை

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
14	கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம்	டாம்ஸ் சாலை, புதுப்பேட்டை, சென்னை
15	சிந்தனைச் சிற்பி ம. சிங்கார வேலர்— சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம் மணி மண்டபங்கள் (ம) நூலகம்	இராயபுரம், சென்னை
16	நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபம்	அடையாறு, சென்னை
17	புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம்	மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை
18	அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்	இராஜா அண்ணாமலைபுரம், சென்னை
19	முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்	அண்ணா நினைவிட வளாகம், காமராஜர் சாலை, சென்னை
கோயம்புத்தூர் மாவட்டம்		
20	உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம்	வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்
கடலூர் மாவட்டம்		
21	சுவாமி சகஜானந்தா மணிமண்டபம்	சிதம்பரம், கடலூர் மாவட்டம்
22	இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம்	மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
தருமபுரி மாவட்டம்		
23	*வள்ளல் அதியமான் கோட்டம்*	*தருமபுரி, தருமபுரி மாவட்டம்*
24	*தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்*	*பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்*
25	*பாரத மாதா நினைவாலயம்*	*பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்*
திண்டுக்கல் மாவட்டம்		
26	*விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம்*	*விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம்*
27	*மாமன்னர்கள் ஹைதர்அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம்*	*அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம்*
ஈரோடு மாவட்டம்		
28	*பெரியார்—அண்ணா நினைவகம்*	*ஈரோடு, ஈரோடு மாவட்டம்*
29	*தீரன் சின்னமலை மணிமண்டபம்*	*ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்*
காஞ்சிபுரம் மாவட்டம்		
30	*பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்*	*சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்*
கன்னியாகுமரி மாவட்டம்		
31	*பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம்*	*நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்*
32	*காந்தி நினைவு மண்டபம்*	*கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்*

[2023 ஏப்ரல் 10

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
33	பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம்	கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்
34	சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம்	இடலாக்குடி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
35	மார்ஷல் நேசமணி மணிமண்டபம்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
கிருஷ்ணகிரி மாவட்டம்		
36	மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம்	தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்
மதுரை மாவட்டம்		
37	தியாக சீலர் கக்கன் மணிமண்டபம்	தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்
38	தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம்	திருமங்கலம், மதுரை மாவட்டம்
39	பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம்	விளாச்சேரி, மதுரை மாவட்டம்
40	மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம்	சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்
41	பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம்	உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
மயிலாடுதுறை மாவட்டம்		
42	தில்லையாடி வள்ளியம்மை நினைவகம்	தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம்
43	தமிழிசை மூவர் மணிமண்டபம்	சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
நாமக்கல் மாவட்டம்		
44	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம்	நாமக்கல், நாமக்கல் மாவட்டம்
45	அல்லாள இளைய நாயகர் குவிமாடம்	ஜேடர்பாளையம், நாமக்கல் மாவட்டம்.
சேலம் மாவட்டம்		
46	விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம்	சங்ககிரி, சேலம் மாவட்டம்
47	புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம்	சேலம், சேலம் மாவட்டம்
சிவகங்கை மாவட்டம்		
48	கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம்	காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
49	தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்	குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
50	மருதுபாண்டியர் நினைவு மண்டபம்	திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
51	வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம்	சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்
தென்காசி மாவட்டம்		
52	தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம்	செங்கோட்டை, தென்காசி மாவட்டம்

[2023 ஏப்ரல் 10

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
53	பூலித்தேவன் நினைவு மாளிகை	நெற்கட்டும்செவல், தென்காசி மாவட்டம்
தஞ்சாவூர் மாவட்டம்		
54	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம்	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
55	பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம்	ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
திருச்சி மாவட்டம்		
56	வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம்	வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
திருநெல்வேலி மாவட்டம்		
57	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம்	திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்
58	தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம்	இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம்
59	விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம்	பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
திருப்பூர் மாவட்டம்		
60	திருப்பூர் குமரன் நினைவகம்	திருப்பூர், திருப்பூர் மாவட்டம்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
61	பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம்	உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்
திருவாரூர் மாவட்டம்		
62	தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம்	உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்
63	தியாகி பி. சீனிவாசராவ் நினைவு மண்டபம்	திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்
64	மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம்	திருவாரூர், திருவாரூர் மாவட்டம்
தூத்துக்குடி மாவட்டம்		
65	மகாகவி பாரதியார் மணிமண்டபம்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
66	மகாகவி பாரதியார் இல்லம்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
67	கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் இல்லம்	ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
68	வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம்	கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம்
69	சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம்	கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம்
70	சுதந்திரப் போராட்டவீரன் வெள்ளையத்தேவன் நினைவகம்	வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்
71	அமுதகவி உமறுப்புலவர் நினைவகம்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
72	வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம்	கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்
73	கி. ராஜநாராயணன் அரங்கம்	கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.
74	டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம்	திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்
வேலூர் மாவட்டம்		
75	முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமராஜ சிங்கன் நினைவகம்)	வேலூர், வேலூர் மாவட்டம்
விழுப்புரம் மாவட்டம்		
76	ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம்	ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம்
விருதுநகர் மாவட்டம்		
77	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
78	பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
79	தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
கேரள மாநிலம்		
80	தந்தை பெரியார் நினைவகம்	வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
உத்திரப்பிரதேசம் மாநிலம்		
81	பாரதியார் நினைவு இல்லம்	வாரணாசி, உத்திரப்பிரதேசம் மாநிலம்.

அரங்கங்கள்

வ. எண்	அரங்கம்	அமைவிடம்
1	மூதறிஞர் இராஜாஜி மண்டபம்	ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை
2	கலைவாணர் அரங்கம்	ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை
3	அண்ணா கலையரங்கம்	வேலூர், வேலூர் மாவட்டம்
4	மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம்	கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

நினைவுத் தூண்கள்

வ. எண்	நினைவுத் தூண்	அமைவிடம்
1	“வெள்ளையனே வெளியேறு” இயக்கப் பொன்விழா நினைவுத் தூண்	காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
2	குடியரசு பொன்விழா நினைவுத் தூண்	காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை
3	சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண்	வேலூர், வேலூர் மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 10

வ. எண்	நினைவுத் தூண்	அமைவிடம்
4	*பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண்*	*விருதுநகர், விருதுநகர் மாவட்டம்*
5	*இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண்*	*விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம்.*

நினைவுச் சின்னம்

வ. எண்	நினைவுச் சின்னம்	அமைவிடம்
1	*வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம்*	*சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்*
2	*சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்*	*போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை*

நினைவு வளைவு

வ. எண்	நினைவு வளைவு	அமைவிடம்
1	*எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவு வளைவு*	*மெரினா கடற்கரை, இராஜாஜி சாலை, சென்னை*

மொழிப்போர் தியாகிகளை கௌரவித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மொழிப்போர் தியாகிகள் தினமான 25-1-2023 அன்று, தமிழ்மொழி காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளை நினைவுகூரும் வகையில் கடந்த ஆண்டைப் போல, இந்த ஆண்டும் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

உத்தமர் காந்தியடிகளுக்கு திருவுருவச்சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15-8-2022 அன்று எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "விடுதலைப் போரில் தமிழகம்" புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

நிறைவு பெற்ற பணிகள்

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 28-5-2022 அன்று மேனாள் துணைக் குடியரசுத் தலைவர் திரு. எம். வெங்கையா நாயுடு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் மணிமண்டப வளாகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலை 27-10-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மறைந்த எழுத்தாளர் கி. ராஜநாராயணன் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையிலும், அவருடைய படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவருடைய புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றை மாணவர்களும், பொதுமக்களும் அறிந்துகொள்ளும் வகையில், கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ரா. அவர்களுக்கு, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் அரசின் சார்பில் திருவுருவச் சிலை, நூலகத்துடன்கூடிய நினைவரங்கம் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு 2-12-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

[2023 ஏப்ரல் 10

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு அவரது பிறந்த நாளான 11-12-2022 அன்று உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் பாரதியார் வாழ்ந்த வீடு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு, அவ்வில்லத்தில் அன்னாரது மார்பளவு சிலை அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில், செய்தித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், அரசுச் செயலாளர் அவர்களும், அரசு அலுவலர்களும் வாரணாசியில் நேரில் கலந்துகொண்டோம்.

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ரூபாய் 26 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில், குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை நிறுவப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு 28-1-2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆங்கிலேயர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்து போராடியதால் 1920 ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சார்ந்த 16 தியாகிகளைக் கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து நூறாண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், ரூபாய் ஒரு கோடியே 47 இலட்சத்தில் பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம் கட்டப்பட்டு 14-2-2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2021–2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டு 110 விதியின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்—தொடர் நடவடிக்கை விவரங்கள்

- *தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும் பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத்*

தலைமுறையும் அறியக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன், சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 39.00 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவிடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய 175-வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது சமூகப் பணியைப் போற்றும் விதமாகவும் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைத்திட ரூபாய் 2 கோடியே 48 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவு பெறும் தருவாயில் உள்ளன.
- 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்திட விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வழுதரெட்டி கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, நிருவாக அனுமதியளித்து, அரசாணை வெளியிடப்பட்டு விரைவில் பணி தொடங்கப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்-தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்

தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு திருவுருவச் சிலை ரூபாய் 77 இலட்சத்து 87 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரம் வ.உ. சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லத்தைப் புனரமைக்கவும், திருநெல்வேலியில் உள்ள வ.உ. சிதம்பரனார் மணிமண்டபத்தில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி-ஒளிக் காட்சி அமைத்திடவும் ரூபாய் 72 இலட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 10

செய்தித் துறையின் அறிவிப்புகள்-தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு, கடலூரில் திருவுருவச் சிலை அமைத்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள், மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த, மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை, இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்கம், திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டிலேயே சட்டமன்றத்திற்கு முதல் பெண் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும், தமிழ்நாட்டின் சமூகச் சீர்திருத்தப் பெண் மருத்துவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியத் திருநாட்டின் 75-வது சுதந்திர நாள் அமுதப் பெருவிழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி ஒலி-ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை

2023 ஏப்ரல் 10]

எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும் பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் காட்சி, ஒலி-ஒளிக்காட்சி போன்றவை அமைத்திட முதற்கட்டமாக, 6 நினைவிடங்களில் ஒலி-ஒளிக்காட்சி அமைத்திட, திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாக சீலர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட நினைவகம், பெரியவர் பக்தவத்சலம் நினைவக மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவக மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்திட ரூபாய் 3 கோடியே 36 இலட்சத்து 82 ஆயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் அமைத்திட, ரூபாய் 2 கோடியே 53 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களுக்காக ஆழியாறு அணை பூங்காவில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம் மாற்றி அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த மேனாள் அமைச்சர் "சி. சுப்பிரமணியம் வளாகம்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்கு பயிற்சிகள், கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த ஏதுவாக தரைத்தளம், மேல்தளம் கொண்ட அரங்கம் கட்டப்பட்டு, தரைத்தள அரங்கத்திற்கு "வி.கே. பழனிச்சாமி அரங்கம்" என பெயரும், மேல்தள அரங்கத்திற்கு "பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அரங்கம்" என பெயரும் சூட்டப்படும்.

[2023 ஏப்ரல் 10

இவ்வளாகத்தில் வி.கே. பழனிச்சாமி கவுண்டர் மேனாள் ஒன்றிய அமைச்சர் சி. சுப்பிரமணியம், தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் நிறுவப்படும். மேற்குறிப்பிட்ட அரங்கம் அமைக்கவும், திருவுருவச் சிலைகள் நிறுவிட ரூபாய் 4 கோடியே 28 இலட்சத்து 71 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்த வரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்ட வடிவம் கொடுத்தவருமான சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட ரூபாய் 17 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கமும் அமைத்திட ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம் பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த, ஈரோடு தொகுதியில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் பதினொரு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த, உத்தமத் தியாகி ஐயா திரு. ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவருடைய செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைத்திட ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் நிதியொப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் விரைவில் பணிகள் தொடங்கி வைக்கப்படவுள்ளன.

மேனாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றிய

2023 ஏப்ரல் 10]

திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கம் ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதியளித்துள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள புனித பரலோக மாதா ஆலய வளாகத்தில் வீரமாமுனிவர் அவர்களுக்கு, திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைத்திட ரூபாய் ஒரு கோடி நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட மாவீரர்கள் மற்றும் தலைவர்களுக்கு சிலை

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலையும், வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறையில் இருந்தபொழுது இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள அன்னாரது மார்பளவுச் சிலையும், 14-2-2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் தொடங்கப்படவுள்ள பணிகள்

கோயம்புத்தூர் வ.உ. சிதம்பரனார் பூங்காவில், வ.உ. சிதம்பரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை அமைத்திட ரூபாய் 40 இலட்சத்து 42 ஆயிரம் நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன.

புதுக்கோட்டை மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அருங்காட்சியத்துடன்கூடிய நினைவு மண்டபம் அமைக்க

ரூபாய் 3 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம் மற்றும் சிலை அமைத்திட ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணாக்கர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 10 மணிமண்டபங்களில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட அரசாணை வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில், அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album), அத்தலைவர்கள் எழுதிய புத்தகங்கள், அத்தலைவர்களைப் பற்றி வெளிவந்துள்ள புத்தகங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

அவர்களைப் பற்றிய குறும்படங்கள் ஒளிபரப்பிட ஏதுவாக, முதற்கட்டமாக 15 இடங்களில் அகண்ட திரைத் தொலைக்காட்சி (LED TV) நிறுவப்படும், மேலும், 360 டிகிரியில் புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களில் பொதுமக்கள் கண்டு பயனடைந்திடும் வகையில், விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) முறையில் இவை பதிவேற்றம் செய்யப்படும். இப்பணிகள் ரூபாய் 2 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் மார்பளவு சிலைக்குப் பதிலாக ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் குதிரைமீது அமர்ந்தவாறுள்ள திருவுருவச் சிலை அமைத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் மேனாள் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது.

2023 ஏப்ரல் 10]

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், தலைவர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் மொழிக் காவலர்கள் ஆகியோரின் புகைப்படங்கள், வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய தகவல் பலகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அலுவலகங்கள் கீழ்க்காணும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	**மண்டலம்**	**மாவட்டம்**	**இடங்கள் விவரம்**
1	சென்னை	சென்னை	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		செங்கல்பட்டு	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		காஞ்சிபுரம்	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		திருவள்ளூர்	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		வேலூர்	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		திருப்பத்தூர்	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*
		ராணிப்பேட்டை	*மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்*

[2023 ஏப்ரல் 10

வ. எண்	மண்டலம்	மாவட்டம்	இடங்கள் விவரம்
		திருவண்ணாமலை	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
2	திருச்சி	திருச்சி	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		விழுப்புரம்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		பெரம்பலூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		அரியலூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		கடலூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		கரூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		கள்ளக்குறிச்சி	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
3	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	மண்டலம்	மாவட்டம்	இடங்கள் விவரம்
		நீலகிரி	1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் 2) உதகை அரசு தாவரவியல் பூங்கா
		சேலம்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		நாமக்கல்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		ஈரோடு	1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் 2) பெரியார் அண்ணா நினைவகம்
		தருமபுரி	1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் 2) அதியமான் கோட்டம் 3) தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்
		திருப்பூர்	திருப்பூர் குமரன் நினைவு மண்டபம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மண்டலம்	மாவட்டம்	இடங்கள் விவரம்
		கிருஷ்ணகிரி	1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் 2) மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த இல்லம், ஒசூர்
4	திருநெல்வேலி	திருநெல்வேலி	அரசு அருங்காட்சியகம்
		கன்னியாகுமரி	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		விருதுநகர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		தூத்துக்குடி	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		தென்காசி	வாஞ்சிநாதன் மணிமண்டபம்
5	மதுரை	மதுரை	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		தேனி	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		திண்டுக்கல்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	மண்டலம்	மாவட்டம்	இடங்கள் விவரம்
		இராமநாதபுரம்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		சிவகங்கை	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
6.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		நாகப்பட்டினம்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		திருவாரூர்	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		மயிலாடுதுறை	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்
		புதுக்கோட்டை	மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்

அரசு விழாக்கள்

நம் தாய் திருநாடாம் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரைத் துச்சமென நினைத்து தியாகம் செய்த தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டத் தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி என சிறப்புப் பெற்ற நம் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட அறிஞர் பெருமக்கள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்த மாபெரும் தலைவர்களைப் போற்றி புகழ்ந்திடவும், அப்பழுக்கற்ற

அவர்களது உயரிய சிந்தனைகளை மற்றும் தியாகங்களை, தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் அப்பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பிலான இவ்விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய தலைவர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மலர் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 37 தலைவர்களுக்கும், ஏனைய மாவட்டங்களில் 77 தலைவர்களுக்கும் பல்வேறு இடங்களில் அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

வ. எண்	நாள்	விழா
1	ஜனவரி 17	புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள்
2	ஜனவரி 23	நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள்
3	ஜனவரி 30	அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள்
4	பிப்ரவரி 18	சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள்
5	பிப்ரவரி 24	செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள்
6	ஏப்ரல் 14	டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பிறந்த நாள்—சமத்துவ நாள்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா
7	*சித்திரை முழு நிலவு நாள்*	*சித்திரை முழு நிலவு நாளில் கண்ணகிக்கு விழா*
8	*ஏப்ரல் 17*	*சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள்*
9	*ஏப்ரல் 27*	*சர்.பி.டி. தியாகராயர் பிறந்த நாள்*
10	*ஏப்ரல் 29*	*பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள்*
11	*ஜூன் 3*	*முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்*
12	*ஜூன் 5*	*கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள்*
13	*ஜூன் 24*	*கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள்*
14	*ஜூன் 26*	*சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் பிறந்த நாள்*
15	*ஜூலை 7*	*இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள்*
16	*ஜூலை 11*	*வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள்*
17	*ஜூலை 15*	*பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள்*
18	*ஜூலை 17*	*தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்*
19	*ஜூலை 17*	*தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார்*

வ. எண்	நாள்	விழா
20	ஜூலை 17	தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன்
21	ஆடி மாதம் 18 ஆம் நாள்	சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை நினைவு நாள்
22	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள்
23	செப்டம்பர் 11	மகாகவி பாரதியார் நினைவு நாள்— மகாகவி நாள்
24	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்
25	செப்டம்பர் 16	இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள்
26	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள்— சமூகநீதி நாள்
27	செப்டம்பர் 27	டாக்டர் சி.பா. ஆதித்தனார் பிறந்த நாள்
28	செப்டம்பர் 29	மேனாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள்
29	அக்டோபர் 1	நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள்
30	அக்டோபர் 2	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள்
31	அக்டோபர் 30	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்
32	நவம்பர் 8	தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள்
33	நவம்பர் 14	பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா
34	நவம்பர் *18*	கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் நினைவு நாள்—தியாகத் திருநாள்
35	நவம்பர் *23*	கவிஞர் சுரதா பிறந்த நாள்
36	டிசம்பர் *10*	மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்
37	டிசம்பர் *11*	மகாகவி பாரதியார் பிறந்த நாள்

மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
1	ஜனவரி *3*	வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள்	சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்
2	ஜனவரி *15*	ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள்	லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
3	ஜனவரி *17*	புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள்	காமராஜர் சாலை, சென்னை மாவட்டம்
4	ஜனவரி *17*	புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள்	சேலம், சேலம் மாவட்டம்
5	தை *5* ஆம் தேதி	காளிங்கராயன் அவர்கள் வாய்க்கால் அமைத்து பாசனத்திற்கு அர்ப்பணித்த நாள்	காளிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம்
6	ஜனவரி *26*	தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
7	ஜனவரி 27	சுவாமி சகஜானந்தா பிறந்த நாள்	சிதம்பரம், கடலூர் மாவட்டம்
8	பிப்ரவரி 1	ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள்	ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம்
9	பிப்ரவரி 6	உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு பிறந்த நாள்	வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.
10	பிப்ரவரி 7	மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பிறந்த நாள்	சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்
11	தைப்பூசத் திருநாள்	திருமலை நாயக்கர் பிறந்த நாள்	மதுரை, மதுரை மாவட்டம்
12	பிப்ரவரி 18	சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் பிறந்த நாள்	இராயபுரம், சென்னை மாவட்டம்
13	பிப்ரவரி 19	தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள்	உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்
14	பிப்ரவரி 22	தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள்	தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம்
15	பிப்ரவரி 24	செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள்	சேலம், சேலம் மாவட்டம்
16	மார்ச் 30	ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள்	இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
17	ஏப்ரல் 2	வ.வே. சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள்	வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம்
18	ஏப்ரல் 10	தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள்	திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்
19	ஏப்ரல் 13	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள்	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
20	ஏப்ரல் 16	வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள்	கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம்
21	சித்ரா பௌர்ணமி	வள்ளல் அதியமான் பிறந்த நாள்	அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம்
22	ஏப்ரல் 17	தீரன் சின்னமலை பிறந்த நாள்	ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்
23	மே 7	இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள்	இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம்
24	சித்திரை இறுதி வெள்ளி	வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள்	கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்
25	சித்திரை இறுதி வெள்ளி	வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள்	பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம்
26	மே 23	பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள்	திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

[*2023 ஏப்ரல் 10*

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
27	மே *31*	சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள்	வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்.
28	ஜுன் *12*	மார்ஷல் நேசமணி பிறந்த நாள்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
29	ஜுன் *16*	தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள்	திருமங்கலம், மதுரை மாவட்டம்
30	ஜுன் *18*	தியாக சீலர் கக்கன் பிறந்த நாள்	மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்
31	ஜுன் *23*	பட்டுக்கோட்டை அழகிரிசாமி பிறந்த நாள்	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
32	ஜுன் *24*	கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள்	காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
33	ஜுலை *6*	தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் பிறந்த நாள்	விளாச்சேரி, மதுரை மாவட்டம்
34	ஜுலை *11*	வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள்	கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம்
35	ஜுலை *11*	தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள்	குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
36	ஜுலை *15*	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்	கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
37	ஜூலை 15	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
38	ஜூலை 15	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்	திருமலைச்சாலை, தியாகராயர் நகர், சென்னை
39	ஜூலை 17	தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம்	செங்கோட்டை, தென்காசி மாவட்டம்
40	ஜூலை 31	சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
41	ஆடி 17, 18	வல்வில் ஓரி விழா	கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்
42	ஆடி 18	தீரன் சின்னமலை நினைவு நாள்	ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்
43	ஆடி 18	தீரன்சின்னமலை நினைவு நாள்	தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரி, சேலம் மாவட்டம்
44	ஆகஸ்ட் 20	விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் நினைவு நாள்	பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
45	ஆகஸ்ட் 21	பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் பிறந்த நாள்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
46	ஆகஸ்ட் 25	திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிறந்த நாள்	காங்கேயநல்லூர், காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம்,
47	ஆவணி 16	விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள்	நெற்கட்டும் செவல், தென்காசி மாவட்டம்
48	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள்	ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
49	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள்	திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்
50	செப்டம்பர் 5	விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள்	விருப்பாச்சி, திண்டுக்கல் மாவட்டம்
51	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்	அண்ணா சதுக்கம், சென்னை
52	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்	சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்
53	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்	ஈரோடு, ஈரோடு மாவட்டம்
54	செப்டம்பர் 16	இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள்	மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம்
55	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள்	ஈரோடு, ஈரோடு மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
56	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள்	வைக்கம், கேரள மாநிலம்
57	செப்டம்பர் 24	டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள்	திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்
58	செப்டம்பர் 25	பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள்	உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்
59	அக்டோபர் 2	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள்	கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்
60	அக்டோபர் 2	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள்	அனைத்து மாவட்டங்கள்
61	அக்டோபர் 4	தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள்	பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்
62	அக்டோபர் 4	திருப்பூர் குமரன் பிறந்த நாள்	திருப்பூர், திருப்பூர் மாவட்டம்
63	அக்டோபர் 4	திருப்பூர் குமரன் பிறந்த நாள்	சென்னிமலை, ஈரோடு மாவட்டம்
64	அக்டோபர் 7	பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தினம்	கோயம்புத்தூர் மாவட்டம்
65	அக்டோபர் 9	பெரியவர் எம். பக்தவத்சலம் பிறந்த நாள்	காந்திமண்டபம் சென்னை மாவட்டம்

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
66	அக்டோபர் 10	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாள்	நாமக்கல், நாமக்கல் மாவட்டம்
67	அக்டோபர் 23	அமுதகவி உமறுப் புலவர் பிறந்த நாள்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
68	அக்டோபர் 24	மருதுபாண்டியர் நினைவு நாள்	திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
69	அக்டோபர் 30	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்	பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்
70	நவம்பர் 1	கன்னியாகுமரி மாவட்டம், தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டுமார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
71	நவம்பர் 11	சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம் பிறந்த நாள்	இராயபுரம், சென்னை மாவட்டம்
72	நவம்பர் 15	ராவ்பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாள்	தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம்
73	டிசம்பர் 10	மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்	தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 10]

வ. எண்	நாள்	விழா	நிகழ்விடம்
74	டிசம்பர் 11	மகாகவி பாரதியார் பிறந்த நாள்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
75	டிசம்பர் 11	மகாகவி பாரதியார் பிறந்த நாள்	திருவல்லிக்கேணி சென்னை மாவட்டம்
76	டிசம்பர் 12	அதங்கோட்டாசான் விழா	அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம்
77	டிசம்பர் 28	சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதி வீரன் பொல்லான் பிறந்த நாள்	மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம்

வள்ளுவர் கோட்டம்

உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்டம் முத்தமிழறிஞர் கலைஞரின் சிந்தனையில் தோன்றிய கோட்டமாகும்.

கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக திகழும் சென்னை வள்ளுவர் கோட்டம் 27-4-1973 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

சிறப்பு வாய்ந்த வள்ளுவர் கோட்டம், அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களால் 15-4-1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடன் ஜனவரி 27 அன்று வள்ளுவர் கோட்டத்திற்கு முதன்முதலாக வருகை தந்தார் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திற்கு வருகை தந்து அய்யன் "திருவள்ளுவர் நாள்" அன்று திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பித்தார்கள்.

அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் அக்டோபர் 2 ஆம் தேதி அரசின் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்படும். அதனடிப்படையில் கடந்த ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் செய்தித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தோம்.

அன்றையதினம் மாலையில் காந்தி மண்டபத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முன்னதாக அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் புகைப்பட கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் செய்தித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பெருமக்களும், செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களும் கலந்துகொண்டு புகைப்பட கண்காட்சியைப் பார்வையிட்டோம்.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26 மற்றும் ஆகஸ்ட் 15 ஆகிய நாட்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களின் நினைவகங்கள்/மணிமண்டபங்கள் மின்விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு தலைவர்களின்

2023 ஏப்ரல் 10]

சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறையும் இணைந்து திருவள்ளுவர் பிறந்த தினமான தைத்திங்களில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்கு திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது மற்றும் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர்.

கடந்த 16-1-2023 அன்று திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு நாள்

மெட்ராஸ் மாகாணம் என பல ஆண்டுகளாக அழைக்கப்பட்டு வந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட வேண்டும் என பல்வேறு மொழி அறிஞர்கள், தலைவர்கள் போராடி வந்தனர். குறிப்பாக திரு. சங்கரலிங்கனார் அவர்கள் அதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் 18-7-1967 அன்று சட்டப் பேரவையில் ஒருமனதாக மெட்ராஸ் மாகாணத்திற்கு "தமிழ்நாடு" என பெயர் சூட்டினார். அன்று முதல் தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "ஜூலை 18" ஆம் தேதி தமிழ்நாடு நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதன்படி கடந்த ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் கலைவாணர் அரங்கத்தில் "தமிழ்நாடு நாள்" சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தோம்.

ஏனைய விழாக்கள்

மாமன்னர் ராசராச சோழனின் பிறந்த நாளை 2022 ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மூதறிஞர் இராஜாஜி மறைந்த 50—வது நினைவு ஆண்டை முன்னிட்டு, அன்னாரின் அரசியல், இலக்கியம், ஆட்சி நிருவாகம், வாழ்க்கை வரலாற்றை பொது மக்களுக்கு விளக்கிடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் 25-12-2022 முதல் 1-1-2023 வரை நடைபெற்ற சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

இச்சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை 26-12-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ஆகியோர்களுடன் பார்வையிட்டார்கள். மேலும், இச்சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை இத்துறை அமைச்சராகிய நானும் 26-12-2022 அன்று பார்வையிட்டேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28-2-2023 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கில் “ஏற்றமிகு ஏழு திட்டங்கள்” கீழ் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து, பல்வேறு மருத்துவமனை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பணி நியமன ஆணைகள் மற்றும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கிய விழா செய்தி மக்கள் தொடர்புத் துறையால் சிறப்பாக நடத்தப்பட்டது.

2023 ஏப்ரல் 10]

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அன்னாரைப் பெருமைப்படுத்தும் வகையில், சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம். சௌந்தரராஜன் சாலை" என புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24—3—2023 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், சென்னை கலைவாணர் அரங்கத்தில் ரூபாய் 12 இலட்சம் செலவில் நடைபெற்ற டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடிய புகழ்பெற்ற பாடல்களின் இன்னிசை கச்சேரியை தொடங்கி வைக்கப்பட்டது.

செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், காவல் துறைத் தலைவர், அரசுச் செயலாளர்கள் ஆகியோரது அறிவிப்புகள், அரசு செய்திக் குறிப்புகள், செய்தி வெளியீடுகளை நாளிதழ்கள் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாக பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி வெளியீட்டுப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

தமிழ் ஆங்கில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், பிற மாநில நாளிதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள், சமூக ஊடகத் தளங்கள் என 400—க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்தி, புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் இப்பிரிவின்மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்பணிகளைத் தவிர செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான அனைத்துப் பணிகளும் இப்பிரிவின்மூலம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அரசு சார்ந்த விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு செய்தியாளர்களுக்கும், தொலைக்காட்சிப்

பிரிவினருக்கும் தேவையான உதவிகள் அனைத்தையும் வழங்கிடும் வகையில், ஒருங்கிணைப்புப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் அதிநவீன முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளத்தில் (www.dipr.tn.gov.in) உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல்மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சமூக ஊடகப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2021-2022 ஆம் ஆண்டு செய்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி 20-1-2022 அன்று 'சமூக ஊடகப் பிரிவு' உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பிரிவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள், நிகழ்ச்சிகள், தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றை கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு சேர்த்து வருகிறது.

இந்த ஆண்டில் நடைபெற்று வரும் நிதித் துறை மற்றும் வேளாண் துறையின் நிதிநிலை அறிக்கைகளை கோடிக்கணக்கான மக்களின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தியாக கொண்டு சேர்த்தது, சமூக ஊடகப் பிரிவின் ஒரு மைல்கல் என்று கூறுவதில் பெருமை அடைகிறோம்.

2023 ஏப்ரல் 10]

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒளிப்பதிவு செய்து அரசினால் அறிவிக்கப்படும் நலத் திட்ட உதவிகளை பொதுமக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணிகளை தமிழ்நாடு திரைப்படப் பிரிவுமூலம் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பிரிவின் வாயிலாக ஒளிப்பதிவு செய்து பதிவு செய்யப்படும் அனைத்து நிகழ்ச்சி தொகுப்புகளையும் பொது மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் ஊடக மையத்தின் வழியே காணொலி செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

அரசின் முக்கிய விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை பின்னணிக் குரல் மற்றும் இசையுடன்கூடிய செய்தித் தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை மற்றும் சமூக வலைதளங்களிலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையிலும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசின் மக்கள் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் மற்றும் அவ்வப்போது சமூகத்தில் நிகழும் சமூக மாற்றங்களுக்கேற்பவும், சமூக நலன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காணொலி செய்தி மலர், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்களைத் தற்போது வளர்ந்துள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப திரையரங்க பதிப்புகளாகத் தயாரித்து அவற்றை அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை மற்றும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள நவீன மின்னணு வாகனத்தின் விளம்பரத்திரை ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

[*2023 ஏப்ரல் 10*

சமூக வலைதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 16-7-2021-ல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் You tube சேனல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு அரசால் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளை சமூக ஊடகங்களில் சிறப்பாகப் பதிவேற்றம் செய்து வருகிறது.

மேலும், அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்து பின்னணிக் குரல் மற்றும் இசையமைத்து செய்தி தொகுப்புகளாக தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் சமூக வலைதளமான வலையொளி (Tamil Nadu Films Division—YouTube) மூலமாக உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவரிடமும் விரைவாகச் சென்றடையும் விதமாக ஒளிபரப்பப்படுகிறது. இதுநாள் வரை 2,500 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு 9,100 சந்தாதாரர்களை கொண்டு இலட்சக்கணக்கான பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டுள்ளது.

திரையில் பாரதி

திரைப்படங்களில் இடம் பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம் பெறும் இசைக்கச்சேரி "திரையில் பாரதி" என்ற நிகழ்ச்சி 23-7-2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பள்ளி மாணவ/மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

"பாரதி யார்"?

2021-22 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்தார். அதனடிப்படையில் "பாரதி யார்"? எனும் நிகழ்ச்சி

2023 ஏப்ரல் 10]

7-12-2022 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில், எனது தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பள்ளி மாணவ மாணவிகளிடேய பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. மேலும், இந்நிகழ்ச்சி கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருநெல்வேலி போன்ற மற்ற மாவட்டங்களில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புகைப்படப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இயங்கி வரும் புகைப்படப் பிரிவின்மூலம் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளில் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மாவட்டங்களில் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள புகைப்படக்காரர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிந்து வருகின்றனர்.

அரசு தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள், செய்தி வெளியீட்டுப் பிரிவின் வாயிலாக நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளியிடுவதற்காக உடனுக்குடன் அனுப்பப்படுவதோடு, பொதுமக்களின் பார்வைக்காகத் தலைமைச் செயலகத்திலும், புதுதில்லி தமிழ் நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தால் எடுக்கப்படும் புகைப்படங்கள், அந்தந்த மாவட்டத்தில் இயங்கிவரும் நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், பொதுமக்களின் பார்வைக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகைகளிலும், முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. நமது துறையால் வெளியிடப்படும் 'தமிழரசு' தமிழ், ஆங்கில மாத இதழ்களில், அனைத்துக்

[2023 ஏப்ரல் 10

கட்டுரைகளும் வாசகர்கள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படங்களுடன்கூடிய செய்தியும் வெளியிடப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள், சாதனை மலர்கள், சிறப்பு மலர்கள், காலப்பேழைகளில் அச்சடிக்கப்பட்டு பொதுமக்கள் அறிந்துகொள்ளும் முறையில் தமிழரசு வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 23 மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் எதிர்காலப் பயன்பாடு கருதி ஆண்டு வாரியாக வன் வட்டுகளில் (Hard Disc) சேமிக்கப்பட்டு முறையாக ஆவணப்படுத்தப்படுகின்றன.

மேற்கோள் பிரிவு

நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை, துறைவாரியாக, பிரித்து, அந்தந்தத் துறையினரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் சீரியப் பணிகளை மேற்கோள் பிரிவு சிறப்புடன் மேற்கொண்டு வருகிறது.

நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள். காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்களின் பார்வைக்கு கோப்பு வடிவில் அனுப்பப்பட்டு வருகிறது. உரிய துறைகளின்மூலம் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், காகிதமில்லா நடைமுறையினைச் செயல்படுத்தும் விதமாக, செய்தி நறுக்குகள் மின்நாளிதழாக சோதனை முறையில் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், இப்பிரிவில் அரசுத் துறைகள் குறித்து வெளிவரும் புகார்கள்/குறைகள் குறித்த செய்திகள் உள்ளறி (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கட்செவி (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பி, உரிய பதிலுரையும் பெறப்பட்டு அவை ஊடகத்தில் வெளியிட வழிவகை செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 10]

மேலும், முக்கியமான நாளிதழ்கள், முறையாகத் தொகுக்கப்பட்டு பைண்டிங் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் ஆவணங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு, நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு நலத் திட்ட உதவிகள் உட்பட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், பல்வேறு தலைவர்களின் கருத்துகள், விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு கணினியில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கள விளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் கடைக்கோடி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு செயல்பட்டு வருகின்றது.

மண்டல அலுவலர்கள்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களை 6 மண்டலங்களாக பிரித்து, அரசின் திட்டங்களை விரைவாகவும், சிறப்பாகவும் மாவட்டங்களில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் பொருட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆறு இணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு கூடுதலாக பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

வ. எண்	மண்டலம்	மாவட்டம்
1.	சென்னை	சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை
2.	திருச்சி	திருச்சி, விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கடலூர், கரூர், கள்ளக்குறிச்சி
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி
4.	திருநெல்வேலி	திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், தூத்துக்குடி, தென்காசி
5.	மதுரை	மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை
6.	தஞ்சாவூர்	தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை

மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனம்

நவீன மின்னணுத் திரை பொருத்திய விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள் 32 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு பகல் மற்றும் இரவு நேரங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றில் அரசின் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் குறும்படங்கள் மற்றும் செய்தி மலர் தொகுப்புகள் திரையிடப்பட்டு மக்கள் கண்டு பயனடைந்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்னணு விளம்பரத் திரைகள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக தயாரிக்கப்பட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் நாள்தோறும்

2023 ஏப்ரல் 10]

அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்லும் இடங்களான 32 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் 'மின்னணு விளம்பரத் திரை' (LED Screen) *மூலம் திரையிடப்பட்டு கள விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

விளம்பரம்

அரசு துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் பணியை செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின்மூலம் நாளிதழ்களில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் இத்துறையின்மூலம் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி, நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) www.tenders.tn.gov.in *என்ற இணையதளத்தில் சம்பந்தப்பட்ட துறைகளால் வெளியிடப்படுகின்றன.*

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிர்ணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், இலவசமாக

இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற, ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், மாவட்ட/மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகின்றன.

ரூ.25 இலட்சத்திற்குமேல் ரூ.50 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.50 இலட்சத்திற்கு மேல் ரூ.75 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.75 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

நடைபெற்று வரும் திட்டப் பணிகள்

இனி வருங்காலங்களில், அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ளும் வகையில் மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் தேசிய தகவல் மையத்தின் (NIC) வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களை சென்றடையக்கூடிய வகையில், பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையங்கள்,

2023 ஏப்ரல் 10]

சந்தைகள் போன்றவற்றில் முதற்கட்டமாக 10 மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊடக மையம்

தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் ஊடக மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் 15 செய்தி தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளும், அரசு சார்பான செய்திகளும் அன்றாடம் பதிவு செய்யப்படுகின்றன.

தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் அனைத்தும், ஊடக மையத்திலிருந்து உடனுக்குடன் சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, மாவட்ட ஊடகங்களிலும் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள், ஊடகங்களில் வெளியான விவர அறிக்கையினை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் முறையாக வெளியிடப்பட்டு வருகின்றனவா என்ற விவரங்களும் நாள்தோறும் மின்னஞ்சலில் பெறப்பட்டு தொகுக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், பயன்கள், செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின்மூலம் அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும்

தனியார் நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இப்பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு மட்டுமின்றி, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலைவாய்ப்புகளையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும்,இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வோர் ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசு பொருட்காட்சியை 7,42,150 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர். இதன் வாயிலாக ரூபாய் 3 கோடியே 7 இலட்சத்து 46 ஆயிரம் வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டுள்ளது.

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியமாக ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் பொருட்காட்சிகள்

மாவட்டங்களில் மூன்று நாட்களுக்கு மேல் நடத்தப்படும் தனியார் பொருட்காட்சிகளுக்கான அனுமதியானது தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடனும், பிற துறைகளின் பாதுகாப்பு, தடையில்லா சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கான காசோலையுடன் பெறப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மூன்று நாட்கள் வரையில் மாவட்ட அளவில் தனியார் பொருட்காட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் உரிய முதலமைச்சர் நிவாரண நிதிக்கான காசோலைகள் பெற்று அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 7-5-2021 முதல் 24-3-2023 வரை நடைபெற்ற தனியார் பொருட்காட்சி வாயிலாக முதலமைச்சர் நிவாரண நிதியாக ரூபாய் 2 கோடியே 71 இலட்சத்து 57 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

விடுதலைப் போரில் தமிழகம் – புகைப்படக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1-11-2021 அன்று சென்னை, கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலைய வளாகத்தில், 75-வது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக, இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண் ஏற்றும், சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட தீரத் தியாகிகளின் வீரப்பெருமைகளை நினைவு கூர்ந்து போற்றும்வகையில் 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார்கள். இக்கண்காட்சியில், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத் தொகுப்புகள், சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்த புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றும், மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உருவம் பொறித்த பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இதனை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் ஆகியோர் ஆர்வத்துடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர். 127 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சி அனைத்து தரப்பினரிடமும் மிகுந்த வரவேற்பினைப் பெற்றது.

நடமாடும் பேருந்து புகைப்படக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150-வது பிறந்த நாள் விழாவினையொட்டி, 1-11-2021 அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில் அரசு போக்குவரத்துத் துறையின் பேருந்து ஒன்றில், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நடமாடும் புகைப்படக் கண்காட்சியினைத் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்புகைப்படக் கண்காட்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

புதுடெல்லி மலர்ப் பேரணி

புதுடெல்லியில் ஆண்டுதோறும் தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், மலர்ப் பேரணி

விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று பரிசுகளை தொடர்ந்து பெற்று வருகிறது.

குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று, உயர்மட்டக் குழுவினரால் பரிந்துரைக்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப, அலங்கார ஊர்திகளை வடிவமைத்தும், தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து வருகிறது.

இந்த ஆண்டு (2023) நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம் என்கிற கருப்பொருளின் அடிப்படையில் தமிழகத்தின் 7 பெண் சாதனையாளர்களை முன்னிலைப்படுத்திய அலங்கார ஊர்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளை காட்சிப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி இடம் பெறுகிறது.

அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள் மற்றும் அணிவகுப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

சென்னையில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான குடியரசு தின விழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி மூன்றாம் பரிசினை பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் விடுதலைப்போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பினைப் பறை சாற்றும் விதமாக 3 அலங்கார ஊர்திகள் பங்குபெற்றன. டெல்லியில் நிராகரிக்கப்பட்டதால் அந்த அலங்கார ஊர்திகளை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட மக்களும் கண்டு பயன்பெறும் வண்ணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26-1-2022 அன்று கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டன.

2023 ஏப்ரல் 10]

இந்த ஊர்திகளை அந்தந்த மாவட்டங்களை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் வரவேற்று, சிறப்பித்தார்கள்.

மேலும், இந்த ஊர்திகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர்கள், தன்னார்வலர்கள், அரசுப் பணியாளர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கண்டு களித்து பயனடைந்தனர்.

மேற்கண்ட 3 அலங்கார ஊர்திகளும் சுமார் 7,000 கி.மீ அளவில் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மாவட்டங்களுக்கு சென்று வந்துள்ளது.

இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும், இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் தனி அரங்கு அமைத்து வருகிறது.

இந்த ஆண்டு (2023) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 47-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் கி. ராஜநாராயணன் அவர்களின் மணிமண்டபத்தின் மாதிரியை செய்தி மக்கள் தொடர்புத் துறை அரங்கமாக வடிவமைத்து சிறந்த புதுமையான கருத்துருக்கான இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் 27 வரை 14 நாட்கள் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரங்கத்தினை 17-11-2022 அன்று தொடங்கி வைத்தேன். தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான

[2023 ஏப்ரல் 10

சாதனைகள், திட்டப் பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்கள் போன்றவற்றை காண்போரைக் கவரும் வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்துகொள்ளவும், பயனாளிகள் நலத் திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகளும் வடிவமைக்கப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள ஏனைய பிற மாநிலங்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகள், செயல்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்திட, நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்புகளும் ஏற்படுகின்றன.

தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை பிற மாநில மக்களும் அறிந்துகொள்ளும் வகையிலும் நாட்டுப்புற கலைஞர்களின் சமூக, பொருளாதாரத்தினை கருத்தில்கொண்டு இப்பொருட்காட்சியில் அவர்களின் கிராமிய நடனங்களும் நடத்தப்படுகின்றன.

சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சென்னை மாவட்டம் உட்பட, அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு ஒருமுறை அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்திட, அனைத்து மாவட்டத்திற்கும் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஓராண்டில் அரசின் அரும்பணிகளின் தொகுப்பாக "ஓயா உழைப்பின் ஓராண்டு" என்கிற தலைப்பில், அரசு பல துறைகளை ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளும் நடத்திட மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டது.

2023 ஏப்ரல் 10]

இப்புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்ட மாவட்டங்களில் பொதுமக்களிடம் இந்நிகழ்ச்சி நல்ல வரவேற்பை பெற்றது.

திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் சிறப்பு புகைப்படக் கண்காட்சி

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் சிறு புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப் போரில் வீரத்தமிழகம் முப்பரிமாண ஒளி-ஒலி கண்காட்சி

செய்தி மக்கள் தொடர்புத் துறையின்மூலம் நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் நினைவைப் போற்றும் வகையில் 15-8-2022 அன்று சுதந்திரத் தினத்தினை முன்னிட்டு சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்/தியாகிகள் குறித்த ஒலி/ஒளி காட்சியினை சென்னை, கலைவாணர் அரங்கத்தில் துறையின் அமைச்சர் என்கிற முறையில் கலந்து கொண்டேன். இந்த ஒலி/ஒளி காட்சி 15-8-2022 முதல் 1-9-2022 வரை 18 நாட்கள் நடைபெற்றது. பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளி/கல்லூரி மாணவர்கள் இந்த ஒலி/ஒளி காட்சியினை பார்வையிட்டு பயன்பெற்றனர்.

மாவட்ட செய்தி- மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொதுமக்களுக்கும், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாவட்ட நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் கள விளம்பரப் பணியை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும் செயல்படுத்துகின்றன.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மக்கள் தொடர்பு உதவி அலுவலர் (செய்தி), மக்கள் தொடர்பு உதவி அலுவலர் (விளம்பரம்) மற்றும் தேவையான பணியாளர்கள் கட்டமைப்புடன் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன. மேலும், சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை

[2023 ஏப்ரல் 10

உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு செல்லும் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள் அனைத்தையும், அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பரத் திரை வாகனப் படக்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்கள் மேற்கொள்ளும் மாவட்டங்களில் நடைபெறும் திட்டங்கள், பணிகள் குறித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் பயண ஏற்பாடு செய்தல், அரசின் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் பேட்டிகளுடன் திட்டம் குறித்து வெற்றிக் கதைகளை நாளிதழ்களில் வெளிவரச் செய்தல், மின்னணு விளம்பர படக்காட்சி நடத்துதல், அரசின் செய்தி மலர் திரையரங்குகளில் திரையிடப்படுவதை ஆய்வு செய்தல், புகைப்படக் கண்காட்சி நடத்துதல், தமிழரசு சந்தா சேகரித்தல், மடிப்பேடுகள், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், சமூக ஊடகங்களைக் கையாளுதல் போன்ற பணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மாதந்தோறும் தரமதிப்பீடு செய்து உரிய அறிவுரைகளும் வழங்கப்படுகிறது.

செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்பட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

2023 ஏப்ரல் 10]

மாநிலச் செய்தி நிலையம், சென்னை

மாநிலச் செய்தி நிலையம், சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலச் செய்தி நிலையத்தில் அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் நூலகம் செயல்பட்டு வருகிறது.

இதில் தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்கள், அறிவியல், ஆய்வுக் கட்டுரைகள், சட்டம், மருத்துவம், உளவியல், ஆன்மிகம், ஜோதிடம், உடற்பயிற்சி, யோகா, வரலாறு, அரசியல், பண்பாடு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நூல்கள் மற்றும் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கல்வியியல் மற்றும் அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகள் அடங்கிய நூல்கள் என பல்வேறு தலைப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில வடிவில் சுமார் 69,295 நூல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல்களைப் பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் படித்து பயன்பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையில் இடவசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் வார இதழ்களும் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத் துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பட்டு மேற்கோள் பணிக்காகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் இந்நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். மேலும், போட்டித் தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வகை போட்டித் தேர்வு நூல்கள் பிரத்யேகமாக இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின்

இரண்டு பிரதிகள் பதிப்புரிமைப் பதிவு பணிக்காகப் பெறப்பட்டு அந்நூல்களில் இடம் பெற்றுள்ள பதிப்புரிமைத் தொடர்பான தகவல்கள் மட்டும் முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வலுவலக நூல்களில் சுமார் 69,295 நூல்கள் இடம் பெற்றுள்ளதால், இங்கு வருகை தரும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் தேவையான நூல்களை தெரிவு செய்து, படிக்க விரும்பும் குறிப்பிட்ட நூல்களை விரைவாகவும் எளிதாகவும் தேர்ந்தெடுக்கும் வகையில், இணையதள வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், இத்தகைய நூல்களை வருங்கால தலைமுறையினர் படித்து அறிந்துகொள்ளும் வகையில் அவற்றைப் பாதுகாத்திட தமிழக அரசின் மின் நூலகம் அமைத்தல் எனும் திட்டத்தின்படி பொது நூலக இயக்கத்தின் சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் மூலமாக மாநில செய்தி நிலையத்தில் உள்ள நூல்களில் காப்புரிமை சட்டத்திற்கு உட்படாத வெளியீடுகளான 2,500 நூல்கள் தெரிவு செய்யப்பட்டு மின்னுருவாக்கமும் (Digitalizing) செய்யப்பட்டுள்ளன.

தகவல் மையம், தமிழ்நாடு இல்லம், புதுதில்லி

புதுதில்லியில் உள்ள தகவல் மையம், 1993 ஆம் ஆண்டு முதல் வைகை தமிழ்நாடு இல்லத்தில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் புதுதில்லிக்கு வருகை புரிந்து, மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர்கள் ஆகியோரை சந்திக்கும்போது எடுக்கப்படும் புகைப்படங்கள், காட்சிப்படங்களை அந்தந்த அலுவலகங்களில் இருந்து பெற்று பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வெளியிடும் பணியை இத்தகவல் மையம் மேற்கொள்கிறது.

புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மற்றும் மத நல்லிணக்க மலர்ப்பதாகை ஊர்வலம் ('Phool Walon Ki Seir'), ஆகிய நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அரசின் பங்கேற்பினை ஒருங்கிணைக்கும் பணி மற்றும் குடியரசு நாள் கொண்டாட்டத்தின்போது தமிழ்நாடு அரசின்

2023 ஏப்ரல் 10]

அலங்கார வாகனம் பங்கேற்பினை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் அன்று பாதுகாப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படும் சுதந்திர நாள் நிகழ்ச்சிகளில் உள்ளுறை ஆணையர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து 'பாரத்பர்வ்', செங்கோட்டை நிகழ்வுகளில் பங்கேற்பது, தமிழ்நாடு இல்லத்தில் 'பொங்கல் விழா' மற்றும் 'தமிழ்நாடு நாள்' போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துதல், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி மற்றும் உள்ளுறை ஆணையர்களின் பொது நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளையும் இம்மையம் மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று, ஒன்றிய அமைச்சகங்கள்மூலம் நினைவு நாணயங்கள் மற்றும் தபால் தலைகள் வெளியிடும் பணிகளில் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறைக்குத் தொடர்பு அலுவலகமாகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் உச்ச நீதிமன்ற வழக்குகள் தொடர்பான அலுவல் பணிகளை மேற்கொள்ளுதல், நடப்பு விவகாரங்கள், சமூக வலைதளங்களின் போக்கு பற்றிய முக்கியத் தகவல்களைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், உள்ளுறை ஆணையர்கள் ஆகியோருக்கு அவசியத்தின் அடிப்படையில் வழங்குதல், தமிழ்நாடு இல்லத்தில் மின்னணு விளம்பரத் திரையில் காட்சிப்படங்கள் புகைப்படக் காட்சிகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், வைகை தமிழ்நாடு இல்லத்தில் ஊடகப் பிரிவினரின் பணி நோக்கத்திற்காக ஒரு ஊடக மையம் இத்தகவல் மையம் வாயிலாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழரசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் 1970 ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் இதழ் வெளியிடப்பட்டு, 53 ஆண்டுகளாக அரசின் நலத் திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து மாதந்தோறும் இதழ் வடிவில் வெளியிடுவதால் தமிழ்நாடு அரசின் அச்சு ஊடகமாக 'தமிழரசு' இதழ் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களையும், அரசின் கொள்கைகளையும், மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும்

வகையில் பல்வேறு வெளியீடுகளாக வெளியிடப்பட்டு வந்த இதழ்களை ஒருங்கிணைத்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'தமிழரசு' என்ற மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயனடைந்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகமெங்கும் பங்கேற்று சிறப்பிக்கும் அரசு விழாக்கள், ஆய்வுக் கூட்டங்கள், கள ஆய்வுப் பணிகள், செய்தி குறிப்புகள், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், சட்டமன்றத்தில் 110 விதியின்கீழ் அறிவித்த அறிவிப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்டத் திட்டங்கள், அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவானக் கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள், வெற்றிக் கதைகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரை பற்றிய சிறு குறிப்புகள், இலக்கியம் போன்ற பொதுவான தகவல்களைத் தொகுத்து 'தமிழரசு' மாத இதழில் வெளியிடப்படுகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்று தற்போது ஈராண்டு நிறைவடையும் தருவாயில், இதுவரை 6 சிறப்பு மலர்கள் உட்பட 23 சிறப்பு வெளியீடுகளை 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்ட விவரங்கள்

1	மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைமீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை (24-6-2021)
2	'தலை நிமிரும் தமிழகம், நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' எனும் சாதனை மலர் (ஆகஸ்டு 2021)
3	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13-8-2021 முதல் 13-9-2021 வரை)

2023 ஏப்ரல் 10]

4	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24-8-2021 முதல் 13-9-2021 வரை)*
5	*நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மார்பளவு சிலைத் திறப்பு சிறப்பு மலர் (டிசம்பர் 2021)*
6	*மக்களுக்குத் தேவையெனில், மக்கள் நலனை முன்னிறுத்தி, கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்படாத அறிவிப்புகளையும் சேர்த்து நிறைவேற்றுவோம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பதிலுரை (மார்ச் 2022)*
7	*நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம் ஓராண்டு சாதனை மலர் (தமிழ்) (7-5-2022)*
8	Sustained Journey towards all round growth one year achievements (English) *(7-5-2022)*
9	*"முதலாண்டு முத்தான தொடக்கம், இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுப் பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் ஆற்றிய உரை (7-5-2022)*
10	*கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி – காலப்பேழை (மே 2022)*
11	*அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு (மே 2022)*
12	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (13-5-2021 முதல் 30-12-2021 வரை) தொகுப்பு-1*
13	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (1-1-2022 முதல் 5-5-2022 வரை) தொகுப்பு-2*

14	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள் (12-5-2021 முதல் 10-5-2022 வரை) தொகுப்பு—1
15	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24-8-2021 முதல் 9-5-2022 வரை)
16	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு—1
17	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு—2
18	இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு—3
19	தமிழ்நாடு நாள் ஜூலை 18 (ஜூலை 2022)
20	நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி (15-9-2022)
21	வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு மலர் (18-11-2022)
22	பாரதி நினைவு நூற்றாண்டு மலர் (11-12-2022)
23	இலக்கிய மலர் 2023 (4-2-2023)

மேற்காணும் சிறப்பு வெளியீடுகளில் குறிப்பாக,

(1) **“அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு”** என்ற சிறப்பு மலர்,

(2) தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்நாடு பெயர் மாற்ற சட்டமன்றத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நாளினை “தமிழ்நாடு நாள்” என்று கொண்டாட ஆணையிடப்பட்டு, அந்நாளினை சிறப்பிக்கும் வகையில் **“தமிழ்நாடு நாள் ஜூலை 18”** என்ற சிறப்பு மலர்,

(3) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிந்தையில் உருவான மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தொகுத்து “நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி” என்ற சிறப்பு மலர்,

(4) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய தேச விடுதலைக்காகப் பாடுபட்ட வீரத் தலைவர்களை, குறிப்பாக தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை பெருமைப்படுத்துகின்ற வகையில், கப்பலோட்டிய

2023 ஏப்ரல் 10]

தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150—வது பிறந்த நாளினை போற்றும் வகையில் "வ.உ. சி. 150 பிறந்த ஆண்டு மலர்",

(5) மகாகவி பாரதியார் அவர்களின் நூறாவது நினைவு நாளினை முன்னிட்டு "பாரதி நினைவு நூற்றாண்டு மலர்" என்ற சிறப்பு மலர்.

(6) 1997 ஆம் ஆண்டு மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "இலக்கிய மலர்" என்ற சிறப்பு மலர் முதன்முதலாக வெளியிடப்பட்டது. அதனை பின்பற்றும் வகையில், கால் நூற்றாண்டுக்குப் பின் இலக்கியத்தினைக் காத்து வளர்க்கும் பணியினை மேற்கொள்ளும் விதமாக, தமிழ்நாட்டின் பாரம்பரிய இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், சமூக வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் வகையில், நூற்றுக்கணக்கான தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், வரலாற்று அறிஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடமிருந்து பெறப்பட்ட படைப்புகள் அனைத்தையும் "இலக்கிய மலர் 2023" என்ற சிறப்பு மலராகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4-2-2023 அன்று வெளியிடப்பட்டது. இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் தைத் திங்களில் 'இலக்கிய மலர்' வெளியிடும் பணி தொடரும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க, இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடுவதற்கானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

மடிப்பேடுகள்

*விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படுகின்றன. கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2021 (*India International Trade Fair *2021) மற்றும் 53-வது இந்திய சர்வதேச*

திரைப்பட விழா (Film Bazaar 2022 Goa) பற்றிய குறிப்புகள் அச்சிடப்பட்டு பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுவரொட்டிகள்

'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக, "தலை நிமிரும் தமிழகம் பேரு சொல்லும் நூறு நாட்கள்" என்ற தலைப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் ஐந்து வகையான சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு முக்கிய இடங்களில் விளம்பரப்படுத்தப்பட்டது.

இதர வெளியீட்டுப் பணிகள்

'தமிழரசு' மாத இதழ் பணிகளைத் தவிர்த்து, கூடுதல் பணிகளாக, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நல வாரியம், திரைப்படத் துறையினர் நல வாரியம் போன்ற இதரப் பிரிவுகளுக்குரிய மடிப்பேடுகள், சுவரொட்டிகள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சிறு தொலைபேசிக் கையேடு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சார்பாக Aadhaar Enrolment/Correction/Update Form படிவம்,

இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் மறுபதிப்புக்காகப் பெறப்பட்ட இந்து மத இணைப்பு விளக்கப் புத்தகம், சைவமும் வைணவமும் புத்தகம்,

தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக கணினித் தமிழ் வளர்ச்சியும், சவால்களும் மாநாட்டு ஆய்வுக்கட்டுரை தொகுப்பு–1 மற்றும் 2-ம்,

திரைப்படத் துறையினர் நல வாரியம் தொடர்பான செயல்முறை நடவடிக்கைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள், நல வாரிய உறுப்பினர் அட்டைகள்,

44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடர்பான சிறு தொலைபேசிக் கையேடு,

G20 கல்விக் குழும மாநாடு 2023 தொடர்பான சிறு தொலைபேசிக் கையேடு ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

மேலும், தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக, கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகங்கள் ஒரு இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இணையதளம் மற்றும் அரசு இ-சேவை மையங்களில் பதிவு செய்தால் இல்லம் தேடிவரும் 'தமிழரசு' மாத இதழ்

'தமிழரசு' மாத இதழினை பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அதிக அளவில் வாசிக்கின்றனர். புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும் www.tamilarasu.org என்ற இணையதளம் மற்றும் **அரசு இ-சேவை மையங்கள்** வாயிலாகப் பதிவு செய்து 'தமிழரசு' மாத இதழினை அஞ்சல் வழியாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 'தமிழரசு' மாத இதழ் மற்றும் சிறப்பு மலர்களை பெறுவதற்கு வங்கி காசோலை (Cheque) அல்லது பணவிடை மூலமாகவோ (Demand Draft) "இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், எண் 5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை—600 113" என்ற முகவரிக்கு பெயர், கதவு எண், தெருப் பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண், கைப்பேசி எண் ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

'தமிழரசு' மாத இதழ் கட்டண விவரம்

வ. எண்	'தமிழரசு' தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத இதழ்கள்	கட்டணம் (ரூபாயில்)
1	தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத இதழ் (தனி இதழ்)	20/—
2	தமிழ் மற்றும் ஆங்கிலம் (ஆண்டுச்சந்தா)	240/—
3	தமிழ் ஆயுள் சந்தா (10 ஆண்டுகள்), (சலுகைக் கட்டணம்)	2,000/—
4	ஆங்கிலம் ஆயுள் சந்தா (10 ஆண்டுகள்)	2,400/—

[2023 ஏப்ரல் 10

'தமிழரசு' மாத இதழின் வெற்றிப் பயணம்

வருகின்ற ஜூலை 2023 அன்று வெற்றிகரமாக 53 ஆண்டுகளைக் கடந்து, தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் 'தமிழரசு' (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாத இதழானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7-5-2021 அன்று பொறுப்பேற்றபின், தமிழரசு சந்தா கணிசமாக உயர்ந்துள்ளது.

சிறப்பு மலர்கள் கட்டண விவரம்

வ. எண்	சிறப்பு மலர்களின் பெயர்	கட்டணம் (ரூ.)
1	அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு	220/-
2	தமிழ்நாடு நாள் ஜூலை 18	280/-
3	நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி	260/-
4	வ.உ. சி. 150 பிறந்த ஆண்டு மலர்	220/-
5	பாரதி நினைவு நூற்றாண்டு மலர்	240/-

முதன்முறையாக 'தமிழரசு' சிறப்பு மலர்கள் புத்தகக் கண்காட்சியில் விற்பனை

'தமிழரசு' அச்சகத்தின் 53 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக இவ்வாண்டு முதல், 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக தொகுத்து வெளியிட்ட சிறப்பு மலர்களை சலுகைக் கட்டணத்தில் அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெறும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6-1-2023 அன்று சென்னையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கேற்ற 'தமிழரசு' அரங்கில், முதல் சிறப்பு மலர் விற்பனையினைத் துவக்கி வைத்தார்.

இனிவரும் காலங்களிலும், இளைய தலைமுறையினர் மேலும் படிக்கும் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில், சிறப்பு மலர்களை சலுகைக் கட்டணத்தில் விற்பனை செய்யும் பணியினைத் தொடர்ந்து 'தமிழரசு' அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

2023 ஏப்ரல் 10]

பத்திரிகையாளர் நலன் வாரியம்

பத்திரிகையாளர் ஓய்வூதியம்

நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் செய்திகளாக தொகுத்து மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கிட அயராது பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் தங்களின் ஓய்வுக்குப் பின்னர் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியமாக தற்போது ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 50 பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 282 பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர்களின் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில்கொண்டு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியமாக தற்போது ரூ.5,000/— (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் 12 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 59 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றன.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துபவர் ஆகியோர் பணிக் காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து

வழங்கப்படும் குடும்ப உதவி நிதி பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

பணிபுரிந்த ஆண்டுகள்	குடும்ப உதவி நிதித்தொகை (ரூ.)
5	1,25,000/—
10	2,50,000/—
15	3,75,000/—
20	5,00,000/—

2022-2023 ஆம் ஆண்டில் 19 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 86 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல நிதியம்

பத்திரிகையாளர் நல நிதிக்கென தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (The Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Ltd.,) ரூபாய் ஒரு கோடி நிரந்தர நிதியாக வைப்பீடு செய்யப்பட்டு, இந்தத் தொகையின்மூலம் கிடைக்கப்பெறும், வட்டித் தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக் காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக அதிகபட்சமாக ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு வாடகைக் குடியிருப்பு

சொந்த வீடு இல்லாத செய்தியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில், சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் குறைந்த வாடகையில் 143 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வீட்டுமனை வசதி

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியுடன், மாவட்டங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கு, சலுகை

2023 ஏப்ரல் 10]

விலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைமூலம் 1,317 வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர்கள் அங்கீகார அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள், மிக முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்தி சேகரித்திட ஏதுவாக, நாளிதழில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள். தொலைக்காட்சியில் பணிபுரியும் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு, அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் நிதியாண்டில் சென்னையில் 729 பத்திரிகையாளர்களுக்கும், பிற மாவட்டங்களில் 140 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 869 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

காலமுறை இதழ்களுக்கான செய்தியாளர் அட்டை

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று செய்தி சேகரித்து வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கும் செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 479 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர்களுக்கு சென்னை, விழுப்புரம், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணம் செய்திட 420 எண்ணிக்கையிலும், பிற மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில், 2,958 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 3,378 செய்தியாளர்களுக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

செய்தியாளர்கள் அறை

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர்கள் அறையில், செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதற்குத்

தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

கலைஞர் எழுதுகோல் விருது

இத்துறையின் அறிவிப்பிற்கிணங்க, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும்,விளிம்புநிலைமக்களின்மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் சிறந்த ஒரு இதழாளருக்கு ஆண்டுதோறும் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் கொண்ட 'கலைஞர் எழுதுகோல் விருது' வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுக் குழுவினரால் தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று இந்த விருதானது வழங்கப்படுகிறது.

கடந்தாண்டு 3-6-2022 அன்று தினத்தந்தி நாளிதழில் பணியாற்றிய திரு. ஐ. சண்முகநாதன் அவர்களுக்கு இவ்விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல வாரியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, 2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 6-9-2021 அன்று பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், பத்திரிகையாளர் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டும், பல்வேறு நலத் திட்ட உதவிகளுக்கான தொகைகள் நிர்ணயிக்கப்பட்டும் அரசாணை வெளியிடப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் செய்தியாளர்களின் தன்னலம் கருதாத பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நல வாரிய நிதி

பத்திரிகையாளர் நல வாரியத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கையாக, பத்திரிகைகளில் அரசு

2023 ஏப்ரல் 10]

விளம்பரங்களை வெளியிடும் விளம்பர முகமைகளுக்கு அரசால் வழங்கப்படும் விளம்பரக் கட்டணத்தில் ஒரு சதவிகிதத் தொகையை நல வாரியத்திற்கென வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

பத்திரிகையாளர் நல வாரிய குழுக் கூட்ட விவரம்

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் குறித்து ஆலோசிக்க ஏதுவாக பத்திரிகையாளர்கள் நல வாரியக் குழுக் கூட்டம் நான்கு முறை நடத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் சேர்க்கை விவரம்

பத்திரிகையாளர் நல வாரியத்தில், பத்திரிகையாளர்கள் உறுப்பினர்களாக இணைவதற்காக தலைமையிடத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பத்திரிகையாளர் நலவாரியத்தில் சரிபார்த்து, உறுப்பினர் சேர்க்கைக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கான நலத் திட்ட உதவிகள்

1. கல்வி உதவித் தொகை—இரு குழந்தைகளுக்கு மட்டும்

- *10ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/-*
- *10 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,000/-*
- *11 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/-*
- *12 ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/-*
- *12 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,500/-*
- *வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,500/-*
- *விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,750/-*

- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/-
- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.3,000/-
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/-
- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/-
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/-
- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.6,000/-
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ. (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,000/-
- விடுதியிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ. (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,200/-

2) திருமண உதவித் தொகை ரூ.3,000/-

3) மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/-

4) கருச்சிதைவு/கருக்கலைப்பு உதவித் தொகை ரூ.3,000/-

5) கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் (உறுப்பினர்களுக்கு மட்டும்) ரூ.500/-

6) இயற்கை மரணத்திற்கு உதவித் தொகை ரூ.50,000/-

7) ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.5,000/-

2023 ஏப்ரல் 10]

பத்திரிகையாளர் நல வாரியத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வு செய்து, நலத் திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, செய்தித் துறை அமைச்சராகிய என்னை தலைவராகக் கொண்டு, 7 அலுவல் சார் உறுப்பினர்களையும், 6 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட பத்திரிகையாளர் நல வாரியக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரைப்படத் துறையினர் நல வாரியம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அகில இந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் 9-10-2009 அன்று உரையாற்றியபோது "தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின்மூலம் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலையில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும், தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்றுத் தமிழ்நாடு அரசு சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினை புதியதாக உருவாக்கும்" என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக செய்தித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு அவர்களை உறுப்பினர்—செயலாளராகவும், அலுவல்சார்/ அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட திரைப்படத் துறையினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நல வாரியத்தில், தற்போது 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட, சின்னத்திரைத் தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்நல வாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

திரைப்படத் துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை,

[2023 ஏப்ரல் 10

மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

நலத் திட்ட உதவிகள்

1. கல்வி உதவித் தொகை-இரு குழந்தைகளுக்கு

- *10 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/-*
- *10 ஆம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,000/-*
- *12 ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/-*
- *12 ஆம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,500/-*
- *முறையான பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,500/-*
- *விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,750/-*
- *முறையான பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.2,000/-*
- *விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.3,000/-*
- *தொழிற்கல்வி பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.2,000/-*
- *விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.4,000/-*
- *தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.4,000/-*
- *விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.6,000/-*

2023 ஏப்ரல் 10]

- *ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி (அ) பலவகை தொழிற்பயிற்சி பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,000/-*
- *விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி (அ) பலவகை தொழிற்பயிற்சி பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,200/—*

2. திருமண உதவித் தொகை ரூ.2,000/-

3. மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/-

4. கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித்தொகை ரூ.3,000/-

5. மூக்கு கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ரூ.500/-

6. விபத்து ஈட்டுறுதித் திட்டம்

- *விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு ரூ.1 இலட்சம்*
- *விபத்தினால் ஏற்படும் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10 ஆயிரம் முதல் ரூ.1 இலட்சம் வரை*
- *இயற்கை மரணத்திற்கு உதவித்தொகை ரூ.15,000/-*
- *ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.2,000/-*

நல வாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின்மூலம் திரைப்படத் துறை மற்றும் சின்னத்திரை ஆகியவற்றைச் சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை, அவர்களுக்கு ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை விவரம் பின்வருமாறு :

வ. எண்	வழங்கப்பட்ட ஆண்டு	மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை ரூ.
1	*2011*	*38*	*1,98,000/-*
2	*2013*	*728*	*21,39,000/-*
3	*2014*	*303*	*8,00,000/-*
4	*2016*	*277*	*8,00,250/-*

5	2017	259	9,41,500/-
6	2018	449	13,61,250/-
7	2019	205	7,20,000/-
8	2020	141	5,28,500/-
9	2021	226	8,64,500/-
	மொத்தம்	**2,626**	**83,53,000/-**

1-1-2021 முதல் 31-12-2021 வரை 222 உறுப்பினர்களிடமிருந்து ரூ.12,06,250/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)க்கான நலத் திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1-1-2022 முதல் 31-12-2022 வரை 122 உறுப்பினர்களிடமிருந்து ரூ.7,75,500/- (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்)க்கான நலத் திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நல வாரியக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

திரைப்பட விருதுகள்

தமிழ் கலாச்சாரம், தமிழர் பண்பாடு ஆகியவற்றை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லும் ஊடகமாக தமிழ்த் திரைப்படங்கள் திகழ்கின்றன. தமிழ்நாடு அரசால் 1968 ஆம் ஆண்டு முதல் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்திட ஊக்கப்படுத்தும் விதமாகச் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்ப கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து

2023 ஏப்ரல் 10]

விருதுகளை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக் குழு தேர்ந்தெடுத்து பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய் 75 ஆயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் 75 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூபாய் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப் பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்குத் தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆகிய 6 ஆண்டுகளுக்குரிய திரைப்பட விருதுகள் 183 கலைஞர்களுக்கு வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கடந்த 4-9-2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் உரிய விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இவ்விழாவில் செய்தித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்

துறை அமைச்சர் அவர்களும் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் 23 நபர்களுக்கு காசோலையும், 160 நபர்களுக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழையும் வழங்கினோம்.

2015 முதல் 2022 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்குவதற்கான நடுவர்கள் குழு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது வழங்கப்படுகிறது.

கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 3 அன்று வழங்கப்படும்.

2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட திரு. ஆரூர்தாஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3-6-2022 அன்று அவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

கலைத் துறை வித்தகர் விருதுகள்

கலைத் துறையில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, சமூக சீர்திருத்தக் கருத்துகளால் சிரிக்கவும், சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், கலை உலகத்தினரை தனது வசீகர குரலால் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், பன்முக ஆற்றலுடன் விளங்கிய நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கலை உலகில் உயர்ந்த நிலையில் மகுடம் சூடிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் 'கலைத் துறை வித்தகர் விருதுகள்' தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 10]

இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத் துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும் வழங்கப்படுகின்றன.

அரசு திரைப்பட மானியம்

சமூகப் பொறுப்பும், சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் 7 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2015 முதல் 2022 ஆம் ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப் பெரும் பங்கு வகித்துவரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூபாய் 2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்துடன் நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த

[2023 ஏப்ரல் 10

பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய சின்னத்திரை விருதுகள் 101 கலைஞர்களுக்கு வழங்குவதற்கு 2017ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இத்துறை அமைச்சர் என்கிற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் கடந்த 4-9-2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் உரிய விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கினோம். இவ்விழாவில் சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்கள் 20 நபர்களுக்கு காசோலையும், 81 தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 3 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

2014 முதல் 2022 ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி

சென்னையில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் விருதுகள்

கடந்த 2008–2009 ஆம் கல்வியாண்டு முதல் 2013-2014 ஆம் கல்வியாண்டுகளுக்கானத் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 30 நபர்களுக்கு வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 4-9-2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் உரிய விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கினோம். இவ்விழாவில் 30 மாணவர்களுக்கு தலா 1 பவுன் தங்கப் பதக்கம், ரூபாய் 5 ஆயிரத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

2014-2015 ஆம் கல்வியாண்டு முதல் 2021-2022 ஆம் கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரையரங்குகள், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு

தமிழ்நாட்டில் பொதுமக்களின் முதன்மையான பொழுதுபோக்கு அம்சமாக திரைப்படங்கள் உள்ளன. திரைப்படங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் தளமாகவும் மற்றும் பல கலைஞர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றன. அண்மை காலத்தில் திரைப்படத் துறை ஒரு பெரும் தொழிலாக உருவெடுத்துள்ளது.

ஒன்றிய அரசு, திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்கு சான்றளிக்கவும், திரையிடுவதை முறைப்படுத்தவும், 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் (மத்திய சட்டம் XXXVII/1952) இயற்றியுள்ளது. தமிழகத்தில் திரையரங்குகளை மேம்படுத்துவதற்கும்,

ஒழுங்குபடுத்துவதற்கும், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. மேலும், திரையரங்குகளை ஒழுங்குபடுத்தவும், திரையரங்குகளுக்கு வரும் பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு நலன் மற்றும் சுகாதாரமான சூழல் ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், மொத்தம் 1,044 திரையரங்குகள் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :—

வ. எண்	வகைபாடு	எண்ணிக்கை
1	நிரந்தரத் திரையரங்குகள்	1,007
2	பகுதி நிரந்தரத் திரையரங்குகள்	28
3	நடமாடும் திரையரங்குகள்	8
4	திறந்தவெளி திரையரங்குகள்	1
	மொத்தம்	**1,044**

தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 இல் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தை பொறுத்தவரை, காவல் துறை ஆணையரும், திரையரங்குகள் கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்குவதற்கும், திரையரங்குகளில் திரைப்படங்களைத் திரையிடுவதற்கு படிவம் 'C' உரிமம் வழங்கும் தகுதியான அதிகாரி ஆவார்கள். மேற்படி சட்டவிதிகளின்படி, வருவாய் நிருவாகத் துறையின் இணை ஆணையர் அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவை சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாக அரசும் (உள் துறை) உள்ளது. மேலும், திரையரங்கு வணிகத்தை பராமரிக்கும் வகையில், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955, தொடர்புடைய விதிகளின்படி, திரைப்பட பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை அரசு நிர்ணயிக்கிறது. குளிர்சாதன வசதி கொண்ட மல்டிபிளக்ஸ் திரையரங்குகளுக்கும், மாநகராட்சிகள்/ நகராட்சிகள்/நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் கிராம பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் அமைந்துள்ள குளிர்சாதன வசதிக்கொண்ட/குளிர்சாதன வசதியில்லாத இதர

2023 ஏப்ரல் 10]

திரையரங்குகளுக்கும் அதிகப்பட்ச மற்றும் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணத்தை அரசு நிர்ணயத்துள்ளது. பண்டிகை போன்ற நிகழ்வுகளில் சிறப்பு காட்சிகளுக்கு, உரிய பரிசீலனைக்குப் பின் அரசு அனுமதி அளிக்கிறது. இச்சட்டத்தினை மீறுபவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு

கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்), சட்டம் 1995, இந்தியா முழுவதும் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது, 2011 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் (எண் 21/2011)இன்படி கம்பிவடத் தொலைக்காட்சியினை மாவட்ட மற்றும் உட்கோட்ட நீதித் துறை நடுவர்கள் மற்றும் அனைத்து மாநகர காவல் துறை ஆணையாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 அல்லது 10 ஆகிய பிரிவுகளை மீறுவோர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழகத்தில் மாநகரங்களில் தொடர்புடைய காவல் ஆணையாளர்களும், மாவட்டங்களை பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் மேற்படி சட்டத்தை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வீடியோ சட்டமும் விதிகளும்

1984 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளை பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள்மூலம் திரையில் திரைப்படங்களை ஒளிப்பரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனிநபர்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல் துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக உள்ளனர்.

[*2023 ஏப்ரல் 10*

பதிப்புரிமைச் சட்டம்

*மத்திய சட்டமான, 1957 ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, படைப்பாளரை அவரது கலைப் படைப்புக்கான முதல் உரிமையாளர் என வரையறுக்கிறது. இச்சட்டம், பதிப்புரிமை பெற்ற உரிமையாளர்களுக்கு அவர்களுடைய கலை படைப்புகளை வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒலி-ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் உரிமைத் தொகை (*Royalty*) செலுத்துவதை கட்டாயமாக்குகிறது. பதிப்புரிமை பெற்ற படைப்புகளை ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பாக உபயோகிக்கும் மாணவர்களுக்கு இச்சட்டம் விலக்கு அளிக்கிறது. 1957 ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, திருட்டு வீடியோ நாடாக்கள் சம்பந்தமான குற்றங்கள், திரைப்படம், இசை மற்றும் இதர வகைகளின் பதிப்புரிமை சட்ட விதிமீறல்களை கட்டுப்படுத்துவதற்கு காவல் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.*

அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு காவல் துறையில் 1995 ஆம் ஆண்டு அரசால் நிறுவப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டு முதல் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, திருட்டு வீடியோக்களை கட்டுப்படுத்தவும், பதிப்புரிமை சட்ட மீறல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றம்) அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ், அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றம்), அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரெண்டு இடங்களில் இப்பிரிவின் அலகுகள் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட பிரிவின் சமீபத்திய வளர்ச்சியின்படி, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

ஆகியவற்றை ஒன்றிணைத்து அமலாக்கப் பணியகம் என்று ஒரே கூட்டுப் பிரிவாக செயல்பட அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு மறுசீரமைக்கப்பட்டு தலைமையகம், சென்னை, சென்னை மாநகரம் மற்றும் 4 மண்டலங்கள் வடக்கு (வேலூர்), மேற்கு (கோவை), மத்தியம் (திருச்சி), தெற்கு (மதுரை) என மொத்தம் 06 அலகுகளை கொண்டு காவல் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் சட்ட விரோதமாக புதிய தமிழ் திரைப்படங்களை ஒளிபரப்பு செய்தவர்களின்மீது தொடரப்பட்ட வழக்குகள்

*கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் (*Cable TV Network*) புதிய திரைப்படங்கள் சட்ட விரோதமாக திரையிடப்படுவதாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டன. வேலூர், விருதுநகர், கடலூர், திருநெல்வேலி, மாவட்டங்களில் 05 வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட 03 நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், ரூபாய் 1,21,500/- மதிப்புள்ள ஒளிபரப்பு சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினரால் 76 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரூபாய் 61,65,504/- மதிப்புள்ள சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.*

2022-2023 ஆம் ஆண்டிற்கான புதிய முயற்சிகள்

- *பேருந்துகளில் அடிக்கடி தணிக்கை மேற்கொண்டு உரிமம் இல்லாத புதிய படங்களை ஒளிபரப்புவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*
- *புதிய தமிழ் திரைப்படங்களை பதிவேற்றம் செய்யும் இணையதளங்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தவறு செய்யும் இணையதளங்களை முடக்க தமிழ்நாடு மின் ஆளுமை இயக்குனர் மூலமாக* CERTIN*—க்கு பரிந்துரை செய்ய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.*
- *திரையரங்குகளில் காணொலி கருவி (*Video*) மூலம் சட்ட விரோதமாக படம் எடுப்பதை தடுக்க, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்*

என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு திரையரங்குகளை மூடி முத்திரையிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

- *கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் 1995, வர்த்தக முத்திரைச் சட்டம் 1999 ஆகிய சட்டங்களை மீறும் உண்மையான குற்றவாளிகளை கண்டறிந்து அவர்கள்மீது தமிழ்நாடு சட்டம் 14/1982 இன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

- *மன அழுத்தத்தைக் குறைக்கவும், உடல் நலம் பேணவும் அதிகாரிகளுக்கும், காவல் ஆளிநர்களுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.*

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 2023 ஆம் ஆண்டுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துகளின் மதிப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வருடம்	**பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**	**கைது செய்யப்பட்ட குற்றவாளி களின் எண்ணிக்கை**	**கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய்)**	**கேபிள் தொலைகாட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**
2017	*5589*	*5591*	*51,24,96,880*	*13*
2018	*3102*	*3076*	*8,85,28,841*	*29*
2019	*762*	*710*	*3,37,19,738,*	*18*
2020	*292*	*297*	*1,16,13,631*	*35*
2021	*151*	*151*	*63,40,428*	*05*
2022	*76*	*80*	*61,65,504*	*05*
2023 (28.2.23)	*8*	*8*	*5,83,580*	—
மொத்தம்	**9,980**	**9,913**	**65,94,48,602**	**105**

2023 ஏப்ரல் 10]

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் செய்தித் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே திரைப்படத் தொழில்நுட்பங்களுக்கான பட்டப்படிப்புகளைக் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம் இந்நிறுவனம் ஆகும்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டது. கடந்த 1945 ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960 ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. 9-8-2021 முதல் இத்திரைப்படக் கல்விக்கூடம் "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" (Tamil Nadu Government M.G.R. Film and Television Institute) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பட்டப் படிப்புகள்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட பட்டயப் படிப்புகள், 2016-2017 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்துடன் (தற்போதைய தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம்) இணைந்து நான்காண்டு இளங்கலை காட்சிக்கலை பட்டப் படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2018 வரை வழங்கப்பட்ட Diploma in Film Technology (DFT) என்ற பட்டயத்திற்குப் பதிலாக 2016-2017 ஆம் கல்வியாண்டில் சேர்ந்து, 2019-2020 இல் Bachelor of Visual Arts (BVA) என்ற பட்டப் படிப்பினை நிறைவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பின்வரும் பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

1	இளங்கலை காட்சிக் கலை (ஒளிப்பதிவு)	—	Bachelor of Visual Arts (Cinematography)
2	இளங்கலை காட்சிக் கலை (எண்மிய இடைநிலை)	—	Bachelor of Visual Arts (Digital Intermediate)
3	இளங்கலை காட்சிக் கலை (ஒலிப்பதிவு)	—	Bachelor of Visual Arts (Audiography)
4	இளங்கலை காட்சிக் கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)	—	Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing)
5	இளங்கலை காட்சிக் கலை (படத்தொகுப்பு)	—	Bachelor of Visual Arts (Film Editing)
6	இளங்கலை காட்சிக் கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)	—	Bachelor of Visual Arts (Animation and Visual Effects)

மாணவர்களின் சேர்க்கை

ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூ.15,000/-ம், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/-ம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.1,000/-ம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முழுவதும் விலக்களிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்குக் குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவியை தமிழக அரசு 2017-2018 ஆம் ஆண்டு முதல் ரூ.15,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள்

2023 ஏப்ரல் 10]

தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி, ஆறு துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குறும்படம் என மொத்தம் 14 குறும்படங்கள் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

குறும்பட விருது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோர் வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக்கான குறும்பட விருது" என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் மற்றும் ரூ.5,000/— ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

விருது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்கள் "சென்னை சர்வதேசத் திரைப்பட விழா"வில் திரையிடப்பட்டு சிறந்த படைப்பாகத் தேர்வாகும் குறும்படத்திற்கு சிறப்பு விருது ரூ.10,000/— ரொக்கப் பரிசுடன் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி

தற்போதைய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் குறும்படங்கள் மற்றும் செயல்முறை பயிற்சிக்காக, திரைத் துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டு, தமிழக அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

[2023 ஏப்ரல் 10

நிறைவுரை

"நமது அரசு மக்களுக்காக உள்ள அரசு, ஏழை எளியவருக்கான அரசு, நாம் எது செய்தாலும் அது அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்க வேண்டும்."

—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

அந்த வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பல்வேறு பிரிவுகளான செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, சமூக ஊடகப் பிரிவு, விழாக்கள் பிரிவு, களவிளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நல வாரியம், திரைப்படத் துறையினர் நல வாரியம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், மாநிலச் செய்தி நிலையம், அரசின் சாதனைகளைச் சொல்லும் 'தமிழரசு' மாத இதழ், சிறப்பு வெளியீடுகள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரியப்படுத்தும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் எனப் பல்வேறு பிரிவுகளின்மூலம் தமிழ்நாடு அரசின் எண்ணற்ற திட்டங்களின் சரித்திரச் சாதனைகளை மக்களிடம் கொண்டுசேர்க்கும் தன்னிகரற்ற பணிகளைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறப்புடன் நிறைவேற்றி வருகிறது.

அரசுக்கும், மக்களுக்கும் ஒரு சகோதரத்துவ உணர்வை வளர்த்து, அனைத்து ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை மக்களுக்குத் தெரிவித்துத் தெளிவுப்படுத்துவதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை என்றும் புதிய உத்வேகத்துடன் செயல்படும்.

"அரசைத்தேடி மக்கள் வந்த காலம் இருந்தது. இப்போது அதை மாற்றி, மக்களைத்தேடி அரசு செல்லும் காலம் இது என்பதை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது." என்றுரைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில் என்றும் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத் துறை தன் பணிகளைச் செயல்படுத்தும்.

இணைப்பு-1

வரவு -செலவுத் திட்ட மதிப்பீடு 2023 -24 தொகை (ரூபாய் ஆயிரத்தில்)

		2021-22 கணக்குகள்	2022-23 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2022-23 திருத்த மதிப்பீடு	2023-24 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப் பணிகள்	99,93	2,29,66	2,29,66	2,40,00
2205	கலையும் பண்பாடும்	...	12,29	10,09	11,08
2220	செய்தி மற்றும் விளம்பரம்	104,33,21	125,28,16	145,10,88	139,00,96
2230	தொழிலாளர் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு	...	35,35	52,38	45,00
2230	சமூகப் பாதுகாப்பும் நலனும்	4,81,95	2,11,81	2,67,61	2,67,61
2250	ஏனைய சமூகப் பணிகள்	12,69	16,09	14,90	16,34
4202	கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு	...	1	1	1
	மொத்தம்	**11,02,778**	**13,03,337**	**15,08,553**	**14, 48,100**

இணைப்பு-V

(290 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

"அச்சிடுதல் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் ஒரு நூற்றாண்டு, ஆயிரம் ஆண்டுகளுக்குச் சமமாக இருந்தது"

முன்னுரை

அச்சு இயந்திரமானது மனித வளர்ச்சியின் தோற்றத்தையும் மற்றும் நவீன உலகத்தின் தொடக்கத்தையும் ஏற்படுத்தியது. கலை, இலக்கியம், பத்திரிகை, அரசியல், புலமை, அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் அனைத்துத் துறைகள் தொடர்புடைய சிந்தனைகளில் அனைத்து முக்கிய மாற்றங்களையும் கொண்டு வருவதற்கு கருவியாக இருந்து, அச்சு தாக்கத்தை ஏற்படுத்தியது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர், தகவல் தொடர்பில் ஏற்பட்ட காலவிரயம் குறைக்கப்பட்டு, தகவல்கள் மக்களை எளிதாக சென்றடைய அச்சகமும், அச்சு இயந்திரங்களும் உந்து சக்தியாக திகழ்கின்றன. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப நவீன இயந்திரங்களை நிறுவி அச்சுப் பணிகளை பல வண்ணங்களில், உயரிய தரத்துடனும், குறுகிய காலத்திலும் செயலாக்கம் செய்து அனைத்துத் துறைகளுக்கும் சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

1. தோற்றமும் வளர்ச்சியும்

அனைத்து அரசுத் துறைகளின் முதுகெலும்பாகத் திகழும் அரசு மைய அச்சகம் முதன்முதலில் சென்னை மாகாணத்தின் ஆட்சிப் பீடமாக இருந்த புனித ஜார்ஜ் கோட்டையில் 1831 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17—ம் நாள் அன்று அரசின் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிட 10 பணியாளர்களுடன் ஒரு சிறிய அச்சகமாகத் துவங்கப்பட்டது.

இத்தகைய எளிய துவக்கத்துடன், படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இன்றைய அகவை 191 ஆண்டுகள் ஆகும்.

2. துறையின் குறிக்கோள்

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் எழுதுபொருள் மற்றும் அச்சுத் தேவைகளை, அரசு மைய அச்சகம், 6 கிளை அச்சகங்கள் மற்றும் எழுதுபொருள் அலுவலகம்மூலம் நிறைவு செய்வதே இத்துறையின் குறிக்கோள் ஆகும். இதைத் தவிர, பல்கலைக்கழகத் தேர்விற்கான விடைத்தாள்கள், அரசு சார் நிறுவனங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் நீதித் துறைமூலம் வெளியிடப்படும் நூல்கள் ஆகியவற்றை அச்சுக் கட்டணங்கள் பெற்று அச்சிட்டு அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி கண்டுள்ள இக்காலச் சூழலில் அரசு அச்சகங்களின் தரத்தினை உயர்த்தும் தொடர் நடவடிக்கையில், நவீன தொழில்நுட்பத்துடன், குறைந்த மனித ஆற்றலைக் கொண்டு விரைவாகவும், பல வண்ணங்களில் உயர் தரத்துடனும் அச்சிடும் வகையில், நமது நாட்டின் சிறந்த அரசு அச்சகமாக செயல்படுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

3. அலகுகளின் அமைவிடங்கள்

ஆணையரகத்தின் தலைமையின்கீழ் அரசு மைய அச்சகம், 6 அரசு கிளை அச்சகங்கள் மற்றும் ஓர் அரசு எழுதுபொருள் அலுவலகம் ஆகியவை அரசின் அச்சுத் தேவைகள் மற்றும் எழுதுபொருள் வழங்குதலை நிறைவு செய்து வருகின்றன.

வ. எண்	அலகு	அமைந்துள்ள இடம்
1	*எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரகம், சென்னை.*	*110, அண்ணாசாலை, சென்னை—600 002.*
2	*அரசு மைய அச்சகம், சென்னை.*	*தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை—600 001.*

[2023 ஏப்ரல் 10

வ. எண்	அலகு	அமைந்துள்ள இடம்
3	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.	பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை—622 001.
4	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.	உளுந்தூர்பேட்டை பிரதான சாலை, விருத்தாசலம்—606 002.
5	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.	பிளாட் எண் சி—9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி—620 015.
6	அரசு கிளை அச்சகம், சேலம்.	ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்—636 004.
7	அரசு கிளை அச்சகம், மதுரை.	ரேஸ் கோர்ஸ் சாலை, கோ. புதூர், மதுரை—625 007.
8	அரசு கிளை அச்சகம், மதுரை.	சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை—625 023.
9	அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை.	64, இராஜாஜி சாலை, சென்னை—600 001.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வந்த அரசு கிளை அச்சகத்தில் வழக்குப் பட்டியல்கள் அச்சிடும் பணி நிறுத்தப்பட்டதாலும், நீதிமன்ற வளாக விரிவாக்கத்திற்கான இடப் பற்றாக்குறை காரணமாகவும், அச்சக வளாகத்தினை நீதித் துறை வசம் ஒப்படைக்க கோரியதைத் தொடர்ந்து, இவ்வச்சகத்தின் பயன்பாட்டிலிருந்த இயந்திரங்களை தேவையின் அடிப்படையில், அரசு மைய அச்சகம் மற்றும் பிற கிளை அச்சகங்களுக்கு மாற்றம் செய்து நிறுவப்பட்டும், இவ்வச்சகத்தில் பணிபுரிந்து வந்த 65 பணியாளர்கள் துறையின் பிற அலகுகளில் காலியாக இருந்த பணியிடங்களில் பணியிட மாறுதல் செய்யப்பட்டதை தொடர்ந்தும் அச்சக வளாகம் 30-11-2022 அன்று நீதிமன்றம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 10]

4. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஒரு கண்ணோட்டம்

அ. நிருவாகம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையானது இந்திய ஆட்சிப் பணி நிலையில், துறைத் தலைவரான ஆணையர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு இணை இயக்குநர் பொது நிருவாகப் பணிகளையும், பொது மேலாளர் நிலையில் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருவதோடு, தினசரி பணிகள் மற்றும் கொள்கை ரீதியிலான முடிவுகளை மேற்கொள்வதில் இவர்கள் ஆணையருக்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகின்றனர். கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரவு—செலவு, கணக்கு மற்றும் தணிக்கைப் பணிகளைக் கண்காணிக்க முதன்மை கணக்கு அலுவலர் ஒருவரும், அச்சுக் கட்டணம் நிர்ணயம் மற்றும் தளவாடங்களை மதிப்பீடு செய்வதற்கு கணக்கு அலுவலர் ஒருவரும், தொழிலாளர் நலன்களை கண்காணிக்க தொழிலாளர் நலத் துறையிலிருந்து தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மற்றும் உதவித் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் ஆணையரகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆ. பணியாளர்கள்

4,870 பணியிடங்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென ஒப்பளிக்கப்பட்டதில், தற்போது 241 மாற்றுத் திறனாளி பணியாளர்கள் பணிபுரிகின்றனர். 573 பெண் மற்றும் 992 ஆண் பணியாளர்கள் என ஆக மொத்தம் 1565 பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர்.

மாற்றுத் திறனாளி பணியாளர்களின் விவரம்:

பார்வைத் திறன் குறைந்தோர் 140 (ஆண்-130, பெண்-10), செவித்திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர் 7 (ஆண்-5, பெண்-2), உடல் குறைபாடுகள் உள்ளோர் 93 (ஆண்-61, பெண்-32), மனநலம் சார்ந்த குறைபாடு உள்ளோர் 1 (ஆண்) என மொத்தம் 241 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தனிச் சிறப்பாக மாற்றுத் திறனாளிகள் தன்னம்பிக்கையுடன் வாழ, அரசுப் பணியில் அரசு நிர்ணயித்துள்ள 4 விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும்

மேலாக 15 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான தொழில்நுட்பக் கல்வித் தகுதி பெற்றுள்ள 383 பெண் பணியாளர்களுடன் (37 விழுக்காடு) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை செயல்பட்டு வருகிறது.

இ. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அதன் அலகுகள்

I. ஆணையரகம்

ஆணையரக நிருவாக அமைப்பு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 14 அலுவலர்கள் மற்றும் 200 பணியாளர்களுடன் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் தலைமையிடமாக செயல்பட்டு வருகிறது.

நிருவாகப் பிரிவில் இணை இயக்குநர்/மாவட்ட வருவாய் அலுவலர்-1, உதவி இயக்குநர் நிலையில் ஆணையரின் நேர்முக உதவியாளர்-1, உதவி இயக்குநர்கள்-2, தொழில்நுட்பப் பிரிவில் பொது மேலாளர்-1, துணைப் பணி மேலாளர் நிலையில் மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்-1, உதவிப் பணி மேலாளர் (கொள்முதல்-1 மற்றும் உதவிப் பணி மேலாளர் (படிவங்கள்-1, வெளியீடுகள் பிரிவில் துணை இயக்குநர்-1, தொழிலாளர் நலப் பிரிவில் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர்-1, துணை ஆய்வாளர் நிலையில் உதவித் தொழிலாளர் நல அலுவலர்-1, கணக்கு மற்றும் தணிக்கைப் பிரிவில் முதன்மைக் கணக்கு அலுவலர்-1 மற்றும் விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர்-1 ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

தலைமை அலுவலகத்தின் பணிகள்

(i) காலத்திற்கேற்ப நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள், உதிரி பாகங்கள், அச்சுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பல்வகை காகிதங்கள், அட்டைகள், அச்சுப் பயன்பாட்டுப் பொருட்கள், அலுவலகப் பயன்பாட்டு இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா

திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள்மூலம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு அச்சகங்களுக்கு கொள்முதல் செய்து வழங்குதல்.

(ii) காகித இனங்கள் மற்றும் அச்சுப் பணிக்குத் தேவையான காகித இனங்களில் 90 சதவீதம், தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) மூலமாகவும், சிறப்பு வகை காகிதங்கள் மற்றும் அட்டைகள், தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகள்/அரசு அலுவலகங்களுக்கு கொள்முதல் செய்தல்.

(iii) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில் உள்ள இயந்திரங்கள், பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கொள்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அச்சுப் பணிகள் ஒதுக்கீடு செய்து அதன் செயலாக்கத்தினை கண்காணித்தல்.

(iv) பல்கலைக்கழக விடைத்தாட்கள், படிவங்கள், பதிவேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் வெளியிடும் நூல்களுக்கு அச்சுக் கட்டணம் நிர்ணயித்தல், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியத்துடன் தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்பட்ட நூல்களுக்கான அச்சுக் கட்டணத்தை சரிபார்த்தல் மற்றும் விலை நிர்ணயித்தல்.

(v) கட்டண முறையில் அரசிதழ்களில் பெயர் மாற்றம் மற்றும் மதம் மாற்றம் தொடர்பான பெயர் மாற்றம் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பெயர் மாற்றம் செய்தல், அரசின் அறிவிக்கைகள், நீதிமன்றங்களால் வெளியிடப்படும் நொடிப்பு மனுக்கள் ஆகியவற்றை வெளியிடுதல் போன்றவை ஆணையரகத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளாகும்.

(vi) மேலும், இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணியமைப்பு குறித்த பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

[*2023 ஏப்ரல் 10*

II. அரசு எழுதுபொருள் அலுவலகம்

மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுதுபொருள் பிரிவும், தனியாக செயல்பட்டு வந்த அச்சுத் துறையும் இணைக்கப்பட்டு, 1953 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் "எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையாக" மாற்றப்பட்டு, அரசு எழுதுபொருள் அலுவலகம், இராஜாஜி சாலை, சென்னையில் இயங்கி வருகிறது.

அ) இரு உதவி இயக்குநர்கள், ஒரு உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 74 பணியாளர்களுடன் இவ்வலுவலகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகளுக்குத் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து தேவைப் பட்டியலின் அடிப்படையில் கட்டணம் ஏதுமின்றி வழங்கி வரும் அலுவலகமாகச் செயல்படுகிறது.

ஆ) நாடாளுமன்ற தேர்தல், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலுக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பல்வகைப் பொருட்களை கொள்முதல் செய்து அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு வழங்கும் பணிகள் எழுதுபொருள் அலுவலகத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர, கட்டணத்தின் அடிப்படையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்கு எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

இ) 2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடத்தினை புனரமைப்பதற்கு ஏதுவாக ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13-2-2023 முதல் பொதுப் பணித் துறைமூலம் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 10]

III. அரசு மைய அச்சகம், சென்னை

அ) அரசு மைய அச்சகமானது டிசம்பர் திங்கள் 1831 ஆம் ஆண்டு, 10 தொழிலாளர்களுடன் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் அரசிதழ்களை அச்சிடுவதற்கென துவங்கப்பட்டு 1888 ஆம் ஆண்டில் தங்கசாலையில் உள்ள கட்டடத்திற்கு (Mint Building) மாற்றப்பட்டது.

அச்சகத்தின் செயல்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புப் பணிகளுக்காக, காவல் துறையிலிருந்து ஒரு துணை காவல் கண்காணிப்பாளரும், தொழிலாளர் நலன் பேண ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலரும், அச்சக வளாகத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேண, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவரும் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

இவ்வச்சகம் நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, சுகாதாரம் மற்றும் தொழிலாளர் நலப் பிரிவுகள், 672 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் பணி மேலாளர்-I தலைமையின்கீழ் செயல்படுகிறது.

தொழில்நுட்பப் பிரிவில் பணி மேலாளர்-I, பணி மேலாளர்-II, துணைப் பணி மேலாளர்கள்-3, உதவிப் பணி மேலாளர்கள்-10, நிருவாகம் மற்றும் அமைச்சுப் பிரிவில் உதவி இயக்குநர்கள்-3, இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு பிரிவில் உதவிப் பொறியாளர்-1, பாதுகாப்பு பிரிவில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்-1, வரவு-செலவு மற்றும் கணக்குப் பிரிவில் உதவிக் கணக்கு அலுவலர்-1, தொழிலாளர் நலப்பிரிவில் உதவித் தொழிலாளர் நல அலுவலர்-1 மற்றும் சுகாதாரப் பிரிவில் சுகாதார ஆய்வாளர்-1 ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.

ஆ) அரசு மைய அச்சகத்தில் உள்ள வரவு-செலவு மற்றும் அதிரகசியப் பிரிவுகள், அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து விதமான கமுக்கப் பணிகளை மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும் அச்சிட்டு வழங்கிட ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

இ) மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தேவையான காகிதத்தாள் கற்றை (Letter Pad), நிதிநிலை அறிக்கை, அனைத்து துறைகளுக்கான மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்புகள், பல்கலைக்கழக தேர்வுகளுக்கான விடைத்தாட்கள், 10 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான அரசுத் தேர்வுத்துறையின் விடைத்தாட்கள், நாட்காட்டிகள், நாட்குறிப்பேடுகள் மற்றும் அகல துணி வேய்ந்த காகித உறைகள் ஆகியவை நவீன அச்சு இயந்திரங்களைக் கொண்டு குறித்த நேரத்தில் உயரிய தரத்துடன் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

ஈ) அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கவும், அரசு ஆவணங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் 2021-2022 ஆம் நிதியாண்டில், முதன்முதலாக இத்துறைக்கென ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) மதிப்பில் சுமையூர்தி (பதிவெண் TN 01 G 8902) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

உ) 2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி, அரசு மைய அச்சகத்திற்கு கொள்முதல் செய்து நிறுவப்பட்ட இயந்திரங்களின் விவரங்கள்:

(i) குறைந்த காலம் மற்றும் செலவில், குறைந்த எண்ணிக்கையிலும், பல வண்ணங்களிலும் வழுவழுப்பான தாள்கள், அட்டைகள் மற்றும் மென்தகடுகள் ஒட்டப்பட்ட அச்சுத் தாள்களில் அச்சுப் பணிகள் செயலாக்கத்திற்காக, நான்கு வண்ண டோனர் அடிப்படையிலான எண்ணிம உற்பத்தி அச்சுப் பொறி (Four Colour Toner Based Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(ii) குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றலைக்கொண்டு அதிக

2023 ஏப்ரல் 10]

பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

(iii) குறைந்த கால அவகாசத்தில் குறைந்த மனித ஆற்றலுடன் பல்வேறு நிலையிலான அச்சு செயலாக்க நடைமுறைகளை தவிர்த்து, பல வகையான காகிதங்களில், மாறுபடும் தரவுகளுடன் (Variable Data) பல வண்ணங்களில் அச்சு செயலாக்கம் செய்வதற்கு, நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) 2 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(iv) அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சடிக்கப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) பெரியது 50 எண்ணிக்கைகள் மற்றும் சிறியது 50 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஊ) அரசு மைய அச்சகத்தில் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்படும் முக்கிய இனங்கள்:

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்த உரை, விரிவான மானியக் கோரிக்கை மற்றும் வரவு—செலவு ஆவணங்கள், அனைத்து அரசுத் துறைகளுக்கான கொள்கை விளக்க குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம், அதிரகசியப் பணிகள், பல்வேறு சட்டமன்ற குழுக்களின் அறிக்கைகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கை குறிப்புகள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கைகள், படிவங்கள் மற்றும் வாக்குச் சீட்டுகள், பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், வாக்குச் சீட்டுகள், பொது மக்களுக்கான வெளியீடுகள் மற்றும் படிவங்கள்.

தமிழ்நாடு அரசிதழ்கள், சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் பல வண்ணங்களில் ஆண்டு அறிக்கைகள், அரசு தொழில்நுட்பக் கல்வித் துறை மற்றும் அரசுத் தேர்வுகள் துறை நடத்தும் தேர்வுகளுக்கான விடைத் தாட்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள், காலமுறை வெளியீடுகள், மக்கள் நல்வாழ்வு, சமூக நலம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளுக்கான படிவங்கள், பல்கலைக்கழகங்களுக்கான விடைத் தாட்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கான பலவகை புத்தகங்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறைக்குத் தேவையான புற நோயாளிகளுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள்.

மேலும், இவ்வச்சகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்படுகின்றன.

IV. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின்கீழ் 1883 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த இவ்வச்சகம், 1949 ஆம் ஆண்டு முதல் அரசு கிளை அச்சகமாக இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகமானது துணைப் பணி மேலாளர் ஒருவரை அலகு தலைவராகக் கொண்டு 84 பணியாளர்களுடன் செயல்படுகிறது.

இக்கிளை அச்சகத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஓய்வூதியத் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, காவல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட/நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை ஆண்டுதோறும் தேவைக்கேற்ப அச்சிடப்பட்டு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 10]

இவை தவிர, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் செயலாக்கப்படுகின்றன.

*2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக்கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (*Variable Data*) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு, வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (*Black and White Inkjet Digital Production Printer*) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (*Plastic Pallets*) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

V. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, பொதுப் பணித் துறை, தொழில் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுத் தேவைப் பட்டியல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

1961 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1981 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையில், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 91 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மேலும், வேலூர், கடலூர், திருப்பத்தூர், விழுப்புரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 10

*2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (*Variable Data*) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு, வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (*Black and White Inkjet Digital Production Printer*) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (*Plastic Pallets*) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

VI. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

சிறைத் துறை, காவல் துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான பொது படிவங்கள், தன் பதிவேடுகள் உட்பட 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட/ நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவை அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

1965 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள், திருச்சிராப்பள்ளி அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவங்கப்பட்ட அரசு கிளை அச்சகம், 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில், சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வச்சகம் துணைப் பணி மேலாளர் தலைமையின்கீழ், உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 99 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

*2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (*Variable

2023 ஏப்ரல் 10]

Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு, வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

VII. அரசு கிளை அச்சகம், சேலம்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசுத் தேர்வுகள் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, காவல் துறை மற்றும் அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட/நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஒவ்வோர் ஆண்டின் தேவைக்கேற்ப அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

இவ்வச்சகம் 1966 ஆம் ஆண்டு சேலம் குகைப் பகுதியில் துவங்கப்பட்டு, பின்னர், ஐந்து சாலையில் உள்ள "சிட்கோ" தொழிற்பேட்டையில் 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆறாம் நாள் முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகம், துணைப் பணி மேலாளர் தலைமையின்கீழ், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 111 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப்

பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும் 50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

VIII. அரசு கிளை அச்சகம், கோ. புதூர், மதுரை

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வணிக வரித் துறை, காவல் துறை, நீதித் துறை மற்றும் பதிவுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட/நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவைப் பட்டியலின்படி இவ்வச்சகத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், மதுரை கோ.புதூரில், சொந்தக் கட்டடத்தில் துணைப் பணி மேலாளர் தலைமையின்கீழ், 2 உதவிப் பணி மேலாளர்கள், 1 உதவி இயக்குநர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 192 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இவ்வச்சகத்திற்கு குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில், குறைவான மனித ஆற்றலைக் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சுப் பணிக்கென கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரம் (Black and White Inkjet Digital Production Printer) ஒன்றும் மற்றும் அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்து பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்கு எடுத்துச் செல்லவும்

2023 ஏப்ரல் 10]

50 எண்ணிக்கையிலான நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

IX. அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை

2006 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் துவங்கப்பட்ட இவ்வச்சகத்தில் 22-1-2007 முதல் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளைக்குத் தேவையான நீதித் துறை சார்ந்த படிவங்கள் மற்றும் பதிவேடுகளின் அச்சுப் பணிகள், தினசரி மற்றும் வார வழக்குப் பட்டியல்கள் செயலாக்கம் செய்யப்படுகின்றன. இக்கிளை அச்சகத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையின்கீழ் அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் உட்பட 28 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

5. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள்

துணை இயக்குநரது நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில், இத்துறையின்மூலம் அச்சடிக்கப்பட்ட அரசு வெளியீடுகள், விதிப் புத்தகங்கள், நடைமுறை நூல்கள் மற்றும் ஒன்றிய அரசின் சட்டப் புத்தகங்களுடன் அரசு பணியாளர்களுக்கான பணிப் பதிவேடுகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் இந்திய அரசியலமைப்பு புத்தகங்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததன்மூலம் ரூ.6,14,303/- (ரூபாய் ஆறு இலட்சத்து பதினான்காயிரத்து முன்னூற்று மூன்று மட்டும்) மற்றும் பெயர் மாற்றம் குறித்த வெளியீடுகள்மூலம் ரூ.95,19,475/- (ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று எழுபத்தைந்து மட்டும்) வருவாய் ஈட்டப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக திருச்சி மற்றும் மதுரையில் உள்ள கிளை அச்சக வளாகங்களில் உள்ள துணை விற்பனை நிலையங்கள், மத்திய மற்றும் தென்மாவட்டங்களும் உரிய காலத்தில் விரைவாகப் பயன்பெறும் வகையில் இயங்கி வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில் தனியார் அறிவிக்கைகள், பிற அறிவிக்கைகள் மற்றும் விதிப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டதன்மூலம் மதுரை துணை விற்பனை நிலையத்தில் ரூ.15,85,249/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது மட்டும்), திருச்சி துணை விற்பனை நிலையத்தில் ரூ.16,04,988/- (ரூபாய் பதினாறு இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம் குறித்த அரசிதழ்கள், பணிப் பதிவேடுகள், சட்டத் தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், அரசிதழ்கள் ஆகியவை அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

6. பெயர் மாற்றம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் மதுரை, திருச்சி அரசு கிளை அச்சகங்களில் இயங்கிவரும் துணை விற்பனை நிலையங்களில், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்தினால் ஏற்படும் பெயர் மாற்றம் மற்றும் அரசு அறிவிக்கைகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், பெயர் மாற்றம் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தும் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். பெயர் மாற்றம் செய்து ஆங்கிலத்தில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.415/-ம், பெயர் மாற்றம் செய்து தமிழில் அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.115/-ம் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கட்டணம் ஏதுமின்றி, மூன்றாம் பாலினத்தவர் பெயர் மாற்றம் குறித்து அரசிதழில் வெளியீடு செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டில் 31,823 நபர்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் பெயர் மாற்ற விவரங்களை அரசிதழில் வெளியிட்டு கட்டணமாக ரூ.1,27,09,712/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று பன்னிரெண்டு

2023 ஏப்ரல் 10]

மட்டும்) தனியார் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதன்மூலம் ரூ.33,62,753/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) ஆக மொத்தம் ரூ.1,60,72,465/- (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்று அறுபத்தைந்து மட்டும்) அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

7. அரசு அச்சகங்களில், 2022-2023 ஆம் ஆண்டில் அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம்:

(i) நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள்/பதிவேடுகள்/உறைகள்

வ. எண்	துறை அலுவலகங்கள் விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்
1.	நீதித் துறை	4,87,000	70,179	24,000
2.	மாநில சட்டமன்றம்	——	1,20,070	—
3.	காவல் துறை	2,07,52,198	4,28,857	44,000
4.	மருத்துவத் துறை	3,06,68,000	1,19,000	—
5.	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்	1,30,90,000	15,000	—
6.	பொதுப் பணித் துறை	11,33,012	900	—
7.	பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	5,49,185	—	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	துறை அலுவலகங்கள் விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்
8.	ஆதி திராவிடர் நலத் துறை	*15,38,305*	*56,795*	—
9.	வருவாய்த் துறை	*1,29,85,900*	*31,000*	—
10.	அனைத்து துறைகளுக்கான பொதுப் படிவங்கள்	*11,31,012*	*2,89,500*	*4,53,075*
11.	கருவூலப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள்	*9,50,700*	*34,570*	—
12.	தலைமைச் செயலகப் பணிகள்	*1,85,000*	*8,320*	—
13.	உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை	*2,00,000*	—	—
14.	வேளாண்மைத் துறை	*1,12,350*	*56,170*	—
15.	கால்நடை பராமரிப்புத் துறை	*5,000*	*7,000*	—
16.	தீயணைப்புத் துறை	—	*50,110*	—
17.	வனத் துறை	—	*630*	—
	மொத்தம்	**8,37,87,662**	**12,88,101**	**5,21,075**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

(ii) நிலைப்படுத்தப்படாத படிவங்கள்/பதிவேடுகள்/உறைகள்

வ. எண்	விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்	நாட்காட்டிகள்
1	மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அலுவலகங்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை, வாழ்த்து அட்டைகள் மற்றும் கோப்பு அட்டைகள்	*89,550*	—	*1,03,550*	*60,325*
2	சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகள், அறிவிப்புகள் மற்றும் மக்கள் சாசனம்	—	*1,20,070*	—	—
3	மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடுகள்	—	*2,000*	—	—
4	தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்	*1,01,800*	*1,010*	*14,000*	—
5	தேர்தல் துறை	*6,53,62,805*	*1,466*	*2,54,600*	—
6	முன்னாள் படை வீரர் நலத் துறை இயக்ககம்	*6,56,100*	*85,924*	—	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 10

வ. எண்	விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்	நாட்காட்டிகள்
7	காவல் துறை	—	600	3,000	—
8	மருத்துவத் துறை	3,56,68,000	1,19,000	2,57,000	—
9	பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை	10,20,600	2,250	—	—
10	மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்	—	255	—	—
11	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	4,000	16,150	—	—
12	பொதுத் (தொலைபேசி)துறை	—	6,000	—	—
13	தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை	—	2,000	—	—
14	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை	2,000	—	2,000	—
15	தமிழ் வளர்ச்சித் துறை	—	4,000	—	—
16	நீதித் துறை	17,41,600	21,469	40,700	43,000
17	கடல்சார் வாணிபத் துறை	—	5,000	—	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]

வ. எண்	விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்	நாட்காட்டிகள்
18	மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம், தேசிய புள்ளியியல் அலுவலகம்	*48,300*	—	—	—
19	இந்திய ஓமியோபதி துறை	—	*7,550*	—	—
20	பொதுப் பணித் துறை	—	—	*2,000*	—
21	கல்வித் துறை	*2,28,07,500*	*84,94,836*	*9,83,000*	—
22	தீயணைப்பு-மீட்புப் பணிகள் துறை	—	*900*	—	—
23	சாலை போக்குவரத்து துறை	—	*400*	—	—
24	மனித உரிமை ஆணையம்	—	*15,680*	—	—
25	இந்து சமய அறநிலையத் துறை	—	*2,500*	—	—
26	தேசிய மாணவர் படை	—	*1,000*	—	—
27	பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	—	*5,000*	—	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்	நாட்காட்டிகள்
28	ஆதி திராவிடர் நலத் துறை	—	5,000	—	—
29	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்	—	3,000	—	—
30	மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	—	12,500	—	—
31	ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை	—	—	30,000	—
32	தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (ம) வரலாற்று ஆராய்ச்சித் துறை	78,000	—	—	—
33	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	—	—	2,000	—
34	6-வது மாநில நிதிக் குழு	—	2,400	—	—
35	போக்குவரத்துத் துறை	—	10,000	—	—
36	தடய அறிவியல் இயக்ககம்	65,000	114	—	—
37	பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம்	—	1,300	—	—
38	விதைச் சான்று அட்டைகள்	47,13,318	—	—	—

2023 ஏப்ரல் 10]

வ. எண்	விவரம்	படிவங்களின் எண்ணிக்கை	புத்தகங்களின் எண்ணிக்கை	உறைகள்	நாட்காட்டிகள்
39	வேலைவாய்ப்புத் துறை	2,36,850	—	—	—
40	எழுதுபொருள் அலுவலகம்	14,67,500	—	1,94,000	—
	மொத்தம்	**13,40,62,923**	**89,49,374**	**18,85,850**	**1,03,325**

அரசு அச்சகங்களில் 2022-2023 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்கப்பட்ட பல்கலைக்கழக பணிகளின் விவரம்

வ. எண்	விவரம்	விடைத் தாட்கள்	புத்தகங்கள்	உறைகள்
1	தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம்	1,15,000	—	—
2	அண்ணாமலை பல்கலைக்கழகம்	17,18,237	61,425	—
3	அண்ணா பல்கலைக்கழகம்	29,89,500	1,84,485	—
4	அழகப்பா பல்கலைக்கழகம்	7,25,000	—	—
5	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	7,13,786	1,85,420	40,000
6	சென்னை பல்கலைக்கழகம்	42,25,000	—	—
7	பாரதிதாசன் பல்கலைக்கழகம்	25,00,000	—	—
	மொத்தம்	**1,29,86,523**	**4,31,330**	**40,000**

2022-2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகப் பணிகளின்மூலம் ஈட்டப்பட்ட வருவாய்

வ. எண்	விவரம்	அச்சுக் கட்டணம் (ரூபாய்)
1	தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம்	19,63,961/-
2	அண்ணாமலை பல்கலைக்கழகம்	6,13,22,946/-
3	அண்ணா பல்கலைக்கழகம்	4,51,30,009/-
4	அழகப்பா பல்கலைக்கழகம்	1,29,77,313/-
5	திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	1,29,61,669/-
6	சென்னை பல்கலைக்கழகம்	8,64,84,680/-
7	பாரதிதாசன் பல்கலைக்கழகம்	42,33,700/-
	மொத்தம்	**22,50,74,278/-**

2022-2023 ஆம் ஆண்டு அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட அச்சுக் கட்டண விவரம்

வ. எண்	விவரம்	அச்சுக் கட்டணம் (ரூபாய்)
1	ஆதி திராவிடர் நலத் துறை	51,935/-
2	குடும்ப நலத் துறை	37,31,011/-
3	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத் துறை	39,941/-
4	காவலர் பயிற்சிக் கல்லூரி	29,48,362/-

2023 ஏப்ரல் 10]

வ. எண்	விவரம்	அச்சுக் கட்டணம் (ரூபாய்)
5	ESI மருத்துவமனை	2,00,605/-
6	இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை	52,42,124/-
7	இந்து சமய அறநிலையத் துறை	3,45,944/-
8	தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்	1,91,356/-
9	மருத்துவக் கல்வி இயக்ககம்	10,82,261/-
10	தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார்	8,017/-
11	விதைச் சான்று இயக்குநர், கோவை	7,48,432/-
12	மருத்துவம் (ம) ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்	9,308/-
13	மின் பகிர்மான வட்டம், தருமபுரி	24,012/-
14	தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்	2,126/-
15	விதைச்சான்று இயக்குநர், சென்னை	69,17,812/-
16	மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம்	48,34,682/-
17	தலைமை அரசு மின் ஆய்வாளர், சென்னை	4,432/-
18	கடல்சார் வாணிபத் துறை	1,83,220/-
19	இந்திய தொல்லியல் ஆய்வுத் துறை	3,98,720/-
20	சீர்மரபினர் நல வாரியம்	71,077/-
21	அரசு கேபிள் டிவி	4,247/-

வ. எண்	விவரம்	அச்சுக் கட்டணம் (ரூபாய்)
22	சாலைப் போக்குவரத்து நிறுவனம்	94,004/-
23	மத்திய புள்ளியியல் (ம) திட்ட அமலாக்கம், தேசிய புள்ளியியல் அலுவலகம்	2,31,416/-
24	ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகம்	5,49,765/-
	மொத்தம்	**2,79,14,809/-**

8. தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் இயங்கிவரும் அரசு அச்சகங்கள், அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தொழிற்சாலைகள் ஆகும். அரசு அச்சகங்களில், தொழிற்சாலைகள் சட்ட விதிமுறைக்குட்பட்டு அனைத்து விதிமுறைகளும், நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதன்படி, அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் நலச் சட்டங்களான 1947 ஆம் வருட தொழில் தகராறுகள் சட்டம், 1926 ஆம் வருட தொழிற்சங்க சட்டம், 1923 ஆம் வருட பணியாளர் இழப்பீட்டு சட்டம், 1972 ஆம் வருட தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மற்றும் இதர சட்டங்களின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலன் கருதி, அரசு அச்சக நடைமுறை நூல் விதி 160—ன்படி, தொழிலாளர் நலத் துறையில் இருந்து தொழிலாளர் உதவி ஆணையர் தரத்தில் தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும், தொழிலாளர் துணை ஆய்வாளர் தரத்தில் உதவி தொழிலாளர் நல அலுவலர் ஒருவரும் மாற்றுப் பணியில் (Deputation) பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், இத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காகவும் மற்றும் அச்சகங்களின் தூய்மையினைப் பராமரிக்கவும், அரசு அச்சக நடைமுறை நூல் விதி 159—ன்படி,

2023 ஏப்ரல் 10]

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

அ) தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள் (Allowances):

1. *1923 ஆம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீடுச் சட்டப்படி விபத்து நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.*

2. *தொழிற்சாலைகள் சட்டம் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பொருந்துவதால், நடைமுறையில் உள்ளவாறு சீருடை, தையல் கூலி மற்றும் இதர படிகள் வழங்கப்படுகின்றன. பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வருடந்தோறும் இரு மேலங்கிகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.700/-ம், ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நான்கு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையற்கூலி ரூ.1,200/-ம் வழங்கப்பட்டு வருகிறது.*

3. *எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் ஆண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ஜோடி லெதர் ஷூக்கள் மற்றும் 2 ஜோடி காலுறைகள், பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒரு ஜோடி லெதர் காலணி வழங்கப்பட்டு வருகிறது.*

4. *ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காவலர், மின் வினைஞர் மற்றும் செய்தியாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்கப்பட்டு வருகிறது.*

5. *அச்சகப் பணியாளர்களுக்கான சிற்றுண்டிப் படியாக ரூ.400/-ம், சலவைப் படியாக ரூ.200/-ம் மற்றும் இடர்படியாக ரூ.400/-ம் வழங்கப்பட்டு வருகிறது.*

ஆ) சிறப்பூதியம்

வரவு—செலவுத் திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவில் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்கள் மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில் முக்கியத்துவம் வாய்ந்த அச்சுப் பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறப்பூதியமாக முதுநிலை முதலாள் ரூ.300/-, தலைமை முதுநிலை முதலாள் ரூ.240/-, ஒழுங்கமைப்பாளர், இளநிலை முதலாள், முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர், இளநிலை வாசகர் ரூ.210/-, இளநிலை புத்தகம் கட்டுநர், இயந்திர இயக்கி, அசல்

படிப்பவர் ரூ.180/- மற்றும் கிடங்கு எழுத்தருக்கு ரூ.120/-ம் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இ) மனநலம் பேணுதல்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தி, மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஆர்வமுள்ள பணியாளர்களை (ஆண் மற்றும் பெண் பணியாளர்கள்) அனுப்புதல், இதர விளையாட்டுகள் நடத்துதல், பணியாளர்களின் மனச்சோர்வை போக்கும் வகையிலான யோகா மற்றும் தியானம் குறித்த பயிற்சி அளித்தல், கலை இலக்கிய பயிற்சிகள் அளித்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மனமகிழ் மன்றங்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ரூ.2,00,000/- மற்றும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ரூ.1,00,000/- செலவிடப்பட்டு வருகிறது. இதற்கென மனமகிழ் மன்றங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ஈ) தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்கள் கூட்டுறவு நாணயச் சங்கம்

அரசு மைய அச்சகத்தில் "எ" வகை கூட்டுறவு நாணயச் சங்கமும் மற்ற 5 கிளை அச்சகங்களில் "பி" வகை கூட்டுறவு நாணயச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

அரசு மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு நாணயச் சங்கம் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவடைகிறது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள பணியாளர்கள் தமது பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நிலையில், அவர் சங்கத்தில் பெற்ற கடன் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுவதுடன், இயற்கை எய்தும் சங்க உறுப்பினர் குடும்பத்தாருக்கு ஈமச்சடங்கிற்காக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளில் பணிபுரியும் அலுவலர்கள்/பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாக

2023 ஏப்ரல் 10]

தொடர் வைப்புத் திட்டம் மற்றும் கால வைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.12,00,000/-(ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ் மொழியை ஒரு பாடமாகக்கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

உ) கூட்டுறவு பண்டகசாலை

சென்னை அரசு மைய அச்சக வளாகத்தில் தொழிலாளர்கள்/பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் உணவுப் பொருட்களை நியாய விலையில் பெற்று பயனடையும் பொருட்டு 1965 ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டுறவு பண்டகசாலை சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

ஊ) அரசு அச்சகக் குடியிருப்பு

அரசு அச்சகப் பணியாளர்களுக்கென சென்னை தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் குடியிருப்புகள் கட்டப்பட்டு 60 ஆண்டுகள் கடந்ததால், மிகவும் பழுதடைந்து, பல குடியிருப்புகளின் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், சாலையின் அளவு அதிகரிப்பதால் கழிவு நீர்க் கால்வாய்கள் சீரற்ற நிலையில், குடியிருக்க உகந்தவாறு இல்லாததால், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சகப் பணியாளர்கள் குடியிருப்புகளை முற்றிலுமாக இடித்துவிட்டு சென்னை பெருநகர குழும வளர்ச்சித் திட்டத்தின் திருத்திய விதிகளின்படி, நவீன வசதிகளுடன்கூடிய குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.34,49,25,222/— நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டதையடுத்து, ஆறு அடுக்கு மாடிகளுடன்கூடிய 96 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்பட உள்ளன.

9. பணி நியமனங்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செய்தித்தாள் விளம்பரங்கள்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நேரடி நியமனம் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் ஆகியவற்றின்மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

வெளி ஆதாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள்

பல்கலைக்கழகத் தேர்வுகள், அரசுத் தேர்வுகள் மற்றும் அவசரப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 42 புத்தகம் கட்டுநர்கள், 1 ஓட்டுநர், 49 மஸ்தூர்கள், 75 சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 34 பாதுகாவலர்கள் (Security) என மொத்தம் 201 பணியாளர்கள் வெளி ஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

10. வரவு-செலவு

2022-2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு விவரங்கள்:

		(ரூபாய் ஆயிரத்தில்)			
கணக்குத் தலைப்பு		2022-2023 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீடு (B.E)	2022-2023 ஆம் ஆண்டு வரவு-செலவு திருத்திய மதிப்பீடு (R.E)	2022-2023 ஆம் ஆண்டு இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு (FMA)	2023-2024 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்ட மதிப்பீடு (B.E)
2058	எழுதுபொருள் மற்றும் அச்சு	162,09,04	160,97,40	144,38,93	166,01,98
2059	பொதுப் பணிகள்	49,99	49,99	49,99	52,49
4058	எழுதுபொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு	94,04	2,25,11	2,50,08	15,50,30
மொத்தம்		**163,53,07**	**163,72,50**	**147,39,00**	**182,04,77**

2023 ஏப்ரல் 10]

11. கழித்தொதுக்கம்

காகித கழிவுகள் ஒன்றிய அரசின் சார் நிறுவனமான உலோகக் கழிவுகள் வர்த்தக நிறுவனம்மூலம் மின்-ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டதில் ரூ.93,69,904/- மற்றும் கழித்தொதுக்கம் செய்யப்பட்ட இயந்திரங்கள், உதிரிபாகங்கள் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட அலுமினிய அச்சுத் தகடுகள் ஆகியவற்றை விற்பனை செய்யப்பட்டதன்மூலம் ரூ.21,56,816/- ஆக மொத்தம் ரூ.1,15,26,720/- அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசு அச்சகங்களில், தனி அச்சு வார்ப்பு எழுத்துகளும், ஈயக் கலவை வார்ப்பு அச்சுக் கோர்க்கும் முறையும் வழக்கொழிந்த காரணத்தினால், அரசு அச்சகங்களில் இருப்பில் உள்ள உலோகங்கள் மற்றும் உலோகம்சார் பொருட்களை மின்—ஏல முறையில் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின்மூலம் கழித்தொதுக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12. தகவல் பரவலாக்கம்


எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைக்கென http://www.stationeryprinting.tn.gov.in எனும் இணைய வலைதளம் வடிவமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதுடன், பெயர் மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இவ்வலைதளத்தில் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அன்று பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பெயர் மாற்றம் குறித்த படிவங்களை வலைதளம்மூலம் பொதுமக்கள் உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இவ்வலைதளத்தை மேம்படுத்த 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.2,00,000/— (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, தேசிய தகவல் மையம் (National Informatics Centre)மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிறைவுரை

பண்டைய கால வரலாற்றினை நாம் அறிந்து கொள்ள கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் நிலைத்து நிற்பதைப்போல, அச்சகமும், இக்கால மனித வாழ்க்கை நடைமுறை போன்றவற்றினை தற்கால வரலாறாக அச்சடித்து நிலை நிறுத்துதலில் பெரும் பங்காற்றி வருகிறது. மேலும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சி வெகுவாக வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில், அச்சுத் தொழில்நுட்பமும் பல்வேறு மாறுதல்களுடன் வளர்ந்து வரும் தொழில்நுட்பமாக மாறி, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்து, தொன்மை வாய்ந்த துறையாகத் தனது சேவையினை தொடர்ந்து நிறைவேற்றி மென்மேலும் மெருகேற்றி அரசின் முக்கிய துறையாக பங்காற்றி வருகிறது.

நிருவாக அமைப்பு


ஆணையர்
தொழில்நுட்பப் பிரிவு
கணக்குப் பிரிவு
நிருவாகப் பிரிவு
ஆணையரின் நேர்முக உதவியாளர்
அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை
பொது மேலாளர்
முதன்மைக் கணக்கு அலுவலர்
இணை இயக்குநர்
மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்
விலை மதிப்பீட்டு கணக்கு அலுவலர்
உதவிப் பணிமேலாளர் (கொள்முதல்)
உதவிப் பணிமேலாளர் (படிவங்கள்)
உதவி இயக்குநர் (நிருவாகம்)
உதவி இயக்குநர் (இருப்பு சரி பார்ப்பு)
தொழிலாளர் நல அலுவலர்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
உதவி இயக்குநர் (எழுதுபொருள்)
உதவி இயக்குநர் (கொள்முதல்)
உதவிப் பணிமேலாளர்
அரசு மைய அச்சகம், சென்னை
அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை
அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி
அரசு கிளை அச்சகம், சேலம்
அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்
அரசு கிளை அச்சகம், மதுரை
அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை
பணி மேலாளர்-I
பணி மேலாளர்-II
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்
துணைப் பணி மேலாளர்

[2023 ஏப்ரல் 10

பணிபுரிவோர் எண்ணிக்கை

வ.எண்	அலகு	அலுவலர்கள்	அமைச்சுப் பணியாளர்கள்	தொழில்நுட்பப் பணியாளர்கள்	இதரபிரிவு	மொத்தப் பணியாளர்கள்
1	ஆணையரகம் சென்னை. (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட)	14	132	33	35	214
2	அரசு மைய அச்சகம், சென்னை.	24	98	465	85	672
3	அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை.	2	39	19	14	74
4	அரசு கிளை அச்சகம், மதுரை.	4	24	153	11	192
5	அரசு கிளை அச்சகம், சேலம்.	1	20	80	10	111
6	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.	2	14	59	9	84
7	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.	2	17	73	7	99
8	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.	1	12	70	8	91
9	அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை.	—	6	18	4	28
மொத்தம்		**50**	**362**	**970**	**183**	**1565**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-VI

(290 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

வணிக வரித் துறையானது, வரி நிர்வாகத்தில் புதுமையான மற்றும் அறிவியல் பூர்வமான உத்திகளைப் பெருமளவில் பயன்படுத்துவதன்மூலம், மாநில அரசிற்கு வருவாய் ஈட்டுவதில் முன்னோடியாக விளங்குகிறது. வணிக வரித் துறையின்மூலம் ஈட்டப்படும் வருவாயானது, தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களை செயல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதால் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

1-7-2017 முதல் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டம் வரி மேல் வரி விதிக்கப்படுவதைத் தடுப்பதுடன், மதிப்புச் சங்கிலியில் நுகர்வு சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவ்விரண்டின் வழங்கல்கள் மீதான உள்ளீட்டு வரி வரவு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்கிறது.

இத்துறை, வரி நிர்வாகத்தில் தொழில் நடத்துவதற்கான எளிய நடைமுறைகளைப் பின்பற்றுவதன்மூலம் வரி செலுத்துவதில் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவித்து, அதன்மூலம் மாநிலத்தை முதலீடுகளின் கேந்திரமாக உருவாக்குவதில் உதவுகிறது.

2. வணிக வரித் துறையின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகிய சட்டங்களை அமல்படுத்துவது வணிக வரித் துறையின் முக்கிய செயல்பாடாகும்.

அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் காணப்படும் மாநில பட்டியலின் வரிசை எண் 54-இல் உள்ளடக்கப்பட்ட பெட்ரோலிய கச்சா எண்ணெய், அதிவேக டீசல், மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என்றழைக்கப்படுவது), இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் ஆகிய ஆறு பொருட்கள் மட்டும் தொடர்ந்து தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

மேலும், 30-6-2017 வரை நடைமுறையில் இருந்த கீழ்க்காணும் முந்தைய சட்டங்கள் தொடர்பான பணியையும் வணிக வரித் துறை மேற்கொண்டு வருகிறது.

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பரங்கள் வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

3. வணிக வரித் துறையின் மொத்த வருவாய் வசூல் விவரங்கள்

வணிக வரித் துறை, கடந்த ஆறு ஆண்டுகளில் வசூலித்த இழப்பீட்டுத் தொகை உள்ளடக்கிய மொத்த வருவாய் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:—

2023 ஏப்ரல் 10]

ஆண்டு	மொத்த வருவாய் வசூல் (ரூபாய் கோடியில்)	வளர்ச்சி சதவிகிதம் (%)
2017-2018	*73,148.28*	*8.24*
2018-2019	*87,905.26*	*20.17*
2019-2020	*95,086.93*	*8.17*
2020-2021	*96,209.23*	*1.18*
2021-2022	*1,04,970.06*	*9.11*
2022-2023	*1,33,540.70*	*27.22*

4. வணிக வரித் துறையின் நிர்வாக செலவினம்

பல்வேறு தலைப்புகளின்கீழ் வணிக வரித் துறையின் மொத்த நிர்வாக செலவினம் கீழ்க்காணும் பட்டியலின்படி, அரை சதவிகிதத்திற்கும் குறைவாகவே தொடர்ந்து இருந்து வருகிறது:—

ஆண்டு	வருவாய் வரவுகள் (ரூபாய் கோடியில்)	செலவினத் தொகை (ரூபாய் கோடியில்)	வருவாயில் செலவினத்தின் சதவிகிதம்(%)
2020-2021	*96,209.23*	*459.39*	*0.48*
2021-2022	*1,04,970.06*	*425.95*	*0.40*
2022-2023	*1,33,540.70*	*481.64*	*0.36*

5. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்திய பின்னர் சட்டவாரியான வருவாய் வசூல் விவரங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமல்படுத்தியது முதல் 2022-2023 நிதியாண்டு வரையிலான சட்டவாரியான வருவாய் வசூல் விவரங்கள் பின்வருமாறு:—

[2023 ஏப்ரல் 10

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை**	மதிப்புக் கூட்டு வரி & மற்றவைகள் ***	மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி	ஒருங்கி-ணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் தீர்வு	சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் இழப்பீடு	மொத்தம்
2017-2018 *	28,554.90	3,518.80	16,199.93	8,706.99	632.00	57,612.62
2018-2019	42,414.96	593.98	24,476.56	17,268.76	3,151.00	87.905.26
2019-2020	44,023.19	796.53	27,117.38	14,227.80	8,922.03	95,086.93
2020-2021	42,982.27	393.52	23,870.18	18,360.44	10,602.82	96,209.23
2021-2022	48,401.21	416.74	29,440.98	19,475.33	7,235.80	1,04,970.06
2022-2023	58,234.92	896.96	36,353.12	21,840.87	16,214.83	1,33,540.70

* 01-07-2017 முதல் 31-03-2018 வரை

** தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956—ன்கீழ், மனித நுகர்வுக்கான மதுபானம் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் (பெட்ரோலிய கச்சா எண்ணெய், அதிவேக டீசல், பெட்ரோல், இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள் ஆகியவை) மூலமாகப் பெறப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வருவாயைக் குறிப்பதாகும்.

*** முந்தைய சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய்.

6. துறையின் நிர்வாக கட்டமைப்பு

இத்துறையின் தலைவராக வணிக வரி ஆணையர் உள்ளார். ஒரு மூத்த கூடுதல் ஆணையர், ஐந்து கூடுதல் ஆணையர்கள், ஓர் இணை ஆணையர் (நிர்வாகம்-இந்திய ஆட்சிப் பணி நிலையில்) மற்றும் பிற அலுவலர்கள் வணிக வரி ஆணையருக்கு உதவியாக உள்ளனர். அரசாணை (நிலை) எண்கள் 14 மற்றும் 15, வணிக வரி

2023 ஏப்ரல் 10]

மற்றும் பதிவுத் (அ1) துறை, நாள் 28-2-2023-ன்படி வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் புதிதாக இரண்டு கூடுதல் ஆணையர் பணியிடங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிர்வாக கோட்டப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மேற்முறையீட்டுப் பிரிவு ஆகிய மூன்றும் வணிக வரித் துறையின் முக்கிய நிர்வாகப் பிரிவுகளாகும்.

வணிக வரித் துறையின் ஆட்சி எல்லையானது, 12 நிர்வாக கோட்டங்களாக (அதிக வரி செலுத்துவோர் பிரிவு உட்பட) பிரிக்கப்பட்டு இணை ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. அரசாணை (நிலை) எண் 21, வணிக வரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 9-3-2023-ன்படி 7 புதிய நிர்வாகக் கோட்டங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துணை ஆணையர்கள் தலைமையில் 42 சரகங்கள்/வரிவிதிப்பு மாவட்டங்களையும் உதவி ஆணையர்கள்/வணிக வரி அலுவலர்கள் தலைமையில் 338 வரிவிதிப்பு வட்டங்களையும் உள்ளடக்கி நிர்வாக கோட்டப் பிரிவு இயங்கி வருகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்பற்றப்படும் பல்வேறு மாற்றங்களைக் கருத்தில்கொண்டு உரிய நேரத்தில் சிறப்பான சேவைகளை வரி செலுத்துவோருக்கு வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இத்துறையின் நிர்வாக அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

7. நிர்வாக கோட்டங்கள்

வரிவிதிப்பு வட்டங்களில், பதிவு, திருப்புத் தொகை, வரி விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல், வரி விவர அறிக்கைகளின் கூர்ந்தாய்வு, வரிவிதிப்பு, இடைமாற்று கால வரவுகள் மற்றும் வரிநிலுவைகளை வசூல் செய்தல் ஆகியவை நிர்வாக கோட்டத்தின் பணிகளாகும். நிர்வாக கோட்ட இணை ஆணையர்கள், உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகளை சீராய்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். நிர்வாகக் கோட்ட துணை ஆணையர்கள், உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகளின் மறு ஆய்வு மற்றும் மேல்முறையீடு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்.

7.1 அதிக வரி செலுத்துவோர் பிரிவின் செயல்பாடுகள்

மாநில அளவில் அதிக வரி செலுத்துவோரை நிர்வகிக்கும் பொருட்டு, அதிக வரிசெலுத்துவோர் பிரிவு சென்னையில் இயங்கி வருகிறது. சிறந்த மற்றும் மேம்பட்ட சேவைகளை வழங்கும் பொருட்டு, முதனிலை வகிக்கும் 100 அதிக வரி செலுத்துவோர் இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். அதிக வரி செலுத்தும் இந்த 100 பேரில், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் சார்ந்த 14 வணிகர்களும் (இவர்கள் ஜிஎஸ்டி செலுத்துபவர்களாகவும் உள்ளனர்), சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மட்டுமே செலுத்தும் 86 வணிகர்களும் உள்ளடங்குவர். அதிக வரிசெலுத்துவோர் பிரிவால் கடந்த இரண்டு ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு	**அதிக வரி செலுத்துவோர் எண்ணிக்கை**	**வரியின் தன்மை**	**மாநில வருவாய் (ரூபாய் கோடியில்)**	**அதிக வரி செலுத்துவோர் பிரிவின் வருவாய் (ரூபாய் கோடியில்)**	**மாநில வருவாயில் அதிக வரி செலுத்துவோர் பிரிவின் பங்களிப்பு சதவிகிதம்**
2021-2022	*14*	*சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வரிகள் மற்றும் மதிப்பு கூட்டு வரி*	*48,817.95*	*44,458.12*	*91.07*
	86	*மாநில சரக்குகள் (ம) சேவைகள் வரி (மாநில வரம்பிற்குட்பட்ட வரி செலுத்துவோர் மட்டும்)*	*16,709.25*	*3,546.26*	*21.22*
	100	**மொத்தம்**	**65,527.20**	**48,004.38**	**73.25**

ஆண்டு	அதிக வரி செலுத்துவோர் எண்ணிக்கை	வரியின் தன்மை	மாநில வருவாய் (ரூபாய் கோடியில்)	அதிக வரி செலுத்துவோர் பிரிவின் வருவாய் (ரூபாய் கோடியில்)	மாநில வருவாயில் அதிக வரி செலுத்துவோர் பிரிவின் பங்களிப்பு சதவிகிதம்
2022-2023	*14*	*சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத வரிகள் மற்றும் மதிப்பு கூட்டு வரி*	*59,131.88*	*53,009.74*	*89.65*
	86	*மாநில சரக்குகள் (ம) சேவைகள் வரி (மாநில வரம்பிற்குட்பட்ட வரி செலுத்துவோர் மட்டும்)*	*21,020.02*	*5,989.15*	*28.49*
	100	**மொத்தம்**	**80,151.90**	**58,998.89**	**73.61**

8. நுண்ணறிவு கோட்டங்கள்

துறையின் நுண்ணறிவுப் பிரிவு, இணை ஆணையர்கள் தலைமையில் சென்னை-I, சென்னை-II, வேலூர், திருச்சி, மதுரை, சேலம், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 9 நுண்ணறிவு கோட்டங்களைக் கொண்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 19, வணிக வரி மற்றும் பதிவுத்(அ2) துறை, நாள் 9-3-2023-ன்படி 6 புதிய நுண்ணறிவு கோட்டங்கள் உருவாக்குவதற்காக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்துவோர் பற்றிய தரவு மற்றும் தகவல்களை ஆராய்ந்து புலனாய்வுப் பிரிவுக்கு வழங்க ஏதுவாக நுண்ணறிவுப் பிரிவானது தரவுக் குழு மற்றும் கணக்கெடுப்புக் குழுவைக் கொண்டுள்ளது. மேற்காணும் தரவு மற்றும் தகவல்களோடு நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் புலனாய்வுக் கோப்புகள் புலனாய்வுப் பிரிவால் துவக்கப்படுகின்றன. தரவுக் குழு மற்றும் கணக்கெடுப்புக் குழு ஆகியவை துணை ஆணையர் (புலனாய்வு) / உதவி ஆணையர் (புலனாய்வு)—ன்கீழ் இயங்குகின்றன.

8.1 நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ன்கீழ் வரி செலுத்துவோர் சுய மதிப்பீடு அடிப்படையில் வரி செலுத்துகின்றனர். எனினும், வரி ஏய்ப்பு இருப்பதாக நம்பப்படும் நேர்வுகளில், வரி செலுத்துவோரின் வணிக நடவடிக்கைகள் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ள இச்சட்டத்தில் வழிவகைகள் உள்ளன.

முறையான அங்கீகாரத்தின் அடிப்படையிலும் ஆணையரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்கீழும் நுண்ணறிவுப் பிரிவின் நடவடிக்கைகளை தடையற்ற மற்றும் திறமையான முறையில் மேற்கொள்ளுமாறு அரசு வலியுறுத்துகிறது. பாரபட்சமான புலனாய்வு மற்றும் துறைக்கு அவப்பெயர் ஏற்படுவது போன்ற நிகழ்வுகளைத் தவிர்க்கவும் வலியுறுத்தப்படுகிறது.

வரி ஏய்ப்பு செய்வோரின் பல்வேறு வகையான வரி ஏய்ப்பு செயல்பாடுகளை தனது ஆய்வுகளின்மூலம் நுண்ணறிவுப் பிரிவு வெளிக்கொணர்ந்துள்ளது.

மேற்கூறியவற்றுடன், வரி ஏய்ப்பு நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் சரக்கு போக்குவரத்தினைக் கண்காணிக்க வாகன தணிக்கையும் இப்பிரிவின் சுற்றும் படைகளால் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் சுற்றும் படைகளின் செயல்பாட்டின் விவரம் பின்வருமாறு:—

ஆண்டு	சரி பார்க்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை	சரி பார்க்கப்பட்ட மின்னணு வழிப்பட்டிகளின் எண்ணிக்கை	குற்றப் பதிவுகளின் எண்ணிக்கை	வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
2021-2022	5,39,788	6,82,293	10,902	73.22
2022-2023	8,77,012	9,50,297	27,847	222.49
வளர்ச்சி விகிதம்	62.47	39.28	155.43	203.87

8.2 ஆணையரக புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்

வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள புலனாய்வுப் பிரிவு, நுண்ணறிவுக் கோட்டங்களிலிருந்து பெறப்படும்

புலனாய்வு கோப்புகளை ஆய்வு செய்கிறது ஒப்புதல் அளிக்கப்பட்ட புலனாய்வு கோப்புகள் நுண்ணறிவுக் கோட்டங்களுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படுகின்றன. ஒப்புதலளிக்க தகுதியற்ற புலனாய்வு கோப்புகள், மேல்நடவடிக்கைக்காக உரிய அலுவலருக்கும் அல்லது விரிவான கூர்ந்தாய்வு மேற்கொள்வதற்காக தொடர்புடைய நுண்ணறிவுக் கோட்டத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

மேலும், தரமான புலனாய்வு கோப்புகளை உருவாக்கவும் மற்றும் ஆய்வின் தரத்தினை மேம்படுத்தவும், 14 இடர் அளவுருக்கள் (risk parameters) மற்றும் மதிப்பு புள்ளிகள் (weightage points) துறையால் கண்டறியப்பட்டுள்ளன.

வரி ஏய்ப்பைத் தடுக்கவும் நுண்ணறிவுப் பிரிவின்மூலம் பெறப்படும் வருவாயைப் பெருக்கவும் புலனாய்வுக் கோப்புகளின் உருவாக்கத்தின் எண்ணிக்கையும் மாதந்தோறும் நடத்தப்படும் ஆய்வுகளின் எண்ணிக்கையும் 25-10-2022 முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:—

ஆண்டு	**மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை**	**வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)**
2021-2022	1,810	69.77
2022-2023	3,809	510.03
உயர்வு %	110.44	631.02

8.3 ஆணையரக நுண்ணறிவுப் பிரிவின் இதர நடவடிக்கைகள்

திருப்புத் தொகை கோரும் 1,028 வரிசெலுத்துவோரின் கணக்குகள் 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ன்கீழ் தணிக்கைக்கு தேர்வு செய்யப்பட்டன. இவற்றில், 1,023 இனங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, நடப்பு ஆண்டு 2022-2023-ல் ரூ.40.36 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2023 மாதத்தில், அதிக வரி செலுத்துவோர் பிரிவிலிருந்து 22 இனங்களும் பிற நிர்வாக கோட்டங்களிலிருந்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

4,116 இனங்களும் ஜிஎஸ்டி தணிக்கைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், மதிப்புக் கூட்டு வரிச் சட்ட தணிக்கைக்காக அதிக வரிசெலுத்துவோர் பிரிவிலிருந்து 8 இனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வரி செலுத்துவதிலுள்ள முறைகேடுகளைக் கண்டறியும் தணிக்கையை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் வரி செலுத்துவதில் ஏற்படுகின்ற குறைபாடுகள் குறித்து வரி செலுத்துவோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் தொடர்பான விவரங்களை உள்ளடக்கி 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தணிக்கை கையேடு' வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் தொழில்முறையான மற்றும் வெளிப்படையான தணிக்கை மேற்கொள்வதில் வணிக வரித் துறை அலுவலர்களுக்கு வழிகாட்டும் விதமாக பயனுள்ள வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

8.4 சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் புதிய பதிவுகளின் சரிபார்ப்பு

போலி பட்டியல் தயாரிப்போரை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பொருட்டு, புதிதாக பதிவு பெற்ற அனைத்து வரி செலுத்துவோர் மற்றும் அவர்களது வணிக இடங்கள் 1-6-2021 முதல் சரிபார்க்கப்பட்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், மொத்தம் 1,966 புதிதாகப் பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோர் தங்களால் அறிவிக்கப்பட்ட வணிக இடங்களில் இல்லாதது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி 1,386 பதிவுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

8.5 போலி பட்டியல் தயாரிப்போரை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

சுழற்சியான அல்லது தொடர் வணிக முறையின்கீழ் நெருங்கிய குழுவிற்குள் சரக்குகள் வழங்கப்படாமல் விற்பனை விலைப் பட்டியல்கள் மட்டுமே வழங்கி செயற்கையான வர்த்தக பரிவர்த்தனையை உருவாக்கும் மோசடி நடவடிக்கையே போலி பட்டியல் வணிக நடவடிக்கை ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில், மொத்தம் 712 போலி பட்டியல் தயாரிப்போர் அடையாளம் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ன்கீழ்

2023 ஏப்ரல் 10]

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்தகைய போலி பட்டியல் வணிக நடவடிக்கையால் பயனடைந்தோர் குறித்த விவரங்களும் உள்ளீட்டு வரி வரவு துய்ப்பதைத் தடுப்பதற்காக உரிய அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017, பிரிவு 69(1)-ன்கீழ், 3 இனங்களில் கைது நடவடிக்கை மேற்கொள்ள வணிக வரி ஆணையரால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 2 இனங்களில் குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில், 12 வரி ஏய்ப்பு இனங்களில் வங்கிக் கணக்குகள்/சொத்துகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

8.6 போலி பட்டியல் குறித்து பொருளாதார குற்றப் பிரிவின் கீழ் நடவடிக்கை

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, போலி பட்டியல் குறித்த கடுமையான நடவடிக்கை பொருளாதார குற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி, ரூபாய் 5 கோடி மற்றும் அதற்கு மேல் வருவாய் இழப்புள்ள போலி பட்டியல் வணிக குற்ற இனங்களை, ஒவ்வொரு வழக்கின் தன்மை அடிப்படையில், மேல்நடவடிக்கை எடுப்பதற்காக காவல் துறையின்கீழ் இயங்கி வரும் பொருளாதார குற்றப் பிரிவுக்கு பரிந்துரைக்கலாம் என்று அரசின் உள்துறை தெரிவித்துள்ளது.

1-7-2017 முதல் 31-3-2022 வரையிலான காலகட்டத்தில், ரூபாய் 5 கோடி மற்றும் அதற்குமேல் போலி வரி விலைப் பட்டியல் தயாரிப்பில் ஈடுபட்ட வரி செலுத்துவோர் மற்றும் உள்ளீட்டு வரி வரவினை மோசடியாக துய்த்து வரி ஏய்ப்பு செய்த பயனாளிகள் ஆகியோரில் 6 இனங்கள், காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர், பொருளாதார குற்றப் பிரிவிற்கு தொடர் நடவடிக்கைக்காகவும் அரசுக்கு வரவேண்டிய வருவாயினை வசூல் செய்வதற்காகவும் 2023 பிப்ரவரி மாதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ரூபாய் 5 கோடி மற்றும் அதற்குமேல் வரி ஏய்ப்பு செய்த அல்லது தவறாக உள்ளீட்டு வரி வரவினைக் கோரிய அல்லது துய்த்த 217 போலி பட்டியல் தயாரித்தவர்கள் மற்றும் 49 பயனாளிகளின் மீது குற்ற நடவடிக்கை எடுத்து குற்ற வழக்குகள் தாக்கல் செய்யும் பணியில் நுண்ணறிவு கோட்ட இணை

ஆணையர்கள் பொருளாதார குற்றப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநருடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.

8.7 மின்னணு வழிப் பட்டியினை ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) மற்றும் வேகச் சீட்டு (FASTag) முறையுடன் ஒருங்கிணைத்தல்

மின்னணு வழிப்பட்டி, ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில்நுட்பம் (RFID) மற்றும் வேகச் சீட்டு (FASTag) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பானது, வணிகத்தில் மின்னணு வழிப்பட்டி தவறாமல் கடைபிடிக்கப்படுகிறதா என நிகழ்முறையில் கண்காணிக்க வரிவிதிப்பு அலுவலர்களுக்கு உதவுகிறது. மின்னணு வழிப்பட்டிகளின் மறுசுழற்சி, மின்னணு வழிப்பட்டி உருவாக்காமை போன்ற இனங்களை நிகழ்நேரத்திலேயே கண்டறிந்து வருவாய் இழப்பைத் தடுக்க இம்முறை பயனுள்ளதாக உள்ளது.

இது தொடர்பான மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கை துறையின் உரிய அலுவலர்களுக்கு வழங்கப்பெறுகிறது. போலி வணிக மோசடி பரிவர்த்தனைகளைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் தணிக்கை மற்றும் நுண்ணறிவுப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் இவ்வறிக்கைகளைப் பயன்படுத்துகின்றனர்.

வரி செலுத்துவதை மேம்படுத்தும் நோக்கில், பதிவு பெற்ற வரி செலுத்துவோர் GSTR—3B வரி விவர அறிக்கையினை இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக தாக்கல் செய்யவில்லையெனில், அவர்களுக்கு மின்னணு வழிப்பட்டி உருவாக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

8.8 சோதனை கொள்முதல்

விலைப் பட்டி/வழங்குகைச் சீட்டு வழங்கும் நடைமுறையை பழக்கப்படுத்தவும், வரி செலுத்த வேண்டிய நபர் வரி செலுத்துவதை உறுதி செய்திடவும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 67(12)-ன்படி, சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்படுகின்றது.

சோதனை கொள்முதல் மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நிர்வாக மற்றும் நுண்ணறிவு கோட்ட இணை ஆணையர்களுக்கும், தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் நிரந்தர முன்பணத் தொகை, அரசாணை (2ப) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 25-7-2022-ன்படி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 10]

2022-2023 ஆம் ஆண்டில் நுண்ணறிவுப் பிரிவு கோட்டங்களால் 385 சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்பட்டது; 248 இனங்களில் வரி விலைப்பட்டியல் வழங்கப்படாதது கண்டறியப்பட்டது; ரூ.49.50 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டது,

இதே காலத்தில், நிர்வாக கோட்டங்களால், 3,032 சோதனை கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு, 1,774 இனங்களில் வரி விலைப்பட்டியல் வழங்கப்படாதது கண்டறியப்பட்டு, ரூ.351.50 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

9. மேல்முறையீட்டுப் பிரிவு

முந்தைய சட்டங்களின்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான மேல்முறையீடு, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பான மேல்முறையீட்டு துணை ஆணையர்/மேல்முறையீட்டு இணை ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இச்சட்டங்களின்கீழ் பிறப்பிக்கப்படும் மேல்முறையீட்டு ஆணைகளின் மீதான இரண்டாவது மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக, விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் விளங்குகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு தனியாக செயல்படுகிறது. இரண்டாவது மேல்முறையீட்டு அதிகார அமைப்பான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9.1 முந்தைய சட்டங்களின்கீழ் முதல் மேல்முறையீடு

உதவி ஆணையர் நிலை வரையிலுள்ள வரி விதிப்பு அலுவலர்களால், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக மேல்முறையீட்டு துணை ஆணையர் உள்ளார். அதிக வரிசெலுத்துவோர் பிரிவில் துணை ஆணையர்கள் நிலையில் உள்ள வரி விதிப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளைப் பொருத்து, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பாக மேல்முறையீட்டு இணை ஆணையர் உள்ளார்.

முந்தைய சட்டங்களின் கீழான முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் நிர்வாக கட்டுப்பாட்டு அதிகாரம் தமிழ்நாடு வணிக வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய தலைவரிடம் உள்ளது. முதல் மேல்முறையீட்டு அமைப்பின் முன், வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் உதவி ஆணையர் நிலையில் உள்ள துறை பிரதிநிதிமூலம் துறையால் எதிர்கொள்ளப்படுகின்றன.

முந்தைய சட்டங்களின்கீழ், முதல் மேல்முறையீட்டு அமைப்பின் முன் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1-4-2022 அன்றுள்ளவாறு நிலுவை யிலுள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை	2022-2023 ஆண்டில் தாக்கல் செய்யப் பட்டவை	மொத்தம்	முடித்து வைக்கப் பட்ட மேல் முறையீடுகள்	நிலுவை (31-3-2023 அன்றைய நிலையில்)
3,796	837	4,633	1,766	2,867

9.2 தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017—ன்கீழ் முதல் மேல்முறையீடு

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017—ன்கீழ் உதவி ஆணையர் நிலை வரையில் உள்ள உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள்/முடிவுகளின் தொடர்பான முதல் மேல்முறையீட்டு அமைப்பாக மேல்முறையீட்டு துணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) செயல்படுகிறார். அதிக வரி செலுத்துவோர் பிரிவில் துணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் தொடர்பான முதல் மேல்முறையீட்டு அமைப்பாக மேல்முறையீட்டு இணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) செயல்படுகிறார்.

தற்போது, ஆறு மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) ஒரு மேல்முறையீட்டு இணை ஆணையரும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் மேல்முறையீடு) உள்ளனர். சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் முதல் மேல்முறையீட்டு அமைப்பில் உதவி

2023 ஏப்ரல் 10]

ஆணையர் நிலையில் உள்ள அலுவலர் துறையின் பிரதிநிதியாக உள்ளார்.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முன் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:—

1-4-2022 அன்றுள்ளவாறு நிலுவை யிலுள்ள மேல் முறையீடுகள்	2022-2023 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடுகள்	மொத்தம்	முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள்	நிலுவை (31-3-2023 அன்றைய நிலையில்)
1,776	5,045	6,821	2,576	4,245

9.3 முந்தைய சட்டங்களின்கீழ் இரண்டாவது மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளான மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது மேல்முறையீட்டு இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான இரண்டாவது மேல் முறையீட்டினை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்தின் முன் தாக்கல் செய்யலாம். இதன் முதன்மை அமர்வு சென்னையிலும் கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகின்றன.

முதன்மை அமர்வு, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய தலைவரின் தலைமையில் செயல்படுகிறது. இவ்வமர்வில் இரண்டு உறுப்பினர்கள் கூடுதலாக உள்ளனர். ஒருவர், கூடுதல் ஆணையர் நிலைக்குக் குறையாத மாநில அரசின் வணிக வரித் துறையின் அலுவலராகவும் மற்றொருவர், இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியிலுள்ள அலுவலர் அல்லது இணை ஆணையர் நிலைக்கு குறையாத வருமான வரித் துறை அலுவலர் அல்லது மத்திய கலால் துறை அலுவலர் அல்லது சுங்கத் துறை அலுவலர் அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அலுவலர் அல்லது வெளி நபராக இருக்கும்பட்சத்தில், பட்டய கணக்கராக ஐந்து வருடங்களுக்கு

குறையாத அனுபவமுள்ள இந்திய பட்டய கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் அல்லது செலவு மற்றும் பணி கணக்காளராக ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ள இந்திய செலவு மற்றும் பணிக்கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வானது சார்நிலை நீதிபதி நிலையில் ஒரு நீதித் துறை உறுப்பினரையும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக ஒரு கூடுதல் துறை உறுப்பினரையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில், மாநிலத்தின் சார்பில், இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர், முறையே மாநில பிரதிநிதி மற்றும் கூடுதல் மாநில பிரதிநிதியாக செயல்படுகின்றனர்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

01.04.2022 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள மேல்முறையீடுகள்	2022—2023 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகள்	மொத்தம்	முடித்து வைக்கப்பட்ட மேல் முறையீடுகள்	நிலுவை (31.03.2023 அன்றைய நிலையில்)
6,863	731	7,594	674	6,920

9.4 சட்டப் பிரிவின் பணிகள்

வணிகர்கள் மற்றும் துறையால் வரி பொருண்மைகள் தொடர்பாக, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்கள், நீதிப்பேராணை மீதான மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் சிறப்பு விடுப்பு மனுக்கள் சட்டப் பிரிவினால் கண்காணிக்கப்படுகின்றன. முந்தைய சட்டங்களின் தொடர்பான உறுதி நீதிப்பேராணைகளில், எதிர்வாத உரைகளுக்கு ஒப்புதல் வழங்குவதையும் இப்பிரிவு கண்காணிக்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான

2023 ஏப்ரல் 10]

இனங்களில் தாக்கல் செய்யப்படவேண்டிய எதிர்வாத உரைகளுக்கு வணிக வரி ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை திறம்பட முடிவுக்கு கொண்டுவரும் வகையில் சட்ட வல்லுனர்களை ஒருங்கிணைத்து கண்காணிக்கும் பணியை சட்டப் பிரிவு மேற்கொள்கிறது. சட்ட அலுவலர்களுக்கான கட்டண ஒப்புகையும் இப்பிரிவில் கையாளப்படுகிறது.

உயர் நீதிமன்றத்தின் ஆணைகளை உரிய முறையில் செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதையும் மேல்முறையீடு செய்ய உரிய முகாந்திரம் உள்ள வழக்குகளில் நீதிப்பேராணை மேல்முறையீடு/சீராய்வு மற்றும் சிறப்பு விடுப்பு மனுக்கள் துறையால் தாக்கல் செய்யப்படுவதையும் சட்டப் பிரிவு உறுதி செய்கிறது.

அனைத்து வரிவிதிப்பு மற்றும் வழக்கு தீர்ப்பளிக்கும் அலுவலர்கள் அனைத்து நீதிமுறை சார்பு செயல்முறைகளில் இயற்கை நீதியின் கோட்பாடுகளை மிகுந்த கவனத்துடன் பின்பற்ற வேண்டும் எனவும் எவ்வித குறைபாடும் இன்றி நீதித்துறை ஆய்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விளக்கமான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி சட்டப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டில் சுற்றறிக்கை வழங்கப்பட்டது. அனைத்து கோட்டங்களிலும் உள்ள அலுவலர்களுக்கு இயற்கை நீதியின் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக அனைத்து கோட்டங்களிலும் ஆய்வு கூட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

10. தணிக்கை

வழக்கு தீர்ப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் அல்லது முடிவுகளின் மீதான மறுஆய்வு/உள்தணிக்கையானது துறையின் மறுஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவினாலும் காலமுறை அளவில் மாநில கணக்காயராலும் மேற்கொள்ளப்படுகிறது.

10.1 மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகியவற்றின்கீழ்

மேற்கொள்ளப்படும் வரிவிதிப்புகள்/முடிவுகள்/வருவாய் வசூல்/ திருப்புத் தொகைமீது மாநில கணக்காயரால் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், செயல்திறன் தணிக்கையுடன், துறையின் பல்வகையான நடவடிக்கைகள் மீதான கருப்பொருள் சார்ந்த தணிக்கையும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை அறிக்கையில் சேர்ப்பதற்காக பொருள் சார்ந்த இணக்கத் தணிக்கை (Subject Specific Compliance Audit) போன்ற சிறப்பு தலைப்புகளையும் மாநில கணக்காயர் மேற்கொள்கிறார்.

நிலுவையிலுள்ள தணிக்கைப் பத்திகளை தீர்வு செய்யும் பொருட்டு, மாநில கணக்காயரால் வணிக வரித் துறை அலுவலர்களோடு இணைந்து கூட்டு அமர்வுகள் காலமுறை அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

மாநில கணக்காயர் தணிக்கைப் பத்திகள் மீதான தீர்வுகள் குறித்த முன்னேற்றம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:—

நிலுவையிலுள்ள மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை (01.04.2022 அன்றுள்ள ஆரம்ப நிலுவை)		18,602
31.03.2023 வரை பெறப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை		834
மொத்தம்		19,436
அ) சென்னை சரகங்களில் (சரகம்— IV, V, VI, VII, VIII, X, XI & XII) மாநில கணக்காயரின் தணிக்கைக் குழுவுடன் கூட்டு அமர்வில் தீர்வு செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கை	2,072	
ஆ) 31.03.2023 வரை நிவர்த்தி செய்யப்பட்ட மாநில கணக்காயரின் தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை	2,718	
இ) 01.04.2022 முதல் 31.03.2023 வரை தீர்வு செய்யப்பட்ட தணிக்கை பத்திகளின் மொத்த எண்ணிக்கை	4,790	4,790
	நிலுவை	14,646

நிலுவையிலுள்ள 14,646 பத்திகள் அனைத்திற்கும் பதிலறிக்கைகள் மாநில கணக்காயருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

10.2 தணிக்கைக்கென தனி பிரிவு உருவாக்குதல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்டபின், வரிவிதிப்பு முறை மற்றும் துறை அலுவலர்கள் மற்றும் வரி செலுத்துவோர் இடையேயான இணக்க செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, மாநில கணக்காயர் ஆண்டு தணிக்கை முறைக்குப் பதிலாக, தணிக்கை முறையை கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்துள்ளார்.

- *கருப்பொருள் சார்ந்த தணிக்கை*
- *சிறப்புத் தணிக்கை*
- *விரிவான தணிக்கை*
- *நடைமுறை சார்ந்த தணிக்கை*

முந்தைய தணிக்கை அறிக்கைகளுடன் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தணிக்கை இனங்களும் தக்க முறையில் கண்காணிக்கப்பட வேண்டியுள்ளதால், தனியாக ஒரு தணிக்கைப் பிரிவு உருவாக்கப்படுவது அவசியமாகிறது. எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத பிரிவினை இரண்டாகப் பிரித்து, கூடுதல் ஆணையர் தலைமையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் முந்தைய சட்டங்களின்கீழ் மாநில கணக்காயரின் தணிக்கைப் பத்திகளை மட்டும் பிரத்யேகமாக கையாளுவதற்காக தணிக்கைப் பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசாணை (நிலை) எண் 15, வணிக வரி மற்றும் பதிவுத் (எப்) துறை, நாள் 28-2-2023-ன்படி அரசு ஒப்புதல் அளித்துள்ளது,

10.3 மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ன்கீழ் அதிகார வரம்பிற்குட்பட்ட உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு ஆணைகள் மற்றும் முடிவுகளின்மீது மறு ஆய்வு செய்யும் அதிகாரம் கோட்டங்களின் நிர்வாகப் பிரிவு துணை ஆணையர்களுக்கும் நுண்ணறிவுப் பிரிவு துணை ஆணையர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியில் துணை ஆணையர்களுக்கு உதவி ஆணையர்கள் (மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு) உதவி புரிகின்றனர்.

மறு ஆய்வின் அடிப்படையில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 107—ன்படி மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் துறையால் மேல்முறையீடு செய்யப்படுகிறது. ஆறு மாத காலத்திற்குள் இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு செய்யப்படாத இனங்களில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 108-ன்கீழ் உரிய கோட்ட இணை ஆணையர்களால் சீராய்வு மேற்கொள்ள இயலும்.

மேலும், முந்தைய சட்டங்களின்கீழ் வணிகர்களால் தாக்கல் செய்யப்படும் சீராய்வு மனுக்கள்மீது கூடுதல் ஆணையரால் உரிய விசாரணை மேற்கொண்டு உரிய சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

வணிகர்களால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்கள் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

01.04.2022 அன்று நிலுவை	2022-2023-ல் தாக்கல் செய்யப் பட்டவை	மொத்தம்	ஆணைகள் பிறப்பிக்கப் பட்டவை	நிலுவை (31.03.2023 வரை)
1,130	41	1,171	414	757

நொடிப்பு நிலை மற்றும் நொடிந்தவர் நெறித் தொகுப்பு, 2016 அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, வணிகர்களின் நொடிப்பு நிலை தீர்மான செயல்முறை அல்லது தொழில் நிறுவன கலைப்புக்கான செயல்முறை தொடர்பான வணிக வரித் துறையின் கோரிக்கையானது தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் (National Company Law Tribunal) முன் தாக்கல் செய்யப்படுகிறது. இக்கோரிக்கை மனுக்கள் தாக்கல், அவற்றின் ஏற்பு அல்லது அம்மனுக்களின் நிராகரிப்பு மற்றும் நிராகரிக்கப்படும் இனங்களில் இடைநிலை விண்ணப்பம் (Interlocutary Application) தாக்கல் செய்தல் ஆகிய பணிகள் மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு வணிக வரி தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின்மீது மறுஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதன்

2023 ஏப்ரல் 10]

அடிப்படையில் அவற்றைப் பதிவு செய்வது அல்லது உயர் நீதிமன்றத்தில் வரி வழக்காக மேல்முறையீடு செய்வது குறித்தும் முடிவெடுக்கப்படுகிறது. உயர் நீதிமன்ற ஆணைகளில் சட்டம் குறித்து வினா எழும் இனங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. சரக்கு மாற்றம் (Stock Transfer) மற்றும் சரக்கு மாற்று விற்பனை (Consignment Sales) தொடர்பாக தீர்ப்பாயத்தால் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஆணைகளை சீராய்வு செய்து மத்திய விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் உரிய இனங்களில் மேல்முறையீடு தாக்கல் செய்ய முடிவெடுக்கப்படுகிறது.

உயர் நீதிமன்ற மற்றும் தீர்ப்பாய ஆணைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

ஆண்டு	பதிவு செய்யப்பட்டவை	வரிவழக்கு தாக்கல் செய்யப்பட்டவை
2022-2023	412	48

11. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

துறை அலுவலர்களின் பணித் திறனாய்வினை மேற்கொள்வதற்காக பின்வரும் மாதாந்திர அறிக்கைகளை புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு தயாரிக்கிறது:—

1. நிர்வாக கோட்டங்களுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி புள்ளியியல் அறிக்கை
2. நிர்வாக கோட்டங்களுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாதவை குறித்த புள்ளியியல் அறிக்கை
3. துறையின் நுண்ணறிவுப் பிரிவின் நுண்ணறிவு நடவடிக்கைகள் குறித்த புள்ளியியல் அறிக்கை

துறையின் ஒட்டுமொத்த பணிகள், நிர்வாக படிநிலைகள் மற்றும் இன்றியமையாத செயல்பாடுகளை விளக்கும் வகையில் 'வணிக வரித் துறை–நிர்வாக அறிக்கை'–யை புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 2022-2023 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது.

12. வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் பயிற்சிகள்

வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு முதல் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இணை ஆணையர்

பணி நிலையில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் இப்பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. வணிக வரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பது இந்த பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள மண்டல நிலையங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், பயிற்சிக்காக ரூ.96.72 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. துறையின் ஏறத்தாழ 3,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு புத்தாக்கப் பயிற்சி, அறிமுகப் பயிற்சி மற்றும் பயிற்சி பட்டறைகள், சென்னை வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் மற்றும் மண்டல நிலையங்களால் அளிக்கப்பட்டன.

வரிவிதிப்பு சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த வழக்கமான பயிற்சிகளைத் தவிர, பின்வரும் பயிற்சிகளும் சென்னையில் உள்ள வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டன:-

- துறையில் இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் நிலையில் உள்ள 81 உயர் அலுவலர்களுக்கு மாமல்லபுரத்தில் 'பணியாளர்களின் மேம்பாட்டிற்கான திறன்களை உருவாக்குதல்' குறித்த மூன்று நாட்கள் உறைவிடப் (Residential) பயிற்சி.

- துறையின் 70 தலைமை பயிற்றுநர்களுக்கு 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பின்புல அலுவலக செயல்பாடுகளுக்காக ஜிஎஸ்டி மென்பொருள் மாதிரி 1 முறையிலிருந்து ஜிஎஸ்டி மென்பொருள் மாதிரி 2 முறைக்கு இடம்பெயர்தல்' குறித்த பயிற்சி.

- சென்னை கோட்டங்களைச் சார்ந்த புலனாய்வுப் பிரிவின் மாநில வரி அலுவலர்கள் மற்றும் துணை மாநில வரி அலுவலர்கள் நிலையில் 47 அலுவலர்களுக்கு, Tally, SAP மற்றும் Excel குறித்த மூன்று நாட்கள் பயிற்சி.

- வணிக வரித் துறையின் அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு சென்னை (தெற்கு) மற்றும் (கிழக்கு) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பு (IFHRMS) தொடர்பான ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி.

2023 ஏப்ரல் 10]

- துறையின் உதவி ஆணையர் நிலையில் உள்ள 150 அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து 'மனித மூலதன வளர்ச்சி' குறித்து மாமல்லபுரத்தில் மூன்று நாட்கள் உறைவிடப் (Residential) பயிற்சி

- சென்னை மற்றும் வேலூர் கோட்டங்களில் உதவி ஆணையர் நிலை முதல் அலுவலக உதவியாளர் நிலை வரையுள்ள துறையின் 1500 பணியாளர்கள்/அலுவலர்களுக்கு சென்னை அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து, ஆரோக்கிய ஈடுபாடு (உளவியல், எலும்பியல் & உடலியக்க மருத்துவம், அவசரநிலை மற்றும் முதலுதவி) பற்றிய ஒருநாள் பயிற்சி.

- தலைமைச் செயலகத்தைச் சார்ந்த 40 பிரிவு அலுவலர்களுக்கான ஒருநாள் கணக்கு பயிற்சி.

- தலைமைச் செயலகத்தின் 78 பிரிவு அலுவலர்களுக்கு மாவட்ட மற்றும் துறை தலைமைகளுக்கான கட்டாய பயிற்சி.

2022-2023 ஆம் ஆண்டில் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்ட நிதி மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட விவரங்கள்:-

அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய்)	செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாய்)	நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கை	பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை
98,21,000	94,23,048	132	864	11,029 (நேரடி வகுப்பு மூலமாக) மற்றும் 1,720 (இணைய வகுப்பு மூலமாக)

[2023 ஏப்ரல் 10

13. வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு செயல்பாடுகள்

13.1 மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள்

வணிகர்கள், வணிகர் சங்கங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனங்களின் குறைகள்/முறையீடுகளின்மீது தீர்வு காண்பதற்காக மாநில அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரி ஆணையரின் தலைமையிலான இக்குழு பல்வேறு பங்கு உரிமையாளர்களின் குறைகளுக்குத் தேவையான தீர்வுகளை அளிக்கிறது.

13.2 மாவட்ட அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு

வரிசெலுத்துவோரின் குறைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட அளவிலான வரிசெலுத்துவோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

14. புகார் பிரிவின் செயல்பாடுகள்

வணிகர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து வணிக வரித் துறை சார்ந்த குறைகளைப் பெற்று, விரைவாக தீர்வுகாண வணிக வரித் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு 'புகார் பிரிவு' 1-7-2021 முதல் அமைக்கப்பட்டுள்ளது. குறைகளைப் பெறுவதற்காக பிரத்தியேக தொலைபேசி எண் 044—28514250 மற்றும் மின்னஞ்சல் 'ctdpetition@ctd.tn.gov.in' அளிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள குறைகள் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:—

விவரங்கள்	தொலைபேசி மூலமாக பெறப்பட்டவை	மின்னஞ்சல் வழியாக பெறப்பட்டவை
பெறப்பட்ட புகார்கள்	739	629
முடித்து வைக்கப்பட்ட புகார்கள்	724	447
நிலுவை	15	182

2023 ஏப்ரல் 10]

15. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017-ன்கீழ் வரிவிதிப்பு

முந்தைய சட்டங்களின் கீழ் 30-6-2017 அன்று பதிவுபெற்று செயல்பாட்டிலிருந்த வணிகர்களை 1-7-2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு மின்னணு முறைமூலம் இத்துறை வெற்றிகரமாக மாற்றம் செய்துள்ளது.

வரிசெலுத்துவோர் எளிதில் வரி நடைமுறைகளைப் பின்பற்றும் வகையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளின் மீதான வரிவிகிதங்கள் பின்வருமாறு:—

- *சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு முக்கிய வரிவிகிதங்கள் உள்ளன*
- *தங்கம், வெள்ளி, பிளாட்டினம் மற்றும் மதிப்புமிக்க பொருட்களுக்கு 3% வரி*
- *பட்டை தீட்டப்படாத, மதிப்புமிக்க மற்றும் இடைமதிப்புடைய கற்களுக்கு 0.25% வரி*
- *1-7-2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஐந்து ஆண்டுகளுக்கு ஈடுசெய்வதற்காக, கார்கள் போன்ற ஆடம்பர பொருட்கள் மற்றும் பான் மசாலா, புகையிலை போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற பொருட்கள்மீது இழப்பீட்டு மேல்வரி பல்வேறு விகிதங்களில் விதிக்கப்படுகிறது.*
- *இறக்குமதி மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் மற்றும் சேவைகளின் வழங்கல்கள் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017—ன்கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படுகிறது.*
- *ஓராண்டில் ரூ.1.50 கோடி வரை மொத்த விற்று கொள்முதல் உள்ள வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், சில நிபந்தனைகளுடன் 1% வரி செலுத்தும் இணக்க வரி முறையை விருப்பத் தேர்வாக செய்துகொள்ளலாம்.*

- *பொதுவாக, சேவைகள் வழங்குதல்மீது 18% வரி விதிக்கப்படுகிறது. மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானப் பணிகள் மீது உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 1.5% வரியும், மலிவு விலை அல்லாத அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானப் பணிகள் மீது உள்ளீட்டு வரி வரவு இல்லாமல் 7.5% வரியும் விதிக்கப்படுகிறது.*

16. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல்பாடுகள்

அரசியலமைப்பு (101-வது திருத்த) சட்டம், 2016-ன்படி, நாடு முழுவதும் ஒரே சீரான வரி விகிதத்தை செயல்படுத்துவதற்காக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் அமைக்கப்பட்டது. சட்டமன்றம் கொண்டுள்ள யூனியன் பிரதேசங்கள் உட்பட அனைத்து மாநிலங்களும் ஒன்றிய அரசும் இம்மன்றத்தின் உறுப்பினர்களாக உள்ளன. தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் இம்மன்றத்தில் மாநில உறுப்பினராக உள்ளார்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கான சட்ட மாதிரி முன்வடிவு, அடிநிலை விகிதங்கள் மற்றும் எல்லை விகிதங்கள் உள்ளிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள், பல்வகையான வரிவிகிதங்கள் அல்லது வரி விலக்குக்கு உட்படும் சரக்குகள் மற்றும் சேவைகள், குறைந்தபட்ச வரம்பு, சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கும் இடம் குறித்த கொள்கைகள், இயற்கை பேரிடர் காலங்களில் கூடுதல் வருவாயினை ஈட்ட உதவும் சிறப்பு வரி விகிதங்கள், சில மாநிலங்களுக்கான சிறப்பு வரைமுறைகள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொடர்பான பிற இனங்கள் ஆகியவற்றில் பரிந்துரைகள் வழங்குவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் முக்கிய பணியாகும்.

இதுவரை 49 கூட்டங்களை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் நடத்தியுள்ளது.

16.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு மேல்வரி

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017, நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக, மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய 1-7-2017 முதல் 30-6-2022 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு இழப்பீடு வழங்க சரக்குகள் மற்றும் சேவைகள் இழப்பீடு மேல்வரி வழிவகை

2023 ஏப்ரல் 10]

செய்கிறது. ஆடம்பர மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய சில சரக்குகள் மற்றும் சேவைகளின்மீது ஜிஎஸ்டி வரியுடன் பல்வேறு விகிதங்களில் மேல்வரியும் விதிக்கப்படுகிறது. மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு பெறப்பட்ட சந்தைக் கடன்களை திருப்பி செலுத்துவதற்காக, ஒன்றிய அரசு, மேல்வரி விதிப்பதை 31-3-2026 வரை நீட்டித்துள்ளது. ஆனால், இழப்பீட்டு தொகை வழங்கும் காலம் 30-6-2022-க்கு பின்னர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் நீட்டிக்கப்படவில்லை. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டினை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டங்கள் மற்றும் இதர மன்றங்களில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது.

16.2 2022-2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்கள்

2022-2023 ஆம் ஆண்டில், மூன்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு நடைபெற்றன:—

மன்ற கூட்டம்	*இடம்*	*நாள்*
47-வது கூட்டம்	*சண்டிகர்*	*28-6-2022 மற்றும் 29-6-2022*
48- வது கூட்டம்	*காணொளி காட்சி வாயிலாக*	*17-12-2022*
49-வது கூட்டம்	*புது டெல்லி*	*18-2-2023*

16.2.1 47-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

47-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன:—

- *சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைப்பது தொடர்பாக, மாநிலங்கள் எழுப்பும் பல்வேறு கருத்துகளைப் பரிசீலனை செய்யவும், மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தங்களைப் பரிந்துரைக்கவும் அமைச்சர்கள் குழு (GoM) ஒன்றினை அமைக்க பரிந்துரைக்கப்பட்டது.*

- அரசு துறைகளுக்கு மேற்கொள்ளப்படும் ஒப்பந்த கட்டுமானப் பணிகள்மீது விதிக்கப்பட்டு குறைக்கப்பட்ட 12% வரி திரும்பப் பெறப்பட்டு, 18% வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டது.

- சூதாட்ட விடுதிகள் (Casino), குதிரைப் பந்தயம் (Race Course) மற்றும் இணையவழி விளையாட்டுகள் (Online Gaming) ஆகியவற்றிற்கான அமைச்சர்கள் குழு (GoM) இந்நேர்வுகள் குறித்து மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட கூடுதல் கருத்துகளை மேல்பரிசீலனை செய்து இது தொடர்பான அறிக்கையினை குறுகிய காலத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- வணிகர்களின் வசதிக்காக சரக்குகள் மற்றும் சேவைகள் மன்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்:—

 i. மின்னணு வணிகம் மூலம் பொருட்களை வழங்கும் வணிகர்களுக்கான விதிமுறைகளில் தளர்வுகள் மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

 ii. 2021-2022 ஆம் நிதியாண்டுக்கான படிவம் GSTR-4 காலங்கடந்து தாக்கல் செய்வதற்கான தாமத கட்டணம் 28-7-2022 வரை இரத்து செய்யப்பட்டது. மேலும், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான முதல் காலாண்டு படிவம் GST CMP-08 தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 31-7-2022 வரை நீட்டிக்கப்பட்டது.

16.2.2 48-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்

48-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில், வணிகத்தை எளிதாக்கும் நடவடிக்கையாக பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன:—

- சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்காமல் போலி விற்பனைப் பட்டி மட்டும் வழங்கிய குற்றம் தவிர, பிற குற்றங்களில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் குற்ற வழக்கு தொடர்வதற்கான குறைந்தபட்ச வரித் தொகை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்துதல்.

2023 ஏப்ரல் 10]

- *இணக்கத் தொகைக்கான தற்போதைய 50 விழுக்காடு முதல் 150 விழுக்காடு வரையிலான வரித் தொகை வரையறையை 25 விழுக்காடு முதல் 100 விழுக்காடாக குறைத்தல்.*

- *மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டப் பிரிவு 132, உட்பிரிவு (1), கூறு (g), (j) மற்றும் (k)—ல் குறிப்பிடப்பட்ட பின்வரும் குற்றங்களை இப்பிரிவுகளைப் பொருத்தமட்டில் குற்றமற்றவைகளாக மாற்றம் செய்தல்—*

 - *அரசு ஊழியரை தனது பணியை செய்ய விடாமல் தடுத்தல்;*
 - *வேண்டுமென்றே சாட்சியங்களை அழித்தல்*
 - *தகவல்களை தராமல் இருத்தல்.*

- *பதிவு பெறாத வழங்குநர்கள் மற்றும் இணக்க முறையில் வரிசெலுத்துவோர், மின்னணு முறையில் வணிகம் செய்யும் வணிகர்கள் மூலம் உள் மாநில சரக்குகள் வழங்குவதற்கான அனுமதியை 1-10-2023 முதல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

16.2.3 49-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தின் முக்கிய நிரல்கள்

49-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட வணிகத்தினை எளிமைப்படுத்தும் நடைமுறைகள் பின்வருமாறு:—

- *பதிவுச் சான்று இரத்து செய்யப்பட்டதை திரும்பப் பெறுவதன் பொருட்டு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை 30 நாட்களிலிருந்து 90 நாட்களாக உயர்த்துதல் மற்றும் கூடுதல் கால அவகாசத்தை 90 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு நீட்டித்தல்.*

- *ஆண்டறிக்கை படிவம் GSTR-9 காலங்கடந்து தாக்கல் செய்யும் நேர்வில் தாமத கட்டணத்தை, 2022-2023 ஆம் நிதியாண்டு முதல் சீரமைத்தல்.*

- *படிவம் GSTR-4, GSTR-9 மற்றும் GSTR-10 தாக்கல் செய்யாத இனங்களில், தாமத கட்டணத்தை நிபந்தனைகளுடன்கூடிய தள்ளுபடி/குறைப்பு செய்வதற்கு பொது மன்னிப்பு திட்டங்கள் கொண்டு வருதல்.*
- *சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்ப்பாயம் அமைத்தல்.*

17. குறை தீர்க்கும் குழு உருவாக்கம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சம்பந்தமான குறைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, வர்த்தக மற்றும் தொழில் துறை சார்ந்த அமைப்புகள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பங்கு உரிமையாளர்கள் அடங்கிய மாநில அளவிலான குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரி ஆணையர் மற்றும் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் இக்குழுவின் ஈரிணைத் தலைவர்களாக உள்ளனர். இக்குழு, பங்கு உரிமையாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டங்களை நடத்தி வருகிறது.

18. சரக்குகள் போக்குவரத்தினைக் கண்காணிக்கும் மின்னணு வழிப்பட்டி முறை

சரக்குகளை உள்ளடக்கிய பரிவர்த்தனைகளின் கணக்குகளை சுயமாக பராமரிப்பதற்காக மின்னணு வழிப்பட்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலங்களுக்கு இடையிலான, ரூ.50,000-க்கு மேல் மதிப்புள்ள சரக்குகளின் போக்குவரத்திற்கு நாடு முழுவதும் 1-4-2018 முதல் மின்னணு வழிப்பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், மாநிலத்திற்குள்ளான ரூ.1,00,000/-க்கு மேல் மதிப்புள்ள சரக்குகளின் போக்குவரத்திற்கு 2-6-2018 முதல் மின்னணு வழிப்பட்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை, சரக்குகள் போக்குவரத்தையும் உள்ளீட்டு வரி வரவு கோரிக்கைகளையும் சரிபார்க்க துறைக்கு உதவுகிறது.

மின்னணு வழிப்பட்டி உருவாக்குவதில்,மாநிலத்திற்குள்ளேயான சரக்குகள் போக்குவரத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகள் போக்குவரத்தில் நான்காம் இடத்திலும் உள்ளது. மின்னணு வழிப்பட்டி அமைப்பில், வரி ஏய்ப்பு இனங்களைக் கண்டறிய பல்வேறு மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கைகள் பயன்பாட்டில் உள்ளன.

2023 ஏப்ரல் 10]

31-3-2023 வரை இம்மின்னணு வழிப்பட்டி வலைதளத்தின்மூலம் 4.35 இலட்சம் வரி செலுத்துவோர் பதிவு செய்து, மாநிலத்திற்குள்ளேயான சரக்குகள் போக்குவரத்திற்காக 22.77 கோடி மின்னணு வழிப்பட்டிகளையும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் போக்குவரத்திற்காக 20.91 கோடி மின்னணு வழிப்பட்டிகளையும் உருவாக்கி உள்ளனர்.

19. முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற விரும்பும் நபர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டிற்குமான வகைப்படுத்துதல், அறிவிக்கைகளின் பொருந்தும் தன்மை, வழங்கல் மற்றும் வழங்கல் தொடர்பான காலம் மற்றும் மதிப்பினை தீர்மானித்தல், உள்ளீட்டு வரி வரவுமீதான ஏற்பு. வரி செலுத்த வேண்டிய பொறுப்பு மற்றும் பதிவு செய்யப் பெற வேண்டிய பொறுப்பு ஆகிய இனங்களின் மீது தெளிவு பெறுவதற்காக முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினை அணுகலாம்.

தமிழ்நாட்டிற்கான முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு, இணை ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள அலுவலரை முறையே மாநில மற்றும் ஒன்றிய உறுப்பினராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக வளாகம், யானைக்கவுனி பாலம் சாலை, பூங்கா நகர், சென்னை – 600 003 என்ற முகவரியில் இயங்குகிறது. இவ்வலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரி ‘jc.adv.rul@ctd.tn.gov.in’ *ஆகும்.*

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட முன் தீர்மானங்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழ்க்கண்டவாறு:—

ஆண்டு	**முடிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை**
2021-2022	*53*
2022-2023	*30*

[*2023 ஏப்ரல் 10*

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினால் வழங்கப்படும் தீர்மானத்தை விண்ணப்பதாரர் ஏற்காதபட்சத்தில், தீர்மானம் பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம். மாநில வரி ஆணையரும் தமிழ்நாட்டிற்கான மத்திய வரி முதன்மை தலைமை ஆணையரும் இவ்வமைப்பின் உறுப்பினர்களாவர். இவ்வலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரி 'cct@ctd.tn.gov.in' *ஆகும்.*

முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், வழங்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு:—

ஆண்டு	**வழங்கப்பட்ட ஆணைகளின் எண்ணிக்கை**
2021-2022	*19*
2022-2023	*2*

20. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் மிகை இலாபம் ஈட்டுவதற்கு எதிரான அதிகார அமைப்பு மற்றும் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்படி, சரக்குகள் அல்லது சேவைகள் மீதான வரி விகிதத்தில் ஏதேனும் குறைப்பு நேர்ந்தாலோ அல்லது உள்ளீட்டு வரிவரவின் சலுகையைப் பெற்றாலோ அதற்கேற்றவாறு சரக்குகள் அல்லது சேவைகள் மீதான உரிய விலை குறைப்பை சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்குவோர் பயனாளிகளுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு உரிய பலன்களை வேண்டுமென்றே அளிக்காவிடில் அது 'மிகை இலாபம்' ஈட்ட வழி வகுக்கிறது. மிகை இலாபம் ஈட்டும் செயல்களைத் தடுக்கவும் கண்காணிக்கவும் தேசிய அளவில் ஓர் அதிகார அமைப்பு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

மிகை இலாபத்திற்கு எதிரான நடவடிக்கைகளை 1-12-2022 முதல், தேசிய மிகை இலாபத்திற்கு எதிரான அதிகார அமைப்பிற்குப் பதிலாக இந்திய போட்டிநெறி ஆணையம் (Competition Commission of India) *மேற்கொண்டு வருகிறது.*

2023 ஏப்ரல் 10]

இது தொடர்பான இனங்களைக் கண்டறிய தமிழ்நாட்டில் மிகை இலாபத்திற்கு எதிரான மாநில தேர்வுக் குழுவில் இணை ஆணையர் (நுண்ணறிவு—I), சென்னை மற்றும் மத்திய வரி ஆணையர், சென்னை வடக்கு ஆணையரகம் (மத்திய வரி) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

21. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொது இணைய முகப்பு

வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான அனைத்து வணிக நடவடிக்கைகளையும் ஒற்றைச்சாளர இணைய முகப்பு மூலம் மேற்கொள்ள ஏதுவாக 'www.gst.gov.in' என்ற பொது இணைய முகப்பை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையம் (GSTN) உருவாக்கியுள்ளது. புதிய பதிவு, திருத்தம், அறிக்கைகள் தாக்கல் செய்தல், திருப்புத் தொகைக்கான விண்ணப்பங்கள் போன்ற பணிகளுக்கான வரி செலுத்துவோர் மற்றும் வரி அலுவலர்களுக்கிடையிலான ஒற்றைத் தொடர்பு முறையாக இந்த இணைய முகப்பு செயல்படுகிறது. வரி செலுத்துவோருக்கு அறிவிப்புகள், ஆணைகள் போன்ற அனைத்து தகவல் தொடர்புகளும் இந்த இணைய முகப்பின் மூலமாகவே வழங்கப்படுகின்றன.

22. எளிய முறையில் வணிகம் செய்வதை ஊக்குவித்தல்

கீழ்க்காணும் சேவைகளை வழங்குவதன்மூலம் எளிய முறையில் வணிகம் செய்வதை வணிகவரித் துறை ஊக்குவிக்கிறது.

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் பதிவு, அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், திருப்புத் தொகை பெறுதல் போன்ற பல்வகை வணிக நடவடிக்கைகளை இணைய வழியாகவே மேற்கொள்ளலாம்.

- வரி செலுத்துவோரின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்கும் மின்னணு முறையில் தொகை செலுத்துதல் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கவும் தனியானதொரு கட்டணமில்லா மாநில உதவி மையம் செயல்படுகிறது.

- வரி செலுத்துவோர் மின்னணு முறையில் அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கான கட்டணமில்லா சேவை மையம் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகிறது.

- *வரி செலுத்துவோர் வரி அறிக்கைகளைத் தாமதமாக தாக்கல் செய்வதைத் தடுக்கும் வகையில், அவர்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக ஒரு புதிய அழைப்பு மையம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் சென்னையில் துவக்கப்படவுள்ளது.*

22.1 'எளிய வணிகப் பிரிவு' உருவாக்கம்

புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் வணிக நட்புச் சூழலை உருவாக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 'எளிய வணிகப் பிரிவு' ஒன்றை உருவாக்க இத்துறை உத்தேசித்துள்ளது. அரசாணை (நிலை) எண் 14, வணிக வரி (ம) பதிவுத் (அ1) துறை, நாள் 28-2-2023-ன்படி, வணிக வரி பணியாளர் பயிற்சி நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழான 'குறை தீர்க்கும் குழு', 'எளிய வணிகப் பிரிவு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்பிரிவானது, குறை தீர்க்கும் பிரிவு, தர கண்காணிப்புப் பிரிவு, சமூக ஊடகப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- *பதிவு, திருப்புத் தொகை போன்ற துறை நடைமுறை செயல்பாடுகளில் வரி செலுத்துவோருக்கு ஏற்படும் குறைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் 'குறை தீர்க்கும் பிரிவு' செயல்பட்டு வருகிறது.*

- *துறையின் உரிய அலுவலர்களால், பதிவு, திருப்புத் தொகை, கூர்ந்தாய்வு, தணிக்கை, ஆய்வு மற்றும் நுண்ணறிவுப் பணிகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் தரத்தினை மறுஆய்வு செய்ய 'தர கண்காணிப்புப் பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது.*

- *டிவிட்டர், முகநூல் போன்ற சமூக ஊடகங்களைக் கையாளவும் கருத்துப் படங்கள் மற்றும் உள்ளடக்கங்களை வணிக வரி ஆணையரின் ஒப்புதலுடன் உருவாக்கவும் பதிவிடவும் 'சமூக ஊடகப் பிரிவு' உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பிரிவு, சமூக ஊடகங்களில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.*

23. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

'தமிழ்நாடு வணிகர் நல வாரியம்' முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்ததன் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

2023 ஏப்ரல் 10]

வாரிய உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட ஒன்பது நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:—

வ. எண்	நலத் திட்டங்களின் பெயர்		தொகை (ரூபாயில்)
1	குடும்பநல உதவி		3,00,000/-
2	மருத்துவ உதவி		
	அ	இதய மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை	50,000/-
	ஆ	செயற்கை சிறுநீர் பிரிப்பு, குருதி குழல் சீரமைப்பு, வேதிமுறை நோய்நீக்கம், கதிர்வீச்சு சிகிச்சை	15,000/-
	இ	செயற்கை சிறுநீர் பிரிப்பு, குருதி குழல் சீரமைப்பு, வேதிமுறை நோய்நீக்கம், கதிர்வீச்சு தொடர்பான சிகிச்சைகளுக்குப் பிறகு அறுவை சிகிச்சை	25,000/-
	ஈ	கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சை	20,000/-
3	கல்வி உதவி		
	அ	கலை மற்றும் அறிவியல் கல்வி	5,000/-
	ஆ	தொழிற்கல்வி	10,000/-
4	விளையாட்டு வீரர்களுக்கான உதவி		
	அ	சர்வதேச அளவு	25,000/-
	ஆ	தேசிய அளவு	10,000/-
	இ	மாநில அளவு	5,000/-
	ஈ	மாவட்ட அளவு	3,000/-
5	தீ விபத்துக்கான நிவாரண உதவி		20,000/-
6	சிறுகடைகள் (Bunks) அமைப்பதற்கான நிதி உதவி		10,000/-

வ. எண்	நலத் திட்டங்களின் பெயர்		தொகை (ரூபாயில்)
7	*மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை (பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு)*		
	அ	*முதலிடம்*	*5,000/-*
	ஆ	*இரண்டாமிடம்*	*3,000/-*
	இ	*மூன்றாமிடம்*	*2,000/-*
8	*திருமண உதவித்தொகை*		*10,000/-*
9	*விபத்துக்கால உதவித்தொகை*		*25,000/-*

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் 31-3-2023 வரை, மேற்குறிப்பிட்ட நலத் திட்டங்கள் மூலமாக ரூ.3.20 கோடி அளவில் மொத்தம் 8,880 உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். 31-3-2023 வரை இவ்வாரியத்தில் 88,171 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

தகுதியுள்ள வணிகர்கள் தங்களை வணிகர் நல வாரியத்தில் இணைய வழியாகவே உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ள இயலும்.

23.1 உயர்த்தப்பட்ட குடும்ப நல உதவித் தொகை மற்றும் தீ விபத்திற்கான நிவாரண உதவித் தொகை

வணிகர் தினத்தை முன்னிட்டு திருச்சியில் நடைபெற்ற வணிகர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல உதவித் தொகையை ரூபாய் 1,00,000/-லிருந்து ரூபாய் 3,00,000/-ஆகவும், வணிக இடங்களில் நிகழும் தீ விபத்திற்கான நிவாரண உதவித் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/-ஆகவும் உயர்த்தி அறிவித்தார்கள். இவ்விரு நலத் திட்டங்களும் 30-5-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

24. மின் ஆளுமை

வரி செலுத்துவோரின் வசதிக்காக பல்வேறு மின் ஆளுமை முயற்சிகள் துறையால் எடுக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

24.1 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்புமூலம் புதிய பதிவு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிக நிறுவனத்தின் புதிய பதிவும் இணைய பொது முகப்புமூலம் இணைய வழியாகவே மேற்கொள்ளப்படுகிறது. வரி செலுத்துவோர் தங்கள் வணிகத்தைப் பதிவு செய்யும் பொருட்டு வணிக வரி அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை.

தமிழ்நாட்டில், வணிகம் செய்து வரும் சுமார் 11.67 இலட்சம் வரி செலுத்துவோர் இணையதளம் வாயிலாக வழங்கப்படும் மின்னணு சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களில், 6.96 இலட்சம் வரி செலுத்துவோர் மாநில அதிகார வரம்பிலும் மீதமுள்ள 4.71 இலட்சம் வரி செலுத்துவோர் மத்திய அதிகார வரம்பிலும் உள்ளனர்.

24.2 சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் வரி விவர அறிக்கைகளின் அனைத்து நடைமுறைகளிலும் மின்னணு முறையில் தாக்கல் செய்தல், விலைப்பட்டியல் விவரங்களைப் பதிவேற்றுதல், உள்ளீட்டு வரி வரவு குறித்த தகவல்கள் தானாக உருப்பெறுதல் ஆகியவை உள்ளடங்கியுள்ளது. இந்த வழிமுறை வெளிப்படைத்தன்மையோடு இருப்பது மட்டுமல்லாமல் வரி செலுத்துவோர் எளிதாக வரி விவர அறிக்கையினைத் தாக்கல் செய்யவும் தகுதியான உள்ளீட்டு வரி வரவினைப் பெறவும் உதவுகிறது. சுமார் 6.25 இலட்சம் வரி செலுத்துவோர், வரி செலுத்துவதோடு GSTR—3B *வரி விவர அறிக்கையினையும் தாக்கல் செய்கிறார்கள். மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரியும் ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியும் இந்த மின்னணு முறையின்மூலம் மாதந்தோறும் அரசால் பெறப்படுகிறது.*

24.3 மதிப்பு கூட்டு வரியின்கீழ் வரி விவர அறிக்கை தாக்கல் மற்றும் வரி வசூல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குட்படாத பொருட்களைக் கையாளும் வணிகர்கள் பயன்படுத்துவதற்காக வணிக வரித் துறையால் தனியானதோர் இணையதள முகப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வணிகர்கள் இந்த இணையதள முகப்பைப்

பயன்படுத்தி, வரி விவர அறிக்கைகளைத் தாக்கல் செய்தும் வரி செலுத்தியும் வருகின்றனர்.

24.4 பின்புல அலுவலக பயன்பாட்டு மென்பொருள்

வணிக வரித் துறையின் பின்புல அலுவலக மென்பொருள் பயன்பாடு, மாதிரி-1 அமைப்பிலிருந்து மாதிரி-2 அமைப்பிற்கு 5-9-2022 முதல் வெற்றிகரமாக மாற்றப்பட்டது, இந்த மாதிரி-2 அமைப்பின்கீழ், அனைத்து பின்புல அலுவலக இடைமுகப்பு மற்றும் பதிவு செய்தல், வரி விவர அறிக்கைகள் தாக்கல், வரி செலுத்திய விவரங்கள், வரி விவர அறிக்கைக் கூர்ந்தாய்வு, வரி திருப்புத் தொகை, மேல்முறையீடு, நுண்ணறிவு, தணிக்கை போன்ற பல்வேறு அலுவலக செயல்பாடுகள் தொடர்பான சேவைகள் அனைத்தும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையத்தால் (GSTN) வரி அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாதிரி—1) மற்றும் மதிப்பு கூட்டு வரி தொடர்பான பின்புல அலுவலக இடைமுகப்பில் ஏற்படும் குறைகளைக் களையும்பொருட்டு, முழுமையான தீர்வு திட்டம் துறையால் 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் பின்புல மென்பொருள் மாதிரி-1-லிருந்து மாதிரி-2-க்கு மாறிய நிலையில், இம்மாற்றத்தை சுமூகமாக நடைமுறைப்படுத்த ஏதுவாக ஏற்கெனவே கணினி ஒருங்கிணைப்பாளருடன் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தமானது செப்டம்பர் 22, 2022 அன்று நடைபெற்ற மாநில அளவிலான அதிகாரமளிக்கப்பட்ட குழு (State Level Empowered Committee) கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பிப்ரவரி 2023 முதல் ஜனவரி 2024 வரை மேலும் ஒரு வருடத்திற்கு, அரசாணை (நிலை) எண் 9, வணிக வரி மற்றும் பதிவுத் (டி1) துறை, நாள் 23-1-2023-ன்படி நீட்டிக்கப்பட்டுள்ளது.

24.5 புள்ளியியல் பகுப்பாய்வு மென்பொருள்

வரி ஏய்ப்பைக் கண்டறிவதற்காகவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் வருவாய் இழப்பைத் தடுப்பதற்காகவும் மேம்படுத்தப்பட்டதொரு வணிக நுண்ணறிவு மென்பொருள், அதாவது, 'புள்ளியியல் பகுப்பாய்வு முறை' [Statistical Analysis System (SAS)] இத்துறையால் பயன்படுத்தப்படுகிறது. இப்பகுப்பாய்வு மென்பொருள், நுண்ணறிவுப் பிரிவின் நடவடிக்கைகளை

2023 ஏப்ரல் 10]

திட்டமிடுவதிலும் தரவுகளின் பகுப்பாய்வுகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இம்மென்பொருளால் பின்வரும் அறிக்கைகள் உருவாக்கப்படுகின்றன:—

வ. எண்	விவரங்கள்	அறிக்கைகள்
1	*வரி விவர அறிக்கைகள்*	i. *வரி விவர அறிக்கையில் பொருந்தாத தரவுகளைத் தெரிவித்தல்.* ii. *செலுத்த வேண்டிய வட்டி* iii. *பதிவு ரத்து செய்யப்பட்ட வணிகர்களிடமிருந்து வருவாய்.*
2	*பதிவு*	*பொருட்களின் அடிப்படையிலான பகுப்பாய்வு மற்றும் இடர்காரண வடிவம்*
3	*பணம் செலுத்துதல்*	i. *பொருள் வாரியான வருவாய்* ii. *வரி விகித அடிப்படையிலான பகுப்பாய்வு* iii. *துறை வாரியான பகுப்பாய்வு*
4	*புள்ளியியல் பகுப்பாய்வு முறை (*SAS*) எச்சரிக்கைகள்*	*மாதிரி—1 பின்புல அமைப்பின் மூலம் அனுப்பப்பட்ட எச்சரிக்கைகளின் நிலை*
5	*மூன்றாம் தரப்பு தரவு*	*மின்னணு வழி பட்டி மற்றும்* GSTR—*3*B *தாக்கல் செய்யப்படாதவைகளின் ஒப்பீடு.* *இணக்கவரி செலுத்தும் வணிகர்களின் மாநிலங்களுக்கு இடையேயான மின்னணு வழி பட்டி*

மேற்படி பகுப்பாய்வு அறிக்கைகள், வரிஏய்ப்பு செயல்களில் ஈடுபடும் வரி செலுத்துவோரைக் கண்டறிந்து, வரி ஏய்ப்பை கட்டுப்படுத்த வரி விதிப்பு அலுவலர்களுக்கு உதவுகின்றன.

24.6 வரி விவர அறிக்கைகள்மீது கூர்ந்தாய்வு

பகுப்பாய்வு மென்பொருளை ஒருங்கிணைப்பதன் மூலமே, வரி விவர அறிக்கைகளை வரி அலுவலர்கள் திறம்பட

[2023 ஏப்ரல் 10

கூர்ந்தாய்வு செய்திட இயலும். கணினியில் வழங்கப்படும் பகுப்பாய்வு அறிக்கைகளைப் பயன்படுத்தி, வரி செலுத்துவோர் தாக்கல் செய்த வரி விவர அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிவர்த்தனைகளுள் காணப்படும் முரண்பாடுகள், வரி அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு வரி விவர அறிக்கைகளை ஆய்வு செய்வதன்மூலம் வரி ஏய்ப்பு செய்பவர்கள் மற்றும் போலி விற்பனை பட்டி வழங்குபவர்கள் (Bill Traders) கண்டறியப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

24.7 அழைப்பு மையம்

அரசாணை (நிலை) எண் 196, வணிக வரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 20-12-2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ள வெளிச் செல்லும் அழைப்பு மையம் (outbound call centre) ஒன்று, சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிக வரிகள் இணைப்புக் கட்டடத்தில் நிறுவப்பட்டு வருகிறது. வரி விவர அறிக்கை தாக்கல் செய்யாதவர்களையும் வரி செலுத்த தவறுபவர்களையும் இந்த வெளிச்செல்லும் அழைப்பு மையம் உன்னிப்பாக கண்காணிக்கும். அழைப்பு மையத்தின் அலுவலர்கள், வரி விவர அறிக்கை தாக்கல் செய்யாதவர்கள் மற்றும் வரி செலுத்த தவறுபவர்களை தொலைபேசியில் அழைத்து, வரி விவர அறிக்கையினைத் தாக்கல் செய்து, உரிய வரியை உடனடியாக செலுத்துமாறு கோருவார்கள். இப்பணியின் தொடர் நடவடிக்கைகளும் அழைப்பு மையத்தால் மேற்கொள்ளப்படும்.

24.8 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை வணிக வரித் துறையின் ஆய்வில் ஈடுபடுத்துதல்

அரசாணை (நிலை) எண் 112, வணிக வரி மற்றும் பதிவுத் (டி1) துறை, நாள் 20-7-2022-ன்படி சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்கள்/ நிபுணர்களை வெளிச் சந்தை மூலம் தேர்ந்தெடுக்க ரூ.38 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

வணிக இடத்திற்கு ஆய்வுக்காக உரிய அலுவலர்கள் செல்லும்போது இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணர்களும் உடன் செல்வார்கள். பல்வேறு மென்பொருள் மற்றும் வன்பொருள் குறித்து அறிந்திருக்கும் இந்நிபுணர்கள், வணிகர்களால் பயன்படுத்தப்படும் கணக்கு பதிவு முறைகள், விலைப்பட்டி

2023 ஏப்ரல் 10]

*உருவாக்கும் முறைகள் மற்றும் 'விற்பனை முனைய கருவி' (*point of sale systems*) போன்ற பரிவர்த்தனை முறைகளை ஆய்வு செய்து வன்பொருள் மற்றும் மேகக்கணினியிலிருந்து தரவுகளை வெளிக்கொணர்வார்கள். தரவுகளை மீட்டெடுத்து, சரிபார்த்து, ஆய்வினை திறம்பட மேற்கொள்ள வரி விதிப்பு அலுவலர்களுக்கு இவர்கள் உதவுவார்கள்.*

இந்த ஆய்வு முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம், வணிக இடத்திலிருந்து அனைத்து தொடர்புடைய தரவுகளையும் துறையால் துல்லியமாகப் பெற முடியும். வரிஏய்ப்பு செயல்களைக் கண்டறிந்து அதன்மூலம் வருவாய் இழப்பைத் தடுப்பதில் இந்த ஏற்பாடு சிறந்த பலன்களைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

24.9 ஜிஎஸ்டி பிரைம் மென்பொருள் (GST PRIME)

*ஜிஎஸ்டி பிரைம் என்பது, பல்வேறு மேலாண்மை தகவல் அமைப்பு (*MIS*) அறிக்கைகள் மூலம் வசூலிக்கப்படும் வரி தொடர்பான தகவல்களை பகுப்பாய்வு செய்து கண்காணிக்கும் பணியில் வரி அலுவலர்களுக்கு உதவும் வகையில், தேசிய தகவல் மையத்தால் (*NIC*) உருவாக்கப்பட்ட ஒரு பயன்பாட்டு மென்பொருளாகும். இந்த மென்பொருளானது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொது இணைய முகப்பு (*GST Common Portal*), மின்னணு வழிப்பட்டி மற்றும் வரி அலுவலர்களுக்கு இடையிலான ஓர் இணைப்பாக செயல்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படக்கூடிய பல்வேறு அறிக்கைகளைப் பெற உதவுகிறது. இந்த மென்பொருளை செயல்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.*

24.10 எனது விலைப்பட்டி-எனது உரிமை

அரசாணை (நிலை) எண் 126, வணிக வரி மற்றும் பதிவுத்(சி2) துறை, நாள்: 26-7-2022-ன்படி 'எனது விலைப்பட்டி-எனது உரிமை' என்ற ஒரு புதிய திட்டம் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பொது மக்கள் தாங்கள் வாங்கும் பொருட்களுக்கு உரிய விலைப்பட்டியை கேட்டுப்பெறும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, வணிகர்களிடையே விலைப்பட்டி வழங்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காகவும் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் விலைப்பட்டியலோடு சரக்குகள் விற்பனை செய்யப்படுவது உறுதி செய்யப்படும்; அதன் விளைவாக வருவாயும் அதிகரிக்கும்.

இத்திட்டத்தின்கீழ், நுகர்வோர் தாங்கள் பெற்றுகொண்ட விலைப்பட்டிகளை அரசு இணையதளம் அல்லது தங்களது கைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்ய இயலும். அவ்வாறு பதிவேற்றம் செய்யும் நுகர்வோர் காலமுறை அடிப்படையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படும். இந்த திட்டத்திற்கான இணையதள/ கைபேசி செயலி தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்டு வருகிறது.

24.11 சுற்றும் படைக்கான கட்டுப்பாட்டு அறை

நுண்ணறிவுப் பிரிவில் உள்ள சுற்றும் படை அலுவலர்களுக்கு போதுமான தரவுகள்/ வழிகாட்டுதல்களை வழங்கவும் சுற்றும்படை நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் மைய கட்டுப்பாட்டு அறை ஒன்று, சென்னை—6, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிக வரி கட்டடத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இம்மைய கட்டுப்பாட்டு அறையிலிருந்து சுற்றும் படை அலுவலர்கள் பயன்படுத்தும் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள தடங்காட்டி கருவி (GPS) மற்றும் புகைப்படக்கருவி மூலம் அவ்வாகனங்களை நிகழ்நேரத்தில் கண்காணிக்க இயலும். மேலும், மின்னணு வழிப்பட்டி (e—Way Bill) தரவுத்தளம் மற்றும் தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி அவர்களை வழிநடத்தவும் இயலும். சரக்கு வாகனங்கள் தணிக்கை செய்யப்படும்போது, கட்டுப்பாட்டு அறை உரிய தகவல்களையும் வழிகாட்டுதலையும் சுற்றும் படை அலுவலர்களுக்கு வழங்கும்.

24.12 பிற இணைய வழி சேவைகள்

வணிகப் பெ ரு மக்களுக்கு https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தில் பின்வரும் வசதிகளும்/சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன:

- சட்டங்கள் மற்றும் விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசாணைகள் மற்றும் அறிவிக்கைகளைப் பார்வையிடலாம்; பதிவிறக்கம் செய்யலாம்.
- வணிகர் செலுத்திய வரி, அவரது பக்கமுகப்பு (வணிகரின் வரி பேரேடுகள்) ஆகியவற்றைப் பார்வையிடும் வசதி.
- சரக்குகளின் மீதான வரி விவரங்கள் அடங்கிய அட்டவணை மற்றும் வரி விகிதத்தை இணையதளத்தில் தேடும் வசதி.

2023 ஏப்ரல் 10]

- *அடையாள எண் (TIN) அல்லது வணிகத்தின் பெயர் மூலம் வரிசெலுத்துவோர் விவரங்களை இணையதளத்தில் தேடும் வசதி.*

25. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள்

கடந்த 2022 ஆம் ஆண்டில், அதாவது, 1-1-2022 முதல் 31-12-2022 வரையிலான காலத்தில் இச்சட்டத்தின்கீழ் 625 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டுள்ளன.

26. வணிகவரி அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டுதல் மற்றும் புனரமைப்பு

- *2021-2022 ஆம் ஆண்டில், பேரூர், துறையூர், ஆத்தூர் (ஊரகம்), ஆத்தூர் (நகரம்), சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய வரிவிதிப்பு அலுவலகங்களுக்குச் சொந்த வணிக வரிக் கட்டடம் கட்டும் பொருட்டு ரூ.9.64 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வலுவலகங்கள் விரைவில் செயல்பாட்டுக்கு வரும்.*

- *2022-2023 ஆம் ஆண்டில் மதுரையில் உள்ள ஒருங்கிணைந்த வணிக வரிக் கட்டடம் மற்றும் வணிக வரி அலுவலகங்கள் இயங்கி வரும் சென்னை மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தினைப் புதுப்பிப்பதற்கு, ரூ.11.85 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

27. 2022-2023 ஆம் ஆண்டில் வணிக வரித் துறையில் மேற்கொள்ளப்பட்ட பிற புதிய முயற்சிகள்

27.1 வணிக வரித் துறையின் மறுசீரமைப்பு-உதவியாளர் நிலையில் உள்ள 1,000 பணியிடங்களை தரம் உயர்த்துதல்

2021-2022 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளவும் எளிதாக வணிகம் செய்வதை உறுதி செய்யவும் அரசுக்கு வருவாயைப்

பெருக்கவும் துறையின் வெட்டு விளிம்பு நிலையில் மனித வளத்தை அதிகரிக்கவும் வணிகவரித் துறை மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, வணிக வரித் துறையில் உள்ள 1,000 உதவியாளர் பணியிடங்களை, 840 துணை வணிக வரி அலுவலர் பணியிடங்களாகவும், 160 வணிக வரி அலுவலர் பணியிடங்களாகவும் தரம் உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 20, வணிக வரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 9-3-2023-ன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்மூலம், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ், வரி விவர அறிக்கைகள் தாக்கல், திருப்புகை, கூர்ந்தாய்வு, தணிக்கை மற்றும் ஆய்வு ஆகிய செயல்பாடுகளை மேலும் திறம்பட கண்காணிக்க முடியும். புதிய தணிக்கைப் பிரிவை ஏற்படுத்தி, அதில் அதிக அலுவலர்களை ஈடுபடுத்துவதன்மூலம் வரி ஏய்ப்பு தடுப்பு தொடர்பாக சீரிய முயற்சிகள் மேற்கொண்டு அரசுக்கு அதிக வருவாயை ஈட்ட முடியும்.

27.2 ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்தபட்சம் ஒரு வணிக வரி மாவட்டம் உருவாக்கம்

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக குறைந்தபட்சம் ஒரு வணிக வரி மாவட்டம் உருவாக்கும் நோக்கில், 13 வணிக வரி மாவட்டங்களை வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக வணிக வரித் துறையில் உருவாக்கிட அரசாணை (நிலை) எண் 150, வணிக வரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள் 9—11—2021—ன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிய வணிக வரி மாவட்டங்களை உருவாக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

27.3 வரி ஏய்ப்பினைத் தடுக்க உதவுபவர்களுக்கு வெகுமதி

சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, வரி ஏய்ப்பு செய்வோர் குறித்து வணிகவரித் துறைக்கு தகவல் தெரிவிக்கும் பொதுமக்களுக்கும், வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து சிறப்பாக வரி வசூல் செய்யும் வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் வெகுமதி வழங்க, ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கி அரசாணை (நிலை) எண் 100, வணிக வரி மற்றும் பதிவுத் (எப் 1) துறை, நாள் 24-6-2022-ன்படி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 10]

27.4 வரி ஆய்வுக் குழு

*சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 207, வணிக வரி மற்றும் பதிவுத் (A2) துறை, நாள் 30-12-2022-ன்படி வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் இரண்டு வரி ஆலோசகர்கள், ஓர் உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிகவரி அலுவலர் ஆகியோரைக் கொண்ட வரி ஆய்வுக் குழு (*Tax Research Unit*) அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

வருவாய் வளர்ச்சி நிலைகள், வரி விகிதத்தில் மாற்றம், வருவாய் ஆதாரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதோடு துறைவாரி வேறுபாடுகள், புலனாய்வு/தணிக்கைக்கான காரணிகள் மற்றும் வரி செலுத்துவோர் பின்பற்றும் வரி ஏய்ப்பு நடைமுறைகளை பகுப்பாய்வு செய்யும் பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

28. முடிவுரை

முனைப்புடன் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளினால் 2022-2023 ஆம் நிதி ஆண்டில் மாநிலம் இதுவரை கண்டிராத அளவில் ரூ.1,33,540.70 கோடி வருவாயை ஈட்டி வணிகவரித் துறை சாதனை படைத்துள்ளது. களப்பணிகளில் ஒருங்கிணைந்த செயலாக்கம் மற்றும் வரி நிர்வாகத்தின்கீழ் எளிதாக தொழில் நடத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் வணிகர்களுக்கு சிறந்த சேவையை வழங்கி வரி இலக்கை அடைவதே வணிக வரித் துறையின் உயரிய நோக்கமாகும்.

———

இணைப்பு-VII

(290 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முன்னுரை

சொத்துகள் தொடர்பான சட்ட உரிமைகள் குறித்து பொதுமக்கள் அறிந்திருக்கும் வகையில் சொத்து தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்யும் நடைமுறையை பதிவுச்சட்டம் வழங்குகிறது. பதிவு செய்யப்படும் ஆவணங்களின் நகல்களை நிரந்தரமாகப் பாதுகாப்பதன்மூலம் மோசடிகளைத் தடுக்கவும் இச்சட்டம் துணை நிற்கிறது. பதிவு நடைமுறைகளை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மோசடியான ஆவணங்களை இரத்து செய்ய பதிவுத் துறையின் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பதிவுச் சட்டம், 1908-ல் உரிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தமிழ்நாடு சட்டம் 41/2022 நிறைவேற்றப்பட்டுள்ளது. பதிவுத் துறையில் நிகழ்ந்துள்ள இத்தகைய சீர்திருத்தம் இந்தியாவின் பிற மாநிலங்கள் நமது மாநிலத்திற்கு நேரில் வந்து இதுகுறித்து தெரிந்துகொண்டு அதனைப் பின்பற்ற விழையும் வகையில் அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளது. வங்கிகளில் கடன் பெற நடைபெறும் உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள், இரசீதுகள், குடியிருப்பு பயன்பாட்டிற்கான ஐந்து ஆண்டுகளுக்குட்பட்ட குத்தகை போன்ற ஆவணங்களை இணைய வழியில் பதிவு செய்யும் புதிய நடைமுறையையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறையானது அனைத்து ஆவணப் பதிவிற்காகவும் பொதுமக்கள் நேரடியாக சார்—பதிவாளர் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையை மாற்றியுள்ளது. பதிவு அலுவலர்களின் பணியின் மீதான கண்காணிப்பை மேம்படுத்தும் வகையிலும் பதிவுத் துறையானது சீரமைக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பதிவு செய்வதோடு

2023 ஏப்ரல் 10]

மட்டுமின்றி பல்வேறு சட்டங்களின் கீழான திருமணங்கள், சங்கங்கள், சீட்டு நிதியங்கள் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களைப் பதிவு செய்யும் பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.1 பதிவுத் துறையின் வரலாறு

1864-ல் தோற்றுவிக்கப்பட்ட பதிவுத் துறையானது ஆவணப் பதிவு மற்றும் வருவாய் ஈட்டுதலில் தற்போது அதிவேக வளர்ச்சியை அடைந்துள்ளது. பதிவுத் துறையால் பல்வேறு வகையான சட்டங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் நிர்வகிக்கப்படுவதோடு சொத்து தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்து பொதுமக்களுக்கு சட்டபூர்வ தகவல் வழங்கும் பணியையும் பதிவுத் துறை மேற்கொண்டு வருகிறது.

2. பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறையால் நான்கு சட்டங்கள் முழுமையாகவும் ஒன்பது சட்டங்கள் பகுதியாகவும் நிர்வகிக்கப்படுகின்றன.

2.1 பதிவுத் துறையால் முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறையால் முழுமையாக நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் பின்வருமாறு:

வ.எண்	சட்டம்	செயல்பாடுகள்
1	*பதிவுச் சட்டம், 1908*	*ஆவணப் பதிவு தொடர்பான விதிகளை இச்சட்டம் ஒருங்கிணைக்கிறது. கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் எவை மற்றும் விருப்பத்தின்பேரில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் எவை என்பது குறித்து இச்சட்டம் விரிவாக விளக்குகிறது. பதிவின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், பராமரிக்கப்பட வேண்டிய பல்வேறு பதிவேடுகள் குறித்தும் இச்சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

வ.எண்	சட்டம்	செயல்பாடுகள்
2	இந்திய முத்திரைச் சட்டம், 1899	பல்வகை ஆவணங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை விகிதங்கள் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், முத்திரைத் தீர்வை எவ்வாறு வசூலிக்கப்பட வேண்டும் என்ற வழிமுறையையும் இச்சட்டம் வகுத்தளிக்கிறது.
3	தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975	இலக்கியம், அறிவியல், கல்வி, விளையாட்டு போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக தொடங்கப்படும் சங்கங்களைப் பதிவு செய்வதற்கான வழிமுறையை இம்மாநில சட்டம் வழங்குகிறது. இதுதவிர, காலமுறையாக கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்தும் சங்க செயல்பாடு நடைமுறைகள் குறித்தும் இச்சட்டம் எடுத்துரைக்கிறது.
4	சீட்டு நிதிகள் சட்டம், 1982	பொது மக்களின் பணத்தை சேமிக்கும் ஓர் அமைப்பாக செயல்படும் சீட்டு நிதியங்களைப் பதிவு செய்தல், சீட்டுகளை நடத்தும் முறை, சீட்டு நிறுவனங்கள் மற்றும் சந்தாதாரர்களுக்கு இடையேயான வழக்குகளைத் தீர்வு செய்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றை இச்சட்டம் விவரிக்கிறது.

2023 ஏப்ரல் 10]

2.2 பதிவுத் துறையால் பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பின்வரும் சட்டங்கள் பதிவுத் துறையில் பகுதியாக நிர்வகிக்கப்படுகின்றன:

1. பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம், 1886

2. இந்திய கூட்டுபங்காண்மைச் சட்டம், 1932

3. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872

4. பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம், 1932

5. சிறப்பு திருமணச் சட்டம், 1954

6. இந்து திருமணச் சட்டம், 1955

7. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச்சட்டம், 2009

8. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

9. பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம், 1969

3. துறையின் அமைப்பு

பதிவுத் துறையானது, பதிவுத் துறை தலைவரின்கீழ் இயங்குகிறது. மாநிலம் முழுவதும் 10 பதிவு மண்டலங்கள், 54 பதிவு மாவட்டங்கள், முகாம் அலுவலகங்களையும் உள்ளடக்கி 583 சார்—பதிவாளர் அலுவலகங்கள் கொண்டதாக பதிவுத்துறை உள்ளது.

3.1 பதிவுத் துறைத் தலைவர்

இந்திய முத்திரைச் சட்டம், 1899–ன்கீழ் தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராகவும் சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன்கீழ் பதிவாளராகவும் பதிவுத் துறை தலைவர் செயல்படுகிறார்.

பல்வேறு பிரிவுகளில் பதிவுத் துறை தலைவருக்கு உதவிடும் பொருட்டு, நான்கு கூடுதல் பதிவுத்துறைத் தலைவர்கள் உள்ளனர். ஒவ்வொரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொருண்மைகளின் விபரங்கள் பின்வருமாறு:

வரிசை எண்	பதவி	பொருண்மை
1	கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)	ஆவணப் பதிவு, முத்திரைத் தீர்வை வசூலித்தல், இந்திய முத்திரைச் சட்டம், 1899 பிரிவு 56–ன் கீழான மேல்முறையீடு, முத்திரைத் தீர்வை திருப்புத் தொகை, மாநில கணக்காயர் தணிக்கை மற்றும் பிற.
2.	கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)	சந்தை மதிப்பு வழிகாட்டியினை நிர்ணயித்தல் மற்றும் நிர்வகித்தல், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(5) மற்றும் 47A(6)—ன் கீழான மேல்முறையீடு மற்றும் பிற.
3.	கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)	உள்தணிக்கைப் பிரிவு, பல்வேறு திருமண சட்டங்களின் கீழான பதிவுகள் மற்றும் சார்பதிவக எல்லைகள் குறித்த பணி மற்றும் பிற.
4.	கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (சீட்டு மற்றும் சங்கம்) / கூடுதல் சீட்டு பதிவாளர்	சங்கங்கள், சீட்டு நிதியங்கள், கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவுகள், அலுவலகக் கட்டடங்கள், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, வருவாய் ஒத்திசைவு குறித்த பணிகள் மற்றும் பிற.

3.2 துணை பதிவுத் துறைத் தலைவர்

பதிவுத் துறையின் 10 பதிவு மண்டலங்கள் துணை பதிவுத் துறை தலைவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மண்டலங்கள் பல பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய மண்டலத்தின் மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் சார்பதிவாளர்களின் பணிகளைக் கண்காணிக்கும் அலுவலராக துணை பதிவுத் துறை தலைவர் செயல்படுகிறார்.

2023 ஏப்ரல் 10]

பல்வேறு மண்டலங்களுக்குட்பட்ட பதிவு மாவட்டங்களின் விபரம் பின்வருமாறு:

வ. எண்	மண்டலம்	மண்டலத்திற்குட்பட்ட பதிவு மாவட்டங்கள்
1	சென்னை	செங்கல்பட்டு மத்திய சென்னை வட சென்னை தென் சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர்
2	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் ஈரோடு கோபிசெட்டிபாளையம் திருப்பூர் உதகமண்டலம்
3	கடலூர்	சிதம்பரம் கடலூர் கள்ளக்குறிச்சி திண்டிவனம் விழுப்புரம் விருத்தாசலம்
4	மதுரை	திண்டுக்கல் மதுரை வடக்கு மதுரை தெற்கு பழனி பெரியகுளம்
5	இராமநாதபுரம்	காரைக்குடி இராமநாதபுரம் சிவகங்கை விருதுநகர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 10

வ. எண்	மண்டலம்	மண்டலத்திற்குட்பட்ட பதிவு மாவட்டங்கள்
6	சேலம்	தர்மபுரி கிருஷ்ணகிரி நாமக்கல் சேலம் கிழக்கு சேலம் மேற்கு
7	தஞ்சாவூர்	கும்பகோணம் மயிலாடுதுறை நாகப்பட்டினம் பட்டுக்கோட்டை தஞ்சாவூர் திருவாரூர்
8	திருச்சிராப்பள்ளி	அரியலூர் கரூர் பெரம்பலூர் புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி
9	திருநெல்வேலி	சேரன்மகாதேவி கன்னியாகுமரி மார்த்தாண்டம் பாளையங்கோட்டை தென்காசி தூத்துக்குடி திருநெல்வேலி
10	வேலூர்	செய்யார் ராணிப்பேட்டை திருப்பத்தூர் திருவண்ணாமலை வேலூர்

மதுரை பதிவு மண்டலமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு அரசாணை (நிலை) எண் 181, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 9-12-2022-ன்படி ஒரு புதிய பதிவு மண்டலம் 29-12-2022 அன்று உருவாக்கப்பட்டது. சென்னை பதிவு மண்டலமானது, சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) என இரண்டு புதிய

2023 ஏப்ரல் 10]

பதிவு மண்டலங்களாகப் பிரிக்க அரசாணை (நிலை) எண் 179, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 9—12—2022—ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் இப்புதிய பதிவு மண்டலங்கள் செயல்பாட்டுக்கு வரும்.

3.3 உதவி பதிவுத் துறைத் தலைவர் (மண்டலம்)

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நான்கு மண்டல உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட சார்—பதிவாளர் அலுவலகங்களில் சோதனை தணிக்கைப் பணியை மேற்கொள்கின்றனர்.

3.4 மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)

ஒரு பதிவு மாவட்டம் நிர்வாக மாவட்டப் பதிவாளரால் நிர்வகிக்கப்படுகிறது. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள திருவாரூர், திருவள்ளூர், திருப்பத்தூர் மற்றும் பெரம்பலூர் பதிவு மாவட்டங்களையும் சேர்த்து மொத்த பதிவு மாவட்டங்கள் 54 ஆக உள்ளது.

சார்-பதிவாளர்களது அலுவலகப் பணியைக் கண்காணிப்பதுடன், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன் கீழான சங்கங்களின் பதிவு, இந்திய சீட்டு நிதிகள் சட்டம், 1982-ன் கீழான சீட்டு நிதியங்களின் பதிவு, இந்திய கூட்டுபங்காண்மை சட்டம், 1932-ன் கீழான கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவு போன்ற பணிகளும் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் பதிவுச் சட்டம், 1908, பிரிவு 77A-ன்படி மோசடி ஆவணப் பதிவுகளின் மீதான விசாரணையையும் இவர்கள் மேற்கொள்கின்றனர்.

நிர்வாகத்தைத் திறம்பட செயல்படுத்திட ஏதுவாக, வருவாய் மாவட்டங்களின் தலைநகரங்களில் உள்ள மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) பணியிடங்களை உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டு, 26 மாவட்டப் பதிவாளர் பணியிடங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு மேம்படுத்தப்பட்டு அரசாணை (நிலை) எண் 160, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 8-11-2022 மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணியிடங்களை உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.5 சார்-பதிவாளர் அலுவலகங்கள்

பதிவுத் துறையில் முகாம் அலுவலகங்களையும் உள்ளடக்கி 583 சார்—பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. முகாம் அலுவலகங்களுக்கு பிரதான சார்—பதிவாளர் அலுவலகங்களில் உள்ள பணியாளர்கள் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சென்று ஆவணப் பதிவு மேற்கொள்கின்றனர்.

3.5.1 சார்-பதிவாளர்களின் பணிகள்

1. *பதிவுச் சட்டம், 1908—ன்கீழ் ஆவணங்களைப் பதிவு செய்தல்.*
2. *இந்து திருமணச் சட்டம், 1955 மற்றும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009—ன்கீழ் திருமணங்களைப் பதிவு செய்தல்.*
3. *சிறப்புத் திருமணச் சட்டம், 1954—ன்கீழ் திருமணங்களை நடத்தி வைத்தல்.*
4. *வில்லங்க சான்றுகள் மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை வழங்குதல்.*
5. *பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளை பாதுகாத்தல் மற்றும் வடிப்புகளை வழங்குதல்.*

3.6 பதிவுத் துறை பயிற்சி நிலையம்

புதிய பணியாளர்களுக்கு பயிற்சியும் ஏற்கெனவே பணியில் உள்ளவர்களுக்கு துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கும் பொருட்டு 1996-ல் பதிவுத் துறை பயிற்சி நிலையம் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. பயிற்சியில் பங்குபெறும் பணியாளர்களுக்கு தங்கும் விடுதி வசதியுடனான இப்பயிற்சி நிலையம் துணை பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள இயக்குனரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது.

3.7 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(1)-ன்கீழ் பதிவு அலுவலரால் பரிந்துரைக்கப்படும் உரிமை

2023 ஏப்ரல் 10]

மாற்றம், பரிவர்த்தனை, நன்கொடை, பினாமி விடுதலை மற்றும் ஏற்பாடு ஆவணம் போன்றவற்றிற்கான சந்தை மதிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கிறார். ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள மதிப்பானது நடைமுறையில் உள்ள சந்தை மதிப்பினைவிட, குறைவாக உள்ள இனங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவு அலுவலரால் மேற்படி அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் குறைவு மதிப்பு தடுப்பு) விதிகள், 1968-ல் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சொத்தின் சரியான சந்தை மதிப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) முடிவு செய்கிறார். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-யால் நிர்ணயிக்கப்படும் மதிப்பினை ஏற்றுக்கொண்டு வாங்குபவர்/ எழுதிக்கொடுப்பவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்தும் நிலையில், பதிவு அலுவலரால் ஆவணமானது குறைவு பதிவுக் கட்டணத்தை வசூலித்த பின்னர் திரும்ப வழங்கப்படுகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-யால் நிர்ணயிக்கப்படும் மதிப்பிற்கு ஏற்ப குறைவு முத்திரைத் தீர்வையை வாங்குபவர் / எழுதிக்கொடுப்பவர் செலுத்தாத நேர்வுகளில் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேலும், இறுதியாணை பிறப்பிக்கப்பட்டு இரண்டு மாதத்திற்குள் குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தப்படவில்லையெனில் கட்டத்தவறிய மொத்த காலத்திற்கும் மாதம் 1% வட்டியுடன் குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படும்.

மாநிலம் முழுவதும் 11 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு:

வ. எண்	**மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)**	**அலுவலகத்தின் பெயர்**
1	*மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)*	*சென்னை கோயம்புத்தூர்*

வ. எண்	மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை)	அலுவலகத்தின் பெயர்
2	*தனித்துணை ஆட்சியர் (முத்திரை)*	*கடலூர்* *காஞ்சிபுரம்* *மதுரை* *சேலம்* *தஞ்சாவூர்* *திருச்சிராப்பள்ளி* *திருநெல்வேலி* *வேலூர்* *விருதுநகர்*

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கும் மதிப்பை ஆவணதாரர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவ்வாணைகளை எதிர்த்து இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(5)-ன்கீழ் பதிவுத் துறைத் தலைவருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயம் செய்யும் மதிப்பானது அரசு வருவாய்க்கு குந்தகம் ஏற்படுத்துவதாக கருதப்படின், முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் பதிவுத்துறை தலைவர் இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(6)-ன்படி தன்னிச்சையாக சீராய்வினை மேற்கொண்டு அந்த ஆணையைத் திருத்தலாம்; மாற்றலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47A(5) மற்றும் 47A(6)—ன்கீழ் பதிவுத் துறை தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளை எதிர்த்து ஆவணதாரர் பிரிவு 47A(10)-ன்கீழ் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

3.8 மாவட்டப் பதிவாளர் (தணிக்கை)

சார்—பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நூறு சதவிகிதம் தணிக்கை செய்வதற்காக மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) தலைமையில் உள்தணிக்கைப் பிரிவானது துறையில் செயல்படுகிறது. இத்தணிக்கைப் பிரிவானது, பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து வருவாய் கசிவு மற்றும் விதிமுறை மீறல்கள் உள்ளதா

2023 ஏப்ரல் 10]

என சரிபார்க்கிறது. எந்தவொரு வருவாய் இழப்பும் கவனத்திற்கு வராமல் இருப்பதைத் தவிர்ப்பதோடு வருவாய் கசிவினைத் தடுக்கும் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளையும் உள்தணிக்கைப் பிரிவு மேற்கொள்கிறது. பதிவுத் துறையில் மொத்தம் 49 தணிக்கை பிரிவுகள் செயல்படுகின்றன.

இழப்புகள் கண்டறியப்பட்டால் அதனை வசூல் செய்ய இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவுகள் 33(A), 47A(3) மற்றும் பதிவுச்சட்டம், 1908, பிரிவு 80(A)-ன் கீழான சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், வில்லங்க சான்றில் குறிப்பு செய்யப்படுவதன்மூலம் குறைவுத் தொகை வசூலிக்கப்படும் வரை தொடர் பதிவுகள் தடை செய்யப்படுகின்றன. தணிக்கை மாவட்டப் பதிவாளரது பணியை தொடர்புடைய துணை பதிவுத் துறைத் தலைவர் கண்காணிக்கிறார்.

சேலம் (கிழக்கு), காரைக்குடி, கோபிசெட்டிபாளையம், தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு) ஆகிய மாவட்டங்களில் ஐந்து புதிய மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் இவ்வலுவலகங்கள் செயல்படும்.

3.9 கட்டட கள ஆய்வு

அசையா சொத்து என்பது, நிலம் மற்றும் கட்டடத்தை உள்ளடக்கியதாகும். தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் குறைவு மதிப்பு தடுப்பு) விதிகள், 1968, விதி 3(1-A)-ன்படி கட்டடங்களின் வயது, வகை, தளம், பரப்பு போன்ற விபரங்கள் ஆவணங்களில் கட்டாயம் தெரிவிக்கப்பட வேண்டும். ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு குறைவான மதிப்புகளைக் கொண்ட கட்டடங்களின் கள ஆய்வு சார்—பதிவாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. பின்வரும் நேர்வுகளில் கட்டட கள ஆய்வு செய்ய வேண்டியதில்லை:

1) *உரிய அனுமதி பெற்ற கட்டடங்கள்*

2) *ஊரகப் பகுதிகளைப் பொறுத்து 3) 1 இலட்சத்திற்கும் குறைவான மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள்*

3) *நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்து 2 இலட்சத்திற்கும் குறைவான மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள்*

பொதுப் பணித் துறையிலிருந்து பகராண்மையில் இத்துறையில் சென்னை மற்றும் மதுரையில் பணிபுரியும் இரு

உதவி செயற்பொறியாளர்களால் தொழிற்சாலை, வணிக வளாகம், பன்னடுக்கு கட்டடங்கள் போன்ற சிறப்பு வகைக் கட்டடங்கள் மற்றும் ஐம்பது இலட்சத்திற்கு மேல் மதிப்பினைக் கொண்ட கட்டடங்கள் கள ஆய்வு செய்யப்படுகின்றன. பொதுப் பணித் துறையினரால் வெளியிடப்படும் மதிப்புகளின் அடிப்படையிலேயே கட்டடங்களின் மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது.

4. பதிவுத் துறைமூலம் ஈட்டப்படும் வருவாய்.

பதிவுத் துறையானது ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம், வில்லங்க சான்றுகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்குவதற்கான கட்டணம், திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கான கட்டணம் போன்றவற்றின்மூலம் வருமானத்தை ஈட்டுகிறது. சுமார் 83% வருமானமானது விற்பனை ஆவணங்களைப் பதிவு செய்வதன்மூலம் ஈட்டப்படுகிறது. மொத்த வருவாயில் சென்னை மண்டலத்தின் பங்களிப்பு மட்டும் ஏறக்குறைய 45% ஆகும்.

மாநில கருவூலத்தின் வருவாய் பங்களிப்பில் பதிவுத் துறையானது மூன்றாவது இடத்தில் உள்ளது. 2022-2023 நிதியாண்டில், துறையின் வருவாயான ரூ.17,296.84 கோடி, 34,41,248 எண்ணிக்கை ஆவணங்கள் பதிவு செய்வதன்மூலம் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் வருவாயில் 24.32% அதிகரிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையில் 14.78% அதிகரிப்பு ஆகும்.

4.1 கடந்த பத்து ஆண்டுகளில் அனைத்து இனங்களில் இருந்தும் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்

நிதி ஆண்டு	வருவாய் (ரூ. கோடியில்)	சென்ற நிதியாண்டை விட வளர்ச்சி விகிதம்	பதிவான ஆவணங்களின் எண்ணிக்கை	சென்ற நிதி ஆண்டை விட வளர்ச்சி விகிதம்
2013-2014	8,055.74	8.05%	26,53,291	-1.38%

2023 ஏப்ரல் 10]

2014-2015	8,279.64	2.78%	25,73,931	-202.99%
2015-2016	8,562.38	3.41%	25,28,561	-201.76%
2016-2017	7,007.74	-2018.16%	20,27,916	-2019.80%
2017-2018	9,121.53	30.16%	22,10,595	9.01%
2018-2019	11,071.02	21.37%	25,73,478	16.42%
2019-2020	11,028.23	-200.39%	25,87,816	0.56%
2020-2021	10,643.08	-203.49%	26,95,650	4.17%
2021-2022	13,913.65	30.73%	29,98,048	11.22%
2022-2023	17,296.84	24.32%	34,41,248	14.78%

4.2 சந்தைபடுத்தக்கூடிய பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை

பங்கு மற்றும் கடனீட்டுப் பத்திரங்களின் வெளியீடு மற்றும் பரிமாற்றத்திற்கான முத்திரைத் தீர்வை சம்பந்தப்பட்ட பங்குச் சந்தைகள் மற்றும் வெளியீட்டு நிறுவனங்கள்மூலம் வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிப்பவர்களால் அப்பரிவர்த்தனைகள் செய்யப்பட்டால், இவ்வாறு வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மாதாந்திர அடிப்படையில் பதிவுத்துறைக்கு இந்நிறுவனங்களால் அளிக்கப்படுகிறது. இந்நேர்வில் கடந்த மூன்று ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வரிசை எண்	நிதியாண்டு	முத்திரைத் தீர்வை வசூல் (கோடிகளில்)
1	2020-2021	238.61
2	2021-2022	366.60
3	2022-2023	199.60

[*2023 ஏப்ரல் 10*

4.3 பிற இனங்களிலிருந்து வருவாய்

திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் போன்றவற்றின் பதிவுக்காக பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 2022-2023 ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ.எண்	வருவாய் விவரங்கள்	வருவாய் வசூல் (ரூ. கோடியில்)
1.	*திருமணப் பதிவு*	*3.62*
2.	*சங்கப் பதிவு*	*9.70*
3.	*சீட்டுப் பதிவு*	*16.43*
4.	*கூட்டுபங்காண்மை நிறுவன பதிவு*	*1.40*
5.	*மற்றவைகள் (பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் மற்றும் பிற கட்டணங்கள்)*	*19.89*
6.	*சந்தைபடுத்தக்கூடிய பத்திரங்கள்*	*199.60*
	மொத்தம்	**250.64**

5. சந்தை மதிப்பு வழிகாட்டிக் குழு

தமிழ்நாடு சட்டம் 13/2008-ன்படி 1-6-2010 முதல் அமல்படுத்தப்பட்ட இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 47AA ஆனது பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் ஒரு மதிப்பீட்டுக் குழுவை அமைக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. மாநிலத்தில் சந்தை வழிகாட்டி மதிப்புகள் குறித்த கொள்கை மற்றும் வழிமுறைகளை உருவாக்கி நிர்வகிக்கும் பொறுப்பினை மதிப்பீட்டுக் குழு கொண்டுள்ளது. மேலும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி துணை குழுக்கள் மதிப்பீட்டுக் குழுவின்கீழ் செயல்படுவதோடு மதிப்பீட்டுக் குழுவால் நிர்ணயம் செய்யப்படும் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

சந்தை வழிகாட்டி மதிப்பை அதிகரிக்க துணை குழுக்களுக்கு அதிகாரம் உள்ளது மற்றும் துணை குழுக்களின் பரிந்துரையின் பேரில் சந்தை வழிகாட்டி மதிப்பை குறைக்க மதிப்பீட்டுக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

2023 ஏப்ரல் 10]

கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களுக்கு முறையே சர்வே எண்கள் மற்றும் தெருக்களின் அடிப்படையில் வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழிகாட்டி மதிப்பு விவரங்கள் https://tnreginet.gov.in *என்ற பதிவுத் துறை இணையதளத்தில் உள்ளன.*

5.1 வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல்

சந்தை மதிப்பு வழிகாட்டியானது துணை குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1-4-2012 முதல் திருத்தியமைக்கப்பட்டது. எனினும் சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பு 9-6-2017 முதல் மாநிலம் முழுவதும் மதிப்பீட்டுக் குழுவால் ஒரே சீராக 33% குறைக்கப்பட்டது.

சொத்துகளின் சந்தை மதிப்பானது காலத்திற்கேற்ப அதிகரிக்கவோ குறையவோ செய்யலாம். இது மதிப்பு வழிகாட்டியில் முரண்பாடுகளை உருவாக்குவதால் இம்முரண்பாடுகளை சரிசெய்யவும் சரியான சந்தை வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்யவும் 'வழிகாட்டி மதிப்பு சீரமைத்தல் குழு' ஒன்றை அமைத்து அரசாணை (நிலை) எண் 180, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 27-12-2021-ன்படி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. இந்த உயர்மட்டக் குழு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சரின் தலைமையிலான வழிகாட்டுதல் குழுவின் கண்காணிப்பின்கீழ் இயங்கும். உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஏற்கெனவே உள்ள நடைமுறைகளின்படி மதிப்பீட்டுக் குழு மற்றும் துணைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும்.

5.2 வழிகாட்டி மதிப்பு மற்றும் பதிவுக் கட்டணம் மாற்றம்

சமீப வருடங்களில் சந்தை மதிப்பு மிக அதிகமாக உயர்ந்துள்ளதால், வழிகாட்டி மதிப்பினை சந்தை மதிப்பை பிரதிபலிப்பதாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. சர்வே நம்பர் வாரியாக இதனைப் பரிசீலிக்க கால அவகாசம் தேவைப்படுவதால் ஓர் இடைக்கால ஏற்பாடாக 8-6-2017 வரை வழக்கத்தில் இருந்த வழிகாட்டி மதிப்புகளுக்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பினை மாற்றி 2023-2024 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 9-6-2017 முதல் வழிகாட்டி மதிப்பு விற்பனை, நன்கொடை, பரிவர்த்தனை மற்றும் குடும்ப உறுப்பினர் அல்லாதவர்களுக்கான ஏற்பாடு

ஆவணங்களைப் பொறுத்து வழிகாட்டி மதிப்பு 33 சதவீதம் குறைக்கப்பட்டபோது பதிவுக் கட்டணம் 1 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட்டது. தற்போது பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அதே நிதிநிலை அறிக்கையில் இவ்வினங்களுக்கான பதிவுக் கட்டணம் 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு குறிப்பாக வங்கிக் கடன்கள் பெற்று வீடு வாங்கும் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. முத்திரைத் தீர்வை விலக்கு

இந்திய முத்திரைச் சட்டம், 1899, பிரிவு 9(1)(a)-ன்கீழ் முத்திரைத் தீர்வையில் சலுகை வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. தமிழ்நாட்டில் தொழில்களை ஊக்கப்படுத்த தொழில் தொடங்க தேவையான நிலம் / கொட்டகை / கட்டடம் ஆகியவற்றின் விற்பனை அல்லது குத்தகை அல்லது குத்தகையுடன் கூடிய விற்பனை ஆவணங்களுக்காக கீழ்க்கண்ட தொழிற்கொள்கைகளின்கீழ், முத்திரைத் தீர்வை சலுகையை அரசாங்கம் வழங்கியுள்ளது.

1. விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்துறை கொள்கை, 2019.
2. தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை, 2019.
3. தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை, 2020.
4. தமிழ்நாடு தொழில் கொள்கை, 2021.

7. மோசடியான பதிவுகளை தடுத்தல்

மோசடி பதிவுகளை தடுக்க தற்போதைய அரசாங்கம் பல பாராட்டத்தக்க முயற்சிகளை எடுத்துள்ளது.

7.1 ஆதாரைப் பயன்படுத்தி நிகழ் நேரத்தில் ஆவணதாரர்களின் அடையாளத்தினை சரிபார்த்தல்

ஆவணப் பதிவின்போது ஆவணதாரரின் கைரேகையை ஆதார் தரவுகளுடன் சரிபார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும்

2023 ஏப்ரல் 10]

பதிவர்கள் குறித்த விவரங்கள் ஆதார் தரவிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு, அவ்விவரங்கள் மேலெழுத்துடன் (endorsement) சேர்த்து அச்சுப்பிரதி எடுக்கப்படுகிறது. இந்த வசதியானது ஆள்மாறாட்ட நிகழ்வுகளை வெகுவாக குறைத்துள்ளது. வயது மூப்பு அல்லது விரலில் காயம் போன்றவற்றினால் கைரேகை பொருந்தாமல் போகும் நிலையில் கருவிழிபடலம்மூலம் ஆதார் தரவுடன் ஒத்திசைவு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆதார் ஒத்திசைவு வசதியானது பதிவர்களின் சம்மதத்தின் அடிப்படையிலானது என்ற போதிலும், இவ்வசதியில் இரண்டு ஆளறி சாட்சிகள் வலியுறுத்தப்படுவதில்லை என்பதால் பெரும்பாலான பதிவர்கள் இவ்வசதியைப் பயன்படுத்த முன்வருகின்றனர்.

7.2 ஆவணத்தை தயாரிக்கும் ஆவண எழுத்தர் அல்லது வழக்கறிஞரின் புகைப்படத்தை ஒட்டுதல்

மோசடி பதிவைத் தடுக்கவும், மோசடி செய்பவர்களின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தவும், தவறு செய்பவர்களை எளிதில் கண்டுபிடிக்கவும், ஆவணத்தினை தயாரிக்கும் ஆவண எழுத்தர்களின் அல்லது வழக்கறிஞர்களின் உரிம எண் அல்லது வழக்குரைஞர் கழக பதிவு எண்ணைக் குறிப்பிட்டு கையொப்பம் செய்வதுடன், அவர்களது புகைப்படத்தின் பிம்பத்தை ஆவணத்தின் இறுதி பக்கத்தில் அச்சிட அறிவுறுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

7.3 பதிவு விதிகளில் விதி 55A உட்புகுத்துதல்

மோசடி பதிவைக் குறைக்க, பதிவின்போது ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் சரிபார்க்கப்படுகிறது. முந்தைய அசல் ஆவணம் தொலைந்து விட்டால், விற்பனையாளர் காவல் துறையில் இருந்து 'ஆவணம் கண்டுபிடிக்க முடியவில்லை' என்ற சான்றிதழையும் இது தொடர்பான தினசரி நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். பூர்வீக சொத்தாக இருந்தால், சொத்தின் உரிமையாளர் தனது உரிமையை நிரூபிக்க பட்டா, வரி இரசீது போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், பதிவு செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழும் பதிவின்போது சரி பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சரிபார்ப்புகளும் பதிவு செய்யும் அலுவலர்களால் நிர்வாக ஆணைகளின் அடிப்படையிலேயே செய்யப்பட்டு வந்ததால், இந்நடைமுறைக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்காக, அரசு உரிய வழிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு பதிவு விதி 55A-யை உட்புகுத்தி இதனை அதிகார பூர்வமாக 5-9-2022 அன்று சிறப்பு அரசிதழ் எண் SRO A-16(a)/2022-ல் வெளியிட்டது. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவு விதி 55A ஆனது, அசையா சொத்துகளைப் பதிவு செய்வதில் ஆள்மாறாட்டம் மற்றும் மோசடிக்கு எதிரான ஒரு தடுப்பாக செயல்படுகிறது. மேலும், இப்புதிய விதியானது பதிவு நடைமுறையில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதோடு அப்பாவி அசல் உரிமையாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் நலன்களையும் பாதுகாக்கிறது.

7.4 மோசடி பதிவுகளை விசாரிப்பதற்கான சிறப்பு புலனாய்வு குழு

கடந்த காலங்களில் பதிவுகளில் நடந்த விதி மீறல்கள் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழு ஒன்றினை அமைத்து அரசாணை (நிலை) எண் 174, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 15-12-2021-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மோசடி ஆவணங்களின் பதிவை அக்குழு கண்டறிந்து, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆவணங்களின் பதிவில் உள்ள தவறுகள் சரி செய்யப்படும். சொத்தினை இழந்த உண்மையான உரிமையாளருக்கு அதனை மீட்டு திருப்பித் தருவதற்கும் அதன்மூலம் நில அபகரிப்பாளர்களிடம் தாங்கள் இழந்த சொத்தை மீட்பதில் பொதுமக்கள் சந்திக்கும் இன்னல்களைக் குறைக்கவும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7.5 போலியான மற்றும் மோசடியான ஆவணத்தை இரத்து செய்ய உத்தரவிட பதிவுத்துறை தலைவருக்கு சட்டபூர்வ அதிகாரம் அளித்தல்

இதற்கு முன்பாக சாதாரண மக்கள் எந்தவொரு மோசடி மற்றும் போலியான பதிவையும் இரத்து செய்ய தங்களது அதிகார வரம்பிற்குட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களையே அணுக வேண்டியிருந்தது. எனவே, அத்தகைய சாதாரண மக்களின் துன்பங்களைத் தணிக்கும் வகையில், மோசடி மற்றும் போலி பதிவை இரத்து செய்ய உத்தரவிடுவதற்காக பதிவுச் சட்டம்,

2023 ஏப்ரல் 10]

1908-ல் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வர தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா 2022 ஆகஸ்டு மாதம் மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, போலியான அல்லது மோசடியான ஆவணத்தை இரத்து செய்யும் அதிகாரத்தை மாவட்டப்பதிவாளர் அல்லது பதிவுத்துறை தலைவருக்கு வழங்கும் வகையில் பதிவுச் சட்டம், 1908-ல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு சட்டம் 41/2022 மூலம் பிரிவு 77A மற்றும் வேறு சில பிரிவுகள் உட்புகுத்தப்பட்டன. பதிவுச் சட்ட பிரிவு 22A மற்றும் பிரிவு 22B-க்கு முரணாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொடர்பாக தானாக முன்வந்து அல்லது இது தொடர்பாக பெறப்படும் புகார் மனுக்களின்மீது விசாரணை மேற்கொண்டு, அவ்வாவணம் போலியான அல்லது மோசடியான ஆவணம் என கண்டறியப்பட்டால், அந்த ஆவணத்தை இரத்து செய்து மாவட்டப் பதிவாளர் அல்லது பதிவுத் துறைத் தலைவர் உத்தரவிடலாம்.

மாவட்டப் பதிவாளரின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க பதிவுத் துறை தலைவருக்கும் பதிவுத் துறை தலைவரின் அசல் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க அரசுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் 16-08-2022 முதல் அமலுக்கு வந்துள்ளது. மேற்கண்ட சட்டத்தின்மூலம், தங்கள் சொத்துகளில் மோசடி அல்லது போலி பதிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள், அதிகார வரம்பிற்குட்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களை அணுக வேண்டிய அவசியமின்றி, அந்தந்த மாவட்டப் பதிவாளரை அணுகி நிவாரணம் பெறலாம்.

8. சங்கங்கள்

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள இலக்கியம், விஞ்ஞானம், சமயம், தொண்டு, விளையாட்டு மற்றும் பிற பிரிவுகள் தொடர்பான அமைப்புகளை சங்கங்களாக பதிவு செய்ய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 வழிவகுக்கிறது. பயனுள்ள நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களைக் கொண்டு ஒரு குழுவாக செயல்படும் நபர்களால் ஒரு சங்கம் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் பதிவு செய்யப்படுகிறது.

குறைந்தபட்சம் ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரு சங்கத்தைத் தோற்றுவிக்கலாம். சங்கங்களின் பதிவின்போது தாக்கல் செய்யப்படும் சங்கத்தின் அமைப்பு குறிப்பு மற்றும் சங்கத்தின் துணைவிதிகளில் குறைந்தபட்சம் ஏழு உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும்.

சங்கங்கள் தோற்றுவிக்கப்படும் அந்தந்த மாவட்டங்களிலேயே அவை பதிவு செய்யப்படுகின்றன. தொடர்புடைய மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளரிடம் இச்சங்கங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். புதிதாக சங்கம் பதியப்படும்போது அதற்கான விண்ணப்பத்தை இணைய வழியாகவே பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்களை மாவட்டப்பதிவாளர் பரிசீலித்து அவை உரிய முறையில் இருப்பின் சங்கத்தைப் பதிவு செய்து மின்னணு கையொப்பம் (Digitally signed) செய்யப்பட்ட பதிவு சான்றிதழை வழங்குகிறார். சம்பந்தப்பட்ட சங்கத்தினர் இப்பதிவு சான்றிதழை தங்களது பயனர் உள்நுழைவு (User login) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவினைப் பெற்றிருக்க வேண்டும். செயற்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அவர்களின் பதவிக் காலத்திற்கேற்ப செயற்குழு தேர்தல் நடத்தப்படவேண்டும்.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சங்கங்களும் ஒரு நிதி ஆண்டில் குறைந்தது ஒரு முறையாவது பொதுக் குழுக் கூட்டம் நடத்தி தணிக்கை செய்யப்பட்ட வரவு—செலவு கணக்குகளை சங்க பொதுக் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்று மாவட்டப் பதிவாளரிடம் ஒவ்வொரு வருடமும் கோர்வை செய்ய வேண்டும். ஆவணங்களைக் கோர்வை செய்வதில் ஏற்படும் காலதாமதம் 10 ஆண்டுகள் வரை இருப்பின் மாவட்டப் பதிவாளராலும், 20 ஆண்டுகள் வரை இருப்பின் பதிவுத் துறைத் தலைவராலும் 20 ஆண்டுகளுக்குமேல் இருப்பின், அரசாலும் தாமதத்தை மன்னித்து ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975—ன்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம் முறையாக செயல்படவில்லை என்றாலோ அல்லது சங்கத்தின் செயல்கள் அதன் குறிக்கோள்களை

2023 ஏப்ரல் 10]

நிறைவேற்றுவதாக இல்லை என்றாலோ அல்லது சங்கங்கள் பதிவுச் சட்டப் பிரிவுகளையோ விதிகளையோ மீறியுள்ளது என்றாலோ, சங்க நிர்வாகத்தில் நிதி முறைகேடுகள் கண்டறியப்பட்டாலோ, அச்சங்கத்தின் விவகாரங்களை நிர்வகிக்க ஒரு சிறப்பு அதிகாரியை குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்க தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டப் பிரிவு 34A-ன்கீழ் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

31-3-2023 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,35,700 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில் (1-4-2022 முதல் 31-3-2023 வரை) ரூ.9.70 கோடி சங்கங்களின்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

31-3-2023 அன்று உள்ளவாறு பதிவு செய்து செயல்படும் சங்கங்களின் விவரம்

வ. எண்	**மண்டலம்**	**பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை**
1.	சென்னை	*54,950*
2.	கோயம்புத்தூர்	*17,608*
3.	கடலூர்	*14,275*
4.	மதுரை	*27,564*
5.	இராமநாதபுரம்	*18,165*
6.	சேலம்	*25,792*
7.	தஞ்சாவூர்	*16,557*
8.	திருச்சிராப்பள்ளி	*18,509*
9.	திருநெல்வேலி	*15,732*
10.	வேலூர்	*26,548*
	கூடுதல்	*2,35,700*

9. சீட்டுகள்

சீட்டு நிறுவனங்களின் சீட்டு வணிகம் மற்றும் செயல்பாடுகள் சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் தமிழ்நாடு சீட்டு நிதி விதிகள், 1984 ஆகியவற்றின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

மாநில அளவில் பதிவுத் துறை தலைவர் சீட்டுப் பதிவாளராகவும் கூடுதல் பதிவுத் துறை தலைவர் கூடுதல் சீட்டுப் பதிவாளராகவும் உள்ளனர். துணை பதிவுத் துறைத் தலைவர் இணை சீட்டுப் பதிவாளராகவும் மாவட்டப் பதிவாளர் துணை சீட்டுப் பதிவாளராகவும் மற்றும் சார்—பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) உதவி சீட்டுப் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சீட்டு நிறுவனங்களின் பதிவு, சீட்டுகளின் தொடக்கம் மற்றும் செயல்பாடுகள் இத்துறையால் நிர்வகிக்கப்படுகிறது. சீட்டு நிறுவனங்கள் சீட்டுத் தொகைக்கு சமமான தொகையை பிணைய வைப்புத் தொகையாக செலுத்திய பின்னரே சீட்டு துவங்க முன் ஒப்பளிப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

31-3-2023 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2650 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் உள்ளன. 2022-2023-ஆம் ஆண்டில் (1-4-2022 முதல் 31-3-2023) வரை ரூ.16.43 கோடி அரசுக்கு வருவாய் ஆக ஈட்டி தரப்பட்டது.

31-3-2023 அன்று உள்ளவாறு சீட்டு நிறுவனங்களின் விவரம்

வ. எண்	**மண்டலம்**	**சீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை**
1.	சென்னை	*339*
2.	கோயம்புத்தூர்	*558*
3.	கடலூர்	*124*
4.	மதுரை	*163*
5.	இராமநாதபுரம்	*61*
6.	சேலம்	*149*
7.	தஞ்சாவூர்	*123*
8.	திருச்சிராப்பள்ளி	*297*
9.	திருநெல்வேலி	*736*
10.	வேலூர்	*100*
	கூடுதல்	*2650*

2023 ஏப்ரல் 10]

10. சீட்டு நடுவம்

சீட்டுக்கள் மற்றும் சீட்டுக் குழுக்களின் நடைமுறைகள் தொடர்பாக உருவாகும் சச்சரவுகளை (Dispute) பாதிக்கப்படும் சந்தாதாரரோ (Subscriber) அல்லது முன்பரோ (Foreman) துணை சீட்டுப் பதிவாளரான மாவட்டப்பதிவாளர் முன்னிலையில் சமரச தீர்வுக்காக முன்வைக்கலாம். வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் தனி சீட்டு நடுவர்கள் உள்ளனர். பிற மாவட்டங்களில் நிர்வாக மாவட்டப்பதிவாளரே சீட்டு நடுவராக செயல்படுகிறார். சீட்டு நடைமுறைகள் தொடர்பாக உருவாகும் சச்சரவுகளின் மீது சீட்டு நடுவர்கள் விசாரணை மேற்கொண்டு தீர்ப்பாணைகள் வழங்குகிறார்கள். சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக அரசிடம் மேல்முறையீடு செய்யலாம். இந்த சட்டத்தின்கீழ் எழும் சச்சரவுகள் தொடர்பாக எந்தவொரு வழக்குகளையும் விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

11. கூட்டுபங்காண்மை நிறுவனங்கள்

இந்திய கூட்டுபங்காண்மைச் சட்டம், 1932-ன்கீழ் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்களும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்டார் 2.0 மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கூட்டுபங்காண்மை நிறுவனங்களுக்கு பயனர் உள்நுழைவு (Login ID) வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிய கூட்டுபங்காண்மை நிறுவனப் பதிவிற்கான விண்ணப்பத்தை இணையதளம் மூலமாகவே சமர்ப்பிக்கலாம். கூட்டுபங்காண்மை நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத்தை மாவட்டப் பதிவாளர் பரிசீலித்து, நிறுவனத்தைப் பதிவு செய்து மின்னணு கையொப்பமிட்ட (Digitally signed) பதிவு சான்றிதழை வழங்குகிறார். இச்சான்றிதழை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பயனர் உள்நுழைவு (User login) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வகையில் கூட்டுபங்காண்மை நிறுவன பதிவிற்காக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை.

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து, ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் உறுதிமொழியை கட்டாயம் கோர்வை செய்திட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படும் எவ்வித மாற்றமும் கூட்டுபங்காண்மை நிறுவன பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்நிறுவனங்களின் வருடாந்திர அறிவிப்பைக் கோர்வை செய்தல், முகவரி மாற்றம், கூட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றைக் கோர்வை செய்ய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

31-3-2023 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட 6,06,298 கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் செயல்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் (1-4-2022 முதல் 31-3-2023 வரை) ரூ.1.40 கோடி வருவாய் கூட்டுபங்காண்மை நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

31-3-2023 அன்று உள்ளவாறு கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் விவரம்

வ.எண்	மண்டலம்	கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் விவரம்
1.	சென்னை	2,64,502
2.	கோயம்புத்தூர்	67,664
3.	கடலூர்	13,039
4.	மதுரை	32,386
5.	இராமநாதபுரம்	23,046
6.	சேலம்	84,372
7.	தஞ்சாவூர்	14,706
8.	திருச்சிராப்பள்ளி	58,201
9.	திருநெல்வேலி	21,702
10.	வேலூர்	26,680
	கூடுதல்	6,06,298

12. திருமணப் பதிவு

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009-ன்கீழ் மாநிலத்தில் நடைபெறும் திருமணங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும். பல்வேறு திருமண சட்டங்களின்கீழ்

2023 ஏப்ரல் 10]

திருமண பதிவாளராக சார்—பதிவாளர் செயல்படுகிறார். இந்து திருமணச் சட்டம் 1955, சிறப்பு திருமணச் சட்டம், 1954 மற்றும் தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009-ன்கீழ் ஏற்கெனவே நடைபெற்ற திருமணங்களையும் பதிவாளர் பதிவு செய்கிறார்.

மேலும், திருமண பதிவாளர்கள் சிறப்பு திருமணச் சட்டம், 1954-ன்கீழ் திருமணத்தை நடத்தி வைக்கும் அதிகாரத்தைப் பெற்றவர்களாக உள்ளனர். இந்து திருமணச் சட்டம், 1955 பிரிவு 7A-ன்படி இரு இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களுக்கிடையேயான சுயமரியாதை அல்லது சீர்திருத்த திருமணங்களைப் பதிவு செய்கின்றனர்.

2022-2023 ஆம் நிதியாண்டில் வெவ்வேறு சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009	*77,738*
இந்து திருமணச் சட்டம், 1955	*38,809*
சிறப்பு திருமணச் சட்டம், 1954	*7,755*

13. முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

இந்திய முத்திரைச்சட்டம், 1899, பிரிவு 76A-ன் கீழான தமிழ்நாடு முத்திரை விதிகளின் விதி 25-ன்படி மாவட்டப் பதிவாளர்களால் முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பகுதியில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப 10,000 பேருக்கு ஒரு முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற விகிதாச்சாரத்தில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாநிலத்தில் மொத்தம் 3,504 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் செயல்பாட்டில் உள்ளனர்.

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் தங்களது உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் மட்டுமே முத்திரைத்தாள்களை விற்பனை செய்யலாம். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் மாதம் ஒரு முறை மாவட்டப் பதிவாளர்களாலும் வாரம் ஒரு முறை சார்—பதிவாளர்களாலும் சரிபார்க்கப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 10

14. ஆவண எழுத்தர்கள்

தமிழ்நாட்டில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் பெரும்பாலான ஆவணங்கள் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களால் தயாரிக்கப்படுகின்றன. ஆவண எழுத்தர்களுக்கு ஆவணங்கள் எழுதுவதற்கான உரிமங்கள், உரிய உரிமம் வழங்கும் அதிகாரியால், தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982-ன்படி வழங்கப்படுகிறது.

ஆவண எழுத்தர்கள் உரிமம் கீழ்க்கண்டவாறு மூன்று வகையாக வழங்கப்படுகிறது:

1. பதிவுத் துறைத் தலைவர்/தொடர்புடைய மண்டலத்தின் துணைப் பதிவுத் துறை தலைவரால் வழங்கப்படும் மாநில அளவிலான உரிமம் (A உரிமம்),

2. மாவட்டப் பதிவாளர்களால் வழங்கப்படும் மாவட்ட அளவிலான உரிமம் (B உரிமம்) மற்றும்

3. மாவட்டப் பதிவாளர்களால் வழங்கப்படும் உப மாவட்ட அளவிலான உரிமம் (C உரிமம்)

31-3-2023 அன்றுள்ளவாறு மாநிலம் முழுமைக்கும் 5,141 உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் உள்ளனர். வகைப்பாடு வாரியான ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	2,836
மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	1988
உபமாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	317
உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் மொத்தம்	5,141

பொதுமக்கள் தங்கள் ஆவணங்களை தாங்களே எழுதிக் கொள்ளலாம். ஆவணத்தை தாங்களே தயாரித்துக்கொள்ள ஏதுவாக, ஆவண மாதிரி படிவங்கள் பதிவுத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

14.1 தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம்

ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியம் அரசாணை (நிலை) எண் 175, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 1-12-2022-ன்படி, 2-12-2022 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிதியத்தின் உறுப்பினராக சேர விரும்பும் ஆவண எழுத்தர் ஒருமுறை நுழைவுக் கட்டணமாக ரூ.1,000/- செலுத்தி உறுப்பினராக சேர்ந்துகொள்ளலாம்.

பிற நல வாரியங்களில் அளிக்கப்படும் நலத் திட்டங்களைப் போலவே விபத்து, இறப்புக்கான உதவி, உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவி போன்ற பல்வேறு நல உதவிகள் இந்நிதியத்தின்மூலம் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சார்—பதிவாளர் அலுவலகங்களில் பதிவாகும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் தலா ரூ.10/- ஆவண எழுத்தர்கள் நல நிதியத்திற்காக வசூலிக்கப்படுகிறது.

15. துறையின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முயற்சிகள்

கணினிமயமாக்கல் மற்றும் இலக்கமயமாக்கலில் பதிவுத் துறையானது ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

*6-2-2000 அன்று மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் முதலில் 14 சார்—பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் கணினிமயமாக்கல் ஸ்டார் திட்டம் (*STAR—Simplified and Transparent Administration of Registration*) அதாவது எளிய மற்றும் வெளிப்படையான நிர்வாகம் (கட்டம் 1) தொடங்கி வைக்கப்பட்டு பின்னர் அது பல கட்டங்களாக வளர்ச்சியடைந்து தற்போது பதிவுத் துறையின் கணினிமயமாக்கல் நூறு சதவிகிதத்தை எட்டியுள்ளது. கணினி வழி நிர்வாகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தற்போது பல சேவைகள் இலக்கமயமாக்கப்பட்டுள்ளன.*

*பதிவுத் துறையில், ஸ்டார் (*STAR*)–2.0 திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த இணையதளம் மூலமாக முதற்கட்டமாக ஆவணப்பதிவுகள், வில்லங்க சான்று மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்குதல் ஆகியனவும் அதனைத் தொடர்ந்து திருமணங்கள், சங்கங்கள், சீட்டு மற்றும்*

கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் பதிவு தொடர்பான பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

15.1 'ஸ்டார் 2.0' திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள்

ஸ்டார் 2.0 திட்டத்தில், பொதுமக்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கென தனித்தனி உள்நுழைவு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, மேலும், சங்கங்கள், சீட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் தங்களுக்கென தனி உள்நுழைவு வசதியை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

1. பொதுமக்கள் தங்களின் உள்நுழைவில் சென்று தாங்களே ஆவணம் தயாரித்து ஆவணப் பதிவு அல்லது திருமணப் பதிவுக்காக நேரம், நாள் ஆகியவற்றை முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும், வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட நகல்களுக்கான விண்ணப்பங்களை இணைய வழியாகவே சமர்ப்பிக்க இயலும். இணைய வழியாக பணம் செலுத்திடவும் இயலும்.

2. பதிவான ஆவணங்களின் நிலை குறித்து இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

3. வில்லங்கச் சான்றினை எவ்வித கட்டணமும் இன்றி இணையதளத்தில் பார்வையிடலாம் மற்றும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

4. பதிவர்கள் தங்களது விண்ணப்பங்களின் நிலையினை உடனுக்குடன் அறிந்துகொள்ள குறுஞ்செய்தி வசதி உள்ளது.

5. பதிவுச் சட்டம், 1908—ல் கொண்டு வரப்பட்டுள்ள சிறப்பு திருத்தத்தின் மூலமாக, வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கான உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு ஆவணம், இரசீதுகள் மற்றும் 5 வருடம் வரையிலான குடியிருப்பு தொடர்பான குத்தகை ஆவணங்களை இணைய வழியாக பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. சங்கம் மற்றும் கூட்டுபங்காண்மை நிறுவனங்களை அலுவலகம் செல்லாமலேயே இணையவழி பதிவு செய்யும் வசதி.

7. சீட்டு நிறுவன கூட்ட நிகழ்ச்சி குறிப்புகளை இணையவழி கோர்வை செய்யும் வசதி ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 10]

15.2 தரவு களஞ்சியம்

*பெருங்குடியில் உள்ள திருவாளர்கள் எல்காட் மாநில தரவு மையம், பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம், சாந்தோமில் அமைந்துள்ள 'அருகாமை தரவு மீட்பு மையம்' (*Nearline Data Recovery Centre*) மற்றும் புனேயில் உள்ள தேசிய தகவல் மையத்தின் பேரிடர் மீட்பு மையம் ஆகிய மூன்று இடங்களில் பதிவுத் துறையின் தரவுகள் சேமிக்கப்படுகின்றன. இதன்மூலம் ஆவணங்கள் திருத்தப்படுவதும், சிதைக்கப்படுவதும் தடுக்கப்படுகிறது.*

15.3 தணிக்கை மென்பொருள்

பதிவுத் துறையின் தணிக்கைப் பணிகளுக்கென தனி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் தணிக்கைப் பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. தணிக்கை அறிக்கைகள் உருவாக்குதல், பதிவு அலுவலர்களது பதில் அறிக்கைகளைப் பெறுதல், இறுதியாணை பிறப்பித்தல், மேல்முறையீடு செய்தல், சட்டபூர்வ நடவடிக்கை எடுத்தல், இழப்பை வசூலித்தல் போன்றவை தொடர்பான வசதிகளை இத்தணிக்கை மென்பொருள் வழங்குகிறது.

16. பதிவுத் துறையில் பொது மக்களின் நலனுக்கான சிறப்பு திட்டங்கள்

16.1 மின்னணு ரேகை பதிவு கருவிமூலம் ரேகை பதிவு செய்தல்

*ஆவணப் பதிவின்போது வலை நிழலி (*Web—Cam*) மூலம் பதிவர்களின் புகைப்படமும் மின்னணு ரேகைக் கருவிமூலம் கைரேகையும் எடுக்கப்படுகின்றன. எழுதி கொடுப்பவரது மின்னணு ரேகையானது முந்தைய ஆவணப் பதிவின்போது எடுக்கப்பட்டிருப்பின், தற்போது எடுக்கும் கைரேகையினை அதனுடன் ஒத்திசைவு செய்வதன்மூலம் ஆள்மாறாட்டம் தடுக்கப்படுகிறது.*

16.2 மின்னணு முறையில் சில வகை ஆவணங்களை இணையவழி பதிவு செய்தல்

சில வகையான ஆவணங்களை இணைய வழியாகவே தாக்கல் செய்ய ஏதுவாக பதிவுச் சட்டம், 1908-ன் பிரிவுகள் 32, 52 மற்றும் 69 ஆகியவை தமிழ்நாடு சட்டம் 24/2022-ன்கீழ் திருத்தப்பட்டு

[2023 ஏப்ரல் 10

12-9-2022 முதல் மின்னணு முறை தாக்கல் செய்யும் வசதி அரசாணை (நிலை) எண் 130, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12-9-2022-ன்படி அமல்படுத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, கீழ்க்கண்ட ஆவணங்களுக்கு இணையவழி பதிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

1. *வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களில் கடன் பெறுவதற்காக எழுதி தரப்படும் உரிமை ஆவணங்களின் ஒப்படைப்பு ஆவணம்.*
2. *வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களால் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு எழுதித் தரப்படும் இரசீது ஆவணங்கள்.*
3. *குடியிருப்புப் பயன்பாட்டிற்கான ஐந்து ஆண்டுகள் வரையிலான வாடகை அல்லது குத்தகை தொடர்பான ஆவணங்கள்.*

இணைய வழி பதிவு வசதியின் காரணமாக மேற்படி ஆவணங்களைத் தாக்கல் செய்து, பதிவு செய்துகொள்ள பொதுமக்கள் நேரிடையாக சார்—பதிவாளர் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆவணதாரர்கள் மின்னணு முறையில் ஆவணத்தினை இணைய வழியாக தங்களது இல்லங்களில் இருந்தே எழுதி தரலாம். அவர்களின் கைரேகை இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்தால் (UIDAI) பராமரிக்கப்படும் ஆதார் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. தொடர்புடைய சார்—பதிவாளருக்கு ஆவணம் இணையவழி அனுப்பப்பட்டு பதிவு செய்யப்படும். இந்த ஆவணத்தை பொது மக்கள் அவர்களின் உள்நுழைவுக்கு சென்று தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

16.3 இணையவழி சேவைகளுக்கான மின்கையொப்பம் (e-Sign)

வில்லங்கச் சான்றுகள், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள், திருமணப் பதிவு சான்றின் வடிப்புகள், சங்கங்களின் பதிவுச் சான்றுகள், கூட்டுபங்காண்மை நிறுவனங்களின் பதிவுச் சான்றுகள் போன்ற சான்றுகள் பதிவு அலுவலர்களது ஆதார் அடிப்படையிலான மின்கையொப்பம் இடப்பட்டு இணைய வழியாகவே வழங்கப்படுவதால்

நேரில் அலுவலகம் செல்வது தவிர்க்கப்படுகிறது. பயனர்கள் இச்சான்றுகளை தங்களது வசதிக்கேற்ற இடம் மற்றும் நேரத்தில் அவர்களது உள்நுழைவுமூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

16.4 மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தொடர்பான ஆவணங்களில் பதிவுக்குப் பின்னர் பெயர் மாற்றத்திற்கான தன்னிச்சை விண்ணப்ப வசதி

சொத்துகள் தொடர்பான ஆவணப் பதிவு முடிவடைந்தவுடன் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை பெருநகர மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவை தொடர்பான ஆவணங்களில் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தன்னிச்சையாக அனுப்பிடும் வசதியானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7-12-2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

16.5 தன்னிச்சையான பட்டா மாறுதல்

பதிவுத் துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளும் வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளன. ஆவணப் பதிவு முடிந்தவுடன் உட்பிரிவு தேவைப்படும் இனங்கள் மற்றும் உட்பிரிவு தேவைப்படாத இனங்கள் ஆகியவற்றின் பட்டா மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் இணைய வழியாகவே அனுப்பப்படுகின்றன. உட்பிரிவு தேவைப்படும் இனங்களுக்கான உட்பிரிவு கட்டணம் பதிவு அலுவலரால் வசூலிக்கப்படுகிறது. உட்பிரிவு தேவைப்படாத இனங்களில் விற்பவர் பெயர் பட்டாவில் இருப்பின் தன்னிச்சையாக பட்டா மாற்றம் ஆகும் வசதி தமிழ்நிலம் மென்பொருளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

16.6 மூத்த குடிமக்களுக்கென முன்னுரிமை பதிவு வசதி

சார்—பதிவாளர் அலுவலகங்களில் முன்பதிவு வரிசைக்கிரமப்படி ஆவணப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மூத்த குடிமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு எழுதிக்கொடுப்பவர் அல்லது எழுதிவாங்குபவரில் யாரேனும் ஒருவர் எழுபது வயதைக் கடந்தவராக இருப்பின், தங்களின் வரிசை எண்ணுக்காக காத்திராமல், சார்—பதிவாளர் அலுவலகம் வந்தவுடன் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து பதிவு செய்யும் வண்ணம் மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

16.7 தட்கல் டோக்கன் முறை

பெரும்பாலான பதிவர்கள் மங்களகரமாக நினைக்கப்படும் நாள் மற்றும் நேரத்தில் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்ய விரும்புகின்றனர். விரும்பிய நாட்களில் அவர்கள் டோக்கன் பெறும் நோக்கில் தட்கல் டோக்கன் முறையானது, ஆவணப் பதிவு அதிகம் நடைபெறும் 100 சார்—பதிவாளர் அலுவலகங்களில் அரசாணை (நிலை) எண் 92, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 30-5-2022-ன்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மங்களகரமாக நினைக்கப்படும் நாட்களில் பதிவு செய்ய விரும்புபவர்கள் சாதாரண டோக்கன்கள் பூர்த்தியாகி இருந்தாலும் கூடுதல் கட்டணமாக ஒரு தட்கல் டோக்கனுக்கு ரூ.5000/- செலுத்தி டோக்கன் பதிவு செய்துகொள்ளலாம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28-9-2022 அன்று இத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

16.8 இணையவழி அட்டவணை திருத்தம் மற்றும் திருமண சான்று திருத்தம் மேற்கொள்ளும் வசதி

வில்லங்கச் சான்றுகள் மற்றும் திருமணச் சான்றுகளில் திருத்தங்கள் தேவைப்படும் நிகழ்வுகளில் பொது மக்கள் இணைய வழியாகவே உரிய சார்—பதிவாளர் அலுவலகத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ள தேவையான விவரங்களை அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியால் பொது மக்களின் நேரம் மிச்சப்படுவதோடு அவர்கள் சார்—பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டியது தவிர்க்கப்படுகிறது. சார்—பதிவாளர் அத்திருத்த விவரங்களை சரிபார்த்த பின்னர், மாவட்டப் பதிவாளரது ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கிறார். மாவட்டப் பதிவாளரின் ஒப்புதலுக்குப்பின் அத்திருத்த விவரங்கள் இணையதளத்தில் பிரதிபலிக்கும்.

16.9 அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை தடுத்தல்

அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை ஆரம்ப நிலையிலேயே தன்னிச்சையாக தடுப்பதற்காக ஒரு மென்பொருள் வசதி உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு சர்வே எண் அரசு நிலமாக இருப்பின் இவ்வசதியின்மூலம் பதிவுத் துறையின் 'ஸ்டார் 2.0' மென்பொருளானது வருவாய் துறையின் 'தமிழ்நிலம்' மென்பொருள் தரவுகளோடு மேற்காண் நில விவரங்களை நிகழ்நேரத்தில்

2023 ஏப்ரல் 10]

ஒத்திசைவு செய்து அச்சொத்து தொடர்பான ஆவணப் பதிவினை தன்னிச்சையாக தடுக்கிறது. இந்த மென்பொருளால் அரசு நிலங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் நிலங்கள், நீர்நிலைகள் பதிவு செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

மேலும், தடை செய்யப்பட்ட நிலங்களின் விவரங்களை உள்ளீடு செய்ய தனி மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறை, வக்ஃப் வாரியம் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்கள், நீதிமன்றங்களால் பதிவுக்கு தடை செய்யப்பட்ட நிலங்கள் போன்றவற்றின் விவரங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளதால், இவற்றின் பதிவுக்காக டோக்கன் பதிவு செய்ய மென்பொருள் அனுமதிக்காது. மேலும், இவ்வசதியினால் தடை செய்யப்பட்ட நில விவரங்கள் குறித்து வாங்குபவர்கள் அறிந்துகொள்ளலாம்.

16.10 ஒருங்கிணைந்த தகவல் மையம்

பதிவுத் துறையின் சேவைகள் குறித்த விவரங்களை வாட்ஸ்ஆப், சாட்போட்(chatbot), வலையொளி (You tube) காணொளி போன்ற அனைத்துத் தகவல் தொடர்பு வசதிகளின் மூலம் அளித்திட அரசாணை (நிலை) எண் 128, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 26-8-2022-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16.11 ஒருங்கிணைந்த சேவை மையம்

ஆவணம் தயாரித்தல், வில்லங்கச் சான்று வழங்குதல், சான்றிட்ட நகல் வழங்குதல், பதிவுக்கான முன்பதிவு செய்தல், இணையவழி கட்டணம் செலுத்துதல் ஆகிய பதிவுத் துறையின் சேவைகளை பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் அளித்திட 'ஒருங்கிணைந்த சேவை மையம்' சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சோதனை அடிப்படையில் உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு அரசால், அரசாணை (நிலை) எண் 162, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 10-11-2022-ல் நிர்வாக ஆணை அளிக்கப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் அளிக்கப்படும்.

16.12 இணைய வழியாக வங்கிகளில் கட்டணம் செலுத்திடும் முறை

பதிவுத் துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பாதுகாப்பான முறையில் இணையவழி அல்லது இணைய வழியுடன் இணைந்த வங்கி முகப்பில் செலுத்திட அங்கீகரிக்கப்பட்ட

[*2023 ஏப்ரல் 10*

வங்கிகளான பாரத மாநில வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி, சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி, பேங்க் ஆஃப் பரோடா, யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா ஆகிய வங்கிகள்மூலம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

*பாரத மாநில வங்கி பிற வங்கிகளின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறது. இதன்மூலம் அட்டவணைப்படுத்தப்பட்ட 58 வங்கிகள் வழியாக இணைய வங்கி சேவை (*Net Banking*), ஒருங்கிணைந்த கட்டணமுகப்பு (*UPI Payment*), நிகழ்நேரத்தில் மொத்த தொகை தீர்வு செய்தல் (*RTGS*), தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (*NEFT*), பற்று அட்டை (*Debit Card*) மற்றும் கடன் அட்டை (*Credit Card*) ஆகிய முறைகளில் கட்டணங்களை செலுத்தலாம். இதுதவிர, ரூ.1000/—த்திற்கும் கீழான கட்டணங்களை செலுத்துவதற்காக அனைத்து சார்—பதிவாளர் அலுவலகங்களிலும்* PoS *கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

16.13 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் பொருத்துதல் மற்றும் நெகிழ்வட்டு வழங்குதல்

*சார்—பதிவாளர் அலுவலகங்களில் வெளிப்படையான சேவையை உறுதிப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு சார்—பதிவாளர் அலுவலகத்திலும் 3 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (*IP *கேமரா) பொருத்தப்பட்டு பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் மண்டல துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து தொலை கண்காணிப்பு செய்திடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு சார்—பதிவாளர் அலுவலகத்திலும் பதிவறையினைக் கண்காணிக்கும் வகையில், கூடுதலாக இரண்டு இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் நடப்பு ஆண்டில் பொருத்தப்பட்டுள்ளன.*

*இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (*IP camera*) மூலம் பதிவாகும் ஆவணப் பதிவு/திருமணப் பதிவு நிகழ்வுகள் ரூ.100/— கட்டணம் வசூலித்து, பதிவு பொதுமக்களுக்கு நெகிழ்வட்டில் வழங்கப்படுகிறது.*

16.14 இணையதளத்தில் வில்லங்கச் சான்று பார்வையிடும் வசதி

பொதுமக்கள் தங்கள் சொத்து தொடர்பான வில்லங்கச் சான்றினை பதிவுத் துறை இணையதளத்தின்மூலம் எங்கிருந்தும்

2023 ஏப்ரல் 10]

எப்போது வேண்டுமானாலும் கட்டணமின்றி பார்வையிடலாம் மற்றும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். 1-1-1975 முதல் நாளது வரையிலான காலத்திற்கு வில்லங்கச் சான்று விவரங்கள் துறையின் இணையதளத்தில் காணப்படுகின்றன. இவ்வசதியைப் பயன்படுத்தி தினமும் ஏறத்தாழ 80,000 வில்லங்கச் சான்றுகள் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன.

சட்டரீதியான மதிப்புமிக்க ஆவணங்களின் களஞ்சியமாக 1865 ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறை செயல்படுகிறது. 1975 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற்கான வில்லங்கச் சான்று தற்போது கைமுறையில் அளிக்கப்படுகிறது. 1-1-1950 முதல் 31-12-1974 வரையிலான காலகட்டம் தொடர்பான அட்டவணை II தரவுகளை இலக்கமயமாக்கிட, நடப்பு ஆண்டில் அரசால் அரசாணை (நிலை) எண் 162, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 26-11-2021-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16.15 மின்னணு பதிப்புமுறை (e-Stamping)

திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (SHCIL)மூலம் மின்னணு பதிப்பு முறையில் (e—Stamping) முத்திரைத் தீர்வையை செலுத்தும் மாற்று வழியானது, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு முன்னோடித் திட்டமாக 9 சார்—பதிவாளர் அலுவலகங்களில் இந்த மின்னணு பதிப்பு முறையானது 27-5-2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது அனைத்து சார்—பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு பதிப்பு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

முத்திரைத்தாளினைப் போன்றே எந்தவொரு ஆவணத்திற்கும் மின்னணு பதிப்பு முறையினைப் பயன்படுத்தலாம். மின்னணு பதிப்பு முறையில் ஒரு முத்திரைச் சான்றை எந்த மதிப்பிற்கும் பயன்படுத்தலாம். நீதி சார்ந்த மற்றும் நீதி சாரா முத்திரைத்தாட்கள் மின்னணு பதிப்பு முறையின்மூலம் வழங்கப்படுகிறது,

திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (SHCIL)ஆல் அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையங்களாக பல தேசிய மற்றும் தனியார் வங்கிகள் செயல்படுகின்றன.

17. உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரி

விற்பனை, பரிவர்த்தனை மற்றும் நன்கொடை ஆவணங்களுக்கு சந்தை மதிப்பில் 2% உள்ளாட்சி அமைப்புகளுக்கான சொத்து மாற்ற வரியாக பதிவுத் துறையால் வசூலிக்கப்படுகிறது. சுவாதீனத்துடன்கூடிய அடமான ஆவணங்களுக்கு இவ்வரி 1% வசூலிக்கப்படுகிறது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கான பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் வசூலிக்கப்படும் இந்த சொத்து மாற்ற வரியானது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு பதிவுத் துறையால் மாற்றம் செய்யப்படுகிறது. பதிவுத் துறையால் வசூலிக்கப்படும் சொத்து மாற்ற வரியில் வசூல் கட்டணமாக 3% மட்டும் துறையால் இருத்திக்கொள்ளப்பட்டு, மீதமுள்ள 97% உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒவ்வொரு காலாண்டும் மாற்றம் செய்யப்படுகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.2032.60 கோடி சொத்து மாற்ற வரியில் ரூ.1971.62 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. மீதமுள்ள தொகை வசூல் கட்டணமாக பதிவுத்துறையால் இருத்திக்கொள்ளப்பட்டது.

18. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் விவரங்கள் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் துறையால் பரிசீலிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரர்களிடமிருந்து 27,602 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்கள் கோரிய தகவல் வழங்கப்பட்டது மற்றும் கட்டணமாக ரூ.3,15,782/— வசூலிக்கப்பட்டுள்ளது.

19. அலுவலகங்கள் மறுசீரமைப்பு

19.1 புதிய பதிவு மண்டலங்கள் உருவாக்கம்

1) மதுரை மண்டலத்தைப் பிரித்து இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பதிவு மண்டலம் உருவாக்கப்பட்டு 29-12-2022 முதல் இயங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 10]

2) சென்னை பதிவு மண்டலத்தைப் பிரித்து புதியதாக சென்னை (தெற்கு) பதிவு மண்டலத்தை உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இப்புதிய மண்டலம் விரைவில் உருவாக்கப்படும்.

19.2 புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்

அரசாணை (நிலை) எண் 183, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 9-12-2022-ன்படி, தென்சென்னை பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் அரசாணை (நிலை) எண் 185, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 9-12-2022-ன்படி கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து புதியதாக கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் (தெற்கு) பதிவு மாவட்டங்களை உருவாக்க நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்பாட்டிற்கு வரும்.

19.3 புதிய தணிக்கை அலகுகள் உருவாக்கம்

சேலம் (கிழக்கு), கோபிசெட்டிபாளையம் மற்றும் காரைக்குடி பதிவு மாவட்டங்களில் புதிய தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களைத் தோற்றுவிக்க அரசால் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசாணை (நிலை) எண் 24, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 13-3-2023-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

19.4 நிர்வாக மாவட்டப் பதிவாளர் பணியிடங்கள் தரம் உயர்த்துதல்

வருவாய் மாவட்ட தலைமையிடங்களில் இயங்கி வரும் 26 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களின் பணி செயல்திறனை அதிகரிக்கும் விதமாக, அப்பணியிடங்களை உதவி பதிவுத் துறை தலைவர் நிலைக்கு தரம் உயர்த்தி அரசால், அரசாணை (நிலை) எண் 160, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, 8-11-2022-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

19.5 புதிய சார்-பதிவாளர் அலுவலகங்கள் உருவாக்கம்

2022-2023 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஆறு சார்—பதிவாளர் அலுவலகங்கள் பொது மக்களின் வசதிக்காக புதியதாக உருவாக்கப்பட்டுள்ளன:

வ. எண்	பதிவு மாவட்டம்	புதியதாக உருவாக்கப்பட்ட சார்-பதிவாளர் அலுவலகங்கள்	தோற்றுவிக்கப்பட்ட நாள்
1.	திருப்பத்தூர்	*2 எண் இணை சார்—பதிவாளர் அலுவலகம்*	*26-4-2022*
2.	மதுரை தெற்கு	*சாமநத்தம்*	*29-12-2022*
3.	மதுரை வடக்கு	*பொதும்பு மேலூர் கிழக்கு செட்டிக்குளம் காதக்கிணறு*	*29-12-2022*

திருச்சி பதிவு மவட்டத்தில் தில்லை நகர் என்ற புதிய சார்பதிவகம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 13, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 27-2-2023-ல் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அலுவலகம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

19.6 சார்-பதிவாளர் அலுவலக எல்லைகள் சீரமைப்பு

சார்—பதிவாளர் அலுவலக எல்லைகளை வருவாய் மாவட்டங்களுக்கு ஏற்ப சீரமைத்துக்கொள்ள அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் மதுரை வருவாய் மாவட்டத்தைப் பொருத்து மதுரை (தெற்கு) மற்றும் மதுரை (வடக்கு) பதிவு மாவட்டங்களில் அமைந்துள்ள சார்—பதிவாளர் அலுவலகங்களின் எல்லைகள், வருவாய் வட்டங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண் 137, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 3-10-2022 மற்றும் அரசாணை (நிலை) எண் 138, வணிக வரி

2023 ஏப்ரல் 10]

மற்றும் பதிவுத் துறை, நாள் 3-10-2022 ஆகியவற்றில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

19.7 குக்கிராமங்கள் வருவாய் கிராமங்களுடன் இணைப்பு

நடப்பு ஆண்டில், வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்கள் ஒரே சார்—பதிவாளர் அலுவலக எல்லைக்குள் அமைய வேண்டுமென அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, விருதுநகர், பாளையங்கோட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் அரியலூர் பதிவு மாவட்டங்களில் உள்ள குக்கிராமங்கள் சம்பந்தப்பட்ட வருவாய் கிராமங்களுடன் இணைப்பதற்கு அரசாணை (நிலை) எண் 147, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 28-10-2021-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்தைப் பொருத்து இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது.

19.8 அரசு கட்டடங்களில் செயல்படும் மிக பழைமையான சார்—பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

பதிவுத் துறையில், 148 சார்—பதிவாளர் அலுவலகங்களும் ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகமும் மிக பழமையான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் முதற்கட்டமாக 50 கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 2022-2023 நிதியாண்டில் ரு.96.64 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிலிருந்து விரிவான விலைவிகித மதிப்பீட்டறிக்கைகள் பெறப்பட்டு இவ்வலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

19.9 அதிக ஆவணப் பதிவு நடைபெறும் சார்-பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கு சிறப்பு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகளை அமைத்தல்

அதிக பதிவுகள் நடைபெறும் அலுவலகங்களில் பொதுமக்களுக்கான அடிப்படை கட்டமைப்புகள் மற்றும்

வசதிகள் அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஏற்படுத்தப்படும் என்றும் 2022-2023 நிதியாண்டில் முதற்கட்டமாக ரூ.50 இலட்சம் செலவில் இரண்டு சார்—பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தென் சென்னை பதிவு மாவட்டத்திலுள்ள குன்றத்தூர் மற்றும் கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்திலுள்ள காந்திபுரம் சார்—பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு தலா ரூ.25 இலட்சம் செலவில் பொதுமக்களுக்கான மேம்படுத்தப்பட்ட அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு அவ்வலுவலகங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

20. பதிவு பொதுமக்களின் நலனுக்காக அரசால் எடுக்கப்பட்டுள்ள இதர புதிய நடவடிக்கைகள்

20.1 பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை

பொதுமக்களின் குறையினை உடனுக்குடன் களைய பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறைக்கு மூன்று அலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தங்கள் புகார்களை அலைபேசி மூலமாகவோ அல்லது வாட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

20.2 திங்கட்கிழமைகளில் குறைதீர்க்கும் நாள்

துணை பதிவுத் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் அரசாணை (நிலை) எண் 118, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 29-9-2021-ன்படி குறைதீர்க்கும் நாள் முகாமை தங்கள் அலுவலகத்தில் நடத்துகின்றனர். இம்முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மற்றும் புகார்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

20.3 சனிக்கிழமைகளில் சார்-பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுதல்

பொதுமக்களின், குறிப்பாக அலுவலகம் செல்வோரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அதிக பதிவுப் பணி உள்ள

2023 ஏப்ரல் 10]

சார்—பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் செயல்பட அரசு அனுமதித்துள்ளது. அதன்படி, அதிக ஆவணங்கள் பதிவு செய்யப்படும் 100 சார்—பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவ்வலுவலகங்களில் அனைத்து வகையான பதிவுகளையும் சனிக்கிழமைகளிலும் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 64, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 28-4-2022-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சனிக்கிழமைகளில் செய்யப்படும் பதிவுக்காக, ஒவ்வோர் ஆவணத்திற்கும் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துடன் கூடுதலாக ரூ.1,000/— கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

20.4 இந்திய கிறித்துவ திருமணப் பதிவு மேற்கொள்ள புதிய வசதி

இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872-ன்படி இந்திய கிறித்துவர்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்கும் கிறித்துவ குருமார்களும் மற்றும் திருமணத்தை நடத்தி வைக்க அரசு உரிமம் பெற்ற உரிமதாரர்களும் இணைய வழியாகவே விண்ணப்பித்து திருமணத்தைப் பதிவு செய்து கொள்வதற்கான புதிய நடைமுறை 28-9-2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

20.5 இந்திய கிறித்துவ திருமணச் சான்று உண்மை வடிப்புகள் மண்டல துணை பதிவுத் துறை தலைவர்களால் வழங்கப்படுதல்

இந்திய கிறித்துவ திருமண சட்டம், 1872-ன்படி இந்திய கிறித்துவ திருமணச் சான்று வடிப்புகளைப் பாதுகாத்தல் மற்றும் உண்மை வடிப்புகள் வழங்கும் பணிகளை பதிவுத் துறை தலைவர் மட்டுமே மேற்கொள்ள இயலும். கிறித்துவர்கள் தங்களுடைய திருமண சான்று வடிப்புகளின் உண்மை நகலைக் கோரி விண்ணப்பிக்க சென்னையில் அமைந்துள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு வருகை தரும் நிலை இதற்கு முன்னர் இருந்து வந்தது. எனவே, கிறித்துவ பொதுமக்களின் நலன் கருதி, இந்திய கிறித்துவ திருமணச் சான்று வடிப்புகளின் உண்மை நகல்களை வழங்குவதற்கான அதிகாரம் பதிவுத் துறையில் உள்ள 10 மண்டல துணைப் பதிவுத் துறை தலைவர்களுக்கு அரசாணை (நிலை) எண் 148, வணிக வரி மற்றும் பதிவுத் துறை,

[*2023 ஏப்ரல் 10*

நாள் 28-10-2021-ல் வழங்கப்பட்டு, இத்திட்டம் 26-4-2022 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


21. முடிவுரை

பதிவு பொது மக்களுக்கு மன நிறைவைத் தரும் வகையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களது இல்லங்களுக்கே பல சேவைகளைக் கொண்டு செல்லும் வகையில் இந்த அரசு பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. பதிவு நாளிலேயே ஆவணங்களைத் திரும்ப வழங்குவதன்மூலம் பொதுமக்களின் பொன்னான நேரம் காக்கப்படுகிறது. மேலும், வில்லங்கச் சான்று, சான்றிட்ட நகல்கள், திருமணச் சான்று வடிப்பு, பிறப்பு மற்றும் இறப்பு சான்று வடிப்பு, சங்கம், சீட்டு நிதி, கூட்டுபங்காண்மை நிறுவனங்கள் போன்றவை தொடர்பான சேவைகளை இணைய வழியாகவே வழங்குவதன்மூலம் சார்—பதிவாளர் அலுவலகங்களுக்கு பொதுமக்கள் நேரில் வருகை தருவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதிவுத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய சீர்திருத்த நடைமுறைகள் பதிவு பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், அவர்களின் மன நிறைவின் காரணமாக இதுவரை இல்லாத அளவில் அரசுக்கு பதிவுத் துறைமூலம் வரும் வருவாயும் வெகுவாக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 10]


பதிவுத்துறையில் 2022–23 நிதி ஆண்டில் பல்வேறு சட்டங்களின் கீழ் வருவாய் வசூல்




2017–18 நிதி ஆண்டு முதல் 2022–23 நிதி ஆண்டு வரை பதிவுத்துறையில் வருவாய் ஒப்பீடு



2017–18 நிதி ஆண்டு முதல் 2022–23 நிதி ஆண்டு வரை பதிவுத்துறையில் ஆவணப்பதிவு ஒப்பீடு




ஆறு ஆண்டுகளில் பதிவுத்துறையில் ஆவணப்பதிவு மற்றும் வருவாயின் போக்கு
ஆவணங்கள்
வருவாய் (ரூ. கோடியில்)
2,210,595
2,573,478
2,587,816
2,695,650
2,998,048
3,441,248
₹ 9,121.53 கோடி
₹ 11,071.02 கோடி
₹ 11,028.23 கோடி
₹ 10,643.08 கோடி
₹ 13,913.65 கோடி
₹ 17,296.84 கோடி
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
2022-23
நிதி ஆண்டு
0
500,000
1,000,000
1,500,000
2,000,000
2,500,000
3,000,000
3,500,000
4,000,000
0.00
2,000.00
4,000.00
6,000.00
8,000.00
10,000.00
12,000.00
14,000.00
16,000.00
18,000.00
20,000.00

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.**